(A Critical Study of the differences
in the Commentaries of Tholkaappiam
with special reference to
Akatthinai iyal and Puraththinai *iyal)*

K. P. ARAVAANAN
I. F. A. N
University of Dakar
DAKAR
SENEGAL

Selling Right:
PAARI NILAYAM
Madras-600 001, India

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	—	Love and Valour in Ancient days
Language	—	Tamil
Edition	—	First
Date of Publication	—	9-8-1978
Author	—	K. P. Aravaanan 9-8-1941 Kadalangudi, Thanjavur
Copy right holder	—	Author
Paper Used	—	16 K. G. Seshasayee
Size of the book	—	21.5 × 14.00 Cm. (Demmi)
Printing type used	—	10, 8, 12, 14, 18, 36 Points
Number of pages	—	394 + XVI
Number of Copies printed	—	1200
Artist	—	K. Mani, M.Sc. (Ph. D.)
Printers	—	Novel Art Printers Madras 600014
Binding		Card Board
Price	—	Rs 25/-
Publisher	—	[illegible] Koottam [illegible]s - 600029
Subject	—	Cr[illegible]
Summary	—	An [illegible] Tamil Grammar thro' an anthropological and Critical eye
Call number	—	P 31, D× 1, 141-2:g N7[illegible]
Special informations	—	This Volu[illegible] is a revised work of the aut[illegible]'s thesis for Ph.D. which was [illegible]varded by the University [illegible] Madras (1977 Jan)

அற்றைநாட் காதலும் வீரமும்

தொல்காப்பிய அகத்திணை, புறத்திணை இயல்
உரை வேறுபாடுகள்—ஒரு நிறனுய்வு

க. ப. அறவாணன்

ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகம்
தக்கார் பல்கலைக் கழகம், தக்கார், செனகால்

விற்பனை உரிமை :
மாரி நிலையம்
பிராட்வே, சென்னை-600 001

திருச்சி

சூசையப்பர் கல்லூரி

முதல்வர்

ஞானத்தந்தை

தவத்திரு சி. கே. சுவாமி சே. ச.

அடிகளார்தம்

திருவடிகளுக்கு

தமிழர் எண்ணுக

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வழியாக நான் 1976 இல் வழங்கிய, பிஎச். டி. ஆய்வேடு, பல்கலைக் கழக ஒப்புதலுடன் உரிய திருத்தங்களைப் பெற்று நூலாக வெளிவருகிறது. அகத்திணையியல், புறத்திணை என்ற இரண்டு பொருளதிகார இயல்களை அடிப்படையாகக் கொண்டு 'தொல்காப்பிய உரை வேறுபாடு—ஒரு திறனாய்வு' என்ற தலைப்பில் ஆய்வேடு வழங்கப்பட்டது. ஆய்வில், தொல்காப்பியம் துலக்கிய, காதல், வீரச்செய்திகள் உலகளாவிய, சீன, சுமேரிய, கிரேக்க, உரோம எகிப்தியப் பண்டைய வரலாறுகளுடன் ஒப்பிடப் பட்டுள்ளன. அதனுடன் மானுடவியல் செய்திகளும் இணைத்துப் பொருத்தி ஆங்காங்கே காட்டப்பட்டுள்ளன. எனவே, அக்கருவி நூல், 'அற்றை நாட் காதலும் வீரமும்' எனத் தலைப்பிடப்பட்டது.

பிஎச். டி. ஆய்வேட்டில், பின்னிணைப்புகளாகத் தொல்காப்பிய அகத்திணை இயல் மேற்கோள் அகராதி, புறத்திணை இயல் மேற்கோள் அகராதி, அகத்திணை இலக்கணத் தொகை, புறத்திணை இலக்கணத் தொகை ஆகியன 350 பக்கங்களில் தட்டச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருந்தன.

தொல்காப்பிய அகத்திணையியல், புறத்திணையியல் அனைத்துரைகளிலும், இடம் பெற்றிருந்த அனைத்துப் பாக்களும், அகர நிரலாக்கப் பெற்று, 2286 (அகத்திணை மேற்கோள் (1007), புறத்திணை மேற்கோள் 1279) மேற்கோள்கள் தரப் பெற்றிருந்தன. இவற்றின் பாடலடி, எடுத்தாளப்படும் இலக்கணம், இலக்கியம், எடுத்தாளப்படும் இடம், எடுத்தாள்பவர் ஆகிய செய்திகளும் நிரல்பட நல்கப் பட்டிருந்தன.

தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த அவிநயம் இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, இறையனார் களவியல், தமிழ் நெறி விளக்கம், தொன்னூல் விளக்கம், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை, மாறன் அகப் பொருள், முத்து வீரியம், வீரசோழியம் ஆகிய இலக்கண நூல்களில்

கூறப் பெற்ற அகத்திணை, புறத்திணை நூற்பாக்கள் 813 நிரல்படத் தொகுக்கப் பெற்று நல்கப் பெற்றிருந்தன.

அவற்றைத் தொடர்ந்து புறநானூற்றுத் திணைப் பாகுபாடு, உரைவேறுபாட்டு அட்டவணை ஆகியன இடம் பெற்றிருந்தன.

ஆனால் மேற்கண்டவை, அச்சியற்றுவதில் உள்ள காலநீட்சியையும் தொழில் தொல்லையையும் பொருள் தொல்லையையும் கருதி விடப்பட்டன.

எனினும் அவற்றைப் பயில விரும்புவோர்க்கு வாய்ப்பாக, மூல ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழக நூலகத்திலும் மறைமலையடிகள் நூலகத்திலும் வைக்கப் பெற்றுள்ளது. ஆர்வலர், பயன்படுத்திக் கொள்க.

பண்டை நாடுகளின் வரலாறுகளும், மானுட இயல் சான்றுகளும், தொல்காப்பியக் கல்வியில், பல புதிய பார்வைகளை நல்கியுள்ளன. அவற்றை ஆய்வேடு எங்கும் காணலாம். காணுவதுடன், தொல் காப்பியம் தன் செய்தி அடக்கத்தாலும், தொன்மையாலும் உலக நூல் ஆகும் மாண்பையும் உணரலாம். தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பெறற் கரிய பெரிய நூல்கள் தமிழில் எழுதப்பட்ட ஒரு 'பாவத்'தாலும், தமிழன் என்ற ஒடுக்கப்பட்ட இனத்தில் பிறந்துவிட்ட பிறிதொரு 'பாவத்'தாலும் குடத்துள் விளக்காக, உலக அரங்கில் ஒளிபரப்ப இயலாமல் கிடக்கின்றன. பாணினியும், கீதை கிருட்டினனும் உலக அரங்கில் இடம் பெற்ற அளவிற்கு, அவர்களைவிடச் சற்றும் தாழாத, ஆனால் உயர்ந்த தொல்காப்பியனும், திருவள்ளுவனும் இடம் பெருமல் போனதேன் ? தமிழர் எண்ணுக.

தமிழன் விழித்து எழுந்தாலன்றி அவனுக்கும் விடிவில்லை; அவன் மொழிக்கும் விடிவில்லை; அவன் இலக்கியம், கலை தாழ்பாடுகளுக்கும் விடிவில்லை.

இந்நூலை உரிய காலத்தில் அச்சாக்கிய நாவல் ஆர்ட்சு அச்சக மேலாளர் கவிஞர். நாரா நாச்சியப்பர்க்கும், அச்சுப்படிகளைத் திருத்துவதில் துணை நின்ற என் மாணாக்கி செல்வி. கல்யாணி எம். ஏ.க்கும் என் ஆய்விலும் வாழ்விலும் ஆர்வம் கொண்ட அன்பர் அனைவர்க்கும் என் நெஞ்சுவந்த நன்றி.

க. ப. அறவாணன்

உள்ளுறை

எண்கள் பக்கங்களைக் குறிக்கும்
பிறைக்கு உள்ளே உள்ள எண்கள் தொல்காப்பிய நூற்பாவைக் குறிக்கும்

1 ஆய்வுமுகம்

ஆராய்ச்சி மூலங்கள் 3 முன்னேடிகள் 5 ஆராய்ச்சித் தலைப்பு 5 ஆய்வு எல்லை 6 ஆய்விற்குப் பயன்பட்ட பதிப்புகள் 6 ஆய்வு அமைந்துள்ள முறை 6 ஆய்வுமுகம் 6 தொல்காப்பியர் 7 உரை வரலாறு 7 தொல்காப்பிய உரைகள் 7 தொல்காப்பிய உரை வேறுபாடுகள் 7 அகத்திணை இயல் உரைவேறுபாடு 7 புறத்திணை இயல் உரைவேறுபாடு 7 ஆய்வு முடிவு 7 தொல்காப்பிய ஆய்வுத் திட்டங்கள் 8 குறிப்புகள் 8 பொருளடைவு 8 பின்னிணைப்புகள் 8 ஆய்வின் அளவு 8 ஆய்வின் பிரிவுகள் 8 சிக்கலும் தீர்வும் 9 நூற்பாவின் சொற்பொருள் அமைதி 9 பண்டைய உலக வரலாற்றுச் செய்திகள் 9 பழங்குடி மக்களின் மானிட இயல் சான்றுகள் 10 அணுகும் முறை 10 அட்டவணைகள் 11 ஆய்விற்கு உதவியோர் 11

2 தொல்காப்பியர்

தொல்காப்பியர் வரலாறு 15 தொல்காப்பியர் காலம் 15 தெய்வப் பெயர்கள் 16 முருகன்-கடல் தெய்வம் 17 கொற்றவை 17 கடவுள் வாழ்த்து இல்லாமை 17 நடுகல் வழிபாடு 18 கடற்படை 18 கிரேக்கச் சான்று 19 சங்க காலத்தில் கப்பற்படை 19 காவல் மரம் 19 இளவேனிற் பொழுது 20 தமிழகத்தில் இளவேனில் 21 வசந்த ருது 21 தொல்காப்பிய வேனில் 21 எழுத்து வரிவடிவம் 22 தொல்காப்பியர் காட்டும் வரிவடிவச் செய்திகள் 22 தமிழிக் கல்வெட்டுகள் 23 தமிழிக் கல்வெட்டில் எழுத்துருவம் 23 உயிர்மெய் வரிவடிவம் 23 பவணந்தியார் காட்டும் சான்று 23 எகர ஒகரம் புள்ளி பெறல் 24 கல்வெட்டுச் சான்றுகள் 24 வட்டெழுத்து 25 அறச்சலூர்க் கல்வெட்டு 25 புகலூர்க் கல்வெட்டு 25 மெய்பெறும் புள்ளி 25 கல்வெட்டுச் சான்றுகள் 26 நாணயச் சான்று 26 முடிவு 26 தென்னை தொல்காப்பியத்தில் காட்டப் படாமை 27 பனை 27 தென்னை கருப்பொருளாகச் சுட்டப் படாமை 27 கள்வகை 27 நாட்டின் பெயர் 27 தென்னைப் பயிர் 27 இந்தியாவில் அறிமுகம் 28 தென்னையின் தோற்றம் 29 தென்னை-பெயர் விளக்கம் 28 தென்னையின் காலம் 28 தொல்காப்பியர் காலத்தில் தென்னை இல்லாமை 29 தொல்காப்பியத்தின் பழமை 29 சங்க காலம் 29 புகலூர்க் கல்வெட்டின் காலம் 30

தொல்காப்பியர் பிறப்பகம் 30 தொல்காப்பியர் ஊர் 31 தொல் காப்பிய அமைப்பு 31 தொல்காப்பிய நோக்கு 31 தொல்காப்பியர் நோக்கம் 31 இலக்கணப் படைப்பின் நோக்கம் 32 தொல்காப்பியச் செய்திகளின் காலம் 32 குறிப்புகள் 33.

3 உரையின் வரலாறு

உரை இல்லாத காலம் 43 உரை தோன்றிய காலம் 43 எழுதாக்கிளவி—வாய்மொழி இலக்கியம் 44 உரை எழுதுதல் 44 உரைக் குறிப்புகள் 45 இலக்கண உரைத்தோற்றத்திற்குக் காரணம் 45 எடுத்துக் காட்டுகள்—உரை 46 உரை விரிவு 46 உரை வரலாற்றின் வளப்பம் மிக்க கட்டம் 46 சோழர் காலச் சமற்கிருத உரைகள் 47 பிற பகுதிகளில் உரைகள் 48 மணிப்பிரவாள உரை 48 உரை இயக்கம் 48 குறிப்புகள் 49.

4 தொல்காப்பியஉரை தோன்றக் காரணம்

உரைபெற்ற பழைய நூல்கள் 53 பண்டைய பற்று 54 சமற் கிருத ஆட்சி 54 வருணப் பாகுபாட்டின் ஆட்சி 55 உரைகளின் பெருக்கம் 55 உரையாளன் திறன் காட்டும் களம் 56 பத்தொன் பதாம் நூற்றாண்டு உரை 56 குழந்தை உரை 59 தொல்காப்பிய உரையாசிரியர்கள் 59 தொல்காப்பிய விருத்தியுரை 59 இளம் பூரணர் 60 இளம்பூரணர்தம் காலம் 61 இளம்பூரணர் உரை முறை 62 இளம்பூரணர் உரைச்சிறப்பு 62 நச்சினார்க்கினியர் 62 நச்சினார்க்கினியர் காலம் 62 நச்சினார்க்கினியர் உரைமுறை 63 நச்சினார்க்கினியர் உரைச்சிறப்பு 63 டாக்டர் சோமசுந்தர பாரதி 64 டாக்டர் சோமசுந்தர பாரதி உரைமுறை 64 டாக்டர் சோமசுந்தர பாரதி உரைச்சிறப்பு 64 உரையாசிரியர்கள் மேற் கோள் காட்டிய இலக்கண இலக்கியங்கள் — அட்டவணை 65 புலவர் குழந்தை 70 புலவர் குழந்தை உரைமுறை 70 புலவர் குழந்தை உரைத்திறன் 70 வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை உரை 70 அருணாசலம் பிள்ளையின் உரைமுறை 71 அருணாசலம் பிள்ளையின் உரைத்திறன் 71 குறிப்புகள் 71.

5 தொல்காப்பிய உரை வேறுபாடுகள்

தொல்காப்பிய உரைகளில் வேறுபாடு தோன்றக் காரணங்கள் 75 மூல ஆசிரியர்தம் சொல்லாட்சி 75 பலபொருள் சொல்லாட்சி 76 தொகை எண்களை ஆளுதல் 76 பொருள் மயக்கமுள்ள கலைச்சொற் களை ஆளுதல் 76வரையறுத்து நுதலிப் புகாதிருத்தல் 77 தெளிவற்ற கூட்டுச்சொற்களை ஆளுதல் 77 உரை ஆசிரியர் நோக்கும் போக்கும் 77 சொல்லைப் பிரிக்கும் முறையால் பொருள் வேறுபாடு 78 சூத்தி ரத்தைப் பிரித்தலாலும் சேர்த்தலாலும் பொருள் வேறுபாடு 78 நூற்பா இடப்பெயர்ச்சி பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் 78

சங்க இலக்கிய வழக்கு இல்லை எனில் பொருள் மாற்றம் 79 ஆரிய எதிர்ப்பு, உரை வேறுபாட்டிற்குக் காரணம் 80 நாத்திகப் பார்வை உரை வேறுபாட்டிற்குக் காரணம் 80 ஏடுபெயர்த்து எழுதுவோர் 81 உரைவேறுபாட்டிற்குக் காரணமும் விழுக்காடும்—அட்டவணை 82 உரைவேறுபாட்டிற்குள்ளாகா இடங்கள் 83 உரைவேறுபாட்டிற்குள்ளாகா நூற்பாத் தொகை 83 உரை வேறுபாடு எழாமைக்குக் காரணங்கள் 83 நூலாசிரியர் ஐயமற விளக்குதல் 83 நூலாசிரியர் வகை தொகைப் படுத்துதல் 83 உரைகாரர் பார்வையில் படாதிருத்தல் 84 உரை வேறுபாட்டைப் பெற்றும் உரிய விளக்கம் பெறுதன 85 குறிப்புகள் 85 உரைவேறு பாட்டிற்குள்ளாகா இடங்களும் காரணங்களும் 86.

6 அகத்திணை இயல் உரை வேறுபாடுகள்

அகம் என்ற பெயர் 89 அகத்திணை 90 அகம்—ஒரு விளக்கம் 90 அகத்திணை ஏழு 90 கைக்கிளை 91 பண்டைய மக்களிடையே காதல் 91 பழங்குடியினர் இடையே காதல் 92 ஐந்திணை 92 மண முறை—வழிமுறை 93, அரசக்காதல் 94 பெருந்திணை 94 பெயர் பெறுதல் 94 கருப்பொருளே பெயர் வைப்புக்கு அடிப்படை 95 ஒழுக்க அடிப்படை 95 அடையாளப் பூ 95 தமிழரும் மலரும் 96 மலர்விழி நிலப்பெயர் 96 உரிப்பொருள் பெயர் வேறு-நிலப்பெயர் வேறு 97 நிலப்பாகுபாடு 97 சூழலின் தாக்கம் 97 முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முறைமையாற் சிறத்தல் (3) 98 திணையைத் தீர்மானித்தல் 98 உரிப்பொருள்—உயிர்ப்பொருள் 99 திணை மயக்கம் (14, 15) 100 உரிப்பொருள் மயங்காது 100 முதல், கரு, உரி மயங்கும் வகை 100 உரிப்பொருள் அல்லன யாவை ? 101 பொழுதுகளின் எண்ணிக்கை 102 பெரும்பொழுது 102 சிறு பொழுது பற்றி ஆசிரியர் கருத்துகள்—அட்டவணை 103 சிறு பொழுதுகள் 104 வைகறையும் விடியலும் 104 எற்பாடு—எது? 105 எற்பாடு—காலைப் பொழுதா ? 105 எற்பாடு—மாலைப் பொழுதே 106 கருப்பொருள் 107 நெய்தல் விலங்கு 108 கராமும் சுறவும் விலங்கே 108 திணைக்குரிய மக்கள் பெயர் (22-26) 109 ஏற்றத் தாழ்வுள்ள சமுதாயம் 109 தொல்காப்பியச் சமுதாயம் 109 ஏற்றத்தாழ்வு பற்றிய தொல்காப்பிய ஆட்சிகளும் உரையாளர் தரும் பொருள்களும்—அட்டவணை 111 புறச் சான்றுகள் 112 தலைமக்கள் பெயர்வைப்பு 114 இனப்பெயர் சுட்டப்படுமா ? 114 பொதுப் பெயர் சுட்டல் 115 வாழ்வின் வளர்ச்சி 116 உரிப் பொருள் 119 குறிஞ்சி 119 முல்லை 119 மருதம் 119 நெய்தல் 120 பாலை 120 பாலைப் பிரிவு 122 புறத்திணை—போர்த்திணை 122 வீட்டு வாழ்க்கை 123 கைக்கிளை—பெருந்திணை 125 அகத்திணையில் பிறர் செய்திகள் 126 அகத்திணை வைப்பு முறை 126 பிரிவின் அடிப்

படை 126 களவுப் பிரிவு 127 இருவகைப் பிரிவு—வைப்பு முறை 127 இருவகைப் பிரிவு பற்றி உரையாளர் கருத்துகள் அட்டவணை-128 கொண்டுதலைக் கழிதல் 130 கலந்த பொழுது 130 பிரிந்தவண் இரங்கல் 131 களவில் நிகழ்வன 131 உடன்போக்கு—அருகிய வழக்கா? 132 சான்றுகள் 133 அயல்நாடுகளில் பெண்ணுரிமை 134 கற்பொழுக்கத்தில் பிரிவுகள் 135 பிரிவு அட்டவணைகள் 136 ஓதற் பிரிவு 144 ஏனோர் 145 மேலோர் நால்வர் 146 நால்வர் 147 மேலோர் முறைமை 147 பின்னோர் 148 கடற் பிரிவு 148 முந்நீர்—ஒரு விளக்கம் 149 நிகழ்ந்தது நிணைத்தல் 149 நிகழ்ந்தது கூறி நிலையல் 150 விரவும் பொருளும் விரவல் (48) 151 நற்றாய் கூற்று பற்றிய அட்டவணை—152 தோழிகூற்று அட்டவணை, 154 கண்டோர் கூற்று அட்டவணை 156 தலைவன் கூற்று அட்டவணை 158 கூற்றுகள் (43, 44.45) 165 தாய்க்கூற்று 165 தோழி கூற்று 165 கண்டோர் கூற்று 167 தலைவன் கூற்று 167 மூன்றன் பகுதி 168 எஞ்சியோர்தம் கூற்று 169 முப்பாகுபாடு 169 கைக்கிளை பெருந்திணை கருத்துவேறுபாடுகள் அட்டவணை 170 கைக்கிளைத்திணை 174 நக்கண்ணைக் காதல் கைக்கிளையா? 174 புறப் பொருள் வெண்பாமாலைப் பகுப்பு 175 நாற்கவிராச நம்பியின் கருத்து 175 முன்னைய நான்கு 176 காமம் சாலா இளமைக் காதல் 177 மானிட இயல் சான்றுகள் 178 பண்டைய இந்திய ஒழுக்கம் 179 பழஞ்சீனத்து ஒழுக்கம் 179 கிரேக்க உரோம நாட்டு ஒழுக்கம் 179 பெருந்திணை 180 மடல் ஏற்றம் 180 பெண் மடலூராமை 181 மிக்க காமத்து மிடல் 182 கைக்கிளை பெருந்திணையும் எண்வகை மணமும் 182 பொருத்தம் இன்மை 184 கைக்கிளைக்குரிய மூன்று 184 பெருந்திணைக்குரிய நான்கு 185 கைக்கிளை பெருந்திணைக்கு உரியர் 185 கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்கள் போர் ஒழுக்கங்களே 186 பண்டைய நாடுகளில் போர் மரபு 187 பரத்தமை 189 கைக்கிளை பெருந்திணைகள் அகத்திணைகளா? புறத்திணைகளா? 190 அகத்திணையுள் இயற்பெயர் சுட்டுதல் 192 நாடக வழக்கும் உலகியல் வழக்கும் (56) 193 நாடக வழக்கு, பாடல் சான்ற புலனெறி வழக்குகள் பற்றி உரைவேறுபாடு அட்டவணை 195 புலன்நெறி 197, நாடக வழக்கு 198 உலகியல் வழக்கு 198 கலித்தொகை, பரிபாடல் பாக்களில் நாடக அமைவு 199 அகத்தில் பெயர் சுட்டல் 200 பெயர் சுட்டல் புறம் 201 அக ஒழுக்கப் பகுதியில் பெயர் வாராமை 202 குறிப்புகள் 203.

7 புறத்திணை உரை இயல் வேறுபாடுகள்

போர்க் காரணங்கள் 223 உளஇயல் காரணம் 224 வீர விருப்பம் 225 பொரு விருப்பம் 225 மண்ணாசை 225 பொறுமை 226 தலைமை விருப்பம் 226 உரிமைப் போராட்டம் 226 தனிமானம் 227

இனமானம் 227 மகளிர் 227 தொல்காப்பியர் புறத்திணையும் போர்க் காரணங்களும் 228 பகை 228 மண்ணுசை 228 மறப்பணி 228 வரும்போர் 228 பெருமை 228 பெண் கேட்டல் 229 தன்னுறு தொழிலும் மன்னுறு தொழிலும் 229 கரந்தை - தன்னுறு தொழிலா? 230 நிரைமீட்டல் 230 தொல்காப்பியர் காட்டும் கரந்தைப் பகுதிகள் 230 புறநானூற்றுப் பாடல்கள் 231 வெட்சியுள் தன்னுறு தொழில் 231 கல்வெட்டுகள் காட்டும் கரந்தை - அட்டவணை 232 கல்வெட்டுச் சான்றுகள் 234 வீர ஊழிக்காலம் 235 ஆநிரை கவர்தலின் நோக்கம் 236 இருளர் 237 வெட்சித்திணையும் இலக்கியங்களும் 237 பொருள் அடிப்படையில் புறநானூற்றுப் பாக்கள் - அட்டவணை 239 சங்க காலத்து நிரைகவர் போர்கள் 240 ஆநிரை கோடல் 240, எருமைகளைக் கவர்தல் 240 ஆநிரை கவர்தலும், ஆநிரை காக்கப்படுதலும் 241 பசுமாடும் பார்ப்பனரும் 242 ஆநிரை கோடலே அயல்நாட்டுப் பழக்கமா? 244 திராவிடப் பழங்குடியினரிடம் எருமைச் செல்வம் 245 மாடு - செல்வம் 245 வெட்சி, கரந்தை உட்பிரிவுகளும் பொருளும் அட்டவணை 246 வெட்சித்திணை 248 புடைகெடப் போகிய செலவு 248 பூசல்மாற்று 249 முற்றிய ஊர்கொலை 250 குடிநிலை, துடிநிலை, கொடிநிலை 250 குடிநிலை என்ற பாடமும் பொருளும் 250 கொடிநிலை என்ற பாடமும் பொருளும் 251 துடிநிலை என்ற பாடமும் பொருளும் 252 துடிநிலையும் புறநானூறும் 252 துடியும் மாலைக் கருப்பொருளும் 253 கொற்றவை 253 துடிநிலையும் கொற்றவை நிலையும் 253 துடிநிலையும் கொற்றவை நிலையும் திணைப்புறன் 253 வெறி அறி சிறப்பின் வெல்வாய் வேலன்...துறைத்தே 255 வாடா வள்ளி 257 மாயோன் மேய மன்பெரும் சிறப்பின் தாவா விழுப் புகழ் பூவை நிலை (63) 258 நிமித்தம் காட்டல் 258 ஆர் அமர் ஓட்டல் (63) 259 தலைத்தாள் நெடுமொழி தன்னெடு புணர்த்தல் 259 நடுகல் (63) 260 நடுகல் வகை 261 கால அடிப்படையில் நடுகற்கள் 261 நச்சினார்க்கினியர் கூறும் பொருள் - அட்டவணை 262 பண்டைய நாகரிக மக்களிடமும் நடுகல் முறை 263 பழங்குடிகளிலும் நடுகல் பழக்கம் 265 நடுகல்லின் தோற்றம் 267 ஆவி நம்பிக்கை 268 நீர்ப்படை 269 சீர்த்தகு மரபிற் பெரும்படை 269 எழுத்துப் பொறித்தல் 270 வாள்மலிந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடவற்கருளிய பிள்ளையாட்டு (63) 271 வஞ்சித் திணை 274 சங்கப் பாடல்களில் வஞ்சித்திணை 275 கொடுத்தல் எய்திய கொடைமை (65) 277 மாராயம் பெற்ற நெடுமொழி 278 குன்றுச் சிறப்பின் கொற்றவள்ளை 279 அழிபடை தட்டோர் தழிஞ்சி 280 உழிஞைத்திணை முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும் (66) 281 கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் (68) 283 தொல் எயிற்கு இவர்தல் (66) 284 திறப்பட ஒருதாள் மண்டிய

குறுமை (66) 284 குடையும் வாளும் நாள்கோள் (69) 285 முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி (69) 287 மதில் மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கம் 287 இகன்மதில் குடுமிகொண்ட மண்ணுமங்கலம் (69) 288 தொகை நிலை (69) 289 தும்பைத்திணை இருநிலம் தீண்டா அருநிலை (71) 291 கூழை தாங்கிய பெருமை (72) 291 படை அறுத்துப் பாழி கொள்ளும் ஏமம் 292 வாகைத்திணை அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம 293 'ஐவகை மரபின் அரசர் பக்கம்' - என்பதற்கு உரைகாரர் கூறுவன - அட்டவணை 294 வணிகர்க்குரிய ஆறு தொழில்கள் - அட்டவணை 294 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' - என்பதற்கு உரைகாரர் கூறுவன - அட்டவணை 295 வேளாளர்க்குரிய ஆறு தொழில்கள் - அட்டவணை 296 ஆரியர்தம் இருக்கை 297 ஆரியர்தம் தென்புல வருகை 298 தொல்காப்பியத்துள் இடம்பெற்றுள்ள அந்தணர் பற்றிய செய்திகள் 300 வேள்விகளைச் செய்வித்தல் 303 போரில் விதிவிலக்குப் பெறுதல் 303 ஆட்சி அதிகாரப்பங்கு 304 யானைப் பாகர் 305 இருமரபுகளையும் வேறு பிரித்தறிதல் 305 ஆரியருள் நான்கு வருணப் பாகுபாடு 307 இனப் பாகுபாடு - தொல்காப்பியக் கருத்து 307 இனப்பூசல் இல்லாமை 308 மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயம் (74) 310 நாலிரு வழக்கின் தாபதப் பக்கம் 313 நாலிரு வழக்கின் தாபதப் பக்கம் - அட்டவணை 313 அணைநிலை வாகை 315 பகட்டினனும் ஆவினனும் துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கம் 317 கடிமனை நீத்த பால் 318 கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை 319 காஞ்சித்திணை : போர்ப்பணியில் பெண்டிர் பங்கு (77) 320 பெண்டிர்க்குப் போரிலிருந்து விலக்கு 323 பரத்தமையைத் தணிக்க எண்ணுதல் 324 தாமே எய்திய தாங்கு அரும்பையுள் (77-21) 324 நல்லாள் கணவனொடு நளி அழல் புக்கு இடையிட்ட மாலை சொல் நிலை 326 உடன் கட்டை ஏறும் பழக்கம் 327 அரும்பெருஞ்சிறப்பின் புதல்வன் பயந்த தாய் தப வருஉம் தலைப்பெயல் நிலை 329 நாலிரண்டைத் தொல்காப்பியர் விளக்கும் ஆறு – அட்டவணை 330 பாடாண்திணை 331 அமரர்கண் முடியும் அறுவகை (79) 332 செந்துறை வண்ணப்பகுதி (80) 333 கடவுளும் கடவுள் வாழ்த்தும் (81-85) 334 குறிப்புகள் 342

8 நிறைவுரை

அகமும் புறமும் 369 தொல்காப்பியர் காலம் 370 முருகன்: பொதுநிலத் தெய்வமாதல் 370 கடவுள் வாழ்த்து நூல் முகப்பில் இடம் பெறுமை 370 நடுகல்லில் எழுத்துப் பொறிக்காமை 370 கடற்படை சுட்டப்படாமை 370 காவல்மரம் கூறப்படாமை 371 இளவேனிற் பொழுது 371 எகர ஒகர வரிவடிவு 371 தொல்காப்பியர் தென்னைமரத்தைச் சுட்டாமை 371 வழக்கும் செய்யுளும் 372

பழைமைக்கும் பழைமை 372 தொல்காப்பிய உரை தோன்றக் காரணம் 372 தொல்காப்பிய உரைகளில் வேறுபாடு தோன்றக் காரணங்கள் 372 உரைகளில் வேறுபாடு தோன்றுமைக்குக் காரணங்கள் 372 தொல்காப்பியக் காலக் காதல் 372 பெயர்வைப்பிற்கு அடிப்படை கருப்பொருளே 373 திணைப்பிரிப்பிற்கு அடிப்படை 373 சிறுபொழுது 373 தொல்காப்பியர் காலத்து அடியோர் 373 தொல் காப்பியர் கால இனப்பிரிவு 373 உடன்போக்குப் பிரிவு 373 ஓதற் பிரிவு 374 கடற்பிரிவு 374 பரத்தையர் பிரிவு 374 பா மாந்தர் கூற்றுகள் 374 கைக்கிளை 374 பெருந்திணை 374 நாடக வழக்கு 375 அகத்தில் பெயர் சுட்டல் 375 புறத்திணை-போர்த்திணை 375 போர்க் காரணங்கள் 376 வெட்சித்திணை - போரின் தொடக்கம் அன்று 376 நிரை கவர்தல் காப்பதற்கன்று 376 நிரைகாத்தல் ஆரியப் பழக்கம் 376 நடுகல் - வெட்சி/கரந்தை மறவர்க்கு மட்டுமே 377 ஆரியர் வரவும் தொல்காப்பியமும் 377.

9 தொல்காப்பிய அகத்திணை இயல் புறத்திணை இயல் தொடர்பாக மேலும் ஆராய வேண்டுவன

தொல்காப்பியமும் திராவிடப் பழங்குடி மக்களும் 378 தொல் காப்பியமும் உலகப் பழங்குடி மக்களும் 378 தொல்காப்பியப் பொருளதிகாரமும் (தமிழர் தவிர) பிற திராவிடர்தம் பண் பாடும் 378 தொல்காபியமும் சமற்கிருதக் காதல், போர் பற்றிய இலக்கிய, இலக்கணங்களும் 379 தொல்காப்பிய அகத்திணையும், சங்க இலக்கிய அகப்பாக்களும் 379 தொல்காப்பியப் புறத்திணை யும், சங்க இலக்கியப் புறப்பாக்களும் 379 தொல்காப்பிய உரை களில், சமற்கிருதக் கருத்துகளின் செல்வாக்கு 379 தொல்காப்பிய உரைகளும், சமகாலச் சமற்கிருத இலக்கண உரைகளும் 380 தொல்காப்பிய ஒவ்வோர் இயலும், உரையும் பற்றித் தனித்தனி ஆய்வு 380 பொருளடைவு 381 மேற்கோள் நூல்கள் 387.

அட்டவணைகள்

எண்	அட்டவணையின் பெயர்	பக்க எண்
1	உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய இலக்கிய இலக்கணங்கள் அகத்திணை இயல் உரை	65
2	உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய இலக்கிய இலக்கணங்கள் அகத்திணை இயல் உரை	66
3	உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய இலக்கிய இலக்கணங்கள் புறத்திணை இயல் உரை	67
4	உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய இலக்கிய இலக்கணங்கள் புறத்திணை இயல் உரை	68
5	உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய இலக்கிய இலக்கணங்கள் புறத்திணை இயல் உரை	69

6	உரை வேறுபாட்டிற்குக் காரணமும் விழுக்காடும்	82
6அ	உரை வேறுபாட்டிற்குள்ளாகா இடங்களும் காரணங்களும்	86
7	சிறுபொழுது பற்றி ஆசிரியர் கருத்துகள்	103
8	ஏற்றத்தாழ்வு பற்றிய தொல்காப்பிய ஆட்சிகளும் உரையாளர் பொருள்களும்	110
9	இருவகைப் பிரிவு பற்றி உரையாசிரியர் கருத்துகள்	127
10	பிரிவு (வரைபடம்)	136
11	நால்வகைப் பாகுபாடு பற்றி உரையாசிரியர்தம் கருத்து	137
12	பிரிவு பற்றி உரையாசிரியர்தம் கருத்து	138
13	பிரிவு பற்றி இலக்கண நூலாசிரியர் கருத்து	140
14	தன்னும் அவனும்.....என வரும் நற்றாய்க்கூற்று	152
15	தலைவரும் விழுமம்.....என்ற நூற்பாவிற்கு உரை வேறுபாடு	154
16	கண்டோர் கூற்று நூற்பாவிற்கு உரை வேறுபாடு	156
17	தலைவன் கூற்று நூற்பாவிற்கு உரை வேறுபாடு	158
18	கைக்கிளை, பெருந்திணை கருத்து வேறுபாடுகள்	170
19	"நாடக வழக்கினும்..." என்ற நூற்பாவிற்கு உரை வேறுபாடு	195
20	கல்வெட்டுகள் காட்டும் கரந்தை	232
21	பொருள் அடிப்படையில் புறநானூற்றுப் பாக்கள்	239
22	வெட்சித்திணை	246
23	நச்சினார்க்கினியர் நடுகல் பற்றிக் கூறும் பொருள்	262
24	'ஐவகை மரபின் அரசர் பக்கம்' என்பதற்கு உரையாசிரியர் கூறுவன	294
25	வணிகர்க்குரிய ஆறு தொழில்கள்	294
26	அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்பதற்கு உரையாசிரியர் கூறுவன	295
27	வேளாளர்க்குரிய ஆறு தொழில்கள்	296
28	'நாலிரு வழக்கின் தாபதப் பக்கம்' என்பதற்கு உரையாசிரியர் கூறுவன	313
29	நாலிரண்டைத் தொல்காப்பியர் விளக்கும் ஆறு	330
30	"காமப்பகுதி கடவுளும் .." என்ற நூற்பாவிற்கு உரைவேறுபாடு	342

குறுக்க விளக்கம்

ஆய்வினும், குறிப்புகளினும், பின்னிணைப்பினும் இடம் பெற்றுள்ளவை

அகத். - அகத்திணை இயல். அகம். - அகநானூறு. அகத். வளம். - வித்துவான் மு. அருணைசலம் பிள்ளையின் அகத்திணை இயல் உரைவளம். அடைக். - சிலப்பதிகாரம், அடைக்கலக் காதை அருணை. ப. - அருணைசலம், டாக்டர். ப. அருணை. மு - அருணை சலம், மு. ஆரா. க. - சஞ்சீவி, டாக்டர். ந., ஆராய்ச்சிக் கட்டு. டுரைகள்.

இ. ப. தமிழரும் - இராமகிருஷ்ணன், எசு. இந்தியப் பண் பாடும் தமிழரும். இளம். உரை - இளம்பூரணர் உரை. இளம். இளம்பூரணர். இறையனர் அகப்பொருள். இ. வி. - இலக்கண விளக்கம்.

ஐங். - ஐங்குறுநூறு. ஐந். ஐம்பது - ஐந்திணை ஐம்பது.

கம்பர். - கம்பராமாயணம். கலி. - கலித்தொகை. களவழி. - களவழி நாற்பது. கற்பு. - கற்பியல். காந்தரு. - காந்தருவ தத்தையார் இலம்பகம், சீவக சிந்தாமணி. கால்கோள். - கால் கோள் காதை, சிலப்பதிகாரம். குழந்தை. - புலவர் குழந்தை குறள். - திருக்குறள், குறுந். - குறுந்தொகை.

சமூக. அ. கோ. - சமூக இயலின் அடிப்படைக் கோட்பாடு கள். சிலம்பு. -சிலப்பதிகாரம். சிலம்பு. கொலைக். -சிலப்பதிகாரம் கொலைக்களக்காதை. சிந்தாமணி. - சீவக சிந்தாமணி. சூத். - சூத்திரம். சை. சி. நூ க. - திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம்.

த. இ. வ. - அருணைசலம், மு. எழுதிய தமிழ் இலக்கிய வர லாறுகள். தகடூர். - தகடூர் யாத்திரை. த. நெ. வி. - தமிழ் நெறி விளக்கம். திருமுருகு-திருமுருகாற்றுப்படை. தொல். - தொல்காப் பியம். தொல். கற்பு.-தொல்காப்பியம்,கற்பியல். தொல். களவு. - தொல்காப்பியம், களவியல். தொல். செய். - தொல்காப்பியம். செய்யுளியல். தொல். பொருள். - தொல்காப்பியம் பொருளதி காரம். தொல். மரபு. - தொல்காப்பியம் மரபியல். தொ. வி.- தொன்னூல் விளக்கம்.

நச்சர். - நச்சினர்க்கினியர். நக்சர். உரை. - நச்கினர்க்கி னியர் உரை. நச்சர். மே. சூ. - நச்சினர்க்கினியர் மேற்கோள் சூத் திரம். நம்பி. - நம்பியகப் பொருள். நாலடி. - நாலடியார். நீதிநெறி வி. - நீதிநெறி விளக்கம். நூ. - நூற்பா. நூற். -நூற் முண்டு. நெடுநல். - நெடுநல்வாடை.

ப. - உரிய நூலின் பக்கம். ப. படலம். - பன்னிரு படலம். பழமொழி - பழமொழி நானூறு. பட்டினப். - பட்டினப் பாலை பதிற். - பதிற்றுப்பத்து. ப. பாட்டு. - பத்துப்பாட்டு. பாரதி. சோமசுந்தர பாரதியார், டாக்டர். பா. பே. - பாட பேதம். பு. திரட்டு. - புறத் திரட்டு. புறத். - புறத்திணை இயல். புறம். - புற நானூறு. பு. வெ. - புறப்பொருள் வெண்பாமாலை. பெ. பொ. வி. - பெரும் பொருள் விளக்கம். பெரும்பாண். - பெரும்பாணாற்றுப்படை. பெரு. பாரதம். - பெருந்தேவனார் பாரதம். பொருந. - பொருநராற்றுப்படை. பொது. - குழந்தை தொல்காப்பியப் பொதுவியல். பொருள். - பொருளதிகாரம்.

மா. அ. - மாறன் அகப்பொருள். மே நூ. - மேற்காட்டிய நூல். மு. அக. ஒ. இ. - முத்துவீரியம் அகத்திணை ஒழுக்க இயல். மு. - முத்துவீரியம். முத்தொள். - முத்தொள்ளாயிரம். மு. மே. - முத்துவீரியம் மேற்கோள். முல்லை. - முல்லைப் பாட்டு.

யா. வி. - யாப்பருங்கல விருத்தி.

வித்துவான் மு. அ. - அருணாசலம் பிள்ளை, வித்துவான் மு. வீ. - வீரசோழியம், வீ. மே. - வீரசோழியம் மேற்கோள்.

Castes. - Castes and Tribes of Southern India by Thurston. Ed. - Edition. Ethno. - Ethnographical notes by Thurston. F. A. M. I. - Foreign Accounts of marriage in Ancient India. No. - Number. P. - Pages. Sex in Greece. - Sex in Ancient Greece. Sex in India. - Sex in Ancient India. Sex in Rome. - Sex in Ancient Rome.

ஆய்வுமுகம்

1

ஆய்வுமுகம்

ஆராய்ச்சி மூலங்கள்

இலக்கண உலகில், தொல்காப்பியத்தின் இடம் தன்னிகரற்றது. இவ்விலக்கணத்தின்கண் அடங்கிய செய்திகளே அடுத்து வந்த அறிஞர்களுக்குக் கலைக்களஞ்சியமாக இலங்கியது. தமிழில் எழுதப்பெற்றுள்ள இலக்கண நூல்கள் பலவும் தொல்காப்பியப் பேராற்றின் கிளையாறுகளே. தொல்காப்பியத் தலைமையை உணர்ந்த சான்றோர் அந்நூலை ஒட்டிப் புதுமுயற்சிகள் செய்தனர். அவர்தம் முயற்சி மூவகையாம். அவையாவன:

1 தொல்காப்பியத்தைச் சார்ந்து இலக்கணம் படைத்தல்.

2 தொல்காப்பியத்திற்குப் புத்துரை இயற்றல்.

3 தொல்காப்பியத்தை ஒட்டி விளக்கம் வரைதல்.

இம்மூன்றனுள் தொல்காப்பியத்திற்கு அவ்வப்போது உரை எழுதும் முயற்சி, மற்றவற்றினும் கடுமையானது; தலைமை வாய்ந்தது. புத்திலக்கணம் படைப்போர், தொல்காப்பியப் பாதையினின்று, சற்றே விலகி இருக்க நேரினும் குற்றம் இல்லை. தொல்காப்பியத்திற்கு விளக்கம் சமைப்பதில் புதுவது கூறல் ஒன்றும் இல்லை. ஆனால் உரை வரைவதில் பல இடையூறுகள் இருந்தன. மூல நூலாசிரியர் தம் நோக்கு, அவர்கால, அவருக்குப் பிற்பட்ட கால இலக்கியங்களின் போக்கு; அவ்வப்போது எழுந்திருக்கும்

இலக்கணக் கொள்கைகளின் வளர்ச்சி, ஆகியவை தம்முள் முரணுமல் படைக்க வேண்டிய பொறுப்பு உரைகாரருக்கு இருந்தது. இப்பொறுப்பீனை முற்றும் உணர்ந்து ஏறத்தாழப் பத்து நூற்ருண்டுகளாகத் தொடர்ந்து அறிஞர், தொல்காப்பியத் திற்கு உரை வரைய முயன்றனர், வென்றனர்.

தொல்காப்பியத்திற்கு உரை காண முயன்ருேர் சிலர். அவர் அனைவரும் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங் களுக்கும் உரை இயற்றினர் அல்லர்; ஒரு சிலர் சொல்லதிகார உரை அளவில் நின்றனர்; வேறு சிலர், எழுத்து, சொல் என்ற இரண்டு அதிகார அளவில் நின்றனர்; மற்றும் சிலர் பொருளதி காரஇயல்களில் சிலவற்ருேடு நின்றனர். நூல் முழுமைக்கும் உரை இயற்ற முயன்ற பழஞ் சான்ருேர் இருவர். முன்னவர் இளம் பூரணர், பின்னவர் நச்சினர்க்கினியர் ஆவர். இவ்விருவருள்ளும் இளம்பூரணர் உரை மட்டுமே பொருளதிகாரம் முழுதிற்கும் கிடைத்துள்ளது; குறிப்பாகப் பொருளதிகாரப் பகுதிக்கு, உரை கள் பல்காமை கருதத்தக்கது. எழுத்து, சொல் எனும் அதிகா ரங்கள் நூலின் முதலிரண்டு அதிகாரங்கள் எனினும் அவை இரண்டும், பொருளதிகார மாளிகைக்கு இட்டுச் செல்லும் படி கட்டுகளே. பொருளதிகாரமே தலைமை வாய்ந்தது; பழந்தமிழர் தம் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைக் காட்டும் கண்ணுடியாக இலங்குவது. இவ்வதிகாரம் பற்றியும் இவ்வதிகாரத்திற்கு எழுதப் பட்ட உரைகளைப் பற்றியும் விரிவான ஆய்வுகள் நிகழ்தல் வேண்டும். ஆனல் நிகழவில்லை. எனவேதான் இவ்வாய்விற்குப் பொருளதிகாரப் பகுதி பொருளாகக் கொள்ளப் பெற்றது.

இவ்வாய்விற்காக அறுபதிற்கு மேற்பட்ட தொல்காப்பியப் பதிப்புகளும், நாற்பது நூல்களும், தொல்காப்பியம் பற்றி வெளி யான இருநூற்றிற்கு மேற்பட்ட தமிழ்க் கட்டுரைகளும் நூற்றிற்கு மேற்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளும் பார்வையிடப் பெற்றன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், தமிழ்க் கல்சர் (ஆங்கிலம்), தமிழியல் (ஆங்கிலம்) முதலான ஆய்விதழ்களும், பலவேறு பருவங்களில் பலவேறு நிறுவனங்களின் சார்பில் வெளி வந்த மலர்களும், பலவேறு கருத்தரங்குகளில் படிக்கப் பெற்ற தமிழ், ஆங்கிலக் கட்டுரைகளும் இவ்வாய்விற்குத் துணை செய்தன. இவ்வாய்வு, அகம், புறம் பற்றிய ஆய்வு என்பதால், பண்டைக் கிரேக்க, உரோம, அசீரிய, பாபிலோனிய, சீன மாந்தர் பற்றிய ஆங்கில நூல்களும் ஆராயப் பெற்றன. இவையன்றிப் பல்கலைக் கழக அளவில் ஆராய்ச்சிப் பட்டங்களுக்காகச் செய்யப்பட்ட தொல்காப்பியம் தொடர்பான ஆய்வு நூல்களும், கருவி நூல்க ளாக கொள்ளப் பெற்றன.

முன்னோடிகள்

தொல்காப்பியத்தை மையமாக வைத்து, மிகச் சில ஆய்வுகளே பல்கலைக் கழக அளவில் நிகழ்ந்துள. அவை வருமாறு:

1 டாக்டர் எச். எசு. தாவீது அடிகளார் தம் 'தொல்காப்பிய எழுத்ததிகாரத் திறனாய்வு' (இலண்டன் பல்கலைக் கழக பிஎச். டி. 1952) 2 திருமதி ஆர். சீதாபாயின் 'தொல்காப்பியச்சொல் அடைவின் ஆய்வு' (சென்னைப் பல்கலைக் கழகம் (செ. ப.) எம். லிட். 1960) 3 திரு ஏ. சங்கர நாராயணனின் 'தொல்காப்பியத்தில் கவிதையின் அமைப்பும் உள்ளீடும்' (செ. ப. எம். லிட் 1962) 4 டாக்டர் சி. இலக்குவனார் தம் ''தொல்காப்பியம் (ஆங்கிலம்) திறனாய்வு'' (செ. ப. பிஎச்.டி. 1963) 5 டாக்டர் எம். இராசேரலின் ''தொல்காப்பியத்தில் உருபனியல்'' (செ.ப. பிஎச். டி 1965) 6 டாக்டர் சி. சுப்பிரமணியத்தின் 'மொழியியல் அடிப்படையில் தொல்காப்பியம் — நன்னூல் திறனாய்வு' (செ.ப. பிஎச். டி. 1967) 7 திரு. இராசமாணிக்கத்தின் ''தொல்காப்பியம் காட்டும் சமூக வாழ்க்கை'' (செ.ப. எம். லிட். 1972) இவை அனைத்தும் தொல்காப்பிய மூலத்தைத் தலைமையாகக் கொண்டு இயற்றப் பெற்றவை. டாக்டர். செ. வை. சண்முகத்தின் ''நச்சினார்க்கினியரின் ஒலியியல் முறை'' (அண்ணாமலைப் பல்கலைக் கழகம் எம். லிட். 1960) என்ற ஆய்வும்' டாக்டர் க. ஆறுமுகனார் தம், ''நச்சினார்க்கினியம் ஒரு — திறனாய்வு'' (செ.ப. பிஎச்.டி 1964) என்ற ஆய்வும் தொல்காப்பிய உரை காரருள் ஒருவராகிய நச்சினார்க்கினியரை மட்டும் தலைமையாகக் கொண்டு ஆக்கப் பெற்றவை. பல்கலைக் கழகப் பட்டத்திற்காக அன்றெனினும் தொல்காப்பிய உரைபற்றி வெளிவந்த வித்துவான் மு. அருணாசலம் பிள்ளையின் மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடான, 'அகத்திணை இயல் உரைவளம்' என்ற அரிய நூல் ஈண்டுக் குறிக்கத் தக்கது. இவ்வாய்வுகள், தத்தம் தலைப்பிற்குத் தக தொல்காப்பிய நூலைச் சில கூறுகளில் செவ்வையுற ஆய்வு செய்துள்ளன என்பதில் ஐயமில்லை.

ஆராய்ச்சித் தலைப்பு

தொல்காப்பியப் பொருளதிகாரம், அகத்திணை, புறத்திணை இயல்களுக்கு இன்றுவரை (1976) எழுதப்பட்ட உரைகள் அனைத்தையும் மனத்துள் கொண்டு, உரை வேறுபாடு பற்றி எழுதப் பட்ட முதல் ஆய்வு, 'தொல்காப்பிய உரை வேறுபாடு — ஒரு திறனாய்வு' என்ற தலைப்புடைய இவ்வாராய்ச்சியாகும். திருக் குறள் உரை வேறுபாடு பற்றி டாக்டர். சாரங்கபாணி அவர்களால் முன் ஆய்வு செய்யப்பட்டு அவ்வாய்வு, நூல்களாக வெளி

வந்துள்ளது. தொல்காப்பிய உரைகளிலிருந்தும் அத்தகு ஆய்வு வருதற்கு இவ்வாய்வேடே முன்னோடி.

ஆய்வு எல்லை

'தொல்காப்பிய உரை வேறுபாடுகள்—ஒரு திறனாய்வு' என்பது இவ்வாய்வுரையின் விரிந்த தலைப்பு. தொல்காப்பியப் பொருளதிகார இயல்களான அகத்திணை இயலும், புறத்திணை இயலுமே இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட எல்லைகள். இவ்விரண்டியல்களில் உள்ள எண்பத்தெட்டு நூற்பாக்களுக்கு உரை காணும் உரையாசிரியர்கள் கொண்ட வேறுபாடுகள் மட்டுமே இவ்வாய்வின் தலைமைப் பொருள். வேறுபாட்டுக் கருத்தாய்விற்குப் பழைய உரைகளும் புதிய உரைகளும் கருவிகளாகக் கொள்ளப் பெற்றன. இவ்வகையில், இளம். (கி.பி. பதினோராம் நூற்றாண்டு) நச்சர். (பதினான்காம் நூற்றாண்டு), பாரதி (கி. பி. 1879 - 1953), குழந்தை (1906 - 1972), வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை (1903-1973) ஆகியோர் எழுதியஉரைகள் ஆராயப்பெற்றன. முற்றுமாக உரையாசிரியர்கள் தம்முள் வேறுபடும் இடங்களே இவ்வாய்வின் உயிர்ப் பொருள்; உரிப்பொருள்.

ஆய்விற்குப் பயன்பட்ட பதிப்புகள்

உரையாய்விற்குத் துணையான தொல்காப்பியப் பதிப்புகள் அனைத்தும் பார்க்கப் பெற்றுக் கையாளப் பெற்றுள்ளன. எந்த ஆண்டில் வெளிவந்த பதிப்பு இவ்வாய்விற்கு மேற்கொள்ளப் பெற்றது என்பது மேற்கோள் நூல் அட்டவணையில் விளக்கமாக அளிக்கப் பெற்றுள்ளது. உரையாராய்ச்சி மேற்கொள்ளும் போது அவ்வவ் உரைகாரர் மேற்கொண்ட நூற்பா எண் வரிசையே பின்பற்றப்பட்டுள்ளது. பிற இடங்களில், இவ்வாய்வு ஆசிரியனால் தொகுத்துப் பதிக்கப்பட்ட 'தொல்காப்பியக் களஞ்சிய' நூற்பா வரிசை மேற்கொள்ளப் பெற்றது.

ஆய்வை அமைத்துள்ள முறை

ஆய்வேடு இரு தொகுதிகளாக அமைக்கப் பெற்றுளது. முதல் தொகுதி ஆய்விற்குரிய அகப்பகுதியாகும்; இரண்டாம் தொகுதி ஆய்வுப் பொருளுக்குத் துணையான புறப்பகுதியாகும். முதல் தொகுதி ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றுளது. அவை யாவன.

ஆய்வு முகம்

இவ்வாய்வு ஒன்பது பிரிவுகளை உடையது. முதற்பகுதி ஆய்வு முகம் என்ற இப்பகுதி ஆகும். இப்பகுதி ஆய்வின் புறப்பகுதி

இதன்கண், இவ்வாராய்ச்சிக்குரிய மூலங்கள், தொல்காப்பியத்துள் இதற்கு முன் செய்யப்பட்ட பதிப்புகள், ஆய்வை அமைத்துள்ள முறை, ஆய்வில் இடம் பெற்றுள்ள அட்டவணைகள், ஆய்விற்கு உதவிகள் என்பன இடம் பெறும்.

தொல்காப்பியர்

தொல்காப்பிய நூலைப் படைத்த நூலாசிரியர்தம் காலம், அவர்தம் பிறப்பகம், நூலின் அமைப்பு, நூல் நோக்கு ஆகியன காட்டப் பெறும்.

உரை வரலாறு

உரை தோன்றி வளர்ந்த வரலாறு, இலக்கணத்திற்கு உரை தோன்றிய வரலாறு, பண்டைய உரைகாரர் பெருமை ஆகியன ஆராயப்பெறும்.

தொல்காப்பிய உரைகள்

தொல்காப்பிய உரை தோன்றக் காரணம், உரை எழுதிய உரைகாரர், அவர்தம் வாழ்க்கை, அவர்தம் உரைமுறை, அவர் தம் உரைத்திறன் என்பன விளக்கப்பெறும்.

தொல்காப்பிய உரை வேறுபாடுகள்

தொல்காப்பிய உரைகளில் வேறுபாடு தோன்றுதற்கான காரணங்கள், சில நூற்பாக்களில் உரை வேறுபாடு எழாமைக்குக் காரணங்கள் ஆகியன ஆராயப்பெறும்.

அகத்திணை இயல் உரை வேறுபாடு

அகத்திணை இயல் நூற்பாக்களில் உரை காணுழி நேர்ந்த வேறுபாடுகள் அனைத்தும் எடுத்து விளக்கப்பெற்று முடிவுரைக்கப் பெறும்.

புறத்திணை இயல் உரை வேறுபாடு

புறத்திணை இயல் நூற்பாக்களில் நேர்ந்துள்ள வேறுபாடுகள் திறனாய்வு செய்யப் பெற்று முடிவுரைக்கப் பெறும்.

ஆய்வு முடிவு

தொல்காப்பியர் எனும் முதல் தலைப்புத் தொடங்கி, புறத் திணை இயல் உரை வேறுபாடுகள் என்ற ஏழாம் தலைப்புவரை ஆராயப்பெற்ற கருத்துகளின் முடிவுகள் 'நிறைவுரை' எனும் தலைப்பில் தொகுத்துக் காட்டப்பெறும்.

தொல்காப்பிய ஆய்வுத் திட்டங்கள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் மேலும் ஆராயத் தகுவன எவை எவை என்பது எடுத்துரைக்கப் பெறும்.

குறிப்புகள்

ஆய்வேட்டில் இடம் பெற்றுள்ள குறிப்புகள் இங்கே நிரல்பட இடம் பெறும்.

பொருளடைவு

ஆய்வேட்டில் இடம் பெற்றுள்ள கருத்துகளில் தலைமை வாய்ந்தன மட்டும் தனியே தொகுக்கப்பெற்று, ஆய்வாளர் எளிதில் பார்வையிட வாய்ப்பாக, அகரநிரலாக அளிக்கப் பெறும்.

பின்னிணைப்புகள்

ஆராய்ச்சி ஏட்டின் பின்னிணைப்பான இஃது இரண்டாம் தொகுதி ஆகும். இதன்கண் தொல்காப்பிய உரை வேறுபடும் இடங்கள் முறைப்படக் காட்டப் பெற்றுள. அவற்றைத் தொடர்ந்து புறநானூற்றுத் திணைப்பாகுபாடு இடம் பெற்றுளது. தொடர்ந்து இவ்வாய்வுப் பொருளடைவு நல்கப் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து, ஆய்வில் மேற்கோளாக இடம் பெற்றுள்ள தமிழ், ஆங்கில நூல் அட்டவணை அமைந்துள்ளது.

ஆய்வின் அளவு

நூலைப் பற்றியனவும், நூல் உரையைப் பற்றியனவும்—தொடர்ந்து வரும், உரை வேறுபாட்டாய்விற்கு முகப்புரைகளே. எனவே அவை இரண்டும் குறும் பகுதிகளாகவே அமையும். உரை வேறுபாட்டைப் பற்றிய பகுதி பெரும் பகுதியாக அமையும். இப் பகுதியே இவ்வாய்வின் நெஞ்சம். இதன்கண், அகத்திணை இயல் முதல் நூற்பாத் தொடங்கி, புறத்திணை இயல் ஈற்று நூற்பாவரை வேறுபாட்டிற்குரிய நூற்பா, நூற்பாப் பகுதிகள் ஆகியவை நிரல்பட ஆய்வாய்வு செய்யப் பெறும்.

ஆய்வின் பிரிவுகள்

உரை வேறுபாட்டு ஆய்வு மூன்று பிரிவுகளாக வகுக்கப்பெறும்.

(அ) உரை வேறுபாட்டிடம்

(ஆ) உரை வேறுபாட்டில் உள்ள சிக்கல்

(இ) உரை வேறுபாட்டிற்குரிய தீர்வு

உரை வேறுபாடு, நூற்பா முற்றிலும் விரவி நிற்கலாம்; சில தொடர்களிலும் விரவி நிற்கலாம்; ஒரு சில சொற்களிலும் விரவி நிற்கலாம்.

சிக்கலும் தீர்வும்

வேறுபாடு ஒவ்வொன்றிற்கும் நேரிய தீர்வைக் கண்டு அறிவதே இவ்வாய்வின் இலக்கு. எனவே இப்பிரிவு ஆழமாகவும் அகலமாகவும் அமையும். ஒவ்வொரு சிக்கலும், மூன்று அடிப்படைகளில் தீர்வு செய்யப் பெறும்.

(அ) நூற்பாவின் சொற்பொருள் அமைதி

(ஆ) பண்டைய உலக வரலாற்றுச் சான்றுகள்

(இ) பழங்குடி மக்களின் மானிடஇயல் சான்றுகள்

நூற்பாவின் சொற்பொருள் அமைதி

வேறுபாட்டிற்கு இடனான, நூற்பாவோ, நூற்பாவின் தொடரோ, சொல்லோ, இயல் ஒத்து இடப் பின்புலப் பார்வையில் ஆயப்பெறும். நூலாசிரியன் முன்னும் பின்னும் ஆளும் சொற்கள், அவற்றின் பொருள், உரையாசிரியன் முன்னும் பின்னும் கொள்ளும் சொற்பொருள் ஆகியன ஒப்பிடப்பெறும். வேண்டும் பொழுது, சங்க இலக்கியப் போக்கும், பிற்கால இலக்கணப் போக்குகளும் ஆங்காங்கே சுட்டப்பெற்று, முடிவுரைக்கப் பெறும்.

பண்டைய உலக வரலாற்றுச் செய்திகள்

சில முடிவுகள், இலக்கண, இலக்கியச் சான்றுகளுடன் வரலாற்றையும் சார்ந்துள. வரலாறு-வாழ்க்கையின் பிழிவு; இலக்கியம்-வரலாற்றின் பிழிவு; இலக்கணம்-இலக்கியத்தின் பிழிவு. எனவே,இலக்கணத்தில் காணப்படும் சிக்கல்களை வரலாறு தீர்ப்பது இயல்பு. ஆகவே தொல்காப்பிய உரைச் சிக்கல்களுக்கு வரலாறும் அணுகப் பெறும். தொல்காப்பியம் முதுபழம் நூல். எனவே, உலகப் பழம் வரலாறுகளும் ஆங்காங்கே ஆயப்பெறும். தமிழக, இந்திய வரலாறுகள் மட்டும் அன்றி, பண்டைய பிற நாட்டு வரலாறுகள் பலவும் ஒப்பிடப் பெறும். கிரேக்க, உரோம, பாபிலோனிய, அசீரிய, எகிப்திய, சீன வரலாறுகள் ஆங்காங்கே கருதப் பெறும். தமிழக இலக்கண நூற் சிக்கலுக்கு உலக வரலாறு உதவுமா? உறுதியாக உதவும். மாந்தர் மொழியாலும், நிறத்தாலும், இனத்தாலும் உலகில் வேறுபட்டவரே. எனினும் அன்பு செய்வதிலும் வன்பு செய்வதிலும் ஒத்தவரே. அவர்தம் உணர்வும்

செயல்களும் ஒத்தனவே. அவர்தம் உறுப்புகளும் உருவாக்கங் களும் ஒத்தனவே. எனவேதான், எந்த நாட்டு இலக்கியத்திலும் காதல் உளது; மோதல் உளது. எந்தநாட்டு மண்ணிலும் மகிழ்வு உளது; அவலம் உளது. டிரோசான் போர்க்களத்திற்குக் காதலரை வழி அனுப்பும் பெண்களின் கண்களில் தமிழ்ப்பாலையைக் காண முடிகிறது; காண முடியும். தமிழகத்து மறவர்தம் வஞ்சின உரை களில் கிரேக்க வீற்றைக் கேட்க முடிகிறது; கேட்க முடியும். நைல் ஆற்றங்கரையிலும் ஒத்த உணர்வுகளின் வெளிப்பாடுகளைப் பார்க்க முடிகிறது; பார்க்க முடியும். சங்கத் தமிழர் இலக்கியமும் கிரேக்கர் இலக்கியமும் ஒத்திருப்பது ஒருவரை ஒருவர் பார்த்து எழுதினதால் நேர்ந்த ஒற்றுமை அன்று. இரண்டும் பண்டைய மாந்தர்தம் படைப்பு. மாந்தர்தம் மொழியும் நிறமும் வேறுபட் டிருந்தாலும் அவர்தம் உணர்வுக் குமுறல்கள் ஒத்தனவே. ஒற்று மையின் ஊற்று, உணர்வே. எனவே வேண்டிய இடங்களில், பண் டைய நாட்டு வரலாறுகளும் ஒப்பிடப்பட்டு ஆங்காங்கு முடிவு ரைக்கப் பெறும்.

பழங்குடி மக்களின் மானிட இயல் சான்றுகள்

தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலான முதுநூல்களுக் குரிய மாந்தர் பண்டைய மாந்தர். பண்டைய மாந்தர்தம் பாங்கு அனைத்தும் இன்று, தற்காலத் தமிழரிடத்து இல்லாமல் இருக் கலாம். எனினும், பண்டைய பழக்கப் பாங்குகளைப் பற்றிக் கொண்டு, இருபதாம் நூற்றாண்டு அறிவியல் தாக்கத்திற்கு ஆட் படாமல் வாழும் மாந்தர் உலகெங்கும் உள்ளனர். அவர்களே பழங்குடி மக்கள். பழங்குடி மக்கள் ஆய்வு முற்றுப் பெறுமாஞல் பொருள் இலக்கண இலக்கியச் சிக்கல்கள் பெரும்பாலும் தீர்க்கப் பெறும். இருபதாம் நூற்றாண்டுத் தமிழரிடத்து இல்லாத சில பழக்க வழக்கங்கள், பண்டைய இலக்கிய இலக்கணங்களில் இடம் பெற்றுள்ளன. அப்பழக்க வழக்கங்களை, இன்றும். திராவிடத் தமிழ்ப் பழங்குடி மக்களிடத்துக் காணமுடியும். எனவே, தொல் காப்பிய உரை வேறுபாட்டு ஆய்வில் எழும் சிக்கல் தீர்வில், திரா விடப் பழங்குடி மக்கள் இயல்பும் மேற்கோளாகக் கொள்ளப் பெறும்.

அணுகும் முறை

வேறுபாடுகள், மிகப் பல மூன்று அடிப்படையிலும், மிகச் சில இரண்டு அடிப்படையிலும், ஒருசில ஓர் அடிப்படையிலும் அணு கப் பெறும். கடின, பெரிய சிக்கல்கள் சில, இவற்றின் தலைமை கருதி விரிவாக ஆராயப்பெறும். தெளிவிற்காகச் சிக்கலுக்குத் தக முன் பின்னுள்ள நூற்பாச் செய்திகளும் ஆங்காங்கே இடம்

பெறும். எனினும், உரை வேறுபாடு பெரூத நூற்பாக்கள், நூற் பாப் பகுதிகள் ஆராயப் பெறவில்லை. எனினும் ஆய்விற்கு இடை யீடு நேராதவாறு, அவ்விடங்களில் தொடர்பு காட்டப் பெறும்.

அட்டவணைகள்

பல பக்கங்களைக் கற்று அறிந்து கொள்ள வேண்டிய செய்தி களைச் சில பக்கங்களில் தெளிவுறத் தெரிவிப்பதற்காக ஏறத்தாழ முப்பத்தோர் அட்டவணைகள் இணைக்கப் பெற்றுள. இவை இவ் வாய்வில் மிகமிக முதன்மை வாய்ந்தனவாகும். தொடர்ந்து நிகழும், உரை வேறுபாட்டு ஆய்விற்கு முகப்பாக, இவ்வட்டவணை கள் இணைக்கப் பெற்றுள. குறிப்பாக, உரை வேறுபாடு பற்றிய அட்டவணைகள், பின்வரும் கருத்து ஆய்விற்குக் கருக்களாகும்.

ஆய்விற்கு உதவியோர் :

மதுரைப் பல்கலைக் கழக எல்லையில் பணியாற்றிக் கொண் டிருந்த இவ்வாய்வாளன், சென்னைக்குப் பணியாற்ற வந்த நாளி லிருந்து அயராது ஆர்வம் காட்டி ஊக்குவித்த பெருமையும், பெருந்தகைமையும் சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களையே சாரும். தன் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களின் மேற்பார்வையிலேயே பிஎச்.டி.க்குப் பதிவு செய்து ஆய்வு செய்யும் வாய்ப்பு இவ்வாய்வாளனுக்குக் கிடைத்தது பெரும் பேறு. இத்தகு நற்பேறு நல்கிய பேராசிரியர்க்கு இவ்வாய் வாளனின் நன்றியும் வணக்கமும் உரிய.

ஆய்விற்குரிய நூல்களை, அறிவுரைகளை வேண்டும் பொழுதெல் லாம் கொடுத்து ஓயாது ஊக்கம் ஊட்டிய சான்றோர் தமிழக அரசு பொது நூலக இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் அவர் களாவார். அவர்கட்கு நன்றி.

அரிய பதிப்புகளை அவ்வப்போது நம்பிக்கையுடன் கொடுத்து தவிய கெழுதகை நண்பர் மறைமலையடிகள் நூலகர், திரு. இரா. முத்துக்குமாரசுவாமி அவர்கட்கும், சென்னைப் பச்சையப்பர் கல்லூரி நூலகர் திரு. பா. பெருமாள் அவர்கட்கும் நன்றி.

ஆய்வுப் பகுதி இருநூற்று ஐம்பது பக்கங்களையும் அதற்குரிய பின்னிணைப்பு முந்நூற்று ஐம்பது பக்கங்களையும் இரண்டு முறை தட்டச்சு செய்வது, சரி பார்ப்பது எளிய பணி அன்று. இப் பணியை ஏற்றுச் செவ்வையாய்ச் செய்து முடித்தவர் திரு. க. பாலசுப்பிரமணியன் ஆவார். அவருக்குத் துணை நின்று உதவியவர் திரு. ந. மனோகர் ஆவார்.

தட்டச்சிட்ட பகுதிகளைச் சரிபார்ப்பதில் பெரிதும் உதவியோர் திரு. புலவர் சிவ. ஆதிநாதனும், திரு இரா. சாந்தாராமும் ஆவர். அவர்கட்கு உறுதுணையாக இருந்தவர் திரு. செ. துரேந்திரநாதன் ஆவார். அன்னோர் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றி. தட்டச்சுப் பொறி தந்துதவிய கொடுமுடி ச. சண்முகனுர்க்கு நன்றி.

தொல்காப்பியர்

2

தொல்காப்பியர்

தொல்காப்பியர் எழுதிய நூலின் பெயர் 'தொல்காப்பியன்' என்பதாம். 'தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' என்ற பாயிர அடி இதனை அறிவிக்கும். நூலாசிரியன் பெயர் நூற்பெயர் ஆவது தமிழ் வழக்கு. சமற்கிருத உறவால், 'அம்' ஈறு பெறும் வழக்கம் உண்டாயிற்று. உண்டாகவே வாய்ப்பியன் வாய்ப்பியம்: பனம்பாரன் பனம்பாரம்; நற்றத்தன் நற்றத்தம்; காக்கைப் பாடினி காக்கைப்பாடினியம்; அவிநயன் அவிநயம்; என்பன போல் தொல்காப்பியன் தொல்காப்பியம் என்ற வழக்கும் பிற் காலத்தே தோன்றிற்று.[1]

வரலாறு

தொல்காப்பியர்தம் வரலாற்றைப் பகரும் சான்றுகள் எதுவும் இல்லை. அவரை அகத்தியருடன் தொடர்பு படுத்தியும் இடைச் சங்க வரலாற்றுடன் தொடர்புபடுத்தியும், உரையாசிரியர்கள், நச்சர், நக்கீரர் ஆகியோர் கூறுவனவற்றை வரலாற்று ஆசிரியர் கள் ஏற்றுக் கொள்வதில்லை.[2]

தொல்காப்பியர் காலம்

தொல்காப்பியர்தம் வரலாற்றிற்குச் சான்று அவர் எழுதிய தொல்காப்பிய நூல் ஒன்றே; தம் காலத்தும், தம் காலத்திற்கு முன்பும் இலக்கிய, இலக்கண உலகில் வழங்கியவற்றைத் தம்

பார்வையில், தம் ஆளுமை வெளிப்படத் தொல்காப்பியர் தருவர். இவர்தம் நூற்போக்கை மையமாக வைத்து, இவர்தம் காலத்தைக் கணிப்பர். தொல்காப்பியர் சங்க இலக்கியத்திற்கு முற்பட்டவர் என்பது ஒரு கருத்து.[3] சங்க இலக்கியத்திற்குப் பிற்பட்டவர் என்பது மற்றொரு கருத்து.[4] தொல்காப்பியர் கூறும் எழுத்து, சொல், பொருள் வழக்காறுகள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களில் முரணி வழங்குகின்றன. எனவே, தொல்காப்பியர், சங்க இலக்கியத்திற்கு முற்பட்டவர் என்பர். தொல்காப்பியத்திற்குப்பின், சங்க இலக்கியத்தில் முரணி வழங்கு வனவாகக் காட்டப்படும் இலக்கண வழக்காறுகள் தொல்காப்பிய நூலுள்ளும் முரணி வழங்குவனவே. எனவே தொல்காப்பியர், சங்க இலக்கியங்கட்குப் பிற்பட்டவரே என்பர். புது நோக்கில், புத்தாய்வில் தொல்காப்பியர் காலத்தை அறுதி இடுவது ஆய்வறிஞர் கடமை. அவ்வாறு கண்ட சில முடிபுகள் வருமாறு:

தெய்வப் பெயர்கள்

தொல்காப்பியர் முருகனை மஃலத்தெய்வம் என்பர்; மாயோனைக் கான் தெய்வம் என்பர்; இந்திரனை வயல் தெய்வம் என்பர்; வருணனைக் கடல் தெய்வம் என்பர்.[5] கொற்றவையைப் போர்த் தெய்வம் என்பர்.[6] முருகன் சேயோன் எனப்படுவன். 'சேயோன் மேய மைவரை உலகம்'—என்பர் தொல்காப்பியர். ஆனால் சங்க இலக்கியக் காலத்தில், முருகன், நெய்தல் நிலத் தெய்வமாகி விட்டனன். திருச்செந்தூர்க் கடற்கரை ஓரக் கடவுளாக முருகன் வழிபடப்பட்டனன். அகநானூறும், புறநானூறும் அவன் கடல் ஓரச் செந்தில் நகர்த் தெய்வமாகிவிட்டதைத் தெரிவிக்கும்.

'திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே'

என்பது அகநானூறு (266). இப்பாட்டில், முருகன், சேய் என்ற பெயரோடு, அலைவாய் எனப் பெயருற்ற திருச்செந்தூருடன் தொடர்புபடுத்தப் படுதல் காண்க.

'... ... ...தாழ்நீர்
வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெறிவேள் நிலைஇய காமர் வியன்துறை'

என்பது புறநானூறு (55). 'தாழ்ந்த நீரையுடைய கடலின் கண் வெளிய தலையை உடைய திரை அலைக்கும் செந்திலிடத்து நெடிய முருகவேள் நிலைபெற்ற அழகிய அகன்ற துறை' என்பது பொருள்.

முருகன்—கடல் தெய்வம்

அகநானூறு, புறநானூற்றுப் பாடல்கள் இயற்றப்பட்ட காலத்திலேயே முருகன், கடல் தெய்வப்பேறு பெற்று விட்டனன். அதற்கு மாறுக, அக்காலத்தில் தொல்காப்பியர் குறிக்கும் கடல் தெய்வமான வருண வழிபாடு வழங்கவில்லை. மலை வீட்டு முருகன், கடல்படை வீட்டிற்கு வந்து விட்டதைப் பத்துப் பாட்டுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை விரித்துரைக்கும்.

'அந்தரம் பல்லியம் கறங்க, திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப, வால்வளை ஞரல
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அசைஇ
விசும்பு ஆறு ஆக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலையிய பண்பே.[7]

ஆக இச்சான்றுகள், சங்க காலத்தில் முருகன், கடல் தெய்வமாக வழிபடப் பட்டனன் என்பதைக் காட்டும். இவ்வழிபாடு, இன்று வரை தளரவில்லை. எனவே, முருகன் மலைத் தெய்வமாக மட்டுமே வழிபடப்பட்ட காலம் தொல்காப்பியர் காலம் ஆகும். அத்தகு காலம், சங்க காலத்திற்கு முற்பட்டதே தவிர, பிற்பட்டது அன்று.

கொற்றவை

கொற்றவை வழிபாட்டைத் தொல்காப்பியர் குறிப்பிடுவர். கொற்றவை போர்த் தெய்வமாக வழிபடப்பட்டனள்.[8] பிற்காலத்தே கொற்றவை வழிபாடு, துர்க்கை வழிபாடு ஆகியது. ஆரிய திராவிடத் தெய்வ ஒருங்கிணைப்பில் சிவபெருமானுடன் கொற்றவை பிணைக்கப்பட்டாள். இவ்வொருங்கிணைப்புச் சங்க காலத்தில் தொடங்கி, சங்கம் மருவிய காலத்தில் நிலைபெற்று விட்டதைச் சிலப்பதிகாரம் காட்டும்.[9] சிவனைப்பற்றியும், சிவனுடன் உருவாக்கப் பெற்ற கொற்றவை பற்றியும் தொல்காப்பிய நூலுள் சான்றில்லை. எனவே, இவ்வொருங்கிணைப்பிற்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்று உய்த்துணரலாம்.

கடவுள் வாழ்த்து இல்லாமை

கடவுள் நம்பிக்கையும், கடவுள்வழிபாடும் தொல்காப்பியர் காலத்தும் இருந்தன. ஆனால், கடவுள் வாழ்த்துப் பாடி, இலக்கிய இலக்கணம் எழுதும் பழக்கம் அன்று இல்லை. இப் பழக்கம் தொல்காப்பியர் காலத்தும் இல்லை; சங்க காலத்தும் இல்லை.

'பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய காலப்பகுதியில் இருந்தே நூன் முகத்துக் கடவுள் வணக்கம் கூறும் முறைமை இலக்கிய மரபாயிற்று' என்பர்.[10] நூல் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து இடம் பெறும் மரபு முதன் முதலில் திருவள்ளுவர் காலத்தில் தொடங்கியது எனல் வேண்டும். எனவே, தொல் காப்பியர், கடவுள் வாழ்த்தை நூல் முகப்பாக்கும் திருவள்ளுவர் காலத்திற்கு முற்பட்டவர் என்பது தெளிவு.

நடுகல் வழிபாடு

களத்தில் இறந்த மறவர்க்குக் கல் எடுத்து, நீர்ப்படுத்தி, நாட்டி வழிபடுதல் பண்டைய மரபு. நாட்டப்படும் கல்லில் மறவர் பெயரையும், அவர் ஆற்றிய பெருமைமிகு செயல்களையும் பொறிப்பது பழக்கம். இப்பழக்கம், சங்க காலத்தில் இருந்தது. அகநானூறு (67, 131), புறநானூறு (264), ஐங்குறுநூறு (352), மலைபடுகடாம் (388, 393), ஆகிய சங்க இலக்கியங்கள் கல்லில் பெயர் எழுதப்படுதலைக் காட்டும். ஆனால், பெயர் எழுதாது வறிதே கல்லை நாட்டி வந்த காலம் ஒன்று இருந்தது. அது, சங்க காலத்திற்கு முற்பட்ட காலம். தொல்காப்பியர் காலம். அவர் காலத்துக் கல்லில் பெயர் எழுதுதல் இல்லை. வறிதே நாட்டும் வழக்கம் மட்டுமே இருந்தது.[11] எனவே நடுகல்லில் பெயர் எழு தாப் பழங்காலம், சங்க காலத்திற்குப் பிற்பட்ட தன்று, முற் பட்டது. தொல்காப்பியம் அக்காலத்தைச் சேர்ந்தது.

கடற்படை

தொல்காப்பியர், தானை, யானை, குதிரைப்படைகளைக் குறிப்பர். ஆனால் கடற்படையைக் குறிக்கவில்லை. 'முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை' (அகத்திணை இயல் 37) என்ற நூற்பா வழி தொல்காப்பியர், கடற்செலவைக் குறித்தனர்; எனினும் கடற் பிரிவைக் குறிக்கவில்லை. அவர் குறித்த பிரிவுகள் அனைத்தும் தரைவழிப் பிரிவுகளே. அன்றியும் பிரிவு உரிப்பொருளை அமைத்துப் பாடும் சங்க இலக்கியங்கள், கடற்பிரிவை ஓரிடத்தும் கூடக் காட்டிப் பாடவில்லை. இதனால் நச்சர்; மேலே கண்ட நூற்பா கடற்பிரிவைக் குறிக்கவில்லை; மூன்று நீர்மையதான ஓதற் பிரிவு, பகைவயிற் பிரிவு, தூது வயிற் பிரிவையே குறித்தது என்று விளக்கம் உரைப்பர். தமிழர் கடற் செலவை அறிந்திருந்தனர்; வணிக நிமித்தம் அவர் கடற் செலவும் மேற்கொண்டிருந்திருப்பர். கிரேக்க, உரோமக் குறிப்புகளும், பூம்புகார், கொற்கை நகர்த் துறைமுக வளமும் இதனை வற்புறுத்தும். எனினும் பகை நிமித்தம் கடற்படை வைத்திருந்ததாகத் தொல்காப்பியத்துள் குறிப்பு இல்லை; கடற்போர் உடற்றியதாகவும் குறிப்பில்லை;

கிரேக்கச் சான்று

கடல் சூழ்ந்த நாடான கிரேக்கத்திலும் இத்தகு நிலைமையே வீரஊழிக் காலத்தில் இருந்தது. வீரஊழிக் காலத்தில் கிரேக்கரிடம் கப்பற்படை இல்லை. ஆனால் கப்பல்கள் இருந்தன; அவற்றைப் போக்குவரவிற்கு மட்டுமே பயன்படுத்தினர். பல நூறு கல்கள் கடந்து வந்து வென்றிக் கொடி நாட்டிய அலெக் சாண்டர் தம்முடன் தரைப்படை மட்டுமே கொண்டு வந்தார் என்பதும் இங்கே எண்ணத் தக்கது.[1]

சங்ககாலத்தில் கப்பற்படை

எனவே, பண்டைய நாடுகள், கப்பல்களை அறிந்து வைத் திருந்த காலத்தில், கப்பல் படையையும் உடன் அறிந்து வைத் திருக்கவில்லை. தமிழகத்திலும் அத்தகு காலம் ஒன்று இருந்தது என்பதைத் தொல்காப்பியம் துலக்கும். ஆனால் சங்க காலத்தில், செங்குட்டுவன் கடற்படை வைத்திருந்தான் என்பதும், அவன், கடல் நடுவே இருந்த பகைவரை ஓடுக்கினன் என்பதும், அதனால் 'கடல் பிறகோட்டிய வேல்கெழு குட்டுவன், எனப் புகழ்ப்பெயர் எய்தினன் என்பதும் பதிற்றுப்பத்துணர்த்தும் செய்திகள்,[14] வெற்றி முரசை உடைய சேரலாதன் கடல் வழியாகச் சென்று கடம்பரை வென்றனன்.[15] பெரும் படையை உடைய சேரன் பெருங்கடல் கடந்து கடம்பரை வென்று கடம்ப மரத்தை முறித்துச் செய்த முரசின் ஒலியைப் போலச் சேரிப் பெண்கள் அலர் தூற்றினர்.[15] சின மிகுந்த சேனையை உடைய சேரன் பொன் கொண்டு வரும் கப்பல்களை ஓட்டிய மேலைக்கடலில் பிற ருடைய கப்பல்கள் செல்லமுடியாது.[16] இவன் காலத்திலும், காலத்திற்குப் பிறகும், தொடர்ந்து கடற்போர் நிகழ்ந்தது என் பதும், தமிழரிடம் கப்பற்படை இருந்தது என்பதும் வரலாறு காட்டும் உண்மைகள். இவற்றுல், 'கடற் படையின் அறிமுகம், சங்க இலக்கியத்தில் தொடங்கியது என்பதும், சங்க காலத்திற்கு முற்பட்ட காலத்தில் கடற்படை இல்லை என்பதும், கடற்படை இல்லாத அக்காலமே தொல்காப்பியர் காலம் என்பதும் தெளிவா கின்றன.[17]

காவல் மரம்

ஒவ்வோர் அரசனுக்கும் ஓர் அடையாள மரம் உண்டு. அம் மரத்தை மன்னர்கள் தம் உயிரினும் மேலாகப் போற்றுவர். அம் மரத்தை யாரும் ஊனப்படுத்தலாகாது. மன்னன் நன்னனுக்கு மாமரம் காவல் மரமாக இருந்தது. அம்மரமோ ஆற்றங்கரை ஓரமாக வளர்ந்து நின்றது. மரத்தில் காய்களும் கனிகளும் தொங்கின. ஓரிரண்டு ஆற்றிலும் விழுந்தன. தொலைவில்

ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த பெண் ஒருத்தி, நீரில் மிதந்து வந்த காவல் மர மாம்பழத்தை எடுத்துத் தின்றனள். அவள் தின்றதைக் காவலர் கண்டு விட்டனர். அவளைச் சிறைப்பிடித்து மன்னன் முன்னிலையில் கொண்டு நிறுத்தினர். நன்னன், அவளுக்குக் கொலைத் தண்டம் விதித்தனன்.[18] பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் பகைவரின் காவல் மரத்தை வீழ்த்தினன்.[19] இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் பகைவரின் காவல் மரமாகிய கடம்பமரத்தை வெட்டினான்.[20]

'காவல் மரத்தை வெட்டுதலைச் செய்; வென்றி கொள்' என்றெரு மன்னவனைப் புலவர் வேண்டுவர்.[21] கோடரி வெட்டுதல் தாளாமல் காவல் மரங்கள் நிலை கலங்கின என்பர்.[22] இவை சங்க காலத்தில் காவல் மரம் எத்துணை அளவிற்கு மன்னவர் மானமாகப் போற்றப்பட்டது என்பதற்குச் சான்றுகள். அரசர்க்குரியவற்றையும், போர் நெறிமுறைகளையும் விரித்துக் குறிக்கும் தொல்காப்பியர், காவல் மரத்தை எங்கும் சுட்டாமல் சென்றது எண்ணத் தக்கது. காவல் மரக் கோட்பாடு வளர்ந்த சங்க காலத்திற்கு முற்பட்டவர் ஆதலால் அம்மரத்தைப்பற்றி அவர் குறிக்கவில்லை போலும்.

இளவேனிற் பொழுது

சங்க இலக்கியங்களில் இளவேனிற் பொழுது பரக்கப் பேசப் பெறும். சிறப்பாகப் பாலைக் கலிப்பாக்கள், இளவேனில் வரவு கண்டு, தலைவி உறவுக்குத் துடிப்பதைக் காட்டும்.

> 'வேங்கை மரம் பூத்துக் குலுங்கும். மணல் வெளியில், வேங்கைப் பூக்கள் பாய் விரிக்கும். பூங்காக்களில் இருந்த மரங்கள் மலர்ச்சுமையால் நெகிழும். கொடிகள், கொம்புகளைப்பற்றி மலர்ந்து கொஞ்சும்.
>
> பொய்கைகளில் மலர்கள் பூக்கும். கரையோர முருக்க மலர்கள் குளநீரில் விழும்; வண்டுகள் மலர்களை மொய்க்கும். கரையோர மறப்பெண்கள் தம் பச்சைச் செடிக் கூந்தலில் புத்தம் புது மலர்களை அணிவர்.'
>
> ஆறு பெருகி ஓடிய காலத்து, ஆற்றோர மரங்கள் நீருண்டு களிக்கும். இப்போது ஆறு பொங்கி ஓடவில்லை. எனினும் சிறுசிறு கால்களாகத் தங்கி ஓடும். ஆற்றுப் பெருக்கால் வளம் பெற்ற மரங்கள் பூத்துக் குலுங்கும்; ஆற்றிற்கு நன்றி செய்யத் துடிக்கும். தம்மிடம் உள்ள மலர்களை எல்லாம் நன்றியாகப் படைத்து மகிழும்.

காஞ்சிப் பூந்தாதைக் குயில்கள் குடைந்து உகுக்கும்; மகிழ்ந்து கூவி இசைக்கும். மலர்கள்; மலர்களின் மேல் மது வண்டுகள். இவற்றின் சுமைதாளாது கொம்புகள் தாழும். (பாலைக்கலி 32-36)

தமிழகத்தில் இளவேனில்

இயற்கை வழி இளவேனிற் பொழுது, தன் வரவை அறிவுறுத்தி நிற்கும். பிரிந்து நின்று மீண்டு வந்த தலைவரைப் பெற்ற பெண்டிர், இளவேனிற் பொழுது கண்டு மகிழ்வர். பிரிந்து சென்றவர், இப்போதும் வரவில்லையே என்று பிரிந்து நின்ற மகளிர் துடிப்பர். அவர்தம் துடிப்பைச் சங்க இளவேனில் கவிதைகள் எடுத்துரைக்கும். இளவேனிலைக் கண்டு, இளமகளிர் துடிப்பது தமிழக இயற்கைச் சூழலில் பொருந்துவதுதானே? தமிழகத்தில் இளவேனிற் காலம் என்பது சித்திரையும் வைகாசியும் ஆகும். அம்மாதங்களில் தமிழகம் முழுதும் கோடையில் அவியும். ஆற்றில் நீர் அற்றுப் போகும். மணல் ஆறே ஓடும். இரவும், பகலும் கோடைப் புழுக்கம் தாளாது ஆடவர், பெண்டிர் அனைவரும் தவிப்பர். இத்தவிப்புச் சூழலைக் கலித்தொகை தட்பக் காலம் போல விவரிக்கிறது. கலித்தொகை கால இயற்கையும் தட்ப வெப்ப முறையும், இற்றைத் தமிழகத்தில் முற்றும் மாறிவிட்டனவா? இல்லை. ஏதோ சிறு மாற்றம், நேர்ந்திருக்கலாம். முழு மாற்றம் நேரவில்லை. பின் ஏன் கோடை காணும் சங்கப் பெண்டிர், வாடை கண்டு களிப்பது போல் களிக்கின்றனர் அல்லது கவலுகின்றனர்?

வசந்தருது

இளவேனிற் காலம் ஆரிய நாட்டில் 'வசந்த ருது' எனப்படும் அவர்தம் இயற்கைச் சூழலில் வசந்த காலம் இனிய காலம். 'வசந்தருது முதலாக, ஆறு ருதுக்களின் அழகைக் காளிதாசன் சிறக்க வருணிப்பன். 'ருது சம்காரம்' என்ற நூலையே அவன் செய்தனன். காளிதாசன் முதலான வடமொழிப் பாவலர்களின் செல்வாக்கையே கலித்தொகை 'இளவேனில்' காட்டுகிறது.[23] காளிதாசனின் காலம் கி.மு. முதல் நூற்றாண்டு என்பர்.[24] அவர் தம் ருது சம்காரத்தின் தாக்கம் கலித்தொகையில் படிவதற்கு முன்பே தொல்காப்பியம் இயற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

தொல்காப்பிய வேனில்

தொல்காப்பியர், கார், கூதிர், பனி எதிர் பருவம், வேனில், பின்பனி என்ற பொழுதுகளையே வெளிப்படையாகக் குறிப்பர்.[25] 'கார்' என்ற மழைப் பருவத்தையே முதலாவதாகப் போற்றுவர்.

அக்காலமே புணர்ச்சிக்கு உரியது. 'கார்ப்பருவத்தில் வருவேன்' என்று கூறித் தலைவன் பிரிவதை முற்சங்க இலக்கியங்கள் காட்டும். கார்ப்பருவ வரவு கண்டு கலங்கும் பெண்டிரையும் அப்பாடல்கள் படம் பிடிக்கும். தொல்காப்பியப் பார்வையில் வேனில் கொடியது ஆகும். வேனிலை வறட்சியான பாலை நிலத்தோடு அவர் காட்டுவர் சுட்டுப் பொசுக்கும் நண்பகலை அதற்குரிய சிறுபொழுது ஆக்குவர். காதலன், காதலியைப் பிரிந்து செல்லும் உரிப்பொருளை வேனிலில் அடக்குவர். எனவே தொல்காப்பியப் பார்வையில் வேனில் கொடும் பொழுது; குளிர் பொழுது அன்று. தலைவன் பிரிந்து செல்லும் பொழுது; புணர்ந்து மகிழும் பொழுது அன்று. ஆகவே, தொல்காப்பிய வேனில் வேறு; பிற்சங்கக் கலித்தொகை வேனில் வேறு. ஆக, பிற்சங்கக் கலித்தொகை 'வேனில்' வரும் முன்னே தொல்காப்பிய ஞாயிறு தோன்றி மறைந்து விட்டது. சிலர்[26] கூறுதலைப் போலக் கலித்தொகை, பரிபாடல் நூல் தோற்றத்திற்குப் பிறகு தொல்காப்பியம் எழுதப்பட்டது என்ற கருத்து இதனால் வழுப்படுகிறது.

எழுத்து வரி வடிவம்

எழுத்தின் வரிவடிவை, எளிதில் எழுத்தில் விளக்க இயலாதது. எனினும் தமிழ் இலக்கண ஆசிரியர், தமிழ் எழுத்து வடிவை ஓரளவு புலப்படுத்தியுள்ளனர். தொல்காப்பியரும் சில நூற்பாக்களின் எழுத்து வடிவம் பற்றிக் குறித்துள்ளார். இலக்கண நூலார் குறித்தனவும், அவ்வக் காலங்களில், கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் வெட்டுவிக்கப்பட்ட எழுத்து வடிவமும் ஒப்பிட்டு ஆராயத்தக்கன. தமிழ் எழுத்துகளின் வடிவ அமைப்பைக் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்டு, கால வரிசைப்படுத்தி உள்ளனர். அக்கால வரிசையும், கல்வெட்டு எழுத்தும், தொல்காப்பிய எழுத்து வடிவக் குறிப்பும் தொல்காப்பியர் காலத்தை உய்த்துணர ஓரளவு துணை செய்வன.

தொல்காப்பியர் காட்டும் வரிவடிவச் செய்திகள்

தொல்காப்பியர் வரிவடிவம் பற்றிக் குறிக்கும் செய்திகள் பின் வருமாறு :

எகர ஒகர உயிர்களும் புள்ளி பெறும் (எ. 16). உயிர்மெய் எழுத்து அகரத்துடன் வரும்போது புள்ளி நீங்கி உருவு திரியாமலும், பிற உயிர்களுடன் வரும்போது உருவம் திரிந்தும் வரும். (எ. 17). குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற மூன்றும் புள்ளி பெறும். (எ. 29,106). ஆய்தம் புள்ளி எழுத்து ஆகும். (எ. 38) மகரம் புறத்துப் பெறும் புள்ளியோடு, உள்ளால் பிறி

தொரு புள்ளியையும் பெறும். (14) மெய்யெழுத்து புள்ளி பெறும். (எ. 15,105).

தமிழிக் கல்வெட்டுகள்

இச் செய்திகளைத் தமிழ்நாட்டுத் தொன்மைக் கல்வெட்டு களாகக் கருதப்பெறும் தமிழிக் கல்வெட்டுகளின் வரி வடிவத்துடன் ஒத்திட்டு ஆராய்தல் வேண்டும். ஏனைய கல்வெட்டுகளைக் காட்டி லும் இவையே பழையன. இவற்றின் தொடக்க காலம் கி.மு. மூன்றும் நூற்றாண்டு எனக் கருதப்படும்.[27]

தமிழிக் கல்வெட்டில் எழுத்துருவம்

தமிழிக் கல்வெட்டுகளில், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மகரம், என்பனவற்றிற்குத் தொல்காப்பியர் குறிக்கும் வடிவமைப்பு இருப்பதாகத் தெரியவில்லை.

உயிர்மெய் வரிவடிவம்

உயிர்மெய் வரிவடிவ அமைப்பைத் தொல்காப்பியர் பேசும் முறை இன்றைய வரிவடிவிற்குப் பொருந்தி வரவில்லை. மாறாக, தமிழிக் கல்வெட்டு எழுத்து அமைதியுடன் பொருந்தி வருகிறது. அகரம் ஏறிய மெய்கள் தவிர, பிற உயிர்களுடன் மெய்கள் இணையும் பொழுது, அவற்றின் உருவம் திரிகின்றது. மாறாக, புது உருவங்கள் சேருவதில்லை. புது உருவங்கள் சேராத, மூல எழுத்து வடிவம் பெறும் சிறு மாற்றத்தை மட்டுமே தொல்காப்பி யர், 'ஏனை உயிரொடு உருவு திரிந்து உயிர்த்தல்' என்று குறிப்பர். இப்போதைய உயிர்மெய் வடிவங்கள் புதிய சேர்க்கைகளைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டு : கா, கெ, கே, கௌ. ஆதலால் தொல்காப்பியர் குறிக்கும் எழுத்தமைதி, உரையாசிரியர் கூறும் கால்பெறுதல், கீழ்விலங்கு, மேல் விலங்கு பெறுதலைச் சார்ந்தது அன்று.

பவணந்தியார் காட்டும் சான்று

எகரம், ஒகரம் புள்ளி பெறுவது பற்றிய தொல்காப்பியரது குறிப்பு தலைமை வாய்ந்தது. அண்மைக் காலம்வரை தமிழிக் கல் வெட்டுகளில், புள்ளி பெற்ற எகர ஒகர வடிவங்கள் இல்லை என்றே கருதப்பட்டது, எழுதப்பட்டது.[28] அன்றியும் நன்னூல் நூற் பாவும் இங்கே குறிக்கத்தக்கது.

'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்
ஆண்டெய்தும் எகர ஒகர மெய்புள்ளி' (நன். 98)

இந்நூற்பாவையும், நூற்பாப் பொருளையும் ஆழ்ந்து நோக்கின் ஒருண்மை புலப்படும். பவணந்தி காலத்தில், எகர,ஒகர

மெய்கள் புள்ளி இடப்பெறுமல் எழுதப்பட்டன போலும். புள்ளி இடப்பெற்று எழுதப்பட்டிருக்குமாஞல் 'தொல்லே வடிவின எல்லா எழுத்தும்' என்ற அளவிலேயே அவர் நூற்பாவை நிறுத்தி இருத்தல் வேண்டும். அவ்வாறு நிறுத்தாமல், 'எகர, ஒகர, மெய்கள் புள்ளி எய்தும்' என்று குறிப்பதைக் காண்க. இதனல் பெறப்படுவது என்ன? தொல்காப்பியர் காலத்தில் புள்ளி இடப் பெற்று எழுதப்பட்டு வந்த எகர, ஒகரங்கள் அவருக்குப் பிற் காலத்தில் விடப்பட்டது போலும். பவணந்தி காலத்தில் புள்ளி இடப்பெறுமலே எழுதப்பட்டு வந்தது. இதனைச் சங்கர நமச் சிவாயர் உரை உறுதி செய்யும் :

> "எகரமும் ஒகரமும் தனி மெய்களும் இயல்பாய புள்ளி யைப் பிற்காலத்து ஒழித்து வரைந்து ஏகார ஓகாரங்க ளோடும் உயிர்மெய்களோடும் ஐயப்பட வழங்கும்"

ஈதன்றி, பவணந்தி வாழ்ந்த கி.பி. 13. ஆம் நூற்முண்டைச் சார்ந்த கல்வெட்டுகளிலும் எகர, ஒகர மெய்கள் புள்ளி இடப் பெறுமல் எழுதப்பட்டுள்ளமையே பெரும்பான்மை. புள்ளி இல்லாமையினல், எகர - ஏகார, ஒகர—ஓகார, மெய் - உயிர்மெய் வேறுபாடு அறியப்படாமல் குழம்பி இருந்த சூழலைத் தவிர்க்க எண்ணிய பவணந்தி 'ஆண்டு எய்தும் எகர ஒகர மெய்புள்ளி' என்று எழுதி இருத்தல் வேண்டும்.

எகர ஒகரம் புள்ளி பெறல்

தொல்காப்பிய நூற்பா, நன்னூல் நூற்பாவின் அமைப்பி னின்றும், கருத்தினின்றும் முற்றும் வேறுபட்டது. "மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலேயல்" (எ.15) என்று கூறியவுடன் தொடர்ந்து, 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' என்று அமைப்பர் தொல்காப்பியர். புள்ளி பெறுவது எகர, ஒகர எழுத்து களின் இயல்பான முறை என்பது கருத்து. ஆகவே, எகர ஒகரங் கட்குப் புள்ளி இட்டு எழுதும் முறை குன்றிய/இல்லாத காலம் பவணந்தியின் காலம்; புள்ளி இட்டு எழுதும் முறை வழக்கில் இருந்த காலம் தொல்காப்பியர் காலம்.

கல்வெட்டுச் சான்றுகள்

பவணந்திக்குச் சற்று, முன்னும் பின்னும் எங்கோ ஒரு சில இடங்களில் எகர, ஒகரங்கள் புள்ளியுடன் எழுதப் பெற்றன. தண்டி அலங்கார மேற்கோள் பாடலிலும், வேள்விக்குடிச் செப் பேட்டிலும், தந்திவர்மன் (கி.பி. 800-840) காலத்துத் திருவெள்ள றைக் கல்வெட்டிலும் எகர, ஒகரங்கள் புள்ளி இட்டு எழுதப் பெறுதலைக் காணலாம்.[29] பொதுவாக இம்முறை குன்றிப் போய்

விட்டது.[30] 18ஆம் நூற்றாண்டு அளவில் ஏகாரம் கீழ்க்கோடும், ஓகாரம் சுழியும், உயிர்மெய் ஏகார, ஓகாரங்கள் கொம்புகளையும் பெறும் அமைப்பு உருவாயிற்று, அல்லது உருவாக்கப்பட்டது.[31]

வட்டெழுத்து

ஆக இவற்றை எல்லாம் நோக்கி, தொல்காப்பியர் நூற்பா வாசகத்தையும் நோக்கும்போது, தெளிவான வேறுபாடு தெரியும். தொல்காப்பியர் காலத்தில், எகர ஒகர எழுத்துகள் புள்ளி இட்டே எழுதப்பட்டன. பிற்காலத்தில் அந்நிலை முழுதுமாகப் பின்பற்றப் படவில்லை. தமிழில் எகர ஒகரங்கள் புள்ளி இட்டு எழுதப்பெற்ற காலம், எழுத்து வடிவ இயலின்படி எக்காலம்? தமிழி எழுத்துகள் புழங்கிய காலத்திலேயே இப்பழக்கம் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. கி. பி. 3, 4ஆம் நூற்றாண்டுகளிலேயே தமிழி எழுத்தின் புழக்கம் வீழத் தொடங்கி விட்டது. வட்டெழுத்து அவ்விடத்தைப்பற்றிக் கொண்டது. எனவே கி. பி. 4 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட முறை எகர, ஒகர புள்ளிமுறை என்பது தெளிவு.

அறச்சலூர்க் கல்வெட்டு

அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட அறச்சலூர்க் கல்வெட்டில் புள்ளி இடப் பெற்ற எகரக் குறில் இடம் பெற்றிருக்கிறது.

> 'எழுத்துப் புணருத்தன் மணீய்
> வண்ணக்கன் தேவன் சாத்தன்

இவ்வாசகம் சிலரால் 'ஏழு' என்று படிக்கப்பட்டது சரியன்று; எழுத்து என்று படிப்பதே சரி என்ற முடிவிற்குக் கல்வெட்டு ஆய்வாளர் மேலே வந்துள்ளனர்.[32]

புகலூர்க் கல்வெட்டு

சங்க காலத்துடன் தொடர்பு உடைய புகலூர்க் கல்வெட்டிலும் புள்ளி பெற்ற எகரம் இடம் பெற்றுள்ளது.[33] இத் தமிழிக் கல்வெட்டுகளின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு. எனவே கி.பி. இரண்டாம் நூற்றாண்டு அளவிலேயே எகரப் புள்ளியீடு வழக்காற்றில் இருந்தது என்றாகிறது.

மெய் பெறும் புள்ளி

தொல்காப்பியர், எகர ஒகரப் புள்ளியீடு வற்புறுத்தப்படாத காலத்தில் கி. பி. 2 ஆம் நூற்றாண்டிற்குப் பின்பு இருந்திருக்க இடமில்லை. புகலூர்க் கல்வெட்டிற்கிணங்க கி. பி. இரண்டாம்

நூற்றாண்டில் எகரம் புள்ளி பெற்றிருப்பதை அறியலாம். ஆதலால் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்கும் பிற்பட்டவராகத் தொல்காப்பியர் இருத்தற்கு இல்லை.

இச்செய்தி பிறிதொரு செய்தியாலும் வலியுறும். மெய் எழுத்துகட்குப் புள்ளி இட்டு எழுதும் வழக்கம் கல்வெட்டுகளில் இல்லை அல்லது மிகக் குறைவு. பிற்காலக் கல்வெட்டுகள் சிலவற்றிலேயே புள்ளி இட்டு எழுதும் முறை காணப்படுகிறது. இதனால் 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' என்று எழுதிய தொல்காப்பியர் பிற்காலத்தார் என்று எண்ணியோரும் எழுதியோரும் உளர். இக் கருத்தும் வலிவற்றது என்பதை எழுத்து வடிவ இயல் எடுத்துரைக்கிறது.

கல்வெட்டுச் சான்று

புகலூர்க் குகைத்தளப் படுக்கையில் தமிழி எழுத்துகளில் எழுதப்பட்டுள்ள வாசகங்களுள் ஒன்று,

> 'கொற்றந்தை ள ஒய்
> முன்று'

என வருகிறது. முன்று என்பதில் னகர மெய் தெளிவாகப் புள்ளி இடப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டின் காலம் முன்னரே குறித்தபடி கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

நாணயச் சான்று

கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த சாதவாகன வேந்தன் வசித்தி புத்ரசதகர்ணி என்பவனின் நாணயம் ஒன்று கிடைத்துள்ளது. வட்டவடிவ இந்நாணயத்தில் ஒரு புறம் அரசனின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. பிறிதொரு புறம் தமிழிக் கல்வெட்டின் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. வாசகம் வருமாறு:

அரசன் (ச) வசிட்டி மகன் (ச) திரு சதகணி (ச) 'மகன்' என்பதில் உள்ள னகர ஒற்றுத் தெளிவாகப் புள்ளியுடன் எழுதப்பட்டுள்ளது.[84] இக்கல்வெட்டின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு.

முடிவு

ஆக, இவையனைத்தையும் ஒருங்கு நோக்க, தொல்காப்பியர் எகர, ஒகர மெய் எழுத்துகள் புள்ளி பெற்று வழங்கிய காலத்தில் வாழ்ந்தார் என்பதும், ...அக்காலம் தமிழிக் கல்வெட்டுகள்

பெருவழக்கில் புழங்கிய காலம் என்பதும், அத்தகு காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் இல்லை என்பதும் தேற்றம்.

தென்னை—தொல்காப்பியத்தில் சுட்டப்படாமை

தொல்காப்பியத்துள் முப்பத்து நான்கு மரங்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன.[35] அவற்றுள் தமிழகம் முழுதும் பல்கிக் கிடக்கும் தென்னை மரம் இடம் பெறவில்லை. இது தனிப் பார்வைக்குரியது.

பனை

பனை என்ற மரத்தின் பெயர் பல வேறு வகைகளில் புணரு மாற்றை நான்கு நூற்பாக்களில் எடுத்து விளக்குபவர், 'தென்னை' என்ற மரப்பெயர் புணருமாற்றை எங்கும் விளக்கவில்லை. ஆனால் பிற்கால இலக்கண ஆசிரியர் விளக்கினர். தென்னை என்பதன் பழைய பெயர், தெங்கு என்பதாகும். தெங்கு + காய் என்பதே தேங்காய், என்று புணரும். தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய்வரின்' என்று பவணந்தி (187) நூற்பா அமைப்பர். பிற இலக்கண ஆசிரியர்களும் தேங்காய் என்பதன் புணர்ச்சியைச் சுட்டிக் காட்டுவர்.[36]

தென்னை—கருப்பொருளாகச் சுட்டப்படாமை

கருப்பொருள்களில் மரமும் ஒன்று. இன்றைய கடலோரப் பகுதியிலும், மருதநிலப் பகுதிகளிலும் செழிப்பாக விளையும் தென்னைமரம் நெய்தல் நிலக் கருப்பொருளாகவோ, மருத நிலக் கருப்பொருளாகவோ, மூல நூலாசிரியர்களாலோ, உரையாசிரியர் களாலோ சுட்டப்படவில்லை.

கள்வகை

பனங்கள்ளையும், ஈச்சங்கள்ளையும், நெல்லிலிருந்து வடிக்கப் பெறும் கள்ளையும் சுட்டிக் காட்டும் சங்க இலக்கியங்கள், தென்னங் கள்ளை எங்கும் குறிக்கவில்லை.

நாட்டின் பெயர்

தென்னை மர நாடு என்று பொருள் விளக்கப்பெறும் 'கேரளம்' என்ற பெயர் கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கு முன் வழங்க வில்லை.[37]

தென்னைப் பயிர்

தென்னை மரங்கள் நிரம்ப விளையும் நாடுகளுள் ஒன்றான இலங்கையில் கி.பி. 589 இல் இரண்டாம் அகரபோதி அரசனால்

தென்னை நடப்பட்டது என்ற செய்தியை மகாவம்சம் குறிக்கும். எனினும் இவனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தென்னை லங்கைப் பகுதியில் தென்னை பயிரிடப்பட்டது என்று ஆய்வாளர் அறிவிப்பர்.[38]

இந்தியாவில் அறிமுகம்

ஆக இவை தென்னை தமிழ் நாட்டு அல்லது இந்திய நாட்டுப் பயிர் அன்று என்பதை அறிவிக்கின்றன. கிறித்துவை ஒட்டிய சில நூற்றாண்டுகட்கு முன்புதான் தென்னை இந்தியாவில் அறிமுகமாயிற்று.

தென்னையின் தோற்றம்

தென்னையின் தோற்றம் பற்றி ஒருமித்த கருத்து அறிஞர் இடையே இல்லை எனினும், அண்மை ஆராய்ச்சியாளர், அஃது இந்தியப் பயிர் அன்று என்பதை உறுதி செய்வர். ரெசினுல்டு, சைல்டு என்ற இலங்கை அறிஞரும், வாவிலோவ் என்ற உருசிய அறிஞரும் கண்டோல் என்ற ஆங்கில நாட்டு அறிஞரும், தென்னை இந்திய அல்லது இலங்கைப் பயிர் அன்று என்பதை நிறுவுவர்.[39] ஆதலின், தென்னை, வெளிப்புலத்தினின்று தமிழ் நாட்டிற்கு வந்த மரமே ஆகும்.[4]

தென்னை - பெயர் விளக்கம்

தெற்கிலிருந்து வந்தது என்ற கருத்தைத் 'தென்னை', 'தெங்கு' என்ற தமிழ்ப் பெயர்கள் உணர்த்தும். தமிழ்ப் பெயர்களே பிற இந்திய மொழிகளிலும் பரவியது என்று அறிஞர் கருதுவர்.[41] புன்கு, புங்கு, புங்கமரம் என்பதுபோலத் தென் திசையினின்று வந்தது என்ற கருத்தினது தென் + கு தெங்கு என்ற சொல் வழக்கு ஆகும். இளந்தேங்காயைக் குறிக்கும் 'இளநீர்' என்ற பெயர், நியுகினி என்ற பசிபிக் தீவின் பெயர்த் திரிபு என்பர்.[42] (நியு — தென்னை, கினி — நிற்பது. நியு√ நியர்√ நீர்) ஆக இவையனைத்தும் தென்னையின் வரவை எடுத்துக் காட்டுவன.

தென்னையின் காலம்

தென்னை எக்காலத்தில் இந்தியாவிற்கு வந்திருத்தல் கூடும்? மூவாயிரம் ஆண்டிற்கு முன்னதாகத் தென்னை இந்தியாவிற்கு வந்திருத்தல் வேண்டும் என்று அறிஞர் கருதுவர். பழங்கால இந்தியப் பயணிகள் தென்னையை அக்காலத்தில் நுக்சு இண்டிகா (Nux Indica) என்று குறித்தனராம்.[43] ஆதலால், தமிழகத்தில் தென்னையின் வரவு கி. மு. என்பது தெளிவாகும்.

தொல்காப்பியர் காலத்தில் தென்னை இல்லாமை

தம் காலத்தில் இருந்த மரங்களின் பெயர்களைப் பல வேறு இடங்களில் குறிக்கும் தொல்காப்பியர், தென்னையைக் குறிப்பிடாமை, அவர் காலத்தில் தென்னை, தமிழகத்திற்கு வரவில்லை அல்லது அதன் பயன்பாடு உணரப்படவில்லை என்பதை உணர்த்தும். உணர்த்தவே, தென்னையின் வரவு அல்லது பயன்பாடு உணரப்படாத காலத்தில்[44] அஃதாவது கிறித்துப் பிறப்பதற்கு முன்பே தொல்காப்பியர் வாழ்ந்தவர் என்பது பெறப்படும்.

தொல்காப்பியத்தின் பழமை

சேயோன் மேய மைவரை உலகமும், வேந்தனை மேய தீம்புனல் உலகமும், வருணன் மேய பெருமணல் உலகமும், கொற்றவை வழிபாடு சிவனுடன் சார்த்தி இல்லாமை, கடவுள் வாழ்த்து இல்லாமை நடுகல் வழிபாட்டில் பீடும் பெயரும் பொறிக்காமை, கடற்படைக் குறிப்பு இல்லாமை, காவல் மரம் குறிக்கப்படாமை, இளவேனில் இன்பவேனில் ஆக்கப் படாமை, தமிழ் எழுத்து வடிவம் பெற்றுள்ளமை, தென்னை பற்றிய குறிப்பில்லாமை ஆகியன தொல்காப்பியர் சங்க காலத்தவர் அல்லர் என்பதையும், சங்க காலத்திற்கு முற்பட்டவர் என்பதையும் சாற்றுகின்றன. இனிச் சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் எது என்பது ஆய்பொருள்.

சங்க காலம்

பதிற்றுப்பத்து சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறத்தொகை நூல். அந்நூல் எட்டுச் சேர மன்னர்களின் மறப்பணிகளை விரித்துரைக்கும். இந்நூலில் குறிக்கப்பட்டுள்ள மன்னர்தம் கால் வழியை உறுதி செய்யும் கல்வெட்டொன்று திருச்சி மாவட்டம் புகலூரில் கிடைத்துள்ளது. கோ ஆதன் செல்லிரும்பொறை மகன் பெருங்கடுங்கோன். அவன் மகன் இளங்கடுங்கோன். இவர்களில் 'ஆதன்' என்றும் 'செல்' என்றும் பெயர் கொண்ட சங்க கால மன்னன் 'செல்வக் கடுங்கோ வாழியாதன்' ஆவன். இவனைப் புகலூர்க் கல்வெட்டு,

> 'கோ ஆதன் செல் இரும்பொறை மகன்
> பெருங் கடுங்கோன் மகன் எங்
> கடுங்கோ எங்கோ ஆகி அறுத்த கல்.'

என்று குறிக்கும். ஏழாவது பதிற்றுப்பத்தின் பாட்டுடைத் தலைவன் கோ ஆதன் செல் இரும்பொறையே. கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள பெருங்கடுங்கோவும், அவன் மகன் இளங்கடுங்கோவும் பதிற்றுப்பத்தில் வரும் பெருஞ்சேரல் இரும்பொறையும், இளஞ்

சேரல் இரும்பொறையும் ஆவர். இவ்விருவரே, எட்டாவது, ஒன்பதாவது பதிற்றுப்பத்துகளின் தலைவர்களாவர்.

புகழூர்க் கல்வெட்டின் காலம்

இளஞ்சேரல் இரும்பொறையின் தந்தை குட்டுவன் இரும் பொறை என்று குறிக்கப்படுவன். ஆனால் புகழூரில் பெருங் கடுங் கோன் தந்தையாகக் குறிக்கப்படுவன். 'குட்டுவன் இரும்பொறை என்பதைச் சேர்த்தம் பொதுப் பெயராகக் கொள்ளுதல்வேண்டும். ஆக, பதிற்றுப்பத்து ஏழு, எட்டு, ஒன்பதாம் பத்துகளின் தலைவர் களே புகழூர்க் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளனர்.[45] எனவே பதிற் றுப்பத்துக் காட்டும், தலைமுறையும், புகழூர்க் கல்வெட்டுக் காட்டும் தலைமுறையும் ஒன்றே என்பது அறிஞர் முடிபு. புகழூர்க் கல்வெட் டின் காலம் கி.பி. 200 என்பர். ஆகவே, சங்க இலக்கியமாகிய பதிற்றுப்பத்தின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பது தேற்றமாகிறது. ஆகவே, தொல்காப்பியர், கி.பி. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என்பது உறுதி ஆகிறது. வருண வழிபாடு வீழ்ச்சி, சேயோன் நானிலத்தும் தெய்வ முதன்மை எய் துதல், கொற்றவை துர்க்கை ஆதல், நடுகல்லில் உருவம், பெயர், புகழ் பொறிக்கப்படல், கடற்படை தலைப்படை ஆதல், காவல் மரம் என்ற புதுச்சின்னம் இடம் பெறுதல், கோடை வேனில் போய், இளவேனில் வாடை போலக் கொள்ளப்படுதல், தமிழ் எழுத்து வடிவம் வட்டெழுத்து வடிவம் ஆதல், தென்னை எங்கும் செழித்தல் ஆகியன, தொல்காப்பியர்க்குப் பிற்காலத்துக் கால் கொள்ள ஓரிரு நூற்றாண்டுகளாவது வேண்டும். வேண்டுமெனில் கி.மு. முதல் நூற்றாண்டு தொல்காப்பியர் வாழ்ந்த காலம் ஆகலாம்.

தொல்காப்பியர் பிறப்பகம்

தொல்காப்பியர் வாழ்க்கையைப்பற்றி நச்சர். பாயிர உரை யில் வரைபவற்றை உண்மை ஆக்கும் சான்றுகள் இல்லை. தொல் காப்பியர் பிறப்பகம் பற்றிய சான்றுகளும் இல்லை. எனினும் பனம்பாரனார்தம் பாயிரமும், தொல்காப்பிய நூலுமே அவர் வாழ் வின் சிறு கூறுகளை அறிவிப்பன. பாயிரம், தொல்காப்பியம் பாண்டியர் அவையில் அரங்கேற்றப்பட்டதை நினைவு படுத்தும். இறையனார் களவியல் உரை (தொல்காப்பியப்) பொருளதிகாரம் இல்லாமை பற்றிப் பாண்டியன் கவலைப்பட்டமையைக் காட்டும். இவற்றால் தொல்காப்பியர்தம் பிறப்பகம் பாண்டிய நாடு என்று உய்த்துணரலாம். நூல் அரங்கேற்றத்தின் பொழுது அதங்கோட் டாசான் என்ற அறிஞர் தடைகளை எழுப்பினர் என்று பாயிரம் குறிக்கும். இவ்வதங்கோட்டாசானின் ஊர், குமரி மாவட்டத்தில்

உள்ள அதங்கோடு (குழித்துறைக்கு அணிமை) ஆகும்.[46] அவ் வூரில் உள்ள ஒருவரிடம் அதங்கோட்டாசான் பெயரில் சில ஓலைச் சுவடிகள் இன்றும் உள்ளன என்பர்.[47]

தொல்காப்பியர் ஊர்

தொல்காப்பியர்தம் ஊரும் அதங்கோட்டாசிரியன் ஊரா கவோ, ஊர்ப் பக்கமாகவோ இருத்தல் கூடும். குமரி நாட்டைச் சார்ந்தவராக அவர் இருத்தல் கூடும் என்பதை அவரது நூல் அறி விக்கும். தொல்கா ப்பியத்தில் இடம் பெற்றுள்ள சில வழக்காறு கள் வேறு எங்கும் கேட்கப்படாமல் இருக்க, அவை குமரி நாட்டில் மட்டுமே இன்றும் நிலைத்து வழங்கும். இவற்றை நோக்க, அவர் குமரி நாட்டினரோ என்ற ஊகம் உறுதி அடையும்.[48]

தொல்காப்பிய அமைப்பு

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரப் பெரும் பிரிவுகளை உடையது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மூன்று அதிகாரங் களும், இருபத்தேழு இயல்களாக விரிந்து, 1610 நூற்பாக்களாக அமைந்துள்ளன. 1610 என்ற நூற்பா எண்ணிக்கை இன்று வழங் கும் எப்பதிப்பிலும் பொருந்தவில்லை. இளம். வழி 1595 எனவும், நச்சர், பேராசிரியர் வழி 1611 எனவும், சாமுவேல் பிள்ளை 1848 இல் பதித்த தொல்காப்பிய நன்னூல் பதிப்பின் வழி 1583 எனவும் நூற்பாக்களின் எண்ணிக்கை வேறுபடும்.

தொல்காப்பிய நோக்கு

தொல்காப்பியர்க்கு முன்பு, இலக்கியங்கள் பலவும் இருந்தன. இலக்கணங்கள் சிலவும் இருந்தன. இவை இரண்டும் ஏட்டு வழக் குகள். இவையன்றி மக்கள் வழங்கும் நாட்டு வழக்குகளும் வழங் கின. தொல்காப்பியர், நாட்டு வழக்கையும், ஏட்டு வழக்கையும் அடித்தளங்களாகக் கொண்டே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்றையும் எழுதினர். முன்னைய நூல் களை ஆழ்ந்து பயின்றனர். அவற்றுள் கூறப்பட்ட செய்திகளை முறைப்பட எண்ணினர்; அவற்றை ஒருங்கே தொகுத்தனர். ஆக அவர் எழுதிய இலக்கண நூல், அவர்கால, அவர்க்கும் முற்பட்ட கால இலக்கிய இலக்கண ஏட்டு வழக்குகளின், நாட்டு வழக்கு களின் பிழிவு எனலாம்.

தொல்காப்பியர் நோக்கம்

சிறப்பாகத் தம்கால, தம் காலத்திற்கும் முற்பட்ட நூல் களின் போக்குகளை விளங்க வைக்கவே தொல்காப்பியர் நூல்

எழுதினர். இலக்கியங்களை விளங்க வைத்தலே தொல்காப்பியர் தம் முதல் நோக்கமாக இருந்தது எனலாம். எழுத்து, சொல்லை நோக்கியது; சொல், பொருளை நோக்கியது; பொருள் இலக்கியத்தை நோக்கியது; இலக்கியம் வாழ்வை நோக்கியது. அக, புற இலக்கியங்களைத் தெளிய, தொல்காப்பியர் தடம் அமைத்தனர்.

இலக்கணப் படைப்பின் நோக்கம்

மேனாடுகளில் கிரேக்கரே முதன் முதலில் மொழி ஆய்வு செய்தனர். இவர்தம் ஆய்விற்கு ஓமரின் இலக்கியங்களே அடிப்படையாக அமைந்தன. அவருடைய நூலின்கண் காணப்பட்ட சொற் கட்டும் தொடர்கட்டும் விளக்கம் கூறுவதே முதன்மை நோக்கம். எனவேதான் கிரேக்க மொழியில் இலக்கணத்தைக் குறிக்கும் சொல் 'எழுத்தின் கலை' (Grammatike Techne) என்ற பொருளில் வழங்கும்.[49] சமற்கிருதத்தில் வேதங்களின் பொருளைப் பிற்காலத்தில் விளங்கிக் கொள்வதில் கடினம் இருந்தது. இந்நிலைகளைத் தவிர்க்கவே பாணினியமும், நிருக்தமும், நிகண்டுகளும் சமற்கிருதத்தில் எழுதப்பட்டன. வாய்மொழியாக வழங்கிய வேதங்களை முறையாக ஒலிக்கவும் பயிலவும் வாய்ப்பாக, எழுத்தொலிப் பிறப்பியல் பற்றியும் அன்னோர் எழுத வேண்டி இருந்தது.[50] கிரேக்கர் எழுத்து மொழியை நோக்கி இலக்கணம் படைத்தனர்; ஆரியர் வாய்மொழியை நோக்கி இலக்கணம் படைத்தனர். ஆனால் தமிழர், எழுத்தையும், வாய்மொழியையும் நோக்கி இலக்கணம் படைத்தனர். தொல்காப்பியம் இந்த நோக்கிலேயே எழுதப் பட்டது.

'வட வேங்கடம் தென் குமரி
ஆயிடை
தமிழ் கூறும் நல் உலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்'

என்பது தொல்காப்பியப் பாயிரம். ஆக தொல்காப்பியத்தை அக்கால இலக்கியங்களைப் பயிலத் துணைசெய்யும் வழி காட்டியாகவும், அக்கால மக்கள் வாழ்வைக் காட்டும் கண்ணாடியாகவும் கொள்ளத் தகும். தொல்காப்பியம் மரபுலகின் எதிர்நூல் அன்று. மரபுலகின் சார்பு நூல். மரபியலைத் தனி இயலாக அந்நூல் போற்றுவதும், நூன் மரபு, மொழி மரபு, விளி மரபு என இயல் பெயர்களை அமைப்பதும் ஆங்காங்கே 'மரீஇய பண்பே' என்று எழுதுவதும் தொல்காப்பிய நூல் நோக்கை நுவலும்.

தொல்காப்பியச் செய்திகளின் காலம்

முன்னைய நூல்களையும், நூலாசிரியர்களையும், தொல்காப்பியர், அறிஞர் (1), அறிந்திசினோர் (2), உணர்ந்திசினோர் (2 முறைகள்),

என்ப (137). என்மனார் (71), புலமையோர் (1), புலவர் (67) புலவராறு (1), மொழிப (87), மொழிமனார் (3), என 372 இடங்களில் குறிப்பிடுவர். அவர்தம் குறிப்பு அவர் முன்னோர்க் கருத்தை எடுத்து மொழிந்துள்ள உண்மையை நாட்டும். எனவே தொல்காப்பியத்துள் கூறப்பட்டன அனைத்தும், தொல்காப்பியர் காலத்தன மட்டுமே என்று வரையறுத்தற்கு இல்லை. அவர் காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தில் வழங்கிய கருத்துகளையும் அவர் தொகுத்து வழங்கினர் என்றே கருதுதல் வேண்டும். இவ்வாறு கருதவே, தொல்காப்பியம் ஒரு கால நூல் அன்று; பல காலக் கருத்துகளின் தொகுதி என்பது பெறப்படும். சான்றாக, தொல்காப்பியர் காலம் கற்பு மணமே மேம்பட்ட காலம். சங்க காலமும் இத்தகையதே. களவு மணம் மேம்பட்ட காலம் தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலத்தது. எனவேதான் களவுமணத்தை விரித்துக் கூறி அது கற்பு மணமான காரணத்தையும் தொல்காப்பியர் விளக்குவர். வெட்சிப் போர் தொல்காப்பியர் காலப்போர் முறை அன்று. அவருக்கு முற்பட்ட வீர ஊழிக்காலப் போர் முறை. தொல்காப்பியர் காலம் வீரமும் காதலும் கொடையும் நிலையாமையும் ஒரு சேரப் பேசப்பட்ட காலம். எனினும் களவைப் போற்றியது போல, வரலாற்று முறைப்படி வெட்சியையும் பழைமை கருதி முதலிற் போற்றுவர். வேற்றுமை ஏழு என்ற முன்னோர்தம் கருத்தைக் கூறி, வேற்றுமை எட்டு என்ற தம் கருத்தை நாட்டுவர். ஒவ்வொரு கருத்தையும் விளக்கும்போது அதனது வரலாற்றை விளக்குவது தொல்காப்பிய நோக்காக இருந்தது போலும்.

குறிப்புகள்*

1 நேமிநாத உரை, எழுத்ததிகாரம் 24, சொல்லதிகாரம் 23.

2 அருணாசலம், டாக்டர் ப. (அருணா. ப), தொல்காப்பியர், ப. 13.

3 வெள்ளை வாரணன், வித்துவான். க. தமிழ் இலக்கியவரலாறு தொல்காப்பியம், ப. 95.

4 அருணாசலம். ப. தொல்காப்பியர் ப. 26.

5 தொல்காப்பியன். தொல்காப்பியம் அகத்திணை இயல் (தொல். அகத். நூ) 5.

6 தொல். புறத்திணை இயல் (புறத்), நூ. 4.

7 நக்கீரர், திருமுருகாற்றுப்படை, அடிகள் : 119-125.

* ஒவ்வொரு நூலின் (1) ஆசிரியர் பெயரும், (2) நூற்பெயரும், (3) குறிப்பு வரும் இடமும் குறிப்புகளில் முறையே இடம்பெறும். நூல் வெளியீட்டகம், வெளிவந்த ஆண்டு முதலானவை மேற்கோள் நூல் அட்டவணையில் இடம் பெறும்.

8 தொல். புறத். 4 : மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே.'
பழைய நாகரிக மாந்தரான அசிரியர், போர்க் காலத்தில் பெண் தெய்வ வழிபாட்டினர்.

After Ashur, Ishtar occupied the most prominent place in the Assyrian, Pantheon at least as far as warlike expedition were concerned; for she, too, was a warrior. Ashur-resh-ishi calls her "the heroine of combats, she who spares not the enemies of Ashur". And Ashurbanipal relates that she had been seen in a dream with two quivers, one on the right and one on the left shoulder, grasping a bow in one hand and unsheathing a sharp sword, just as she was depicted on cylinder-seals. Three goddesses worshipped under this name had temples at Kalah, Nineveh, and Arbela respectively—Delaperte. Mesopotamia—The Babylonian and Assyrian Civilisation. Routledge and Kegal Paul London. Reprinted 1970. P. 310.

9 இளங்கோவடிகள். சிலப்பதிகாரம், வேட்டுவவரி, 54—74

10 கைலாசபதி. க., அடியும் முடியும். ப. 56

11 Nagaswamy, R. Editer (Ed.) Seminar on Hero Stones. P. 20

12 Montgemery of Alameen. Ancient Warfare. P. 61, 63, 73

13 பதிற்றுப்பத்து (பதிற்) 5.

14 அகநானூறு (அகம்) 127

15 மேற்காட்டிய நூல் (மே. நூ.), 347

16 புறநானூறு (புறம்) 126

17 அர்த்த சாத்திரத்தில் கடற்படை பற்றிய குறிப்பு உள்ளது. (2. அதிகாரம் 28). இக்குறிப்பால் தொல்காப்பியம் அர்த்த சாத்திரத்திற்கு முற்பட்டது என்று கருதலாம். அர்த்த சாத்திரத்தின் காலம் கி.பி. முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டு என்பர். இசுலாமியரே கடற்படையைத் தமிழகத்தில் முதன் முதல் அறிமுகப்படுத்தினர் என்பர் அப்துற் றகீம். பார்க்க: இசுலாமியக் கலைக் களஞ்சியம்

18 'பெண் கொலை புரிந்த நன்னன் போல' குறுந்தொகை 292.

19 'கடி காவல் நிலை தொலைச்சி,' — மதுரைக் காஞ்சி 153

20 'கடம்பு முதல் தடிந்த கடுஞ்சின வேந்தே.' — பதிற். 11, 12.

21 'கடிமரம் தடிதல் ஓம்பு.' — புறம். 57

22 'வடிநவில் நவியம் பாய்தலின் ஊர்தொறும்
கூடிமரம் துளங்கிய காவு நெடுநகர்.' — புறம். 23

23

1	சித்திரை வைகாசி	இளவேனில் — வசந்த ருது
2	ஆனி ஆடி	முதுவேனில் — கிரிசும ருது
3	ஆவணி புரட்டாசி	கார் — வர்ச ருது
4	ஐப்பசி கார்த்திகை	கூதிர் — சரத் ருது
5	மார்கழி தை	முன்பனி — கேமந்த ருது
6	மாசி பங்குனி	பின்பனி — சிசி ருது

தமிழரைப் போலவே, ஆரியரும் பெரும் பொழுதை ஆறுக்கி உரைப்பர். வசந்தம், கிரிசுமம், வர்சம், சரத், கேமந்தம், சிசிரம் என அவர் குறிப்பர். வேனில் முதலான ஆறு காலங்கள், தற்போதைய தென்னிந்தியச் சூழலிற்கு ஒத்து வருதல் இல்லை. ஆனல் ஆரியர்க்கு ஒத்து வருகின்றன. ஆனி, ஆடி (சூன், சூலை மாதங்கள், வட இந்தியாவில் வேனிற் காலம் (வசந்தம்). ஆனல் அவை தென்னிந்தியாவில் மழைக் காலம். (ஐப்பசி, கார்த்திகை) மாதங்கள், வட இந்தியாவில் சரத் காலம் (கூதிர் காலம்). தமிழ் நாட்டில் அது நல்ல அடை மழைக்காலம். தமிழகச் சூழலில், வேனிற் காலம் காதலர்க்கு இனியது அன்று. ஏனெனில் அது கொடுங் கோடைக் காலம். தமிழ்க் காதலர்க்குக் கார் காலமே இனியது. அதனுல்தான் காரும், மாலைப் பொழுதும், சேர்ந்திருக்கும் முல்லையார்க்கும் உரியன. கார் காலத்தைப் போலவே கூதிர் காலமும் இனியது. எனவேதான் புணர்ச்சி ஒழுக்கத்திற்குரிய குறிஞ் சிக்குரியனவாக கூதிரும், நள்ளிரவும் தொல்காப்பியரால் குறிப்பிடப் பட்டன (7). ஆனல் கலித்தொகைப் பாக்கள் சில (31, 32, 33, 35, 36) வேனிற் கால வரவிற்காகத் தலைவி ஏங்குவதாகவும், வேனிற்கால வரவு கண்டு அவள் துடிப்ப தாகவும் அமைந்துள்ளன.

புணர்ந்தவர் முயக்கம்போல் புரிவுற்ற கொடியொடும்
நயந்தார்க்கோ நல்லமன், இளவேனில் (32)

காதலர்ப் புணர்ந்தவர் கவவுக் கை நெகிழாது
தாது அவிழ் வேனிலோ வந்தன்று (33)

பல் மலர் சிதை உக சுரும்பு இமிர்ந்து வண்டு ஆர்ப்ப
இன்அமர் இளவேனில் இறுத்தந்த பொழுது (34)

குழவி வேனில் விழவு எதிர்கொள்ளும்
சீரார் செவ்வியும் வந்தன்று. (36)

இளவேனிற் பருவம் கண்டு துடிப்பதாக வரும் பாக்கள், தமிழ் நாட்டு இயற்கை அமைவிற்கு முரண். தொல்காப்பியர் வேனிலைப் பாலைக்கு உரியதாக்குவர்.

'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே'

என்பது தொல்காப்பியம் (11). பிரிவிற்குரிய பாலைப் பொழுதில், கொளுத்தும் வெயிலில், தலைவன் வரவிற்காகத் தலைவி ஏங்கிஞள் என்று பாடும் முறை, தமிழ் முறை அன்று. தமிழுக்கு உறவு முறையும் அன்று. தமிழுக்கு ஆரியத்திடம் இருந்து வந்த வரவு முறை. வடபுல இலக்கியங்களில் வேனில் சிறப்பிக்கப்படுவதைப் பார்த்துத் தமிழில் எழுதப்பட்ட காலக் கோலங்கள் அவை.

24 ஜமதக்னி, மொழி பெயர்ப்பு, காளிதாசரின் மேக சந்தேசம் ப. 53.

25 தொல். அகத். 6 — 12.

26 அருணை. ப. தொல்காப்பியர் ப. 74

27 Mahadevan. I Corpus of the Tamil Brahmi Inscriptions Seminar on Inscriptions P. 57 — 73

28 Mahadevan. I. Tamil Brahmi Inscriptions of the Sangam Age. Proceedings of the Second I. A. T. R. Conference of Tamil Studies. 1968 P. 93, 95

29 இராகவையங்கார், மு. ஆராய்ச்சித் தொகுதி. ப. 124

30 எகர ஒகரப் புள்ளி இடும் முறை கி.பி. பதினேராம் நூற்றாண்டிற்குப் பின் கல்வெட்டுகளில் காணப்படவில்லை; வேலுப் பிள்ளை, ஆ., சாசனமும் தமிழும். 1971 ப. 20.

31 இம்மாற்றங்களை வீரமாமுனிவர் செய்தார் என்று கருதப் பட்டு வந்தது. ஆனால் அவருக்கு முன்பே தமிழ்க் கல்வெட்டுகளில் இம்முன்னேறிய அமைப்புகள் உள. ஞானப்பிரகாசம். வி. மி., அறவாணன், க. ப., பதிப்பு. தற்காலத் தமிழ் முன்னோடிகள். 1975. ப. 88 - 90

32 நாகசாமி, இரா. கல்வெட்டியல், 1972. ப. 77.

33 மேலது நூ. ப. 66

34 Nagaswamy. R. A Bilingual Coin of Satvahana. Seminar on Inscriptions 1968. P. 202.

35 தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள்ள மரங்களாவன: அரை (எ. 284), ஆல் (எ. 305), ஆயிரை (எ. 284), ஆர்

(எ. 364), ஆல் (எ. 376), இல்லம் (எ. 314), உதி (எ. 244), புளி (எ. 245), உன்னமரம் (பொ. 63) எகின் (எ. 337), ஒடு (எ. 263), குருந்து (எ. 417), கார் (எ. 364, 365), சோ (எ. 279) ஞெமை (எ. 283), தேக்கு (எ. 416), குமிழ் (எ. 387), களா (எ. 230), நமை (எ. 283), பலா (எ. 182), பனை (எ. 170, 284, 285, 286,) பீர் (எ. 364, 366, 387), புளி (எ. 245, 246), புன்கு (எ. 417), பூல் (எ. 376), பிடா (எ. 230), மா (எ. 232), யா (எ. 230), விசை (எ. 283), விள (எ. 182, 218), வெதிர் (எ. 364), வேம்பு (பொ. 63, 417), வேய் (பொ. 61), வேல் (எ. 366)

36 நன்னூல் 187, முத்துவீரியம், புணரியல் 238.

37 கி.பி. 3 ஆம் நூற். அசோகன் கல்வெட்டுக் கேரளபுத்திரர் என்று குறிப்பிடுகிறது. இதுவே மிகப் பழம் சான்று.

38 References in ancient literature to the coconut in Ceylon are scanty. The earliest recorded observation is possibly that of Megasthenes, the ambassador of Selucus Nicator to the Indian King Ch .ntragupta about 300 B. C. There is mention in the ancient chronicle the Mahavamsa, of the planting of coconuts by Agrapodhi II about A. D. 589. This monarch is identified with the Kusts Raja whose statue carved out of the solid rock, is to be seen near Veligama, in the south of island. He is supposed to have been the first to introduce coconut cultivation into Ceylon, and this legend is related with much remantia embroidery by B. Seemann in his popular History of the Palms (1856). Probably the palms had been growing in South Ceylon for some centuries before his time but the persistance of the legend may be taken to indicate a time when it had been unknown in Ceylon. Reginald Child. coconuts. P. 6

39 Vavilow. V. I. (1926) The origin Variation immunity and breeding of cultivated plants — Cherenica Botanica 13 (16) 1949 - 50. DeCondelle. A. 1884. Origin of cultivated plants Kegan Paul Trah & Co., London.

40 இதனைச் சில கதைகளும் உறுதி செய்யும். கடல்களுக்குக் கீழ் உள்ள நாகலோகம் என்னும் பரமானந்த கண்டத்திலிருந்து பத்தியுள்ள ஓர் அரசர் தம் பூசைக்காக இந்தியாவிற்குத் தென்னையை கொண்டு வந்ததாக ஒரு கதை வழங்கும். தம் போர்க் கருவி ஆகிய மழுவை வீசி எறிந்து, அது சென்ற

தூரம் மேற்குக் கடலைப் பின்வாங்கச் செய்து, அங்கு நிலப் பாகத்தைப் பரசுராமர் படைத்தார், அதுதான் மலையாள நாடு. அப்பரசுராமரே தெய்வத் தருவாகிய தென்னையைக் கொண்டு வந்தார் என்று ஒரு கதை வழங்கும். சமற்கிருதத்தில் தென்னைக்குக் 'கற்பக தரு' என்று ஒரு பெயர் வழங்கும். அப்பெயர் தென்னையின் முழுப்பயனைக் காட்டுவது எனினும், தென்னை மரம், மண்ணுலக மரம் என்பதையும் பெற வைக்கும். இக்கதைகள் எல்லாம் வலிமை வாய்ந்த சான்றுகள் அல்ல. எனினும், தென்னை மரம், இந்திய மண்ணினது அன்று என்ற உண்மையை இவை குறிப்பாகப் புலப்படுத்தும். இச் செய்தியைத் தென்னை மரம் பற்றிய இக் கால ஆராய்ச்சியும் வலிமைப் படுத்தும்.

பயிரியல் அறிஞரிடையே தென்னையின் தோற்றம் பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. எனினும் இந்திய மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டது இல்லை என்பதில் தற்காலத்தில் ஒருமித்த கருத்தே நிலவுகிறது. தென்னை, மைய அமெரிக்காவிலுள்ள பனமா நில அடுக்கு அருகில் தோன்றியது என்பர் ஒரு சிலர்; பசிபிக் கடலில் பெருங் கடலில் உள்ள பாலி நேசியாத் தீவுத் தொகுதியில் காணப் பட்டது என்பர் வேறு சிலர்; இந்து மாகடலில் உள்ள மலேயா, இந்தோனேசியா நாடுகளுக்கு அருகில் உள்ள தீவுகளில்தாம் தென்னை தோன்றியது என்பர் சிலர். அறிவியல் சான்றுகள், உய்த்துணர்தலைக் கொண்டு மலேயா நாட்டிலிருந்து பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுத் தொகுதிகள் வரை தென்னை தன் வாழ்க்கையைத் தொடங்கியது என்று கூறுவர்.

தென்னை உலகெங்கும் எவ்வாறு பரவியது? தேங்காய் நெற்றுகள் நீரிலே மிதக்கக் கூடியவை. பசிபிக் தீவுகளில் கடற்கரை ஓரமாகச் செழித்திருந்த தென்னை நெற்றுகள் முதிர்ந்து கடல் அலை உந்தலால், காற்றின் போக்கிற்குத் தக, அந்நெற்றுகள் இலங்கை, இந்தியக் கடலோரங்களில் ஒதுங்கி, அழுகி அழிந்தன போக எஞ்சிய சில தாமே பயிராகி இருத்தல் வேண்டும். நாளடைவில் அவை பல்கிப் பெருகி இருத்தல் வேண்டும்.

தென்னையின் தோற்றக்காலத்திலேயே அதன் பயன்பாட்டை மாந்தர் அறிந்திருத்தல் வேண்டும். சோப்புக் கண்டு பிடிக்கப்பட்ட பின்பே. தென்னைப் பயிர் விரிவாக உலகெங்கும் பயிரிடப் பட்டது, ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே, தென்னையின் வேறுபொருள்கள் மனிதனுக்குப் பயன் பட்டன என்று ஆய்வாளர் கருதுவர்.

41 Mayuranathan P.V. The Original House of the Cocount I. Bombay Natural History Sec. 1938, 40. No. 174-82.

42 சாமி, பி. எல். இளநீர். செந்தமிழ்ச் செல்வி. பிப். 1974, பக். 324.

43 Reginald Child. Coco unt. P. 6. பாலகிருஷ்ணன், எம். ஆர். தென்னை ப. 19.

44 பனைமரம் : பார்க்க : Pre Pallavan Tamil Index P. 543. தெங்கு மிகச் சில இடங்களிலேயே வருதல் காண்க. பதிற்றுப் பத்து 13-7; பட்டினப் பாலை 26; பெரும்பாணாற்றுப்படை 353, 364; பொருநராற்றுப்படை 208; புறநானூறு 29, 61. பனம் பூவை மாலையாகப் போற்றியவர், தென்னம்பூவையோ, பாளையையோ போற்றுமை, பழந்தமிழர் காலத்தில், தென்னை இல்லாமையை அறிவிக்கிறது.

45 குறிப்பு எண். 28 ஐப்பார்க்க.

46 வையாபுரிப் பிள்ளை. எஸ். தமிழ்ச் சுடர்மணிகள். ப. 18.

47 இந்தியன் எக்ஸ்பிரஸ், (ஆங்கிலம்) சென்னைப் பதிப்பு 14-7-73.

48 அறவாணன், தாயம்மாள், தொல்காப்பியக் களஞ்சியம், முன்னுரை. ப. 6-11.

49 அகத்தியலிங்கம், ச; பாலசுப்பிரமணியம். க. பதிப்பு,இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், முன்னுரை. ப. 13.

50 அரங்கன், டாக்டர். கி. மாற்றிலக்கண மொழி இயல். 1975, ப. 61.

உரையின் வரலாறு

3

உரையின் வரலாறு

உரை இல்லாத காலம்

தமிழிலக்கியத் துறையைப் பொறுத்தவரை செய்யுள் இலக்கியமே மூத்த பிள்ளை. பாவலர்களின் நெஞ்சில் கருவிருந்து ஏட்டெழுத்தில் உருவெடுத்த பாக்கள் அனைத்தும் தோன்றும்போது எல்லார்க்கும் விளங்கியிருத்தல் வேண்டும். விரிவுரை, விளக்கத்தின் துணையில்லாமலே பண்டைய மக்கள் பயின்றிருத்தல் வேண்டும். இலக்கியம் மட்டும் அன்றி, அன்று தோன்றிய இலக்கணங்கள் கூட, உரையில்லாமல் விளங்கிக் கொள்ளப்பட்டன. 'உரையின்றிச் சூத்திரத்தானே பொருள் நிகழ்ந்த காலம் உண்டு' என்றும், 'உதாரணம் காட்டல் வேண்டாமையை உணர்ந்து உரை நடந்த காலமும் உடையவாகும் முற்காலத்து நூல்கள் என்பது கருத்து' என்றும் பேராசிரியர் தம்முரையில் கூறியுள்ளவை[1] மேற் கண்ட செய்தியை உறுதிப்படுத்தும்.

உரை தோன்றிய காலம்

ஒரு காலத்தில் தோன்றிய இலக்கிய, இலக்கணங்கள் அவை தோன்றிய காலத் தலைமுறைக்கு விளங்கியிருக்கும். தலைமுறைகள் கடக்கும்போது அவ்வப்போது ஆளும் அரசுகள் மாறுகின்றன. ஊடே ஊடே அயலினத்தாரின் பாதிப்புகளும் கலக்கின்றன. இவற்றை எல்லாம் கடந்து இலக்கியம் வாழும்போது அவ்விலக்கியம் அக்காலத்தினரால் முற்றும் விளங்கிக் கொள்ள முடியாமற்

போய்விடக் கூடும். இக்கட்டத்தில்தான் உரைகாரர் பிறப்பர். அவரிடமிருந்து உரைசள் பிறக்கும். அவற்றைப் பயில்வோர் பிறப்பர்.

எழுதாக் கிளவி – வாய்மொழி இலக்கியம்

பழங்காலத்தில் ஓர் ஆசிரியரிடம் பல மாணாக்கர் உடன் உறைந்து கற்பர். ஆசிரியர் குறிப்பிட்ட நூல்சளுக்கு உரை கூறி விளக்குவர். மாணாக்கர் சேட்பர். பார்த்துப் படிக்கும் கல்விச் செல்வத்தைவிடக் சேள்விச் செல்வமே அக்காலத்தில் இயலக் கூடியது. திருவள்ளுவர் கேள்வியை ஒரு செல்வமாகவே போற்றியதற்கும், 'கற்றிலனெனினும் கேட்க'[2] என்று ஆணையிட்டதற்கும் இச்சூழ்நிலையே காரணம். அக்காலத்து எழுதிப்படித்தல் என்பது மிகத் துன்பமானது. ஏடுகள் எங்காகிலும் ஓரிரு இடங்களிலேயே இருக்கும். அவற்றை ஒவ்வொருவரும் பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதிப் படித்தல் என்பது சுமையான செயல். வீண்கால நீட்சி; வீழ்ச்சி. இதனால் குறிப்பிட்ட ஓர் ஆசிரியரிடம் உள்ள குறிப்பிட்ட நூல்களின் ஒவ்வோர் ஓலைச் சுவடியைக் கொண்டு எல்லாரும் பயில்வர். ஆசிரியர் ஒவ்வொன்றாக விளக்கிச் சொல்ல மாணாக்கர் கூர்ந்து கேட்பர். 'செவி வாயாக நெஞ்சு களனாக' என்று பவணந்தி குறித்தது இது பற்றியே.[4] பாடம் கற்போர் இயல்பு என்று குறிக்காமல் 'மாணாக்கர் பாடம் கேட்கும் இயல்பு என்று மயிலைநாதர் கொளு எழுதியதும் இது பற்றியே. ஆசிரியரும் மிகுதியாக எழுதி விளக்க வேண்டியவற்றை எழுதாமல், வாயால் கூறியே விளக்கினர். 'விரிப்பின் பெருகும்' 'விரிவஞ்சி விடுத்தாம்', 'வல்லார் வாய்க் கேட்டுணர்க' என்று உரையாசிரியர்கள் இடையிடையே எழுதிச் செல்லும் வழக்கம் அக்காலத்தில் எழுதுவதில் இருந்த இடர்ப்பாட்டை உணர்த்தும். நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் செவியால் கேட்டுக் கல்வி கற்றுப் புலமை பெறும் வழக்கம் அக்காலத்தில் நாடெங்கும் பரவியிருந்தது.[4] 'உரை' என்ற சொல்லும் தமிழில், 'சொல்' என்றே பொருள்படுதல் இக்கருத்தை வலியுறுத்தும் துணைச் சான்றாகும்.[5] இதனால் தொடக்கக் காலத்தில் தோன்றிய உரைகள், வாய்மொழி இலக்கியங்களாகவும், எழுதாக் கிளவிகளாகவும் ஆசிரியரிடத்தும் மாணாக்கரிடத்தும், தந்தையிடத்தும் மகனிடத்தும் வாழ்ந்து கொண்டிருந்தன.

உரை –எழுதுதல்

காலம் செல்லச் செல்ல இலக்கியத்தின் பழைமை முதுமையாகிக் கொண்டு வருவதுடன் தலைமுறை தலைமுறையாகத் தாண்டி வரும்போது பல புதிய விளக்கங்கள் பெருகும். மலை மேலிருந்து

உருண்டு வரும் சிறியதொரு பனிக்கட்டி, அடிவாரம் அடைகையில் பனிப்பாறையாக விரிந்து வளர்ந்து விடுதலைப்போல, வாய்மொழி உரையும் கால நீட்சியில் பல்கிப் பெருகியிருத்தல் வேண்டும். காலந்தொறும் புதுப்புது இலக்கியங்கள், இலக்கணங்கள், அவற்றிற்கான உரைகள் பெருகும். பெருகிய எல்லாவற்றையும் கேட்க முடியும் என்றாலும், அவற்றை நெஞ்சில் நிறுத்துவது அரிதாயிற்று. இக்காலக் கட்டத்தில்தான் உரைகளை எழுதிக் கற்கவேண்டிய நிலைமையும், காப்பாற்ற வேண்டிய கட்டாயமும் உருவாயின.

உரைக் குறிப்புகள்

இவ்வாறு காப்பாற்றப்பட்ட உரைகளும் ஏட்டில் எழுதுவதில் இருந்த தொல்லைகளால் தொடக்கத்தில் குறிப்புரைகளாகவே அமைந்தன. அரிய சொற்களுக்குப் பொருளும் சொற்களைக் கொண்டு கூட்டி முடிக்கும் முறையும், சில வரலாற்றுக் குறிப்புகளுமே இவற்றில் இடம் பெற்றன. சிலப்பதிகாரத்திற்கு முதலில் தோன்றியது அரும்பதவுரைதான். ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றிற்கு இயற்றப்பட்ட பழைய உரைகள், குறிப்புரைகளே. அகநானூறு முதல் தொண்ணூறு பாடல்களுக்கு மட்டும் அமைந்த ஆதியுரையும் குறிப்புரையே.

இலக்கண உரைத்தோற்றத்திற்குக் காரணம்

இலக்கியங்களின் மொழி நடையைவிட, இலக்கணங்களின் நூற்பா நடை மிகுந்த செறிவுடையது. அதனால் இலக்கியங்களை விட இலக்கணங்களுக்கு உரை மிக இன்றியமையாத தாயிற்று. இலக்கணக் கோட்பாடுகளை எடுத்துக்காட்டுகளின்றித் தெளிவு படுத்த இயலாது. அறிவியல் பாடங்களுக்குச் செய்முறைப் பயிற்சிகளைப்போல் இலக்கண விளக்கத்திற்கு எடுத்துக்காட்டுகள் இன்றியமையாதவையாகும். இலக்கிய உரைகளைக் காட்டிலும் இலக்கண உரைகளில் மேற்கோள்கள் மிகுந்து காணப்படுதற்கு இதுவே காரணமாகும். எனவேதான் யாப்பருங்கல விருத்தியில் ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐந்நூறு மேற்கோள்களும், நச்சினார்க்கினியரின் சொல்லதிகார உரையில் நாலாயிரத்திற்கு மேற்பட்ட மேற்கோள்களும், தொல்காப்பியப் பொருளதிகார உரைகளில் ஆறுயிரத்திற்கு மேற்பட்ட மேற்கோள்களும் காணப்படுகின்றன. ஆனால், இலக்கிய உரைகளாகிய புறநானூற்று உரையில் ஐம்பதிற்கும் குறைவான மேற்கோள்களும், பத்துப் பாட்டு உரையில் இருநூறு மேற்கோள்களும், திருக்குறள் பரிமேலழகர் உரையில் ஏறத்தாழ முந்நூறு மேற்கோள்களும் எடுத்தாளப்பட்டுள்ளன.[6] இப்புள்ளி விபரம், இலக்கியத்தைவிட இலக்கணங்களில் மேற்கோள்கள் மிகுதியாக ஆளப்பட்டிருத்தலைக் காட்டும்.

எடுத்துக்காட்டுகள் உரை

நூற்பாக்களை விளக்க எடுத்துக்காட்டுகளை போதுமானவை என்ற கருத்தும் ஆசிரியர்களிடையே நிலவியது. புறப்பொருள் வெண்பாமாலையின் அமைப்பு இக்கருத்தை வலியுறுத்தும். இந்நூலின் ஆசிரியர் ஐயனரிதனாரும், மயேச்சுரர். அமுதசாகரர், தண்டியாசிரியர், சுப்பிரமணிய தீட்சதர் முதலியோரும் மூல விளக்கத்திற்கு எடுத்துக்காட்டுகளைச் சிறப்பாகக் கருதினர். உரையாசிரியர்களில் சிலர் இலக்கண நூற்பாக்கள் சிலவற்றிற்கு உரை யெழுதாமல் எடுத்துக்காட்டுகளை மட்டும் எழுதிச் செல்லும் வழக்கம் இக்கருத்தையே வலியுறுத்தும். பெயர் தெரியாத தொல்காப்பியப் பழைய உரையாசிரியர், தம் சொல்லதிகாரம், கிளவியாக்க உரையில், 6, 7, 8, 9 ஆம் நூற்பாக்களுக்கு உரை எழுதவில்லை. எடுத்துக்காட்டுகள் மட்டுமே காட்டியுள்ளார். சுவாமிநாத தேசிகர், தம் பிரயோக விவேக நூல் உரையில், செம்பாதிக்குமேல் நூற்பாக்களுக்கு உரை எழுதாமல் எடுத்துக்காட்டுகளை மட்டுமே கொடுத்துள்ளார்.

உரை விரிவு

காலப் போக்கில் இக்குறிப்புரை, மூல பாடம் சொல்லல், கருத்துரைத்தல், சொல் வகுத்தல், சொற்பொருள் உரைத்தல், பொழிப்புரைத்தல், உதாரணங்காட்டல், விரிவு காட்டல், அதிகார வரவு காட்டல், துணிவு கூறல், பயனெடு படுத்தல் ஆசிரிய வசனம் காட்டுதல் என்ற பற்பல பகுதியாக விரிந்து வளர்ந்தது.[57] இவ் வளர்ச்சி பன்னூறு ஆண்டுகளின் வளர்ச்சியாகும்.

உரை வரலாற்றின் வளப்பம் மிக்க கட்டம்

தொல்காப்பியர்க்கு முன்பிருந்து தொடங்கிய தமிழ் உரை வரலாறு பன்னூறு ஆண்டுகளில் நன்கு செழித்துவிட்டது. சில உரையாசிரிய முன்னோடிகள் சிறந்த உரைக்குரிய வழித்தடம் அமைத்திருந்தனர். சிலர் பெருஞ்சாதனையே நிகழ்த்தி இருந்தனர். இறையனர் களவியலுக்கு உரை வகுத்த நக்கீரர் இப்பெருமைக்கு உரியவராவர். தமிழ் உரைநடையில் கட்டுரைக் கலைக்குத் தந்தையார் நாவீறு படைத்த நக்கீரனார் என்றும், அவரை 'உரை நடையின் ஊற்றிடம்' என்றும் ஆராய்ச்சி அறிஞர் போற்றுவர்.[58] கி. பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த இறையனர் களவியல் உரையிலிருந்து உரை வரலாற்றின் வளப்பமான கட்டம் தொடங்கியது. எனினும் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் உரைகள் பல்கத் தொடங்கின. இக்காலம் சோழர் காலம். தமிழ்நாட்டு அரசியலில் வேற்று நாடுகளையும் வெற்றிகொண்டு ஆட்சி நடத்திய காலம் இது. அரசியல் சமூக நிலைகள் புதிய வேகத்தில் புதிய

சூழலில் இலக்கியத் துறைக்கு ஆக்கம் கொடுத்துக் கொண்டி
ருந்தன. சமயங்கள் ஒன்றிற்கொன்று போராட்டம் இல்லாமல்
தத்தம் போக்கில் இயங்கிக் கொண்டிருந்தன. சைவ, வைணவ
சமயங்கள் அரசியலைச் சார்ந்து ஆதிக்கம் பெற்றிருந்தன. எனினும்
அவை பல்லவக் காலத்தைப் போல, சைன, பௌத்த சமயங்களை
ஒடுக்கும் பணியில், ஒழிக்கும் பணியில் காலத்தை அழிக்கவில்லை.
இதனால் அனைத்துச் சமயத்தாரும். கடவுள் பணிகளிலும், கடவுள்
நூற் படைப்புப் பணிகளிலும், பழைய நூற்களுக்கு உரைகாணும்
பணிகளிலும் ஈடுபட்டனர். சைவ சித்தாந்தம், விசிட்டாத்வைதம்
முதலான தத்துவங்கள் நாட்டிலே பரவின. அவை முதன்முதலில்
செய்யுள் வடிவத்தில் வரத் தொடங்கின. அந்நூல்களில் காணப்
படும் கருத்துகள் மக்களுக்குத் தெளிவாக விளங்கும் பொருட்டு
அவற்றிற்கு உரைகள் வகுக்கப்படலாயின. தத்துவக் கொள்கை
களைத் தருக்க முறைப்படி விளக்கவேண்டியிருந்ததனால் தமிழ்
உரைநடை புதுவழியில் கிளைத்துத் தழைத்தது.

சோழர் காலச் சமற்கிருத உரைகள்

பிற்காலச் சோழர் காலத்தில் சமற்கிருதக் கல்வி, பேருக்கத்
தோடு வளர்க்கப்பட்டது. அம்மொழியை வளர்ப்பதில் சோழர்
தனி அக்கறை காட்டினர். இதனால் பல சமற்கிருத மூல நூற்கள்
சோழ மன்னர்களின் அரவணைப்போடு தமிழர்களால் எழுதப்
பட்டன. அன்றியும் உரைநூற்கள் பலவும் இக்காலத்தில் இயற்
றப்பெற்றன. இவ்வாறு உரைகளும். மூல நூல்களும் தோன்றிய
இக்காலச் சூழல் தமிழறிவோர்களையும், சமற்கிருதம் அறிந்த
தமிழறிஞர்களையும் தூண்டியிருத்தல் வேண்டும். வேங்கடராய
ருக்கும், சுந்தரிக்கும் மகனான மாதவர், காவிரியின் தென்கரை
யிலுள்ள ஒரு சிற்றூரில் தங்கி, ரிக் வேதத்திற்கு விரிவான உரை
வகுத்தார். உலகையே வெற்றிகண்ட வீரரைப் போல இன்பமான
சூழலில் இருந்து உரை எழுதினதாக அவர் தெரிவித்துள்ளார்.
கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த அரிதத்தா என்பவர்
சூத்திர இலக்கியத்திற்கு மிகச் சிறந்ததோர் உரை எழுதினர்.
இவரெழுதிய பதமஞ்சரி என்ற உரை மிகச் சிறந்த ஒன்றாகும்.
பரதாசுவாமி என்பார் சாம வேதத்திற்கு உரை வகுத்தார். இச்
சமயத்திலேயே சத்குருசிசியா என்பவர், ஐத்ரே பிராமணத்
திற்கும், ஆரண்யாவிற்கும் உரை எழுதினர். இவற்றுள் அவர்
சர்வானுக்கிரமணி என்ற கார்த்தியாயணனின் நூலிற்கும், ஆசுவ
தாயன சிரௌத்த சூத்திரத்திற்கும் உரை வகுத்தார். பதின்
மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் விட்ணுசித்தர் விட்ணு
புராணத்திற்கு உரை எழுதினர். இராமாயணத்திற்கு ஈடு ஆக
எழுதப்பட்ட உதாலியின் விவேகதிலகா இக்காலத்ததுதான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் இருந்த தார்திக ரட்சா' என்ற நூலின் ஆசிரியரான வரதராசன், உதயணனைப் பற்றிய 'குசுமாஞ் சலி'க்கு ஓர் உரை எழுதினார். சைவ சித்தாந்தத்தைச் சார்ந்தும் பல பாடியங்கள் சமற்கிருதத்தில் எழுதப்பட்டன. அரதாத்தாச் சார்யாவும், இவரைத் தொடர்ந்து சீகண்டாவும் சைவ பாடியங் களை எழுதினர். அகோர சிவாசாரியரும் உமாபதி சிவாசாரியரும் தமிழர்கள். இவர்களும் நிரம்ப விளக்க உரைகளைச் சமற்கிருதத் தில் எழுதினர். சூரியனார் கோயிலைச் சார்ந்த சினன சிவாச்சார்யர் சிவஞான போதத்திற்குச் சமற்கிருதத்தில் பாடியம் எழுதினார். பதின்மூன்றும் நூற்றாண்டில், கிருட்டிண லீலாசுகர், புருடகாரா என்றதோர் உரையை எழுதினார். இவ்வுரைகள் அனைத்தும் சோழர் ஆட்சிக் காலத்தில் (கி. பி. 9 ஆம் நூற் – 13 ஆம் நூற் றாண்டு) அவர்தம் ஆட்சி நிழலில், அவர்தம் ஆளுகைக்குட்பட்ட நாடுகளில் எழுதப்பட்ட சமற்கிருத உரைகளாகும்.[59]

பிற பகுதிகளில் உரைகள்

இதனைப் போலப் பிற தென்னிந்தியப் பகுதிகளிலும் வேதாந்தத் தத்துவங்களுக்கு வடமொழியில் சங்கரர், இராமா நுசர், மத்துவர் ஆகியோரால் விளக்கங்கள் வரையப்பட்டன. பிரம்ம சூத்திரங்கள், உபநிடதங்கள் பகவத் கீதை ஆகியவற் றிற்குப் பல பேருரைகள், இக்காலத்தை ஒட்டியே சற்று முன்னும் பின்னுமாக எழுதப்பட்டன.

மணிப்பிரவாள உரை

தமிழகத்தில் குடியிருந்த சைனரும், பௌத்தரும் பிராகிருத மொழிகளையே முதலில் கையாண்டு வந்தனர். அவற்றுடன் தமிழையும் நன்கு கற்றிருந்தனர். அவர்தம் சமய நூல்கள் அனைத்தும் சமற்கிருதத்திலும் பிராகிருதத்திலுமே இருந்தன. இவற்றிலுள்ள உண்மைகளை மக்களிடம் பரப்ப வேண்டியிருந்தது. அதனால், மேற்கண்ட நூல்களிலுள்ள செய்திகளைத் தமிழில் தர வேண்டியது கட்டாயமாயிற்று இதனால், சமற்கிருதம் அல்லது பிராகிருதத்தையும், தமிழையும் சேர்த்துப் புதிதாக மணிப்பிர வாளம் என்ற கலப்புரை வகையைத் தம் சீபுராண வழி சைனர் அறிமுகப்படுத்தினர்.

சைனரின் சீபுராணத்தைத், தொடர்ந்து, வைணவர், நாலா யிரத் திவ்வியப் பிரபந்தத்திற்கும், குருபரம்பரா பிரபாவ நூல் களுக்கும் மணிப்பிரவாள நடையிலேயே உரையெழுதினர்.

உரை இயக்கம்

ஆகச் சைவ, வைணவ, சைன சமயத்தார், தம் தத்துவ நூல்களை விளக்க எடுத்துக் கொண்ட முயற்சி, தமிழில் உரை

காணும் பேரியக்கத்தையே உண்டாக்கி விட்டது. இவற்றைக் காட்டுவது, தமிழுரையின் தொடக்கமே இக்காலந்தான் என்பதற் காக அன்று. உரையியற்றுவது ஒரு பெரும் இயக்கமாகப் பத்தாம் நூற்றாண்டில் உருவாகிவிட்டது என்பதனைக் காட்டவே, 'உரைவகை' ஒரு முயற்சி. சார்பிலக்கண நூல் வகை ஒரு முயற்சி. இலக்கிய வகை ஒரு முயற்சி. இம் மூவகை முயற்சியாலும் தொன்னூல்கள் இடைக்காலத்துப் பரவின; படிக்கப் பெற்றன என்ற பேராசிரியர் ஒருவர்தம் கருத்து ஈண்டு எண்ணத்தக்கது.[10]

குறிப்புகள்

1 பேராசிரியர், தொல்காப்பிய உரை. சை. சி. நூ. க. 1951, மரபியல் 98, 101

2 திருக்குறள். 414

3 நன்னூல் பாயிரம் நூ. 39

4 அரவிந்தன். மு. வை. உரையாசிரியர்கள். 1968. ப. 5

5 சஞ்சீவி, டாக்டர் ந. ஆராய்ச்சிக் கட்டுரைகள் (ஆரா. க.) 1970, ப. 20

6 தாமோதரன், டாக்டர். அ., திருக்குறள் மேற்கோள் விளக்கம் ப. 20

7 நன்னூல். மயிலைநாதர் உரை. நூ. 20

8 சஞ்சீவி. டாக்டர் ந. ஆரா. க. ப. 15.

9 Nilakanta Sastri, K.A. The Cholas, IInd Ed. 1955. P. 687, 689

10 மாணிக்கம், டாக்டர் வ. சுப., எந்தச் சிலம்பு? 1964, ப. 77

தொல்காப்பிய உரை தோன்றக் காரணம்

4

தொல்காப்பிய உரை தோன்றக் காரணம்

உரை பெற்ற பழைய நூல்கள்

தமிழகத்தில், கி. பி. பத்தாம் நூற்றாண்டு அளவில் உரை எழுதுதல், இயக்கமாகப் பரவத் தொடங்கியது. இவ் ஆழமான அறிவுப் பணிக்குத் தலைமைக் காரணம், சோழர் கால அரசியல், சமூகப் பின்புலமே. ஆங்காங்கே இருந்த அறிஞர்கள், அமைதியான, பெருமையான ஆட்சிப் பின்புலத்தில் நிரம்ப அறிவுப்பணி ஆற்றினர். ஒரு பக்கம் படைப்பிலக்கிய இலக்கணப்பணி; பிறிதொரு பக்கம் முன்னைய நூல்களுக்கு உரை இயற்றும் பணியை அவர்கள் செய்தனர். சோழ மன்னர், தம் தலை முறையின் முன்னைய பெருமைகளைத் தம் மெய்க்கீர்த்திகளில் போற்றிக் கொண்டனர். சிபி, மனு போன்ற மன்னர்களின் வரலாற்றுடன் தம் வரலாற்றை அவர்கள் நிரல்படுத்தி இணைத்து மகிழ்ந்தனர். 'கங்கையையும் கடாரத்தையும் கொண்ட நாங்கள், இன்று தலை எடுத்த காளான்கள் அல்லேம்; பன்னூறு ஆண்டுகள் பழம் வரலாறு கொண்ட பீடுகெழு தமிழ்ச் சோழர் தலைமுறை' என்று அறிவிக்க அவாவினர். இந்த அவாவின் எதிரொலியை உரை இயற்றும் முயற்சியில் கேட்கிறோம். பண்டைய நூலான 'தொல்காப்பியம்' என்ற பெயரே அவர்களைக் கவர்ந்திழுத்தது. உரை இயற்றும் முயற்சி தொடர்ந்தது. பண்டைய பத்துப்பாட்டு உரையைப் பெற்றது; கலித்தொகை, ஐங்குறுநூறு ஆகியவற்றிற்கு உரை எழுதப் பெற்றன. திருக்குறளுக்கு உரை எழுதப்

பெற்றது, சிலப்பதிகாரம் இரண்டு உரைகளைப் பெற்றது. சீவக சிந்தாமணி புத்துரையைப் பெற்றது. பழைய நூல்களுள் பெரும் பாலானவை, சோழர் காலத்தில் புத்துரைகளைப் பெற்றன. இவ் வுரைமுயற்சி ஏறத்தாழ, கி. பி. பத்தாம் நூற்றாண்டுத் தொடங்கிப் பதினான்காம் நூற்றாண்டுவரை செழிக்க நிகழ்ந்தது. முழுமையாக உரை பெற்ற நூல்களில் மிகப் பழையது தொல்காப் பியமே! இறையனார் களவியல், தொல்காப்பியப் பொருளதிகாரம் மறைந்துவிட்ட சூழலில் எழுதப்பெற்றது; உரை இயற்றப் பெற்றது, அதனை விதிவிலக்காக்கிக் கொண்டு, நோக்கின் உரை களுள் மிகப் பழையது தொல்காப்பிய இளம்பூரண உரை எனல் பொருந்தும்.

பண்டைய பற்று

ஒரு சமூகம் கிளர்ச்சி பெற்ற சூழலில், தன் பழைய இலக்கியப் பெருமைகளை நினைவு கூர்வது இயற்கை. வடநாட்டில், குப்தர் களின் பொற்காலத்தில் இலக்கிய முயற்சி பேரெழுச்சி பெற்றது; கிரேக்கர், உரோமாபுரி உள்ளிட்ட நாடுகளை வென்று சிறந்த காலத்திலேயே 'இலியத்' 'ஒடிசி' போன்ற இதிகாசங்கள் இயற்றப் பெற்றன. எகிப்து, பாபிலோனியா, அசீரியர்களை வென்று உரோமானியர் தலை நிமிர்ந்து நின்றபோது, பல நூல்கள் இலத்தீன் மொழியில் எழுதப் பெற்றன. இலக்கியப் புத்தெழுச்சி தோன்றுவதுடன் அன்றி, முன்னே தோன்றிய இலக்கியங்களும் புதுப் பார்வை பெறும்; புது விளக்கம் பெறும். சமற்கிருத வேதங்கள், பின் வந்த வேந்தர்களின் செல்வாக்கு மிக்க ஆட்சி வாய்ந்த காலங்களில் பாடியங்களைப் பெற்றன. தமிழகத்திலும் பேரெழுச்சி மிக்க பிற்காலச் சோழர் காலத்தில், முற்கால நூல்கள் பெருமையுடன் மீண்டும் மீண்டும் படிக்கப் பெற்றன; படிப்பிக்கப் பெற்றன. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றன உரை விளக்கம் பெற்றமைக்குப் பண்டைய பற்றும் ஒரு காரணம்.

சமற்கிருத ஆட்சி

சோழர் காலத்தில் சமற்கிருதம் உயர் செல்வாக்கில் இருந்தது. மன்னர்களின் போற்றுதலைப் பெற்றிருந்தது. பல இடங்களில் வேதக்கல்வி வேந்தர்களின் துணையுடன் படிப்பிக்கப் பெற்றது. இதனால், சமற்கிருதக் கல்வி, முன் எக்காலத்தையும் விடத் தமிழகத்தில் பரவி இருந்தது. சமற்கிருதக் கல்வி பெற்ற தமிழ் அறிஞரும் இருந்தனர். தமிழ் அறிஞர், சமற்கிருத மொழி யில் பரக்க உள்ள பாடியங்களைப் பயின்றிருப்பர்; பலர் கேட்டி ருப்பர். இப்பயிற்சியும், கேள்வியும், தம் தாய்மொழி நூலுக்கும்

உரை எழுத வேண்டும் என்ற உணர்வை உண்டாக்கி இருத்தல் வேண்டும்.

வருணப் பாகுபாட்டின் ஆட்சி

பிற்காலச் சோழர் ஆட்சி, தென்புல இலங்கை தொடங்கி, வடபுலக் கங்கைவரை நீண்டிருந்தது. முதல் இராசராச சோழன் (கி.பி. 985 - 1014), முதல் இராசேந்திர சோழன் (கி. பி. 1012 - 1044), முதற் குலோத்துங்க சோழன் கி.பி. 1070-1120) போன்ற சோழப் பெருமன்னர் காலத்தில், வடபுலத்திலிருந்து கொணரப் பட்ட இராச குருமார்கள் சோழ மன்னர்களுடன் இருந்து அற விசேஷப் பணிகளில் துணை புரிந்தனர்.

இதனால் சமற்கிருத மொழியொடு காசுமீர பிராமணரும் சோழர் ஆட்சியில் செல்வாக்குடன் இலங்கினர். தமிழகத்துப் பிராமணரும், தமக்கெனத் தனிச்சலுகை பல பெற்றிருந்தனர்; தாமே தம் சதுர்வேதி மங்கலங்களை ஆளும் உரிமை பெற்றிருந்தார். குடவோலை முறை வழக்கில் இருந்த உத்திரமேரூர் முதலிய ஊர்கள், பிராமணர்களுக்கே உரிய சதுர்வேதி மங்கலங்கள் ஆகும். சோழர் காலச் சமூகத்தில் பிராமணரின் தலைமை மறுப்பிற்கு இடம் இல்லாமல் இருந்தது. பிராமணர் முதலான வருணப் பிரிவுகள், வருணத்திற்குத் தக வேறுபடும் உரிமைகள், சலுகைகள் சோழர் காலத்தில் பரவியிருந்தன. பிராமணர்தம் செல்வாக்கு, சமற்கிருத மொழிக்கும், பிறப்பு அடிப்படை வருணப்பிரிவுகளுக்கும் வாய்ப்பாக இருந்தது. இவ்வாய்ப்பு, இலக்கிய உலகிலும் ஏறியது. உரைகாணும் உலகிலும் பரவியது. தொல்காப்பிய உரையாசிரியரான, பாரத்துவாசி நச்சர், இச்செல்வாக்கிற்கு உட்பட்டவர். தாம் எழுதிய உரையில், பிராமணராகிய அந்தணர்க்குத் தலைமையும், தெளிவான வருணப்பிரிவுகளையும் தொல்காப்பியத்தில் ஏற்றி இவர் எழுதினர். தொல்காப்பியத்தைச் சமற்கிருத வேத அடிப்படையிலேயே இவர் அணுகினர்: விளக்கினர்.[1]

உரைகளின் பெருக்கம்

சோழர் காலம், இலக்கிய உலகில் பலரை உந்திவிட்டது உண்மை. அறிஞர்கள்தம் புலமைத்திறம் அனைத்தையும் மூல நூல்களுக்கு உரை காணுவதில் செலவு செய்தனர். உரை-காண்பதிலேயே அவர்தம் வாழ்நாள் முற்றும் முடிந்தது போலும். இளம்; நச்சர்., போன்றோர், உரையாசிரியர்களாக அமைந்தனரே அன்றி, மூலநூற் படைப்பாசிரியர்களாக அமையாமை கருதத் தக்கது. எனினும், அவர்தம் உரைநூல்கள் படைப்பிலக்கியங்களுக்குச் சமமாகப் போற்றப்பட்டன. அதற்குக் காரணம் மூல நூல் பொருள் அறிதலில் உள்ள முட்டுப்பாடே. பல நூறு ஆண்டு

களுக்கு முன் எழுதப்பட்டவை என்பதால், பின் ஆண்டுகளில் உண்டாய மொழி மாற்றங்கள், முன்னூல்களுக்கு உரை காண்பதில் இடர் விளைத்தன. இவ்விடர், இலக்கியங்களைவிட, இலக்கணங்களில் மிகுதியாக இருந்தது. நூவல் பொருளை விரித்து நூவலுவது இலக்கிய நோக்கு. நூவல் பொருளைச் செறித்து நூவலுவது இலக்கண நோக்கு. திட்ப நுட்பம் செறிய அமைவது நூற்பா இயல்பு. இவ்வியல்பு விளக்கங்களை வேண்டி நிற்பதும் இயற்கை. எனவே இலக்கண நூற்பாக்கள், விளக்கமும், விரிவும், உரையும் பெற்றே தீரவேண்டி இருந்தன. சிறப்பாகப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் மொழிந்த இலக்கண நூல்கள், பிற்காலத்தில், பல ராலும் பொருள் அறியப்படா மந்திரங்களாக அமைந்துவிடுதலைத் தவிர்க்க முடியாது. கி.பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொல்காப்பியமும் ஏறத்தாழ இதே நிலையில் இருந்தது என உய்த்துணரலாம். இந்நிலையிலேயே, அந்நூல் இளம். கைக்குக் கிடைத்திருத்தல் வேண்டும். முதன் முதலாகத் தொல்காப்பியம் முழுதையும் விளக்கும் வாய்ப்பு, இளம்பூரணருக்கே வாய்த்தது எனல் வேண்டும்.

உரையாளன் திறன் காட்டும் களம்

தொல்காப்பியத்திற்கு உரை எழுதும் முயற்சி இளம். காலத்தில் தொடங்கிப் பேராசிரியர், நச்சர், காலத்துடன் முடிவு பெற்று நின்றது. கி.பி. பதினொன்றாம் நூற்றாண்டில் தோன்றிய நச்சர் உரைக்குப் பிறகு நானூறு ஆண்டுகளுக்குப் பின் கி.பி. 18 ஆம் நூற்றாண்டில் சிவஞான முனிவரே, தொல்காப்பியப் பாயிரத்திற்கும், முதல் நூற்பாவிற்கும் விருத்தி உரை எழுதினார். இவர் தம் உரை மூலநூலுக்கு உரை காண்பது என்பதைவிடத் தம் புலமையை வெளிப்படுத்துவதில் முனைப்பாகி நின்றது. எனவே மூல நூலை விளக்குவது என்ற அடிப்படையில் உரை தோன்றியது, அன்றியும் அறிஞர்தம் திறன் காட்டும் களமாகவும் உரை தோன்றியது என்பதற்குச் சான்று சிவஞான முனிவர் உரை எனலாம். இவ்வகையிலேயே பிற்காலத்து எழுந்த அரசஞ் சண்முகனார்தம் பாயிரவிருத்தி (1905), அதற்கு மறுப்பாக எழுந்த செப்பறை மெய்கண்ட தேவருடைய முதல் மாணாக்கர்தம் சண்முக விருத்தி மறுப்பு (1916) என்ற இரு விரிவுரைகளையும் கருதுதல் தகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு உரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பாதியில் (1856) டாக்டர் கால்டுவெல் எழுதிய 'திராவிட மொழிகளில் ஒப்பிலக்கணம்' என்றஆய்வு வெளிவந்தது, இவ்வாய்வு அன்றுவரை ஆதிக்க நிலையிலிருந்த சமற்கிருதம் பற்றியும், சமற்கிருதத் தமிழ்த்

தொடர்பு பற்றியும் அறிவியல் அடிப்படையில் திறனாய்வு செய்தது. சமற்கிருத மொழியின் துணை இன்றித் தமிழால் தனித்து இயங்க முடியும் என்பதை அவர் நூல் எடுத்துக் காட்டியது. அன்றுவரை இந்தியச் சார்பில் அனைத்துலக அரங்கில் முதலாவதாகக் கருதப்பட்ட சமற்கிருதத்திற்கு இணையான பெருமையும்,பழமையும் உடையது தமிழ் என்பதனை அந்நூல் நிறுவியது. இவ்வாய்வு தமிழ்மொழி வரலாற்றில் ஒரு திருப்பு முனை. ஏறத்தாழ இதனை அடுத்த காலத்தில் (1920), சிந்துவெளி மொகஞ்சோதரா ஆய்வுகள் வெளிப்படுத்தப்பட்டன.ஆரியருக்கு முற்பட்ட திராவிட நாகரிகத்தைச் சிந்துவெளி நகரமைப்புக் காட்டுவதாகக் கருதப்பட்டது. திராவிடத் தமிழருக்குக் கால்டுவெல்லின் மொழி ஆய்வும், யோவான் மார்சலின் சிந்துவெளி ஆய்வும் தலை நிமிர்ச்சியைத் தந்தன. ஏறத்தாழ இதே கால இடைவெளியில், பண்டைய தமிழ் இலக்கியங்கள், இலக்கணங்கள் கண்டறியப்பட்டு, யாழ்ப்பாணம் சி. வை தாமோதரம் பிள்ளையாலும், உ. வே. சாமிநாத அய்யராலும் வெளிவந்து கொண்டிருந்தன; அவை, திராவிடத் தமிழரின் தொல் நாகரிகத்தையும், பண்பாட்டையும் விண்டுரைத்தன. இத்தகு மொழி, வரலாறு, இலக்கியச் சூழல், அன்றைய அரசியல் சமூகச் சூழலில் கலந்து பிராமணர் — பிராமணர் அல்லாதார் இயக்கத்திற்குத் துணை ஆயின.

> ''இவ்வேளை அரசியல் பொருளாதார நிலைமைகளும் மாறத் தொடங்கின. ஆரியத்துக்குப் பதிலடி தரும் உணர்வையும், உட்கொண்ட திராவிட எழுச்சிக்கு இந்த மாற்றங்கள் கட்டுப்பாடான, வலுவான ஒரு குணத்தையும் தந்தன. அதுவரை கல்வியும் அதிகாரமும் தந்த பேருதவியினால் அறிவாளிகள் சாதியான பிராமண சாதி இந்தியாவிலேயே, குறிப்பாக தென்னிந்தியாவிலேயே ஆதிக்கம் பெற்ற சாதியாக விளங்கி வந்தது. மக்கள் விகிதாச்சார எண்ணிக்கையிலும் பல மடங்காகப் பிராமணர்கள் அரசாங்க, மற்றும் பிற நிறுவனங்களை முழுக்கவும் ஆதிக்கம் செலுத்தினர். இதுவே திராவிட மொழிகள் பேசப்படும் மாநிலங்களில் பின்னர் அரசியல் சமுதாயப் பிரச்சினைகளாக உரு எடுப்பதற்குரிய பிராமணர் —பிராமண அல்லாதார் என்ற போராட்டமாக வளர்வதற்கு மறைமுகமான காரணமாக அமைந்தது. ஏனென்றால் பிராமணர் அல்லாத சாதாரண மக்கள் தாங்கள் அலட்சியப்படுத்தப் படுவதாகக் கருதினர்; பிராமணர், பிராமணர் அல்லாதார் என்று ஏற்பட்ட முரண்பாட்டின் காரணமாக பிராமணரோடு தொடர்பு

பட்ட எல்லாமே சமற்கிருதம் உட்பட வெறுப்புக்கும் சந்தேகத்துக்கும் ஆளாயின:[2]

இத்தகு சூழ்நிலை, தமிழ் உரை வரலாற்றையும் பாதித்தது. முன்னைய நூல்கள், பண்டைய உரைகள், சிறப்பாக அந்தணரால் ஆதிக்கம் பெற்றவை, ஆரிய-தமிழ்ப் பார்வையுடன் மறுபார்வை செய்யப்பட்டன. அப்பார்வையில் புதிய உரைகளும் எழுந்தன. இவற்றுள் டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் தம் பொருட்படலப் புத்துரைகள் குறிப்பிடத்தக்கன. பாரதி காந்தியவாதி எனினும், சாதியத்தைக் கடுமையாக எதிர்த்தவர். சாதி ஒழிப்பு மாநாடுகளுக்குத் தலைவராக இருந்தவர்; 1933 மேத்திங்கள் பதின் மூன்றும் நாள், உசிலங்குளத்தில் தாழ்த்தப்பட்டோருக்கெனத் தொடக்கப்பள்ளி ஒன்றை அன்றைய சாதியச் சூழலில் அமைத்தவர்; அப்பள்ளியைத் தொடக்குவிக்கத் தூத்துகுடி வ. உ. சிதம்பரம் பிள்ளையை அழைத்தவர். சாதிய எதிர்ப்பு என்பது அக்காலத்தில் பேரளவு பிராமணீய எதிர்ப்பாகவே இருந்தது. அக்கால நீதிக்கட்சியின் பரிவும் பாரதிக்கு இருந்தது. நீதிக் கட்சி, பிராமணர் அல்லாதார் இயக்கக் கட்சி ஆகும். இச்சூழலிலேயே நீதிக்கட்சியின்பால் பரிவும், பங்கும் கொண்ட செட்டி நாட்டரசர் இளவரசர் முத்தைய வேளின் தந்தை அண்ணாமலை அரசர் அழைப்பு அவருக்குக் கிடைத்தது (அண்ணாமலை வள்ளலின் அழைப்பிற் கிணங்க, பாரதியார், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராக இணைந்தார் (1933-1938). அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் பொழுது தொல்காப்பியம் பற்றிய தமது கருத்தை மாணாக்கரிடை சொல்லியும், பல்கலைக்கழக இதழில் எழுதியும் வந்தார். அவ்வாறு அவர் எழுதியும் சொல்லியும் வந்த கருத்துகளின் தொகுதியே 1942 இல், அகத்திணை இயல் புத்துரை, புறத்திணை இயல் புத்துரை, மெய்ப்பாட்டியல் புத்துரை என மூன்று நூலாக வெளி வந்தது. இவ்வுரை வேத வழக்கொடுபடுத்தித் தொல்காப்பியத்துக்கு நச்சர், முதலானோர் உரை வரைந்ததைக் கண்டனம் செய்தது. பாரதி எழுதிய சில குறிப்புகள், அவர்தம் உரைப் போக்கையும் உரை எழுச்சிக்கான காரணத்தையும் உரைக்க வல்லன.

> 'தமிழ்ப் பெரியார் அனைவரையும் ஆரியர் கலப்புடையராக்கித் தலை சிறந்த தமிழ் நூல்களுக்கு வடநூற் சார்பு கற்பித்துக் கொள்வதே பெருமை எனக் கருதிய இடைக் காலத்தவர், இறந்த ஆரிய அகத்தியரை எழுப்பித் தமிழ் நூற்கே அவரை முழுமுதல் குரவர் என்றெரு கதை கிளப்பித் தமிழ்த் தொல்காப்பியரை ஆரியப் பார்ப்பார் ஆக்கியதோடு அமையாமல் அவரை இல்லா அகத்தியருக்குப் பொல்லா மாணாக்கராக்கி முடித்தார்.[3]

> 'பொருளிலக்கணம் தமிழுக்குத் தனிச் சிறப்பாதலானும், அம் முறையில் வரையறுத்து வடித்தமைத்த வடநூல் முடிபுகள் இன்மையானும், தமிழ் மரபுகள் இன்மையானும், தமிழ் மரபுகள் மொழி வளர்ச்சியின் மெய் வரலாறுகளைக் கருதாமல் உரைகாரர் தத்தமக்குத் தோன்றியவாறு வடநூல் முடிபுகளை வலிந்து புகுத்தி இந்நூலொடும் தம்முள் மாறுபட்டு வெவ்வேறு பொருள் கூறி மயங்க வைத்த பெற்றியையும் உற்று நோக்க ஓரளவு வெளியாயிற்று.[4]

எனவே இருபதாம் நூற்றாண்டின் உரை முயற்சி தொல் காப்பியரைத் திராவிடத் தமிழ்க் கண்கொண்டு நோக்குவதற்காக உண்டாகியது. இம்முயற்சியில் குறிப்பிடத்தக்க உரையாசிரியர் பாரதி ஆவர். இப்போக்கில், இக்காலத்து எழுந்த நூலாசிரியர் பலர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் டாக்டர் சி. இலக்குவனார் ஆவார்.

குழந்தை உரை

பிராமணர் அல்லாதார் இயக்கமே நீதிக்கட்சியாக வடிவம் எடுத்தது. நீதிக் கட்சியைச் சார்ந்தே சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியன தோன்றின. இவ்விரண்டும் பெரியார், ஈ. வே. ரா. வை மையமாகக் கொண்டு வளர்ந்தன. அடிப் படையில் நீதிக்கட்சிக்கும், பெரியார் இயக்கங்களுக்கும் ஊடே வேறுபாடுகள் இல்லை. எனினும் முன்னது கடவுள் மறுப்பு, கோயில் மறுப்பு, பத்திச் சடங்கு மறுப்பு என்பவற்றைக் கொள்கை களாகக் கொண்டிருக்கவில்லை. பெரியார் இயக்கங்கள், இம் மூன்றையும் தலையாய கொள்கைகளாகக் கொண்டு முழங்கின. பெரியார் இயக்கங்களில் ஈடுபட்டுப் பகுத்தறிவுப் பாசறையில் பயிற்சி பெற்ற புலவர் குழந்தை தொல்காப்பியத்தைப் பகுத்தறிவு பார்வையில் பார்க்க விழைந்தார். அவர்தம் விழைவு, அவரே ஒரு பேருரை எழுதக் காரணமாக இருந்தது. அவர்தம் இயக்கச் சார்பும் உரையில் படிந்தது.

தொல்காப்பிய உரையாசிரியர்கள்

தொல்காப்பிய விருத்தியுரை

தொல்காப்பியத்திற்கு முதல் உரையாசிரியர் இளம். என்பர் சிலர்.[5] அவர் கருத்துச் சரியன்று. இளம்பூரணரே, தமக்கு முற் பட்ட தொல்காப்பிய உரைகளையும், உரையாசிரியர்களையும் சுட்டு கின்ற இடங்கள் சில அவர்தம் உரையிலேயே உள்ளன. அவ்விடங் களாவன :

1	ஒரு திறத்தர்	எழுத்து 57, சொல். 455
2	பிற நூல்	எழுத்து. 8
3	ஒருசார் ஆசிரியர்	சொல். 57, 455, 456 பொருள். 449, 535
4	இரு திறத்தர்	சொல். 122, 421
5	என்பாரும் உளர்	சொல். 130
6	உரைப்பாரும் உளர்	சொல். 443
7	இதுவும் ஒரு கருத்து	சொல். 447
8	பிற நூலாசிரியர் உரைப்பர்	சொல். 448
9	காட்டுவாரும் உளர்	பொருள். 456
10	உரை அன்று என்பார் உரைக்குமாறு	பொருள். 2

இவை அனைத்தையும் (பதினெறு இடங்கள்) இளம்பூரணத்திற்கு முன் வழங்கிய வாய்மொழி உரைகள் என்று ஒதுக்குதற்கு இல்லை. இளம்பூரணத்திற்கு முன்பே, தொல்காப்பியத்திற்கு விருத்தி உரை ஒன்று இருந்தது என்பது யாப்பருங்கல விருத்தி உரையால் அறிய வரும் உண்மையாகும். அவ்வுண்மையாவது :

> அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
> இசையிடன் அருகும் தெரியுங் காலை'

> எனத் தொல்காப்பியத்துள் இன்ன இடத்துக் குறுகும் என்று யாப்புறுத்துக் கூறிற்றில்லையேனும் உரையில் கோடல் என்னும் உத்தி பற்றி 'வகரத்தின் பின் மகரம் குறுகும்' என்று விருத்தியுள் விளங்கக் கூறினர். அது போலக் கொள்க.'

என்பது யாப்பருங்கல விருத்தி மேற்கோள். இதனால் தொல் காப்பியத்திற்கு விருத்தி உரை ஒன்று இருந்தமை தெளிவாம்; அவ்விருத்தியுள் வகரத்தின் பின் மகரம் குறுகுவது பற்றி விளக் கப்பட்டிருந்தது என்பதும் விளக்கமாம். அவ்விருத்தி உரை, யாப்பருங்கல விருத்தியுள் மேற்கோளாகக் காட்டப் பட்டதால் அறியலாம். யாப்பருங்கல விருத்தியுரைகாரர் காலம் கி.பி. 985-1014 ஆகும் இளம்பூரணர் உரை, விருத்தி உரைக்குப் பிற்பட்டது. எனவே, இளம்பூரணருக்கு முன், யாப்பருங்கல விருத்தி உரையாளர்க்கு முன் தொல் காப்பிய விருத்தி உரை ஒன்று வழங்கியது என்பது இதனால் துலக்கமுறும்.

இளம்பூரணர்

தொல்காப்பியம் (பொருளதிகாரம்) இடைக்காலத்தில் மறை வுண்டது. மதுரைப் பாண்டிய வேந்தன் பொருளதிகாரம்

இல்லையே என்று ஏங்கினன் என்பதும் அவன் ஏக்கத்தை நீக்க இறையனார் களவியலை இயற்றித் தந்தனர் என்பதும், நக்கீரனார் களவியலுக்கு உரை எழுதினர் என்பதும் அக்காலத்தில் தொல் காப்பியம் வழக்கத்தில் இல்லை என்பதைக் குறிப்பாகத் தெரியப் படுத்தும். தமிழ்நாடு முழுமையிலும் இளம்பூரணரது பொருளதி காரஉரை ஏடு ஒன்றே ஒன்றுதான் இருந்தது என்ற செய்தியும், தொல்காப்பியம் பொருளதிகாரம் மறக்கப்பட்ட, மறைக்கப்பட்ட செய்தியை உறுதிப்படுத்தும்.

இளம். இச்சூழலிலேயே தொல்காப்பியத்தைக் கண்டறிந்து, பலமுறை பயின்று, உரை இயற்றினராதல் வேண்டும். கி.பி. பதினோராம் நூற்றாண்டு அளவில், மறைந்து கிடந்த தொல்காப் பியத்தை உரையுடன் அறிமுகப்படுத்திய பெருமை இளம்பூரண ரையே சேரும். தொல்காப்பியத்தைக் கண்டு அந்நூல் முழுமைக் கும் உரை இயற்றியவர் என்பதால், பின் வந்தோர், இவரைப் பெயர் சொல்லிக் குறிப்பிடாது (உரையாசிரியர்) என்றே குறிப் பிட்டுப் போற்றினர். சேனாவரையர், நச்சர், போன்ற உரை காரர்கள் இவரை மதித்துப் போற்றுவது இவர்தம் சான்றாண்மை யைத் துலக்குவதாம். 'உரை ஆசிரியர் ஆகிய இளம்பூரண அடி கள்' என்பர் அடியார்க்கு நல்லார்.[6] நன்னூலுக்கு உரை எழுதிய மயிலைநாதர், 'இளம்பூரண ஆசிரியர்' (366) என்றும், 'ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம். எனும் ஏதமில் மாதவர்' (359) என்றும் இளம்பூரணரைப் புகழ்ந்து எழுதுவர்.

இளம்பூரணர்தம் காலம்

அடியார்க்கு நல்லார், இளம்பூரணரைக் குறிப்பிட்டுப் போற்று வதால், இளம்; அடியார்க்கு நல்லார்க்கு முற்பட்டவர் எனத் தெரிகிறது. அடியார்க்கு நல்லாரின் காலம் கி.பி. 11ஆம் நூற் றாண்டு. எனவே, கி.பி. 11 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் இளம். எனலாம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட புறப்பொருள் வெண்பாமாலை தமிழ்நெறி விளக்கம் என்பவற்றை இளம். எடுத்தாளுவர். எனவே, கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிற் குப் பிற்பட்டவர் என்று கூறலாம். கி.பி. ஒன்பதாம் நூற்றாண் டிற்கும், பதினொன்றாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவர் இவர். எழுத்ததிகாரத்தில் (248) 'பரணியாற் கொண்டான்' என எடுத் துக் காட்டு மொழிவர். இக்குறிப்புப் பரணி இலக்கியத்தை மனத் துள் கொண்டு மொழிந்தது ஆகலாம். முதற் பரணி இலக்கிய வீர ராசேந்திர சோழன் மீது பாடப் பெற்றது. அவன் காலம் கி.பி. பதினோராம் நூற்றாண்டு. மன்றல் எட்டுப் பற்றி இவர் விளக்கு வது யாப்பருங்கல விருத்தியின் எதிரொலி போன்றுளது. யாப்

பருங்கல விருத்தியின் காலம் கி.பி. 1010-40. எனவே இளம்: தம் காலமும் அதனை ஒட்டிய பதினேராம் நூற்றாண்டின் பிற் பகுதியாம்.[7]

இளம்பூரணர் உரை முறை

இளம். உரை எளிமையானது; இனிமையானது. பதப்பொருள் எழுதி, விளக்கம் தருவது இவர்தம் இயல்பு. வேண்டிய இடங்களில் சொல்லிலக்கணமும், சொல்விளக்கமும் எழுதுதல் இவர் பாங்கு.

இளம்பூரணர் உரைச் சிறப்பு

எளிமையும், நேர்ப் பொருள் கூறலும் இவர்தம் சிறப்புகள் எனல் வேண்டும். தொல்காப்பிய விதிகட்கு ஏற்ப, இலக்கிய வழக்கங்களை அன்றைய நிலையில் அறிந்து, எடுத்துப் போற்ற இவர் பெரும்பாடு பட்டவராதல் வேண்டும். அகநானூறு (19 இடங்கள்) ஐங்குறுநூறு (19), ஐந்திணை ஐம்பது (2), கலித்தொகை (26) குறுந் தொகை (9), சிலப்பதிகாரம் (2), சிற்றட்டகம் (5), திருக்குறள் (4), நற்றிணை (7), புறநானூறு (1). புறப்பொருள் வெண்பாமாலை (5) என அகத்திணை உரையின் கண்ணும், ஆசிரியமாலை (1), கலித் தொகை (2), களவழி (2), சிலப்பதிகாரம் (1), தகடூர் யாத்திரை (1), திருமுருகாற்றுப்படை (2), திரிகடுகம் (1), திருக்குறள் (37), நாலடியார் (6), பதிற்றுப்பத்து (9), பழமொழி (1), பன்னிரு படலம் (1), பிங்கல நிகண்டு (1), புறநானூறு (91), புறப்பொருள் வெண்பாமாலை (78), பெரும்பாணாற்றுப்படை (1), மதுரைக்காஞ்சி (1) மலைபடுகடாம் (1), முத்தொள்ளாயிரம் (4), முல்லைப்பாட்டு (1), யாப்பு (2), எனப் புறத்திணை உரையின் கண்ணும் இவர் மேற் கோள் காட்டுவர். இவற்றால் இவர்தம் இலக்கிய இலக்கண ஆழ் புலமை புலப்படும். பின்னே வந்த உரையாசிரியர்கள், இளம். எடுத்துக்காட்டியவற்றையே பெரிதும் தழுவி உரை இயற்றினர்.

நச்சினார்க்கினியர்

இலக்கிய, இலக்கணம் என்ற இரண்டனையும் கற்றுத் துறை போகிய அறிஞர் இவர். இருதிற நூல்களுக்கும் உரை எழுதியவர். தொல்காப்பியம், பத்துப்பாட்டு. கலித்தொகை, குறுந்தொகை, சிந்தாமணி ஆகியவற்றிற்கு இவர் உரை எழுதினர். தம் உரை களுள், தம் இலக்கியப் புலமையையும் இலக்கணப் புலமையும் வெளிப்படுத்தினர். இவர் பல நூல்களையும் கற்றவர் என்பதால் 'நச்சினார்க்கினியன் எச்சில் நறுந்தமிழ்' என்றே தமிழறிஞர் புகழ்ந்து மொழிந்தனர்.

நச்சினார்க்கினியர் காலம்

அநபாயன் என்ற சோழனது பட்டப்பெயரை இவர் தம் உரையில் குறிப்பர். (எழுத்து 482), அப்பட்டத்திற்குரிய சோழ

மன்னன் இரண்டாம் குலோத்துங்கன் ஆவன். அவனது காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு. எனவே இந்நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் இவர் எனத் தெரிகிறது. கி.பி. 13 ஆம் நூற்றாண்டினரான நன்னூல் பவணந்தியை இவர் பின்னூலார் எனக் குறிப்பர். கபர்த்தி காரிகைச் சூலோகத்தைச் சிந்தாமணி உரையில் (2463) எடுத்துக் காட்டுவர். கபர்த்தியின் புதல்வர் மல்லிநாத சூரியின் காலம் கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டு. நன்னூற் கருத்தைக் கூறும் பேராசிரியரை இவர் குறிப்பர். இக்குறிப்புகளால், இவர் கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் அஃதாவது ஏறத் தாழக் கி.பி. பதினான்காம் நூற்றாண்டினர் இவர் எனலாம்.[8]

நச்சினார்க்கினியர் உரை முறை

நூற்பாவின் ஒவ்வொரு சொல்லிற்கும் இவர் உரை காண்பர்; இவர் பார்வையில் இடைச் சொற்களும் விடுபெறுவது இல்லை. ஒவ்வொரு நூற்பாவிற்கும் முறையே கொளு எழுதி, பொதுப் பொருள் எழுதி, விளக்கவுரை தருதல் இவர்தம் முறை. தேவைப்படும் இடங்களில் எல்லாம் எடுத்துக்காட்டு இலக்கியங்களையும் பொருந்த உரைப்பதில் வல்லவர் இவர்.

நச்சினார்க்கினியர் உரைச் சிறப்பு

இவர்தம் இலக்கண உரைகளில் இலக்கிய மணம் வீசும்; இலக்கிய உரையில் இலக்கண மணம் வீசும். சங்க இலக்கியங்கள் அனைத்தும் தொல்காப்பிய இலக்கண வழி எழுந்தவை என்பது இவர்தம் அழுத்தமான கருத்து. இவ்வடிப்படையில் புறநானூற்றிற்குப் பிற்காலத்தார் வகுத்த திணை துறை முறைகளை வழு என உரைப்பர்.

> 'தத்தம் புதுநூல் வழிகளால் புறநானூற்றிற்குத் துறை கூறினரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூல் ஆகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூற வேண்டும் என்று உணர்க'

என்பது அவர்தம் ஆணை.[9] மதுரைக் காஞ்சி, மலைபடுகடாம் (14), முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, கலித்தொகை என்பவற்றின் உரைகளைத் தொல்காப்பியப் பார்வையிலேயே இவர் எழுதினர்.

இலக்கிய, இலக்கண அடிகளைத் தம் நடையுடன் செறித்துக் கொள்வர். இலக்கியங்கள் பலவற்றைக் கற்றவர். மற்ற உரைகாரரினும், இவர் காட்டும் இலக்கியச் சான்றுகள் மிகுதி. மேற்

கோள் விளக்க அட்டவணை, நச்சர்தம் தனி மாண்பைப் புலப் படுத்தும். (பார்க்க அட்டவணை 1-5)

டாக்டர் சோமசுந்தர பாரதி

பாரதி, நெல்லைத் தமிழர். 27-7-1879 இல் எட்டயபுரத்தில் பிறந்தவர். மாகவிஞர் பாரதி உடன் பழகிய தோழர். இளமை முதலே தமிழாற்றல் வாய்க்கப் பெற்றவர். தன்மானத் தமிழர். திருநெல்வேலியிலும், சென்னையிலும் பயின்று பி. ஏ; பி. எல்; பட்டமும் பின்னர்த் தனியே பயின்று எம். ஏ., பட்டமும் பெற் றவர். (1913). சட்டம் பயின்ற பாரதி, தூத்துக்குடியில் வழக் குரைஞராய்ப் பணியாற்றினர். வ. உ. சிதம்பரம் பிள்ளையின் கப்பல் கழகத்திலும் பணியாற்றினர். காங்கிரசு இயக்கத்தில் பெரும் பங்கு கொண்டனர். காந்தியைத் தமிழகத்திற்கு வர வழைத்தனர். தீண்டாமையையும், சாதீயத்தையும் ஒழிச்சப் பெரும்பாடுபட்டனர். 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்' 'மாரிவாயில்' போன்ற அரிய நூல்களைப் படைத்தனர். இவர்தம் தமிழறிவையும், தமிழார்வத்தையும் கண்ட அண்ணமலை அரசர், இவரை அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக அமர்த்தினர். 1933-1938வரை, தமிழ்த்துறைத் தலைவராகப் பணி யாற்றிய போது, இவர் எழுதிய குறிப்புகளே, பின்னர்த் தொல் காப்பியப் பொருட் படலப் புத்துரைகளாக வெளிவந்தன.

பாரதி உரை முறை

நூற்பாவிற்கு நேரிய முறையில், எளிய தமிழில் உரை காண்பர். கருத்து, பொருள், குறிப்பு என மூன்றுகப் பாகுபடுத்தி உரை எழுதுதல் இவர் பாங்கு. குறிப்பு என்ற பிரிவில், தம் கருத்தை எல்லாம் இவர் குவிப்பர்.

பாரதி உரைச் சிறப்பு

பண்டைய உரைகாரர் கூறியவற்றிற்கு மாறுகப் புதுப் பொருள் கூறியவர்; புது விளக்கம் அளித்தவர். சிறப்பாக, ஆரிய, வேத, வருணசிரம அடிப்படையில் உரைக்கப்பட்ட முன்னைய உரைகளைக் குறிப்பாக நச்சர். உரையைத் தக்க சான்றுகளுடன் இவர் மறுப்பர்.[10] முன்னையோர் காட்டிய எடுத்துக் காட்டு களையே மீண்டும் மீண்டும் காட்டாமல் புதுவதாக எடுத்துக்காட்டு நல்குவர். இவர்தம் எடுத்துக் காட்டில் குறுந்தொகை தலைமை பெற்று நிற்பதை மேற்கோள் விளக்க அகராதி காட்டும். (பார்க்க அட்டவணை 1—5)

அட்டவணை 1

உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டிய இலக்கண, இலக்கியங்கள்

அகத்திணை இயல் உரை

(எண்கள் : எத்தனைமுறை என்பதைக் காட்டும்)

உரையாசிரியர்கள்	அகநானூறு	இறையனார்	இளம். உரை	ஐங்குறுநூறு	ஐந்திணை ஐம்பது	கந்தபுராணம்	கம்பராமாயணம்	கலித்தொகை	குறுந்தொகை	கூன்பாட்டு	சிலப்பதிகாரம்	சிற்றட்டகம்	சிவகசிந்தாமணி	தகடூர் யாத்திரை	திணைமாலை	திணைமொழி	திருக்குறள்	திருச்சிற்றம்பலக் கோவை
இளம்பூரணர்	19	—	—	19	2	—	—	26	9	—	1	5	—	—	5	—	4	—
நச்சினார்க்கினியர்	78	3	—	66	—	—	—	77	28	1	1	2	—	1	5	—	3	—
சோமசுந்தர பாரதி	28	—	12	27	1	1	2	45	68	—	7	1	2	—	6	2	10	1
புலவர் குழந்தை	7	—	—	5	—	—	—	16	2	—	1	—	—	—	—	—	4	—

அட்டவணை 2

உரையாசிரியர்	திருமுருகாற்றுப்படை	கோவை	தொல் - அகத்	தொல் - புறத்	தொல் - பொது	தொல் - பாயிரம்	நச்சர் - உரை	நற்றிணை	பட்டினப்பாலை	பதிற்றுப்பத்து	பழம்பாடல்	புறநானூறு	ப.வெ. மாலை	மணிவாசகர் கோவை	மதுரைக் காஞ்சி	மலைபடுகடாம்	முல்லைப் பாட்டு	மொத்து
இளம்பூரணர்	—	—	4	1	2	—	—	7	—	—	—	—	5	—	—	—	—	30
நச்சினார்க் கினியர்	—	—	28	1	26	1	—	24	1	1	—	7	2	—	—	—	—	35
சோமசுந்தர பாரதி	1	1	47	3	11	—	11	55	1	1	—	—	1	1	2	7	1	34
புலவர் குழந்தை	—	—	9	—	7	—	—	—	—	—	1	6	—	—	1	—	—	1

அட்டவணை 3

புறத்திணை இயல் உரை

உரையாசிரியர்கள்	அகநானூறு	ஐங்குறுநூறு	இளம்பூரணர் உரை	இறையனார்	உரைச்சூத்திரம்	கம்பராமாயணம்	கலித்தொகை	கனவழி	குறிஞ்சிப்பாட்டு	குறுந்தொகை	சிலப்பதிகாரம்	சிறுபாண்	சிறு. பஞ்சமூலம்	சிவக சிந்தாமணி	தஞ்சைவா. பாத்திரை	திருமுருகாற்றுப்படை	திரிகடுகம்	திருக்குறள்
இளம்பூரணர்	1	1	—	—	—	—	2	1	—	—	1	—	—	—	1	2	1	37
நச்சினார்க்கினியர்	11	—	—	1	7	—	10	1	1	1	8	1	—	—	9	2	1	35
சோமசுந்தர பாரதி	2	2	2	—	1	4	3	1	—	—	23	—	2	5	1	1	1	16
புலவர் குழந்தை	2	—	—	—	—	—	—	—	—	—	2	—	—	—	4	—	—	17

அட்டவணை 4

உரையாசிரியர்கள்	தொல். அகத்	தொல். புறத்	தொல். பொது	தொ. காலத் தமிழ்	நச்சர். உரை	நல்வழி	நற்றிணை	நாலடியார்	நீதிநெறி விளக்கம்	நெடுநல்வாடை	பட்டினப்பாலை	பதிற்றுப்பத்து	பழம்பாட்டு	பழமொழி	பன்னிருபடலம்	பாரதம்	பிங்கல நிகண்டு	புறத்திரட்டு	புறநானூறு
இளம்பூரணர்	2	1	6	...	...	...	...	6	...	...	...	9	...	1	1	...	1	...	91
நச்சினர்க்கினியர்	2	2	1	...	...	...	...	4	...	1	1	24	...	1	...	9	...	34	142
சோமசுந்தரபாரதி...	4	...	...	7	...	1	...	...	2	2	16	9	1	...	2	...	14	104
புலவர் குழந்தை	6	10	24	1	1	1	...	...	1	...	...	6	2	...	...	7	...	40	43

உரையாசிரியர்கள்	பு. வெ. மாலை	பெருங்கதை	பெரும்பாண்	பெ. பொ. வினக்கம்	பெ.பொ. புறத்திரட்டு	பொதுவியல். குழந்தை	பொருநராற்றுப்படை	மதுரைக் காஞ்சி	மலைபடுகடாம்	முத்தொள்ளாயிரம்	முல்லைப்பாட்டு	யாப்பருங்கலம் மேற்கோள்	வெற்றி வேற்கை	பொது
இளம்பூரணர்	78	...	1	..	...	...	...	1	1	4	1	2	...	4
நச்சினர்க்கினியர்	21	...	...	11	1	...	4	1	1	8	1	...	...	111
சோமசுந்தரபாரதி	3	1	6	5	...	...	3	6	...	9	1	...	...	18
புலவர் குழந்தை	9	...	...	1	...	7	1	...	...	3	...	...	1	82

புலவர் குழந்தை

1.7.1906 இல், முத்துசாமிக் கவுண்டருக்கும், சின்னம்மை யாருக்கும் கோவை மாவட்டம் ஒலவலசு என்னும் ஊரில் பிறந்த இவர், 25.9.1972 இல் மறைந்தனர். தமிழர் சிறப்பினைக் கூறும் தனித்தமிழ்க் காப்பியமான இராவண காவியம், அரசியலரங்கம், நெருஞ்சிப் பழம், காமஞ்சரி போன்ற பாவிய நூல்களையும், யாப் பதிகாரம், தொடையதிகாரம் போன்ற இலக்கண நூல்களையும், தொல்காப்பியர் காலத் தமிழர், தமிழக வரலாறு, கொங்குநாடு போன்ற வரலாற்று நூல்களையும் திருக்குறள் உரை, தொல் காப்பிய உரை போன்ற உரை நூல்களையும் நல்கிய அறிஞர் குழந்தை. பண்டைய உரைகள் 'இக்காலத் தமிழ் மக்கள் யாவரும் எளிதிற் புரிந்து கொள்ள முடியாத அத்தகு நிலையில் உள்ளமையால், இக்காலத்திற்கேற்ற முறையில் தொல்காப்பியத் திற்கு ஓர் உரை தேவை என்பது தமிழ் மக்கள் விரும்புவதொன்று கும். தமிழ் மக்களின் அவ்விருப்பத்திற்கேற்ப, அத்தகு முறையில் 'எழுநூறு ஆண்டுகட்குப் பின்னர் எழுந்ததே ஆகும் குழந்தை உரை என்னும் இவ்வுரை ' என்பது அவர்தம் முகப்புரை. 1924 முதல் 1962 முடிய 32 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினர். சிறந்த பாவலர்; இலக்கண அறிஞர்; வரலாற்றாளர்; ஆராய்ச்சி அறிஞர். பெரியார்தம் சுயமரியாதை இயக்கத்தினர்.

புலவர் குழந்தை உரை முறை

நூற்பாக்களுக்கு எளியமுறையில் பதப்பொருள் செய்வர். தொடர்ந்து அரிய பதங்களை விளக்குவர். விரிந்த செய்திகளை வகை தொகைப்படுத்தி வழங்குவர்.[11]

குழந்தையின் உரைத்திறன்

ஆரிய வேத வருணசிரம மறுப்பும், கடவுள் வழிபாட்டு மறுப் பும், நாத்திக நோக்கும் இவர்தம் உரையின் சிறப்பியல்புகள். பெரும்பாலும் நச்சினார்க்கினியரைத் தழுவியே இவர்தம் உரை இயற்றப்பட்டுள்ளது. ஆதலின் பாரதியைப் போலப் புதுமை உரையாளர் என்று கூறற்கு இல்லை.

வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை உரை

திருநெல்வேலி மாவட்டம் இராயகிரி என்ற ஊரினர்; முத்துப் பிள்ளை, செல்லம்மை என்பாருக்கு 26.3.1903 இல் பிறந்து 24.4.1973 இல் மறைந்தவர். இளமையில் அருணாசலக் கவிரா யரிடம் தமிழ் இலக்கண, இலக்கியம் கற்றவர். தாம் பயின்ற கல்லூரியிலேயே ஆருண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றி

யவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துத் தமிழ்ப் பேராசிரியராக ஓய்வு பெறும்வரை உழைத்தவர்; சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் முதல்வராகத் தேர்ந்து ரூ. ஆயிரம் பரிசு பெற்றவர். தமிழிசை இயக்கத்திற்காகப் பெருந் தொண்டாற் றியவர். செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், சித்தாந்தம், ஞான சம்பந்தம் முதலான இதழ்களிலும், மலர்களிலும் அரிய கட்டுரைகளை எழுதியவர். தொல்காப்பியம் அகத்திணை இயல் உரை வளம் என்ற நூலை ஆக்கியவர்.

அருணாசலம் பிள்ளையின் உரை முறை

தொல்காப்பிய உரைவளம் என்ற நூலில், இளம்., நச்சர்., பாரதி ஆகியோர் உரையைக் கூறி இறுதியில் ஆய்வுரை எனும் தலைப்பில் இவர்தம் உரை அமைந்துள்ளது. கொளுவைக் கூறி நூற்பாவின் பொருளைக் கூறி, விளக்கம் உரைப்பது இவர் பாங்கு. எல்லா நூற்பாக்களுக்கும் ஆய்வுரை — பதவுரை இவர் எழுதுதல் இல்லை.

அருணாசலம் பிள்ளையின் உரைத்திறன்

நூற்பா வைப்பு முறையை இவரைப்போல ஆராய்ந்தார் எவரும் இலர். ஒரு நூற்பாவிற்குப் பொருள் உரைக்கும் போது, அதற்கு முன்னும் பின்னும் உள்ள நூற்பாவின் போக்கைக் கணித்த பின்பே இவர்தம் உரை, பொருந்த எழுதப் பெறும். கூர்த்த பார்வையால் இடம் பிறழ்ந்த நூற்பாக்களும் இவரால் கண்டறியப் பட்டன. சங்க இலக்கிய ஆட்சி, தமிழர் பண்பாடு ஆகியவற்றை உளத்துள் அமைத்தே உரை எழுதுவர். நடுவு நின்று, தொல்காப்பியர் காலப் பார்வையுடன் உரை வரைகுவர். முன்னையோர் மேற்கோள்களையே போற்றினமையால், இவர், நூற்பாத் தோறும் விரிந்த பாடல்களை நல்கவில்லை.

குறிப்புகள்

1 தொல். நச்சினார்க்கினியர் உரை (நச்சர்). பொருளதிகாரம் (பொருள்) நூ. 82 டாக்டர் சோமசுந்தர பாரதியார் பாரதி தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை ப. 190, 191.

2 சுநீத் குமார் சட்டர்சி, ஆரியர் - திராவிடர். ஆராய்ச்சி இதழ் மலர் 3; இதழ் 1. ப. 83.

3 பாரதி, மெய்ப்பாட்டியல். ப. 13.

4 மே. நூ. ப. 15
5 அருணாசலம் பிள்ளை, மு., த. இ. வ. 11 ஆம் நூ. ப. 205.
6 சாமிநாதையர், உ. வே. பதிப்பு. சிலப்பதிகாரம் (1927) வேனிற் காதை அடி. 1-2; ப. 230.
7 அறவாணன், க. ப. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை, ப. 351.
8 அருணாசலம் பிள்ளை, மு. த. இ. வ. 14 ஆம் நூ ப. 121.
9 புறத்திணை இயல், நச்சர் உரை: கொடுப்போர் ஏத்தி. நூ. 35.
10 பாரதி, அகத். ப. 86, புறத். ப. 190 - 192.
11 புலவர் குழந்தை உரை, வைப்புமுறை. ப. 190-192.

தொல்காப்பிய
உரை வேறுபாடுகள்

5

தொல்காப்பிய உரை வேறுபாடுகள்

தொல்காப்பிய உரைகளின் வேறுபாடு தோன்றக் காரணங்கள்

உரை வேறுபாடு தோன்றுதற்குப் பொதுவான காரணங்கள் சில இருப்பினும் தொல்காப்பிய உரை நோக்கில் சில சிறப்புக் காரணங்களும் உள. அவை மூல நூலாசிரியரையும், உரையாசிரியரையும் ஏடு பெயர்த்தெழுதுவோரையும் சார்ந்து தோன்றின ஆதல் வேண்டும். ஆக மூன்று அடிப்படையில் உரை வேறுபாடுகள் தோன்றின. அம் மூன்று அடிப்படைகளாவன:

மூல நூலாசிரியர்தம் சொல்லாட்சி
உரையாசிரியர்தம் நோக்கும் போக்கும்
ஏடு பெயர்த்து எழுதுவோர் கவனக் குறைவு.

மூல நூலாசிரியர்தம் சொல்லாட்சி

தொல்காப்பியர் ஆளும் சொற்களில் சில, பல பொருளின வாக இருத்தல்; தொகை எண்களே ஆளுதல்; பொருள் மயக்க முள்ள கலைச் சொற்களே ஆளுதல்; வரையறுத்து நுதலிப் புகாதிருத்தல்; தெளிவற்ற சுட்டுச் சொல்லே ஆளுதல் ஆகியன உரையாசிரியர் வேறுவேறு பொருள் காணக் காரணங்களாம்.

பல பொருள் சொல்லாட்சி

'தொல் எயிற்கு இவர்தல்' என்பது உழிஞைத் திணைத் துறைக் குறியீடு (நூற்பா.68). இக்குறியீட்டில் உள்ள 'இவர்தல்' என்ற சொல்லை ஒட்டி உரை வேறுபாடு விரியும். ஆசை, ஆசைப் பெருக்கம் எழுச்சி, ஏறுதல், செல்லல், செறிவு சேறல், நடத்தல், படர்தல், பரத்தல், விரும்பல், உயர்தல், செல்லுதல், உலாவுதல், செறிதல், பாய்தல், பொருந்துதல், மேற்கொள்ளுதல், விரும்புதல், ஒத்தல், எழும்புதல், கலத்தல், அடைதல் என இருபத்து மூன்று பொருள்கள் 'இவர்தல்' என்ற சொல்லிற்கு உள.[1] இவ்வாறு வழங்கும் பல பொருள், உரையாசிரியர் இடையே வேறுபாட்டிற்கு மூலம் ஆகும். இளம்., 'பரத்தல்' எனப் பொருள் கண்டு விளக்கினர்; நச்சர் விருப்பம் செய்தல்' என உரைத்தனர் குழந்தை 'எண்ணுதல்' எனப் புகன்றனர்; பாரதி, 'ஏறுதல்' என; எழுதினர். இது போன்றே 'முற்றிய அகத்தோன் 'வீழ்ந்த' என் பதில் வீழ்ந்த (69) என்ற பல பொருள் ஒரு சொல், பொருள் வேறுபாட்டிற்கு இடனுயிற்று. இவை போன்றே புடைகெடப் போகிய செலவு (61), கொற்ற வள்ளை (65), முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும் (66), 'இருநிலம் தீண்டா அருநிலை'(71), பாழி கொள்ளும் ஏமம் (72) முதலாயின, பல பொருளின என் பதால் வேறுபாடு தோன்றின.

தொகை எண்களை ஆளுதல்

தொல்காப்பியர் விரித்துப் புகலாமல் ஆளும் எண் தொகைச் சொற்கள் அனைத்தும் பொருள் வேறுபாட்டிற்குத் தலைமைக் காரணங்கள் ஆயின. 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' (74) 'ஐவகை', 'இருமூன்று', 'நால்வர்', 'நான்கு' போன்ற எண்ணுக் குறியீடுகள்,[2] தொல்காப்பிய நூலுள் விளக்கப்படாமல் ஆளப் படுதலால் உரையாசிரியர் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ப உரை விரிக்கக் காரணமாயின. எண்ணுத் தொகைக் குறியீடுகள் அனைத் தும் பொருள் வேற்றுமைக்கு உள்ளாயின.

பொருள் மயக்கமுள்ள கலைச் சொற்களை ஆளுதல்

'தொகைநிலை' எனும் துறை உழிஞைத்திணை (69) யிலும், தும்பைத்திணை (72)யிலும் ஆளப்படும் குறியீடாகும். பொருள் தெளிவற்ற குறியீடாக இது அமைந்தது. அமையவே, 'அவிந்த படி அடைதல்' எனப் பொருள் செய்தனர் இளம். 'வருக எனத் தொகுத்தல்' என உரை விரித்தனர் நச்சர். 'தோற்றோர் தொகுதி' என விளக்கினர் பாரதி. இவ்வாறே அடியோர் பாங்கு (25) என் பது போன்ற தொடர்களும் பலவேறு விளக்கங்கள் பெற்றன.

வரையறுத்து நுதலிப் புகாதிருத்தல்

அகம், புறம், திணை, கருப்பொருள், உரிப்பொருள் போன்ற சொற்களைத் தொல்காப்பியர் ஆளுவர். ஆனால், அகம் என்றால் என்ன? திணை என்றால் என்ன? என்பனவற்றை வரையறை செய்ய வில்லை. புறத்திணை ஒவ்வொன்றும் தெளிவான வரையறையைப் பெற்றமை போல, அகத்திணைகள், நூலாசிரியரால் விளக்கப்பட வில்லை. இதனால், அகம் என்பதை இளம். ஒரு வகையில் விளக்க நேர்ந்தது; நச்சர் பிறிதொரு வகையில் விளக்க நேர்ந்தது; திணை யும் இவ்வாறு வேறு வேறு விளக்கம் பெற்றது. ஒவ்வொரு கலைச் சொல்லையும் ஆளும் போது அச்சொல்லை முதலில் விளக்காமல், அதன் வகைகளை விரித்துரைப்பது தொல்காப்பியர் பாணி. வகை களில் இருந்தே வரையறையை உய்த்துணர வேண்டியுள்ளது. அகம் பற்றிய முதல் நூற்பாவில் 'கைக்கிளை முதலா எழுவகை' என்பது விளக்கப்பட்டதே தவிர, அகம் என்றால் என்ன என்பது விளக்கப்படவில்லை. கைக்கிளை, பெருந்திணை என்பனவற்றிற்கும் வகைகள் கூறப்பட்டனவே ஒழிய, அவற்றின் வரையறைகள் கூறப் படவில்லை. இதனால், உரைகாரர், தம் நோக்கிற்கும் போக்கிற்கும் ஏற்ப, நூற்பாவை விளக்கி வேறுபட்டனர். தொல்காப்பியர் காலத்துக் கலைச்சொல்லின் பொருளும் வரையறையும் வெளிப் படையாகப் பல்லோரும் அறிய இருந்தமையால், கலைச்சொல்லை விளக்க முயலாமல், வகுத்துரைப்பதில் முயன்றனர் போலும். தற்காலத்து மிதிவண்டி பற்றி விளக்க வரும் ஒருவர், மிதிவண்டி என்றால் என்ன என்று விளக்காது, மிதிவண்டியின் வகைகளைக் கூறுதல் இயல்பன்றே?

தெளிவற்ற சுட்டுச் சொற்களை ஆளுதல்

வாகைத்திணையில் 'அனைநிலைவகை' (74) எனும் ஒரு துறை யைத் தொல்காப்பியர் குறித்தனர். 'அவ்வெழு கூற்றால், துறை பல திரண்ட தொகை பெற்றது. அவ்வாகைத்திணை' என்று உரைப்பர் நச்சர். 'அவ்வாறே அவ்வறுவர் கீழிருந்து அத்தொழில் களைப் பயில்வோர் கூறுபாடு, அவர்கள் பயிற்சியைச் சிறப்பித்துக் கூறுதல் என்க. இது 'மாணாக்கர் சிறப்புக் கூறுதல்' என விளக்கு வர் குழந்தை. இவ்வாறே 'ஏனோர் (24,26) என்பதும் பல்வேறு பொருள்பட உரைகாரர்களால் விளக்கம் பெற்றது.

உரை ஆசிரியர் நோக்கும் போக்கும்

மூல நூலைப் பல நூறு ஆண்டுகளுக்குப் பின்பே உரை ஆசிரி யர்கள் நோக்கி ஆய்ந்தனர். கால இடைவெளி, மூல நூலை, நூலா சிரியர் நோக்கில் விளங்கிக் கொள்வதற்குப் பேரிடையூறு ஆகும்.

இவ்விடையூற்றைக் கடந்து, பிறழாமல் உரை காண்பதில் சில அடிப்படைகளை உரையாசிரியர்கள் மேற்கொண்டனர். உரை காரர் ஒவ்வொருவரும் கொண்டிருந்த அடிப்படை நோக்குகள் ஒன்றுபட்டிருத்தல் மட்டும் இன்றி வேறுபட்டும் இருந்தன. இவ் வேறுபாடும், உரை வேறுபாட்டிற்குக் காரணம் ஆயிற்று. தொல் காப்பிய உரைகளை நோக்க, வேறுபாட்டிற்கு அடிப்படைக் காரணங்கள் வருமாறு:

சொல்லைப் பிரிக்கும் முறையால் பொருள் வேறுபாடு

'பகட்டினனு மாவினனும்' என்பது வாகைத் துறைத் தொடர் (75) இத்தொடரை இளம்., 'பகட்டினனும், ஆவினனும்' எனப் பிரித்துப் பொருளுரைப்பர். நச்சர்., 'பகட்டினனும் மாவினனும்' எனப் பிரித்துப் பொருள் செய்குவர்.

சூத்திரத்தைப் பிரித்தலானும், சேர்த்தலானும் பொருள் வேறுபாடு

இளம்.' நச்சர்., குழந்தை., ஆகியோர் உரையை நோக்கும் போது சில சூத்திரங்கள் ஒன்றாக இருப்பதும், இரண்டாகப் பிரிவ தும் பொருள் வேற்றுமைக்குக் காரணங்கள் என்பது துலங்கும்.

'ஊரொடு தோற்றமும் உரித்து என மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான' 83

என இளம் பாடம் கொண்ட நூற்பாவை, நச்சினர்க்கினியரும், குழந்தையும் முதல் ஓர் அடியை ஒரு நூற்பாவாகவும், இரண்டாம் அடியைப் பிறிதொரு நூற்பாவாகவும் பிரித்துப் பொருள் செய்தனர். இவ்வாறு இருவேறு நூற்பா ஆக்கினமையே, பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் ஆயிற்று.

நூற்பா இடப்பெயர்ச்சி பொருள் வேறுபாட்டிற்குக் காரணம்

நூற்பாவின் இடப்பெயர்ச்சியும் பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் ஆகும். ஒரு நூற்பாவின் பொருள், அந்நூற்பாவிற்கு முன்னும், பின்னும் உள்ள நூற்பாவைப் பொறுத்தும் அமையும். மற்றைய நூல்கள் ஒரு புறம் இருக்கத் தொல்காப்பியத்துள் இக்கூறு முதன்மை உடையது ஆகும். அதிகாரம் நோக்கியும் ஒத்து நோக்கியும் நூற்பாவிற்குப் பொருள் செய்யப்படல் இலக்கண நூல்களில் பொது இயல்பு; தொல்காப்பிய நூலின் சிறப்பியல்பு.

'இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்
உரியது ஆகும் என்மனார் புலவர்'

என்ற நூற்பா (13), புணர்தல் பிரிதல் (16) என்ற நூற்பாவை அடுத்திருக்க வேண்டியது. 'பின்பனிதானும் உரித்தென மொழிப (12) என்ற நூற்பாவை அடுத்து இடம் பிறழ்ந்து விட்டதால் நூற்பாவின் பொருளே மாறிவிட்டது. இதனைப் போன்றே 'மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப' (32) என்ற நூற்பாவை அடுத்திருக்க வேண்டிய 'பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே, (35) என்ற நூற்பா, இடப்பிறழ்ச்சியால், பொருள் மாற்றத்தைப் பெற்றது.

> 'ஆசிரியர் நூல் செய்து ஏறத்தாழ ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் கழிந்த பின்னரே, இளம். முதலானோர். இந்நூலுக்கு உரை எழுத முற்பட்டனர். இவர்களுக்கு முன்னர் இந்நூலைக் கற்றோரும் கற்பித்தோரும் கையால் எழுதினோரும் ஆக எத்துணையோ ஆயிரவர் இருந்தனராதல் வேண்டும். அவ்விடைக் காலங்களில், தொல்காப்பிய நூற்பாக்களில் என்னென்ன மாற்றங்கள் நேர்ந்தன என்று முழுதும் நம்மால் இப்பொழுது அறிய முடியவில்லை. என்றாலும், உரையாசிரியர் காலத்திற்கு முன்பே சில பல நூற்பாக்கள் இடம் மாறி எழுதப்பட்டும், கோக்கப் பட்டும் இருந்தன என்று எண்ண இடமிருக்கின்றது; அங்ஙனம் இடமாற்றம் பெற்ற நூற்பாக்களில் 'இருவகைப் பிரிவும்' என்ற நூற்பா 'முதல் எனப்படுவது ஆயிரு வகைத்தே' என்ற நூற்பாவரையுள்ள ஏழு நூற்பாக் களும் அடங்கும்.[5]

சங்க இலக்கிய வழக்கு இல்லை எனில் பொருள் மாற்றம்

பண்டை உரையாசிரியர், தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியத்தையும் மருங்கு வைத்து நோக்குவர். தொல்காப்பிய விதிகளைச் சங்க இலக்கியப் பாக்களுடன் பொருந்த வைத்து உரசிப் பார்ப்பர். தொல்காப்பியக் கூற்றை, இலக்கிய வழக்கு உறுதி செய்யவில்லை எனில், தொல்காப்பிய நூற்பாவிற்கே வேறுபொருள் காண்பர். இதனால், ஒரே நூற்பா பல பொருளைப் பெற நேர்ந்தது. 'முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை' என்பது நூற்பா (37). இந்நூற்பாவிற்கு இளம்., 'கலத்திற் பிரிவு தலைமக ளுடன் இல்லை' என உரை காண்பர். நச்சர்;, இளம் உரையை மறுத்து வேறு பொருள் காண்பர். அவ்வாறு காண்பதற்கு அவர் காட்டும் காரணம்; கடல் வழி கலத்தில் பிரிந்து செல்லல் போன்ற பாடல்கள் சங்க இலக்கியத்தில் இல்லை என்பதாகும்.

> 'பொருள்வயின் பிரிவின்கண் கலத்திற் பிரிவு தலைவியுடன் சேறல் இல்லை. எனவே காலிற் பிரிவு தலைவியுடன் சேறல்

> உண்டு என்று பொருள் கூறுவார்க்குச் சான்றோர் செய்த புலனெறி வழக்கம் இன்மை உணர்க.[4]

என்பது நச்சினார்க்கினியம். 'செலவினும் வரவினும்' எனவரும் கண்டோர் கூற்றுபற்றிய நூற்பாவும், இலக்கிய வழக்கின்மையால் புதுப் பொருள் பெறும்.

ஆரிய எதிர்ப்பு உரை, வேறுபாட்டிற்குக் காரணம்

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குச் சற்று முன்னர் தமிழகத்தில் ஆரிய திராவிட இனப்பிரிவுக் கோட்பாடு அறிமுக மாகிப் பெரிதாகியது. அரசியல், சமூக பொருளியல் உலகில் மேலோங்கி இருந்த அக்கோட்பாடு, இலக்கிய உலகையும் பாதித்தது. அந்தணர், பார்ப்பனர் என்ற முன்னைய இலக்கிய வழக்காற்றுச் சொற்கள் ஒருபக்கம் ஆரிய பிராமணரைக் குறிக்கும் என்று விளக்கப்பட்டன. பிறிதொருபுறம் தமிழகச் சான்றோரைக் குறிக்கும் என்று விளக்கப்பட்டன. இச்சொல் வழக்காறுகள், மிகு பழைய நூலான தொல்காப்பியத்தில் காணப்படுவதால், அவை புதுப்பார்வையில் விளக்கம்பெற்றன.பெறவே,அச்சொற்கள் ஆளப்பட்ட நூற்பாக்கள் புத்துரையைப் பெற்றன. பாரதியார், குழந்தை ஆகியோர் இவ்வடிப்படையில் சில நூற்பாக்களுக்குப் புதுப் பொருள் காணுவர்.

நாத்திகப் பார்வை உரை வேறுபாட்டிற்குக் காரணம்

ஆங்கிலக் கல்வியால் அமெரிக்க இங்கர்சாலின் கருத்துகள் தமிழகத்தில் பரவின. இக்கருத்துகளின் தாக்கத்திற்குத் திரா விடக் கழகம் பெரிதும் உள்ளாகி இருந்தது. குழந்தை, இலக் குவனார் போன்றோர், திராவிடர் கழகம், சுயமரியாதை இயக்க ஈடுபாட்டினர். தம் ஈடுபாட்டிற்குத் தக, தமிழிலக்கிய இலக்கணங் களையும் அன்னோர் விளக்கினர். தொல்காப்பியமும், இப்பார்வை யால், சிற்சில இடங்களில் புத்துரை பெற்றது கடவுள், தெய்வம் பற்றி வரும் நூற்பாக்கள், நாள் நிமித்தம் பற்றிய நூற்பாக்கள் நாத்திகப் பார்வையால் வேறு உரை பெற்றன. காஞ்சித்திணை யில் 'பேய்க் காஞ்சி' புது விளக்கம் பெற்றது. பேய்மீது நம்பிக்கை கொண்ட பண்டைய உரையாசிரியர் பேயை உடன்பட்டு உரை எழுதினர். குழந்தை, பேயை நம்பாதவர். அதனால்,

> நள்ளிரவில் இறந்த கணவன் உடம்பை மனைவி தொடுதற்கஞ்சித் தொடாது இருத்தலாம். அவ்வச்சத் தையே 'பேய்' என்றார். என விளக்கினர்.[5]

ஏடு பெயர்த்து எழுதுவோர்

தமிழ் நூல்கள் இருவகையில் காப்பாற்றப் பெற்று வந்தன. ஒன்று : வாய்மொழி முறை; பிறிதொன்று; ஏட்டுமுறை; பல தலை முறைகள் தந்தை, மகன், தந்தை மகன் என்றும், - குரு சீடன் என்றும் வாயாற் சொல்லிச் சொல்லி நூல்கள் காப்பாற்றப் பட்டன. இறையனர் களவியல் உரை இவ்வாறு பல தலைமுறை தாண்டி வந்ததை அவ்வுரையே குறிப்பிடும்.[6] வாய்வழி இலக் கியம் வாழ்வுபெறும் பொழுது, நிரம்பப் பாட பேதங்கள் பெறவும் வாய்ப்புண்டு. ண - ந - ன; ல - ழ -ள; ற - ர; ங - ஞ ஆகிய ஒலி வேறுபாடு குறைவுள்ள எழுத்துகளால் பாட பேதம் ஏற்படும். அயர்ச்சியானும், ஒலி மாற்றத்தானும் ஏற்படும் பிழைகளால், பாட பேதம் நேரும்.

ஏடு பெயர்த்து எழுதும் போதும் பாட பேதங்கள் நேருதல் இயற்கை. எழுதுவோரின் கவனக் குறைவும், அறியாமையும் காரணம் ஆதலுண்டு. இவற்றிற்கு மாறுக எழுதுவோர்தம் மதச் சார்பு, கொள்கை அடிப்படையில் அவர் கொண்ட விருப்பு வெறுப் பும் பாட பேதங்களை உண்டாக்கும்.

> 'பொருளில் காணும் சிக்கல்கள், செய்யுள் அமைப்பிற் பிழை, பொடிந்த இடங்களை நிரப்பும் முயற்சி, மத வேறுபாடு ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். எழுத் தர் வெறுக்கும் செய்திகள் விடுபடுவதும், விரும்பும் செய் திகள் இடம் பெறுவதும் உண்டு. இடைச் செருகல்கள் புத்தி பூர்வமாகச் செய்யப்படும் மாறுதல்களாகும்.'[7]

தொல்காப்பியத்துள் பாட பேதங்களும் இடம் பெற்றுள்ளன இடைச் செருகல்களும் இடம் பெற்றுள்ளன.[8] பின்னே வந்த உரையாசிரியர்கள், சிலர் வேறு பாடம் இருப்பதை அறிந்து, அப் பாடத்திற்குப் பொருளும் உரைத்தனர்.[9] இன்றைய உரை யாசிரியர் சிலர், தம் ஊக அளவில் புறப்பாடம் கூறிப்பொருள் செய்குவர். பாரதி, 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்பதற்குக் 'கொடிநிலை, காந்தள் வள்ளி' எனப் பாடம் ஓதிப் பொருள் உரைப்பர். குழந்தை, அதிகாரம், இயல் நூற்பாக்களைத் தம் போக்கிற்குத் தக இடம் பெயர்த்துக் கூறிப் பொருள் உரைப்பர்; இலக்குவனர் போன்றோர், மரபியல் நூற்பாக்களில் சிலவற்றை இடைச்செருகல் எனப் புறக்கணிப்பர். ஆக, சொல், நூற்பா, பாட பேதங்கள், இடைச் செருகல்கள் அனைத்தும் பொருள் வேறு பாட்டிற்கு இடனாகின்றன.

அட்டவணை 6

உரைவேறுபாட்டிற்குக் காரணமும் விழுக்காடும்

எண்	வேறுபாட்டிற்குக் காரணர்	உரை வேறுபடும் எண்கள் (எண்கள்-தொல்காப்பிய உரை வேறுபாடு அட்டவணையில் முதல் வரிசையில் உள்ளவை)	மொத்தம்	மொத்த வேறுபாடுகள் 96	விழுக்காடு 100
1	நூலாசிரியர்	2,6,7,8,9,10,14,15,16,17,19,18,20,21,22, 23,24,25,26,35,36,42,48,60,62,64,67, 69,71,73,75,76,77,78,79,80,81,82,83,91	40	96	41.6
2	உரையாசிரியர்	1,3,4,5,11,12,13,15,27,28,29,30,31,32, 33,36,37,38,39,40,41,43,44,45,46,47,49, 51,52,53,54,55,56,57,58,59,60,61,62,63, 65,66,72,73,83,85,90,93,94,95,96	52	96	54
3	நாத்திக நோக்கு	68,92,95	3	96	3.1
4	ஏடு பெயர்த்து எழுதுவோர்	10,50,70,74,84,86,87,88,89, 95	10	96	10.4

உரைவேறுபாட்டிற் குள்ளாகா இடங்கள்

உரைவேறுபாட்டிற் குள்ளாகா நூற்பாத் தொகை

உரைவேறுபாட்டாய்விற்கு எடுத்துக் கொண்ட, அகத்திணை இயலிலும், புறத்திணை இயலிலும் அடங்கிய நூற்பாக்களின் தொகை எண்பத்தெட்டு. இவற்றுள் எழுந்த வேறுபாடுகள் தொண்ணூற்றாறு. ஆனால், அனைத்து நூற்பாக்களில் இருந்தும் பொருள் வேறுபாடு எழவில்லை. எண்பத்தெட்டு நூற்பாவினுள் அகத்திணையியலுள் பத்து நூற்பாக்களும்(4, 16, 19, 21, 27, 29, 49, 50, 51, 52) புறத்திணை இயலில் ஒன்பது நூற்பாக்களும், (59, 67, 70, 73, 76, 78, 84, 86, 83), உரைவேறுபாட்டிற்கு ஆளாகாதன. 23·85% விழுக்காட்டு நூற்பாக்கள் உரைகாரர்களால் வேறுபட்ட உரைகள் பெறுதன. இவை வேறுபாடு பெறுமைக்குரிய காரணங்கள் ஆராயத் தகுந்தன.

உரை வேறுபாடு எழாமைக்குக் காரணங்கள்

உரை வேறுபாட்டிற்கு மூவர் காரணர். அவர் நூலாசிரியரும் உரையாசிரியரும், ஏடு பெயர்த் தெழுதுவோரும் ஆவர் என்பது முன்பு விளக்கப்பட்டது. உரைகாரர் தம்முள் வேறுபடாமைக் குரிய காரணங்களும் மூவகையின : அவையாவன :

1 நூலாசிரியர் ஐயமற விளக்குதல்;

2 நூலாசிரியர், வகை தொகைப் படுத்துதல்.

3 உரைகாரர் பார்வையில் படாதிருத்தல்.

நூலாசிரியர் ஐயமற விளக்குதல்

நூலாசிரியர், தம் கருத்தை ஐயத்திற்கு இடமின்றித் தெளிவாக மயக்க மற்ற சொற்களால் விளக்குவர். அவ்வாறு விளக்குகையில் வேறுபாட்டிற்கான வாய்ப்பு வழியற்றுப்போம். சான்றாகத் தொல்காப்பியர், வாகை, காஞ்சி முதலான புறத்திணைகளை விளக்கி நுவலும் இடங்கள் கருதத் தக்கன. (நூற்பா எண்: 21, 50, 51, 52, 70, 73, 76).

நூலாசிரியர் வகை தொகைப் படுத்துதல்

பின்னே சொல்ல இருக்கும் விரிவான செய்திகளை, முன்னே தொகைப்படுத்தி வகைகளை எடுத்துரைத்தல் ஒரு முறை. இம்முறை நுதலிப் புகுதல் எனப் பெறும். இத்தகு இடங்களில் நூலாசிரியர்தம் நோக்கு, வகைப்படுத்துவது ஒன்றிலேயே ஒருமுகப்பட்டு நிற்கும். எனவே வேறுபாடு எழ

வாய்ப்பில்லை. சான்றாக முதற் பொருள் என்பதை நிலம், பொழுது என இரண்டு என்று விளக்குமிடமும் (நூற்பா எண். 4) திணைக் குரிப் பொருள் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐந்தும் அவற்றின் நிமித்தம் ஐந்தும் என்று விளக்கும் இடமும் (நூற்பா எண். 16) கருதத்தக்கன. இப்போக்கிலேயே வேறு சில நூற்பாக்களும் அமைந்து, உரை வேறுபாட்டிற்கு இடனற்று நிற்கின்றன. (நூற்பா எண். 4, 16, 19, 27, 49, 67, 78)

உரைகாரர் பார்வையில் படாதிருத்தல்

சில நூற்பாக்கள், உரைகாரர்தம் ஆய்வை மேலும் எதிர் நோக்கி நிற்கின்றன. நுணுக்கமான இடைவெளிகளைக் கண்டறிந்து விளக்கம் கூறுவதில் வல்லமை வாய்ந்த உரைகாரர்கள் (பார்க்க : பாரதியின் அகத்திணை இயல் முகப்புரை) சில இடங்களை விட்டிருப்பது எண்ணுதற் குரியது. சான்றாக, அகத்திணை இயல் முதல் நூற்பா, கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக ஏழுவகை என்று நுதலிப் புகுகிறது. அவ்வாறு புகுதலே முறைமை. ஆனால், இத்தகு முறைமை, புறத்திணை இயல் தொடக்கத்தில் இல்லாமை ஆய்விற்குரியது. அகத்திணை ஏழு என்று நுதலிப் புகுந்த நூலாசிரியர், புறத்திணை ஏழு என நுதலிப் புகவேண்டாவா? நூலாசிரியர்தம் காலத்தில் அவ்வாறு புறத்திணை வகை கூறிய நூற்பா இருந்திருத்தல் கூடும். காலப்போக்கில், அந்நூற்பா ஏடு பெயர்த் தெழுதுவோரால் விடப்பட்டிருத்தல் கூடும். இவ்வாறு உய்த்துணர்தற்கு, எஞ்சியுள்ள,

> *அகத்திணை மருங்கின் அமைந்த உணர்ந்தோர்*
> *புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்...*
> *வெட்சி தானே குறிஞ்சியது புறனே;*
> *உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே.'*

என வரும் நூற்பா இடம் அளிக்கிறது. இந் நாலடி நூற்பாவைக் கூர்ந்து நோக்கின், முன்னிரண்டு அடிகளும், பின்னிரண்டு அடிகளும் இடையிட்டு நிற்பது புலனாகும். 'புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்' என்ற 'செயின்' எச்சத் தொடரைத் தொடர்ந்து, புறத்திணை இலக்கணம் கூறப்பட்டிருக்க வேண்டுமல்லவா? கூறப்படவில்லையே. வெட்சித்திணை இலக்கணம் மட்டும் அன்றே கூறப்பட்டுள்ளது? முன்னிரண்டு அடிகளைத் தொடர்ந்து தொல்காப்பியர், புறத்திணைப் பொது இலக்கணத்தையும், அதன் வகைகளையும் கூறி இருந்தனராதல் கூடும். அப் பகுதி பிற்காலத்தில் கவனக்குறைவால் விடுபட்டிருத்தல் கூடும். இதுபோன்ற வேறுசில இடங்களும், உரைகாரர் பார்வையில் படாது நின்றன. அகம், புறம் என்ற இரண்டின் சொற்பொருளையும், வகை தொகை

களையும் ஆராய்ந்த உரைகாரர், தமிழர் அகம், புறம் என்று இரு கூருகப் பாகுபடுத்தின தேன் என்று ஆராய்ந்து கூறி இருப்பின், அன்னேர்தம் அரிய கருத்துகள் ஆய்வாளர்க்குப் பெருந்துணையாக அமைந்திருக்கும். இதுபோன்று ஏனைய சில இடங்களும் உள்ளன. (நூற்பா எண் 29, 59, 84, 86, 88) இவை உரைகாரர்தம் ஆழப் பார்வைபெருது நின்றமை பேரிழப்பே.) (பார்க்க:அட்டவணை 6அ

உரை வேறுபாட்டைப் பெற்றும் உரிய விளக்கம் பெருதன:
தொண்ணூற்றாறு இடங்கள்

உரை வேறுபாடு பெறும் இடங்கள் தொண்ணூற்றாறு எனினும், சில இடங்கள் முற்றும் விளக்கம் பெற்றன என்று கூறுதற்கு இல்லே. முன்னேயோர்க் கருத்தை மறுத்து மொழிவ துடனன்றித் தம் கருத்தை நிறுத்த உரைகாரர் முயன்றுளர். ஆனால், மேலும் விளக்கத்திற்காக எஞ்சி நிற்கும் கருத்துகள் உள. சான்றாக, தொல்காப்பியர் காலத்தில் சாதி பேதம் உண்டா என்ற ஐயத்தை ஊட்டும் பகுதிகள், கடவுள் பற்றிய கருத்துகள் ஆகியன சமூகக் கண்ணோட்டத்திலும், சமயக் கண்ணோட்டத்திலும் பண்டைய உரைகாரர்களால் விரிவான விளக்கம் பெற்றிருந்தால், பின்னைய ஆய்வாளர்க்கும் பெருந்துணையாக அமைந்திருக்கும். அவ்வாறு அமையாமை அரும் கருத்திழப்பே.

இவ்வாய்வேடு, வேறுபாட்டினைப் பெற்ற இடங்கள், பெருத இடங்கள், பெற்றும் விளக்கம் முற்றும் பெருத இடங்கள் ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு அமைக்கப் பெற்றுளது.

குறிப்புகள்

1 ஆனந்த விகடன் அகராதி. ப. 394.
2 உரை வேறுபாடு பற்றிய அட்டவணையில் 'எண்ணுக் குறியீடு' என்ற பகுதியைப் பார்த்தருள்க.
3 அருணுசலம் பிள்ளே, மு. (அருணு. மு) அகத்திணே இயல் உரை வளம் (அகத். வளம்) ப. 139,
4 மே. கா. நூ. ப. 423.
5 புலவர் குழந்தை, பொருள் அதிகார உரை, ப. 498.
6 இறையனூர் களவியல் உரை. சை. சி. நூ. க, 1960 ப. 9.
7 சுப்பிரமணியம், டாக்டர். வி. ஐ. அணிந்துரை., இராம கிருட்டிணன், மு. பிரதி பேத ஆராய்ச்சி, ப. 12.
8 Kamil Zvelebil Dr., Tolkappiyan, Introductory note. Journal of Tamil Studies. Sept. 1972. P. 42 and Dec. 1973 P. 23
9 உரை வேறுபாட்டு அட்டணேயில் 'பாட வேறுபாடுகள்' என்ற பகுதியைக் காண்க.

அட்டவணை 6அ

உரைவேறுபாட்டிற் குள்ளாகா இடங்களும் காரணங்களும்

இயலது பெயர்	காரணங்களும் இடங்களும் தெளிவுடையவை	வகைநுதலியவை	விடுபட்டவை	மொத்த நூற் பாக்கள்	வேறுபாட்டிற் குள்ளாகாதன	விழுக்காடு
அகத்திணை இயல்	21,50,51,52	4,16,19,27,49	29	58	10	17.24
புறத்திணை இயல்	70,73,76	67,78	59,84,86,88	30	9	30

அகத்திணை இயல்
உரை வேறுபாடுகள்

6

அகத்திணை இயல் உரைவேறுபாடுகள்

அகம் என்ற பெயர்

அகத்திணை என்றால் என்ன? இன்ப ஒழுக்கம் இயம்பும் இயல். அதனை ஏன் 'அகம்' எனல் வேண்டும்? உள்ளத்தே எழுந்த அவா, உடல் வழிப் படர்ந்து உள்ளத்தைக் குளிர்ப்பது ஆகலின் உள்ளம் என்பதனோடு தொடர்புபட 'அகம்' என்றனர். அன்பிற்கு, இன்பிற்கு அடிப்படை உடல் அன்று. உள்ளமே என்பதை இப்பெயர் உணர்த்தி நிற்கிறது. உள்ளத்தை 'அகம்' என்றே குறித்தனர் முன்னோர்.[1] உள்ளம், ஊற்றின்பிற்கு உயிர்த்தளன்; ஆயினும் அதனை மெய்வழி உணர்தலே உலக இயற்கை. ஆனால் அஃது உடல் இன்பம் மட்டும் அன்று; உள்ள இன்பம் மட்டும் அன்று; உயிர் இன்பம். உள்ளமும் உடலும் இரண்டுறவும், இரண்டு அறவும் கலந்த இன்பச் செவ்வியே அகம். இன்ப நுகர்ச்சிக்கு உடலே கருவி. எனினும், உள்ளமே காரணம். காதல் மொழியும் காதற் செயலும், உள்ளவழி இயங்குவனவே. உள்ளத்தால் நினைந்த நினைவும் காதல் நுகர்ச்சிக்குச் சமம்; உள்ளப் புணர்ச்சி மெய்யுறு புணர்ச்சிக்கு நிகர் என்பர் இறையனர் களவியல் உரைகாரர் (நூற்பா உரை 2, ப. 35) 'உள்ளத்தால் உள்ளலும் தீதே' என்ற குறட்பாவின் (282) மூலம், மனநினைவைச் செயலுக்கு நிகராகப் போற்றுவர் அறிஞர் திருவள்ளுவர். 'பிறர் நெஞ்சு புகாக் கற்பு

என்பர் முன்னோர். இச்சுறிப்புகள் அனைத்தும் காதற் செயலுக்கு, உள்ளமே காரணம் என்பதைச் சாற்றும். இக் காரணம் பற்றியே அற்றைத் தமிழ்ச் சான்றோர் காதல் பற்றிய இயலை அகம் என்று போற்றினர்.

அகத்திணை

'அகப்பொருளாவது போக நுகர்ச்சி; ஆகலான், அதன் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார் என்பர் இளம். 'ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்தது எனக் கூறப்படாத தாய், யாண்டும் உள்ளத் துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார் என்பர் நச்சர். நச்சினார்க்குப் பின் வந்தோரும் அவர் கருத்தை எடுத்துப் போற்றுவர்.[2] ஆழ்ந்து நோக்கின், நச்சர் கருத்தில் உள்ள வழு புலப்படும். தொல்காப்பியர் அகத்திணை என்று கருதுவது எதனை? முல்லை குறிஞ்சி முதலான ஐந்திணையை மட்டுமா? அன்று. கைக்கிளை, பெருந்திணை என்பவற்றையும் அகத்திணை என்று மொழிகுவர். 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய் முற்படக் கிளந்த எழு திணை என்ப, என்பதுவே தொல்காப்பியர் தம் வரையறை; கைக்கிளையும், பெருந்திணையும் ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற கூட்டங்கள் அல்ல. எனவே இருபாலார் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பத்தை மனத்துள் இருத்தி நச்சர் மொழியும் வரையறை, கைக்கிளை, பெருந்திணைக்குப் பொருந்தாமற் போம். கைக்கிளை, பெருந்திணைகளுக்குப் பொருந்தாத வரையறை அகத்திணை வரையறை ஆகாமை வெளிப்படை.

அகம் - ஒரு விளக்கம்

அகம் புறம் என்பன காரணப் பெயர் என்பர் இளம்; ஆகு பெயர் என்பர் நச்சர். இன்பம், அகத்தே நிகழ்வது, ஆதலின் 'அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயர்' என்பது நச்சர்தம் விளக்கம். அகத்தே நிகழ்கிறது என்பதற்கு மாறுக 'அகத்தால் நிகழ்கின்றது' என்று கருதி அகம் என்பதைப் 'போக நுகர்ச்சிக்குக் காரணம் எனக் கொண்டனர் இளம். உள்ளத்தை இடமாகக் கொள்வதிலும் காரணமாகக் கொள்ளுதலே பொருத்தம். பாலுறவிற்கு உடல் எழுச்சி காரணம் என்பதினும் உள்ள எழுச்சியே காரணம் என்பர் பாலியல் அறிஞர்.

அகத்திணை ஏழு

அகத்திணையை எழுவகைப் படுத்துவர் தொல்காப்பியர். அவற்றை முக்கூறுபடுத்தி அவர் உரைப்பர். அவர் உரைப்பன :

1 கைக்கிளை
2 ஐந்திணை
3 பெருந்திணை

இவற்றை எண்வகை ஆரிய மணத்தோடு பொருத்தல் பெரும் பிழை.[3] அவ்வெட்டும், எட்டுவகைத் திருமண நெறிகளைக் கூறுவன. தமிழ் ஏழும். திருமண நெறி கூறுவன அல்ல. கைக்கிளை, திருமண நெறியே அன்று. ஐந்திணைகள் மணம் புரிந்தார் நுகரும் இன்பத்தையும், அவர் பிரிவுற்றுப் பெறும் துன்பத்தையும் பெரிதும் விரிப்பன. பெருந்திணை, மணத்திற்காக ஆடவர் மேற்கொள்ளும் அறவழி வன்முறையையும் (ஏறியமடல்) காட்டுவது. எனவே ஆரிய மண முறைகளுக்கும், தமிழ் அகத்துறைகட்கும் ஒரு சில ஒற்றுமைகள் உள்ளனவே தவிர, ஒருமை இல்லை. இரண்டும் ஒன்று அன்று.

கைக்கிளை

கை என்னும் சிறுமை என்று பொருள். சிறுமை என்னும் குற்றம். வழு என்று ஈண்டுப் பொருள்.[4] கிளை - என்பது உறவு. வழு உடைய உறவு என்பது கருத்து. 'பெருமை இல்லாத தலை மக்கள் உறவு' என்றனர் இளம். 'ஒரு மருங்கு பற்றிய கேண்மை' என்ற நச்சர் விளக்கம் பொருட் பார்வையில் பொருந்தும் எனினும், வரலாற்றுப் பார்வையில் பொருந்தாது. அது பொருந்தாமை, பின்வரும் சான்றுகளால் வலிவு பெறும். தொல்காப்பியர் கைக்கிளை, பழைய ஒழுக்கம் என்பதனாலேயே முதற்கண் போற்றினராதல் வேண்டும்.

பண்டைய மக்களிடையே காதல்

பண்டைய காலத்து வரன்முறை அற்ற உறவே, ஆண், பெண் பாலாரிடை இருந்தது. நாகரிகமும் பண்பாடும் முதிர முதிர அவரிடை காதல் ஒழுக்கத்திலும் கட்டுப்பாடு வளர்ந்தது; அதன் முதிர்ச்சி அறவழியில் திரும்பிற்று. விரும்புவாரைக் கவர்ந்து நுகர்ந்து விலக்கி விடுதலைப் பழைய நாகரிகங்களின் தொடக்கங்கள் காட்டுகின்றன.

கிரேக்க நாட்டில் அமண் நிலை (Nakedness) ஒரு குற்றமாகவே கருதப்படவில்லை.[5] பொது மக்கள் தன்னிச்சையாகவே ஒழுகினர்.[6] வலிந்து புணர்தல் உரோமை நாட்டின் முதுபழக்கம்.[7]

பார்மோசன் (Formosan) பழங்குடியினர், பலரும் அறியப் புற மருங்கே புணர்வர். யாப் (Yap) பழங்குடியினர் மற்றவர் பார்ப்பது பற்றிக் கவல்வதில்லை. கோண்டு (Gond) என்ற பழங்குடியினர் இல்லத்தில் கலவாமல், இல்லப் புறம் உள்ள புதரருகில்

புணர்ந்து மகிழ்வர். செஞ்சுப் (Chenchus) பழங்குடியினர் இரவு மறை புணர்ச்சியை வெறுப்பர்; இரவும் இருட்டில் கருவுறும் குழந்தை குருடாகப் பிறக்கும் என்று நம்புவர்: அதனால், பகலையே போற்றுவர்.[9]

பழங்குடியினர் இடையே காதல்

மலையாளப் புலச் செறுமர் என்ற பழங்குடியினர் தாம் விரும்பும் பெண் இருக்கும் இடம் சென்று அவளுடன் பலரும் அறிய (மணம் முடியாமலே) இராத் தங்குவர்.[9] நீலகிரி மலைவாழ் கோடர் (Kotas) பழங்குடி இளைஞர், பெண்ணை அழைத்துச் சென்று அவர் விரும்பும் இடத்தில் இராத் தங்குவர். பொழுது புலர்ந்து இல்லம் வரும் பெண்ணைப் பெற்றோர், உனக்கு அவரைப் பிடிக்கிறதா என்று வினவுவர். பிடித்தது என்று அவள் உரைத்தால் மனைவி ஆவாள். இன்றேல் குற்றம் எனக் கொள்ளாது விட்டு விடுவர்,[10] குறும்பர் என்பார் நீலகிரி வாழ் பழங் குடியினர். அவரிடம் மணச் சடங்கு என்ற ஒன்றே இல்லை. சோளகர் (Sholgar) பழங்குடி இளைஞர், தாம் விரும்பும் இளையவளைக் காட்டுக்குக் கூட்டிச் செல்வர்; இரு வரும் மூன்று நாட்கள் கானகத்தில் சேர்ந்து களிப்பர். பின்னர்த் தாயகம் திரும்புவர்,[11]. தோடர்களிடம் காமம் சாலா இளமை மணமே உண்டு.

இவை யெல்லாம் பண்டு இருந்த நெறியற்ற காம ஒழுக்கங் களைக் காட்டுவன. இவற்றின் எச்சங்களே இன்றும் மேலே உள்ள சில பழங்குடியினரிடம் தேயாமல் காணப்படுகின்றன. இவற் றையே தொல்காப்பியர் 'கைக்கிளை' என்றனராதல் வேண்டும்.

ஐந்திணை

மக்கள் குழுக்களாகி, சமூகம் மலர, அரசுகள் உருவாயின. அரசுகள் நிலவுடைமை அடித்தளத்திலேயே தோன்றும்; தழைக் கும். தத்தம் நிலவுடைமைகளைக் காத்துக் கொள்ள விழையும் போதும், தம் நிலப் பரப்பைப் பெருக்க நினைக்கும் போதும் போர் கள் எழுகின்றன. போருக்கு ஆட்கள் வேண்டும். உடல் வலி மையைத் தலைமையாகக் கொண்ட பழைய போர்க்களங்களில், பெண்டிரினும் ஆடவர் தேவையே முதன்மை யுற்றிருந்தது. எனவே ஆண் குழந்தைகள் வேண்டும். அதற்கு நெறியான மண முறைகள் வேண்டி இருந்தன. எனவே மணமுறைகள் வற்புறுத் தப்பட்டன; நெறிப்படுத்தப்பட்டன. ஆக அரசு என வருகிற போது அரசனை அடுத்த அரசன் என்ற தலைமுறைச் சிக்கல் எழும். எழுகையில் தன் தலைமுறையே ஆள, அரசன் குடும்பம் அமைத்துக் கொள்ளல் வேண்டும். எனவேதான், மணமுறைகள், பழங்

காலத்தில் அரச குடும்பத்திலேயே முதற்கண் தோன்றின.[12] உரோம வரலாறு இதனைக் காட்டும். அதன் பின்னரே, மற்றைய மரபினர்க்கும் மண முறை பரவியது. தொடக்க கால மணமுறை, போர் உலகத்தைச் சார்ந்தே இருந்தது. போர் செய்ய ஆள் வேண்டும்; அதுவும் ஆண்மகன் வேண்டும். எனவே அன்னோர் மணம் புரிந்து கொண்டனர்.

மணமுறை — வழிமுறை

குழந்தைக்காகவே கிரேக்கரும், உரோமரும் மணம் செய்து கொண்டனர். அதுவும் ஆண் குழந்தைகளையே விரும்பினர். ஆண் குழந்தைகள், வலிவற்று, ஊனமாகப் பிறந்து விடுமானால், அக் குழந்தைகளை டெசிடசு (Tegetus) மலை மீது எறிந்து கொன்று விடுவர்.[13] பெண் குழந்தை பிறந்தால், கொன்றுவிடும் வழக்கங் கூடச் சில பழங்குடியினரிடம் இருந்தது. 'ஒளிறுவாள் எறிந்து அரும் சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயரும் ஆண் மகனைப் பெறுவதே' பெற்று வளர்ப்பதே தன் கடமை என்ற[14] தமிழ்த் தாயின் குரலும், போர்க்களக் குரலே 'பொன்போற் புதல்வரைப் பெறுதவரைப் போர்க்களத்தினின்று வெளியேற்றுவதன் நோக்கம், நேர்ச்சிக் கடன் செய்ய மகன் பெறுதார் என்பதற்காக அன்று. அவர்கள் புதுமண இணையர் அவ்வாடவன் இப்போது களம் புகுந்து ஒருக்கால் இறக்க நேரின், பிற்காலப் போருக்கு வேண்டிய பொன்போற் புதல்வன் இல்லா தொழிவான். அதனைத் தவிர்க்கவே, இதுவரை பொன்போற் புதல்வரைப் பெறுத இளைய மண மக்கள், இனிப் பெறுவதற்காகக் களம் வாராது காக்கப்பட்டனர்.[15]

தமிழகத்தில் மட்டுமன்றிப் பண்டைய நாடுகள் அனைத்திலும் குழந்தைப்பேறு வேண்டப்பட்டது. அதற்காக மனைநலமும் மனைவியர் உறவும் வற்புறுத்தப்பட்டன. உரோம வரலாற்றில் பல புரட்சிகள் நிகழ்ந்திய அகசுடசு காலநிலை இதற்குத் தக்க சான்று.

வெற்றி விழாக் களியாட்டங்கள் நிகழும் பொழுது வீரர், மணத்துறவு, பிள்ளைப் பேறின்மை முதலானவற்றைப் பற்றிய சட்டங்களை நீக்குமாறு உணர்ச்சித் துடிப்புடன் வற்புறுத்தினர். அகசுடசு பொதுவிடங்களில் பல பகுதிகளில் மணமாகாத வீரரையும், மகப்பேறுற்றவர் அடங்கிய மணமான வீரரையும் கூட்டுவித்தான். மணமானோர் மணமாகாதோர் எண்ணிக்கையினும் மிகக் குறைந்தே இருந்ததைக் கண்டு வருந்தி, அவர்களிடையே குழந்தைப் பேற்றை வற்புறுத்தி உரை நிகழ்த்தினன்.[16]

அரசக் காதல்

ஆக, அரசுகள் முறையாக உருவான நிலையில் மணங்கள் பெருகின. தொல்காப்பியர் காலத்தில் நிலவுரிமை பெருகி, அரசுரிமை உருவாகி விட்டது. கிழவன், கிழத்தி என்ற சொற்களும் 'எஞ்சா மண்நசை' என்ற சொற்றொடரும், மூவேந்தரைப் பற்றி அவர் தரும் குறிப்புகளும் இதனை வற்புறுத்துகின்றன. இந்த அரசச் சூழ்நிலையிலேயே 'ஐந்திணை என்ற முறைக்காதல் வளர வாய்ப்பாயிற்று. பாங்கன், பாங்கி, தோழி, செவிலி என்ற தொல் காப்பியர்தம் குறியீடுகள், காதலர் வாழ்வை அரண்மனைச்சார் பாக்குகின்றன. இதனால், ஐந்திணைக் காதல், அரசக் காதல் என்பது கருத்து அன்று. அரசர் காதல் பழையது; அதனது எஞ்சு தலை அச்சொற்கள் தாங்கி நிற்கின்றன என்பதே கருத்து.

பெருந்திணை

கைக்கிளை என்ற குறை ஒழுக்கத்தை அடுத்து, ஐந்திணை என்ற முறை ஒழுக்கம் பல்கியது. இதனை அடுத்துப் பெருந்திணை என்ற பேர் ஒழுக்கம் தோன்றிப் பெருகியது. வலிந்து விரும்பும் கைக்கிளை ஒழுக்கம், இணைந்து விரும்பும் ஐந்திணை ஒழுக்கம், நிணைந்து மயங்கும் பெருந்திணை ஒழுக்கம். பெண்ணைக் கைப்பற்றி ஓடும் இராட்சதத்தை ஒழித்துப் பெண்ணிற்காகத் தன்னை வருத்திக் கொள்ளும் 'சத்தியாக்கிரக' முறையை ஏறிய மடல் திறமாகப் பெருந்திணை காட்டும். பிறரை வருத்துவது எளிய செயல்; தன்னை வருத்துவது அரிய செயல். வளர்ந்த நிலையில் நிகழும் செயல். முன்னதினும் பின்னதிற்கு வளர்ச்சியும், பொறுமையும் வேண்டும். அதனால்தான், தொல்காப்பியர், இதனைப் பெருந்திணை என்றனர். இது காலத்தால் பிற்பட்ட வளர்ச்சி ஒழுக்கம் எனவே இறுதியில் வைத்தனர்.

பெயர் பெறுதல்

கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற பெயர்கள் ஆண் பெண் உறவின் கால வரிசைப்படியும், சிறப்பற்றது, சிறப்புடையது, ஓரளவு ஒரு கூறு மிகு சிறப்புடையது என்ற சீர்மை வரிசைப்படியும் நிரல்படக் கூறப்பட்டன. இவை, எதனால் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை எனப் பெயர் பெற்றன? ஒழுக்கத்தால் என்பது நச்சர் கருத்து. 'ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சி ஆகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. என்னை? விளக்காகிய சுடர் இருந்த இடனும் விளக்கெனப் பட்டது போல' என்று நச்சினார்க்கினியர்க்கு முன் மொழிவர் இறையனார் களவியல் உரையாளர்.[17]

பாரதி, குழந்தை ஆகியோர் வழிமொழிவர். ஒழுக்கம் அன்று அடிப்படை, கருப்பொருட் பெயரே அடிப்படை என்பர் இளம்.

அவர், அவ்வந் நிலத்தில் சிறந்து நிற்கும் பூ அடிப்படையிலும், மர அடிப்படையிலும் முல்லை முதலான பெயர்கள் அமைந்தன என்பர். அவர் கருத்தை, நச்சர் மறுப்பர்.

> "இவ்வாறு அன்றி முல்லை முதலிய பூவாற் பெயர் பெற்றன இவ் ஒழுக்கங்கள் எனின், அவ்வந்நிலங்கட்கு ஏலாப் பூக்களும் உரிய ஆகலின் அவற்றுற் பெயர் கூறலும் உரிய எனக் கடாயினுற்கு விடையின்மை உணர்க' என்பது நச்சினார்க்கினியம்.

கருப்பொருளே பெயர் வைப்பிற்கு அடிப்படை

நச்சினார்க்கினியரும் பிறரும் கருதுமாறு போல, ஒழுக்கமே பெயர் வைப்பிற்கு அடிப்படை என்பது பொருந்துமாறு இல்லை. அவ்வாறு வைத்தலே தமிழர் நெறி என்று கூறற்குச் சான்றும் இல்லை.[18]

ஒழுக்க அடிப்படை

முல்லைப்பூ, முல்லை நிலத்தில் மட்டும் பூப்பதில்லை. பிற நிலத்திலும் பூக்கலாம்: பூக்கின்றது. அங்ஙனமாயின் பூவால், பெயர் வந்தது என்று எவ்வாறு கூறலாம் என்பது நச்சர் மறுப்பு. பூவால் பெயர் எய்தவில்லை என்று அமைத்துக் கொண்டு, ஒழுக்கத்தால் முல்லை முதலாய பெயர்கள் வந்தன எனில் அது முன்னதைவிடப் பொருத்தமற்றுப் போம். குறிஞ்சி — என்பது புணர்தல் ஒழுக்கத்தைக் காட்டும். முல்லை என்பது இருத்தல் ஒழுக்கத்தைக் காட்டும். நச்சர் கருத்துப்படி, குறிஞ்சி மக்கள் மட்டுந்தாம் புணர்வர்: முல்லைமக்கள் மட்டுந்தாம் இருப்பர்: மருதமக்கள் மட்டுந்தாம் ஊடுவர்; நெய்தல் மக்கள் மட்டுந் தாம் இரங்குவர்; பாலைமக்கள் மட்டுந்தாம் பிரிவர் என்றாகும். அவ்வாறு ஆளுதல், பெரும் பிழை என்பது வெள்ளிடை.

அடையாளப் பூ

அகத்திணைகள், குறிஞ்சி, முல்லை எனப் பெயர் பெறுதலைப் போலப் புறத்திணைகளும், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என மலர்களால் அழைக்கப்படும். அவை பிணைத்தும் மலர்களே. போருக்குச் செல்லுவார், தம் நோக்கமும், தமது அடையாளமும் விளங்கப் பூ அணிவர். இத்தகு பழக்கம் சில இடங்களில் இருந்தது. உரோமர், வெற்றி பெற்ற வீரர்க்கு,

'ஆலிவ்' (olive) மர இலைகளால் ஆன மலர் முடியை அணிவிப்பர். ஆலிவ் மலர் மாலையைப் பொதுவாக அமைதியின் அறிகுறியாக ஐரோப்பியர் போற்றுவர். இராமனின் மறைவுத் துணை கொண்டு சுக்கிரீவன், தமையன் வாலியுடன் பொருவன். இருவரும் ஒருவர் மாறி ஒருவர் உதைப்பர்; கடிப்பர்; நின்று இடிப்பர்: அடிப்பர். வாலி, தம்பி சுக்கிரீவனை நெருக்குவன்; அடர்க்குவன்; உறுதி சொன்ன இராமனை உதவாமல் வறிதே நிற்பன். போர் இடையிட்டுச் சுக்கிரீவன் இராமனிடம் ஓடுவன். 'என்னைக் காத்திடு' என்று வேண்டுவன். அப்போது இராமன், உன்னை வாலியினின்று வேறுபடுத்தி அறிய இயலவில்லை. ஆதலின் 'கொடிப்பூ' மிடைந்து செல்க எனப் பணித்து விடுப்பன்.[19] இச்செய்தி போரில் அடையாளங் காட்டப் பூமிடைந்தனர் பொருநர் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தும்.

தமிழரும் மலரும்

தமிழர் மலர்களோடு நெருக்கத் தொடர்புடையர். ஆரியரினும், பிறரினும் மிகுந்த தொடர்புடையவர் என்பது வான்மீகியின் கவிதைக் கூற்றால் உறுதி பெறும். பரதனின் கூற்றாக வரும் மொழி.[20]

> "நம் களமறவர் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன், தென்னாட்டாரைப் போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்."

இக்கூற்றால், தென்னாட்டவராகிய தமிழர், தலையில் பூ அணிவோர் என்பதும், குறிப்பாகக் களத்தில் மலர் அணிவோர் என்பதும் விளக்க மாகின்றன. தமிழர் மலர் மாலை போற்றும் மாண்பினர். ஆடவரும், பெண்டிரும் தலைக்கும், மார்பிற்கும் கண்ணியையும் மாலையையும் அணிவர். மன்னர் பூவால் அடையாளம் பெறுவர். ஆத்தி சோழனது மலர்; வேப்பம் பூ - பாண்டியனது மலர்; பனம்பூ — சேரரது மலர். எனவே மணவாழ்வு தொடங்கி பிண வாழ்வுவரை 'மலர் மலர்' எனத் தமிழர் வாழ்குவர். எனவே மலர்ப் பெயர் சார்த்தி மன்னை வழங்குவர், பெண்ணை வழங்குவர்.

மலர்வழி நிலப்பெயர்

காஞ்சி மலர் மிகுதியால் 'காஞ்சி' எனப் பெயர் எய்தியது காஞ்சி மாநகரம். வஞ்சி மலர் மிகுதியால் 'வஞ்சி' எனப் பெயர் பெற்றது சேரர் நகரம். தில்லை மரச் செறிவால் ஓர் ஊர் தில்லை என்றே அழைக்கப் பட்டது; கடம்பமர அடர்வால், மதுரை கடம்பவனம் எனக் குறிக்கப்பட்டது. இவை போல இன்னும் பல

ஊர்கள் மலர்களால், மரங்களால், பெயர் பெற்றன. மலர்வழி நிலப்பெயர் அமையும் என்பதற்கு இவை சான்று.

உரிப்பொருள் பெயர் வேறு — நிலப்பெயர் வேறு

குறிஞ்சி முதலிய பெயரீடுகள், கருப்பொருள் அடிப்படையில் அன்றென அல்ல; புணர்தல் முதலான உரிப்பொருள் அடிப்படையிலேயே அமைந்தன எனில், புணர்தலைக் 'குறிஞ்சி' என்றும், இருத்தலை 'முல்லை' என்றும், ஊடலை 'மருதம்' என்றும், இரங்கலை 'நெய்தல்' என்றும், பிரிதலைப் 'பாலை' என்றும் கொண்டுவிடலாம்; புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என உரிப்பொருள்களை வேறு பெயரிட்டுக் கூறுதல் வேண்டா. ஆனால் தொல்காப்பியர், குறிஞ்சி முதலான நிலப்பெயர்களை வழங்கியதோடு அமையாமல் புணர்தல் முதலான உரிப்பெயர்களையும் தனியே வழங்கினர்.[21] வழங்கவே, உரிப்பொருட் பெயர்கள் வேறு, நிலப்பெயர்கள் வேறு, என்பது தெளிவாகிறது.

நிலப் பாகுபாடு

பாரித்த வையத்தைப் பகுத்துச் சுட்டும் போதும், பகுத்து உணர்த்தும் போதும், இவ்வையம் புணர்ச்சி வையம், இவ்வையம் இருத்தல் வையம், இவ்வையம் ஊடல் வையம். இவ்வையம் இரங்கல் வையம், இவ்வையம் பிரிதல் வையம், என்று கூறல் இயல்பு இல்லை. மாறுக. இது மலைப் பகுதி, இது காட்டுப் பகுதி, இது கடற் பகுதி, இது வயற் பகுதி, இது மணற் பகுதி என்று கூறுதல் இயல்பு; உலகியல் நடப்பு.

சூழலின் தாக்கம்

சுற்றுச் சூழல் மாந்தர்தம் ஒழுக்கத்தை மாற்றவல்லது. மலைச் சாரலும், தட்பக் காற்றும், குளிரும் இனிய பருவத்து இருபாலாரைக் கூட்டுவிக்கின்றன. குறிஞ்சிக்கு அமைக்கப்பட்ட பொழுதே நள்ளிரவு. நள்ளிரவு, மலைச்சாரல், குளிர் காற்று-தனிமை-ஆண் பெண்-புணர்ச்சி. இங்ஙனமே கொடும் வெயில்; மலையும் காடும் அழிந்து பொட்டைக் காடு ஆகும் அளவிற்குப் பஞ்சம்; மழை இன்மை; வறுமை; இல்லாமை, ஏழைமை முதிர்கிறது; முடிவு; களவு, திருடு, கொலை, கொள்ளை, பாலை நிலம், பஞ்ச நிலையின் குறியீடு; பாலையில், கொள்ளை - பாலை மக்களின் தொழிலாகிறது. பொருளற்ற நிலையே, தலைவனைத் தலைவியிடமிருந்து பிரித்துப் பொருள் தேட உந்துகிறது. எனவே, குறிஞ்சி நிலச் சூழல் கொஞ்ச வைக்கிறது; பாலை நிலச் சூழல் பிரிய வைக்கிறது. சூழலே மாந்தரை வாழவைக்கிறது; தாழவைக்கிறது. ஆம்; கருப்

பொருளே - உரிப்பொருளுக்கு அடிக்கல். உரிப்பொருள் கருப் பொருள் மேல் கட்டப்பட்ட கட்டடம்.

முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் முறைமையாற் சிறத்தல் (3)

கைக்கிளை முதலாகப் பெருந்திணை ஈறாக, அகம் எழு பிரிவினது அவற்றுள் கைக்கிளை, பெருந்திணை என்பன தமக்கென நிலம் இல்லாதன; சார்பெழுத்துப் போல்வன. எனவே முல்லை முதலான நிலங்களின்மேல் அவை நிகழும். நிகழவே, அவற்றிற்கெனக் கருப்பொருள் அடிப்படை வேண்டியதாயிற்று. இவ்வெழுதிணையும் மும்முப்பொருளைச் சார்ந்து இயங்கும். அம் முப்பொருளாவன :

1 முதற் பொருள்
2 கருப் பொருள்
3 உரிப் பொருள்

இம் மூன்றே அல்லது மூன்றில் இரண்டோ அல்லது மூன்றில் ஒன்றே அகச் செய்யுளில் பொதிந்து கிடக்கும். இம்மூன்றும் சிறப் பில் இணையானவையா? அல்லது ஏற்றத் தாழ்வு உடையவையா?

திணையைத் தீர்மானித்தல்

நச்சர். முதற்பொருளைவிடக் கருப்பொருள் சிறந்தது; கருப் பொருளைவிட உரிப்பொருள் சிறந்தது. ஆகவே உரிப்பொருளே சிறந்தது என்ற கருத்துப்பட உரையமைப்பர். பாரதியும், குழந்தையும் அவரைத் தொடர்ந்துரைப்பர். இளம். வேறுபடுவர். அவர்தம் கருத்துரை வருமாறு :

> "யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப் பொருளும் உரிப்பொருளும் வரின், முதற் பொருளால் திணை ஆகும் என்பதூஉம்; முதற் பொருள் ஒழிய இரண் டும் வரின் கருப் பொருளால் திணையாகும் என்பதூஉம் உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என் பதூஉம் ஆம்."

'முறை சிறந்தனவே' என்பதை ஒட்டிக் கருத்து வேறுபாடு எழுந்ததற்கு மூல காரணம் அகப்பாடல்களில் திணை குறித்து முடிவுகாணுதல் பற்றியே. குறிஞ்சிப் பாட்டொன்று உள்ளது. அதன்கண், குறிஞ்சிக்குரிய கூதிர் என்ற பெரும்பொழுதும், யாமம் என்ற சிறுபொழுதும்—என முதற்பொருள் அமையும்; முருகன், களிறு முதலான அத்திணைக்குரிய கருப்பொருள் அமை யும்; புணர்தல் ஆகிய உரிப்பொருள் அமையும். இவ்வாறு ஒரு

திணைக்குரிய முப்பொருளும் அமைந்துவிடின் அப்பாடலின் திணை 'குறிஞ்சி' எனக் கருதுவதில் சிக்கல் இல்லை. அல்லது இரு பொருளோ, ஒரு பொருளோ அமைந்துவிடினும் சிக்கல் இல்லை. இவ்வாறு அமையாமல், குறிஞ்சிக்குரிய முதற்பொருளை உடைய தாக, முல்லைக்குரிய கருப்பொருள் உடையதாக, பாலைக்குரிய உரிப் பொருளை உடையதாக ஒரே பாட்டு அமைந்துவிடின், அதனை எத்திணைக் குரியதாகக் கொள்வது என்பதுவே சிக்கல். இவ்வாறு சிக்கல் எழும்போது முப்பொருளும் உறழ்ந்துவரின் முதற்பொருளை வைத்துத் திணையைத் தீர்மானிக்க; முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையைத் தீர்மானிக்க; உரிப் பொருள் ஒன்று மட்டுமே வரின் அதனைக் கொண்டே திணையைத் தீர்மானிக்க. இஃது இளம். கருத்து.[22] சங்க இலக்கியப் பாடல் களுக்கு இப் பார்வையில் திணைப்பெயர் தீட்டப்பட்டுள்ளன

> "சங்கப் பாடல்களுக்குப் பெரிதும் முதற் கருப்பொருட் களை அடியொற்றியே திணைக்குறிப்பு தரப்பெற்றுள்ளது. மருதப் புலத்தை வடிக்கும் பாடல்கள் எத்திணை உணர் வினை வெளியிட்டாலும் மருதப் பாடல்களாகவே கொள் ளப் பெற்றன. ஆயின் மருத உரிப்பொருள் பிற புலங் களில் சென்று மயங்கிய நிலையில் அமைந்த பாடல்கள் வேறு திணைக்குரியனவாக அமைவுற்றன."

என்ற சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்கள் பற்றிய ஆய்வுச் செய்தி[23] பண்டைய திணைப் பார்வையைக் காட்டுவதாகும். இந்த அமைவே இளம்பூரணரை முன் கண்டவாறு எழுதச் செய்தது.

உரிப்பொருள் – உயிர்ப்பொருள்

இலக்கியப் பார்வையில் முப்பொருளில் எது சிறந்தது? முதற் பொருளா? கருப்பொருளா? உரிப்பொருளா? உரிப்பொருளே உயிர்ப்பொருள். உரிப்பொருளை விளக்க வந்தனவே மற்றைய இரண்டும். அவை உடலும், அணிகலன்களுமே. திணை துறை குறித்தோர். முதற் பொருளுக்கும், கருப்பொருளுக்கும் தலைமை கொடுத்தனர். எனினும் முன்னோர் முதற்பொருள் இல்லாப் பாட் டைக் கட்டினர்; காட்டினர். கருப்பொருள் இல்லாப் பாட்டைக் கட்டினர்; காட்டினர். ஆனால் உரிப்பொருள் எதுவுமே இல்லாப் பாட்டைக் கட்டினரா? காட்டினரா? இல்லை. அஃது ஒன்றே உரிப் பொருள் பாட்டின் உயிர்ப்பு என்பதைப் புலப்படுத்தும். எனவே உரிப்பொருளைத் தலைமையாகவும், பிற இரண்டைத் துணைமை யாகவும் கொள்ளலே இலக்கிய நீதி.

திணை மயக்கம்

திணை ஐந்து என்றும், அவை ஒவ்வொன்றிற்கும், இன்னின்ன முதற்பொருள், இன்னின்ன கருப்பொருள், இன்னின்ன உரிப் பொருள் என்றும் வரையறுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒரு திணைக்கு உரியவை, இன்னொரு திணையுடன் சென்று உறழ்வது திணை மயக்கம் எனப்படும். அது முதற்பொருள் மயக்கம், கருப் பொருள் மயக்கம், உரிப்பொருள் மயக்கம் என மூவகை. இவை 'திணை மயக்கம்' (14), 'நில மயக்கம்' (14) உரிப்பொருள் அல்லன மயக்கம்' (15), 'வந்த நிலத்தின் பயந்த மயக்கம்' (21) எனத் தொல்காப்பியரால் சுட்டப்படும்.

உரிப்பொருள் மயங்காது

மயக்கம் பற்றிக் கூறுகின்ற மூன்றிடங்களிலும் (14, 15, 21) தொல்காப்பியர், பிற மயக்கங்களை வெளிப்படையாகக் கூறி, உரிப்பொருள் மயக்கத்தைக் குறிப்பாகவும் கூறுமல் விட்டது பார்வைக்குரியது. அன்றியும் 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்று நூற்பிப்பதால், உரிப்பொருள் அல்லாதன மயங்கும்; வரையறுக்கப் பெற்ற உரிப்பொருள் மயங்காது' என்பது எதிர்மறையாக, ஆனல் தெளிவாகத் தொல்காப்பியரால் வரையறுக்கப் பெற்றது. எனவே உரிப்பொருள் மயக்கம், தொல் காப்பியர்க்கு உடன்பாடு அன்று.

நச்சர்., திணை என்பதற்கு ஒழுக்கம் எனப் பொருள் கொண்டு, 'திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே' (14) என்ற நூற்பாவின் மூலம் உரிப்பொருள் மயக்கம் கூறப்பட்டது என வாதிடுவர். இந் நூற்பாவையும் பிறிதொரு வகையில் பொருளுரைத்து இந்நூற்பா உரிப்பொருள் மயக்கம் கூறிற்று என்பர் பாரதி. எங்கு எவ்வொ ழுக்கம் நிகழினும் அதனல் நிலத்தியல் மாறுது; காடு, புணர்ச்சி நிகழ்வதால் குறிஞ்சி ஆகாது; முல்லை நிலமேயாம். பிரிவாற்றுக் குற மகளிர் இரங்குவதால் மலை நிலம், நெய்தல் ஆகாது; குறிஞ் சியே யாம்' என்பர் பாரதி.[24]

முதல், கரு, உரி மயங்கும் வகை

ஒன்றுடன் ஒன்று சென்று கலப்பது மயக்கம் எனில் நின்று பெற வேண்டிய ஒன்று இருத்தல் வேண்டாவா? தண்ணீர் கலப்பது, சர்க்கரை கலப்பது, தேன் கலப்பது எனில் இவற்றை எல்லாம் வாங்கிக் கொள்ளும் பால் என்ற ஒன்று வேண்டும் அல்லவா? நிலம் கலக்கும்; காலம் கலக்கும்; கருப்பொருள் கலக்கும் எனில், இவை எதனுடன் கலக்கும்? புணர்தல் என்ற உரிப் பொருளில் கலக்கும்; இருத்தல் என்ற உரிப்பொருளில் கலக்கும்;

ஊடல் என்ற உரிப்பொருளில் கலக்கும். இரங்கல் என்ற உரிப் பொருளில் கலக்கும்! பிரிதல் என்ற உரிப்பொருளில் கலக்கும்; ஆம்; உரிப்பொருள் எதனுடனும் கலவாது; மயங்காது. ஆனால் அதனுடன் முதற் பொருளும், கருப்பொருளும் சென்று கலக்கும். அன்றியும் அவ்விரண்டும் தம்முடன் தாமும் கலக்கும்.)

முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் மயங்கும்; அவை இரண்டும் பாலை நிலத்துடன் மயங்கும்: நெய்தல் நிலமும், மருத நிலமும் மயங்கும், இவை தம்முள் மாறி மாறி மயங்கும். நண்பகலில் மாலை மயங்கும்; வைகறையில், நள்ளிரவு மயங்கும். குறிஞ்சி பூத்த மலைச் சோலையில் முல்லை பூக்கும்; மருத நிலத்தில் மாயோன் இருப்பான்! ஆக, முதற்பொருள் தம்முள் மயங்கும்; கருப் பொருள் தம்முள் மயங்கும்; அவை, உரிப்பொருளுடனும் மயங்கும். ஆனால் உரிப்பொருள் தம்முள் மயங்குதல் இல்லை; தம்முள் மயங்குவதாகப் பாடல் செய்வதில்லை. குறிஞ்சிப் பாட்டுப் புணர்ச்சியே கூறும்; முல்லைப்பாட்டு இருத்தலை முழங்கும்; மருதப் பாட்டு ஊடலைப் பாடும்; நெய்தற் பாட்டு இரங்கிக் கலங்கும் பிரிதற் பாட்டுப் பிரிவைப் புலம்பும். அவற்றுள் மயக்கம் இல்லை; எனவேதான் இளம்., 'உரிப்பொருள் மயங்கி வாராது' என்று குறிப்பு எழுதினர். ஆகவே, உரிப்பொருள் மயங்கும் என்ற பொருளைக் கூறும். நச்சர்., பாரதி, குழந்தை, அருணாசலம்பிள்ளை ஆகியோர் உரை, ஆசிரியர் கருத்தை அரண் செய்வதாகாது. 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' (15) என்ற நூலாசிரியர் கூற்று உரிப்பொருளில் மயக்கமின்மையை எதிர்மறை முகத்தான் மெய்ப்பிக்கும்.

உரிப்பொருள் அல்லன யாவை?

'உரிப்பொருள் அல்லன' என்பதற்குக் கருப்பொருள், முதற் பொருள் என்றுரைத்தனர் இளம். கைக்கிளையும், பெருந்திணை யும் என்றுரைத்தனர் நச்சர்., குழந்தை, மு. அருணாசலம் பிள்ளை ஆகியோர். கொண்டு தலைக் கழிதல், பிரிந்தவண் இரங்கல், கலந்த பொழுது, காட்சி முதலாயின எனப்பொருள் கண்டனர் பாரதி. 'திணைமயக்குறுதல்' (14) என்ற நூற்பாவால், முதற்பொருள் மயக் கத்தையும் 'எந்நில மருங்கில்' (21) என்ற நூற்பாவால் கருப் பொருள் மயக்கத்தையும் கூறியவர், மீண்டும், கூறியது கூறலாக உரிப்பொருள் அல்லாத முதற்பொருளையும், கருப்பொருளையும் சுட்டுதல் வேண்டா என்று கருதினர் பாரதி.[25] அவ்வாறு கொண்டமையாலேயே புதுப்பொருள் நாடினர். அவர் நாடியது முறையே எனினும் முடிவு கூறியது பொருந்துவதாக இல்லை. அருகன், இடும்பன், உருவன் என மூவரை நிறுத்தி, 'உருவன்

அல்லாத' மற்றவர் வருக, என அழைப்பின் கந்தனும், கடம்பனுமா வருவர்? அருகனும், இடும்பனுந்தானே வருவர். அவ்வாறு வருதலே முறைமை. அதனைப் போல முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் படித்துப் படித்துக் கூறி, உரிப்பொருள் அல்லன எவை எனில் முதற்பொருளும், கருப்பொருளும் என விடை இறுப்பதே முறைமை. எனவே, அவ்விரண்டையும் போற்றும் உரையே பொருத்தம். 'திணை மயக்குறுதலும்' என்ற நூற்பாவை முன் கூறித் தொடர்ந்து இந்நூற்பாவைக் கூறியது, குற்றமல்லவா என்பர். முறையே இந்நூற்பா, திணை மயக்குறுதல் என்ற நூற்பாவிற்கு முன்பே இருந்ததாதல் வேண்டும். முன்னே தொகுத்துக் கூறிப் பின்னே விரித்துக் கூறுதல், தொல்காப்பியர் நூற்பிக்கும் முறை.[26] திணைமயக்குறுதல் (14) என்ற நூற்பாவிற்கு முன்பாக (13) இருந்து, ஓலைப் பிறழ்ச்சியால், ஏடு பெயர்த்து எழுதியோர், பிற்காலத்துப் பின்னே பதினைந்தாம் நூற்பாவாக எழுதினர் போலும்.[27]

கைக்கிளையையும், பெருந்திணையையும் இங்கே கொண்டு கூறுதல் வழு. 'உரிப்பொருள் அல்லன' என்பதற்குப் பொருந்தும் பொருளாகவும் இல்லை. 42 ஆம் நூற்பாவரை நடுவணைந்திணை ஒத்து; 43 – 49 வரையுள்ள நூற்பாக்கள் பொது ஒத்து; 50,51 ஆம் நூற்பாக்களே கைக்கிளை, பெருந்திணை ஒத்து. அதனைத் தொடர்பு எதுவும் இன்றி இங்கே கொணர்ந்து பொருத்துவது பொருந்தாது.

பொழுதுகளின் எண்ணிக்கை

திணைச்குரிய பொருளோ முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றுக்குவர். அம்முப்பொருள்களுள், நிலமும், பொழுதும் முதற்பொருளாம். அவ் விரண்டனுள், நிலம், முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐவகை. அவ் வைந்தனுள் பாலை நடுவில் உள்ளது. நான்கு நிலமும் ஆகாது அவற்றின் வேறும் ஆகாது நடுவண் இருப்பதால் அது நடுவணது எனப் பட்டது. நடுவணதாகிய பாலைநிலம் நீங்கலாக, உலகம் முல்லை நிலம், குறிஞ்சி நிலம், மருத நிலம், நெய்தல் நிலம் என நான்காகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

பெரும்பொழுது

நிலத்திற்குரிய பொழுதுகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவை பெரும்பொழுது, சிறுபொழுது என இரு கூறு. அவற்றுள் பெரும்பொழுது ஆறு. அவை கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற் காலம். முதுவேனிற் காலம் என்பன. ஆறு என்ற தொகைக் குறியீடு தொல்காப்பி

அட்டவணை 7

சிறுபொழுது பற்றி ஆசிரியர் கருத்துகள்

எண்	ஆசிரியர்	1	2	3	4	5	6
1	தொல்காப்பியர்	வைகறை	விடியல்	நண்பகல்	எற்பாடு	மாலை	யாமம்
2	இளம்பூரணர்	வைகறை	விடியல்	நண்பகல்	எற்பாடு	மாலை	யாமம்
3	நச்சினார்க்கினியர்	வைகுறு	விடியல்	நண்பகல்	எற்பாடு	மாலை	யாமம்
4	சோமசுந்தர பாரதி	வைகுறு	விடியல்	நண்பகல்	எற்பாடு	மாலை	யாமம்
5	புலவர் குழந்தை (5)	வைகுறு	காலை	நண்பகல்	———	மாலை	யாமம்
6	மு. அருணாசலம் பிள்ளை (6) (ப. 102)	வைகுறு	காலை	நண்பகல்	எற்பாடு	மாலை	யாமம்
7	இறையனார் களவியல் (ப. 18) உரை (5)	வைகுறு	எற்படு	நண்பகல்	———	மாலை	யாமம்
8	நம்பி அகப்பொருள் (5) (நூ. 12)	வைகுறு	எற்படு காலை	நண்பகல்	———	மாலை	யாமம்
9	சிவஞான முனிவர் (5) (ப. 41, 42)	வைகுறு	எற்படு காலை	நண்பகல்	———	மாலை	யாமம்

யத்துள் இல்லை. அஃது உரையாசிரியர்களால் பெறப்படுவதுவே. கார் (6), கூதிர் (7), பனிஎதிர் பருவம் (8), வேனில் (11), பின்னி (12) என்ற பெயரீடுகளே தொல்காப்பியத்துள் உள்ளன. இவற்றிற்குரிய மாதக் கணக்கீடுகள் மூலநூலுள் இல்லை. எனினும் உரை நூல்கள் அவற்றை விரித்துரைக்கும்.

சிறுபொழுதுகள்

மாலை (6), யாமம் (7) வைகறை (8), விடியல் (9), எற்பாடு (10), நண்பகல் (11) என்று சிறுபொழுதுகளைத் தொல்காப்பியர் குறிப்பர்.[28] 'வைகறை விடியல் என்பதற்கு மாறுக 'வைகுறு விடியல்' என்ற பாடத்தை மேற்கொண்டு 'இராப்பொழுது தங்குதல் உறும் விடியல்' என விளைத்தொகையாகப் பொருள் உரைப்பர் சிவஞான முனிவர். ஏனைய நிலங்கள் ஒவ்வொரு சிறுபொழுதே பெற்றிருக்க, மருதம் மட்டும் இரண்டு சிறுபொழுதுகளைப் பெற்றதெனல் ஒழுங்கின்மை ஆகும் என்பர். எற்பாடு என்பதனைக் கதிரவன் மறையும் பிற்பகலாகக் கொள்ளாமல், கதிரவன் எழும் காலைப் பொழுதாகக் கூறுவர். படு-பாடு என்பதற்குத் தோன்றுதல் எனப் பொருளுரைப்பர். சங்க இலக்கியக் குறுந்தொகைப் பாட்டும் பொழுது ஐந்தே என்றுரைக்கும் என்பர்.

> 'காலையும் பகலும் கையறு மாலையும்
> ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப்
> பொழுதிடை தெரியின் பொய்யே காமம்'

எனவரும் குறுந்தொகைப் பாட்டைக் காட்டுவர் (32). முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற நிலன் ஐந்திற்கும், மாலை, யாமம், வைகறை, காலை (எற்பாடு) நண்பகல் எனப் பொழுது ஐந்துளதைக் கூறலே பொருத்தம் என்பர். (பார்க்க : அட்டவணை 7)

வைகறையும் விடியலும்

வைகுறு விடியல் என்ற தொடரை எண்ணும்மைத் தொகை ஆக்கி, வைகறையும் விடியலும் எனப் பொருள் விரித்தால் பொழுது ஆறு. 'இரவு தங்கு விடியல்' என விளைத்தொகை ஆக்கிப் பொருள் விரித்தால் பொழுது ஐந்து. வைகறை வேறு, விடியல் வேறு என்று கொள்வதே சங்க இலக்கிய முறைமை.[29] மாலை யாமம், வைகறை என்பன இரவின் மூக்கூறு: விடியல், நண்பகல், எற்பாடு என்பன பகலின் மூக்கூறு. அன்றியும் பெரும்பொழுது ஆறு, சிறுபொழுது ஆறு எனலே நிரல்முறை. இவ்வாறு கொள்ளுதலே ஒழுங்கு அழகை ஊட்டும்.

எற்பாடு - எது?

எற்பாடு என்பதைக் கதிர் தோன்றும் காலைப் போதாகக் கொள்ளுதல் சொற்பொருள் மரபு அன்று. கதிரவன் மறை பொழுதைக் குறித்தலே மரபு. சேர நாட்டார், பிற்பகலைப் 'படு ஞாயிறு' (படி நாயிறு) என்றே வழங்குவர். 'பகல் மாய் அந்திப் படுசுடர் அமையம்' என்றும், 'பல்கதிர் வாங்கிய படுசுடர் அமை யம்' என்றும் வரும் அகநானூற்று (48,213) ஆட்சிகளும், 'படுசுடர் அடைந்த பகுவாய் நெடுவரை' என்ற நற்றிணை (33) ஆட்சியும் எற்பாடு என்பதை எல்-கதிர்; படு-மறை, 'கதிர்மறை பொழுது' எனப் பொருள் கோடலே பொருத்தம் என அறிவிக்கின்றன.[30]

எற்பாடு - காலைப் பொழுதா?

எற்பாடு, கதிர் தோன்றும் காலை எனப் பொருள் கொண்ட சிவஞான முனிவர், அதனை நெய்தல் திணையோடு தொல்காப்பியர் இணைத்துச் சொல்லுதலை விளக்கவேண்டியவராயினர். அவர் தரும் விளக்கமாவது :

> 'தலைவன் பிரிந்துழித் தனித்திருந்த தலைவி இராக்காலம் முழுவதும் கொன்னே கழிந்தமை பற்றி இரங்குதற்குரிய காலம் அதுவாம்'

என்பர். 'எற்பாடு' என்பதைப் பகலின் பிற்கூறாகக் கொண்ட இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தம் உரைக்குத் தக, பொழுதைப் பொருத்திக் காட்டுவர்.

'தனிமையுற்று இரங்குவார்க்குப் பகற் பொழுதிலும் இராப் பொழுது மிகும் ஆதலின். அப்பொழுது வருதற் கேதுவாகிய எற் பாடு கண்டார். இனி வருவது மாலை என வருத்த முறுவர்' என் பது இளம். விளக்கம்.

'வெஞ்சுடர் வெப்பம் நீரத் தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நீழற் செய்யவும் தண்பதம் பட்ட தெண்கழி மேய்ந்து பல்வேறு வகைப் பட்ட புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்கு பெயரவும், புன்னை முதலிய பூவினுற்றம் முன்னின்று களுற்றவும், நெடுந்திரை அழுவத்து நிலாக்கதிர் பரப்பவும், காதல் கைமிக்குக் கடற்கானலும் கானற் கானலும் நிறை கடந்து வேட்கை புலப்பட உரைத்தலின் ஆண்டு காமக் குறிப்பு வெளிப்பட்டு இரங்கற் பொருள் சிறத்தலின் எற்பாடு நெய்தற்கு வந்தது' என்பது நச்சர்தம் விளக்கம்.

எற்பாடு மாலைப் பொழுதே

மூவர்தம் விளக்கங்களை, நெய்தற் பாக்களுடன் பொருத்தி ஆராயின், நெய்தற்குரிய பொழுது எல்எழு காலையா, எல் விழு மாலையா என்பது புலனாகிவிடும். சான்றாக, நெய்தற் கலிப்பாடல் களை நோக்குக. (118, 119, 120) அவற்றுள், மாலை கண்டு, தலைவி "மாலை நீ! என அழைத்து,

'வெள்ள மான் நிறம் நோக்கிக் கணை தொடுக்கும்
கொடியோன் போல்
அல்லற்பட்டு இருந்தாரை அயர்ப்பிய வந்தாயோ?
போர் தொலைந்து இருந்தாரைப் பாடு எள்ளி நகுவார்
போல்
ஆர் அஞர் உற்றாரை அணங்கிய வந்தாயோ?
வெந்தது ஓர் புண்ணின்கண் வேல்கொண்டு நுழைப்பான்
போல்
காய்ந்த நோய் உழப்பாரைக் கலக்கிய வந்தாயோ?'

என்று தலைவி, மாலைப் போதின் வரவு கண்டு குழறுவள். அப் பாடல்களில், கதிரவன், மேலைத்திசையில் மறையும் குறிப்புகள் 'எல் படுதலைத்' தெளிவுறுத்தும்.

பல்கதிர் ஞாயிறு பகல் ஆற்றி மலை சேர (118)
அகன்ஞாலம் விளக்கும் தன்பல் கதிர் வாயாகப்
பகல் நுங்கியது போலப் படுசுடர் கல் சேர (119)
அருள்தீர்ந்த காட்சியான் அறன்நோக்கான் நயம்
செய்யான்
வெகுளுற உய்த்தவன் நெஞ்சம் போல், பைய
இருள்தூர்பு, புலம்பு ஊர கணைசுடர் கல் சேர (120)

என வரும் நெய்தற் கலி அடிகள், நெய்தல் இரக்கம், காலைப் பொழுதினும், மாலைப் பொழுதுடன் தொடர்புடையது என்பதை யும், 'மாலை வரப்போகிறதே வந்து விட்டதே' என எற்பாட்டுப் பொழுதில் தலைவி துடிப்பதையும் எடுத்துரைக்கும்.

'காலை அரும்பிப் பகல் எல்லாம் போதாகி
மாலை மலரும் இந் நோய்'[31]

என்ற திருக்குறள் காதலி, மாலை வரவு கண்டு மயங்குவள்; வருந் துவள். நெய்தல் நிலக் காதலி, தன் காதலன் கடற்சேர்ப்பனைத் தேடுவாளாய்க் கானல் வரிப் பா இசைப்பள். அப்பொழுது 'கதிரவன் மறைந்தனனே' 'கதிர் விழுங்கி வந்தது இம்மருள் மாலை' எனக் கலங்குவள்.[32]

ஆக இலக்கியச் சான்றுகளையும், முன்னோர் உரைமரபுகளையும் ஆராயின் 'எற்பாடு' என்பதைப் பகலின் பிற் கூறுகக் (பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை) கொள்ளுதலே பொருத்தமாம். விடி பொழுதைவிட, மடி பொழுதே மகளிரை மயக்கும். ஆதலின் எல் விழு பொழுதே, நெய்தற் பொழுது; எல்எழு பொழுது அன்று.

கருப்பொருள்

காடு, மலை, வயல், கடல், பாலை என்ற இடஞ்சார்ந்து, பொழுது விடியும்; மடியும். கதிர் விடிவிற்கும், முடிவிற்கும் இடைப்பட்ட பகல், இரவைச் சார்ந்து உலகு இயங்கும். அவ்வுல கின் பருவங்களுக்கு ஏற்ப உயிர்கள் தவிக்கும்; தழைக்கும்: பிழைக்கும் நிலத்தோற்றம் முன்னது; அதன்கண் உயிர்த்தோற்றம் பின்னது. எனவே, முன்னதாகிய நிலத் தோற்றத்தையும், அதற்குரிய பொழுதுகளையும் முதற் பொருள் என்றனர்: அவற்றைச் சார்ந்து தோன்றும் பொருள்களை இரண்டாவது ஆக்கிக் கருப்பொருள் என்றனர்; அன்றியும் கருப்பொருள்கள் நிலமன்றித் தோன்ரு; பொழுது இன்றித் தழைக்கா; எனவே கருப்பொருள்களுக்குக் காரணம் நிலமும் பொழுதும் என்ற கருத்தில் முதல் (காரணம்) பொருள் என்றனர். முதற்பொருளாகிய நிலங்களுக்கும்,பொழுது களுக்கும் மூலம் தெரியாது; அடிமுடி அறிய ஒன்னாது. அவை முதல் என்பது தெரியும். அம் முதலிற்கு எது முதல் அல்லது எவை முதல் என்பது தெரியாது. ஆனல், தலைமக்கள், விலங்கு, மரம், பறவை, பூ என வரும் கருப்பொருள்களுக்குக் கரு எது எனத்தெரியும். அவை கருவிலிருந்து வருவன என்பது தெரியும். கரு எது எனத் தெரிவன பெரும்பான்மை இருத்தல் பற்றி, அவற் றைக் கருப்பொருள் என்றனர் போலும். பின்னே வரும் உரிப் பொருளுக்கு இப்பொருளே கரு என்பது பற்றிக் கரு என்ற கருத் தினர் போலும். குறிஞ்சி மலை அணைய வைக்கும்; பாலை வெயில் பிரிய வைக்கும். குறிஞ்சிக்குளிர் இணைக்கும்; பாலை அனல் பிரிக்கும்; குறிஞ்சி வளம், காதலன் காதலியரைச் சேர்க்கும்: மழையற்ற பாலை வனம், அவர் தம்மைப் பொருள் தேடப் பிரிப் பிக்கும்! எனவே புணர்தல் உரிப்பொருளுக்குக் குறிஞ்சிக் கருப் பொருளும் காரணம்; பிரிதல் உரிப்பொருளுக்குப் பாலைக் கருப் பொருட்களும் காரணம்! முதற்பொருளைச் சார்ந்து வருதலானும், உரிப்பொருளுக்குக் காரணமாய் இருத்தலானும் கருப்பொருள் நடு நாயகமாயிற்று. தொல்காப்பியர் தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, தொழில், யாழ், பண் என்பவற்றைக் கருப் பொருளாகக் கூறுவர். உரையாசிரியரும், பின் வந்த நாற்கவிராச நம்பி போன்ற இலக்கண ஆசிரியரும் கருப்பொருட் பட்டியலைப்

பெரிதாக்குவர். 'அவ்வகை பிறவும்' என்ற கருப்பொருள் நூற்பா அடி (20) பின் வந்தோர் கூறுபவற்றை ஏற்கும்.

நெய்தல் விலங்கு

ஒவ்வொரு திணைக் கருப்பொருள் நிரலுள்ளும், மா என்பது குறிக்கப்படும். மா --எனில் விலங்கு என்று பொருள். அது வீட்டு விலங்கையும், காட்டு விலங்கையும் குறிக்கும். நெய்தல் விலங்குப்பட்டியலில், முதலை, சுறா என்பவற்றைக் காட்டுவர் இளம். அதனை மறுப்பர் நச்சர். அவை இரண்டும் மீன்கள் ஆகலின், அவை, நெய்தல் நிலக் கருப்பொருள் ஆகா என்பது அவர்தம் கருத்து

கராமும், சுறவும் விலங்கே

மீனை விலங்கு எனக் குறித்தது பிழை அன்று. விலங்கியலுக் கிணங்க, திமிங்கிலம் கடல்வாழ் விலங்கே. ஆனால் அதனையும் தமிழர், பெருமீன் என்றே குறித்தனர்.[33] கரையில் யானையைப் பெரிய விலங்காகப் பார்த்துப் பழகிய கண்கள், கடல் வாழ் பெருமீனைக் 'கடலானை, நீரானை' எனக் குறித்தன. இவ்வாறு குறிக்கும் வழக்கு இன்றும் மலையாள மீனவரிடை உள்ளது. காட்டில் களிறு வேட்டை ஆடுதல் போல, கடலில், மீன் வேட்டை ஆடினர். அவ்வாறு மீன் வேட்டை ஆடுவதைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும்.[34] நெய்தல் நில மாந்தர்தம் தொழில்களுள் ஒன்றாக மீன்படுத்தலையும், நெய்தல் பறையாக மீன்கோட் பறையையும் குறித்துக் கொண்ட நச்சர், கராவையும் சுறுவையும் 'மீன் ஆதலின், மா என்றல் மரபன்று' என விலக்கியமை பொருத்தமின்று. கராம், சுறு முதலாய கடல்வாழ் உயிர்களையும் தொல்காப்பியர், நிலம் வாழ் உயிர்களுடன் சார்த்தி மரபியலில் விளக்குவர்.[35] யானை, குதிரை, எருமை முதலாயின 'கன்று' என்ற சொல்லைப் பெறுதலைப் போல, கராமும் கன்று என்ற சொல்லைப் பெறும். (17); புல்வாய், புலி, உழை, மரை, கவரி, கராம் என்பன ஒருத்தல் என்ற ஆண்பாற் பெயரைப் பெறும். (37); எருமை, மரை ஆகியன போலக் 'கடல் வாழ் சுறுவும், ஏறு என்ற ஆண்பாற் பெயரைப் பெறும் (42); பெற்றம், எருமை, புலி, மரை, புல்வாய் ஆகியன 'போத்து' என்ற ஆண்பாற் பெயரைப் பெறுதலைப் போல, நீர்வாழ் சாதி ஆகிய முதலை போன்றனவும் அப்பெயரைப் பெறும் (44). இதுவரை கண்டவை, கராம், சுறு என்பவற்றை விலங்குப் பட்டியலில் இணைத்தது மரபன்று என்ற நச்சர். கருத்துச் சரியன்று. அன்றியும் தற்கால உயிர் அறிவியல், நீர்வாழ் உயிர்களையும் விலங்கின வகையாகவே போற்றும். எனவே இளம்., கராம், சுறு என்பவற்றை நெய்தல் விலங்காக்கிக் கூறியது மரபு மீறல் அன்று.

திணைக்குரிய மக்கட் பெயர் (22 - 26)

ஒவ்வொரு திணைக்குரிய கருப்பொருளைக் கூறும் இயலில், தெய்வம், உணவு முதலானவற்றைத் தொல்காப்பியர் இருபதாம் நூற்பாவில் கூறினர். அதனை அடுத்து அப்பொருள்களின் மயக்கத்தை மொழிந்தனர். தெய்வம் முதலாயவற்றை மொழிந்தவர். திணைக்குரிய தலைமக்களை மொழியவில்லை. தலைமக்களின் பங்கு, பாங்கு என்பவற்றின் முதன்மை கருதி, ஐந்து நூற்பாக்களில் தலைமக்களைத் தனியே விரித்து மொழிவர் (22– 26). இந்நூற்பாக்களில் பெயர், வினை, திணைப்பெயர், ஆகிய இருபொருட் குறியீடுகளும், 'ஏனோர்' (24—26) போன்ற மயக்கச் சுட்டுகளும் கிழவர், அடியோர், வினைவலர், ஏவல்மரபு ஆகிய சமுதாயச் சிக்கலைக் காட்டும் மொழியீடுகளும், உரையாளர் இடையே கருத்து வேறுபாட்டை உருவாக்கி விட்டன.

அனைவரும் அகன் ஐந்திணைக்கு உரியர் என்பர் ஒரு சாரார் (அவர் யார் யார் என்பதை அட்டவணை 8 காட்டும்). முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலைத் திணைக்குரியார் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகியோரே. அவர் கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்களுக்கு உரியர் ஆகார். அடிமை, வினைவலர் ஏவலர் என்ற இழிந்தோரே கைக்கிளை பெருந்திணைக் குரியார் - என்பவை அவர்தம் கருத்து. இக்கருத்தை மறுத்து மொழிவோர், "தொல்காப்பியர் காலத் தமிழுலகில் தமிழரிடைப் பிறப்பளவில் என்றும் உயர்வு தாழ்வுடன் வேறுபாடு உடைய சாதி வகுப்புகள் கிடையா."[36] 'அடியோர், வினைவலர்க்கும்' அகத்திணை ஒழுக்கங்களை நாட்டிச் செய்யுள் செய்தல் விலக்கில்லை'[37] என்று உரைப்பர்.

ஏற்றத்தாழ்வுள்ள சமுதாயம்

நிலவுடைமைச் சமுதாயமும், அரசுகளும் உருவாகிவிடுமானால் அங்கே ஏற்றத் தாழ்வுகளும் புகுந்துவிடும். தொல்காப்பியர் காலச் சமுதாயம் ஏற்றத் தாழ்வற்ற சமூகம் என்பதைவிட, அஃது ஓரளவு ஏற்றத் தாழ்வுடைய சமூகம் என்பதை அரண் செய்யும் சான்றுகள் நூல் உள்ளே உள்ளன.

தொல்காப்பியச் சமுதாயம்

கிழவன், கிழத்தி போன்ற சொற்களைத் தொல்காப்பியர் ஆளுவர். இவை நிலஉரிமை உருவாகிவிட்டமையைக் குறிப்பாக உணர்த்தும். மண்நசை போருக்குக் காரணம் எனத் தொல்காப்பியர் வஞ்சித்திணையில் உரைப்பர். இக்குறிப்பு, அரசுகள் நிலப் பற்றுக் காரணமாக இயங்கினதைக் காட்டும். தலைவன், தலைவி போன்ற சொல்லாட்சிகள், பொதுமக்களிடமிருந்து, பிரித்துக்

ஏற்றத் தாழ்வு பற்றிய தொல்காப்பிய ஆட்சிகளும்

எண்	தலைமக்கள் பெயர்	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
1	பெயர் (22)	குலப்பெயர்	பெயர்ப்பெயர்
2	வினைப்பெயர் (22)	தொழிற்பெயர்	வினைப்பெயர்
3	திணைநிலப்பெயர்	நிலத்திற்குரியகீழ் மக்கள் பெயர்	குலப்பெயர், உரிப் பெயர்
4	ஆயர் (23)	நிரை மேய்ப்பார் (முல்லை)	பொருட்பெயர் முல்லைப் பெயர்
5	வேட்டுவர் (23)	வேட்டைத் தொழில் செய்வார் (முல்லை)	குறிஞ்சிப் பெயர்
6	கிழவர் (23)	ஆள்வோர், வாழ் வோர் (தலைமக்கள் மக்கள்)	தலைவன், தலைவியர்
7	ஏனோர் (24)	குறிஞ்சி முதலான பிற நிலத்தார்	பாலை, நெய்தல் நிலத்தார்
8	ஆனு வகை (24)	அவ்விடத்து அவ் வகை	பாலை, நெய்தல் மருத நிலமக்கள் தலைமை பெரும் பான்மை
9	அடியோர் (25)	அடித்தொழில்செய் வார்	குற்றேவலர்
10	வினைவலர்	வினை செய்வார்	ஏவலர்
11	புறத்து	கைக்கிளை, பெருந் திணை	கைக்கிளை பெருந் திணை
12	ஏவல் மரபின் ஏனோர் (26)	ஏவுதலைச் செய்யும் உயர்ந்தோர் கைக் கிளை, பெருந்திணை	அந்தணர், அரசர், வணிகர், குறுநில மன்னர் சிறப்புற் றோர், ஐந்திணை வேளாளர்

உரையாளர் தரும் பொருள்களும்

சோமசுந்தர பாரதி	புலவர் குழந்தை	மு. அருணாசலம் பிள்ளை
நிலப் பெயர்	பெயரடிப் பெயர்	பிறந்தநிலம் பற்றிய பெயர்
வினைப்பெயர்	வினையடிப்பெயர்	வினைப் பெயர்
திணைக்குரிய மக்கட் பெயர்	நிலப்பெயர், உரிப் பொருட் பெயர்	
முல்லைப் பெயர்	முல்லைப் பெயர்	முல்லைப் பெயர்
முல்லைப் பெயர்	குறிஞ்சிப் பெயர்	குறிஞ்சி, பாலைப் பெயர்
அகத்திணைக்குரியவர்	தலைவன் தலைவியர்	தலைவன் தலைவியர்
பிறநில மக்கள்	மற்ற நிலமக்கள்	மருத, நெய்தல் நில மக்கள
சுருங்கக்கூறி அமையா	உரிப்பொருள் பலவாம்	மருத, நெய்தல் வழி தலைமக்கள பெயரே பெரும்பான்மை (ப. 258)
அடிமை	குற்றேவலர்	அடியோர்
தொழிலாளர்	நெட்டேவலர்	வினைவலர்
நானில மக்களின் திணைப்பெயர் வகுப்பில் அடங்காத ஐந்திணை ஏவலர்	கைக்கிளை, பெருந் திணை	கைக்கிளை, பெருந் திணை
(ஐந்திணை)	அந்தணர் முதலான நால்வரும் குறுநிலமன்னரும் (ஐந்திணை)	மறவர், தானைத் தலைவர், குறுநில மன்னர், அந்தணர் முதலான நால்வர் (ஐந்திணை)

குழுத் தலைமக்கள் செல்வாக்குப் பெற்றதைப் புலப்படுத்தும். அரசர்க்குப்படை, கொடி, குடை, முரசு முரவி, களிறு, தேர், நார், முடி முதலாயின (616) உரியவை என்பர் தொல்காப்பியர். அரசு, அரசன் வேந்தன் ஆகிய சொற்களோ பெய்வர். வேறுபட்ட மூன்று அரசுகள் என்பர். அரசர் தம்முள் முரணுவர் என்பதை 'உடல் வேந்து' (61) என்று குறிப்பர்; அவரிடை பகை இருந்தது என்பதை 'உறுபகை வேந்து என்பர் (61). இவை அவர் காலத்தில் அரசு நிலைபெற்றிருந்தமையைக் காட்டும். அரசர்க்குரியவை, இழிந்தோர்க்கு இல்லை (629) என்பதால், அரசன் உயர்வையும், மற்றவர் தாழ்வையும் புலப்படுத்துவர். சிலரை 'உயர்ந்தோர்' எனப் போற்றுவர் (28,33, 36). சிலரை 'மேலோர்' என உயர்த்துவர் (31). இவை பிறப்பு அடிப்படை வருணத்தையோ, சாதியையோ காட்டுகின்றனவா என்பது ஒருபுறம் நிற்க, இவை, தொல்காப்பியர் காலச் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு இருந்ததை உறுதி செய்வன. இந்தச் சான்றுகளை உளத்துள் கொண்டு, 'அடியோர், வினைவலர், ஏவல் மரபின் ஏனோர் என்ற தொல்காப்பியர் ஆளுகைகளை ஆராய்தல் வேண்டும். அவ்வாறு ஆராய்வுழி, இவை அக்கால அடிமைகளையும், பணிந்து வேலை செய்த வேலையாட்களையும், ஏவுதலுக்கு அடங்கி நடந்த ஏவலர்களையும் சுட்டுவன என்ற முடிவிற்கே வருதல் ஒல்லும்.

புறச்சான்றுகள்

அடிமைகளும், ஏவலரும் இருந்தமை பழைய சமூகங்களில் அரிய ஒன்று அன்று. அஃது இயல்பு. அடிமைத்தனம் எனும் நிறுவனம், போரின் காரணம் பற்றி எழுவதாகும். போரில் தோல்வியுற்றவர்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளுடன் வெற்றி அடைந்தவரைச் சார்ந்து அவர்தம் சொத்துப்போல் இருத்தல் வேண்டியுள்ளது. எனவே, சமூகத்தில் ஆண்டான் — அடிமை என்ற நிலையான இரு பிரிவுகள் தோன்றுகின்றன. வெற்றி கண்டவர்களும், தோல்வியுற்றவர்களும், தோலின் நிறம் போன்ற அங்க — அவய அடையாளங்களில் வேறுபட்டிருப்பாராயின், அப்பிரிவு இனப்பிரிவு போல் கருதப்படுகிறது. 'எனவேதான் பண்டைய கிரேக்க உரோம நாடுகளில் இயல்பான அடிமை முறையே தோன்றித் தொடக்கமே விளங்காமல் நிலைத்து விட்டது.[38]

பழங் கிரேக்கத்தில் சான்றோர், உரிமை மாந்தர், அடிமைகள் என மூவகை மக்கட் பிரிவினர் இருந்தனர். கிரேக்க நாட்டில் கிரேக்கர்களை விட அவர்தம் அடிமைகளே மிகுதி. ஒரு கிரேக்கனுக்கு ஐந்து அல்லது ஆறு அடிமைகள் என்ற கணக்கில் இருந்

தனர். அனைத்துப் பணிகளையும் அடிமைகளே செய்தனர். தச்சுப் பணி, தையற் பணி, சமையல் பணி, கணக்குப் பணி என அனைத்துப் பணிகளையும் அவர்களே ஆற்றினர். சான்றோர், உரிமை மாந்தர், அடிமை என முப்பிரிவினர் எனினும் உரிமை மாந்தரும் ஒரு காலத்தில் அடிமைகளாக இருந்து விடுதலை பெற்றோரே. விடுதலை பெற்றோர் ஆயினும், சான்றோர் என்ற ஆளுவோர்க்கு அடங்கியே இருந்தனர். உரோமை நாட்டில் அடிமை முறை வேரோடி இருந்தது. அடிமைகளை விற்பதும் வாங்குவதும் இயல்பாக இருந்தன. பாபிலோனியாவிலும் இதே நிலைமை இருந்தது பெண்களை அடகு வைத்தனர்; விற்றனர்; வாங்கினர். புனனுதம் (Bunanuthm) என்பாள் அடிமைகளை அடகுகளாகப் பெற்றுக் கொண்டு, கடன் வழங்கினள்.[39] யூப்ரடீசு, டைக்ரிடீசு ஆறுகளின் நடுவே உள்ள சமநிலத்தில் வாழ்ந்த, பழைய நாகரிக மாந்தரான அசீரியரிடம் அடிமை முறை இருந்தது. அந்நாட்டு மக்களே உரிமைமாந்தர் (Freeman), அடிமைகள் என இரு கூறாகப் பிரிந்திருந்தனர். ஓர் அடிமையை வாங்கும்போது, அவனுடைய மூன்று குழந்தைகள் அவன் மனைவி, அவனுடைய இரண்டு பெண்கள், அவன் உடன் பிறந்தான், உடன் பிறந்தானின் மூன்று குழந்தைகளையும் சேர்த்து வாங்கிக் கொண்டதாக, கி. மு. 684 ஆம் ஆண்டைய குறிப்பொன்று கூறுகிறது. கிக்கிநானு (Kikkinnanu) என்பவன், தன் தாயையும், ஒரு மனிதனையும் சுமா — இலானி (Shumna Ilani) என்பவனிடம் விற்றதாகக் குறிப்புளள்து. அசீரிய மொழியில் 'பெண்டிர்' என்று வழங்கும் சொல்லிற்கே 'அடிமை' என்று பிறிதொரு பொருளும் உள்ளது. அசீரிய அடிமை தன் குழந்தைகளுக்குத் தன் பெயரின் முதல் எழுத்தை (Initial) இட்டு வழங்குதல் கூடாது என்ற கட்டுப்பாடே இருந்தது.[40] யூதர்கள், எகிப்தில் பல நூறு ஆண்டுகள் அடிமைகளாக உழன்றனர். நீல ஆற்று ஓரத்தில் கட்டப்பட்ட, பெரிய கட்டடங்களில், பிரமிடுகள் எல்லாம் யூத அடிமைகளின் குருதி உழைப்பே. கியோப்சு என்பவர் கட்டிய 451 அடி உயர்ந்து, 13 ஏக்கர் பரப்பளவில் உள்ள பிரமிடு, ஓர் இலக்கம் யூத அடிமைகளின், இருபதாண்டு உழைப்பு என்பர்.[41]

கி. மு 335 இல், சீனப் பெருநாட்டில் அடிமைமுறை இயல்பாக இருந்தது.

வட ஆரிய சமுதாயத்திலும் அடிமைமுறை பண்டே மேலோங்கி இருந்தது. மனுதரும நூலும், அர்த்த சாத்திரமும் இதனை அறிவிக்கின்றன.

"மனைவி, மகன், அடிமை, பணியாள், தம்பி ஆகியோர் குற்றம் புரிந்தால் கயிற்றாலோ பிரம்பாலோ அடிக்கவும்.

> உடம்பின் பின்புறத்தில் தான் அடிக்கலாம். தலையில் அடித்தல் கூடாது. இவ்விதியை மீறுவோர்க்குத் திருட னுக்குரிய தண்டனை வழங்குதல் வேண்டும்.''[42] என்பர் மனு.
>
> 'சுதந்திரத் தொழிலாளிக்கு நிகராக அடிமைக்கு உணவும் பணக் கூலியும் கொடுத்தல் வேண்டும்' என்பர் சாணக் கியர்.[43]

திராவிட நாகரிகமும் மொழியும் இருந்தனவாகக் கருதப்படும் சிந்துவெளியில் ஏற்றத்தாழ்வு இருந்தது என்பர். இதனை அங் கிருந்த பெரியனவும் சிறியனவுமான வீடுகளே காட்டும். 180 அடி நீள 70 அடி அகலம் உடைய குச்சு வீடுகள் ஒருபுறம் இருக்க, 20 அடி நீள, 12 அடி அகலம் உடைய குச்சுவீடுகள் பிறிதொரு புறத் தில் இருந்தன. அவை, சிந்துவெளித் தொழிலாளர்கள் அடிமை களாகவோ தொண்டூழியம் செய்வதற்குக் கட்டுப்பட்டவர் களாகவோ இருந்தமையைக் காட்டும் என்பர்.[44] எனவே பழைய நாகரிக நாடுகளின் வரலாறுகளைக் கொண்டு ஆராயுழி, தொல்காப் பியர் காலத்து அடிமையர் இருந்தனர் என்று கொள்ளுதலே பொருத்தம் எனத் தோற்றுகிறது.

தலைமக்கள் பெயர் வைப்பு

செய்யுள் இயற்றும்போது பாவிற்கு உரிய தலைவன் தலைவி யரை விளித்தோ, சுட்டியோ செய்யுள் இயற்றுவர். அகப்பாக்கள் அனைத்தும் ஒருவன் அல்லது ஒருத்தியின் 'கூறுத'லாக அமைந்தவை. ஆதலால் அவற்றுள் 'வெற்ப' 'ஊர' என்று விளித்துரைத்தல் இன்றியமையாதது. எனவே பெயர் பற்றித் தொல்காப்பியர் நூற்பா யாத்தனர். சொல்லதிகாரப் பெயரியலில் (165) பதிஞ்ஞெரு வகைப் பெயர்களைக் கூறினர். அங்குப் 'பல்லோர் குறித்த திணை நிலைப் பெயர்' என்றதையே இங்குத் 'திணை நிலப்பெயர்' எனச் சுட்டி, அதன் வகை உரைத்தனர்.

இனப்பெயர் சுட்டப்படுமா?

நச்சர். மட்டும், 'திணை நிலைப் பெயர்' என்ற இருபத்திரண் டாம் நூற்பா ஆட்சியையும், 'திணைப்பெயர்' என்ற இருபத்து மூன்றும் நூற்பா ஆட்சியையும், மனத்துட் கொண்டு, இரண்டை யும் வேறு வேறு ஆக விளக்குவர். திணை நிலைப் பெயர் என்பது அந்தணர், அரசர் முதலாஞ்சொரைக் குறித்தது என்பது அவர்தம் கருத்து.[45] திணைதொறும் மரீஇய பெயர், -குலப்பெயர் என்பது அவர் கருத்து. ஆனால் அவரே சொல்லதிகாரத்தில் வரும் திணை நிலைப் பெயர் என்பதற்கும் 'குறவர், இறவுளர், வேட்டுவர், ஆயர்,

பொதுவர், நுளையர், திமிலர், பரதவர், களமர், உழவர், எயினர், மறவர்' எனப் பொருள் விளக்கினர்.[46] பொருளாதிகாரத்தில், 'அந்தணர், அரசர்' எனப்பொருள் விரித்தனர். ஆக, அவருக் குள்ளேயே முரணுவது வெளிப்படை. அகச் செய்யுளில், அந் தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற இனப் பெயர்ச்சுட்டி விளித்துப் பாட்டு யாக்கும் முறைமையும் அரிதினும் அரிதாக உள்ளது.[47]

பொதுப்பெயர் சுட்டல்

மற்றையவ ரிடமிருந்து, மற்றைய திணையா ரிடமிருந்து பெயர்த்துக் காட்டுவதே பெயர். முல்லை, குறிஞ்சி முதலான திணை களில் பா மாந்தர்தம் இயற்பெயர்கள் சுட்டப்படா. இடையன், மலையன் என்பன போன்ற பொதுப்பெயர்களே சுட்டப்படும்; அப்பொதுப் பெயர்கள் இரண்டு அடிப்படையில் வழங்கும்.

1 பெயர் (பொருள்) சுட்டி வருவன.

சான்று : குன்று - மலை - பெயர்

குன்றவன் குறவன்

குன்றத்தி குறத்தி

2 வினை சுட்டி வருவன.

சான்று : உழவு - உழுதலாகிய வினை -

உழவன் / உழத்தி

பெயர் சுட்டி எழுவன என்பதற்கு மறுதலையாக, நிலம் சுட்டி எழுவன என்றுரைப்பர் பாரதியும்; மு. அருணாசலம் பிள்ளையும். குலம் சுட்டி வருவன என்பர் நச்சர். நிலம் சுட்டி வருவன என் போர் கருத்துப்படி (22), அடுத்த நூற்பாவில் (23) உள்ள ஆயர் என்பது முல்லை நிலம் சுட்டி அமைந்திருத்தல் வேண்டும். வெற்பு -வெற்பன், மருதம் - மருதன் என்பன போல 'ஆயர் - முல்லை'- அமையாமல் முரணி நிற்கின்றன.[48] 'ஆ' அவர் குறிப்பதுபோல், முல்லை நிலத்தைச் சுட்டாமல், 'ஆ' (பசு) என்ற பெயரைச் சுட்டிக் தோன்றியதாகலாம். எங்ஙனம் ஆயினும் அச்சொல் நிலம் சுட் டாமை தெளிவு. குலப்பெயர் எனக் கொண்டு விரிவாக எடுத்துக் காட்டு உரைப்பர் நச்சர். அவர் உரை சரியன்று. 'குலம்' என்ற சொல்லைத் தொல்காப்பியர் எங்கும் ஆளவில்லை. திணைப்பா விளிப் பில் பொதுப்பெயர் ஆளுதலே குறி. நேர்மாறுகக் குலப்பெயர் சுட்டிப் பிரித்தல் குறியும் அன்று. நெறியும் அன்று. எனவே, திணை வழிப் பெயர்கள், பொருள் அடிப்படையிலும், தொழில் அடிப்படையிலும் தோன்றும் என்பதுவே தொல்காப்பியர் கொளு.

பெயரும், வினையும், முல்லை குறிஞ்சி முதலான நிலத்தைத் தழுவியே அமைதல் வேண்டும். பிறப்பைத் தழுவியோ பிறவற்றைத் தழுவியோ அமைதல் ஆகாது என்ற கருத்து 'திணைதொறும் மரபு' என்ற சொல்லழுத்தத்தால், அளபெடை ஆட்சியால் புலனாகும்.

ஆயர், வேட்டுவர், பெயரையும் தொழிலையும் வேராகக் கொண்டு, ஆண்பால், பெண்பால் பொதுப்பெயர்கள் தோன்றும் என்பது முதல் நூற்பாவின் (22) கருத்து. ஆனால் எல்லாப் பெயர்களும் அவ்வாறே தோன்றுவதில்லை. பல தோன்றினும் அவை அனைத்தும், ஆண், பெண் என்ற இருபாலார்க்கும் பொருந்த அமைவதில்லை. அவ்வாறு அமையா இரண்டு பெயர்கள் ஆயர், வேட்டுவர் என்பன. ஆயர் என்பது பெயரடியில் தோன்றியது; வேட்டுவர் என்பது வினையடியில் தோன்றியது. இரண்டும் ரகர ஈற்றுல் பொதுப்பால் குறிப்பன. எனினும், இவை இரண்டும், குறவன்-குறத்தியைப் போலவோ, உழவன் உழத்தியைப் போலவோ பெண்டிரை, வேர்ப்பொருள் சார்த்திக் குறிக்கா; நெடுங் காட்டிற்குச் சென்ற நிரை மேய்ப்பாளர் பெண்டிர் இல்லை; ஆடவரே. கொடுங்கானுக்குள் நுழைந்து விலங்குகளை வேட்டை ஆடுவார் பெண்டிர் இல்லை; ஆடவரே. பொதுவாக எல்லாச் சொற்களும், பெயர் சார்ந்தும், வினை சார்ந்தும் அமைந்து ஆண், பெண் இருபாலாரையும் உணர்த்தும். எனினும், அவ்வாறு உணர்த்தாத ஆயர், வேட்டுவர் போன்ற சில சொற்கள் உள்ளன. அவை வழிவில் ஆண், பெண் பொதுமைய எனினும், உணர்த்தும் பொருளில் ஆண மட்டுமே உணர்த்துவன. இக்கருத்தில் தான் 'ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்' என்ற அடுத்த நூற்பா எழுந்தது(23).

வாழ்வின் வளர்ச்சி

குறிஞ்சி-மலை நிலம்; முல்லை-காட்டு நிலம்; மருதம்-வயல்நிலம் நெய்தல்-கடல் நிலம். இவற்றுள் முல்லையும், குறிஞ்சியும் பழையவை. சமூகமும், அரசும் உரு ஆகாத நிலையில் ஆங்காங்கே மனித இனக்குழுக்கள் இருந்தன. அவற்றிற்குரிய அப்போதைய செல்வம் மாடுகளே. பொருமையே போர். பிறர் மாட்டுச் செல்வம் கண்டு பொறுத ஒரு குழு, மாட்டுச் செல்வம் மிகுதியாகவுடைய மற்றொன்றினிடம் பொருதது. அதுவே வெட்சி. அது ஒரு கட்டம்.

பிடித்து வந்த மாடுகளை மேய்க்க நிலம் வேண்டி வந்தது. காடடர்ந்த முல்லை மேய்ச்சல் நிலங்கள் தேடப்பட்டன. அம்மேய்ச்சல் நிலங்களைப் பிறர் யாரும் பற்றாமல் காக்கும் எண்ணம் வந்தது. தம் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் காணாத பொழுது, மேலும் நிலம் வேண்டித் தேடினர் முல்லை வாழ்நர். இன்னொருவர் மேய்ச்சல்

நிலத்தைப் பற்றும் போதோ, அல்லது இடைநிலத்தை இருவர் பற்றுப் போதோ வஞ்சிப்போர் வந்தது. அது இரண்டாவது கட்டம்.

அதுவரையில் மலையில் விளையும் தினையிலும், மூங்கிலரிசியிலும் தேனைக் கலந்து உண்டனர் குன்றவர். கிழங்கு அகழ்ந்து தின்றனர். அவை உழவியற்றி வந்தன அல்ல. அஃது ஒரு காலம். வேளாண்மை அறியாக் குறிஞ்சிக் காலம். மனம் சென்றவாறு தழுவி வாழ்ந்த காலம். முல்லை வாழ்வில், தம்மிடம் உள்ள எருதுகளைக் கொண்டு, தினை, சாமைப் பயிர்களைப் போர் அடிப்பது அவர்களுக்கு எளிமை யாக இருந்தது. அவர்களால் காப்பாற்றப்பட்ட மாடு அவர் களைக் காப்பாற்றியது. மலையில் அலைந்து புணர்ந்து வாழ்ந் தவர், முல்லையில் ஓரிடத்தில் இருந்து புணர்ந்து வாழ்ந்தனர்.

மருத வாழ்வு வந்தது. காப்பாற்றி வந்த மாடுகளைக் கொண்டு பயிர் செய்ய அறிந்தனர். மகிழ்ந்தனர். ஆற்றை ஒட்டிப் பயிர் செய்ய வாய்ப்பாக இருந்தது. பயிர் செய்த இடத்திலேயே பயிர் செய்வதே எளிமையாக இருந்தது. அதனால் அவ்வவ் இடங்களை ஒட்டியே தங்கினர். நிலத்தில் விளைந்தது மிகுதியாக இருந்தது. மிகுந்த அளவில் நெல்லைச் சேர்த்து வைத்தனர் (நற். 26, 60). இப்போது முன்பு போல, காலம் முழுதும் மலையிலும், காட்டிலும் அலைய வேண்டியதில்லை; உழைக்க வேண்டுவதில்லை, இருந்த இடத்தில் இருந்தே பலகாலம் உண்ணலாம். ஓய்வு நிரம்பக் கிடைத்தது. வீடுகள் உண்டாயின. ஓய்வு அவனை இன்ப நினைப்பில் திளைக்க வைத்தது. நிரம்ப நிலம் வைத்திருப்பவன் நிரம்ப நெல் வைத்திருந்தான். அவன் மற்றவரைக் காட்டிலும் பெரிய வீடு கட்டினான். கோட்டை உருவாயிற்று. அங்கும் பொருமை, போரை உருவாக்கிற்று. உழைப்போர் நடந்தது. அது மூன்றாவது கட்டம்.

இன்னும் சிலர் மிதமிஞ்சி இருக்கும் பொருளை அடுத்த குழு விற்கு விற்க எண்ணினர், விற்றனர். அடுத்த ஊருக்கும் விற்க விரும் பினர்; விற்றனர்; அடுத்த நாட்டிற்கும் விற்க விழைந்தனர்: விற்ற னர். வணிகம் பெருகியது. கடல் தாண்டியும் விற்க முயன்றனர். கடல் வாணிகம் பெருகியது. சிலர் வேளாண்மையை விட்டு வாணிகம் பெருக்கினர். மாநாய்கரும், மாசாத்துவரும் பெரு கினர். கடற்கரை ஒட்டிப் பெரும் நாகரிகம் தோன்றிப் பரந்தது. கடல் வாணிகத்திற்கு வாய்ப்பாக, மருதம் அமைந்தது. வாணிகர் உயர்ந்தனர். வேளாளர் அயர்ந்தனர்.

நெய்தலும் மருதமும் செழித்தன. வணிகமும் உழவும் வளர்ந்தன. வணிகம் முன்னே நிற்க, மருதம் பின்னே நின்றது.

என்றாலும் இரண்டும் இன்பத்தில் திளைத்தன. இவ்வேளையில், மழை யற்றது; மலை வறண்டது; காடு கருகியது; பாலை பிறந்தது; தாங்கள் சேர்த்து வைத்திருந்த பொருளால், வணிகரும், உழ வரும் தம்மைக் காத்து இன்புற்றனர். சேர்த்து வைத்து வாழாக் குறவரும், ஆயரும், துன்புற்றனர். வருவோர் போவோரிடம் வழிப் பறி செய்தனர். கொள்ளை கொண்டனர். கொலை செய்தனர். இவர்களால் பாதிக்கப்பட்டவர், நெய்தல் நில வாணிகரும், மருத நில வேளாளரும் ஆவர். இவர்கள், அவர்களைக் கள்வர் எனப் பழித்தனர். 'குறவர்' என இழித்தனர்; மலை வாழ்நரும், கான் வாழ்நரும் பொருளின்றியும் போற்றுதல் இன்றியும் பாலை மறவர் ஆயினர்; குறவர் மறவர் ஆயினர்; ஆயர், தீயர் ஆயினர்.

முல்லை, குறிஞ்சி நிலமக்கள், தலைமக்களாகப் பாடப்படுவது பெரும்பான்மை இல்லை. நெய்தல், மருதம் நிலமக்கள் பெயர்களி லிருந்து தலைமக்களைப் பாடுவது பெரும்பான்மை என்பர் நச்சர். (24). முல்லையும் குறிஞ்சியும் (பாலையும்), பின்னுக்குத் தள்ளப் பட்ட நிலைமையையே 'ஆயின் வருஉம் கிழவரும் உளரே' என்ற நூற்பா வரி (23) காட்டும். அவ்வந் நிலப்பகுதி மக்கள், நிலமக்கள் எனவும், அவ்வந் நிலத்தில் தலைமையில் நின்றூர் தலைமக்கள் எனவும் படுவர். நிலமக்களை உழவர் உழத்தியர் என்பர்; தலை மக்களை ஊரன், மகிழ்நன் என்பர்; நெய்தல் நிலத்திலும் மருதத் திலும் நில மக்கள், தலைமக்கள் ஆவது பெரும்பான்மை. முல்லை யிலும், குறிஞ்சியிலும் நிலமக்கள், தலைமக்கள் ஆவது சிறுபான்மை. முல்லை நிலமக்கள் ஆயர் எனப்படுவர். குறிஞ்சி நிலமக்கள் வேட்டுவர் எனப்படுவர். முல்லை குறிஞ்சி நில மக்களாகிய, ஆயர் வேட்டுவரிடமிருந்து தலைமக்கள் வருவது என்பது மிகுதியாக இல்லை எனவே, அவர்கள் தலைமக்களாக வருவதே இல்லை எனக் கொள்ள வேண்டா என்ற கருத்தினது:

> "ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப் பெயர்
> ஆவயின் வருஉம் கிழவரும் உளரே"

என்ற நூற்பாவாகும். முல்லை ஆயர், குறிஞ்சி வேட்டுவர் நிலை இங்ஙனம் எனில், பிற மருத உழவர், நெய்தல் சேர்ப்பர் நிலை எங்ஙனம் என்ற வினாவிற்கு விடையாகவே,

> "ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை
> ஆங்கு வகைய திணை நிலப் பெயரே"

என்ற நூற்பா அமைகிறது. முன்னே கூறிய முல்லை, குறிஞ்சி நில மக்கள் தவிரப் பிறநில மக்கள்பாலும் அகத்திணைக்கு உரிப்பெயர்

கள் சுருங்க அமையா அளவிற்குப் பலதிறப் பட்டனவாகும்' என்பது நூற்பாவின் கருத்து.

உரிப்பொருள்

நிலம், காலம், உணவு முதலாய சுற்றுச் சூழல்களின் அடிப் படையில் மாந்தர் ஒழுக்கமும், பழக்கமும் அமையும். அவ்வாறு அமைவனவே உரிப்பொருள்கள். அவையாவன: குறிஞ்சிக்குப் புணர் தலும் புணர்தல் நிமித்தமும், முல்லைக்கு இருத்தலும், இருத்தல் நிமித்தமும், மருதத்திற்கு ஊடலும் ஊடல் நிமித்தமும், நெய் தலுக்கு இரங்கலும் இரங்கல் நிமித்தமும், பாலைக்குப் பிரிதலும் பிரிதல் நிமித்தமுமாம். புலனுக்கு நேரே படுவன உரிப்பொருள் களே எனினும், அவை தோன்றுதற்குப் பின்புலங்களாக இருந் தவை முதற்பொருளும், கருப்பொருளுமே. மண் இன்றி மரம் இல்லை அன்றே?

குறிஞ்சி

உரிப்பொருள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு திணையுடன் இணைத்துக் கூறப்படினும், எல்லாத் திணைகளுக்கும் எல்லா உரிப் பொருள்களும் பொதுமையே. அவ்வந் நிலத்தின் சிறப்புரிமை கருதி, அவ்வந் நிலத்துடன் அவை தொடர்புறுத்தப்படுகின்றன. புணர்ச்சி, எந்நிலத்தும் இருப்பது. எனினும் மலை நிலம் அதனது குளிராலும், பசுமைத் தழைப்பாலும் இன்புணர்வை ஊட்டுவது; மூட்டுவது. வித்தியாதரக் கந்தர்வர்களும் பிற தெய்வக் கூட்டத் தாரும் மலைக் குளிர்ச்சியில் கூடியுறைவதையே இலக்கியங்கள் சிறப் பித்து உரைக்கின்றன. தற்கால வாழ்விலும் கோடைக்கானல், நீலகிரி, ஏர்க்காடு போன்ற இடங்கள், புதிய புதிய இணைகளின் புணர்விடங்களாக உள்ளன. எனவே, புணர்தலும் புணர்தல் நிமித்தமும், ஏனைய நிலங்களில் பொதுவாயும்,குறிஞ்சிக்குச் சிறப்பு உரிமையாயும் கூறப்பட்டன.

முல்லை

முல்லை — காடு அடர்ந்த பசும் பகுதி. கூடி வாழும் விலங்கு களின் கோலங்கள் அங்கே மிகுதி. பாலையில் வாடி வரும் காதலன் இளைப்பாறும் பகுதி. படுகளத்தில் போருடற்றி வருவோனை ஆற்றுவிக்கும் பகுதி. பசுங்காட்சியே பழைய துன்பியல்களை மறப் பிக்கும்: புதிய இன்பியல்களைப் பிறப்பிக்கும். எனவே ஆணும், பெண்ணும் சேர்ந்து இருக்கும் பகுதியாக, முல்லை சிறப்பிக்கப் பட்டது.

மருதம்

மருதம், மாந்தனை நாகரிகப் படுத்திய பகுதி. ஓடித்திரிந்து கொண்டிருந்தவனை ஓரிடத்தில் இருத்திய பகுதி. நாள் உணவுக்

குத் தேடி அலைந்தவனுக்கு வாழ்நாள் அளவும் உண்டி அளித்த பகுதி. சிலநாள் உழைப்பால் பலநாள் பிழைப்பிக்கும் பகுதி. உழைத்த நாள்களை விட ஓய்வு நாட்கள் மிகுதி. ஓய்வு உணர்வை அலைக்கும்; உடலை அழைக்கும். பரத்தையருடன் பிணைக்கும். தலைவியர் நினைவைப் பிளக்கும்; தலைவியரைப் பிணைப்பிக்கும்; ஊடல் வரும். உரை மோதல் வரும். எனவே, மருத நிலச் சிறப்பு நிலை கருதி, அந்நிலத்தோடு ஊடல் ஒதப்பட்டது.

நெய்தல்

நெய்தல் கடற் கானல். கடலோர மாந்தர்க்கு உணர்வுந்தல் மிகுதி. நெய்தற் பெண்டிர்தம் காதலர் கடலோடியர். அவர்தம் கடற்பிரிவு, அப்பிரிவால் ஏற்படும் உடற்பிரிவு, பெண்டிரை வாட்டும். கடற்காற்றிற்கு ஆற்றாது, நினைவுகளின் பிழிவால் அம்மகளிர் நெக்குருகுவர். அதனால் 'இரங்கல்' — நெய்தல் உரிப் பொருளாயிற்று.

பாலை

பாலை எனில் வறட்சி. உணர்வு வறட்சி அன்று; உணவு வறட்சி. வறட்சி, வளந்தேட ஓட்டும்; காதலியைப் பொருளுக் காகவும், பொருள் தரும் பிற கடனுக்காகவும் காதலன் பிரிய நினைகுவன். பிரிவுச் செய்தி அறிந்து பெண் கலங்குவள். நாட்டு வறட்சி, வீட்டு வறட்சி ஆகி நாயகனைப் பிரித்தோட்டும் பொழுது, நல்லாள் கலங்கிக் கைம்மிகுவள். பெண்ணின் பிரிவு பொருக் குரலே, பாலைக் குரல், வளமற்ற நிலம், வீட்டையும் வளமற்ற தாக்கும். அதனால் பிரிவு, பாலை உரிப்பொருளாயிற்று.

பிரிவிற்கு முன் பிரிதலுக்கு அஞ்சுவது பாலை; பிரிந்த பின் இரங்குவது நெய்தல்; பிரிந்தவரை எண்ணி ஆற்றி இருப்பது முல்லை; இருப்போர் இருவரும் புணர்ந்து மகிழ்வது குறிஞ்சி. புறத் திணை பெரும்பாலும் ஆடவரை நோக்கின. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பைப் போர்களில் ஆடவர்தம் பங்கே மிகுதி. அகத் திணை பெரும்பாலும் பெண்டிரை நோக்கின.[49] குறிஞ்சி புணர்ந் திருப்பவளைக் காட்டும்; முல்லை சேர்ந்திருப்பாளைக் கூறும்; மருதம், ஊடுவாளை உரைக்கும்; நெய்தல் இரங்குவாளை நவிலும்; பாலை, பிரிவிற்கு அஞ்சுவாளைப் பகரும்.

தொல்காப்பியர், ஐந்திணைக்குரிய உரிப்பொருள்களைக் குறிப் பினும், பாலைக்குரிய பிரிதல் பற்றி விரிவாக, அகத்திணை இயலில் குறிப்பிடுவர். ஐந்து உரிப் பொருளையும் தொகுத்துரைக்கும் ஒரு நூற்பாவைத் (16) தவிர வேறு நூற்பாக்களில் (அகத்திணை

இயலில்) பிற புணர்தல், இருத்தல், இரங்கல், ஊடல் பற்றி அவர் ஆய்வு நிகழ்த்தார். பிரிவுப்பொருளைப் பற்றி மட்டுமே பதினேழு நூற்பாக்களில் (அகத்திணை 13,17,18,27-37, 46-48) விரிவாக விளக்குவர். நூலாசிரியரைத் தழுவி, உரையாசிரியர்களும் பிரிவை விரிவுற ஆய்வர். இலக்கணத்தில் மட்டுமின்றிச் சங்க இலக்கிய உலகிலும், பாலைப் பாடல்கள் மிகுதி. பாலைத்திணை தலைமையும் பன்மையும் பெறுதற்கான காரணங்கள் தேடுதற் குரியவை.

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கின் உரிப் பொருள்கள் களவு, கற்பு இயல்கட்கு உரியவாக விளக்கம் பெறும்; அவற்றைப் போலப் பாலைப் பிரிவொழுக்கம் களவு, கற்பு என்ற இரண்டு இயல்களில் நிகழாது. எனவேதான் நிலமற்ற ஏனைய கைக்கிளை, பெருந்திணை இவற்றுடன் சார்த்தி நிலமற்ற பாலையது ஒழுக்கம் கூறப்பட்டது என்பர் இளம். அவர் கருத்துப் பொருந்தாது. ஏனெனில், பிரிவொழுக்கம் களவிலும் நிகழும்; நிகழுகிறது. எனவே, அவ்வியல்களில் நிகழாதது என்பது சரி அன்று. இச்சரி இன்மையை உணர்ந்து கொண்ட நச்சர். பாலை, களவு, கற்பு என்பனவற்றுள் ஒன்றற்கும் உரிமை உடையதில்லை; ஆனால் இரண்டற்கும் பொது என்பது பற்றி அகத்திணை இயலில் உணர்த்தினர் என்பர். பாரதியும் இக்கருத்தையே காட்டுவர். அவர்தம் கருத்துகளும் பொருந்துவன அல்ல. பாலை ஒழுக்கம், களவிற்கும் கற்பிற்கும் பொது ஆதல் போலவே, குறிஞ்சி ஒழுக்கம், இரண்டிலும் நிகழும் பொதுமை வாய்ந்தது. புணர்தல் களவிலும் உண்டு; கற்பிலும் உண்டு.[50] இரண்டிற்கும் பொதுவாய, குறிஞ்சியை அகத்திணையில் விளக்காது விலக்கியது போலவே, பாலையையும் அவர் விட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு விடாது உணர்த்தின காரணம் அறியப்படுதல் வேண்டும்.

குறிஞ்சிக்கு மலை நிலம் உண்டு; முல்லைக்குக் காடு உண்டு; மருதத்திற்கு வயல்வெளி உண்டு; நெய்தலுக்குக் கடற்கானல் உண்டு. ஆனால் இவற்றைப் போலப் பாலைக்குத் தனி நிலம் இல்லை. பாலை, குறிஞ்சி வறட்சியையும், முல்லை வறட்சியையும் தழுவியே தோன்றுவது. தனக்கென நிலம் அற்றது;[51] பாலையைப் போலவே கைக்கிளையும் தனக்கென நிலம் அற்றது; எல்லா நிலத்தையும் தழுவி நிகழ்வது; பெருந்திணையும் தனக்கென நிலம் அற்றது எல்லா நிலத்தையும் தழுவி நிகழ்வது. அகத்திணை இயலில், தமக்கென நிலம்அற்ற, எல்லா நிலத்திலும் தழுவி நிகழ்கின்ற கைக்கிளையும் பெருந்திணையும் விளக்கம் பெற்றன. அவற்றைப் போலவே, தனக்கென நிலம் அற்ற, குறிஞ்சி, முல்லை நிலங்களைச் சார்ந்து தோன்றுகின்ற, எல்லா நிலத்திலும் தழுவி நிற்கின்ற பாலையும், அகத்திணை இயலில் விளக்கம் பெற்றது.

பாலைப் பிரிவு

பாலைப் பிரிவுகள் கூர்த்த ஆய்விற் குரியன. தொல்காப்பியர் கருத்தில், ஓதல், பகை, தூது என்ற மூன்றுமே அடிப்படைப் பிரிவுகள். 'ஓதல், பகையே தூது இவை பிரிவே' என்பது நூற்பா. 'பிரிவே' என்ற ஈற்றுச் சொல் ஏகாரத் தேற்றம் பெற்று நிற்பது காண்க. பரத்தையர் பிரிவு. தொல்காப்பியர்க்கு உடன்பாடு[52] (பொருளியல் 28). ஆனல் அதனை இங்கே அவர் குறிக்கவில்லை. ஏனைய, காவற்பிரிவும் பொருள்வயிற் பிரிவும் அவர்க்கு உடன்பாடு எனினும், அவற்றிற்குத் தலைமை தரவில்லை. ஓதற்பிரிவு, பகைவயிற் பிரிவு. தூதுவயிற் பிரிவு என்ற மூன்றிற்கே தலைமை அளித்தார். மற்றைய பிரிவுகளை அவற்றைச் சார வைத்தார்.

ஓதல் முதலான பிற பிரிவுகள், புறத்திணையைச் சார்ந்து வருவன. பகைவயிற் பிரிவும், தூதுவயிற் பிரிவும், புறத்திணைச் சார்பின. ஓதற்பிரிவும், அந்தணருடன், அரசரைச் சார்ந்தது. புறத்திணைக் களத்தில் போரின் பொருட்டுப் பிரிவோர், எண்ணரும் பாசறைகளில், பரத்தையருடன் உறைவர்.[53] எனவே, பரத்தையர் பிரிவு, பகைவயிற் பிரிவில் அடங்கிவிடும். பகைவயிற் பிரிவின் முடிபு, திறைப்பொருள் ஒன்னுர்த் தெறுபொருள் கொணர்வதுவே. எனவே, பொருள்வயிற் பிரிவும், போர்வயிற் பிரிவில் அடங்கி விடும். புறத்திணை என்பது போர்த்திணை. அப்புறத் திணையைச் சார்ந்தனவே ஓதல் முதலாய பிரிவுகள்.

புறத்திணை — போர்த்திணை

பண்டைய சமூகத்தில் போரே முதன்மை. கிரேக்கத்தில் உரோமில், பாபிலோனியாவில், எகிப்தில் எங்கும், அரசரும், மறவருமே தலைவர். மறவரே தலைவர். மறவருள் மிகு மறவரே பெருந்தலைவர் ஆவர்; அரசர் ஆவர். உரோமர் அனைவருமே களங்கண்ட மறவர். யூதர் அனைவருமே போர்க் கோலம் பூண்ட மறவர்; எல்லா நாடுகளிலும் ஏறத்தாழப் போர்ப் பயிற்சி வற்புறுத்தப்பட்டது ஏதென்சில் இரண்டு ஆண்டுகள் 18 அகவை முதல் 20 வயதுவரை, போர்ப்பயிற்சி கட்டாயம் ஆக்கப்பட்டிருந்தது. சுபார்ட்டாவில், கல்விப் பயிற்சி என்பதே போர்ப் பயிற்சிதான். 'ஒளிறுவாள் அரும்சமம் முருக்கி, களிறு எறிந்து படுதல் தமிழ்க் காளையர் கடன்'. கிரேக்கத்தில் பிறப்பின் குறிக்கோளே போர்தான் எனக் கருதப்பட்டது. எனவே அன்றைய அரசரைச் சார்ந்த சமூகத்தின் அடிப்படைக் கடமை போராகவே இருந்தது. இதனுல் அன்று எழுந்த இலக்கியங்களும், இலக்கணங்களும், போரைச் சார்ந்தே எழுந்தன. ஓமரின் இலியட்டும், ஒடிசியும், 'டிரோசான்' போரைச் சார்ந்து எழுதப்பட்டவையே. ஆரிய இராமாயணமும், மகாபாரதமும்

டோர்ச்சளத்தை ஒட்டிப் படைக்கப்பட்டவையே. தமிழர்தம் புறநானூறு, பதிற்றுப்பத்து முதலான புறப்பாடல்கள் போரையே மிகுவித்துப் பேசுவன. பண்டைய இலக்கியங்கள் போரைச் சார்ந்து எழ, அவற்றைச் சார்ந்து எழும், இலக்கணங்களும் போரை எதிர் ஒலித்தல் இயற்கை. தமிழ்த் தொல்காப்பியம் அவ்வுலக இயற்கைக்கு முரணுனதன்று. எனவே அதன்கண் உள்ள புறத்திணை மறத்திணையே; போர்த்திணையே.[54]

வீட்டு வாழ்க்கை

நாட்டு வாழ்க்கை போர் வாழ்க்கையாகப் போகவே, வீட்டு வாழ்க்கை, நாட்டு வாழ்க்கையைத் தழுவி அமைவதைத் தவிர்த்தல் இயலாது. மறவரைக் காதலித்தலே முன்பு எல்லா நாடுகளிலும் போற்றப்பட்டது. வில்லொடிக்க வேண்டும்: ஏறு தழுவ வேண்டும்; விழுப்புண் பெற வேண்டும். புலிக் குத்த வேண்டும்; போர்க்களம் புக வேண்டும். அத்தகு மறவனே மணவாளனுகக் கருதப்பட்டான். சங்க இலக்கியங்களில் யானையைத் துரத்தி வருவோனுகத் திணைப்புனக் காதலன் காட்டப் படுதல் இதுபற்றியே. 'களிறு எறிந்து படுதல்' காளையின் மறக் குணமாகப் புகழப்பட்டது இது பற்றியே. ஆமூர் மல்லனின் போர்த்திறம் கண்டு, நக்கண்ணை காதல் கொண்டது இது பற்றியே. இவை போல இன்னும் பல, மணவாழ்க்கை, மறவாழ்க்கைக்குத் துணையாக அமைக்கப்பட்டன. மறவாழ்க்கைக்கு முரணுமல், மணவாழ்க்கை காத்துக் கொள்ளப்பட்டது. உரோமில், போர் மறவர்கள் அகட்டரு காலத்தில் மணம் முடிக்காத வாறு தடை செய்யப்பட்டிருந்தனர்.[55] போருக்கு முரணுக் காதல் மலருமானுல் அது தடுக்கப்பட்டது. இவை போரே முதன்மையாகக் போற்றப்பட்டது என்பதைக் காட்டுவன. போர்வயிற் பிரியும் மறக் காதலனைத் தடுப்பது போல ஒரு பாட்டுக் கூட சங்க இலக்கியத்தில் இல்லாமை எண்ணத் தக்கது. பொருள்வயிற் பிரிவோனைக் காதலி தடுப்பதாகப் பல பாடல்கள் அமைந்துள்ளன. ஆனுல் போர்வயிற் பிரிவோனைத் தடுப்பதாகப் பாட்டு இல்லாமை போரின் இன்றி அமையாமையைக் காட்டும், ஆக, இப்பார்வைகள், காதல் போரைத் தழுவியே அமைந்திருந்தது என்பதைக் காட்டும். போரைச் சார்ந்திருந்தது காதல்; புறத்தைச் சார்ந்திருந்தது அகம் என்பது கருத்து. அகமா புறமா எனில், புறமே முதலாகக் கொள்ளப்பட்டது. நெடுநல்வாடை நெடுஞ்செழியன், இளம்பருவக் காதலைத் துறந்து மறந்து போரில் மனத்தைப் போக்கினன். அது புகழாகப் பேசப்பட்டது. அதியமான் தன் முறை காக்க வந்து பிறந்த ஆண்மகனைப் பார்த்தும், போரில் சிவந்த விழிகள் குளிராமல் இருந்ததை ஒளவை புகழ்ந்துரைப்பள்.

பண்டைய மறவருக்கு, மனைவியும் பெரிதில்லை; மழலை அமிழ்தமும் பெரிதில்லை; மறமே பெரிது பெரிது என்பதற்கு இவை சான்றுகள். கிரேக்க, உரோம எகிப்திய நாடுகளிலும் போரைச் சார்ந்தே இல்லறம் சுழன்றது.

ஏறத்தாழ மறக்குணம் தலைமை பெற்றிருந்த காலத்தைக் காட்டும் இலக்கியங்களிலிருந்தே தொல்காப்பிய இலக்கணம் தோன்றி இருத்தல் வேண்டும். எனவேதான் அகம், புறம் என்ப வற்றை அடி இயல்களாக அவர் அமைத்தார். புறத்திணை மறவர் திணை; மறத்திணை. அகத்திணையும் மறவர்க்காக எழுதப்பட்ட அன்புத்திணையே. அகத்திணையை எல்லார்க்கும் பொருந்திய பொதுத் திணையாக அவர் கருதி இருப்பரேல், அதனைப் பிற களவியல், கற்பியல், பொருளியல்களில் கூறி இருத்தல் ஒல்லும். அவ்வாறு கூறுமல், ஏறத்தாழ அம்மூவியல்களில் இடம் பெற்றி ருக்க வேண்டிய செய்திகளையே, தனியியலாகக் கூறி இருப்பதும், அதனைப் புறத்திணையைச் சார்ந்து அமைந்திருப்பதும் ஊன்றிய நோக்கிற்குரியன. பரத்தையர் பிரிவு நால்வர்க்கும் உரியது என்று பொருளியலில் போற்றியவர், அகத்திணை இயலில் கூறுது விட்டதேன்? மறவர்க்கு உரியதாகப் பரத்தையர் பிரிவைக் கருதினர். எனினும், மறவரைப் பொறுத்தவரை, பகைவயிற் பிரிவே, பரத்தையர் பிரிவு. பகைவயிற் பிரிந்து செல்லும் மறவர் பரத்தையருடன் கூடி ஒழுகுவர். அவர் தடுக்கப்படார். பரத் தையர் பிரிவு, மறவருக்குப் பகைவயிற் பிரிவில் அடங்கி விடுதல் பற்றியே தனிப் பிரிவாக, அதனை அகத்திணை இயலில் அவர் ஓதாரானார். இதிலிருந்து அகத்திணை இயல், தொல்காப்பியர் பார்வையில், மறவர்க் குரிய அக ஒழுக்கங்களைப் பேசும் இயல் என்று ஆகிறது. அதனாலேயே, அரச மறவர்க்குரிய ஓதல், பகை, தூதுப் பிரிவுகளுக்குத் தலைமை கொடுத்து இவ்வியலில் விளக் கினர். தொல்காப்பியத்துள் தலைவன் தலைவியைச் சந்திக்க இவர்ந்து வரும் ஊர்திகளாகத் தேரும், யானையும், குதிரையும் குறிக்கப் பட்டுள்ளமையைக் கருதுக.[56] பிரிந்து மீளும் தலைவன் இடைத் தங்காமல், பறவை போல் பறக்கும் குதிரை மேல் விரைந்து வருவன்' என்ற குறிப்பை எண்ணுக.[57] தேரும், யானை யும், குதிரையும் பொதுமாந்தனுக்கு வாய்ப்பன அல்ல. அவை அரசருக்கும், அரச மறவர்க்கும் மட்டுமே உரியன.

கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்கள்கூட, அயல் நாடுகளில் படை எடுத்துச் சென்று அங்கு ஆண்டுக் கணக்கில் தங்கும் போர் மறவர்தம் அடா ஒழுக்கங்களே.[58] அகத்திணையில், அவ்வொழுக் கத்திற் குரியார் பெயரைச் சுட்டலாகாது என்பது முன்னையோர்க் கருத்து; ஐந்திணை ஒழுக்கங்களுக்கு உரியாரை மட்டுமே பெயர்

சுட்டுதல் ஆகாது என்ற கருத்தில், தொல்காப்பியர் 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பரு அர்' என்பர். கைக்கிளை, பெருந்திணை தவறு செய்தோரைப் பெயர் சொல்லிப் பழித்தல் வேண்டும். அவ்வாறு செய்தால்தான் அத்தகு மறவர் திருந்துவர்; மற்றைய மறவர் திருந்துவர் என்ற கருத்தினர் போலும் தொல்காப்பியர். 'அடியோர் பாங்கினும்' என்ற நூற்பாவை அடுத்து,

'ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்'

என்ற நூற்பா உளது- இந்நூற்பாவிற்குக் 'கைக்கிளை பெருந்திணைக்குரிய தலை மக்களை உணர்த்துதல் நுதலிற்று' என்று கொளு எழுதுவர் இளம்.

'ஏவுதலை மரபாக உடைய அரச மறவரும், கைக்கிளை, பெருந்திணைக்கு உரியர்- அவரைப் போல பிறரை ஏவிக் கொள்ளும் தன்மை உடைய மறவரும் கைக்கிளை, பெருந்திணைக்கு உரியர் ஆவர்.' என்பது நூற்பாவின் கருத்து. கைக்கிளை பெருந்திணை அரச மறவர்க்கும் உரியது என்ற கருத்து இந்நூற்பாவில் வெளிப்பட்டு நிற்றலைக் காண்க. ஏவுதலை மரபாக உடையவர் யார்? அரசரே. அரசர்க்கு ஆளும் உரிமை, பிறப்பு அடிப்படையில் தலை முறை தலைமுறையாக நிலைத்து நிற்பது.

கைக்கிளை - பெருந்திணை :

'புறம்' என்பது பொதுவாக ஆடவர்க்கு உரியது. போருக்கு உரியது. 'கைக்கிளை, பெருந்திணை புறம்' என்ற கருத்து 'கடிவரை இல 'புறத்து' என்ற தொடரில் அமைந்திருத்தல் காண்க. பெருந்திணையுள் முதலாவதாகிய மடல் ஏறுதல் பெண்டிர்க்கு எக்காலத்தும் இல்லை என்பதால் பெருந்திணை, பெரிதும் ஆடவர்க்கே உரியது என்பது தெளிவாகிறது. இளமை போர் வயின், வம்பு செய்வான் ஆடவனே என்ற குறிப்புக் கைக்கிளை நூற்பாவில் கிடைக்கிறது. போர்ப்பணிக்கு உரியவர் ஆடவரே என்ற பொதுக் கருத்தோடு, கைக்கிளை, பெருந்திணை இரண்டும் ஆடவர்க்கே உரிய போர்க்கள ஒழுக்கங்கள் என்ற கருத்துப் பொருந்துதல் காண்க.

ஏவல் மரபின் ஏனோராகிய அரசரியலைப் பேசியதைத் (26) தொடர்ந்து 'ஓதல் பகையே தூது இவை பிரிவே' (27) என்ற அரசர்க்குரிய பிரிவோத்துத் தொடங்கப் பட்டுள்ளமை நினைக. நினைக்கவே, 'பிரிவு ஒழுக்கங்கள்' அடுத்துள்ள புறத்திணை இயலில் ஒட்டிய ஒழுக்கங்கள் என்பதாலேயே அகத்திணை இயலில் குறிக்கப்

பட்டுள்ளன என்பதும், அகத்திணை இயல் புறத்திணை அரசமறவர்க் குரிய அக ஒழுக்கங்களைப் பேசும் இயலே என்பதும் பெறப்படும்.

அகத்திணையில் பிறர் செய்திகள்

அகத்திணை இயல், மறத்திணை மறவர்க் குரியது என்று கூறவே, அவ்வியலில், மறவர்க்கும் மட்டும் அன்றி மற்றவர்க்கும் பொருந் தக் கூடிய சில செய்திகள் குறிக்கப்பட்டுள்ளனவே என்ற ஐயம் எழும். அவ்வியல், அரச மறவர்க்குச் சிறப்பியல்; மற்றவர்க்குப் பொதுவியல். அகத்திணை இயலுக்கும் புறத்திணை இயலுக்கும் இடையே உள்ள நெருக்கத் தொடர்பை, வெட்சி-குறிஞ்சிப் புறன் (60); வஞ்சி-முல்லைப் புறன், (61), உழிஞை-மருதப் புறன் (66); தும்பை-நெய்தற் புறன் (70); பாடாண்-கைக்கிளைப் புறன் (78) எனவரும் தொல்காப்பியக் கருத்துகள் வற்புறுத்தும். அகத்திற் கும், புறத்திற்கும் இத்தொடர்பு இல்லை எனில், அகத்திணையைத் தொடர்ந்து களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களை ஓதி இருப்பர். அவ்வாறு ஓதுதலே முறை.[59] அவ்வாறு ஓதாமல் இரண்டையும் சார்த்தி வைத்ததன் நோக்கம், இரண்டும் போர் மறவர்தம் அகவாழ்வையும், புறவாழ்வையும் காட்டுவன என்ப தைக் காட்டுதற்காகவே.

அகத்திணை வைப்பு முறை

புறத்திணையே, அகத்திணைக்கு முதன்மை எனின், புறத் திணையை முதலில் மொழியாது, பின்னே மொழிவானேன் என வினவுதல் கூடும். புறம் எனும் மறப்போர், ஆண்பாலார் என்ற ஒரு பாலாரிடை நிகழ்வது. அகம் என்னும் காதற்போர், ஆண் பெண் என்ற இருபாலாரிடை நிகழ்வது. இருபாலார்க்கும் உரித் தாகும் சிறப்பு நோக்கி அகத்திணை முன் கூறப்பட்டது. ஆக தொல்காப்பியர், பிரிவுபற்றி அகத்திணை இயலில் விரிவாக விளக்கு தற்குக் காரணம், புறத்திணைச் சார்பே என்பது தெளிவு. அகத் திணையும் போர் மறவர்தம் அகவாழ்வுத் திணையே என்பதும் தெளிவு.

பிரிவின் அடிப்படை

அகத்திணை இயலில், நூலாசிரியர் நூற்பிக்கும் பிரிவு மூன்று அடிப்படையின.

1 களவில் நிகழும் பிரிவுகள். நூற்பா : 13, 17, 18, 41.

2 கற்பில் நிகழும் பிரிவுகள். நூற்பா : 28, 30, 31, 32, 33, 34, 35, 36, 37.

3 விதி விலக்குகள். நூற்பா : 46, 47, 48.

களவுப் பிரிவு

களவுப் பிரிவுகளைத் தொல்காப்பியர், இருவகைப் பிரிவு (13), கொண்டுதலைக் கழிதல், பிரிந்தவண் இரங்கல் (17), கலந்தபொழுது (18), அகற்சி (41) எனக் குறிப்பர். நூற்பா இடஅமைவும், இடப் பெயர்ச்சியும் இருபொருள் சொல்லாட்சிகளும், தொகை எண்ணீ டும் ஈண்டுப் பொருள் வேறுபாட்டிற்குக் காரணங்களாம். (பார்க்க : அட்டவணை 9)

நச்சர்., குழந்தை, பாரதி ஆகியோரைத் தவிர ஏனையோர், இப்பிரிவு பற்றிய எல்லாச் செய்திகளையும் களவில் நடந்தனவாகவே கொண்டனர். அவற்றைக் களவு நிகழ்ச்சிகளாகக் கொள்ளுதலே பொருந்துவது. கற்பில் நிகழும் பிரிவுகளை நிரல்பட 27 முதல் 37 ஆம் நூற்பா வரை தொல்காப்பியர் பின்னே மொழிகுவர். ஆதலின் இவை களவு நிகழ்வுகளே.

'இருவகைப்பிரிவு' - வைப்புமுறை

'இருவகைப் பிரிவு' பற்றிய நூற்பா இடம் பிறழ்ந்து தொடர் பற்று நிற்பது வெளிப்படை.[60]

நூற்பாக்கள் 6-12 ஐவகை நிலமும் அவற்றின் பொழுதும் கூறுவன.

13 இருவகைப் பிரிவு கூறுவது

14-15 திணை மயக்கம் கூறுவது

16 திணைக்குரிப்பொருள் கூறுவது

17 உரிப்பொருளுள் ஒன்றுன பிரிவைப்பற்றிக் கூறுவது

மேலே உள்ள அமைவை நோக்குகிற பொழுது, 'இருவகைப்பிரிவு' என்ற நூற்பா இடம் மாறிக் கிடப்பது தெளிவாகும். எனவே இந்நூற்பாவைப், பிரிவு உள்ளிட்ட உரிப்பொருளைக் கூறிய பின் வைத்தலே முறை.

அவ்வாறு கொள்ளின் 'இருவகைப்பிரிவு' என்ற நூற்பாவை முதலில் நிறுத்தி (15), 'கொண்டுதலைக் கழிதல், பிரிந்தவண் இரங்கல்' (16) என்பவற்றை அடுத்து நிறுத்திப் பொருள் கொள்க. 'இருவகைப்பிரிவு' என்ற நூற்பாவில் தொகுத்துச் சுட்டியதையே, 'கொண்டுதலைக் கழிதல்' என்ற நூற்பாவின் வழி விரித்தனர்.

இருவகைப் பிரிவு பற்றி

உரையாசிரியர்கள்	இருவகைப்பிரிவு (நூற்பா 13)	கொண்டுதலைக் கழிதல் (17)
1 இளம்பூரணர்	1 தலைமகளைப் பிரிதல் 2 தமர்வரைப் பிரிதல்	உடன்கொண்டு பெயர்தல்
2 நச்சினார்க்கினியர்	1 காலிற் பிரிவு 2 கலத்திற் பிரிவு	தமர்வரைப் தரிதல்
3 சோமசுந்தர பாரதி	1 வேனிற் பிரிவு 2 பின்பனிப் பிரிவு	தலைவியை உடன் கொண்டு செலல்
4 குழந்தை	1 காலிற் பிரிவு 2 கலத்திற் பிரிவு	உடன் போக்கில் அழைத்துச் செலல்
5 மு. அருணாசலம்	1 தலைவியைப் பிரிதல் 2 தமர்வரைப் பிரிதல்	தமர்வரைப் பிரிதல்

பிரிந்தவண் இரங்கல் (17)	கலந்தபொழுது (18)	காட்சி (18)	அயலோர் அகற்சி (41)
ஒருவரை ஒருவர் பிரிந்த இடத்திரங்கல்	தலைமகளைக் கண்ணுறல்	தலைவியை எதிர்ப்படல்	உடன்போக்கு
தலைவி மனையின் கண் இரங்கல்	இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த காலம்	அதன் முன்னர்த் தாகிய வழி நிலைக்காட்சி உளதாம் காலம்	உடன்போக்கு
தமரால், உடன் போக்கில் தலைவியைப் பிரிந்திரங்கல்	தாமே சந்தித் தல்	கண்நோக்கல்	உடன்போக்கில் தாயரன்றி அயலோர் சென்று காண்டல்
தலைவனைப் பிரிந்துஒருவழித் தணத்தல்	நச்சினார்க் கூறியன	கினியர்	நச்சர். உரை
பிரிந்த இடத்து நற்றாய் முதலியோர் இரங்கல்	உடன்போக்கில் தேடிச் சென்று	சென்றவனைக் காணுதல்	இளம். உரை

கொண்டுதலைக் கழிதல்

'கொண்டுதலைக் கழிதல்' என்பது தலைவன், தலைவியை அழைத்துக் கொண்டு உடன் போக்குச் சென்றதைக் குறிக்கும். அப்போது, தலைவி, தம் சுற்றத்தைப் பிரிவள் ஆதலின் இது பிரிவு ஆயிற்று.

கலந்த பொழுது

தலைவி தம்மைவிட்டுப் பிரிந்து சென்றதை அறிந்த தாயர் அலமுறுவர். அங்கும் இங்கும் தேடுவர். சொல்லிச் சொல்லிக் குமுறுவர். எப்படியேனும் சில சமயம் அவர்கள் இருப்பிடத்தைக் கண்டறிவர். அவர்கள் இருவரும் கலந்து உறைவது, தாயாரால் கண்டறியப்படின், அது கலந்த பொழுது, தாயார் காணுதல் காட்சி' எனப்பட்டது.[61] கண்டவர், மகளை மீட்டும் அழைத்து வருதலும் உண்டு. அவ்வாறு அழைத்து வருதல், 'இடைச் சுர மருங்கின், அவள் தமர் எய்திக் கடைக்கொண்டு பெயர்தல் எனப்பட்டது.[62] அவ்வாறு உடன் கொண்டு சென்றவளைப் பெற்றோர் கூட்டி வருதல் அருமை. அவ்வருமை நேரின் உடன் அழைத்துச் சென்ற தலைவன், தலைவியை நீங்கந்து கலங்குவன். அவன் 'கலங்கி அளர் எய்துவது', 'பிரிந்து அவண் இரங்கல்' எனப்பட்டது. தலைவியைச் செவிலித்தாய் தேடிச் செல்வது அன்றி, தமர் ஏவலர் ஆகியோரும் தேடிச் செல்வர்.[63]

கொண்டுதலைக் கழிதலும், கலந்த பொழுது தாயார் காண்டலாகிய காட்சியும், உடன் வந்த உறவினருடன், உடன் வந்த காதலி பிரிந்து சென்றதை எண்ணிக் காதலன் இரங்குதலும், உடன்போக்கு மேற்கொண்டவரைத் தமரும், ஏவலரும் பிறரும் தேடிச் செல்லுதலும் ஆக அனைத்தும் உடன்போக்கு என்பது கருதத்தக்கது. இவ் ஒருமை ஏனைய உரைகளில் இல்லாமை எண்ணற்குரியது. மேற்கண்ட உடன்போக்கில், தலைவி, தலைவன் உடன் இருப்பதால் 'பாலை' என்பதா 'குறிஞ்சி' என்பதா என்ற ஐயுறவு தோன்றும். பெற்றோரை விட்டு அவர் அறியாமல் பெயர்வதால் 'களவு' என்பதா, இருவரும் சேர்ந்தே உறையச் செல்லுவதால் 'கற்பு' என்பதா என்ற வினாத் தோன்றும். களவிலும், கற்பிலும் கூறுதற்கு இயைபு இல்லாத இவ் வுடன்போக்கைப் 'பிரிதல்' அதிகாரத் தொடர்பு எண்ணித் தொல்காப்பியர் அகத்திணையியலில் அமைத்தார். நாற்கவிராச நம்பி, இச் சிக்கலை உணர்ந்தே, உடன் போக்கைக் களவியலிலும், கற்பியலிலும் கூறாமல், 'வரைவியல்' என ஒரு புத்தியலை ஆக்கி அதன்கண் அமைத்தனர். 'உடன்கொண்டு பெயர்தல்' நிலம் பெயர்தலின் புணர்தலின் அடங்காமையாலும், உடன் கொண்டு

பெயர்தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப்பட்டது' என்பர் இளம்.[64]

களவு இருவழிகளால் கற்பு மணம் எய்தும். ஒன்று; அறத்தொடு நிலை: பிறிதொன்று: உடன்போக்கு. முன்னது, மென்முறை : பின்னது வன்முறை. எனினும் அன்றைய சமூகத்தில் உடன் போக்கை மறுத்தலும் இல்லை; 'மறு' என ஒறுத்தலும் இல்லை. உடன்போக்கு, களவே என முடிவறுக்க. அதனைக் கற்பாகக் கொண்டு கூறும் பொருளுரை, பொருந்தா உரையாம். வேனிற் பிரிவும், பின்பனிப் பிரிவும், கற்புப் பிரிவுகளே. அவை, பிரிவு அதிகாரத்தில் அடக்கப்பெறும். காலிற் பிரிவு, கலத்திற் பிரிவு என்ற இரண்டும் கற்பிற் பிரிவுகளே. அவை, 'முந்நீர் வழக்கம்' எனத் தொடங்கும் நூற்பாவழி எதிர்முகமாக உணர்த்தப் பெறும். ஈண்டுக் கூற வேண்டா.

'பிரிந்தவண் இரங்கல்'

'கொண்டுதலைக் கழிதல் — உடன்போக்கை உணர்த்துவது என்பதில் உரை வேறுபாடு இல்லை. 'பிரிந்தவண் இரங்கல்' என்பதில் உரை வேறுபாடு உள்ளது. 'கொண்டுதலைக் கழிதல் பிரிந்தவண் இரங்கல் என்ற நூற்பா அடி, ஒரே எழுவாயைக்கொண்டே இயங்குகிறது. தலைவன் என்பது எழுவாய். தலைவன் கொண்டு தலைக் கழிதலும், பிரிந்து இரங்கலும் என்று உரைகோடலே தொடர் முறைக்குப் பொருந்துவது. மாறாக, முன்னதற்குத் தலைவனை எழுவாய் ஆக்கிப் பின்னதற்குத் தலைவியை எழுவாய் ஆக்குதலும் (நச்சர்., குழந்தை) நற்றாய் முதலியாரை எழுவாய் ஆக்குதலும் (மு. அருணாசலம் பிள்ளை) பொருத்தம் அற்றவை. 'கலந்த பொழுது' என்பதைக் கொண்டுதலைக் கழிதலோடு இணைத்துப் பாராததால் வீண் பொருள் விரிந்தது. அதனுள்ளும் இணைத்துப் பார்ப்பின், உடன் போன பெண்ணைத் தேடிச் சென்றவர், சென்று சந்தித்த 'காட்சி' புலப்படும்.[65]

களவில் நிகழ்வன

(ஒத்த பருவம் உடைய ஒருவனும் ஒருத்தியும் சந்தித்தனர்; முதற் சந்திப்பில் அவர் தம் விழிகள் உரையாடின; விழி உறவு நெட்டுறவிற்கு வழி ஆயிற்று. மீண்டும் சந்தித்தனர். உரையாடினர்: மீண்டும் மீண்டும் சந்தித்தனர்; உறவாடினர். இரவும், பகலும் சந்தித்தனர்; உரையாடினர். உறவாடினர். இருவரும், பெற்றோர் உடன்பட மணஞ் செய்து வாழ விழைந்தனர், பெற்றோரோ அவர் விருப்பம் அறிந்திலர். அவன் விரும்பாப் பெண்ணை அவனுக்கும், அவள் விரும்பா ஆடவனை அவளுக்கும் பேசத்

தொடங்கினர். தம் உள் விருப்பைத் தெரிவிக்க விரும்பினர். இயலவில்லை.

மகளின் மனமாற்றம், உடல் மாற்றத்தை எண்ணி, அன்னை மகளை இற்செறித்தனள்; மணவாளனைக் காண இயலாது அவள் தவித்தனள். அவளைக் காண இயலாது அவன் தவித்தனன். இருவர் தவிப்பும் தோழியை வாட்டியது. முடிவில் தலைவனுடன் அயலூர் சென்று வாழ்தலே தக்கது என்று முடிவு செய்தனள்.[66] தலைவி, யாவரும் அறியா, வைகறை இரவில் வீட்டை விட்டனள்; வெளி ஏறினள். தலைவன் உடன் வந்து அழைத்துச் சென்றனன். இன்னுர் பெண் ஒருவனுடன் உடன் போயினள் என்று ஊர் மொழிந்தது; சேரி அலர் தூற்றியது. 'ஊர் அலர் எழ, சேரி கல்' எனத் தலைவி. தலைவனுடன் செல்லும் உடன் போக்கைப் பாலை என்பர்.[67] பெற்றோரை உற்றாரைப் பிரிந்து பேதைமடமகள் செல்வதால், 'தமர் வரை பிரிதல்' என்பர். தமரைப் பிரிந்தனள் ஆயினும், தலைவி, தலைவனைப் பிரியவில்லை. தலைவனைப் பிரியாமையைத் தமரைப் 'பிரிவு'எனத் தகாது என்பா பாரதி. உடன் போக்கை, அவர் பிரிவு என்று ஒப்புக் கொள்ளார். ஆனால், உடன் போக்குச் செய்யுட்கள் பாலைத் திணையாகவே நெடுகப் போற்றப்பட்டுள்ளன. பாலைத்திணை பாடுவதில் வல்லவராகிய பாலைபாடிய பெருங் கடுங்கோஉடன் போக்குப் பாடலைப் பாலையாக அமைத்துப் பாடியுள்ளார்.[68] ஆக உரிப்பொருள்கள் பெண்ணை மையமாக வைத்து எழுந்தவை. தமரைத் தலைவனுக்காகப் பிரிந்தனள் ஆயினும், பெற்றோரை மறக்க இயலாமல் தவிப்பது பெண்டிர் உள இயல். தலைவனைப் பிரிந்தால் நேரும் வருத்தத்திற்கு இணையாக, பெற்றோரைப் பிரிந்ததற்காகவும் பெண் வருந்துவள். இராமன் மகுடம் சூடினால், சீதை அரசி ஆவாள். சீதை அரசி ஆனால், சீதையின் தந்தை சனகன், நிறுத்திய போரை, மீட்டும், தன் தந்தை கேகயன் மேல் தொடுப்பன்' என்ற உரையைக் கூறி வழி கேட்டதும், கைகேயி மனம் மருகினள். அதற்கு முன் கூனி கூறிய வாதுகளை எல்லாம், மறுத்து மொழிந்து வந்தவள், தந்தைக்குப் பாதிப்பு என்று கேட்டவுடன் தடுமாறினள்.[69] தன் கணவனினும், தந்தையின் உயிரும் நலமும் பெரியன எனக்கருதினள்; கலங்கினள். அவ்வாறு கருதுதலும் கலங்குதலுமே பெண்மை. ஆதலின், உடன் போக்கைப் பாலையாகக் கொண்டமை பெண்மை உள இயலுக்குப் பொருந்துவதே.

உடன்போக்கு - அருகிய வழக்கா?

உடன்போக்கைக் கூடாஒழுக்கம் எனச் சிலர் கருதுவர். கருதி, உடன்போக்கு அருகிய வழக்கே என நாட்டுவர்.[70] அஃது அருகிய வழக்கு அன்று; பெருகிய வழக்கே. உடன் போக்குப்

போய தன் மகளைத் தேடி அலைவள் செவிலித் தாயொருத்தி. வழியே இணை இணையாகப் பலர் வருதலைக் காணுவள். அவர், சேய்மையில் வருகிற பொழுது, தம் மகளும் அவள் காதலனும் ஆக இருக்கலாம் என்று எண்ணுவள். வந்தவரோ, அவள் மக்கள் அல்லர். வேறு வேறு உடன்போக்கு இணைகள் என அறிந்து வருந்துவள். தன்மகள் போல உடன் செல்லும் காதல் இணைகள், விண்மீன்கள் போல எண்ணிக்கையில் அடங்கார்; பலர் போலும்' என்று மொழிகுவள். 'அகலிரு விசும்பின் மீனினும் பலரே மன்ற இவ் உலகத்துப் பிறரே' என்பது அவள் மொழிபு.[71]

சான்றுகள்

உடன்போக்கு இலக்கியத்தில் மட்டும் அன்றித் தமிழ் மக்கள் வாழ்விலும் பல்கி இருந்தது. திராவிடப் பழங்குடியினர் பலரிடம் இப்பழக்கம் இன்றும் நிலவி வருகிறது.

1. கர்நூல், நெல்லூர் மாவட்டத்தில் வாழுநர் 'செஞ்சு' என்ற பழங்குடியினர். அவரிடம் உடன்போக்கு மணமுறை இயல்பாக உள்ளது. ஆடவன், தான் விரும்பும் பெண்ணை அழைத்துக் கொண்டு ஓடி விடுவன். ஓர் இரவு, ஊரார் அறியாமல், சேர்ந்து இருந்து விட்டு ஊர் திரும்புவன். திரும்பும் இருவரையும், அவர்தம் பெற்றோர் மகிழ்வுடன் வரவேற்பர்; நண்பரை, உறவினரை அழைப்பர். உடன் போய் வந்த மணமக்கட்குப் புத்துடை நல்குவர்; மணவினை நிகழ்த்துவர்; மகிழ்வர்.[72]

சோழகர் என்ற பழங்குடியினரிடமும் இப்பழக்கம் உள்ளது. உளமார விரும்பும், ஓர் ஆணும், பெண்ணும் ஒருநாள் காட்டுக்குள்ளே ஓடி விடுவர். மூன்று நாட்கள், கானகத்துள் தங்கிக் களிப்பர். நான்காம் நாள் ஊரார் பறை அடித்து வரவேற்பர்; வேறு பல இசைக் கருவிகளை இசைப்பர்; அனைவரும் திரளுவர்; கானகத்துள் செல்வர்; காதலரைத் தேடுவர்; செல்லும் போது பறைகளைப் பலரும் அடித்து முழக்குவர்; பல இசைக் கருவிகளை இசைப்பர். காதலர் இருவரையும் கண்டறிந்து மணம் முடிப்பர். மனம் களிப்பர்.[73]

3. உடன் போக்கைத் திருமணம் என ஒப்புக் கொண்ட பாங்கு தொல்காப்பியக் காலத்து இருந்தது. இதனைக் 'கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே புணர்ந்துடன் போகிய காலையான' என்ற கற்பியல் நூற்பா காட்டும்.[74]

அயல் நாடுகளில் பெண்ணுரிமை

உடன் போக்கு தமிழ்ப் பெண்டிர்க்குப் பண்டிருந்த உரிமையை மொழிவது. விரும்பிய ஆடவன் ஒருத்தனுடன் சென்று உறைவது பழி என இழிக்கப்படவில்லை. ஆனால், மற்றைய உலக நாகரிகங்கள் பெண்டிர்க்கும் கடுமையான கட்டுப் பாடுகளை விதித்திருந்தன. ஏதென்சிலும், பெண்கள் பொது வாழ்விலும், சமுதாயத்திலும் பின்னுக்குத் தள்ளப் பட்டிருந் தனர். ஆண்களை விடத் தாழ்ந்தவராகக் கொள்ளப்பட்டனர். அவர்தம் கல்வி கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. குழந்தை வளர்ப்பும் இல்லப் பணிகளுமே நோக்கங்களாகப் பெண்டிர் பழக்குவிக்கப் பட்டனர். மணம் முடியாத இளமகளிர், வீட்டுக்கு வெளியே விடப்படுதல் இல்லை. மணமானவரும், கணவனுடன் மட்டுமே சேர்ந்து உண்ணலாம்; உறங்கலாம். பிறர் எந்த ஆடவர் முன் தோன்றுவதே இல்லை. காதல் வாழ்விற்கு அவர்க்கு வாய்ப்பு மிகக் குறைவாகவே இருந்தது.[75] கிரேக்கம் முழுவதுமே பெண்டிர் அடக்கி வைக்கப்பட்ட நிலையிலேயே இருந்தனர். வரதட்சிணை முறை பெண்டிர் திருமணங்களுக்குப் பேரிடையூறாக இருந்தது. குழந்தையைப் பெறுதற்கும், வளர்ப்பதற்கும் வீட்டுப் பணிகளைப் பார்த்தற்கும் மட்டுமே பெண்டிர் பயன்பட்டனர். திருமணம் குழந்தை பெறுதற்காகச் செய்யப்பட்ட ஒரு கடனே. பல காமக் கிழத்தியர் ஒவ்வொர் ஆடவர்க்கும் உண்டு காமக் கிழத்தியர்தம் நிலைமை பெரும் பரிவிற் குரியது. ஆடவர்தம் பொருளாக அவர்கள் கருதப்பட்டனர். அவர்களை விற்கலாம்: வாங்கலாம்.[76] பழைய நாகரிகம் வாய்ந்த மெசபதோமியாவிலும் ஏறத்தாழ இதே நிலைமை இருந்தது. மனைவி ஓர் அஃறிணைப் பொருளாகவே கருதப்பட்டாள். கணவன் தான் பட்ட கடனுக் காக, மனைவியை அடிமையாகப் பணி செய்யப் பணிப்பான். பெண் வழுவினால் அவளை விற்று விடுவான். பெண்ணை மணப்பிக்க வரதட்சிணை கொடுத்தல் வேண்டும். மணக்கடமையை (இணை விழைச்சுக்கு இணங்காமை) ஒரு பெண் மறுப்பாளே ஆனால், அவளைத் தண்ணீரிலே எறிந்து கொன்று விடச் சட்டம் ஒப்புதல் அளித்தது. காமக்கிழத்தியை மனைவியே தேடிப்பெற்றுக் கணவனுக்கு அளிப்பள். பிறன் ஒழுக்கம் மேற் கொள்பவள், நீரில் எறிந்து கொல்லப் படுவள். மனைவியரைத் தேவைப்படின் ஆடவன் அடகு வைப்பன்.[77]

அசிரியரிடையே பெண்டிர் மேலும் கட்டுப்பாட்டில் அழுந் தினர். பெற்றோர் தம் ஒப்புதல் இன்றி, மகள் யாரையும் மணத்தல் முடியாது. மகள் கடனுக்காக விற்கப்படுவள்; அவ்வாறு விற்கப்பட்ட அடிமையும் பெற்றோர் ஒப்புதல் இன்றி

மணத்தல் இயலாது. மணம் ஆன பெண்டிர் தலையை முக்காடு இட்டு மூடிக் கொண்டுதான் வெளிச் செல்லல் வேண்டும். பெண்டிர் பிறழ்வொழுக்கம் ஒழுகுவாளே ஆனால், கொலைத் தண்டம் பெறுவள்.[78]

பழஞ் சீனாவிலும் பத்து வயதிற்குப் பிறகு, பெண்கள், வீட்டில் இருந்து வெளிச் செல்வதில்லை. வெளிச் செல்வது தடை செய்யப்பட்டிருந்தது. ஏறத்தாழ ஏழு வயதிற்குப் பின் பெண்கள் ஆண்கள், உடன் உண்பதோ, உறங்குவதோ இல்லை.[79]

நனி பழைய நாகரிகங்களைப் பெற்ற நாடுகளில் பெண்டிர் அடிமையாக ஒடுக்கப்பட்ட அவலங்களை அவ்வந் நாட்டு வரலாறுகள் விரிந்துரைக்கின்றன. இவற்றுடன் தமிழரிடம் இருந்த களவு உறவையும், உடன்போக்குச் செலவையும் ஒப்பிட்டு எண்ணுக.

கற்பொழுக்கத்தில் பிரிவுகள்

மணத்திற்கு முன் அமைந்த ஒழுக்கம் களவு எனப்படும்; மணத்திற்குப் பின் நிகழ்வது கற்பு எனப்படும். களவு வாழ்வு காதல் வாழ்வு; உணர்வு மேலோங்கி நிற்கும். கற்பு வாழ்வு கடமை வாழ்வு; அறிவு மேலோங்கி நிற்கும். களவுப்பிரிவு உணர்வு வழி நிகழ்வது. கற்புப்பிரிவு, அறிவு வழி நிகழ்வது. எனவேதான், ஒதற் பிரிவும் முதன்மை பெறும். களவுப்—பிரிவு காதற் பிரிவு; கற்பிற் பிரிவு—கடமைப் பிரிவு. இப்பிரிவுகள் பெரும்பாலானவை மன்னவனையே நோக்கியவை.

கூட்டம், குழு, சமூகங்கள் உருவாகி, அரசன் வந்துற்ற போது அவனே தலைமை மாந்தனாக இருந்தான். தலைவன் பெரும் பாலும் பெரும் வீரனாக இருப்பான். காலப்போக்கில் அரசனை ஒட்டிப் புரோகிதம் வளர்ந்தது. அரசரும், புரோகிதரும் நிகரான நிலையை அடைந்தனர். நிகர் நிலை, வரும்பொழுது, 'தான் தான் பெரியவன் என்ற போராட்டம் வந்தது. இதனை உரோமை வரலாற்றில் காணலாம். மன்னவனு மதவாதியா என்ற தலைமைப் போராட்டம் அங்கே தொடர்ந்து இருந்தது. இந்தியாவில் மன்னவனுக்கு மேலே புரோகிதர் உயர்ந்த காலமும் உண்டு. சிந்துவெளி நாகரிகம் புரோகிதர்தம் செல்வாக்கைக் காட்டும். புரோகிதர் மிகு செல்வாக்கை எதிர்த்து, மன்னவன் குடி எழுந்தது. அவ் எழுச்சியை, மகாவீரர், புத்தர் வரலாறு காட்டும். சமயத் தலைமையையும், சமுதாயத் தலைமையையும் மன்னர்குடி பெற்றது என்பதற்கு, அவர்தம் வரலாறு சான்று. அரசர், புரோகிதர் இடையே நடந்த 'பெரியோர் யார், என்ற போராட்டம் தணிந்தது. இருவரும் இணங்கி ஒத்து நடந்தனர்,

அட்டவணை (வரைபடம்) 10

பிரிவு



அட்டவணை 11

'உயர்ந்தோர்'..... பற்றி உரையாளர் விளக்கம்

எண்	உரையாசிரியர் பெயர்	உயர்ந்தோர்	மேலோர்	பின்னோர்	நால்வர்
1	இளம்பூரணர்	அந்தணர் அரசர் (28) அந்தணர் (36) வணிகர் (33)	தேவர்	வணிகர் வேளாளர்	நான்கு வருணத்தார்
2	நச்சினார்க்கினியர்	அந்தணர். அரசர் வணிகர் (28) அந்தணர் முதலிய நால்வர் (33) நான்கு வருணத்தார் (36)	வணிகர்	வேளாளர்	அந்தணர், அரசர் இருவகை வேளாளர்
3	சோமசுந்தர பாரதி	அடியோர் வினைவலர் ஏவலர் அல்லாத உயரியோர் (28) (33) பொருள் பற்றி உயர்ந்தோர் (35)	வேந்தன்	மன்னரைச் சிவ ணிப் பின் நிற் போர்	நானில மக்கள்
4	புலவர் குழந்தை	பெரியோர் (28) அந்தணர் முதலாய நால்வர் (33) அறிவு ஒழுக்கங்களில் சிறந்தோர் (36)	அரசர்	வணிகர் வேளாளர்	அந்தணர், அரசர் வணிகர், வேளாளர்
5	மு. அருணாசலம் பிள்ளை	நால்வர் (28), குறுநில மன்னர் (33) தேவர் (36)	தேவர்	வணிக, வேளாளர்	நான்கு வருணத்தார்

அட்டவணை 12

பிரிவு பற்றி

உரையாசிரியர்	ஒதல்	பகை	தூது
இளம்பூரணர்	அந்தணர், அரசர், (வணிகர்?)	அரசன்	அந்தணர், அரசர் வணிகர், வேளாளர்
நச்சினார்க்கினியர்	அந்தணர், அரசர், வணிகர் வேதம் ஒழிந்த கல்வி, அந்தணர், அரசர், வணிகர் உழுவித்துண்ணும் குறுநில மன்னர்	அரசர், குறுநில மன்னர் (தானே சேறல்)	அந்தணர், அரசர் வணிகர், வேளாளர்
சோமசுந்தர பாரதி	நானிலத்தமிழ் மேன்மக்கள் வேந்தன் கிளைஞர், ஏனோதியர்	அரசர், குறுநில மன்னர் ,,	நானிலத்தமிழ் மேன் மக்கள், வேந்தன் கிளைஞர் ஏனோதியர்
புலவர் குழந்தை	அந்தணர், அரசர் வணிகர், வேளாளர்	அரசர் ,, வணிகர் வேளாளர்	அந்தணர், அரசர் வணிகர், வேளாளர்
மு. அருணாசலம்பிள்ளை	அந்தணர் முதலாய நால்வர், குறுநில மன்னர்	அரசர், குறுநில மன்னர் ,,	அந்தணர் முதலாய நால்வர், குறுநில மன்னர்.

உரையாசிரியர்தம் கருத்து

அறங்காவல்	நாடு காவல்	பொருள்வயிற் பரத்தை வயிற்பிரிவு
அந்தணர், அரசர் வணிகர், வேளாளர்	அரசர், வணிகர் வேளாளர்	அந்தணர், வணிகர், வேளாளர்
அரசர், குறுநில மன்னர் வேளாளர், குறுநில மன்னர் வேளாளர் (உற்றுழி உதவல்)	அரசர், இருவகை வேளாளர், குறுநில மன்னர்	அந்தணர், அரசர், வணிகர், இருவகை வேளாளர் குறுநில மன்னர்
படைத் தலைவர், வேந்தன் கிளைஞர் ஏஞ்சியர், நானிலத் தமிழ் மேன்மக்கள்	வேந்தன் கிளைஞர் ஏஞ்சியர், நானிலத் தமிழ் மேன்குடி மக்கள்.	வேந்தன் கிளைஞர், ஏஞ்சியர், ஏவலர் நானிலத்தமிழ் மேன்மக்கள்
— — —	அரசர் முதலான நால்வர்	அரசர் முதலான நால்வர்
அரசர், வேளாளர் குறுநில மன்னர்.	அந்தணர் முதலாய நால்வர் குறுநில மன்னர்	அந்தணர், வணிகர் வேளாளர்

அட்டவணை 13

பிரிவுகள் பற்றி இலக்கண நூலாசிரியர்தம் கருத்து

எண்	நூலாசிரியர்	ஓதல்	பகை பரத்தை	தூது பகை தணிவன	அறங்காவல்	நாடு காவல்	பொருள்
1	தொல்காப் பியர் (27 - 37)						
2	இறையனூர் களவியல் (35 - 44)	பார்ப்பார், அரசர்	அரசர், அந் தணர் வணி கர், வேளா ளர்.	வேந்தர், பார்ப்பார், வணிகர், வேளாளர்	வேளாளர் (உற்றுழி)	பார்ப் பார், அர சர்	வேளா ளர்
3	நம்பி அகப் பொருள் (69 - 84)	வேதக்கல்வி : அந் தணர் அரசர், வணி கர் வேதம் அல்லாக் கல்வி, அந்தணர் முத லாய நால்வர்	அந்தணர் முத லாய நால் வர்க்கும்	வேதமாந்தர், வேந்தர் சிறப் புப் பெயர் பெற்ற ஏனை யோர்க்கும்	அந்தணர் முதலாய நால்வர்க்கும்	அர சர்க்கு	அந்த ணர் முத லாய அனை வர்க்கும்
4	முத்து வீரியம் (811 - 818)	வேதக்கல்வி : மறை யோர் மன்னர், வணிகர், வேதம் அல்லாக் கல்வி : நால்வர்க்கும் படைக்கலம் பயிலு தல் முதலியன அந் தணர் தவிரப் பிறர்க்கு இல்லை.	———	அந்தணர், அரசர், சிறப் புப் பெயர் பெற்ற பிறர்க் கும்	நால்வர்க்கும்	அர சர்க்கு	———
5	தொன்னூல் விளக்கம் (183 - 187)	,,		,,	நால்வர்க்கும்	அர சர்க்கு	———

புத்தர் அவதாரத்தைத் திருமால் அவதாரமாகக் கொண்ட நிகழ்ச்சி இதனையே காட்டும். நேமிநாதர் வரலாறு கிருட்டிண அவதாரத்துடன் இணைக்கப்பட்டதும் இதனையே வற்புறுத்தும். அரசன் ஆளுவன்; அவன் புரோகிதரால் ஆளப்படுவன். இந்த இருவர்தம் வாழ்வை வணிகர் எதிர்த்தனர். வணிகர் எதிர்க்கவே, அவரும் தமக்கு அடுத்த நிலை என அரசரும் புரோகிதரும் ஒப்புக் கொண்டனர். கடைசியில், கடைசி வரை நின்றவர் வேளாளர் மட்டுமே. இந்த நிலைமையைக் கி.மு. விலேயே வட இந்தியா முழுமையாக எய்திவிட்டது. இந்த முழுநிலையைத் தமிழகம் எய்தி இராவிட்டாலும், இந்தக் காற்று, தமிழக மண்ணில் வீசியது. அந்த வீச்சைத் தொல்காப்பியத்துள் காணலாம். தொல்காப்பியத்துள், பிரிவு பற்றிய நூற்பாக்களில் அவ்வீச்சுத் தெளிவாகப் புலப்படுகிறது. இவ்வடிப்படை இன்றி, உரை செய்ததாலேயே பிரிவு ஒத்துகளுள் நிரம்ப வேறுபாடுகள் நேர்ந்து விட்டன. தொல்காப்பியத்துள் நிறப்பிரிவு இல்லை; சாதிப் பிரிவு இல்லை. ஆனால் ஏற்றத் தாழ்வு இருந்தது என்பதை மறுத்தற்கில்லை.

ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன — 28
மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே — 31
மன்னர் பாங்கின் பின்னோர் ஆகுப — 32
உயர்ந்தோர்க்கு உரிய ஒத்தினுள — 36
உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான — 36

மேற்கண்ட நூற்பாக்களில் உள்ள 'உயர்ந்தோர்', 'மேலோர்' 'பின்னோர்' என்ற மயக்கக் குறியீடுகள், உரை வேறுபாடுகளின் விளை புலங்கள். (பார்க்க : அட்டவணை 11, 12, 13)

உரை கண்டோர் மூவகைக் கோட்பாட்டின் அடிப்படையில் உரை கண்டுள்ளனர்.

1 பிராமண, சைத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு வருணசிரம அடிப்படை. (நச்சினார்க்கினியரும், இளம் பூரணரும்)

2 முல்லை நிலத்தார், குறிஞ்சி நிலத்தார், மருத நிலத்தார், நெய்தல் நிலத்தார் என்ற நான்கு நிலத்தார் அடிப்படை (இவ்வடிப்படையினர் இடையே தொல்காப்பியர் காலத்தில் எவ்வகை ஏற்றத்தாழ்வும் இல்லை எனக் கருதுவர் பாரதி முதலானோர்).

3 தமிழகத்திலேயே அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால் வகுப்பினர் இருந்தனர் என்ற அடிப்படை (குழந்தையும், மு. அருணாசலம் பிள்ளையும்)

இரண்டாவது கோட்பாட்டிற்கு இலக்கியச் சான்றும் இல்லை; வரலாற்றுச் சான்றும் இல்லை. எனவே அது கொள்ளற்குரியது அன்று. முதற் கோட்பாடும் கொள்ளுதற் குரியது அன்று. வருணம், நிற அடிப்படையிலும், பிறப்பு அடிப்படையிலும் அமைவது; ஆரியர்க்கே உரிய வட இந்தியப் பிரிவு. அதனை அப்படியே தொல்காப்பியர் கொண்டார் என்பதற்குத் தொல் காப்பிய நூலுள் சான்று இல்லை. நாட்டு வரலாற்றிலும் சான்று இல்லை. எனவே வருணசிரம அடிப்படை, தொல்காப்பியர் காலத் தமிழக வரலாற்றிற்குப் பொருந்துவது அன்று. எனினும், வட ஆரிய சமற்கிருத அடிப்படைகளைத் தொல்காப்பியர் முற்று மாக அறியார் என்பது கருத்தன்று. மூன்றாவது கருத்து ஆய்விற் குரியது. ஒருவகையான இனப் பாகுபாடு தமிழகத்தில் இருந்தது என்ற கருத்தினது. இங்கே இடம் பெற்றுள்ள, நான்கும், வரு ணங்கள் நான்கும் ஒன்றைப் போன்றவை. ஆனால் ஒன்று அன்று. அரசரும், மறவரும், வருணசிரமத்தில் சத்திரியர் எனப்படுவர். தமிழகத்தில் அத்தகு பகுப்பு இல்லை. வருணசிரமத்தில் சூத்திரர் எனப்படுபவர், ஏனைய மூன்று வருணத்தார்க்கும் அடிமைப்பணி செய்வர். தமிழ் வேளாளர், அத்தகையர் அல்லர்.[80] எனினும், ஆரிய வருணத்தாரளவு ஏற்றத் தாழ்வுகள், தமிழ்ப் பகுப்பில் இல்லை. ஆனால் ஏற்றத்தாழ்வே இல்லை என்ற கருத்து மாந்தர் இன வரலாற்றிற்குப் பொருந்தாது. மாந்தர் இனத்தில் ஏதேனும் ஓர் அடிப்படையிலே குழுக்கள் உண்டாகும். தொழில் முதலாய அடிப்படையில் தோன்றும் தொழில் குழுக்கள், கால அடைவில், தனித்தனிப் பிரிவினதாக ஒதுங்கி விடும். தத்தம் தொழில் கமுக் கங்களை மறைக்க விரும்புவதால், தொழிற் பிரிவுகள், அயற் பிரிவு களில் மணம் செய்து கொள்வதில்லை. இவ்வக மணமுறை நாள டைவில் தொழில் அடிப்படைப் பகுப்புகளை உண்டாக்கும். அவ் வாறு உண்டாகிய நிலையில், பிறப்பு அடிப்படையே தொழிற் பிரிவை அடையாளம் காட்டும். மிகுந்த வருவாய் தரும் தொழிற் பிரிவு, உயர்வாகும். குறைந்த வருவாயைத் தரும் தொழிற் பிரிவு தாழ்வாகும். இவ்வாறு உயர்வு தாழ்வு கருக் கொள்ளும். எப் போதும் வலிமையே ஆளுதல், மேலோங்கி இருத்தல், தங்குதல் (Survival of the Fittest) உலக இயல். வலிமையே அதிகாரம் செய்யும். அதிகாரம் செய்யும் வலிமை தலைமை பெறும். தலைமை அரசன் ஆகும். தொழிற் குழுவைப் போலவே, அரசக் குழு, தான் ஆள எண்ணும். மற்றவரை மணக்க, மறுக்கும். அப்போது தான் அரச குடும்பம் உருவாகிறது. முடிவில் பிறப்பு அடிப் படையில், அரச உரிமை அமைகிறது, தொழிலும், வலிமையும் அறிவிற்குப் பணிபவை. சிங்கத்தை முயல் வீழ்த்தவில்லையா? அறிவின் உணர்ச்சி பல்கப் பல்க, அறிவுடையார் தலைமை பெறுவர்

தம் தலைமையைக் காப்பாற்றிக் கொள்ள எண்ணுவர். தம்மைத் தவிர பிறர் படிக்கலாகாது என்று வரையறுப்பர். வரையறுத்த நிலையில் அவரே படிப்பர்; அவரே அறிவர். இவ்வாறு அறிவர் இனம் தனியாக உருவம் பெறும்.

நிலவுரிமை தோன்றியதை ஒட்டி வேளாளர் வலுத்தனர். தமக்குப் போக எஞ்சிய விளைச்சல்களை விறக முனைந்தனர். பண்ட மாற்று பெருகியது. இருந்தபடி இருந்து வருவாயைப் பெருக்கிச் சுவை கண்டோர், வேளாளரினும் செல்வச் செழிப்பு உற்றனர். செழித்தவர், தம்முடன் செழித்தவரைச் சேர்த்துக் கொண்டனர். அப்போது இருந்து வணிக இனம், தனியே தழைக்கத் தொடங் கியது.

காலப் போக்கில், எல்லாப் பிரிவுகளும், தம் அடிப்படைத் தொழிலை மறக்கத் தொடங்கின. அல்லது இரண்டாந்தரமாக எண்ணின. அமைச்சர் மகன், அமைச்சனாக இல்லாவிடினும், தான் அமைச்சர் மகன் என்று தருக்குவது இல்லையா? அது போன்ற தருக்குகள், அரச, அந்தண, வணிக வேளாளரிடம் வரத் தொடங் கின. பாட்டன், பதைக்க உழைத்த நிகழ்ச்சிகள் மறக்கப்பட, தந்தை தழைப்பித்த நிழலில் தனயன் உறங்க நினைத்து, உரிமை கொண்டாடத் தொடங்கினன். இத்தகு தொடக்கம் (முடிவு அன்று) பண்டைச் சிந்து வெளிச் சமூகத்திலேயே வேர் விட்டிருந் தது. தொல்காப்பியச் சமூகத்தில் முளை விட்டது. சங்க காலச் சமூகத்தின் இளஞ்செடி யாயிற்று. பல்லவர் காலத்தில் பரவிப் பெருகியது. சோழர் காலத்தில் கிளைத்துத் தழைத்தது. முளை விட்டுக் கிளைவிட்டுத் தழைக்க வாய்ப்பாக ஆரியர்தம் கலப்பும் காரணமாக இருந்தது. தொல்காப்பியர் காலம், ஆரியவரவிற்கும் உறவிற்கும், ஆட்பட்ட காலமே. எனவே, தமிழர் இனப் பிரிவோடு, ஆரியர் இனப்பிரிவும் கலக்கத் தொடங்கி இருந்தது. அதனாலே தான் வடமொழி எழுத்தை விலக்கச் சொன்ன தொல்காப்பியர், வடமொழிச் சொற்களைத் தமிழ் வடிவில் ஏற்றுக் கொண்டார்.[81] 'மறையோர் தேசத்தை' மதித்தார்; நரம்பின் மறையைத் தழுவி னார்; எனவே, தமிழகத் தொழில் அடிப்படைப்பிரிவுகள், இனப் பிரிவுகளாக ஆகும் கட்டத்தில் ஆரியர் வரவும் அமைய, இனப் பிரிவு வலுத்தது. அதன் இலைமறை காய்களைத் தொல்காப்பிய நூலுள் காணலாம். தொல்காப்பியர் 'உயர்ந்தோர்' என்பார்; 'இழிந்தோர்' என்பார்; 'மேலோர்' என்பார்; 'பின்னோர்' என்பார். அவர்தம் குறியீடுகளை நினைவில் கொண்டு மேலே உள்ள நூற்பாப் பொருளை நோக்குதல் வேண்டும்.

ஓதல் பிரிவு

'ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன' என்பது நூற்பா. ஓதுதற் காகப் பிரிதலும், தூதுக்காகப் பிரிதலும் முறையே அந்தணர்க்கும் அரசர்க்கும் உரியன. ஓதுதல் என்பது வேதத்துடன் இணைத்து நினைக்கப்படும். கற்றல், படித்தல் என்பன போன்ற வினைச் சொற் களிலும், ஓதுதல் என்ற சொல், வேதம் ஓதுதலோடு மட்டும் தொடர்புடையது. கல்வி, கல்லாமை அதிகாரங்களில், ஓதுதல் என்ற சொல்லை ஒரு முறையும் ஆளாத திருவள்ளுவர் பார்ப்பன ரைப் பற்றிக் குறிப்பிடும் போது மட்டும் 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும்' (திருக்குறள் 134) என்றல் காண்க. எனவே அன்றைய நிலையில் வேதம் ஓதுதலே கல்வி எனப்பட்டது. வேதக் கல்விக்காகப் பிரிந்து சென்ற பார்ப்பனரைப் பிற்காலக் கல்வெட்டு கள் காட்டும். தமிழர் கல்வி—ஏட்டுக் கல்வி; கண்ணால் பார்த்துப் படிக்கும் கல்வி, 'கண்ணுடையர் என்பவர் கற்றோர்' என்பது திருவள்ளுவம் (393). எழுத்து மொழி இல்லாத ஆரியர், கண் கல்வியை அறியார்; செவிக் கல்வியையே அறிவர். அவர் வேதத்தை எழுதிப் பயிலவில்லை; காதால் கேட்டுக் கேட்டுக் வாயால் ஓதி ஓதிப் பயின்றனர். எனவே ஓதற் பிரிவு அந்தணர்க்கு முதன்மையாயும் அமைந்தது. அரசர் முதலாய பிறர் கல்லாதார் என்று கருத வேண்டுவதில்லை. கற்றனர். ஆனால் ஆரியரைப் போல் நாடு கடந்து சென்று கற்பதும் இல்லை. கற்க வேண்டுவதும் இல்லை. அரண்மனையில், படைக்களக் கொட்டிலில், ஊரில், ஊர்ப் புறத்திலேயே அவர்கள் படைக் கல்வியும், பொருள் படைக் கல்வியும் கற்றனர். அவருக்குப் பிரிந்து செல்லும் இன்றியமை யாமை இல்லை. அதனால் அவர் ஓதலுக்காகப் பிரிதல் இல்லை; பிராமணர், தென்புலம் போந்து வாழ்ந்து வந்தனர். அரசரைச் சார்ந்து இருந்து வந்தனர். அவர்தம் உற்றூர் பெற்றூர் உபாத் தியாயர் எல்லாம் வடபுலத்திலேயே இருந்தனர். எனவே வேதம் ஓதுதலை அவர் செவ்வையாய்க் கற்கத் தம் வடபுலத் தாயகம் செல்ல வேண்டி இருந்தது. அதற்கு மூன்று ஆண்டுகள் ஆயின. அதனாலேயே அவர் ஓதற்பிரிவு மேற்கொள்ள வேண்டி இருந்தது.

யாரார் கற்க வேண்டும் / வேண்டா என்பது பற்றித் தொல்காப்பியர் இங்கே கருத்து மொழியவில்லை. யாரார் எதற்காகப் பிரிவை மேற்கொண்டனர் என்பதனையே இங்கு மொழிந்தனர். சில பிரிவுகள், மணந்தபின் நிகழ்வன. ஓதற் பிரிவும் அங்ஙனமே நிகழும். எனில் மணந்த அது நாள்வரை அவர் கற்கவே இல்லை என்பது கருத்தா? அன்று. எல்லாரும் கற் றனர். வடபுலம் இருந்து தென்புலம் வந்து தங்கிய ஆரிய அந் தணர், அக்காலத்து வேதம் பயிலத் தமிழ்ப் புலத்தில்

தக்கோர் இன்மையால், தம்புலம் சென்று வந்தனர். அதனாலேயே மூன்று ஆண்டுகள் அவர்க்கு வேண்டி இருந்தன. ஏனைய பிரிவுகள் ஓராண்டிற்குள்ளேயே அமைய, ஆரியப் பிரிவிற்கு மட்டும் மூன்று ஆண்டுகள் அமைந்தமை அவர்தம் நாட்டுத் தொலைவு பற்றியே.[82]

அவ்வாறு பிரிவாரும் மிகச் சிலரே. ஓதற்பிரிவு பரவிய வழக்கமாக இருக்கவில்லை.[83] ஓதற்பிரிவுப் பாடல்கள் ஏறத்தாழ சங்க இலக்கியத்துள் வெளிப்படையாக இல்லை. 'வாயினும் கையினும்... என்ற தலைமகள் கூற்றை 'வீடு பேற்றிற்கு உதவி ஆகிய நூல்களை ஓதற்குப் பிரிவுழி' என்று விளக்கினார் நச்சர். (அகத்திணை 41) விளக்கி விட்டு, அவர் தொடர்ந்து எழுதுவது கருதுவதற்குரியது.

''இதற்குத் தலைவன் கூற்றுக உதாரணம் வருவன உளவேல் கொள்க'' என்பர். உதாரணச் செய்யுள் காட்டுவதில் மிக வல்ல, நச்சினார்க்கினியரே, ஓதற் பிரிவிற்குப் பாட்டின்மையை ஒப்புக் கொண்டமை உன்னத்தக்கது.

ஓதற் பிரிவு சிறுபான்மை வட ஆரியரிடமே இருந்தது. அவரையும் தமிழ்ப் புலவர் பெருகப் பாடினாரில்லை. அதனாலேயும் ஓதற் பிரிவுப் பாட்டுக் கிடைப்பது அரிதாயிற்று. அந்தணரின் தலைமையையும், ஓதுதலின் சிறப்பையும் கருதித் தொல்காப்பியர் ஓதற் பிரிவைக் கூறினர் போலும்.

ஏனோர்

'மேவிய சிறப்பின்' என்ற நூற்பா வழி, அறங்காவல், நாடு காவல், பொருள் வயின் - என மூன்று பிரிவுகள் கூறப்பட்டதாக விளக்குவர் இளம்பூரணரும், மு. அருணாசலம் பிள்ளையும். நச்சர்., பாரதி, குழந்தை ஆகியோர், நாடு காவற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு என்ற இரண்டையே குறிப்பர்.

'நில உலகத்து வாழும் மக்கள் செய்யும் அன்புப் பணிகளை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு நலம் செய்தலை விரும்பிய சிறப்பினை உடைய கடவுளரின் திருவுருவங்கள் அமையப் பெற்றுள்ள கோயில்கள், ஆட்சியின் கொடுமையால் நாள் வழிபாடு முதலியன இன்றித் தாழ்வுற்றவை அறநெறி பிழையாமல் நன்னிலை அடைதற் பொருட்டுப் பிரியும் பிரிவை அறப்புறங்காவல் பிரிவு என்பர்.[84]

'மேவிய சிறப்பின் ஏனோர் 'படிமைய' என்ற அடியில் உள்ள படிமை என்பதை விக்கிரகம் என்று ஊகித்தனர் இளம். அச்சொல்

'பிரதிமா' என்ற வடசொல்லின் திரிபென்பர். 'ஏனோர்' என்ப தற்குத் தேவர் என்றும் கடவுள் என்றும் பொருள் உரைத்தனர். அது பொருந்துமா? 'ஏனோர்' என்பது சுட்டுப் பெயர். முன்னே கூறப்படாத ஏனையோர் என்பதே அதற்குரிய பொருள். இப் பொருளிலேயே தொல்காப்பியர், 'ஏனோர்' என்ற சொல்லைப் பிற இடங்களிலும் ஆண்டுள்ளனர்.

1	ஏனோர் மருங்கினும் எண்ணுங் காலை	அகத். 24-1
2	ஏவல் மரபின் ஏனோரும் உரியர்	அகத். 26-1
3	ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே	அகத். 29-2
4	மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய	அகத். 30-1
5	ஏனோர் மருங்கினும் எய்து இடன்	அகத். 34-2
6	இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்	புறத். 16-3
7	ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்	புறத். 23-2
8	ஏனோர்க்கு எல்லாம் இடம் வரைவின்றே	உவமம். 29-1
9	மன்பெறு மரபின் ஏனோர்க்கு உரிய	மரபு. 84-3

எனவே, அதிகாரத்தாலும் 'ஏனோர்' என்பது பொருளாகவில்லை. அரசரும் அரசச் சார்பினருமே இவ்விடத்து அதிகாரப் பட்டு நிற்போர்: ஆண்டவர் அல்லர். படிமை என்ற சொல் இறைப் படி மத்தைக் குறித்து வழங்குவது மிகப் பிற்காலத்துத்தான். சிலப் பதிகார, மணிமேகலைக் காலத்தில்தான், 'கடவுள் படிமம்' என்ற சொல்லாட்சி வழக்கத்திற்கு வந்தது[85] அதற்கு முன்பு அச்சொல் லிற்கு அப்பொருள் இல்லை. அன்றியும், தமிழ் நாட்டில் கடவுள் வழிபாடு பழையது எனினும், விக்கிரக வழிபாடு, மிகப் பிற்காலத் துத்தான் ஏற்பட்டது. 'படிமை' என்பது விக்கிரகத்தைக் குறித்தது மிகப் பிற்காலம். சங்க காலத்திற்கும், அதற்கு முன்பும் இருந்தன வாகக் கடவுள் படிமங்கள் ஒன்றுகூட இதுவரை கண்டறியப்பட வில்லை. எனவே, கடவுள் படிமைக்காக அறப்புறங்காவற் பிரிவு இருந்தது என்பது பொருத்தமற்ற தாகிறது.

'மேலோர் - நால்வர்'

'மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே' என்ற நூற்பா வில் உள்ள 'மேலோர்' என்ற பொதுக் குறியீடும், 'நால்வர்' என்ற எண்ணுக் குறியீடும் பொருள் வேறுபாட்டிற்கு இடனாயின. உரை காரர் கூறுவன வருமாறு :

1 இளம்பூரணர்: மேலோராகிய தேவரது முறைமையை நிறுத்தற்குப் பிரியும் நான்கு வருணத்தார்க்கும் உரித்து.

2 நச்சினார்க்கினியர் : மேல் அதிகாரப்பட்டு நின்றில வணிகர்க்கு ஓதிய அறம் தலைப் பிரியாப் பொருள் செயல்வகை, அந்தணர்க்கும் அரசர்க்கும், உழுது உண்ணும் வேளாளர்க்கும், உழுவித்துண்ணும் வேளாளர்க்கும் உரித்து.

3 சோமசுந்தர பாரதி : மேலே வேந்தன் என்றும் வேந்தனோடு சிவணிய ஏனோர் என்றும் மேவிய சிறப்பின் ஏனோர் என்றும் குறிக்கப்பட்ட மேலோர்களுடைய பிரிவுபற்றிய மரபெல்லாம், தமிழகத்தில் நானில மக்களுக்கும் ஒப்ப உரியன.

4 அருணாசலம் பிள்ளை, இளம்பூரணரைத் தழுவி உரைப்பர். குழந்தை நச்சினார்க்கினியரைத் தழுவி உரைப்பர்.

நால்வர்

நால்வர் என்ற குறியீடு அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பாரை அடக்கவே, 'மேலோர்' என்பதற்கு அந்நால்வர் அல்லாத மேலோர் எனப் பொருள் உரைக்க நேர்ந்தது. நேரவே, இளம். 'தேவரது முறைமை' என்றனர்; 'வணிகரது முறைமை. என்று உரைத்த நச்சர். வேளாளரை, உழுதுண்பார், உழுதுவித்துண்போர் என இரண்டாக்கினர். வேந்தனது முறைமை என்ற பாரதி, நால்வரை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானில மக்களாக்கினர்; குழந்தை 'நால்வர்' என்றது, 'அரசரொடு நால்வர் என நின்றது' என்று குறிப்பெழுதினர்.

தேவர் பற்றிய அறப்புறங்காவல் பிரிவு தொல்காப்பியர் காலத்து இல்லாதது. எனவே மேலோர் தேவர் என்ற இளம் குறிப்பு பொருத்தமற்றதாம். நான்கு வருணத்தாருள் வணிகர் மூன்றும் வருணத்தாரே. அவரை 'மேலோர்' என்று கூறும் நச்சர். கருத்தும் சரியன்று. வேளாளரை அவர் இரண்டாக்குதலும் சரியன்று. நானிலத் தமிழ் மக்கள் என்னும் பாரதி கருத்து, பிரிவு பற்றிய எல்லா நூற்பாக்களுக்கும் பொருந்தி வாராமையானும், பாலை நிலம் ஒன்று மட்டுமே பிரிவிற்குரிய சிறப்பு நிலம் எனத் தொல்காப்பியர் அமைத்திருத்தலானும் பொருத்தமற்றுப் போகிறது.

மேலோர் முறைமை

'மேலோர் முறைமை', என்ற நூற்பாவிற்கு (31) முன் நூற்பாவாக 'மேவிய சிறப்பின்' எனத் தொடங்கும் நூற்பா (30) அமைந்துள்ளது. அந்நூற்பாவிற்கும் முன்னும் (28, 29), பின்னும் (32, 36) உள்ள நூற்பாக்கள் இன்னின்னார்க்கு இன்னின்ன பிரிவுகள் என்று வரையறுக்கின்றன. ஆனால், 'மேவிய சிறப்பின்' என்ற

நூற்பாவில், பகைவயின் பிரிவும், பொருள்வயின் பிரிவும் கூறப் பட்டனவே அன்றி, அப்பிரிவுகள், யாரார்க்கு உரியன என்பது கூறப்படவில்லை. அவ்வாறு கூறாமல் போகவே, அதனைத்தொடர்ந்து வரும், 'மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே' என்ற நூற்பா பகைவயின் பிரிவும் பொருள்வயின் பிரிவும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வருக்கும் உரியவை என்று கூறுவதாகக் கொள்ளுதலே பொருந்தும். 'மேலோர் முறைமை' என்பது, மேல் உள்ள மேவிய சிறப்பின—என்ற நூற்பாவில் கூறப் பட்ட பிரிவு 'முறைமை' என்ற பொருளினது.

பின்னோர்

'மன்னர் பாங்கின் பின்னோர்' என்பதற்கு வணிகர், வேளாளர் என்று பொருள் செய்திருக்கும் இளம். உரையே சரியானது. நாடு காவற் பிரிவு, வேந்தர்க்குரியது. வேந்தர்க்குரியது, அவன் பின் அமைந்துள்ள, வணிக வேளாளரைச் சார்ந்தது என்பது பொருந்து வது. அந்தண அரசராய உயர்ந்தோர்க்கு உரியதாகக் கருதப் படும் கல்விப் பிரிவும் பொருள் வயிற் பிரிவும் வணிக வேளாளர்க்கு உரியவை. அவர்க்கு உரியதாகக் கூறப்பட்ட தூது, வணிக வேளாளர்க்கும் உரியது.

சிலர், அரசர்க்குரிய சில பிரிவுகளைக் குறுநில மன்னர்க் குரியவை என உரைப்பர். அரசர் எனக் கூறிய அளவில், குறுநில மன்னரும் அடங்கி விடுவர். நான்கிற்கு மேலாக, உழுதுண்ணும் வேளாளர், உழுவித்துண்ணும் வேளாளர் எனப் பிரிப்பதும், பெரு நில மன்னர், குறுநில மன்னர் எனப் பகுப்பதும் தொல்காப்பியர் காலக் கருத்துகள் அல்ல.

கடற் பிரிவு

மூந்நீர் வழக்கத்துப் பெண்ணை உடன் அழைத்துச் செல்லுதல் இல்லை என்பர் நச்சர்; இளம்., ஓதல், தூது, பகை என்ற மூன்று நீர்மையாற் செல்லும் பிரிவில் தலைவியை உடன் அழைத்துச் செல் லல் இல்லை என்பர். சங்கத் தமிழ் இலக்கியத்தில் கடல்வழி தலைவன் பிரிய இருக்கிறான் என்பதோ, தலைவி அது கேட்டுத் தவிக்கிறாள் என்பதோ, எங்கும் இல்லை. இதனை அறிந்த நச்சர், இலக்கிய வழக்காறு அற்ற ஒன்றைத் தொல்காப்பிய இலக்கணத்துள் காட்ட விரும்பாராய் மேற்கண்ட பொருள் கண்டனர். முற்காலத் தொல்காப்பிய நூலுக்குப் பிற்காலச் சங்க இலக் கியத்துள் வழக்கைத் தேடுதல் பொருத்தம் இன்று. அதனினும் வழக்கு இல்லை என்பதற்காக நூற்பாப் பொருளைத் தேடுதல் அதனினும் பொருத்தம் இன்று.

முந்நீர் - ஒரு விளக்கம்

முந்நீர் என்பதற்கு நச்சர். காட்டிய விளக்கம் பொருந்தாது. எனினும் சொற்பொருள் நயம் வாய்ந்தது. இத்தகு நயத்தைப் பிற உரையாளர் காட்டவில்லை. முந்நீர்—கடல் என்று வறிதே கொண்டனர். அவ்வாறு கொள்ளாது, கிழக்கு, மேற்கு, தெற்கு என முப்புறமும் சூழ்ந்துள்ள (முப்புறமும் சூழ்ந்துள்ள கடல் நீர்—முந்நீர் எனப்பட்டது.) தமிழகக் கடலில் பயணம் மேற்கொள்ளும் போது, பெண்டிரை அழைத்துச் செல்லார் என்று பொருள் உரைத்தல் வேண்டும். 'கணவன் மனையாளை உடன் அழைத்துச் செல்லான் என்பதை' மணல் மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக் கணவன் வரக் கல்லுருவம் நீத்தாள்' என வரும் சிலப் பதிகாரப் பகுதி உறுதி செய்கிறது.[86] பிற்காலக் காரைக்கால் அம்மையின் கணவன், அவளை விட்டுப் பிரிந்து வெளிநாடு சென் றதை நினைக. [87]

> 'வலனுயர் சிறப்பின் மற்றை மூவர்க்கும்
> குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்
> பாசறைச் சேறலும் பழுதென மொழிப.'[88]

என்ற நாற்கவிராச நம்பியின் கருத்தும் இளம். உரையை வலி யுறுத்தும்.

கடல்வழிப் பிரிவு பற்றிய இக்குறிப்பு களவுப்பிரிவாக இருத் தலும் கூடும். பின்வரும் (38) நூற்பா, களவில் எக்காலத்தும் மடல் ஏறுவது இல்லை என்று மொழியும். அடுத்து வரும் நூற்பாக் களும் (39, 40, 41) களவில் தலைவி உடன் போவது குறித்தும் அவள் உடன் போன வழி, தாய் அலமரல் குறித்தும் எடுத்து மொழியும். எனவே இப்பகுதி களவைப் பற்றியும் அதனைச் சார்ந்த உடன்போக்கைப் பற்றியும் விரித்துரைப்பது. எனவே, இதனை, உடன்போக்கு ஒத்து எனலாம். ஆகவே, முந்நீர் வழக்கப் பிரிவு, கற்புப் பிரிவு அன்று, களவுப் பிரிவு என ஆகிறது. களவில், தலைவி யைக் கால்வழி அழைத்துச் செல்லலாம் என்பதை உடன் போக்கு நூற்பா உணர்த்தவே, கடல் வழியும் பெண்ணை அழைத்துச் செல்லலாமா என்ற ஐயம் எழுகிறது. அவ்வையம் அகற்ற, களவில் தலைவியைத் தரைவழி அழைத்துச் செல்லலாம்; கடல்வழி அழைத்துச் செல்லும் மரபு இல்லை என இந்நூற்பா மொழிகிறது போலும்.

நிகழ்ந்தது நினைத்தல் (46)

மனையாளுடன் உடன் உறைந்த தலைவன் பொருள்வயின் பிரியவோ, போர்வயின் பிரியவோ சூழல் நேரும். பிரிந்து செல்ல

இருப்பதை அவளிடம் சொல்ல நினைப்பன்; அவள் அறியின் சலங்கு வாளே எனச் சொல்லாது மறைப்பன். வாய் சொல்லாது இருப் பினும் அவன் நடத்தைகள் அவளுக்குச் சொல்லிவிடும். இவளைத் தான் இத்திங்களோ வரும் திங்களோ,பிரிய நேருமே என்று மனத் துள் கவன்ற அவன், அவள் மீது அன்பை, வழக்கத்தை மீறிப் பொழிகுவன். காழ்விரி கவை ஆரம் மீவரும் இளமுலை போழ்து இடைப்படாமல் முயங்கியும் அமையான்; அவள் நீளக் கூந்தலில் கோலம் புரிகுவன்; முள் உறழ் முளை எயிற்று அமிழ்து ஊறும் நீரைத், தேனினும் இனியது என முத்தம் நல்குவன். அவற்றுடன் அமையான்: அவள் அணிந்துள்ள அணிகலன்களை ஒழுங்கு படுத் துவன். நுண் எழில் மாமைச் சுணங்கு அணி ஆகம் தம் கண் ணெடும் தொடுத்தென நோக்கியும் அமையான்; அவள் நெற்றி மேட்டை நீவுவன். தலைவனின் வழக்கத்தினை மீறிய அன்புச் செயல்களை நுகர்ந்த தலைவி, இவன் நம்மைப் பிரிவன் என்று உற்ற றிவள். தலைவனிடம் வெளிப்பட மொழிகுவள். பிரிவை விலக்க வேண்டுவள். இவ்வாறு உடனுறையும் பொழுது, தலைவன் நிகழ்த்திய மிகு காதல் நிகழ்வுகள், இவன் பிரிய எண்ணியுள்ளான் என்று தலைவி ஐயுற்று எண்ணுதற்குக் காரணமும் ஆகும். இக் கருத்தினை 'நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும் என்ற நூற்பா உணர்த்தும். இவ்வாறு அமைவனவும் பாலைத் திணைக்குரியனவே என்ற கருத்தில், இஃது,இப்பிரிவு அதிகாரத்தில் கூறப்பட்டது. இக் கருத்துடைய பாடல்கள், பாலைக்கலியில் இடம் பெற்றமை[89] இம்முடிபை வற்புறுத்துகின்றன. 'முன்பு நிகழ்ந்தது' பின்பு விசாரித்தற்கு ஏதும் ஆகும்' என்பர் இளம்.) அது பொருந்தாமை வெளிப்படை.

நிகழ்ந்தது கூறி நிலையல் (47):

தலைவன் பொருள்வயிற் பிரிந்து போதல் அன்றைய வாழ் வியல்; அவ்வாறு பிரிகையில் தலைவி கலங்குவது உலகியல். தலைவன் பிரிந்து செல்ல இருக்கிறான் என்பதை அறிந்த தலைவி, ஊமைச் சினம் கொள்ளுவள். குளிர்ந்த முகத்தைக் குவிந்த முகமாக்கு வள்; தலைவன் பணிப்பன கேளாள்; நிலம் வடுப்பட,சினம் வெளிப் படத் 'தும் தும்' என ஓசைஎழ நடப்பள்; பொய் முறுவலை வாயில் தேக்குவள்; கண்ணீர் பெருக்குவள். தலைவியின் பிரிவுத் துயரைக் காணப் பொறுமல், தலைவன் பயணத்தை நிறுத்துவன். பிறிதொரு காலத்திற்குத் தள்ளி வைப்பன். பின்னர் அவளை ஆற்றுவன், தேற்றுவன். அவள் பேரளவு தெளிந்த நிலையில் பிரிந்து செல் குவன். பின்னர் மீண்டு வந்து தலைவி உடன் உறைகுவன். பெயர்த்தும் பொருள்வயிற் பிரிவு தேவை ஆயிற்று. போகலாமா என்று மனத்துள் கருதுவன். அவ்வாறு கருதும் பொழுது,

முன்னிய பட்டறிவு நினைவில் எழும். பிரியின், அவள் வாடுவளே என அவன் வாடுவன் சரி: இப்போது செல்ல வேண்டா என அப்போதைய பிரிவைத் தவிர்ப்பன். இவ்வாறு முன்பு நிகழ்ந்த வற்றைக் கூறிப் பிரிந்து செல்லாது, தங்கிவிடுதலையே, பாலைத் திணை என நூற்பா மொழியும். 'நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே' என்பது நூற்பா (47). 'அளிநிலை பொருஅது' எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாட்டு (5) பழைய நினைவால் பிரிவு தவிர்ந்த தலைமகனைக் காட்டும். 'திணையே' என நூற்பா முடித்தலான், இஃது அதிகாரம் பற்றிப் பாலைத்திணைப் பாட்டாயிற்று. தொல்காப்பியரும், நிகழ்ந்தது கூறி நிலையலைப் பாலைப்பிரிவு அதிகாரத்தில் ஒதினர். இதனை எல்லாத் திணைக்கும் உரியவாகக் கூறும் பாரதி கருத்து ஆசிரியர் அடிக்கருத்திற்கு முரணுவது.

விரவும் பொருளும் விரவல் (48)

தலைவனும் தலைவியும் சேர்ந்து கூடி வாழும் காலத்து, தலைவனின் மிகு காதல் செயல்களை ஒட்டித் தலைவி ஐயுறுவன். வாழ்வதோ புணர்ச்சி வாழ்க்கை: குறிஞ்சி வாழ்க்கை. ஆனால் நினைவதோ, பிரிவு வாழ்க்கை; பாலை வாழ்க்கை. இத்தகு வாழ்க்கையைக் குறிஞ்சித் திணை என்பதா? பாலைத் திணை என்பதா? பாலைத் திணை எனலே இலக்கிய மரபு: இலக்கண மரபு. எனவேதான் குறிஞ்சிப் புணர்தலுடன், பாலைப் பிரிவுணர்வு விரவி வரினும் அதனைப் பாலையாகப் போற்றுக என்றனர். 'நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்' என மொழிந்தனர்.

மீண்டு வந்து தலைவி உடன் கூடி வாழும் தலைவனுக்கு மீண்டும் பொருள் தேடும் எண்ணம் வரப் பிரிவு எண்ணம் தளிர்க்கும். முன்னிய பட்டறிவு அதனைத் தடுக்கும்; தவிர்க்கும். ஈண்டுத் தலைவன், தலைவியுடன் சேர்ந்து வாழ்தல் குறிஞ்சித் திணை. பிரிவை எண்ணி மருகல் பாலைத் திணை. இதனை எத்திணையுள் அமைப்பது? பாலைத்திணையுள் அமைத்தலே இலக்கிய மரபு; இலக்கண மரபு. எனவேதான், 'நிகழ்ந்தது கூறி நிலையலும் திணையே' என நூற்பித்தனர் தொல்காப்பியர்.

முன்னதில், நிகழ்ந்தது நினைப்பவள் தலைவி; பின்னதில் நிகழ்ந்ததை நினைப்பவன் தலைவன். தலைவன், தலைவியர்க்குரிய நினைவுப் புலம்பல்கள் பிரிய இருப்பதையும், பிரிந்ததையும் தழுவியன. அவற்றை எண்ணிப் பிரிவுத்திணை ஆக்கினர் தொல்காப்பியர். இரண்டிலும் குறிஞ்சித் திணை அடிநிலம். குறிஞ்சி வழியே பாலை உருவாகிறது. எனவே இத்தகு திணை மயங்குதல்களை, விரவும் பொருளும் விரவுதல்களை மரபு நிலை திரியாது இயற்றுதல் வேண்டும்; மாட்சிமை உடையதாய் ஆக்குதல் வேண்டும் என்பது

அட்டவணை 14

'தன்னும் அவனும்.....

எண்	தாய்க்கூற்று (39)	இளம்பூரணர்	நச்சினர்க்கினியர்
1	நற்றாய் தன்னும், அவனும் அவளும் சுட்டி	தலைவி உடன் போகிய வழி நற்றாய் தன்னையும், அவனை யும், அவளையும் சுட்டி	கால மூன்றுடன் நிலைபெற்று வரும் நல்வினை தீவினைக் குரிய காரியங்களைத் தன் நெஞ்சிற்கு
2	மன்னும் நிமித்தம்	நிலைபெற்ற நிமித் தம்	விளக்கிப் புலம் பலும்...
3	மொழிப் பொருள் தெய்வம்.	மொழிப் பொருள் தெய்வம்	அச்சம், சார்தல் என்று கூறப்பட்ட வற்றையும் அவை போல்வன
4	நன்மை, தீமை, அச்சம் சார்தல்	தனக்கும் அவர்க் கும் உளதாகிய நன்மை, தீமை, அச்சம் சார்தல் என்பனவும்	பிறவற்றையும் பல்லி முதலிய சொல் நற்சொல் தெய்வம் கூட்டினும் கழங்கினும் இட்டு உரைக்கும் அத் தெய்வப் பகுதி
5	முன்னிய காலம் மூன்று	குறித்த காலம் மூன்றும் ஒருங்கு தோற்றுவித்து	என்று அவற்றோடு கூட்டி வருந்திக் கூறலும், தோழி யது ஆற்றுமை யைக் கண்டுழியும் தலைவியைத் தேடிப் போய்க் காணுது
6	தோழி தே எத்தும்	தோழி மாட்டும்	வந்தோரைக் கண் டுழியும் வருந்திக் கூறலும்
7	கண்டோர் பாங்கினும்	கண்டோர் மாட் டும்	
8	புலம்பல்	புலம்புதலும்	

.....என வரும் நற்றாய்க் கூற்று'

புலவர் குழந்தை	சோமசுந்தர பாரதி	மு. அருணைசலம் பிள்ளை
தன்னை நோதல் அவனை நோதல் அவளை நோதல் இறந்த கால நன்மை நாடல் நிகழ்ந்த கால நன்மை நாடல் எதிர்கால நன்மை நாடல் இறந்த காலத் தீமையை வெறுத்தல் நிகழ்காலத் தீமையை வெறுத்தல் எதிர்காலத் தீமையை வெறுத்தல் சுரத்திடை அஞ்சல் தம் தமர்க்கு அஞ்சல் சென்று சார்தல் மீண்டு வந்து சார்தல் நன்னிமித்தம் பார்த்தல் நற்சொல் கேட்டல் தெய்வம் தெளிதல் தோழியின் துயர் கண்டு கூறல் மீண்டு வந் தோரிடம் கூறல்	மகள் தலைவன் உடன் உடன் போகிய திறத்து நற்றாய் புலம்பலும், தன்னையும், தன் மகளையும் தலைவனை யும் குறித்து, அடி பட்ட புண் என னும் நிமித்தங் களோடும் விரிச்சி என்னும் நற்சொல் லோடும், தெய்வம் வேலன், வெறி யாடல் முதலிய கடவுள் பராவலு டன், நன்மை... உடன் போக்கால் உளதாம் நன்மை தீமை அச்சம் சார்தல் என்று — இறப்பு நிகழ்வு எதிர்வு ஆகிய மூன்று காலங்களோடும் இயைய விளக்கித் தலைவியின் தோழியி டத்தும் தலைமக் களைக் கண்டு வரு வோரிடத்தும் (பா : நச்சர்)	தலைவன், தலைமகளை உடன்கொண்டு தமர்வரைப் பிரிதலும், அங்ஙனம் தமர்வரைப் பிரிந்துழி, நற்றாய் முதலானோர் இரங்குதல் ஓரோவழி உண்டெனவும், இருவகைப் பிரிவும் நிலை பெறத் தோன்றினும், கொண்டு தலைக்கழிதலும் பிரிந்தவண் இரங்கலும் என்றும் இரு நூற்பாக்களில் கூறி வைத்ததால் அம் முறைப்படி. கொண்டு தலைக் கழிதலாகிய உடன் போக்கில் நற்றாய் இரங்குதலை இந் நூற்பாவில் கூறினார்.

அட்டவணை 15

தலைவரும் விழுமம்...என்று

	தோழி கூற்று (→2)	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
1	தலை வரும் விழும நிலை எடுத்து ரைத்தல்	பின் வரும் நோய் நிலையை எடுத்துக் கூறல்	உடன் போகாவிடில் இரு வர்க்கும் வரும் துன்பம் கூறல்.
2	போக்கற் கண்ணும்	உடன் கொண்டு செல் என்று கூறற் கண்ணும்	
3	விடுத்தற் கண்ணும்	தலைமகளைத் தலைவ னுடன் விடுத்தற் கண்ணும்	
4	நீக்கலின் வந்த தம் முறு விழு மமும்	தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின் கண்ணும்	
5	வாய் மையும் தலைப் பெயர்த் துக் கொள்ள லும்	மெய்ம்மையும், பொய்மையும் காணப்பட்ட அவ னைச் சுட்டித் தாய் நிலை நோக்கி மீட் டுக் கொள்ளுதற் கண்ணும்	மெய்யும் பொய்யும் உணர்ந்த அறிவரது தரும நூல் துணிபும் இதுவெ னக் கூறிப் பின் சென்று அவரை மீட்டற்கு நினைந்த தாயரது நிலைமை அவரை மீளாதபடி அவளைத் (தாயை) மீட்டுக் கொளினும்
6	நோய் மிகப் பெருகி வன்புறை நெருங்கி வந்ததன் திறம்	தலைமகன் பிரிதலால் வந்துற்ற நோய் மிக வும் பெருகித் தன் நெஞ்சு கலங்கி யோளை அழிந்தது களைதல் வேண்டு மெனத் தலைமகன் சொன்ன மாற்றத் தைக் கூறி, வன் புறையின் பொருட்டு நெருங்கி வந்ததன் திறத்தோடு	தலைவி போக்கு நினைந்து நெஞ்சு மிகப் புண்ணுற் றுத் தடுமாறும் தாயை அவ்வருத்தம் தீர்த்தல் வேண்டி உழுவலன்பு காரணத்தாற் பிரிந்தாள் என்பது உணரக் கூறி அவளை நெருங்கி வந்து ஆற்றுவித்தல் கூற்றேடே.

நூற்பாவிற்கு உரை வேறுபாடு

குழந்தை	சோமசுந்தர பாரதி	மு. அருணாசலம் பிள்ளை
	தலைவனுக்கும் தலைவிக்கும் பிரிவால் வரும் ஏதப்பாடுகளை எடுத்துக் கூறுதல்	
		தலைவியின் இளமையும் மென்மையும், சுரத்தின் அருமையும் கருதியும், உயிரினும் சிறந்த நாண் குறித்தும், இருவரும் உடன்போக்கிற்கு இயையாத வழி அவ்விரு வரையும் உடம்படுத்தல். உடன் போக்கினை நயப்பித்தல், போதற்கு உடன்படுதல்
	உடன்கொண்டு செல்லாமல் தலைவன் தலைவியை விட்டுப் பிரியுமிடத்தும்	
		பந்தும் பாவையும் போல் வனவற்றை நீக்குதலால் உண்டாகிய தமது மிக்க வருத்தத்தைத் தலைவன் பாற் கூறுதற் கண்ணும், நீங்கலின் எனப்பாடம் இன்மையானும் தாயர் முதலிய தமரை இவள் நீங்காமையானும் இவ்வாறு பொருள் கொள்ளப்பட்டது.
	மெய்யையும் பொய்யையும் புனைந்து கூறியும் கண்டோரைக் காட்டியும் நற்றாயின் பருவரலைக் கருதி மறுத்தரத் (திரும்பி வரும்) தலைவியை வரவேற்றுக் கொள்ளலும்.	மகள் குறிப்பு அறியவில்லையே என அவலமுறும் தாயை, என்னினும் நின்னினும் சிறந்த காதலன் வழிச் சென்றனள் கவலற்க எனத் தாயின் அவலம் தணித்தல்.
	தலைவன் விடுத்தகல ஆற்றுமையால் மிக நொந்து மனம் கலங்கும் தலைவியை வருந்துதலை ஒழி எனத் தலைவன் கூறியதை எடுத்துக் கூறி வற்புறுத்தி ஆற்றுவிக்கும் கூற்றுகள் நிகழ்த்தும் இறத்தொடு.	துன்பம் மிகப் பெருக, மனம் கலக்கமுற்ற தாயை, மிக்க துன்பம் நீக்குதற் பொருட்டு உடன் போதற்குக் காரணமான அவ்விரு வரது உழுவல் அன்பினைக் கூறித் தாயை அமைதியுற வற்புறுத்தல்.

அட்டவணை 16

கண்டோர் கூற்று பற்றிய

எண்கள் (3)	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
1 பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி வழுவின் ஆகிய குற்றம் காட்டல்	1 காலமும் நெறியும் அச்சமும் வருமாறு தோன்றி வழுவுதல் ஆகிய குற்றம் காட்டல்.	1 உடன் போய வழி மாலைக்காலமும் சேறற்கரிய வழியும் அஞ்சுவரக் கூறி அவற்றது தீங்கு காரணமாகப் போகின்றார்க்கு வரும் ஏதம் அறி வித்தற் கண்ணும்
2 ஊரது சார்வு, செல் லும் தேயம், ஆர்வ நெஞ்சமொடு செப் பிய கிளவி	2 ஊரது அணிமை யும், செல்லும் தேயத்தின் சேய் மையும் ஆர்வ நெஞ்சமொடு செப் பிய பக்கம்	2 எம்மூர் அணித்து எனவும் நீர் செல் லும் ஊர் சேய்த்து எனவும் அன்புடை நெஞ்சத்தால்கூறும் கூற்று.
3 புணர்ந்தோர் பாங் கின் புணர்ந்த நெஞ்சமொடு அழிந்து எதிர்கூறி விடுத்தல்	3 புணர்ந்து செல்கின் றோர் பக்கத்து விரும்பின நெஞ்சத் தோடு மனன் அழிந்து எதிர் மொழி கூறி விடுத் தல்	3 புணர்ந்து உடன் போய இருவர் கண் ணும் தணவா நெஞ் சினராகி ஆற்றுமை மீதூர ஏற்றுக் கொண்டு நின்று இனி இதின் ஊங்கு போதற்கரிது நும் பதிவயிற் பெயர்தல் வேண்டும் என்று உரைத்து மீட்டல்
4 ஆங்கு அத் தாய் நிலை கண்டு தடுப்பு விடுப்பு	4 ஆண்டுப் பின் சென்ற அச்செவி லித்தாயது நிலை யைக் கண்டு போகாமல் தடுத் தல், விடுத்தல்	4 அவ்விடத்துத்தேடிச் சென்ற அச் செவிலி யது நிலை கண்டுஅவ ளைத் தடுத்து மீட்பி னும் அவர் இன்னு ழிச் செல்வர் என விடுத்துப் போக்கி
5 சேய் நிலைக்கு அகன்றோர் செலவு	6 சேய்மைக் கண் அகன்றோர் செல்லு தற் கண்ணும் வர வின் கண்ணும்	5 சேய்த்தாகிய நிலை மைக் கண்ணே நீங் கின அவ்விருவரு டைய போக்கிடம்
6 வரவு		6 செவிலியது வரவி டம்

வேறுபாடுகள்

குழந்தை	சோமசுந்தர பாரதி	மு. அருணாசலம் பிள்ளை
1 நச்சர்.	1 நச்சர்	
2 நச்சர்.	2 நச்சர்.	2 ஆர்வ நெஞ்சமொடு செப்புதலைத் தனிக் கிளவியாகக் கொண்டு எடுத்துக் காட்டுத் தருவார் பாரதி. நச்சினார்க்கினியர் 'ஆர்வ நெஞ்சமொடு செப்பிய கிளவியும் எனப் பாடம் கொள்வர்;
3 நச்சினார்க்கினியர் 'நும்பதி' என்பர் இவர் 'எம்பதி' என்பர்	3 காதலால் கூடின தலைமக்கள்பால் அன்புற்ற உள்ளத்தோடு அவர் நிலைமைக்கு வருந்தி எதிர் எடுத்துரைத்து, அவரை விடுவிக்கும்இடம்	
4 நச்சர்		
5 6 தொலைவில் உள்ள ஊர்க்குச் செல்லும் அவ்விரு வரும் போகும் போதும் செவிலியாலோ தமராலோ மீட்கப் பட்டு வரும்போதும் கண்டோர் மொழிவர்.		5 சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும் என்பதற்கு இளம்பூரணரும், பாரதியாரும் தலைமக்கள் இருவருடைய செலவின் கண்ணும், வரவின் கண்ணும். எனப் பொருள் செய்தனர். நச்சர். தலைமக்கள் செலவின் கண்ணும், செவிலி வரவின் கண்ணும், என்பர். இச்செலவும் வரவும் சேய் நிலைக்கு அகன்றோரைப் பற்றி நிற்பதே சொற்கிடை முறைக்குஏற்றது.

அட்டவணை 17

தலைவன் கூற்று பற்றி

எண்	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
1 ஒன்றுத் தமரினும்	1-5 வரைவு உடன் படாத தமர் கண் ணும், சுரத்தின் கண் ணும், பருவத்தின் கண்ணும், பொருந் திய சொல்லோடு தலைமகளை உடன் கொண்டு போகத் துணியினும் விடுத்துப் போகினும்	1 உடன் போக்கிற்கு ஒன்றுத் தாயர் முதலி யோர்க் கண்ணும்
2 பருவத்தும்		2 இற்செறிப்பால் புறம் போகற்கு ஒன்றுமையா யானும், தலைவனெடு கூட்டம் பெறுது ஆற்றி இருக்கும் பருவம் ஒன்றுத் தானும் ஒன்றுப் பருவத் தின் கண்ணும்
3 சுரத்தும்		3 'அரிய சேய கல்லதர்' ஆதலின் போதற்கு ஒன் றுச் சுரத்தின் கண்ணும்.
4 ஒன்றிய தோழியோடு வலிப்பினும்		4 ஒன்றிய தோழியுடன் ஆராய்ந்து, உடன் போக் கினைத் துணியினும்
5 விடுப்பினும்		5 உடன்கொண்டு போகாத தலைவியை விடுப்பினும்
6 இடைச்சுர மருங்கின்... சுற்பொடு புணர்ந்த கௌவை	6 தலைமகள் செல் கின்ற இடைச் சுரத்திடைத் தலை மகள் தமர் எய்தி மீட்டுக்கொண்டு பெயர்தல் மரபா தலின் அங்ஙனம் பெயர்வர் எனக் கலங்கி வருத்த முற்றுக் கற்பொடு புணர்ந்த அவர்	6 தந்தையும் தன்னையரும் இடைச்சுரத் திடத்தே பின் சென்ற பொருந்தித் தலைவியைப் பெயர்த்தல் வேண்டுதலின் தலைவி மிக வருந்தி தமர்பாற் பட்டு உரையாடாது தலைவன்பாற் படுதலின் அவள் கற்பொடு புணர்ந்த கௌவை.

வேறுபாடுகள்

குழந்தை	சோமசுந்தர பாரதி	மு. அருணாசலம் பிள்ளை
நச்சர்.	1-4 : வரைவுடன்படாத சுற்றத்தோரும் பருவத்தின் கண்ணும், சுரத்திலும் ஏற்புடைச் சொல்லோடு தலைவியை உடன் கொண்டு செல்லத் துணியும் இடத்தும்.	1-5 : வரைவுடன் படாத தமரினின்றும் நீங்கித் தலைவியின் இளமைக்கும், மென்மைக்கும் ஏலாத வேனிற் பருவத்திலும் அரிய வழியிலும் உடன் கொண்டு செல்லுமாறு கூறிய தோழியின் இடத்து, அவ்வாறு செல்லத் துணிந்து கூறுதற் கண்ணும், தான் துணிந்தமை கண்ட தோழி, தலைவியைத் தன்பால் ஒம்படை கூறி விடுத்தற் கண்ணும்.
நச்சர்.	5 கொண்டுதலைக் கழியாமல் தலைவியைத் தான் விடுத்துப் பிரியும் இடத்தும்	
	6 உடன்போக்கில் அரும் வழியினிடையே தலைவியின் தன்னையர் முதலாய சுற்றத்தார் உற்று, தலைவியைக் கொண்டு திரும்பும் இடத்து, தலைவி மயங்கித் துன்பம் எய்திக் கற்பால் தலைவியின் பால் சேறலால் உளவாம் பூசல்.	

	எண்	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
7	நாளது சின்மை	7 யாக்கை நிலையாது என்ற உணர்ச்சியைப் பொருந்தாமை	7-8 : வாழ்க்கை நாள் சில ஆதல் ஏதுவாகப் பொருள் செய்தல் குறித்தாரை இளமையது அருமை இன்பத்
8	இளமையது அருமை	8 பெறுதற்கரிய இளமை நிலையாது என உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை	தின் கண்ணே ஈர்த்த ஒன்றுமை
9	தாளாண்மை	9 முயற்சியான் வரும் வருத்தத்தை உணரும் உணர்ச்சியைப் பொருந்தாமை	9-10 : மடியின்மை ஏதுவாகப் பொருள் செயல் குறித்தாரை யாதானும் ஓர் ஆற்றால் பொருள்செய்யலாகாது தத்தம் நிலைமைக்குக்
10	தகுதியது அமைதி	10 பொருள்மேல் காதல் உணர்ந்தோர்க்குத் தகாது என உணரும் உணர்ச்சி	கேற்பச் செயல் வேண்டும் என்னும் தகுதியது அமைதி ஒன்றுமையும்
11	இன்மையது இளிவு	11 இன்மையான் வரும் இளிவரவைப் பொருமை	11-12 : இன்மையான் வரும் இளிவரவு நினைத்துப் பொருள் செய்ய நினைந்தா
12	உடைமையதுஉயர்ச்சி	12 மேன்மேலும் ஆசை செலுத்துதல்	ரைப் பொருள் உடைமை காலத்து நிகழும் உயர்ச்சி அதற்கு இடையூறுகிப் பொருள் நசை உள்ளத்தைத் தடுத்து ஒன்றுமையும்
13	அன்பினது அகலம்	13 சிறந்தார் மாட்டுச் செல்லும் அன்பினைப் பொருந்தாமை	13-14 : பிரிவுழி நிகழும் அன்பினது அகலம் காரணமாகப் பொருள் செய்யக் குறித்தாரைப் பிரிவாற்
14	அகற்சியது அருமை	14 பிரிதல் அருமையைப் பொருந்தாமை	றுமை இடை நின்று தடுத்து ஒன்றுது
15	ஒன்றுப் பொருள் வயின் ஊக்கிய பால்	15 பொருந்தாத பொருட்கண் ஊக்கிய பக்கம்	15 ஒன்று ஒன்றனோடு ஒன்றுனது வரும் பொருட்டிறத்துப் பிரிதற்குத் தலைவன் உள்ளம் எடுத்த பகுதி
16	வாயினும் கையினும் ...ஒரு திறத்தானும்	16 ஓதுதல், படைக்கலம் பயிறல், சிற்பம் கற்றல், அறப்பிரிவு	16 வீடு பேற்றிற்கு உதவியாகிய நூல்களை ஓதற்குப் பிரிதல்

குழந்தை	சோமசுந்தர பாரதி	மு. அருணாசலம் பிள்ளை
நச்சர்.	வாழ்நாளில் சின்மையால் பொருள் வலித்தல்	நாளது சின்மை எட்டனையும் உம்மை கொடுத்தெண்ணி, இறுதியில்
நச்சர்.	இன்ப நுகர்ச்சிக்குரிய இளமையின் அருமை (பொருட் பிணியை நலித்தல்)	'ஒன்றுகப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்' என ஆசிரியர் கூறியுள்ளார்.
நச்சர்.	முயற்சியின் பெருமை கருதிப் பொருள் வலித்தல்	பொருள் ஈட்டற்கண் ஊக்கம் செல்லுதற்கு இவ்வெட்டும் ஒன்றாது இருத்தல் வேண்டும் எனக் கொண்டு அதற்கேற்றவாறு இளம் பூரணர் எழுதினர். அது சொற்கிடக்கை முறைக்கு ஏற்றதாக உள்ளது
நச்சர்.	தலைவியைப் பேணும் ஒப்புரவாண்மை, அறம் பொருட் பிணியை மெலித்தல்	
நச்சர்.	இலம்பாட்டின் இழிவு கருதிப் பொருள் வலித்தல்	
நச்சர்.	தனக்குக் கிடைத்திருக்கும் தலைவியின் காதலாகிய புத்துடைமைச் சிறப்பு. பொருட் பிணியை மெலித்தல்	
	தலைவிபால் அன்பின் பெருக்கால் அவள் பொருட்டுப் பொருள் வலித்தல்	
நச்சர்.	அவளைப் பிரிந்திருக்க ஒல்லாமை, பொருட் பிணியை மெலித்தல்	
நச்சர்.	ஒன்றுக்கொன்று மாறுபட்டுப் பொருந்தாத பொருள்பற்றி வலிக்கும் பிரிவின்பகுதிகளில்	
நச்சர்.	வாயாற் கற்பதற்கும், கைகளால் கற்பதற்கும் பிரிவுழி	நச்சினார்க்கினியருக்கு மறுப்பு

	தலைவன் கூற்று	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
17	புகழும் மானமும் எடுத்து வற்புறுத் தல்	பிரிந்ததனால் வரும்புகழும் பிரி யாமையான் வரும் குற்றமும் குறித்துத் தலை மகளை வரும் துணையும் ஆற்றி இருத்தல்வேண்டு மெனக் கூறுதற் கண்ணும்	பெருமையும் எடுத்துக் காட்டி இதனாற் பிரி தும் எனல்
18	தூது இடை யிட்ட வகை	சந்து செய்வித்தல்	சந்து செய்விக்கை
19	பாங்கோர் பாங்கு	வேந்தற்குற்றுழிப் பிரியும்வழி	தனக்கும் ஆக்கம் சிறந்த நட்புடை யோராகித் தோன் றும் நட்புடை யோர்க்கு உற்றுழி உதவச் செல்லுதல்
20	மூன்றன் பகுதி	தன்வலி, துணைவலி; வினைவலி	அறத்தினால் பொரு ளாக்கி அப்பொரு ளால் காமம் நுகர்வல் என்று பிரிதல்
21	மண்டிலத்து அருமை	பகைவர் மண்டிலம் கொண்ட அருமை	பொருள் வரு வாய்க்கு ஏது ஆகிய வேற்றுப் புலன் களின் அருமை கூறிப் பிரிதல்
22	தோன்றல் சான்ற மாற் றோர் மேன்மை	இவை மிகுதல் சான்றோரது உயர்ச்சி	பகைவரது ஆற்றல் மிகுதி கேட்ட போது
23	பாசறை புலம் பல்	பாசறைக்கண் தலை மகன் தனிமை உரைத்தல்	பாசறைத் தனிமை உரை
24	முடிந்த காலத் துப் பாக ஞெடு விரும் பிய வினைத் திற வகை	வினை முடிந்த காலத் துப் பாகஞெடு விரும்பப்பட்ட வினைத்திறத்தினது வகை	வினை முடியும் காலத்துப் பாக ஞெடு விரும்பிக் கூறிய வகை
25	காவற் பாங் கின் பக்கம்	நாடு காவற் பிரிவு	வேந்தன் தன்னாற் காக்கப் படுவன ஆகிய பகுதிகளின் கூற்றில் பிரியுமிடம்

குழந்தை	சோமசுந்தர பாரதி	மு. அருணாசலம் பிள்ளை
17 நச்சர்.	இளம்பூரணர்	இளம்பூரணர்
18 நச்சர்	இளம்	இளம்
19 நச்சர்	இளம்	இளம்
20 நச்சர்	பொருள், ஓதல், தூது (பக்கம். 139 இல் மறுப்பு)	தானை, யானை குதிரை என்ற முத்திறப் படைகளாலும் பிறர் போர் குறித்து எளிதில் புகுதற் கியலாத தம் நாட்டின் அருமை
21 நச்சர்	இளம்	பாட்டினாலும் விளக்கம் அமைந்த பகை வேந்தரின்
22 நச்சர்	இளம்	மேன்மையின் கண்ணும் கூற்று நிகழும்
23 நச்சர்	இளம்	இளம்
24 நச்சர்	இளம்	இளம்
25-26 நச்சர்	பிறர் நாடு காக்கும் இடத்தாலும் ஓர் பிரிவின் கண்ணும்	தன்னாடு தலையளித்தலே போர்த் தொழில் முடிந்த பின்னர் அமைதிக் காலத்தில் தன் நாடு தலைபளிக்கப் பிரிதல். இச்காவற் பாங்கினைப் பின்னர்க் கூறப்படும் பரத்தையர் பிரிவோடு இணைத்தும் பொருள் செய்தலும், புத்தியானைக் காணச் சென்றேன்
27 நச்சர்	,,	எனவும் புனைந்துரையாகக்
28 நச்சர்	,,	கூறும் செய்யுட்களை இதற்கு எடுத்துக் காட்டாகத் தருதல் பொருந்தாது.
29 நச்சர்	செவிலி, பாங்கர், ஆயத்தார், பரத்தையர், வாயிலாளர், பாகன், பாணன் தலைவி (களவியல் (20)	இந்நூற்பாவில் கூறப்பட்ட பிரிவுகள் : பொருள், கல்வி, அறங்காவல், தூது, உற்றுழி உதவல், தன்பகையின் தானே சேறல், நாடு காவல் என்ற ஏழு (29) தலைவி, ஆயத்தார்: பாரதிக்கு மறுப்பு: களவிலும், கற்பிலும் பிரிவு நிகழாத இடத்தும், நிகழ்ந்த இடத்தும் இரு வகைப் பாங்கர்...முதலியோர் இன்னவாறு கூற்று நிகழ்த்துவாரென்பது அக்களவியல் முதவியலவற்றில் தனித்தனி நூற்பாக்களில் விரிவாகக் கூறப்பட்டிருத்தலை அறிந்துவைத்தும் அவர்கட்குச் சிறிதும் இயைபில்லாத உடன் போக்குப் பற்றி இந்நூற்பாவில் அவர்கட்கு இடம் கொடுத்தல் சரி அன்று

	தலைவன் கூற்று	இளம்பூரணர்	நச்சினார்க்கினியர்
26	ஆங்கோர் பக்கம்	வாரியுள் யானே, நாடு காணவும், புனலாடவும், கடவுளரை வழிபடவும் பிரிதல்	அவன் காத்தற் குரிய பகுதிக் கண்ணே நிற்பார் கூற்றில் பிரியுமிடம்
27	பரத்தையுள் அகற்சியிற் பிரிந்தோட் குறுகி இரத்தலும் தெளித்தலும் என இருவகை	பரத்தையிற் பிரிவு பிரியப்பட்ட தலைவியைக் குறுகி இரத்தல் தெளிதல்	பரத்தையிற் பிரிதல் காரணத்தால் பிரிபுலம் பெய்திய தலைவியை எய்தி இரத்தலும், இரந்த பின்னர் ஊடல் உணர்த்தலும் என்ற இரு பகுதி
28	உரைத்திற நாட்டம் கிழவோன் மேனர	இவ்விடங்களில் தலைவன் உரையாடுவன்	முற்கூறிய இடங்களில் கூற்று நிகழும் கூறுபாட்டை நிலை பெறுத்துதல் தலைமகனிடத்தன
29	எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே (45)	தலைவி பாங்கர்	முன்னர்க் கூறுது நின்ற செவிலிக்கும் தலைவிக்கும் ஆயத்தோர்க்கும் அயலோர்க்கும் கூற்றெழுதல் இல

தொல்காப்பியர் கருத்து. 'மரபு நிலை திரியா; மாட்சிய ஆகி, விரவும் பொருளும் விரவும் என்ப' என்பர். பிறரெல்லாம், தம் விருப்பிற்குத் தக வளைத்தும், நெகிழ்த்தும் உரை கண்டனர். நிகழ்ந்தது நினைத்தலையும், நிகழ்ந்தது எண்ணி நிலையலையும் ஒருங்கு எண்ணி, திணை மயக்கமும், மரபுப் பிறழ்ச்சி ஆதல் ஆகாது என்ற கருத்தினர் தொல்காப்பியர் என்பது, இம்மூன்று நூற்பாக்களின் போக்கால் புலப்படும்.

கூற்றுகள் (43,44,45) :

புறம் என்றும், வகை என்றும்,துறை என்றும், பிரிக்கப்படும். ஆனால் அகம்., திணை, வகை துறை எனப் பிரிக்கப்படா. அகத் திணைகள் கூற்றுகளாகவே அமையும். தலைவன், தலைவி, தோழி, செவிலி முதலானோர் கூறுதலாக, அகத்திணைகள் அமைந்தமை யால், அகத்திணைகள் உயிர்த்துடிப்புடையன ஆயின. ஒவ் வொருவர் கூற்றும் பங்காளர் அன்றிப் படிப்பாரையும் பாத்திர மாக்கும். (பார்க்க : அட்டவணை 14, 15, 16, 17)

தாய்க் கூற்று

தலைவனுடன் வாழ்வதே தவம்; தலைவனைப் பிரிந்து உறவினர் உடன் வாழுதல் அவம் என முடிவறுத்த தலைவி, தலைவன் உடன் அயலூர் பிரிய உடன்படுவள். தலைவனுடன் பயணம் புறப் படுவள். 'பிள்ளை மனம் கல்லு, பெற்ற மனம் பித்து' அன்றே? மகளைப் பிரிந்து தாய் கலங்குவள். தாய் கலங்கிக் கைம்மிகுந்து கூறுவனவற்றைப் போகிய திறத்து நற்றாய் புலம்பலாகத் தொல் காப்பியர் போற்றுவர். தாயிடம் அன்றி, தோழியிடத்தும், உடன் போக்கு மேற்கொள்ளும் இளந்துணையைப் பார்த்த கண்டோரிடத் தும், தலைவனிடத்தும் கூற்று நிகழும். அவர்தம் கூற்றுகளைத் தொல்காப்பியர்,ஏழு நூற்பாக்களில் விரிவாக விளம்புவர் (39-45). ஏறத்தாழ நாற்பத்தேழு கூற்றிடங்களை விளக்குவர்; கூற்றுகளை, உரைகாரர் இலக்கியப் பொருள் வேறுபட உரை செய்குவர்.

தோழி கூற்று

தலைவியை உடன்போக்கில், போக்கற் கண்ணும், விடுத்தற் கண்ணும் தோழி கூற்று நிகழும். 'உடன் கொண்டு செல்' என்று தலைவனிடம் தோழி கூறுவதைப் 'போக்கல்' என்றும், தலைவி யைத் தலைவனுடன் விடுத்தலை 'விடுத்தல்' என்றும் இளம் மொழி குவர். இளம். உரையைப் பாரதி மறுத்து எழுதுவர். போக்கல் விடுத்தல் என்பனவற்றிற்கு ஒத்த பொருளே அமையும். அமைய நூலாசிரியர் 'கூறியது கூறல்' என்ற குற்றத்திற்கு ஆளாகுவர் அதனைத் தவிர்க்க, 'விடுத்தல்' என்பதற்கு 'உடன் கொண்டு செல்

லாமல் தலைவன், தலைவியை விட்டுப் பிரியும் இடத்தும் தோழி கூற்று நிகழும்' என்பர் பாரதி. கூர்ந்து நோக்கின் இரு கூற்றுகளையும், இளம். வேறுபடுத்தி மொழிந்திருப்பது புலப்படும். உடன் அழைத்துச் செல்லத் தயங்கும் தலைவனையும், உடன் செல்லத் தயங்கும் தலைவியையும் உடன் போக்கிற்குத் தோழி உடன் படுத்தலே 'போக்கல்' என்பர் மு. அருணாசலம் பிள்ளை. அவ்விருவரும் உடன்பட்டவழி, தோழி தன் பிரிவு தோன்ற முகமன் உரைகூறித் தலைவியைத் தன்பால் நின்று விடுத்தற் கண்ணும், இளமைமாறி முதுமை எய்தினும் இவளை நீ காத்தருள்க என்றுங்கு ஓம்படை கூறித் தலைவன்பால் அவளை விடுத்தற்கண்ணும் என்று அவர் விளக்குவது, இளம் உரையைத் தழுவிப் பொருந்த அமைகிறது.

'நீக்கலின் வந்த விழுமமும்' என்பதற்குத் தமரை நீக்குதலால் தமக்குற்ற நோயின் கண்ணும்' என்று பொருள் உரைப்பர் இளம். நச்சர்., பாரதி, குழந்தை ஆகியோரும் இக் கருத்தினரே. மு. அருணாசலம் பிள்ளை பிறிதோர் உரை வகுப்பர்.

> 'பந்தும் பாவையும் போல்வனவற்றை நீக்குதலால் உண்டாகிய தமது மிக்க வருத்தத்தைத் தலைவன்பாற் கூறுதற் கண்ணும் என்றவாறு நீங்கலின் எனப் பாடம் இன்மையானும் 'நீக்கலின்' என்பதற்குப் பந்தும் பாவையும் போல்வனவற்றை நீக்குதலால் என்று பொருள் கொள்ளப்பட்டது. தம்முறு விழுமமாவது, தலைவியின் கண் கலக்கமும், அது கண்டு தான் கலங்குதலும் முதலாயின.'

வாய்மையும் பொய்மையும் கண்டோர்ச் சுட்டித் தாய் நிலை நோக்கித் தலைப் பெயர்த்துக் கொளினும் என்பதாவது ஒன்றுபட்டு வாழும் ஒத்த அன்புடையார் வாழ்க்கையே உண்மை வாழ்க்கை; அல்லாத வாழ்க்கை குறை நிறைந்த பொய் வாழ்க்கை என்பதை உடன்போய தலைவன், தலைவியர் அறிந்து கொண்டனர். அவ்விருவரையும் நினைந்து தாய் கலங்குவள். கலங்கும் தாயை, அவள் கலக்கத்திலிருந்த தோழி மீட்பள். அவ்வாறு மீட்கும்போது தோழி தாயிடம் உரை நிகழ்த்துவள். தாயைத் தேற்றும் உரை என்றே அனைவரும் புகன்றனர். பாரதி மட்டும், தலைவன் உடன் சென்ற தலைவி, நற்றாயின் ஆற்றுமையைச் செவியுற்றுத் திரும்பு கையில் தோழி வரவேற்றுக் கொள்ளும் இடத்துக் கூற்று நிகழும் என்பர். 'உடன்போய தலைவியைத் தேடிச் செல்லாமல் தாயை மீட்டுக் கொள்ளுதல் என்ற நச்சர். பொருளுரைக்குப் பொருந்திய இலக்கியம் இன்மையான், பாரதி உரை ஏற்பதற் குரியது.

தோழி கூற்று

'நோய் மிகப் பெருகித் தன் நெஞ்சு கலுழ்ந்தோளே அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி வன்புறை நெருங்கி வந்ததன் திறம்' என் பதற்குப் பொருள் உரைப்பதில் உரையாளரிடை வேறுபாடு உள்ளது. தலைமகன் பிரிவால் நோய் மிகப் பெருகும் தலைவியைத் தோழி ஆற்றும் இடம் என்பர் இளம். தலைவியின் உடன்போக்குப் பிரிவை எண்ணி நோய் மிகப் பெருகும் தாயைத் தோழி ஆற்று மிடம் என்பர் நச்சர். பாரதி இளம்பூரணரைப் பின்பற்றுவர். குழந்தையும், அருணாசலம் பிள்ளையும் நச்சினார்க்கினியரைப் பின் பற்றுவர். இளம். உரையைவிட, நச்சர். உரையே பொருந்துவது. 'தலைவரும் விழுமம் தொடங்கி, தம்முறு விழுமம் ஈருக தலைவன், தலைவரிடையே தோழி கூற்று நிகழ்த்தினர். அதன் பின்னர், தாயி டம் கூற்று நிகழ்த்துவர். எனவே தாயிடம் கூற்று நிகழ்த்து வதாக, அமையும் நச்சர் உரையே பொருந்துவது.

கண்டோர் கூற்று

சேய் நிலைக்கு அகன்றோர் செலவினும் வரவினும் கண்டோர் கூற்று நிகழும். தலைவன், தலைவியர், உடன் போக்காகச் செல்லும் போதும், திரும்பி வரும்போதும் கண்டோர்க் கூற்று நிகழும் என்பர் இளம். பாரதியும், அருணாசலம் பிள்ளையும் அவரை வழி மொழிவர். ஆனால், நச்சர். தலைவன், தலைவியர் செல்லும் பொழுதும் செவிலித்தாய் திரும்பும் போழ்தும் கண்டோர்க் கூற்று நிகழும் என்பர்.

தலைவன் தலைவியர் வரவின்கண் கண்டோர் கூற்று நிகழும் என்று இளம். உரை செய்தார். ஆயினும், வரவின்போது கண் டோர்க் கூற்றிற்குத் தனிச் சான்று காட்டினுள்ளில்லை. பாரதி காட் டினும் அச் சான்று வரவின்போது நிகழ்ந்ததுதானு எனத் திட்டப் படுத்தற்கில்லை. உடன்போன தலைவன் தலைவியரைப் பார்த்தற்கு இலக்கியம் உண்டு. உடன்போன இருவரும் மீளுதலைப் பார்த் தற்கு இலக்கியம் இல்லை போலும். அதனாற்றான் நச்சர். தலைவன் தலைவியர் செலவு, செவிலி வரவு எனப் பொருள் செய்தனர். 'எறித்தரு கதிர்தாங்கி...' எனவரும் பாலைக் கலிப்பாவையும் (9) காட்டினர். இலக்கியப் பார்வையில் நோக்கும் பொழுது நச்சர். உரை பொருந்துவதாகும்.

தலைவன் கூற்று

'ஒன்றுத் தமரினும் பருவத்தும் சுரத்தும் ஒன்றிய மொழி யொடு வலிப்பினும்' - என்பது தலைவன் கூற்று நிகழிடம். விடுப் பின் என்பதற்கு, இளம்., நச்சர்:, குழந்தை, பாரதி ஆகியோர்

'தலைவியைத் தன் உடன் கூட்டிச் செல்லாமல் விட்டுப் பிரியினும் என்றே உரை கண்டனர். அருணாசலம் பிள்ளை, தலைவியைத் தன் பால் ஓம்படை கூறி விடுத்தற்கண் என்று பொருளுரைப்பர். இவ்வதிகாரம் உடன் போக்குப் பற்றியது. இதன் ஊடே உடன் கொண்டு போகாத செய்தியை இடையே நுழைத்துப் பொருள் உரைத்தல் பொருந்தாது. எனவே, 'ஓம்படை கூறி விடுத்தல்' என்ற அருணாசலம் பிள்ளை உரையே பொருந்துவது.

'வாயினும் கையினும் வகுத்த பக்கமொடு ஊதியம் கருதிய ஒரு திறத்தானும்' தலைவன் கூற்று நிகழும். வாயினால் கற்பது, கையினால் செய்வது எனக் கல்வி இருவகைப்படும். வாயினால் கற்பது ஏட்டுக் கல்வி; கையினால் செய்வது தொழிற் கல்வி. இரு வகைக் கல்விப் பிரிவின்கண்ணும், அக்கல்வியால் ஆகிய ஊதியத் தைக் கருதிய ஒரு கூற்றின்கண்ணும் தலைவனிடத்துக் கூற்று நிகழும். இளம்., பாரதி, அருணாசலம் பிள்ளை ஆகிய மூவரும் இக் கருத்தினரே. நச்சர். மட்டும் 'வீடு பேற்றிற்கு உதவி ஆகிய வேத நூல்களை ஓதுதற்குப் பிரிதல்' எனப் பொருள் உரைப்பர். ஓதற் பிரிவு என வரும் இடங்களில் எல்லாம் வேதம் ஓதுதற் பொருட்டுப் பிரிவு எனப் பொருள் கூறுதல் பொருந்தாத ஒன்றும் என நச்சினார்க்கினியரை மறுப்பர் அருணாசலம் பிள்ளை.

இந்நூற்பாவில் வரும் தலைவனுடன் 'தூது இடையிட்ட வகை', 'பாசறைப் புலம்பல்', 'பரத்தையின் அகற்சி' என்பன தொடர்புறுத்திப் பேசப்படும். எனவே, இங்கே கருதப்படும் தலைவன் அந்தணன் (மட்டும்) அல்லன், அரசனும், பிற மறவரும் இந்நூற்பாத் தலைமக்களாவர். எனவே, அவர்க்கு அமையும் கல்வி, படைக்கலம் பயிறல், சிற்பங் கற்றல் என்பனவற்றைத் தழுவி அமைதலே நேரிது. அவ்வாறு அமைந்துள்ள இளம். உரையே இங்குப் பொருந்துவது.

மூன்றன் பகுதி

'மூன்றன் பகுதியும் மண்டிலத்து அருமையும் தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்' என்பதனுள் 'மூன்றன் பகுதி' என்பது எண்ணுக் குறியீடு. எனவே இங்கே பொருள் வேறுபாடு எழுகிறது. தன்வலி, துணை வலி, வினை வலி என்று விரிப்பர் இளம். அறத்தினால் பொருளாக்கி அப்பொருளால் காமம் நுகர்தல் என்பர் நச்சர். பொருள், ஓதல், தூது என விரிப்பர் பாரதி; தானை, யானை, குதிரை என்ற மூவகை நிலை என்பர் அருணாசலம் பிள்ளை.

'மூன்றன் பகுதி' என்பதைச் சார்ந்து 'மண்டிலத்து அருமை', தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மை', 'பாசறைப் புலம்பல்'

ஆகியன தொடர்ந்து கூறப்பட்டிருத்தல் கருதத்தக்கது. மற்றவை அனைத்தும், போரோடும், போர்க்களத்தோடும் பகைஞ ரோடும், பாடி வீட்டோடும் தொடர்புடையனவாய் உள்ளன. எனவே 'மூன்றன் பகுதி' என்பதும் போர்த் தொடர்புடையதாக இருத்தலே பொருத்தம். இளம். கூறுவது பொருந்துமாயினும் அம்மூன்றையும் தொல்காப்பியர் எங்கும் சுட்டவில்லை. நச்சர். பொருள்வயிற் பிரிதலை இங்கே இணைப்பது பொருத்தமாக இல்லை. பாரதி ஆறு பிரிவுகளில், இன்றியமையாப் பகைவயிற் பிரிவை விட்டு விட்டுப் பொருள், ஓதல், தூதுவயிற் பிரிவுகளை மட்டும் காட்டுவது முறைப்பட இல்லை. ஆறு பிரிவுகளில், மூன்று பிரிவு களைமட்டும் பிரித்துக் காட்டப் பாரதி கூறும் அமைதி பொருந்து வதாக இல்லை. போரோடு தொடர்பு உடையதாக, தொல்காப்பி யராலேயே 'மூவகை' எனச் சுட்டப்படுவதாக, அமைவன யானை, தானை, குதிரை என்ற மூன்றுமே யாம்.

> 'தானை யானை குதிரை என்ற
> நோனுர் உட்கும் மூவகை நிலை'

என்பது தொல்காப்பியம் (புறத்திணை 17). அம்மூன்றையே இங்கு மூன்றன் பகுதி எனக் குறித்தார் என்று எழுதும் அருணைசலம் பிள்ளை உரையே பொருத்தமாம்.

எஞ்சியோர்தம் கூற்று

'எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே' (45) என்ற நூற்பா, கூற்றிற்குரிய பிறப்பைப் பொதுவாக்கி உரைக்கும். இளம்., தலைவி, பாங்கரை 'எஞ்சியோர்' என்பர்; நச்சர், செவிலி, தலைவி, ஆயத் தோர் அயலோரைக் குறிப்பர். பாரதி, செவிலி, பாங்கர், ஆயத் தார், பரத்தையர், வாயிலாவார், பாகன், பாணன் ஆகியோ ரைச் சுட்டுவர். அருணைசம்பிள்ளை, தலைவி, ஆயத்தார் என்பாரைக் காட்டுவர்.

'களவிலும், கற்பிலும் பிரிவு நிகழாத இடத்தும், நிகழ்ந்த இடத்தும், இருவகைப் பாங்கர், பாணர், கூத்தர், பரத்தை முதலி யோர் இன்னவாறு கூற்று நிகழ்த்துவர் என்பது அக்களவியல் முதலியவற்றில் தனித்தனி நூற்பாக்களில் விரிவாகக் கூறப்பட் டுள்ளது. அவர்களை உடன்போக்கு பற்றிய இவ்வதிகாரக் கூற்றிற் குரியவர் என்று பாரதி கூறுவது பொருத்தமற்றது என்பர் அருணைசலம்பிள்ளை. அவர் கருத்து முற்றும் ஏற்பிற் குரியது.

முப்பாகுபாடு

தொல்காப்பியர், ஆண் பெண் காதல் தினவுகளை மூன்றுகப் பகுத்தனர். அவை, கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்பன.

எண்	நூற்பா	இளம்பூரணர்	நச்சர்/மு. அ	குழந்தை
1	காமம் சாலா இளமை. இடும்பை எய்தி.	காமம் அழியாத இளையோர் மாட்டு ஏமம் அமையாத இடும்பை எய்தி	———	நச்சர்
2	நன்மையும் தீமையும் புணர்ந்து	புகழ்தலும் பழித்தலும் ஆகிய இருதிறத்தால் தனக்கும் அவட்கும் ஒத்தன புணர்ந்து	தனது நன்மையும் அவளது தீங்கையும் என்கிற இரண்டு கூற்றுன் மிகப்பெருக்கிய சொற்களைத் தன்னோடும் அவளோடும் கூட்டிச் சொல்லி	நச்சர்
3	சொல் எதிர் பெறுன்	சொல் எதிர் பெறுஞய்த் தானே சொல்லிஇன்புறுதல்	———	நச்சர்
4	முன்னைய நான்கும் முன்னதற்கு (55)	ஏறுமடற்றிறம், இளமை தீராத் திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத் திறம், மிக்க காமத்தின் மிகாத்திறம்	தீராத காட்சி, ஐயம், தெளிதல், தேறல் (நம்பி. 118)	நச்சர்
5	முன்னைய மூன்றும் கைக்கிளை (களவியல் 102) நம்பி அகப். 3, 29-31, 118, 119, 120, 231, 242	அசுரம், இராக்கதம், பைசாசம்	———	'காமம் சாலா' என்ற நூற்பாவில் உள்ள மூன்று
6	ஏறிய மடல்திறம்	ஏறிய மடற்றிறம்	———	,,

எண்	நூற்பா	இளம்பூரணர்	நச்சர். மு./அ.	குழந்தை
7	இளமை தீர் திறம்	இளமை நீக்கியதிறம், அதுமூவகை தலைமகன் முதியனாகி தலைமகள் இளையள் ஆதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையன் ஆதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கியவழி அவத்தின் மேல் மணம் நிகழ்தலன்றிக் காமத்தின் மேல் மணம் நிகழ்தல்	தலைவர்க்கு இளையள் ஆகாது ஒத்தபருவத் தாளுடன்	,,
8	தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்	தெளிவு ஒழிந்தகாமத்தின் கண்ணே மிகுதல் (தலைவி)	அறிவு அழிகுணன் உடையள் ஆதல்	,,
9	மிக்ககாமத்து மிடல்	ஐந்திணைக்கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு விடுவது — குறுங்கலி முதலாயன	காம மிகுதியானே எதிர்ப்பட்டுழி வலிதிற் புணர்ந்த இன்பம்	,,
10	பின்னர்: நான்கும் பெருந்திணை களவியல் 103, நம்பி அகப் பொருள் 243, 244	பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்		ஏறிய மடற்றிடம் முதலான நான்கு

கைக்கிளை பெருந்திணை கருத்து வேறுபாடுகள்

	பாரதி	டாக்டர் வ. சுப. மாணிக்கம்	புறநானூறு	கலி	பு. வெ. மா.
1	நச்சர்	பருவம் எய்தலை அணிமை யில் எதிர்ப்பட்டுக்	கைக்கிளை பெருநற்கிள்ளி	கைக்கிளை குறிஞ்சிக்கலி	ஆண்பாற்கூற்றுக் கைக்கிளை (9)
2	நச்சர்	கொண்ட, பருவம் எய்திய வளாக மயங்கி ஒருவன்	பால் காமம் கொண்டு நக்	56, 57,.58, 109, எல்லாம்	காட்சி, ஐயம், துணிவு, உட்கோள், பயந்தோர்
3	நச்சர்	காதல் கொள்கின்றான். காதல்துன்பமும் படுகிறான் பாடியது.(நான்குபெண்	கண்ணையார்	ஆண்கூற்று	பழிச்சல், நலம் பாராட் டல், நயப்புற்றிரங்கல்,
4	நிகழ்ந்தது நினைத்தல், நிகழ்ந்தது கூறி நினை யல்,மரபு நிலை திரியாது விரவும் பொருள் விர வல், உள்ளுறை உவமம் திணைபுணர்வகை ஆதல்	நன்மை எனவும் அவளைத் தொடர்பு படுத்திச்செருக் குறுகின்றான். அவளிடமி ருந்து மறு மொழியாகஒரு சொல்லும் பெறவில்லை, எனினும் தானே சொல்லிச் சொல்லி மகிழ்கிறான். ஒரே ஒரு துறைதான் கைக்கிளைக்கு	பாற் கைக்கிளைப் பாக்கள்) புறம். 83, 84, 85, துறை பழிச்சுதல்		புணரா இரக்கம். வெளிப் பட இரத்தல் பெண்பாற் கைக்கிளை காண்டல், நயத்தல், உட் கோள், மெலிதல், மெலி வொடு வைகல், காண்டல், வலித்தல், பகல்முனிவுரைத் தல், இரவு நீடு பரவல், கனவின் அரற்றல், நெஞ் சொடு மெலிதல்
5	(உரை செய்யவில்லை)				
6	நச்சர்		6-9 பெருந்திணை	பெருந்திணை மடல்ஊர்ந் தவன்கூற்று 138-141	பெண்பாற் பெருந்திணை

	பாரதி	டாக்டர் வ. சுப. மாணிக்கம். (தமிழ்க் காதல் பா. 105 - 6)	புறநானூறு	கலி	பு. வெ.மா.
7	நச்சர்	காதலியைப் பெறுத நிலை யில், காதலன் மடல் ஏறிச் செல்லுதல்	கண்ணகியைத் துறந்த பேகனைக் கபிலர் பரணர் அரிசில் கிழார், பெருங்குன்றூர் கிழார், ஆகியோர் அவன் காம வேட் கை கெடும்படி பாடியது: துறை: குறுங்கலி	காமம் மிக் குற்ற தலைவி கூற்று : 142-147. அரசி யின் மிகு காமத்தை அரசனிடம் சான்றோர் கூறுவது 62, 99, 100 (பன்னிரண்டு பாடல்கள்)	வேட்கை முந்துறுத்தல் முதலான பதினெட்டு இருபாற்பெருந்திணை சீர்செல அழுகல் முதலாக பதினேழு வென்றிப் பெருந்திணை கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்
8	நச்சர்	கட்டிளமைக்காலத்து இன்பம் துய்க்காது கணவன் நெடுங்காலம் பிரிந்திருத்தல்			
9	நச்சர்	எவ்வகையாலும் தேறுதல் அடையாமல் மனைவி காமம் உறுதல்			
10	நச்சர் உரை கூறவில்லை	காமம் காழ்க்கொண்ட மனைவியின் துணிவுச் செயல்			

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்' என்பர் தொல்காப்பியர். இம் மூன்றனுள் கைக்கிளை முதலாவது இருத்தலும், பெருந்திணை இறுதியில் இருத்தலும் கருதத்தக்கன. அவர் தரும் திணை வரையறைகளுடன், கைக்கிளை முதல், பெருந்திணை கடைசி என்ற வைப்பினையும் நினைவுட் கொண்டே அவற்றின் பொருளைக் காண்டல் வேண்டும், கைக்கிளை ஒவ்வாப் பருவ மோகம் என்பது 'காமஞ் சாலா இளமை யோள்வயின் என்ற கைக்கிளை விதியால் விளக்கமாம். ஐந்திணை ஒத்த பருவக் காதல் என்பது 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்ற களவியல் கூற்றால் தெளிவாம். பெருந்திணை முதுமைக் காமம் என்பது 'இளமை தீர்திறம்' என்ற பெருந்திணை விதியால் பெறுவாம். எனவே கைக்கிளை இளங்காய்; ஐந்திணை கனி; பெருந்திணை அழுகல் என்று அறிதல் வேண்டும். கைக்கிளை முதிரா இளமை அழைப்பு; ஐந்திணை பருவக் காதல்; பெருந்திணை முதுமை வெறிப்பு. ஆண் பெண் உறவு ஆய்வில் இம் மூன்றின் நடைமுறை கருதி, தொல்காப்பியர் 'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்' முற்படக் கிளந்த எழுதிணை' என விளக்கின ராதல் வேண்டும். தொல்காப்பியர் கருத்தை ஓரளவு செரித்தே நாற்கவிராச நம்பி,

'கைக்கிளை உடையது ஒரு தலைக் காமம்'
'ஐந்திணை உடையது அன்புடைக் காமம்'
'பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்'

எனத் தெளிந்து வகுத்தனர்.[90] (பார்க்க: அட்டவணை 18)

கைக்கிளைத்திணை

கைக்கிளை பற்றித் தொல்காப்பியர் கூறியன மூன்று நூற்பாக்கள். (அகத்திணை இயல். 53, 55, களவியல் 14) சிறு பெண்ணை மோகிக்கும் இளமகனின் புலம்பல்களே கைக்கிளை என்பது தொல்காப்பியக் கருத்து. அதனைப் பற்றி அவர் அகத்திணை இயலில் ஓதும் இடமும், களவு இயலில் கூறும் இடமும், கைக்கிளை முதிராப் பருவத்தாரின் களவுக் காமம் என்பதைத் தெளிவிக்கின்றன. ஆனால் பின் வந்தோர், இக் கைக்கிளையைத் தம் விருப்பிற் கிணங்க பிறழ்த்தி விளக்கினர்.

நக்கண்ணைக் காதல் கைக்கிளையா?

அண்மையில் பருவம் எய்த இருக்கும் பெண்ணின் அருகு நெருங்கி அவளிடம் இன்புறுவன், புலம்புவன்; எதிர்ச்சொல் பெறுமல் கலங்குவன் என்பர் தொல்காப்பியர். 'காமம் சாலா இளமையோள் வயின்' என்பது தொல்காப்பியர் தரும் தெளிவான குறிப்பு. பெண்ணைக் கண்டு ஆண் மொழிகுவன். ஆனால்

காலப் போக்கில், ஆணைக் கண்டு, பெண் மொழிவதும் கைக்கிளை என்றும், அது பெண்பாற் கைக்கிளை என்றும், முன்னது ஆண்பாற் கைக்கிளை என்றும் விரிப்பர். இக்கருத்து புறநானூறு தொகுத்த காலத்திலேயே தோன்றி விட்டது. புறநானூற்றில் 'கைக்கிளை' எனத் திணைக் குறிப்புடன் இடம் பெற்றுள்ள பாக்கள் (83, 84, 85) இதனை வலியுறுத்துகின்றன. இப்பாக்கள் மூன்றும், பெருநற் கிள்ளிபால், காதலுற்றுப் பெருநாய்கன் மகள் நக்கண்ணை, சொல் எதிர் பெறுது சொல்லி இன்புறுவனவாக அமைந்துள. பெருநற் கிள்ளி என்ற குறிப்பு பாக்களில் இல்லை. பாவிலோ பிறர்க்கு உணர்த்த ஒல்லும் புறப்பொருள் இல்லை. தொல்காப்பியர் குறிப்பிடும் காமம் சாலா இளமை இல்லை. பின் ஏன் புறத்தில் இடம் பெற்றது? மாறுக அகம், நக்கண்ணைப் பாக்களில் களிநடம் இடுகிறது. 'நக்கண்ணையார் பாட்டு, என அகத்தில் இடம் பெற்றிருக்குமானால் மறுப்பார் இல்லை. பாட்டின்கண் இயற்பெயர் கூறலாகாது என்பதுதானே புறப்பாட்டு மரபு. பாவில் இல்லாத போது இப் பாக்களையும் அகத்தில் தொகுத்திருத்தல் வேண்டும். ஆமூர் மல்லனுடன் பொருது வென்ற கிள்ளியைக் கண்டு மோகித்துப் பாடியதால் புறத்துச் சேர்க்கப்பட்டது என்பர். எனின், இப்பாடல்களில் கைக்கிளைத் திணை அமைவதாக யார் கூறினர்? கைக்கிளைத் திணைக்கெனத் தொல்காப்பியர் கூறிய காமம் சாலா இளமை இருவரிடத்தும் இல்லை; பெண்ணைப் பார்த்து ஆண் மொழிகுவதும் இல்லை. புறம் எனக் கூறுதற்கு ஏது இருப்பினும், கைக்கிளை எனக் கூறற்கு ஏது யாதும் இல்லை. எனவே இஃது ஏது இன்றிப் புறநானூற்றுத் தொகுப்பாசிரியர் இழைத்த வழு.

புறப்பொருள் வெண்பாமாலைப் பகுப்பு :

வழுவை வழியாகக் கொண்டு மேலும் வழு வளர்ந்தது. புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர், ஆண்பாற் கைக்கிளை, பெண்பாற் கைக்கிளை என்றே இருபாகுபாடு செய்தனர். அன்றியும், 'காமம் சாலா இளமை மோகம்' என்ற தொல்காப்பிய வரன்முறையை அடியோடு கைவிட்டனர். கைக்கிளையை முற்றுமாகப் புறத்திணை ஆக்கினர். அவர் கைக்கிளைக்கண் கூறும் துறை அனைத்தும் பிற அகத்திணைகளில் எளிதே அடங்குவன. எனினும் அவை புறத்திணை ஆக்கப்பட்டன. காட்டுப்பாடல்கள் அனைத்தும் அவராலே ஆக்கப்பட்டுக் காட்டப் பட்டன.

நாற்கவிராச நம்பியின் கருத்து

'கைக்கிளை, சிறியார் மாட்டு இளையோர் காட்டும் குறை ஒழுக்கம் (கை-சிறுமை; கிளை-உறவு) என்ற வரையறை உருமாறி,

ஒருவர் மேல் ஒருவர், அவர் இணக்கம் இன்றிக் காட்டும் தனி ஒழுக்கம் - ஒருதலைக் காமம் என்ற கருத்து வளர்ந்தது. இது இறையனார் களவியல் உரையில் வெளிப்பட்டு நிற்கிறது. 'காட்சி' ஐயம், தெளிதல், தேறல் என்பன கைக்கிளை இலக்கணம். அதனை அகத்திணையுள் (களவியலில்) உரைப்பது திணை மயக்கம்' என்றே களவியல் உரை விரித்தது.[91] இக்கருத்தையே நம்பியின், கைக்கிளை உடையது ஒரு தலைக்காமம் என்ற நூற்பா காட்டுகிறது. காமம் சாலா என்பதை மாற்றிக்

'காமம் சான்ற இளமையோன்வாயின்
குறிப்பறி காறும் குறுகாது நின்று
குறிப்பிடு நெஞ்சொடு கூறல் ஆகும்.'

என்றே நம்பி நூற்பித்தனர். அதற்குத் தக, தலைவியை முதன் முதல் கண்டு, விழியால் உண்டு நிற்கும் தலைவனின் காட்சி, ஐயம், துணிவு, குறிப்பறிவே கைக்கிளை என விரித்தனர். (118-122). தொல்காப்பிய மொழிவை ஒழிபியலாக்கி உரைத்தனர் (231, 242)

	தொல்காப்பியர்		நாற்கவிராச நம்பி
1	காமம் சாலா இளமை	1	காமம் சான்ற இளமை
2	ஆண் கூற்று	2	இருபால் கூற்று.
3	ஒரு துறை; மூன்று நிலை	3	காட்சி ஐயம் முதலான நான்கு
4	இவை தொல்காப்பிய அடிப்படை: வேறு ஒழிவு எதுவும் இல்லை.	4	இவை நம்பி அடிப்படை: தொல்காப்பியர் கருதுவன ஒழிபு.

முன்னைய நான்கு

நச்சர், நம்பிக்குப்பின் வந்தவர். அவர் முன்னே தொல்காப்பியமும், புறநானூற்றுத் திணைக் குறிப்பும், இறையனார் களவிய லுரையும் புறப்பொருள் வெண்பா மாலையும், நம்பி அகப் பொருளும் இருந்தன. தொல்காப்பியக் கருத்தும், பின்னூல் கருத்தும் தம்முள் முரணின. இம் முரணைக் காணக் கண் கூசுபவர் நச்சர். தொல்காப்பியத்திற்கு முன்பும், பின்பும் தோன்றிய நூல்கள் எல்லாம் தொல்காப்பியக் கோட்டுள் அமைதல் வேண்டும் என்ற விழைவினர். எனவே, பின் வந்தோர் கருத்தை எல்லாம் திரட்டி முரண் ஆகாது என எண்ணித் தொல்காப்பிய உரையுள் அமைத்தனர். ஆனால் இளம், நம்பிக்கு முன் உரை எழுதியவர்.

அவரும், புறநானூறு கலித்தொகை போன்ற நூல்களைக் கற்ற வரே. எனினும், தொல்காப்பியர் கால நிலைவில் உரை எழுதும் விழைவினர். எனவே அவர் உரை நச்சினார்க்கினியத்தினின்று வேறுபட்டு நிற்கிறது. 'முன்னிய நான்கும் முன்னதற்கு என்ப' (55) என்ற கைக்கிளை நூற்பாவை இளம்: 'ஏறுமடல் திறம், இளமை தீராத் திறம், தேறுதல் ஒழிந்த காமத்து மிகாத்திறம் மிக்க காமத்தின் மாறுகாத் திறம்' என விரித்தனர். நச்சர். காட்சி, ஐயம், தெளிவு, தேறல் என்றுரைத்தனர். பாரதி, (1) நிகழ்ந்தது நினைத்தல் (2) நிகழ்ந்தது கூறி நிலையல், (3) மரபு நிலை திரியாது விரவும் பொருள் விரவல். (4) உள்ளுறை உவமம் திணை உயர் வகையாதல் என்று நான்கை அடுக்கினர். நச்சர் கருத்துகள், பிற்காலக் கருத்தை முற்காலத்துத் திணித்தமை என்பது, முன்கண்ட வரலாற்றால் விளக்கமாம். பாரதி கூறும், பின்னிரண்டும் (3, 4) கைக்கிளையோடு தொடர்பற்றவை. எனவே அவர் கருத்து இங்குப் பொருந்துவதன்று. இளம். கருத்தே பொருந்தும். இது போன்றே இளம் , கைக்கிளையைப் 'பெருமை இல்லாத தலைமக்கள் உறவு' என்றனர். நச்சர். 'ஒருமருங்கு பற்றிய கேண்மை—ஒருதலைக் காமம் ஆயிற்று' என்றனர். நச்சர் நவிலுவன, நம்பியின் (3) நன்கொடை என்பது வெளிப்படை. 'புல்லித் தோன்றும்' என்பது கொண்டு, புல்லாமல் தோன்றும் கைக்கிளையும் கொள்ளப்படும். அஃதாவது காமம் சான்ற தலைமகள் மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி' என்பர் இளம். களவியல் மனம் ஒத்த ஐந்திணை; அன்பிணை நுவல்வது. அதனுள் மனம் ஒவ்வாக் கைக்கிளையை இணைப்பது பொருத்தம் இன்று.[92]

காமம் சாலா இளமைக் காதல்

காமம் சாலா இளமையோள்வயின் காதல் நிகழ்த்துதல் உண்டு. பூப்புப் பருவம் நோக்கி நிற்கும் சிறுமியை நோக்கிய காதல் என்பது இதன் கருத்து. அத்தகு காதல் பண்டு உண்டா எனில் அருகிய வழக்காக இருந்துளது. கலித்தொகை 122 ஆம் பாடலுக்குக் கூற்றுக் குறிப்பு எழுதும், நச்சர்., காமம் சாலா இளமையோள்வயின், பின் களவொழுக்கம் ஒழுகிய தலைவன்'' என்று எழுதுதல் காண்க.

> ''முதுக் குறைந்தனளே முதுக் குறைந்தனளே
> மலையன் ஒள்வேல் கண்ணி
> முலையும் வாரா முதுக் குறைந்தனளே.''

என்ற பாடலைக் காட்டி (அகத்திணை 3) இஃது இளையள் என்றது முதலும் கருவும் இன்றி வந்த குறிஞ்சி' என்று குறிப்பெழுதுவர் நச்சர். இப்பாட்டு, எந்த நூலைச் சேர்ந்தது என்று தெரியவில்லை. எனினும், இப்பாடல் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்கு முற்பட்டது.

கி. பி. பத்தாம் நூற்றாண்டினதான யாப்பருங்கலக் காரிகையில் 'முதுக் குறைந்தனளே' என்ற இப்பாட்டுக் குறிக்கப்படும்.[98] இப்பாட்டை நச்சர். 'குறிஞ்சி' எனக் குறிப்பதால் இது புணர்தலைக் குறிக்கிறது. இஃது இளையள் வினவிலள் என்றது, என்று அவரே குறிப்பர். அக்குறிப்பு இப்பாட்டுக் குரியார், 'சின்னப்பெண், அண்மையில் பருவம் எய்தியும் பதம் பெறுதவள் என்று அறிவிக்கிறது. இப் பின்புலத்தில் பாட்டைப் பயிலுக.

ஓர் இளைஞன், சிறுமி ஒருத்தியை நேசித்தனன். அவளையே நினைந்து உளைந்தனன். அவளை அடையத் துடித்தனன். ஆனால் அவளோ பருவம் எய்தினள் இல்லை. எனவே அவள் பருவம் எய்தும் நாளை எதிர்நோக்கி ஆர்வத்துடன் காத்திருந்தான். ஒரு நாள் அவள் பருவம் எய்தினள் என்ற நற்செய்தி கேட்டுக் களித்தனன்; குதித்தனன்.

> "என் காதலி பருவம் ஆகி விட்டாள்: பருவம்
> ஆகிவிட்டாள்.
> மலையமானின் ஒளி படைத்த வேலைப் போலே கூரிய
> விழிபெற்ற என் காதலி பருவம் ஆகிவிட்டாள்.
> அவளுக்கு
> இன்னும் முலைகளும் வரவில்லை. எனினும் பருவம்
> ஆகிவிட்டாள்"

என்று மகிழ்வுத் துடிப்புற மொழிந்தனன். இப்பாடலையும், நச்சர். குறிப்பையும் 'காமம் சாலா இளமையோள்வயின்' இளைஞன் காட்டிய அன்புப் பொழிவையும் ஒருங்கு சேர்த்து எண்ணுகையில், பருவம் எய்துதற்கு முன்னும் காதல் களவொழுக்கங்கள் பண்டு இருந்தன என்பது தெளிவாகும்.

மானிட இயல் சான்றுகள்

தோடர்கள், திராவிடப் பழங்குடி மக்கள் ஆவர். அவர் பேசும் மொழி திராவிடத் தமிழ்; அவர் வாழும் இடம் தமிழகத்து நீலகிரி. அவரிடை காமம் சாலா இளமை உறவு இன்றும் இருந்து வருகிறது. பெண் குழந்தை பிறந்தவுடனேயே அக் குழந்தைக் கென ஒரு பையனை அமர்த்திவிடுவர் தோடர்; இப்பையன், பெண்ணுக்கு ஆண்டுதோறும் துணி (கையுறை) கொடுப்பன். அப் பெண் பருவம் அடைந்தவுடன் அப்பையனை மணப்பள்: அல்லது தனக்குப் பிடித்த வேறு ஆடவனையும் மணப்பள். பெண்டிர் பருவம் அடைதற்கு முன்பே, உடல் திண்மை வாய்ந்த ஒருவன், அப்பெண்ணுடன் உடலுறவு கொள்வன். அவர்களது முறைப்படி

ஒவ்வொரு பெண்ணிற்கும் முற்பருவ உறவு நடந்தாக வேண்டும். உறவுகொண்ட, அவனே அவளை மணக்கலாம்; மணக்காமலும் போகலாம். அது வழு அன்று.[94] ஆனைமலை 'மலசர்' பழங் குடியினரிடம், காமம் சாலா மணம் வழக்கில் உள்ளது.[95]

பண்டைய இந்திய ஒழுக்கம்

மெகத்தனீசு என்ற கிரேக்கத் தூதன், சந்திர குப்த மௌரியன் காலத்து (கி. மு. 400) அவனது அவைக்களத்தில் இருந்தவன். அவன் 'இந்தியா' என்ற நூல் ஒன்று எழுதியுள் ளான். அந்நூலில் தமிழகத்துப் பாண்டியரையும், கொற்கை முத்தையும் குறிப்பிடுவன். 'பாண்டிய நாட்டில் ஆறு வயதுப் பெண்களும்கூடக் குழந்தைகள் பெறுகின்றனர் என்பது அவன் தரும் குறிப்பு.[96] பாண்டி நாட்டில் ஏழு வயது, மணப்பெண் அகவையாக இருந்ததாம். பருவம் வருதற்கு முன்பே மணம் முடிக்காமை பாவமாகக் கருதப்பட்டது. வைகாநசன், பராசரன், சம்வர்த்தன். யமன், வியாசன், சங்கன் முதலானோர், பருவத்திற்கு முற்பட்ட திருமணத்தை வற்புறுத்தினர். 'பன்னி ரண்டு வயது முடிதற்குள் பெற்றோர் தம் பெண்ணை மணந்து தந்துவிட வேண்டும். தராவிடில், பெண்ணின் தமையனும், பெற் றோரும் நரகத்திற்குப் போக நேரிடும் என்பர் பராசரன்.[97] பன்னி ரண்டு வயதிற்கு மேற்பட்ட பெண்ணை மணத்தலாகாது என்ற தடை இருந்தது.[98] சீதைக்கு மணம் முடியும்போது ஆறு வயது என்பர். கண்ணகிக்குத் திருமண வயது பன்னிரண்டு என்று இளங்கோ குறிப்பர்.[99]

பழஞ் சீனத்து ஒழுக்கம்

பழஞ்சீன நாட்டில், பத்து வயது ஆனபின், மகளிரை வீட்டிற்கு வெளியே விடுதல் இல்லை. பெண்களுக்கு ஏழு வயது ஆன பின்னர், அவர்களை, உடன் பிறந்த ஆண் பிள்ளைகளுடன் கூட உறங்க விடுதலும் இல்லை; உண்ண விடுதலும் இல்லை.[100]

கிரேக்க உரோம நாட்டு ஒழுக்கம்

கிரேக்கத்தில் பெண்டிர்க்கு மணத்திற்கு முன்னும் பின்னும் கட் டுப்பாடு இருந்தது. அங்கே இளஞ் சிறுவரைக் காதலித்தல் பற்றிக் கிரேக்க இலக்கியங்கள் பாடும். அங்கே ஒருபால் ஒழுக்கமும், தன் இன்பூட்டலும் இருபாலாரிடமும் இருந்தன. இருபால் இளைஞரிடம் மிகுதியாக இருந்தன.[101] கிரேக்க ஒழுக்கத்தின் பரவலும், பாதிப்பும், உரோமை நாட்டிலும் பரவி இருந்தன.

பழமை வாய்ந்த நாகரிக நாடுகள் அனைத்திலும், நெறிப்படா ஒழுக்கங்கள் சில இருந்துள. அவ்வாறு இருத்தல் இயற்கை.

தமிழகம், பழைய நாகரிக நாடுகளில் ஒன்று. இங்கும் 'காமம் சாலா இளமையோள் நேசிப்பு' இருந்தது என்பதே மனித நல வரலாற்றின் படிக்கட்டுகளை ஒப்புக் கொள்வதாகும். 'சங்க இலக்கியம் முழுதும், ஏன் தமிழிலக்கியத்து யாண்டுமே இச் சிறுமணம் பற்றிய செய்தி குறிப்பாகக் கூட இல்லை என்பார் கூற்று[102] தமிழ்க் கைக்கிளைத் திணையின் வரலாற்றை மறுப்ப தாகும்.

பெருந்திணை

கைக்கிளை களவுச் செயல். பெருந்திணையில் பெரும் பாலானவை கற்புச் செயல்களே. பெருந்திணையின் முதல் கூறு மடல் ஏறிய தலைவன்தன் நிலை கூறுவது. மடல் ஏறித் தலைவியைப் பெற்ற நிலை மொழிவது.

'அன்புறு கிளவியாள் அருளிவந்து அளித்தல்' (கலி. 138)

'நேரிழை ஈத்த மா' (கலி. 139)

'வருந்த மா ஊர்ந்து மறுகின்கண் பாட
திருந்திழைக்கு ஒத்த கிளவி கேட்டு, ஆங்கே
பொருந்தாதார் போர்வல் வழுதிக்கு அருந்திறை
போலக் கொடுத்தார் தமர்' (கலி. 141)

என வரும் கலிப்பா அடிகள் மடல்மா ஊர்ந்து மணவாட்டியைப் பெற்றதை மொழியும்.

'மடல் ஊர்ந்து தலைவியை எய்திய தலைவன் தான் மடல் ஊர்ந்த
வானும், அவளை எய்தியவாறும் தனக்குப் பாங்கா
யினுர்க்குக் கூறியது, (கலி. 130)

'இரந்து பின் நின்ற தலைவன் மடல் ஏறியவழி, அவள் தமர் அஞ்சித்
தலைவியைக் கொண்டு வந்து கொடுத்தலைக் கண்டோர்
கூறியது. (கலி. 141)

எனவரும் கலிப்பாத் துறைக் குறிப்புகள் முன் சொன்ன கருத்தை வலியுறுத்தும்.

மடல் ஏற்றம்

ஏறிய மடற்றிறத்தைப் போலவே, ஏனைய, மிகு வயதாகி மனைவி மாட்டும் மற்றோர் மாட்டும் இன்பம் துய்த்தல், அளவிற்கு அடங்காக் காமம், காம வெறியால் வலிதிற் புணர்தல் ஆகியனவும்

மணத்திற்குப் பின் நிகழ்வனவே; கைக்கிளை புணரா முன் நிகழும்; பெருந்திணை புணர்ந்தபின் நிகழும். இவை அனைத்தும் ஆடவர் பக்கமே நிகழ்வன. உணர்வுகள் இருபாலார்க்கும் பொதுவாயினும், உணர்த்துதல் இருபாலார்க்கும் பொது அன்று; கடல் அன்ன காமம் உழந்தும் பெண் தன் உடல் தினவை வெளிப்பட முழங் காள். பெருந்திணையில் தலைமையான, மடல் ஏற்றம் பெண்டிர்க்கு எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லை என்பது தொல்காப்பிய வரைவு.[103] 'எத்திணை மருங்கினும்' என வலியுறுத்தி மொழிதல் காண்க. எனவே பெருந்திணை நான்கு கூறுகளும் ஆடவர்க்கே உரியன என்று அறிக. இருபாற்கும் உரியது என்ற உரையாசிரியர் கருத்துப் பொருந்துவது அன்று. பெண்டிர்தம் காமமிகுதி காட்டுவனவாகக் காட்டப்படும் கலிப்பாடல்கள் பொருந்துவன அல்ல.[104]

பெண், மடஹராமை

மிகு காமத்தையும் பண்டையோர் பாடினதாகக் கொள்ள வைத்தோர் நச்சர்., ஐயனரிதனர், நாற்கவிராச நம்பி ஆகியோர். ஐயனரிதனர் 'பெண்பாற் பெருந்திணை' என்ற ஒன்றை அமைத் தார். அவர் அமைத்த துறையினுள் ஒன்று ஈண்டு காட்டத்தகும். 'இரவுத்தலைச் சேறல்' என்பது அவர் கூறும் பெண் துறைகளுள் ஒன்று. மாட்சிமைப்பட்ட மென்மையை (?) உடைய தலைவி, செறிந்த இருளை உடைய நடுயாமத்தே, தலைவனைக் காணவேண்டும் என்ற விருப்பத்தோடே தன் வீட்டை விட்டு வெளியேறி, தலைவன் இடத்துச் செல்லுவள். அதற்கு அவர் காட்டும் பாட்டு பெண்ணி னுடைய கழிகாம உணர்வைக் காட்டும்.

> " பிணையாய் அறை முழங்கும் பாய் அருவி நாடன்
> பிணையாரை மார்பம் பிணையத் துணையாய்க்
> கழிகாமம் உய்ப்பர் கனை இருட்கண் செல்கேன்
> வழிகாண, மின்னுக! வான்"[105]

தன் வீடு விட்டுத் தலைவன் வீடு போகிறாள் என்பதால், 'களவுக் காலக் காமம்' என்பது தெரிகிறது. களவில், அவள், அவன் வீடு ஓடிச் செல்லல் ஒல்லுமோ? பண்டை இலக்கியத்தில் ஒரு சான்று உண்டோ? எந்நிலையிலும் எந்நிலத்திலும் பெண் மடல் ஊராள் என்ற தொல்காப்பியக் 'காதலியா' இவ்வாறு ஓடுவாள்? இது தமிழர் உலக இயல்பிற்கும் ஒவ்வாது. தொல்காப்பிய நூல் இயல்பிற்கும் ஒவ்வாது; முன்னைய இலக்கிய இயல் பிற்கும் ஒவ்வாது. வெண்பா மாலையார், தம் போக்கில் பெருந்திணையைப் பெருந் ... திணையாக விரித்தனர். அவர் காட்டும் பல, நெய்தல் திணையில் அடங்கிய கூற்றுகள்,

அவற்றைப் பெருந்திணையாக்கிக் காட்டுவர். அவர் தாம் கூறும் இலக்கண இயலுக்கு வரம்பு யாதும் இத்திணையைப் பொறுத்த வரை கொள்ளவில்லை என்பதனை அவரது, பெருந்திணைப் படலத்தின் பட்டியல் காட்டும். வாகை வென்றி, வாணிக வென்றி, மல்ல வென்றி முதலாய துறைகளே சான்று. இவ் வென்றிகளுக்கும் பெருந்திணை வரம்பிற்கும் தொடர்புண்டோ? சிறு தொடர்பும் இல்லை. இவரிட்ட பட்டியலைக் கருத்துள் கொண்டு இளம்பூரணரும், விரிவுரை எழுதினர். அகப்பொருள் நம்பியும் இருநூற்பா பெருநூற்பா யாத்தனர் (243 ,244). 'மனைவியும் தானும் வனம் அடைந்து நோற்றலும் பெருந்திணைக் குரிய' என மொழிந்தனர். இவற்றிற் கெல்லாம் தொல்காப்பிய மூலமும், இலக்கிய வழக்காறும் இடம் தரவில்லை என்பது மலை விளக்கு.

மிக்க காமத்து மிடல்

'மிக்க காமத்து மிடல்' என்பதை நச்சினர்க்கினியரும், பாரதியும், குழந்தையும், மு. அருணாசலம் பிள்ளையும் 'எதிர்ப்பட்டாரை வலிதிற் புணர்தல்' என விளக்கினர். இளம். 'ஐந்திணைக் கண் நிகழும் காமத்தின் மாறுபட்டு வருவது' என விளக்கினும், தொடர்ந்து வெண்பாமாலையாரைப் பின்பற்றி விரிவான பட்டியல் தந்தனர். அறிஞர் ஒருவர் காமம் காழ்க் கொண்ட மனைவியின் துணிவுச் செயல்' என விளக்கினர்[106]

கருங்காக்கை ஒன்று தாமரைப் பூவைத் தழுவி, அதன் அக இதழைக் கோதிக் குடைந்தாற் போலக், கட்டியங்காரன் தன்னை விரும்பாத அநங்க மாலை என்னும் நாடக மகளை வலிதிற் புணர்ந்தான் என்ற வரலாற்றுக் குறிப்பை நினைக.[107] சுதமதியை வானவன் ஒருவன் வலிதில் கவர்ந்து சென்ற செய்தி, மணிமேகலையில் இடம் பெற்றுள்ளது.[108] இவற்றை நோக்க, நச்சர். உரையே பொருத்தம் எனத் தோன்றுகிறது.

கைக்கிளை, பெருந்திணையும் எண்வகை மணமும்

இளம்பூரணரும், நச்சினர்க்கினியரும், கைக்கிளை, ஐந்திணை பெருந்திணை என்ற மூன்றையும், (1) பிரமம் (2) பிரசாபத்தியம் (3) ஆரிடம் (4) தெய்வம் (5) காந்தருவம் (6) அசுரம் (7) இராக்கதம் (8) பைசாசம் என்பதனோடு பொருந்த உரைப்பர். இக் கருத்திலேயே களவியலிலும், 'முன்னைய மூன்றும், கைக்கிளைக் குறிப்பே' 'பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே' என்ற நூற் பாக்களிலும் உரை இயற்றினர்.[109] குழந்தை அவர்தம் உரையை ஏற்கவில்லை. மேலே கூறப்பட்ட எட்டும் ஆரிய மணமுறைகள்

என்றும், தமிழர்க்கும் அவை பொது என்றும் பொருத்துவர்.[110] ஆரியரிடம் எட்டே மண முறைகள் இருந்தன என்பது சரியன்று. அவரிடம் வேறு இரண்டு மணங்களும் உளவாக அண்மையில் கண்டு அறிந்துள்ளனர் அறிஞர்.[111] அவர் உரைப்பன 'பிராதிப' என்பதும் 'காதன' என்பதும் ஆம். இவ்விரு மணமுறைகளும் கந்த புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவை இன்றும் குசராத்தில் வாழ் இன மக்களிடம் வழக்கத்தில் உள்ளன. ஆக பத்து ஆரிய மணங்கள் வடபுலத்தில் உள்ளன. பத்து அல்ல என்றே கொண்டாலும் தமிழ் அகத்திணைகளுடன் அவை (ஆரிய மணங்கள்) பொருந்தி வருமா என்பது ஆய்விற் குரியது.

தமிழ் முறை மணங்கள்	ஆரிய முறை மணங்கள்
1 கைக்கிளை — களவியல் இளைய வயதுப் பெண்ணை நினைதல், உலைதல், பேசுதல்	1 பிரமம் — கன்னியை அணி கலன் அணிந்து பிரமசாரியாய் இருப்பான் ஒருவனுக்குத் தானமாகக் கொடுப்பது
2 முல்லை — இருத்தல்	2 பிரசாபத்தியம் — மகட் கோடற்குரிய கோத்திரத்தார் மகள் வேண்டிய வழி இரு முது குரவரும் இயைந்து கொடுப்பது
3 குறிஞ்சி — புணர்தல்	3 ஆரிடம் : ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுப்பது
4 மருதம் — ஊடுதல்	4 தெய்வம் : வேள்விகளுக்கு ஆசிரியராய் நின்றார் பல ருள்ளும் ஒருவர்க்கு வேள்வித் தீ முன்னர்க் கொடுப்பது
5 நெய்தல் — இரங்கல்	5 காந்தருவம் : ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம்
6 பாலை — பிரிதல்	6 அசுரம் : வில் ஏற்றினுனுதல், திரிபின்றி எய்தானுதல், கோடற்குரியன் எனக் கூறிய வழி அது செய்தாற்குக் கொடுத்தல்
7 பெருந்திணை — கற்பில் மிகு காமம்	7 இராக்கதம் : தலைமகள் தன்னினும் தமரினும் பெரிது வலிதிற் கொள்வது
	8 பைசாசம் : கலித்தார் மாட்டும் துயின்றார் மாட்டும் கூடுதல்

உரையாசிரியர் கூறும் பொருத்தம்

1 கைக்கிளை — அசுரம், இராக்கதம், பைசாசம்.

2 ஐந்திணை — காந்தருவம்.

3 பெருந்திணை — பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம்.

பொருத்தம் இன்மை

தமிழில் கைக்கிளை, களவு நிகழ்ச்சி; களவு நுகர்ச்சி அன்று. இராக்கதம், பைசாசம் என்பன களவில் நுகரப்படுவன. கைக்கிளை மண நிகழ்ச்சி; மண நிகழ்ச்சிக்கு முன்னோடி எனவே ஆரிய அசுரம் வேறு; தமிழ்க் கைக்கிளை வேறு.

ஐந்திணையைக் காந்தருவம் என்பர். காந்தருவத்தில் புணர்ச்சி மட்டுமே உண்டு. தமிழில் புணர்ச்சி, இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல் என்பன உள்ளன. ஊடல், பிரிதல், இரங்கல் என்பவற்றிற்கும், காந்தருவத்திற்கும் எத் தொடர்பும் இல்லை. தமிழைப் போலக் காந்தருவம் ஐங்கூறு ஆவதில்லை.

பெருந்திணை - தமிழில் மிகு காமத்தை உணர்த்துவது. ஆரியப் பிரமம் முதலாய நான்கும் முறை காமம் உணர்த்துவன. இரண்டும் எதிர்மறை.

எனவே, தமிழ் முறை ஆண் பெண் காதல் உணர்வுகளின் படி நிலைகளைக் காட்டுவது. ஆரிய முறை, திருமண வகைகளைப் பேசுவது. இரண்டும் வேறு வேறு அடித்தளத்தில் எழுந்தவை. இரண்டையும் பொருத்துவது சற்றும் பொருந்தாது.

தொல்காப்பியர், கைக்கிளையோடு தொடர்புபட 'முன்னைய மூன்று' என்பர்; பெருந்திணையோடு தொடர்புபடப் 'பின்னைய நான்கு' என்பர். அவை, ஆரிய முறைகள் அல்ல எனில் எவை என வினு எழும்.

கைக்கிளைக்குரிய மூன்று

1 காமஞ் சாலா இளமையோள் வயின் ஏமம் சாலா இடும்பை எய்தல்.

2 நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னெடும் அவளொடும் தருக்கிய புணர்தல்

3 சொல் எதிர் பெறுது சொல்லி இன்புறல்

பெருந்திணைக்குரிய நான்கு

1 ஏறிய மடல் திறம்-
2 இளமை தீர் திறம்.
3 தேறுதல் ஒழிந்த காமத்து மிகு திறம்,
4 மிக்க காமத்து மிடல்.

கைக்கிளை, பெருந்திணைக்கு உரியார்

கைக்கிளை பெருந்திணைகளை, முன்னோர் புறத்திணைகளாகப் புறக்கணித்தமைக்கு ஒரு காரணம்; அவற்றை ஒத்த தலைமக்கள் புரியார். அடிமைகளும், பணியாட்களும், ஏவலர்களுமே அவ் வொழுக்கத்திற்கு உரியோர் என்று கருதினர். இளம். நச்சர்., குழந்தை, மு. அருணாசலம் பிள்ளை ஆகியோர் இக் கருத்தினரே, அன்னோர் 'அடியோர் பாங்கினும்' என்ற நூற்பாவை (25), கைக் கிளை, பெருந்திணை நூற்பாக்களுடன் (53, 54, 55) இயைத்து உரை கண்டனர். அவர் கருத்து வழி, கைக்கிளை பெருந்திணை தகைமைத் திணைகள் அல்ல. தகாத் திணைகளே. 'தீய காமம் இழிந்தோர்க்கு உரிமை' என்று எழுதுவர் நச்சர்.

> 'அகத்திணை ஆவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவை எல்லாம் பிறர்க்கும் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிது ஆகலானும், அவர் நாணுக் குறைபாடு உடையர் ஆகலானும், குறிப்பறியாது வேட்கைவழியே சாரக் கருதுவர் ஆகலானும், இன்பம் இனிது நடத்து வார் பிறரேவல் செய்யாதார் என்பதனால் இவர் புறப் பொருட் குரியவர் ஆயினர் என்க. எனவே இவ்வெழு வகைத் திணையும் அகம்., புறம் என இருவகை ஆயின்.[112]

என்று எழுதுவர் இளம். கைக்கிளை, பெருந்திணை என்பன இழி திணை, அடியோர், வினைவலர் இழிசனர் எனவே இருவர்க்கும் பொருத்துக என்பது உரைகாரர் கருத்து. இக்கருத்திலேயே நம்பி யும் தம் நூலில்,

> 'அதுவே
> இறைமை இல்லோர்க்கும் இழிகுலத் தோர்க்கும்
> முறைமையின் உரித்தே முன்னுங் காலே'

என்று மொழிந்தனர் (212). அங்ஙனமெனில், புறநானூற்றுள் கைக் கிளைஞராக இடம் பெற்றுள்ள நக்கண்ணை இழிசனளா? கண்ணகி யைத் துறந்த பேகன் இழிசனனா? நக்கண்ணை, கப்பல் வணிகச்

செல்வச் செழிப்புற்ற பெருங்கோழி நாய்கன் புதல்வி; நற்குண மடவாள். பேகன், கடை எழுவள்ளல்களில் ஒருவன். மலை நாட்டின் ஆளுநன்; மயிலுக்குப் போர்வைக் கொடைஞன். இத்தகையோரை இழிசனர் என்பதா என்ற ஐயம் முன்னைய உரைகாரர்க்கு வந்தது. வரவே உயர்ந்தோர் மாட்டு வந்த கைக்கிளை எனக் கைக்கிளையை இரண்டாகப் பாகம் பிரித்தனர்.[113] 'உயர்ந்தோர் கைக்கிளை' என ஒன்றைக் கொள்ளின், அவர் கொண்ட கைக்கிளை பெருந்திணைக்கு உரிமை பூண்டோர் அடிமைகளும் விலைவலருமே என்ற அடிப்படை முரண்பட்டு நொடிகிறது. கைக்கிளை, பெருந்திணைகளையும் அகமாகப் போற்றும் அண்மைக் கால அறிஞர் கருத்தே உகந்தது;[114] முரண்பாடு அற்றது.

கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்கள் போர் ஒழுக்கங்களே

குறும்பருவக் காதல் - கைக்கிளை; முதுபருவக் காமம் -பெருந்திணை. இவற்றின் அடித்தளன் இருபாலார் இடையே உள்ள பால் ஈர்ப்பு. இவ் ஈர்ப்பு இயல்பானது, உலகத்தில் நடப்பது; எனினும், உலகில் நடக்க வேண்டியது அன்று. ஆம், இவ்விரு திணைகளும் இழி திணைகள் அல்ல. ஆனால் பழி திணைகள். புறத்திணையின் பொதிபொருளை நோக்க, அகத்திணை. பொருநர்தம் ஒழுக்கமே புகலுவது என்பது முன்பு விளக்கப்பட்டது.

பிறநாடுகளின் மேல் போர்மேற் செல்லும், அரசரும் மறவரும் அந்நாட்டுக் களங்களில் பொருவினை முடித்து வறிதே திரும்பார். அரசன் அறிந்தும் அறியாமலும், பகைநாடுகளை எரி கொளுத்துவர்; எழில் விழுத்துவர்.[115] சேரன் செங்குட்டுவன் பகைவர் ஊரை அழித்து அவ்வூர்ப் பெண்களின் கூந்தலைக் கயிறுகத் திரித்து யானையைப் பூட்டிச் செலுத்தினன்.[116]

> 'பல் இருங்கூந்தல் முரற்சியால்
> குஞ்சர ஒழுகை பூட்டி'

என்பது பதிற்றுப்பத்து.

> "போரின் போது கொள்ளை அடிக்கப்பட்ட பொருள்களைப் போலவே மனிதரும் வென்றோர் உடைமை ஆயினர்: மிகப் புராதன காலத்தே போரிலே வெற்றி பெற்றோர் தோல்வி அடைந்த பக்கத்து ஆடவர் யாவரையும் கொன்று ஒழித்தனர். பெண்களை பணிவிடைக் காகக் கைப்பற்றப்பட்டனர். அவரையே 'கொண்டி மகளிர்' என்று பழைய செய்யுட்கள் குறிப்பிடுகின்றன[117]

'நடைவயப் பரி, இரதம் ஒட்டகம்
நவநிதிக் குவை, மகளிர் என்று
அடைய அப்பொழுது அவர்கள் கைக் கொள்ளும்
அவை கணிப்பதும் அருமையே'

என வரும் கலிங்கத்துப் பரணித் தாழிசை (11.148) அயல்நாட்டு மகளிரைக் கைக்கொண்டு வந்ததைக் குறிப்பிடும்.

"முதல் இராசேந்திரன் உத்திரலாடத்து அரசன் மகி பாலனை ஜயித்த போது அவன் பெண்டிரையும் பண்டா ரத்தையும் கைப்பற்றினன்' என்று அறிகிறோம். முதல் இராசாதி ராசன் இலங்கை அரசன் வீர சலா மேகன் என்பானுடன் போரிட்டபோது அவன் காதலியோடு தாயையும் பிடித்தான்' என்று அறிகிறோம். இரண்டாம் இராஜேந்திரன் சாளுக்கியருடன் நடந்த போரில் அங்குப் போரிட்டோர் முதல், தேவியர் 'சத்தியப்பிரிய சாங்கப்பை' என்பவர்களைப் போர்க்களத்தில் பிடித்தான்' என்று 'ஒப்பில் சத்தியப்பை சாங்கப்பை என்று இவர் முதல் தேவியர் குழாமும் பாவையர் ஈட்டம் இளையர் பிறவும் முனைவயிற் கொண்டு' என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் மூன்றும் இராஜராஜனைத் தோற்கடித்து ஆங்கவன் திணைக் கட்டணத்து கற்பு தனக்காஞ்சி ஓங்குரிமை குழாம் ஒரு கை திரிசிய் கொண்டு மூரிமணிப்பட்டம் கட்டி முடி சூட்டி மார்பில் அணைத்து வளவன் முதல் தேவி என்று பெயர் பெற்ற வஞ்சிய்-முதலாய் பொய் வளையார் பொங்கு புவற்கும் சுபமுதலாக புலவர் புகழ்'[118]

வேற்று நாடுகளை வீழ்த்துகிற பொழுது அங்குள்ள பெண்டிரைக் கடத்திவரல் பொதுப்போர் மரபு என்பதை இப்பகுதி உணர்த்தும்.

பண்டைய நாடுகளில் போர் மரபு

கிரேக்கம், உரோமை நாடுகளிலும் இம்மரபு இருந்தது, வெளிநாட்டிலிருந்து ஆண்களையும், பெண்களையும் கவர்ந்து வந்து அவர்களைத் தம் தாயகத்தில் அடிமை ஆக்குவர். கிரேக்கத்தின் போர்ச் சூழல் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் காரணமாக இருந்ததை அறிஞர் ஆய்வு செய்துரைப்பர்.

"வயது முதிர்ந்த ஒருவன் ஓர் இளம் பெண்ணை ஆசை யுடன் நாடவே கூடாது என்ற உண்மைக்கு நம் கருத்தை

ஈர்த்ததைத் தொடர்ந்து பெண்களால் இவ் உலகிற்குக் கொண்டு வரப்பட்ட துயரத்தையும் வருத்தத்தையும் பற்றிய ஒரு பெரிய பட்டியலே நீளுகிறது.

கவர்ந்து செல்லப்பட்ட சில பெண்கள் பொருட்டு நடந்த டிரோசன் போர் முதல், 'சிர்ஞவின் மதிலைச் சுற்றி பத்தாண்டுகள் நடந்த கொடிய வெறிப்போர் ஈறுகப் போர்களுக்கும் பெண்களே காரணமாக இருந்தனர் என்பது புலப்படும். பெண்கள் பொருட்டு அழிக்கப் பட்ட குடும்பங்கள் பல. பொறுமை, அடங்காக் காம உணர்ச்சி முதலியவற்றினால் முன்பு செழிப்பில் திளைத்த பல சமூகங்களுக்குள் முரண்பாடுகள் புகுந்தன. காதலின் ஆற்றல் வென்று அடக்க முடியாதது என்ற உண்மைக் குத் துணையாக அமைகின்றது.[119]

அரச மனைவியர் கூட பகைமன்னன் வெல்லுவான் எனக் குறிப்புக் கிடப்பின் தாமே தீக்குளித்து மாளுவர். தாமே வாளால் புண்படுத்திச் சாவர். வடபுல வரலாறுகளில் இதற்குப் பல சான்றுகள் உள; பொனிசிய அரசி ஒருத்தி, பகைவர் வெற்றி பெறுவர் என்று ஊகித்து அதற்கு முன்பே தீக்குளித்து இறந் தனள்.[120] உரோம சீசர் எகிப்திய அலெக்சாண்டிரியாவை முற்றுகை யிட்டனன். எகிப்திய அரசனின் தங்கை கிளியோப் பாத்திராவை நுகர்ந்தனன். அப்போது அவனுக்கு வயது ஐம்பத்து நான்கு அவளுக்கு இருபத்தொன்று'. இளமை தீர் திறத்தை இங்கே இணைத்து நினைக. மேலே காட்டப்பட்ட செய்தி கள், வெளிப்புலம் பகைப்புல நோக்கில் செல்வார், அந்நாட்டு மகளிரிடம் ஒழுங்குற நடத்தல் இல்லை என்பதைக் காட்டுவன.

போர்ப்படை எடுப்பே, ஒழுங்கின்மையின் அடிப்படை என்பர். பகைநாடு வென்ற போர் வீரர், ஆங்குள்ள இளம் பெண்களை நுகரத் துடிப்பர்; குதிரையில் ஏறிச் சிலரைத் தம் வயப் படுத்துவர்; இளையோர் முதியாள் எனப்பாராது அவர்களை நுகர விழைவர். ஒறுப்பாள் வெறுப்பாள் என்றும் எண்ணுது மகளிரை வலியப் புணர்வர். இவை முறையா அல்லவா என்பது வினா அன்று. இவை, பண்டைய போர்ச் சமூக வினைகள், விளைவுகள் என்பனவே ஈண்டு எண்ணத் தக்கன. கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்களைப் பண்டைய போர்த்திணை ஒழுக்கங்களுடன் பொருத்தி நினைக. இவ்விரு திணைகளும் ஆண்பாலாரின் கூடா ஒழுக்கம் காட்டுவன என்பதும், போருக்கு உரியார் ஆடவரே என்பதும் மேற்கண்ட கருத்தை வற்புறுத்துவன. பெருந்திணைக் குரிய ஏறியமடல் என்பது மறைமுகமாகக் குதிரை மறவரைக் குறிப்பது கருதுக.

பரத்தமை

அடிமைகள் பெரும்பாலும் பிற நாட்டிலிருந்து கொண்டு வரப்பெற்றவர்; தோற்றவர் அடிமை ஆக்கப்பட்டனர். பெண் அடிமைகள், பரத்தமைக்காகப் பயன்படுத்தப் பெற்றனர். கிரேக்க, உரோம, பாபிலோனிய, அசீரிய நாகரிகங்கள் அனைத்திலும் பரத்தமை செழிக்க இருந்துள்ளது. அடிமைகளைச் சார்ந்தே வளர்ந்துள்ளது. உரோம நகரங்களின் பரத்தையராக இருந்தவர் பெரும்பாலோர் முன்னைய அடிமையர். அயல்நாடுகளிலிருந்து கொணரப்பட்டவர் என்பர்.[121] கிரேக்க நாட்டிலும் பரத்தமை பெருக இருந்தது. அது கோயிலைச் சார்ந்து வளர்ந்தது என்பர்.[122] தமிழ் நாட்டிலும் கோயில்களில் அடிமைகளாக இருந்த தேவரடியார்களே, பிற்காலத்தில் தேவதாசி ஆயினர் - என்ற வரலாறு ஒப்பிட்டு ஓரத்தக்கது.[123] தமிழில் வழங்கும் 'தேவரடியார்' என்ற கல்வெட்டு, இலக்கியச் சொல்லாட்சியே, 'மனித அடிமையர் இருந்தனர் என்பதை மறைமுகமாகக் காட்டவில்லையா? பொது மனித அடியாரிடமிருந்து வேறுபடுத்தவே 'தேவர் அடியார்' என்ற சொல்லாட்சி வந்தது போலும்.

தமிழரிடம், பரத்தையர் உறவு இருந்தது. அரசரும் மறவரும் படை எடுப்புக் களங்களில் வெளிநாடுகளுக்குச் செல்வர்' பாசறை அமைப்பர்; அப்போது அவர் தம்முடன் குலப் பெண்டிரை அழைத்துச் செல்லலாகாது என்ற கட்டுப்பாடு இருந்தது. 'எண்ணரும் பாசறை பெண்ணுடன் புணரார்' என்பது தொல் காப்பியம் (பொருள் 173). ஆனால் வெளிநாட்டுப் போர் மேற் செலவுகளில், பரத்தையர் உறவு தடுக்கப்படவில்லை. பரத்தையுடன் அவர்கள் தொடர்பு கொண்டனர். பரத்தை என்பது தமிழ் வேர்ச் சொல்லில் தோன்றிய சொல்லன்று.[124] பர = பிற; ஸ்திரீ = த்தை; பர + ஸ்திரீ = பரத்தை என்ற சொல் வரலாறும் இதனை உறுதி செய்கிறது. (குறத்தி மறத்தி குற + ஸ்திரீ = குறத்தி மற + ஸ்திரீ = மறத்தி என்பர் அறிஞர். பரத்தி பரத்தை, என்பவற்றையும் ஒப்பிடுக.

முன்னைய அடிமைமுறையே, பின்னைய பரத்தமைக்கும் வித்தாயிற்று. போர்ச் சமூகத்தில் ஒரு குழந்தை அடிமைத்தனம்; மறு குழந்தை பரத்தமை. தமிழ்ச் சமூகம் போர்ச் சமூகம் எனவே தமிழ் நாட்டிலும் அடியோர் முதலான ஒடுக்கப்பட்டோர் இருந்ததாகக் கொள்ளுதலே வரலாற்றிற்குப் பொருந்துவது. தமிழகத்தில் பதினைந்து வகையான அடிமைப் பழக்கம் இருந்தது என்பார் அறிஞர்.[125] அவர் கூற்றும் பழைய அடிமை முறை உண்மையை விளக்கும்.

எனவே கைக்கிளை, பெருந்திணை, பரத்தமை என்ற மூன்று பழி ஒழுக்கங்களும் போர்ச் சமூக விளைவுகள் என்பதும், பிறநாட்டு வரவுகள் என்பதும், மன்னரும், மறவரும் மக்கட் பிரிவுகளுமே அவற்றின் எழுச்சிக்குக் காரணம் என்பதும் அவற்றின் விளைவு நுகர்வுகளுக்குப் பண்டைத் தமிழர் விதிவிலக்கல்லர் என்பதும் பெறப்படும்.

கைக்கிளை பெருந்திணைகள் அகத்திணைகளா? புறத்திணைகளா?

கைக்கிளையும், பெருந்திணையும் அகத்திணைகளே. தொல்காப் பியர்தம் கொள்கை இதுவே என்பது அவர்தம் அகத்திணை முதல் நூற்பாவால் தெளிவாம். ஆனால் அவர், "அடியோர் பாங்கினும், வினைவலர் பாங்கினும் கடிவரை இல; புறத்து என்மனார் புலவர்" என்று நூற்பித்தது உரைகாரர்க்கு மயக்கத்தை மூட்டியது. அதற்குத் தக புறநானூற்றுத் தொகுப்பாசிரியர் கைக்கிளை பெருந் திணைகளைப் புறநானூற்றிலேயே போற்றித் தொகுத்தனர். அவர் குறிப்பிற்கேற்ப இலக்கண நூல்களும் கைக்கிளை, பெருந்திணைகளை அகத்தின் புறம் என்றே புகன்றன.

1 கைக்கிளை என்ரு பெருந்திணை என்ருங்கு
அகத்திணை இரண்டும் அகத்திணைப் புறனே

2 ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள்
அமர்ந்த ஈரைந்தும் அகத்தின் புறமே.

3 ஆய்ந்த அகப்புறம் ஐயிரண்டும் ஆயுங்கால்
காந்தள் கலிமடன்மா ஏறுதல்
பத்தின் அகத்தின் புறம்.

என வரும் பன்னிருபடல மேற்கோள் நூற்பாக்கள், அகத்திணை, பெருந்திணை இரண்டையும் 'அகப்புறம்' எனத் தனியே எடுத்துப் புகன்றன.[126] புறப்பொருள் வெண்பாமாலை, கைக்கிளை பெருந் திணை, முறையே, பதினொன்று பன்னிரண்டாம் படலங்களாகக் கொண்டு போற்றின. இவ்விலக்கணப் போக்கும், 'கடிவரை இல புறத்து' என்ற தொல்காப்பியர் ஆளுகையும், கைக்கிளை பெருந் திணை என்பன் அகப்புறத்திணை என உரையாளர்களைக் கருத வைத்தன. கைக்கிளையைத் திணை மயக்கம் என்றே இறையனர் களவியல் உரைகாரர் எழுதினர்.[127] கைக்கிளை - புறத்திணை; அகத்திணைக் களவியலுள் வந்து அமைவது திணை மயக்கம் என அவர் கருதினர். இச்சூழலிலும் இத்தகு நூற்பயிற்சியிலும் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய இளம்., 'கடிவரை புறத்து'

என்ற தொடருக்கு 'ஐந்திணைப் புறத்த ஆகிய கைக்கிளை பெருந் திணை' என்றே உரை வரைந்தனர். நச்சினார்க்கினியரும், இளம் பூரணரை வழி மொழிந்தனர்.

புறநானூறு, பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை, இறையனார் களவியல் உரை, தொல்காப்பிய உரைகளைக் கண்ட நாற்கவிராசர்.[128] தம் அகப்பொருள் விளக்க நூலில், கைக்கிளை, பெருந்திணைகளைத் தெளிவாக அகப் புறத்திணை என்றே குறித் தனர்.

> காமம் காலா இளமை யோள்வயின்
> குறிப்பறி வுருது குறுகியோங்கு அவளொடு
> இறப்பர் கூறுவது அகப்புறக் கைக்கிளை

என்பது அவர்தம் மொழிவு (242).

முன்னை உரையாசிரியர்களும், நூலாசிரியர்களும், கைக்கிளை, பெருந்திணைகளை அகத்தினின்று மெல்ல அகற்றி அகப்புறம் எனப் பெயரிட்டுப் பின்னும் அகற்றிப் புறம் ஆக்கிவிட்டதைப் பிற்கால நூல்கள் காட்டுகின்றன. கைக்கிளையும் பெருந்திணையும், ஐந் திணைக்கு நிகரானவையா என்று பார்த்து முடிவறுத்தனர் முன்னை யோர். அவர் தொல்காப்பிய மூலத்தையும் கருதாது விட்டனர். கைக்கிளை, பெருந்திணை என்பனவும் அகத்திணை என்பதல்லவா முதல் நூலார்தம் முழக்கம்?

> 'கைக்கிளை, பெருந்திணைகளை அகத்தின் வேறு எனக் கருதியும் வளர்ந்த எழுத்தெல்லாம் பெரும்பிழை. அகத் திணையின்கண் கைக்கிளை வருதல் திணை மயக்கம். பிற எனின், கைக்கிளை முதற் பெருத்திணை இறுவாய் ஏழு திணையினுள்ளும் கைக்கிளையும் பெருந்திணையும் அகத் தைச் சார்ந்த புறம் (பா. 4) என்னும் திருக்கோவை உரையாசிரியர் கருத்துரை இப்பிழை இடங்களுள் ஒன்று. ஒரு குடிப்பிறந்த பல்லோருள் சிலர் சிறப்புற்றும், மற்றும் சிலர் சிறப்பின்றியும் இருத்தற்காக அன்னோர் ஒரு குடிப் பிறப்புக்கு இழுக்குண்டா? ஐந்திணை நோக்கக் கைக்கிளை பெருந்திணைகள் சிறப்பில ஆகலாம்; எனினும் அவ்விரண் டும் எழுதிணை எனப்பட்ட அகத்திணை ஆதற்கு இழுக் கில்லை...
>
> (கைக்கிளை, பெருந்திணை என்ற) இவ்விரண்டனையும் சேர்த்துக் கொள்ளாவிடின், அகத்திணை நகமற்ற விரல் போலவும் படியற்ற மனைபோலவும் முழுவனப்பில் ஒரு குறைவு உரையாகத் தோன்றும்.'

என்று அறிஞர் விரித்துரைப்பர்.[129] தொல்காப்பிய பின்னை உரை யாசிரியர் அகப்புலக் கோட்பாட்டை மறுத்தனர்.[130]

கைக்கிளை பெருந்திணைகளை அகப்புறத்திணை என்று கூறினும் முன்னையோர் அகத்திணைக்குள்ளேயே அவற்றை அடக்கிப் போந் தனர்.[131] புறநானூற்றுத் தொகுப்பாசிரியரும், புறப்பொருள் வெண்பாமாலையாரும், அவற்றை முற்றுமாகப் புறத்திணைக்குள் அகப்படுத்தியது வழு.

அகத்திணையுள் இயற்பெயர் சுட்டுதல்

புறத்திணையுள், கைக்கிளை, பெருந்திணைப் பாடல்கள், பெயர் சுட்டிஇயற்றப்பட்டமையை அன்னேர் காரணமாகக் காட்டலாம். அது முறையன்று. தொல்காப்பியர், அகத்திணையுள் பெயர் சுட் டாமை பற்றி யாது மொழிந்தனர் என்பதைக் கூர்ந்து ஆராய்க:

> 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
> சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறுஅர்'

என்பது அன்னேர் நூற்பா (57). இந்நூற்பாவின் கருத்து யாது? முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் பாலை என்ற ஐந்திணை மக்களைப் பாடும் போது, அன்னாரை இயற்பெயரால் சுட்டற்க ஆயன் மலையன் ஊரன் சேர்ப்பன் எயினன் எனப் பொதுப் பெயர்களால் சுட்டுக என்பதே கருத்து. இந்நூற்பா கைக்கிளை, பெருந்திணை மக்களை உள்ளடக்கவில்லை. ஆகவே ஐந்திணை மக்கள் பெயர் சுட்ட லாகாது. கைக்கிளை, பெருந்திணை பெயர் சுட்டலாம் என்பதே முன்னூலார் முடிபு. இதனை மனத்துள் கொள்ளின், நக்கண்ணை யார் கைக்கிளைப் பாட்டும், பேகனைப் புலவோர் பாடிய பெருந் திணைப் பாட்டும் புறநானூற்றில் இடம் பெற்ற வழு புலப்படும்.

அகம் என்பது உள்ளத்துள் அடக்குவது என்ற பொருளது அன்று. உள்ளத்துள் உள்ளம் காரணமாக எழுந்து உடல்வழி, தெறிப்பது. குறிஞ்சித் தலைவன் சொல்லெதிர் மொழியா அரு மைக்கு ஏங்குவதைக் களவியல் காட்டும்,[132] சொல்லெதிர் பெறுது தலைவன் சொல்லி இன்புறுதலைக் கைக்கிளை காட்டும். கடற்கானல் தலைவியின் உடற்கானலை நெய்தல் காட்டும்; தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறத்தைப் பெருந்திணை காட்டும் முத்திணைக்கும் அடிப்படை ஒன்றே. அது பால் உணர்ச்சி. கைக்கிளை வலியக் காட்டுவது; ஐந்திணை பொருந்தக் காட்டுவது. பெருந்திணை வருந்தக் காட்டுவது. ஆனால் அவை காட்டுவது காதல்

உணர்வையே; காம நிலனவையே. எனவே கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற முத்திணையையும் அகத்திணை என்று கொள்ளுதலே முறைமை.

நாடக வழக்கும் உலகியல் வழக்கும் (56)

தொடர்புடைய இரண்டை எண்ணும்மை கொடுத்து எடுத்துக் காட்டும் பொழுது இரண்டும் ஒரு போக்கினவாக இருத்தல் வேண்டும், அல்லது எதிர் போக்கினவாக இருத்தல் வேண்டும். இரவும் பகலும் எனில், இரவுக்கு மாறு பகல் என்பது போல, நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்ற இரண்டும் எதிர் முகமானவை என்று ஊகித்தல் வேண்டும். அதனாலேயே நச்சர்: 'புணர்ந்துரை' வகை, உலக வழக்கம் எனப் புகன்றனர்,

நாடக வழக்கு என்பதைச் 'சுவைபட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தனவாகத் தொகுத்துக் கூறுதல். அஃதாவது செல்வத்தானும், குலத்தானும், ஒழுக்கத்தானும், அன்பினானும் ஒத்தார் இருவராய்த் தமின் நீங்கித் தனி இடத்து எதிர்ப்பட்டார் எனவும், அவ்வழிக் கொடுப்போரும் இன்றி அடுப்போரும் இன்றி வேட்கை மிகுதியால் புணர்ந்தார் எனவும், பின்னும் அவர் களவொழுக்கம் நடத்தி இலக்கண வகையான் வரைந்தெய்தினர் எனவும், பிறவும் இந்நிகரனவாகிச் சுவைபடவருவன எல்லாம் ஒருங்கு வந்தனவாகக் கூறுதல்' என விளக்குவர் இளம். இதனால் நாடக வழக்கு என்பது' 'பொய்' என்றும், உலக வழக்கு என்பது 'மெய்' என்றும், பாடல் சான்ற புலன்நெறி வழக்கிற்குப் பொய்யும் மெய்யும் அடிப்படை என்றும் முற்றுமாக முடிவறுத்து விடுதல் கூடாது.

ஒரு பாவலன் ஓரிடத்துக் காதலர் இருவர் கள்ளவுறவு மேற் கொண்டிருத்தலைக் கண்டிருப்பின், பிறிதோர் இடத்தில், உடன் போக்குச் செல்லும் இருவரைச் சந்தித்திருப்பன்; மற்றுமோர் இடத்தில், பொருள்வயின் பிரிந்த தலைவனை எண்ணித் தனிமையில் அவியும் பெண் ஒருத்தியைப் பார்த்திருப்பன். இவையெல்லாம், பாவலன் வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு குடும்பங்களில் நேரில் கண்டறிந்த உண்மைகள் — உலக வழக்கங்கள். தான் கண்டறிந்தவற்றிற்குப் பாட்டு உருவம் தருகிற பொழுது, திணைப் புனத்தில் காதலர் இருவர்; அவர் ஒருவரை ஒருவர் கண்டனர், தம்முள் உறவு கொண்டனர். திணைப்புனப் பணி முடிந்தது; தலைவி இற்செறிக்கப்பட்டாள். அவளைக் காணத் துடித்தான் அவன். விரும்பியவாறு விரும்பியபோது சந்திக்க முடியவில்லை. இருவரும் எங்காவது போய்விட முடிவு செய்தனர். புறப்பட்டுப் போயினர். எங்கோ ஓர் ஊரில் இருந்து இல்லறம் நிகழ்த்தினர்.

இருந்த பொருள், செலவு அழிந்த நிலையில் புதுப்பொருள் தேடத் தலைவன் புறப்பட்டனன்; தலைவி பிரிதலை எண்ணி வருந்தினள்; அழுதனள். தலைவன் பயணத்தை நிறுத்தினன். அவளை ஆற்றுவித்தனன்; தேற்றுவித்தனன்; பின்னர்ப் புறப்பட்டுப் போயினன். கார் காலத்தில் வருவதாகக் கூறினன். அவன் வரவை எதிர்நோக்கி அவள் காத்துக் கிடந்தனள்'.எனத் துண்டுத் துண்டுப் பார்வைகளை ஓரிடத்தில் திரட்டித் தருவது என்பதே நாடக வழக்கு. திரட்டி ஓரிடத்து நிகழ்வன போல் காட்டுதலே புனைந்துரை. பாவின் பொருள் புனைவு அன்று. களவும் உறவும் பிரிவும் வருத்தமும் புனைவுகள் அல்ல. அதனாலேதான் தொல்காப்பியர், 'நாடகம்' என வறிதே கூறாது 'நாடக வழக்கு' என மொழிந்தனர். வழக்கு என்பது உலகத்து வழங்குதலைக் குறிக்கும்.

நாடகம் என்பதை நடித்துக் காட்டும் கூத்து என்ற பொருளில் பாரதி விளக்கினர். அவரை மு. அருணாசலம் பிள்ளை மறுத்து மொழிந்தனர். (பார்க்க அட்டவணை 19)

> " நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
> பாடல் சான்ற புலனெறி வழக்கம்
> கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
> உரியது ஆகும் என்மனார் புலவர்."

என்ற தொல்காப்பிய நூற்பா, அகத்திணைச் செய்யுள் எல்லாவற்றிற்கும் உரிய பொது இயல்பாகவே உரைகாரர்களால் தொடர்ந்து கருதப்படும். அவ்வாறு கருதுவதற்கான நூற்பா மூலம், சூத்திரத்துள் எங்கும் இல்லை. புலன்நெறி வழக்கம் வேறு; பாடல் சான்ற புலன்நெறி வழக்கம் வேறு என்று அறிதல் வேண்டும். புலன்நெறி வழக்கம் என்பதைப் புலவராற்று வழக்கம் என்று விளக்கினர் நச்சர். அவ்வாறு விளக்கவே, புலனெறி வழக்கம் என்பது புலவர்தம் கவிதை என்று பொருளாகிறது. புலன்நெறி வழக்கத்தினின்று வேறுபட்டது—என்று காட்டவே, 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' என்பது தொல்காப்பியரால் குறிக்கப்பட்டது. ஆக, பாடல் சான்ற புலனெறி வழக்கம் வேறு; பாடல் சாலாப் புலனெறி வழக்கம் வேறு, பாடல் என்பதற்கு ஈண்டு இசைமை என்று பொருள். கலிப்பாட்டும், பரிபாட்டுமே இசைமை கலந்த பாக்கள்.[133] கலிப்பாவில் இசைமை நிறைந்திருப்பதை அறிஞர் சுட்டிக் காட்டுவர்.

> 'வெண்பாவின் பின் வந்தது கலிப்பாவின் ஒரு பகுதியாகிய தாழிசை. இது பாடுதற்கெனவே அமைந்தது என்று கூறலாம். தாழிசை என்ற பெயரே இதனை

அட்டவணை 19

நாடக வழக்கு, பாடல் சான்ற புலனெறி வழக்குகள் பற்றி உரை வேறுபாடு

எண்	உரையாசிரியர்கள்	நாடக வழக்கு
1	இளம் பூரணர்	சுவைபட வருவன எல்லாம் ஓரிடத்து வந்தன வாகத் தொகுத்துக் கூறுதல்
2	நச்சினார்க் கினியர்	புனைந்துரை வகை: புலவர் இல்லனவும் கூறுப வரோ எனின், உலகத்தார்க்கு நன்மை பயத்தற்கு நல்லோர்க்கு உள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந் தொழுகுதல் அறம் எனக் கருதி அந்நல்லோர்க் குள்ளவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற் கன்றே நாடகம் என்னது வழக்கு என்பார் ஆயிற்று.
3	புலவர் குழந்தை	உலக வழக்கங்களில் சிறந்தனவாய் உள்ளன வற்றை அறிஞர்கள் ஒன்றுகத் தொகுத்துப் பிற் கால உலக வழக்கம் திருத்தமாக நடைபெறுதற் பொருட்டுப் பாடல்களாகப் பாடி வைப்பர்; அப்பாடல்களாகிய நூல் வழக்கம்
4	சோமசுந்தர பாரதி	உலகியலே ஒட்டி உயர் குறிக்கோளோடும் சுவை படக் காட்டும் 'பொழுது' வகை மரபு ஒருவர் போல நடிப்பது
5	மு. அருணாசலம் பிள்ளை	இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கருத்தை உடன் படுவர். நாடக வழக்கினை முன்னர்க் கூறியமை யால் அகன் ஐந்திணைச் செய்யுட்கள் பெரும் பான்மை நாடக வழக்கும் சிறுபான்மை உலகியல் வழக்கும் கலந்து பாடப்படும் என்பதை இலக் கியம் நோக்கி அறியலாம்.

உலகியல் வழக்கு	பாடல் சான்ற புலனெறி வழக்கு
உலகத்தார் ஒழுகலாற் றோடு ஒத்து வருவது	இவ்விரு வகையானும் பாடல் சான்ற கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்க் கூறப்படுகின்ற அகப் பொருள்
உலக வழக்கம் மக்கள் வாழ்க் கையில் இயல் பாகக் காணப் படும் வழக்கம் உலக வழக்கம்	புலவரால் பாடுதற்கமைந்த புலவராற்று வழக்கம்
	உலக வழக்கும் நாடக வழக்கும் சேர்ந்தனவே புலனெறி வழக்கம்
உலக மக் களின் ஒழுக லாறு	சிறப்புறப் புலவரால் அமைக்கப்படும் அகத்திணை மரபுகள்.
உலக மக் களின் ஒழுக லாறு	சிறப்புறப் புலவ ரால் அமைக்கப்படும் அகத்திணை மரபுகள் .

விளக்குகின்றது. கலிப்பாவிற்குரிய 'முரற்கை' (தொல். பொருள். 382) என்ற பெயரும் இதனையே வலியுறுத்தும். முரற்கை என்பது ஒலித்தல் என்று பொருள்படும். 'இசை முரலுதல், என்றல் முற்காலத்து மரபு.[184]

பரிபாடல்—இசைப்பாடல். 'இன்இயல் மான் தேர்ச்சி இசை பரி பாடல்' (11. 137) என்ற பரிபாட்டடியே இதனை வற்புறுத்தும். பதின்மர், பரிபாடலுக்கு இசை வகுத்ததாகக் குறிக்கப்படுவர். கண்ணனூர் (பரிபாடல் 21,) கண்ணனகனூர் (5), கேசவனூர் (14), நந்நாகனூர் (12), நல்லச்சுதனூர் (16, 17, 18, 20) நன்னாகனூர் (2), நாகனூர் (11), பித்தாமத்தர் (7), பெட்டனாகனூர்(3,4), மருத்துவன் நல்லச்சுதனூர் (4, 8, 9, 10, 15, 19) ஆகியோர், பரி பாடலுக்கு இசை அமைத்தவராவர். ஆக கலிப்பாட்டும், பரிபாட் டும் இசை அமைந்த பாடல்கள் என்று காட்டவே, 'பாடல் சான்ற புலனெறி வழக்கம்' எனக் குறிப்பிட்டுக் கூறினார் தொல்காப்பியர்.

புலன்நெறி

'புலன் நெறி வழக்கம்' என்பதிலுள்ள 'புலன்' என்பதும் ஆய் விற்குரியது. இதனை அறிவு, அறிவுடைய அறிஞர் புலவர் எனப் பொருள் கூறுவதினும், செய்யுளியலில் (241) உள்ள 'புலன்' என்ற எண்வகை வனப்பிலக்கிய வகையுடன் தொடர்புறுத்திப் பொருள் உரைத்தல் பொருந்தும் எனத் தெரிகிறது.

'சேரி மொழியால் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன் என மொழிப புலன் உணர்ந்தோரே.'

இதற்கு உரை வரையும் பேராசிரியர் எழுதுவது,

''சேரிமொழி என்பது பாடி மாற்றங்கள். அவற்றுனே செவ்விதாகக் கூறி ஆராய்ந்து காணுமைப் பொருள் தொடரானே தொடுத்துச் செய்வது புலன் என்று சொல் லுவர் புலன் உணர்ந்தோர்.

அவை விளக்கத்தார் கூத்து முதலாகிய நாடகச் செய்யு ளாகிய வெண்டுறைச் செய்யுள் போல்வன என்பது கண்டு கொள்க.

பேராசிரியர் புலன் இலக்கியத்திற்கு இரண்டு இயல்புகளைச் சுட்டு தலைக் கருதுக.

1 பாடி மாற்றங்கள்: பாடி என்பது ஆயர்பாடி என்பது போன்று எளியோர் வாழும் பகுதி. ஆங்கு உறைவோர், தம்முள் பேசிக் கொள்ளும் உரையாடலை 'மாற்றம்' என்று குறித்தனர்.

2 நாடகச் செய்யுள் என்று குறித்தவர், அதனுடன் விளக்கத் தனூர் எழுதிய கூத்து நூலையும் இணைத்தனர்.

பேராசிரியர், 'பாடி மாற்றம்' என்பதையும், 'நாடகச்' செய்யுள் என்பதையும் தொல்காப்பியர் வழங்கும், நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்பதனோடு பொருத்தி நினையின் நூற்பாவின் பொருள் புலப்பட்டுவிடும்.

நாடக வழக்கு

இருவர், மூவராக உரையாடுதல் போல அமைப்பது நாடக வழக்கின் உயிர்ப்பண்பு. கலித்தொகை, பரிபாடல் என்ற இரு நூல்களுள்ளும், பெரும்பாலான பாடல்கள், இருவர் மூவர் உரை யாடல்களாகவே உள்ளன. கலித்தொகை : 39-43, 60-64, 81-84, 86-98, 102, 104-106, 109, 112-114, 116, 117, 143, 145-147; பரிபாடல் : 6, 8, 11, 12, 20. தலைவன், தலைவி, தோழி, பரத்தை, கண்டோர், காதற் பரத்தை. காமக்கிழத்தி ஆகியோர் இடையே நிகழும் உரையாட்டாக, இப்பாக்கள் அமைக்கப் பட்டுள. இந்த அமைப்பு, பிற சங்க இலக்கியத்தினின்றும் வேறு பட்டது. பிற சங்கப் பாக்களும் 'கூறுதலாக' அமைந்தவை. எனினும், அவை ஒருவர் கூற்றாகவே பெரும்பாலும் அமையும். ஆனால், கலி, பரிபாடல்கள் அவ்வாறு அமையாமல், இருவரும், இருவர்க்கு மேற்பட்டோரும், தம்முள் பேசிக் கொள்வனவாக அமையும். இச்சிறப்பைக் கருதியே, 'நாடக வழக்கு' எனத் தொல்காப்பியரால் குறிக்கப்பட்டது. 'புலன்' என்பதைப் 'பாடி மாற்றம்—நாடகச் செய்யுள் எனப் பேராசிரியர் விளக்கி யதும் இது பற்றியே.

உலகியல் வழக்கு

'உலகத்தார் ஒழுகல் ஆற்றோடு ஒத்து வருவது' என்ற கருத்துப் பட உரைகாரர் உரை வரைகுவர். இப்பொருளிலும், ஆழ்ந்த பொருளைத் தொல்காப்பியர் இச்சொற்றொடருக்குக் கொண் டுள்ளனர். முற்பருவக் காமமாகிய கைக்கிளையும், முதிர்பருவக் காமமாகிய பெருந்திணையும் பிற தொகை நூல்களுள் இடம் பெற வில்லை. கலித்தொகை நூலுள்ளேயே அவ்விரண்டும் இடம் பெற்றுள. காமக்கிழத்தி தலைவனை ஏசுவதாகச் சங்க இலக்கியத் துள் பாட்டு இல்லை. கலித்தொகையுள் பாட்டு உளது. (69, 72

73) காமக்கிழத்திக்கும், பரத்தைக்கும் இடையே வாய்ச் சண்டை நடத்தல் போன்ற காட்சி, பிற சங்கப் பாக்களுள் இல்லை. அத்தகு காட்சி பரிபாடலில் உண்டு. பிற்காலப் பள்ளு பிரபந்தத்தில் மூத்தபள்ளி, இளையபள்ளி சண்டை போன்ற சொற்போர்கள் இடம் பெற்றுள. (பரிபாடல் 20), 'சேரிமொழி' எனத் தொல்காப்பியர் கூறுவது நினைவு கூரத்தக்கது. பிற சங்க இலக்கியப் பாக்கள், பெரும்பாலானவை உயர்ந்தோரை நோக்கியவை. கலித்தொகை, பரிபாடல் பாக்கள் பாமர மக்களை நோக்கியவை.

கலித்தொகை, பரிபாடல் பாக்களில் நாடக அமைவு

கலித்தொகை, பரிபாடல் பாக்கள், மற்றவற்றினும், நாட்டுப் புறச் சாயல் உடையவை என்று அறிஞர் கருதுவர். குறிப்பிட்ட சொற்கள், ஒலி ஒழுங்கு[135] ஆகியன மீண்டும் மீண்டும் வருதலால், அவற்றை நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு உடையவை என்பர்.

கலித்தொகை, பரிபாடல் பாக்கள் நாடகப் பாங்கினவாயும் இசைப் பாங்கினவாயும் இருத்தல் அவை, பாமர மக்களுடன் நெருங்கியவை என்பதைக் காட்டும்.

> 'சாதாரண மக்கட் சார்புடைய நிகழ்ச்சிகள் கொண்ட இலக்கியங்கள் யாவும், இசை, நாடகப் பண்புடையன வாகவே அமைகின்றன. விசய நகர நாயக்கர் மன்னர் காலத்தின் இறுதிப் பகுதியிலே தோன்றிய' மக்கள் நாட்டம் உடைய இலக்கியங்களாகிய பள்ளு, குறவஞ்சி ஆகியன நாடகப் பண்பும், இசைப் பண்பும், சாதாரண உலகியல் வழக்குப் பண்பும் கொண்டு விளங்குவது இங்கு மனம் கொள்ளத்தக்க தாகும்.[136]

எனவே நாடக வழக்கு (1) உலகியல் வழக்கு (2) பாடல் சான்ற (3) புலன்நெறி வழக்கு (4) என்பவற்றிற்கு முறையே, உரையாடலும் (1) பாமர மக்கள் இயல்பும் (2) கலந்து இசை நிறைந்த (3) சேரி மொழி இலக்கியம் (4) கலிப்பாவாலும், பரிபாட்டாலும் அமையப்பெறும். இவ்வாறு பொருள் உரைத்தலே பொருத்தம். அகப்பாவினுள், சேரியைச் சார்ந்து வரும் இலக்கிய வகை கலியாலும் பரிபாட்டாலும் எழுதப்பெறும் என்பதே கருத்து; எல்லா அகப்பாவும் கலியினாலும், பரிபாட்டினாலும் வரப்பெறும் என்பது கருத்தன்று. இவ்வாறு கொள்ளவே, பிற சங்க இலக்கியங்கள் அகவற்பாவால் அமைந்தமைக்கும் அமைதி கிடைத்து விடும். தொல்காப்பிய நூற்பாவிற்குத் தற்போது வழங்கும் கலித்தொகையும், பரிபாடலும் இலக்கியங்கள் ஆகா. இவற்றிற்கு

முற்பட்ட, தொல்காப்பியத்திற்கு முற்பட்ட வேறு கலியும், பரி பாடலும் இருந்து, இறந்திருத்தல் வேண்டும். அவற்றைக் கண்டோ அல்லது அவற்றைக் கண்டு எழுதப்பட்ட நூற்பாவைக் கொண்டோ, தொல்காப்பியர் இந்நூற்பாவை எழுதினராதல் வேண்டும். நூற்பாவில் உள்ள 'என்மனார் புலவர்' என்ற தொடர் நோக்கத் தக்கது.

அகத்திணையில் இயற்பெயர் சுட்டல்

அகத்திணைச் செய்யுளில் பெயர் சுட்டுதல் பற்றி இரு நூற் பாக்கள் உள. அவற்றின் கருத்து வருமாறு:

1 முல்லை, குறிஞ்சி மருதம், நெய்தல், பாலை என்பன அகத்திற் குரிய ஐந்து திணைகளாம். அத்திணைப் பாக்களை ஆக்குகையில் பாத் தலைமக்கள் அமைவர். அன்னாரைக் கிள்ளி, வழுதி, செங் குட்டுவன் என இயற்பெயர்களால் கிளத்தற்க. நாடன் ஊரன் சேர்ப்பன் எனப் பொதுப் பெயரால் கிளத்துக.

2 எனவே மக்கள்தம் இயற்பெயர், புறத்திணைக் கண்ணே பொருந்தும் அகத்திணைக் கண்ணே அமையாது.

இளம். நச்சர்., ஆகியோர் இக் கருத்திலேயே பொருளுரை புகன்றனர். பாரதி வேறுபடப் புதுப்பொருள் பொழிந்தனர். அவர் உரைக்கும் புதுப்பொருள்:

1 மக்கள் மதிக்கும் காதல் கண்ணிய நடுவண் ஐந்திணை களிலும் தலைமக்கள் தம்முள் யாரும் இயற்பெயர் சுட்டி அகவப் பெறார்.

2 சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறுதல் மேற் சூத்திரத்தில் கூறியாங்குத் தலைமக்கள் தம்முள் அளவளாவப் பிற இடங்களில் ஐந்திணைப் புறனுய் அமைவது அல்லால் அக ஒழுக்கத்தில் அவர் தம்முள் அளவளாவலில் இல்லை.

மு. அருணாசலம் பிள்ளையும் குழந்தையும் முதல் நூற்பாவில் இளம். கருத்தையே தழுவினர். எனினும், இரண்டாம் நூற் பாவிற்கு இருவரும் வேறு வேறு பொருள் கொண்டனர்.

மு. அருணாசலம் பிள்ளை மொழிவது: புறத்திணையாகிய பாடாண் திணையைச் சார்ந்து வரும் கைக்கிளை பெருந்திணைகளில் இயற்பெயர் பொருந்தி வரலாம் அல்லது அகத்திணையைச் சார்ந்து வரும் கைக்கிளை பெருந்திணைகளிலும் அவ்வியற் பெயர் கலந்து வருதல் இல்லை என்பதாம்.

குழந்தை மொழிவது: அகத்திணைப் பாட்டுகளில் புறத்திணைப் பகுதி வருமாஞல் அப்புறத்திணைப் பகுதிகளில் தலைவன் இயற் பெயர் பொருந்திவரின் அல்லது அப்பாட்டின் அக ஒழுக்கப் பகுதியில் இயற்பெயர்கள் பொருந்தி வர மாட்டா.

அக ஒழுக்கத்துள், கணவன் மனைவியர் தம் பெயர் சுட்டி அளவளாவுதல் இல்லை என்று உரைத்த பாரதி உரைபொருந்துவ தாக இல்லை. அகத்திணையுள் பெயர் சுட்டாமை தமிழ் மரபு. இம்மரபு, இலக்கண, இலக்கிய உலகில் பல்லாண்டுகளாய் இருந்து வருவது.சங்க இலக்கியத் தொகையைப் பகுத்தாரும் தொகுத்தா ரும்இவ்வடிப்படையிலே எட்டுத்தொகைப் பத்துப்பாட்டு இலக்கி யங்களைப் பகுத்தனர்.தொகுத்தனர். இது மரபு என்பதால் மட்டும் அன்றி, கவிதை நோக்காலும் இம்மரபு சிறந்து அமைந்துள்ளது.

> அகத்தையும் புறத்தையும் ஆளப்படும் பொருள் அடிப் படையில் பிரித்தனரே எனினும் வேறு வகையினும் ஒரு வரம்பை இரண்டிற்கும் இடையே கட்டினர். தலைவன் தலைவியரின் இயற்பெயரை அகப்பாடல்களில் ஆளுதல் ஆகாது. அப்படி ஆண்டு விட்டால், அப்பாடல்கள் புறப் பாடல்கள் ஆகிவிடும். நக்கண்ணையார் நெஞ்சார நேசித்த காதல் உணர்வு தளும்பும் பாடல்கள் பெயர் சொன்ன ஒரே காரணத்திற்காகப் புறப்பாடல்களாக அமைக்கப் பட்டிருக்கின்றன. புறத்தில் இடம் பெற்றுள்ள தாபத நிலை குறுங் கலித் துறையில் அமைந் துள்ள பாக்களும் இவ்வடிப்படையால் சேர்க்கப்பட்ட வையே. நெடுநல்வாடை என்ற பத்துப்பாட்டும் இந்தத் தண்டனையிலிருந்து தப்பவில்லை. பெயர் சொல்லுவதில் இத்துணை அளவு வரம்பை வற்புறுத்துவானேன் அதற்குப் பொருத்தமான கவிதை நியாயம் ஒன்று இருக்கிறது.[187]

பெயர் சுட்டல்—புறம்

> புறப்பாடல்கள் பெயர் சொல்லிப் பாட அனுமதிக்கப் படுகின்றன. அவ்வாறு அமைந்த புறப்பாடல்கள் பல 'புரவலர் போற்றிகளாகப் பொசுங்கி விடுகின்றன. கவிதையில் தனி மனித வழிபாட்டிற்குப் புறப்பாடல் இடம் தருகிறது. தரவே, கவிதை படைக்க வேண்டும் என்ற கவிஞனின் முதல் நோக்கம், இரண்டாம் தரமாகி விடுகிறது. கவிதை கேட்பவனைப் புகழ வேண்டும் என்பது முதல் நோக்கமாகி விடுகிறது. புகழ வேண்டும் என்று பாடப்படுவன எல்லாம் வேண்டுமென்றே செய்யப் படும் செய்யுள்களாக அமைதலே பெரும்பான்மை,

செய்யப்படுவன கவிதைகள் அல்ல. உணர்வு வெள்ளம் பொங்குபுனலாகப் பொங்கிக் கொட்டுவதே கவிதை...

நல்ல கவிஞன் மடை மாற்றப்பெற்று, போற்றிகளில் புதைந்து விடக் கூடாதே என்று கருதிய முன்னைய தமிழறிஞர் திட்டமிட்டு வைத்த சட்டமே'' அகப் பாடல்களில் நாயகப் பெயர்கூடாது'' என்பது. கிரேக்க, இலத்தீன், ஆங்கில மொழிகளில் உள்ள முல்லைப் பாட்டுகளிலும், இத்தாலிய மொழியின் பெட்ரார்க் காதல் பாட்டுகளிலும் இத்தகு மரபு காணப்படுகிறது.

காதலர்தம் கள்ளச் சந்திப்பைக் கவிதை ஆக்கும் அகத் துறையில், இன்ன ஊர், இன்ஞரின் பெண், இன்ன பெயருடையாள் இன்ன பெயருடைய இஞைஞனைச் சந்தித்துக் காதல் மொழி பேசினள் என்று உரைப்பது பெருந்தீங்காக முடியும். அன்றியும் கவிதை, கற்பனை என்ற மலை முடியிலிருந்து வரலாறு என்ற பள்ளத்தாக்கில் வீழ்ந்து விடும். இவற்றைத் தவிர்க்கவும் மேற்கண்ட வரையறையை அறிஞர் அறிமுகப் படுத்தினராதல் வேண்டும்.[138]

ஒழுக்கப் பகுதியில் பெயர் வாராமை

இரண்டாம் நூற்பாவிற்கும் குழந்தை உரையே பொருந்துவது. இளம். நச்சர். உரைப்படி, முன் நூற்பாவின் கருத்தையே பின் நூற்பாவும் வேறுமுகமாக மொழிகிறது. வறிதே ஒரே கருத்தை இரு நூற்பாவில் கூறினர் என்பது மூல நூலாசிரியனுக்கு இழுக்கு. எனவே அவர்தம் உரை சிறப்பான தன்று. காதலர் தம்முள் அளவளாவுதல் அல்லாத பிற இடங்களில் பெயர் சுட்டப் பெறலாம் என்பர் பாரதி. அதற்கு அவர் 'திருமாவளவன் எனத் தேறேன்' என்ற பிற்காலச் சேர்க்கை வெண்பாவைக் காட்டுவர். 'கோவலன் மனைவி' என்ற கண்ணகிக் கூற்றும் இப்பாங்கினது என்பர். இச்செய்தியை, முன் நூற்பாவிலிருந்தே வருவித்துக் கொள்ளல் ஒல்லும். 'இன்ன இடத்தில் மட்டும் பெயர் சுட்டல் ஆகாது, என நூற்பா விதிப்பின், அன்ன இடம் தவிர பிற இடம் எல்லாம் பெயர் சுட்டலாம் என்பது ஆகும் அன்றே? அவ்வாறு ஆகின் இரண்டாவது நூற்பா தேவை இன்று. மு. அருணாசலம்பிள்ளை உரை மற்றவற்றினும் சிறப்பானது. எனினும், அகத்திற்குரிய கைக்கிளை, பெருந்திணை, புறத்திற்குரிய கைக்கிளை பெருந்திணை என இரு கூறு செய்தனர். கைக்கிளை பெருந்திணையில் அத்தகு இரட்டை வேடம் இல்லை. அவை அகத்திற்கே உரியன என்பது அகத்திணை முதல் நூற்பாவால் தெளிவுறும். அதன் விரிவு முன்னே விளக்கப்பட்டது (தலைப்பு : கைக்கிளை, பெருந்திணை அகத்திணையா?)

குழந்தை மொழிவது இலக்கியப் போக்கை எண்ணிப் புகலும் சிறப்புரை ஆகும். சங்க அகப்பாடல்களில், புறப்பெயர்கள் பல வருகின்றன.[189]. அவற்றை இந்நூற்பா மூலம் குழந்தை அமைத்துக் கொள்வர். அவ்வாறு வரும் பெயர்கள், முதற் பொருளையோ, கருப்பொருளையோ சார்த்தி வரலாம்; உரிப் பொருளைச் சார்த்தி வரலாகாது என்பது குழந்தையின் உட்கருத்து. ஏனைய உரையினும், இவர்தம் உரையே தொல்காப் பிய நூற்போக்கிற்கும், சங்க இலக்கியப் போக்கிற்கும் பொருந்த உள்ளது.

குறிப்புகள்

1 மலைபடுகடாம், 184; குறுந்தொகை, 137; நற்றிணை 166; புற நானூறு 337, 394.

2 இராகவையங்கார், மு. தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ப. 5

3 இறையனார் களவியல் உரைகாரர் இவ்வாறு பொருத்தி உரைப்பர். சூத். 1, ப. 26. ஆரியத்தோடு இணைத்துரைத்தல் பொருத்தம் இல்லை என்பது பின்னே விளக்கப்படும்.

4 காதலன் கெடுத்த சிறுமை. அகம். 45-13.
ஊர் என உணராச் சிறுமை அகம். 200-3
ஊர் முது கோசர் நவைத்த சிறுமை, அகம். 262-6

5 Hans Licht. Sexual Life in Ancient Greece (Sex. An. Greece) 1932 Nakedness. P. 88.

6 Otte Kiffer, Sexual Life in Ancient Rome (Sex. An. Rome) 1951, P. 10.

7 Ibid. P. 24

8 Candra Cakravarti. Sex Life in Ancient India, (Sex. In India) 1963, P. 141.

9 Thurston. E. Castes And Tribes of Southern India. (Thurston. Castes) vol. II. P. 69.

10 Thurston E. Ethnographical Notes (Thurston. Ethno) P. 62

11 Ibid. P. 64.

12 Sex in Rome. P. 10 and Refer; Foot Note (F.N) No. 86.

13 A History of Warfare. Heroic Age of Greek. P. 59.

14 ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. (புறம். 312)

15 அறவாணன், க. ப , பண்டைய போர் நெறி, முரசொலி, பொங்கல் மலர் 1973

16 "During the Triumphal games the knights insisted vehemently that he should repeal the law about celanacy and childlessness. Augustus therefore assembled in different parts of the forum these knights who were unmarried and those

who were married, including those who had children when he saw that the married men were much fewer than the others, he was grieved and addressed them something after this fashion :

"...Rome was at first a mere handful of men; but when we be thought us of marriage and had children we came to excell the whole world not only in strength but also in numbers we must remember this, and console our mortality by handing on our stock like a torch tea never-ending line of successors-so that we may help one another to change our mortality (the one side of our nature which makes us less happy than the Gods) to eternal life. It was for this end above all that our creater, the fiirst and greatest of the gods, divided the human race into two sexes, male and female and instilled into both of them love and the desire for sexual intercourse, and made their association fruitful-in order that new generation might make even mortal life immortal...Surely there is no greater blessing than a good wife who orders your house, watches ever your possissions rears your children, adds happiness to your days of health and tends you when you are ill, shares your good fortune and consoles you in trouble, controlcs the wild passion of your youth and soften the harshness of old age. These are some of the private advantages enjoyed by these who marry and have children. As for the state - for whose cause we ought to do many things against our inclination without doubt it is honourable and necessary (if cities and peoples are to exist and if you are to rule the others and the whole world is to obey you) that a large population should in peace time till the soil and sail the seas and practise arts and apply themselves to handicrafts, and in war defend their possessions with all the more zeal because of their families and raise up others to replace the slain..."

"He now addressed the unmarried men as fellows: "What am I to call you? Men? You have not yet proved yourselves to be men. Citizens? As far as you are concern the city is perishing. Romans? You are doing your best to destroy the very name. A city is men women not building and colonnaden and emply market-places. Consider the righteous anger which would seize great Romulus our founder if he compared the time and circumstances when he was born wtih your refusal to beget children even in lawful marriage...Those old Romans begot them even on foreign women, but you disdain to make Roman women the mothers of your children You are not such recluses that you live without women; not one of you eats or sleeps

alone. All you wish is to have liberty for an sensuality and excess...!" Sex in Rome P. 37.

"...உரோம் முதன் முதலில் வெகு சிலரையே கொண்டதாக இருந்தது. ஆனால் நாம், மணத்தைப்பற்றி எண்ணத் தொடங்கியதாலும், மக்களைப் பெற்றதாலும் அனைத்துல களவில் வலிமையில் மட்டுமன்றி எண்ணிக்கையிலும் முதனிலைச் சிறப்பை அடைந்தோம். இதனை நாம் மறவாது உறுதியாக நினைவில் இருத்தல் வேண்டும். தீச்சுடரை முடிவே இல்லாது பின் வருவோர்க்கும் தொடர்ந்து வழங் குதல் போல, முடிவே இல்லாத தலைமுறையினர்க்கு நம் இனக் கொழுமுனையை வழங்கி நம் வாழ்க்கையின் நிலையாமையைத் தேற்றிக் கொள்ள வேண்டும். ஆற்றிக் கொள்ள வேண்டும். அதன் வழி நிலையாமையை நிலைபேறுடைய வாழ்வாக மாற்றிக் கொள்ள நாம் ஒருவர்க்கொருவர் உதவுதல் வேண்டும். அனைத்திலும் மேன்மையான இம்முடிவுக்காகவே, முழுமுதலும் மாபேராளருமான நம்மைப் படைத்தவன் மானிட இனத்தை ஆண், பெண் என்றமைந்த இரு பாலராக் கினான்; அவர்க்குள் அன்பையும், உறவு கொள்ளும் ஆசை உணர்வையும் படிப்படியாகப் புகுத்தினான். அவர்களுடைய சேர்க்கையின் விளைவைக் கொண்டு நிலையற்ற வாழ்க்கையை நிலையான தாக்கினான்.....உங்கள் இல்லத்தை ஒழுங்குபடுத்தி, உடைமைகளைக் காத்து, ஈன்ற மக்களை பேணிச் சீராட்டி, நல வாழ்க்கையில் மகிழ்ச்சியைக் கூட்டி, உடல் நலியுங்காலை உடனிருந்து பேணி, உங்கள் நல்வளத்தில் பங்கு கொண்டு, துயரிடையே ஆறுதலாகத் தேற்றி, கொடிய இளமைத் துடிப்பு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி, மூப்பின் கொடுமைக்கு மேன்மையுடன் தனித்து உதவும் நல்ல மனைவியைக் காட்டி லும் மிக்க பேருரு சிறப்புடையது, உலகில் வேறொன்றும் இல்லை....

.....இவை மணமானவர்களும், மகப்பேறுற்றவர்களுமே துய்த்து மகிழும் தனி நலங்கள். இந்த நாட்டின் பொருட்டு— நகரங்களும், மக்களும் என்றும் நிலைத்திருக்கவும், நீ மற்ற வர்களை ஆட்சி செய்யவும், இந்த உலகம் முழுதும் உனக்குப் பணிந்திருக்கவும், வேண்டுமானால், நாம், நம் தனிமனைச் சார்புக்கு மாறுக சாதித்தே ஆக வேண்டிய செயல்கள் ஏராளம். அவை பெருமைக்குரியன; இன்றியமையாதன. அமைதிக் காலத்தில் பெருவாரியான மக்கள் நிலத்தை உழ வேண்டும்; கடல் பயணம் செய்ய வேண்டும்; கலைகளைப் பயிலு தல் வேண்டும் கைத்தொழில்களைத் தமக்குள்ளே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இத்துடன் போரிடையே அவர்தம் உடை மைகளைப் பேராவலுக் கிளர்ச்சியுடன் காத்திடல் வேண்டும்.

போரில் மாண்டவர் இடத்தை நிரப்பிட மற்றவர்கள் எழுச்சி கொள்ள வேண்டும்.

17 இறையனார் களவியல் உரை. நூற்பா. 1

18 பாரதியார் கருதுவது : திணைச்சொல் முதலில் ஒழுக்கத்துக்கு இயற்பெயர். குறிஞ்சி முதலிய திணைப்பெயர்களும் நிரலே புணர்வு முதலிய ஒழுக்கம் பொருட்டாம். அவை அவ்வத்திணைக்குரிய நிலம். குறிப்பது. ஆகுபெயர் நிலையில் அவற்றின் முதற்பொருள் ஒழுக்க வகையே. இப்பழந்தமிழ் மரபே தொல்காப்பியர் சொல்வது. அகத்திணை இயல் உரை. ப. 3

19 கம்பன், வாலி வதைப்படலம். பா. எண் 61.

20 வான்மீகி இராமாயணம் தமிழ் மொழிபெயர்ப்பு : அயோத்தியா காண்டம் 93 ஆம் சருக்கம்.

21 தொல். அகத். 5, 16.

22 3, 24 ஆம் நூற்பா உரையாலும், பாச்சான்று காட்டி அவர் எழுதும் திணைக்குறிப்பாலும் (ப. 26, 27) இளம். கருதுவன புலனும். 'புணர்தல் பொருண்மை யேனும், திணை நிலைப் பெயரால் மருதமாயிற்று; நிலத்தான் நெய்தலாயிற்று; பாலைப் பிரிவு நிமித்தமாயினும் நிலத்தான் நெய்தலாயிற்று' என அவர் ஆங்காங்கே குறிப்பன காண்க.

23 குளோறியா சுந்தரமதி, இல. சங்க இலக்கியம், மருதம் ப. 107

24 பாரதி, அகத். ப. 39

25 பாரதியே திணை மயக்குறுதல் நூற்பாவை உரிப் பொருளிற்கு உரியதெனப் பொருளுரைப்பர்; பின்னர்த் தம்முள் முரணி, ஈண்டு அந்நூற்பா முதற்பொருள் மயக்க நூற்பா என்பர். ப. 37, 45

26 தொல். சொல். நூற்பா, 28, 29, 30 ஆகியன காண்க.

27 அருணாசலம் பிள்ளை வித்துவான் மு. இந்நூற்பா இடம் பெயர்ந்தது என்பர். அகத். வளம். ப. 164

28 வடநூலார், பெரும் பொழுதுகளை முறையே வசந்த ருது, கிரீஷ் ருது, சரத்ருது, வர்ஷ் ருது, ஹேமந்த, சிசிர ருது என்று ஆறுக்குவர்.

29 மதுரைக் காஞ்சி 662. 663, 664, 686, மலைபடுகடாம் 171-173, 195, 196, 257, 446, 458, முருகாற்றுப்படை 73-76; அகம். 42, 308; குறுந்தொகை 157, 224, நற்றிணை 48, 60. இவற்றிலிருந்து காட்டிச் சிவஞான முனிவர் கருத்தை மறுப்பர் பாரதி, அகத். 17 - 22.

30 வைகறை, விடியல் என்ற இரு பொழுதுகளையும் உட்கொண்டு early morning. morning, என்றும், ஏற்பாட்டினை the time of sun setting என்றும் ஆங்கிலேயர் வழங்குதல் ஈண்டு இணைத்து எண்ணத் தக்கன.

31 திருக்குறள் 1227

32 சிலப்பதிகாரம், கானல் வரி 41.

33 அகம். 210, நற்றிணை 388

34 குறுந்தொகை 304; நற்றிணை 219, 239

35 தொல். மரபியல் 17, 37, 42, 44

36 பாரதி. அகத். ப. 63

37 மே. நூ. ப. 77

38 பாஸ்கல் கிஸ்பர்ட், சமூக இயலின் அடிப்படைக் கோட்பாடுகள், தமிழ் மொழி பெயர்ப்பு, ப. 470.

39 Three contracts dated in the ninth year of Nabonidus show how a security, which the creditor himself had used to guarantee another loan, was in practice redeemed, Nabutultabshi-lisher had borrowed 35 shokels of silver from the lady Bunanutum, and had given her as security as a female slave. Bunanutum and her husband, being in want of their money, had asked Ina-Esagil-belit for 30 shokels and handed the slave ever to him. Nabu-tultabshi-lisher sold three servants, including the pledged slave-woman, to Iddia Marduk for 2mina 50 shokels on the 11th of Adar, Iddia Marduk directed his bankar to pay Bunanutum 35 shokels, who there upon released the slave by repaying Ina-Esagil-belit. On the 15th of Adar, Nabutultabshi-lisher received the balance of the purchase money but gave for the whole a sum as his agent restored to him the tablet for the loan granted by the lady Bunanutum. Deloperte. Mesopotamia The Babylonian and Assyrian Civilization, Reprint. 1970. P. 130.

40 As in Babylonia, the family was held in such high esteem in Assyria that it was customary to treat a family of slaves as an unitary whole, and not an aggregate of individuals If a slave were to be sold, he would not be alienated by him-

-self but the bargain would also cover at the same time hi wife, his boys and girls, his widowed mother, and young brother, if the latter were still in tutolage in the eyes of the law. In 684 B. C. Ululai purchased for six minae of silver from Nabu-eribe the slave, "Kandalanu, his three sons, his wife, his two daughters, his brother, and his brother's three Children'. Kikinanu sold a man and his mother to Shumma-ilani. Iakar-she was handed over with his daughter. We find mentioned together in one and the same deed a man,his wife and daughter;a man wife and their three sons; two couples; and an isolated slave.'

Ibid. P. 270.

41 நல்ல பெருமாள், சிந்தனை வகுத்தவழி, ப. 24

42 மனுஸ்மருதி, எட்டாம் பகுதி, 300, 301

43 அர்த்த சாத்திரம், அதிகாரம் 25, அத்தியாயம். 45.

44 இராமகிருஷ்ணன், எஸ். இந்தியப் பண்பாடும் தமிழரும் ப. 141.

45 ஏவல் மரபின் (24) என்ற நூற்பா உரை: திருவள்ளுவர் காலத்து அடிமை நிலை இருந்தது. இதனை அவர்தம் 'மடிமை குடிமைக்கண் தங்கின் தன் ஒன்னுர்க்கு அடிமை புகுத்தி விடும்' (603) என்பதனாலும், 'எற்றிற்குரியர் கயவர் ஒன்றுற்றக் கால் விற்றற்குரியர் விரைந்து' (1080) என்பதனாலும் அறியலாம். இளங்கோவும் தம் சிலப்பதிகாரக் கொலைக்களக்காதையில், குற்றேவியோர், அடியோர் ஆகியோரைக் குறிப்பர்.

46 இளம்பூரணர், சேனவரையர், கல்லாடனர், தெய்வச்சிலையார் ஆகிய அனைவரும் ஆயர், வேட்டுவரைச் சேர்த்தே குறித் தனர்.

47 நச்சர். ஓரிரு பாக்களைக் காட்டி அந்தணர் விளிப்பாக்க முயலுவர். அவர்தம் முயற்சி, வலிந்து செய்வது என்பது அவர்தம் உரைப்போக்கால் தெள்ளிதின் உணரலாம்.

48 பாரதி, அகத். ப. 63, 68; வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை ப. 240, இவ்விருவரும் குறித்தலைப் போல 'ஆயர்' என்ற சொல், முல்லை நில அடிப்படையில் தோன்றினதாகத் தெரிய வில்லை. வெற்பு — வெற்பன் என்பது போல, ஆயம் — ஆயர் என அமையாமை காண்க. குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற பிற நிலப் பெயர்கள் அடிப்படையிலும் நேராக, 'குறிஞ்சியன், மருதன், நெய்தன், பாலையன் எனச் சொற்கள் தோன்றுமை எண்ணத் தக்கது. இதற்குரிய காரணம் யாது? மலை, வயல், கடல், காடு, மணல் என்பனவே மக்கள் வழக்காக

அமைந்து, குறிஞ்சி முதலான பெயரீடுகள் புலவர்தம் செய்யுள் வழக்காக மட்டும் அமைந்தன போலும்.

49 Out of four hundred poems in Kuruntokai 64 for men and 334 for women. Refer : Kuruntokai-English Translation 1976. Chapt. VI. Regions and speakers by M. Shunmugam Pillai and David E. Ludden.

50 இறையனார் களவியல் உரை. நூற்பா [1]: டாக்டர் வ. சுப. மாணிக்கம். தமிழ்க் காதல் ப. 47

51 பாலை — தனி மணல் வெளி அன்று; நிலைப்பாலையும் அன்று. எனினும், தொல்காப்பியர் ஒட்டகம் பற்றி மரபியலில் (18, 53) குறிப்பர். ஒட்டகம் குறிஞ்சி நில, முல்லை நில விலங்கு அன்று. நிலைத்த பாலைக்கே உரிய விலங்கு. அத்தகு விலங்கைத் தொல்காப்பியர் குறித்தமை ஆய்விற் குரியது.

52 தொல். அகத். 44, பொருளியல் 28

53 பார்க்க : பின்னிணைப்பு : அகத்திணை இலக்கணத் தொகை; பிரிவு என்ற தலைப்பு

54 மறக்கூறு தவிர்ந்த காஞ்சி முதலான புறக் கூறுகள் இருப் பினும் அவை மிகக் குறைந்தவையே. மாந்தர், மறக்குணத் தினின்று அறக்குணத்தை நோக்கி வந்து கொண்டிருந்ததை இது காட்டும். சங்க காலத்தில் 'சான்றோன்' என்ற சொல் மறத்தால் நிறைவு பெற்றவனைக் குறித்தது. திருவள்ளுவர் காலத்தில் குணத்தால் நிறைவு பெற்றவனை அச்சொல் குறித்தமை இதற்குச் சான்று.

55 "At that date and for long afterwards soldiers were incapable of contracting a legal marriage during the entire extent of their service. Even marriages which were already in existence when the men enlisted were broken off. This ban covered all ranks up to the conturionatey Equestrian.. ... to their provinces.

—Watson, G. R. The Roman soldiers P. 133, 134.

56 தேரும் யானையும் குதிரையும் பிறவும்
ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப
(தொல். பொருளியல் 17)

விளைவயின் பிரிந்தோள் மீண்டு வருங்காலை
இடைச்சுர மருங்கின் தவிர்தல் இல்லை
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்ளியல் கலிமா உடைமையான.
(தொல். கற்பியல் 53)

57 'ஐந்திணையும், என்பதன்கண் உள்ள உண்மையை எச்ச உம்மையாக்கி, ஏனைய கைக்கிளை, பெருந்திணைகளுக்கும் கூட்டி உரைப்பர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் (தமிழ்க்காதல் ப. 305) அது சரியன்று. அதனை முற்றும்மையாகவே கொள்ளுதல் வேண்டும்

58 அமெரிக்கப் போர்வீரர் தென்வியட்நாமியப் பெண்களிடம் நடந்து கொண்ட அடாச் செயல்களும், பாகித்தானிய மறவர், பங்களதேசப் பெண்டிரிடம் நடந்து கொண்ட அடா ஒழுக்கங்களும் ஈண்டு இணைத்து எண்ணத் தக்கவை.

59 புலவர் குழந்தை, தம் பொருளதிகார உரையில், புறத்திணை இயலை ஈற்று இயலாகப் போற்றுவர்.

60 வித்துவான் மு. அருணை. ப. 195 அகத்திணை இயல் உரை வளம்.

61 மே. நூ. ப. 207, 208

62 ஒன்றுத் தமரினும்...என்ற நூற்பா (44); அடி : 3, 4,

63 சிலப்பதிகாரக் கோசிகமாணி ஒருபுடை ஒப்புமையாக இங்கு எண்ணத் தக்கவன்

64 இளம்பூரணர். பொருள். 17

65 வித்துவான் மு. அருணை. அகத்திணை இயல் உரைவளம். ப. 207, 208

66 குறுந்தொகை 262

67 களவுத்திணைப் பாக்கள் 882; அவற்றுள் 122 பாக்கள் உடன் போக்குத் துறையின. டாக்டர் வ. சுப. மாணிக்கம், தமிழ்க் காதல் ப. 86

68 'கலியினும் ஐங்குறு நூற்றினும் பாலைக் கண்ணே உடன் போக்கு நிகழ்ந்த செய்யுட்களைக் கோத்தார் என்று உணர்க.' நச்சர். உரை அகத். 15.

69 காதல் உன் பெருங் கணவனை அஞ்சி, அக்கணிவாய்ச் சீதை தந்தை, உன் தாதையைத் தெறுகிலன்; இராமன் மாதுலன் அவன்; நுந்தைக்கு வாழ்வு இனி உண்டோ? பேதை! உன் துணையார் உளர் பழிபடப் பிறந்தார். (கம்பன். மந்தரை சூழ்ச்சிப் படலம். 81)

70 இராமகிருஷ்ணன், எஸ். இ. ப. தமிழரும் ப. 294.

71 குறுந்தொகை 44

72 Thurston. Castes. P. 39

73 Thurston. Ethno. P. 64

74 தொல். கற்பியல் 2.

75 It has already been remarked that, when woman had thus become secluded, their sphere of operations limited, their character weakened, and their education neglected, it became customary to look upon them as naturally and inevitably inferior to men, both intellectually and morally. This was not only the opinion of the vulgar, it was held by Philosophers like Aristotle Experience and observations of women as they were led him to take for granted that woman was 'in general an inferior being''and it was only an unusually and audiaciously speculative Plato who could suggest that the difference was due rather to circumstances that to nature. Yet even in Plato the special excellence of a woman is elsewhere stated to be "to keep house well and obey her husband''. It would be easy to collect numerous utterance of poets, philosophers, and orators to support, this text, and also that of Ajax in Sophocles: "Womant women are adorned by silence."

Theoritically the unmarried girl must not be seen outside the middle deer, which separate the women's quarters from these of the more open house, Tucker, T.G. Life in Ancient Athens. 1930, p. 101-103.

76 Sex in Greek; Divorce; Divorce seems to have been very frequent and to have depended exclusively on the humour of the husband.

The inselvent debtor had more over the right of substituting for himself his wife or children (code 117) for a maximum period of 3 years. or male or female slave (code 118, 119) subject to the reservation that a female slave by whom he had had children might be reduemed.

In laying down the rules for succession and for the division of goods the Babylonian legislators at all periods tended to give great cohesion to the family; the rights of individuals were determined in such a way that the family group should be kept together as long as possible. Never

-theless no family names were current, but about the seventh century we see in private documents the name of an ancester begin to appear after whom all his descendants are called-Egibi, Murashu. Before that epoch persons of free status were designated by their own name and that of their father "So and so, some of So and So". These names among the ancient Sumerians as among the Akkadians were a pious formula praising the deity or invoking his pretection P. 88-89.

From the reign of Nabondus there exists evidence of the way in which a child sometimes got its name. On the testimony of a certain Romua guaranteed by Nadin shum, the slave woman, Luballat had "given the name Taddanu to the child she brought in to the world". Other children had not yet received a name, even when three or four months old. P. 89 - Mesopotamia, The History of Civilization. P. 75-79, 85-89, 129-132.

77 The husband had certain rights ever his wife. He could reduce her to servitude which a creditor, this very ancient custom was destined to persist and still existed under the new empire in the days of Nabonidus.

Hamurabi's law limited such servitude to a maximum term of 3 years, after which the woman had to be set at liberty.

According to Sumerian law a wife who refused her conjugal duty was tobe thrown in to the water.

Any property, real or personal, might be pledged-wife' children, slaves. fields, houses, credits, house hold utensils etc.,

Female slaves given as security for money borrowed P. 130

The insolvent debtor had moreover the right of substituting for himself his wife or children (code 117) for a maximum period of 3 years. or male or female slave (code 118, 119) subject to the reservation that a female slave by whom he had had children might be redeemed. P. 132

Delaperte. L. Mesopotamia

78 Marriage among people of free status in Assyria was modified monogamy. But the family there constituted a less firmly organised cell.

A young girl was under the absolute control of her father and could not marry without his consent, even though she were in service with someone as the surety for a debt.

The father's right was such that a girl might be given in marriage to a man who had forcibly outraged her, if such were the father's pleasure.

Free Birth :

A married woman of free birth was not allowed to go out into the streets without covering her head with a veil, at least at a certain period in the second millennium. Her daughters also were head dresses prescribed by custom; by this means they were distinguished from temple prostitutes, harlets, and slaves. A concubine 'esittu' was not entitled to wear the veil; if her husband wished to raise her to the position of wife, he had to veil her in the presence of five or six witnesses and declare, "this is my wife!" Ibid. 281-88.

79 Chou Hsiang-Juang. The History of Chinese Culture. P. 25, 26.

80 முத்துவீரியம் (கி.பி. 19 ஆம் நூற்) வேளாளரைச் சூத்திரர் என்றே குறிப்பிடும். நூற்பா எண் 818.

81 வடசொல் கிளவி வட எழுத்து ஓரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே.
தொல். சொல். எச்சவியல் 5

82 தொல். சுற்பியல் 47, 48, 49.

83 அரசர்க்கே கல்வி தலைமை வாய்ந்தது. திருவள்ளுவர் 'கல்வி' என்ற அதிகாரத்தை அரசியலில் அமைத்தார். கல்வி அரசர்க்கே உரியது என்ற கருத்து பழஞ் சீனத்தில் நிலவியது. பண்டைத் தமிழிலக்கியத்தில் கல்வியை வற்புறுத்திப் பேசுப வனும் ஒரு மன்னனாகவே உள்ளான் (புறம். 183)

84 வித்துவான் மு. அருணை. அகத்திணை இயல் உரை வளம் ப. 312

85 சிலப்பதிகாரம், காதை 15, அடிகள் 157, 158, மணிமேகலை, மலர்வனம் புக்க காதை. அடி 57

86 சிலப்பதிகாரம் : வஞ்சினமாலை, அடி 16 — 17.

87 பெரியபுராணம்: காரைக்கால் அம்மையார் புராணம்

88 காண்க : அறவாணன். செ.ப.பி.எச்.டி. ஆய்வு

89 கலித்தொகை, பாலை 4

90 நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம் நூ, 3, 4, 5.

91 இறையனார் அகப்பொருள் உரை நூ. 2, 36, 37

92 பாரதி, அகத். ப. 180

93 அறத்தாறு இது என வெள்ளைக்(கு) இழிபு; (அகவற்கு) இழிபு குறித்தாங்கு உரைப்பின் முதுக்குறை — யாப்பருங்கலக் காரிகை 15

94 அகத்தியலிங்கம், ச., பதிப்பு — சக்திவேல், சு. பழங்குடி மக்கள் ப. 47, 48

95 பிலோ இருதயநாத், பழங்குடிகள், ப. 111

96 Samresh Bandyopadhyay, Foreign Accounts of Marriage in Ancient India. (F.A.M.I.) P. 25.

97 Vaikhanasa (vi. 12) who lays down that a Brahmana should marry a Brahmana girl who is a nagnika or gauri, defines magnike as 'a girl of ever eight years but less than ten and gauri' as one who is between ten and twelve and has not had menstruction. According to Parasara, a girl is called Gauri when she is eight, rohini when nine Kanya when ten, and Jajeesata beyond ten, Kaspa, however describes a girl of seven as Gauri, a girl of ten as Kanyaka and a girl of twelve as Kumari. Ibid. P. 28-29.

98 Ibid. P. 30.

99 வான்மீகி இராமாயணம் -47 - 10 - 11; 'மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் குலக்கொம்பர் ஈகைவான் கொடி அன்னாள் ஈராறு ஆண்டு அகவையான்'
-சிலம்பு, மங்கல வாழ்த்து 23, 24

100 History of Chinese Culture P. 26.

101 Sex in Greece. Masturbation. P. 313-315 and chapter on tribalism. P. 316-328.

102 மாணிக்கம், டாக்டர் வ. சுப, தமிழ்க் காதல், ப. 225

103 தொல். அகத். 38

104. கைக்கிளை பெருந்திணைக்குரிய கவிதைகள்: இலக்கண இலக்கிய நூல் அனைத்தும் அறம் பொருள் இன்ப வீட்டு

நோக்கின: தொல்காப்பியமும் அன்ன நோக்கினது. இளம் பூரணரும், நச்சினார்க்கினியரும் இலக்கண வழியும் நான்கும் நாட்டப்படும் என்ற கருத்தினர்; தம் கருத்தினைத் தொல் காப்பிய உரை வழி விரவுவர்.

தொல்காப்பியர் கருத்தை அறிய வாய்ப்பில்லை. எனினும் கைக்கிளையை முதலில் கூறியவர், உள்ளே விளக்கும் போது, ஐந்திணைக்குப் பின்னே ஈற்றில் தான் கைக்கிளையை விளக்கினர். ஐந்திணையை 'இன்பமும் பொருளும் அறனும் என்றங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்று கூறினர். எனவே அவர்க்கும் நூல் நோக்கும் இருந்தது எனத் தெரிகிறது.

கைக்கிளை, பெருந்திணை சமுதாய நோக்கில் இருந்திருக்க லாம். ஆனால் வேண்டாதன. எனவே அவர் விரிக்காது விட்டனர் போலும். சங்க இலக்கியத் தொகுப்புகளும் கலித் தொகை புறநானூறு தவிர ஏனைய நூல்களுள்ளும் எங்கும், கைக்கிளை பெருந்திணைப் பாடல்கள் இல்லை. கலித்தொகையில் 150 பாக்கள் உள. அவற்றுள் கைக்கிளைக்குரியன நான்கே. (56, 57, 58, 109). பெருந்திணைக்குரியன பத்தே (138, 139 140, 141, 142 - 147). புறநானூற்றில் கைக்கிளைக்குரியன மூன்று (83, 84, 85). பெருந்திணைக்குரியன ஐந்து (143 - 147) அப்பெருந்திணைப் பாக்களும், பரத்தை வழி நிலைத்துவிட்ட பேகனை மீட்கும் நோக்கின. புறநானூற்றில் இடம் பெற்றுள்ள கைக்கிளைப் பாடல்கள் முறையே, புறத்தில் இடம் பெற வேண்டாதன.

கலித்தொகையுள் இடம் பெற்றுள்ள பாக்கள் உண் மையில் அத்திணைக்குரியனவா என்பது ஆய்விற்குரியது. கலித் தொகை 56 - 58, 109, பாக்களை ஆழ்ந்து பயிலின், அவை சிறு பெண் மாட்டு இளமகன் வம்பு செய்வதைக் காட்டவில்லை. உண்மையில் அவள் காமம் சாலாப்பெண்ணே அல்லள். மங்கைப் பருவம் எய்திய பொலிவினள். இஃது அப்பாடல் களால் நன்கு துலக்கமாம்:

'பெருத்த நின் இளமுலை' (கலி. 56)

'சுதவவால் தக்கதோ காழ்கொண்ட இளமுலை' (கலி. 57)
'வார் உறுவணர் முப்பால், வணங்கு இரை நெடுமென் தோள் பேர் எழில் மலர் உண்கண், பிணை எழில்மான் நோக்கு' (கலி. 58)
'புண் இல்லார் புண் ஆக நோக்கும்; முழுமெய்யும் கண்ணளோ ஆயர் மகள்' (கலி. 109)

இப்பாடல்கள் பேதைப் பெண்ணின், குழந்தைச் செவ்வி யையா காட்டுகின்றன?

பெருந்திணைக்குக் காட்டப்பட்டவற்றுள் 142, 3, 4, 5, 6, 7 என்ற ஆறு பாக்கள் பெண்டிர் மிகுகாமம் பேசும் நெய்தற் கலிப்பாக்கள். அப்பாக்கள் தலைவனை நினைந்து இரங்குகின்றன. இரங்கல் நெய்தலின் உரிப்பொருள். நெய்தற் பா, இரங்காமல் என் செய்யும்? நச்சினார்க்கினியர் காட்டியன அனைத்தையும், நெய்தற்குரிய இரங்கலாகவே அமைத்துக் கொள்ள இயலும். வறிதே பெண்பாற் கூற்று உண்டு என்று வலித்து காட்ட வேண்டுவது இன்று.

ஏறிய மடல்திறம் ஆடவர்க்கே உரியது என்பதால்அதனைத் தொடர்ந்து வரும் பிறவும் ஆடவர்க்கு உரியன என்று ஊகிப்பது முறை. எனில் 142 - 147 ஆம் கலிப்பாக்கள் பெண்பால் இரங்கும் பாக்கள். அவற்றை நெய்தலாக்கிடலே நன்று.

அங்ஙனம் எனில் மடல் ஏற்றத்திற்கு மட்டும் பாட்டா? மற்றவற்றிற்கு வேண்டாமா என வினவுதல் கூடும். நச்சர் கருத்துப்படியே 138 - 141 என்ற எண்ணுடையவை ஏறிய மடல் திறப் பாக்கள் 142 - 147 என்ற எண்ணுடையவை மிகு காமப்பாக்கள். எனில் ஏனைய இளமை தீர் திறத்திற்குப் பாட்டும் மிக்க காமத்து மிடலுக்குப் பாட்டும் எங்கே உள? இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் காட்டிய பறழ் மகன் (கலி. மருதம் 29) பாட்டும், இளமை தீர் திறத்திற்கு,எங்ஙனம் பொருந்திய காட்டு ஆகும்? 'கொக்குரித்தன்ன' என வரும் பா உவமை, தோல் சுருங்குதலைக் காட்டும் என்பர் நச்சர். அது சரி அன்று. அப்பாடலில் வருவோன் கூன் இளைஞன். அவனைக் காட்டவே கொக்கு உவமை கூறப்பட்டது. எனவே அப்பாடலைப் பெருந்திணைச் சான்றாகக் கொள்ளற்கு இல்லை. கலித்தொகை 138 - 41 என்ற எண்ணுடைய பாக்களைத் தவிர ஏனையவை பொருந்தா. இவையும் மூவாயிரம் சங்கப் பாக்களில் மிகச் சிறிய எண்ணிக்கை. நச்சர். தொல் காப்பியம், கலித்தொகை என்ற இரண்டிற்கும் உரை எழுதினர். தொல்காப்பிய நூலைச் சங்க இலக்கியப் பார்வையில் பார்ப்பது அவர் முறை. இரண்டிற்கும் முரண் வராமல் உரை எழுதுவது அவர் பாங்கு. கைக்கிளை பெருந்திணைக்குச் சான்றை நச்சர். வேண்டுமென்றே தேடிக் காட்டினர் என்றே கூறல் தகும். கைக்கிளை, பெருந்திணை ஒழுக்கங்கள் வேண்டாதன. சமூகத்திற்குத் தேவை இல்லாதன. எனவே அப்பாடல்களைப் பாடுவது ஊக்குவிக்கப் படவில்லை. அதனாலேயே இலக்கண இலக்கியத்தில் அவை பின்னிடத்தை அடைந்தன போலும்.

105 புறப்பொருள் வெண்பாமாலை (பு. வெ.) பா. 31

106 மாணிக்கம், டாக்டர். வ. சுப. தமிழ்க் காதல், ப. 250 - 257

107 சிவக சிந்தாமணி, செய்யுள் 686

108 மணிமேகலை, சுதமதியின் வரலாறு, மலர்வனம் புக்க காதை, 173 - 190

109 தொல். களவியல், 14, 15.

110 இராகவையங்கார், மு. தொல். பொருள்: ஆராய்ச்சி, ப. 9 - 11.

111 Foreign Accounts of Marriage in Ancient India. P. 40

112 இளம்பூரணர், தொல். பொருள். நூ. 25

113 மே. நூ. நூற்பா 26

114 பாரதி, அகத். ப. 179, 180, டாக்டர் வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல் ப. 226, 411

115 வித்தியானந்தன், டாக்டர்: தமிழர் சால்பு, ப, 91 - 118

116 பதிற்றுப்பத்து பதிகம் 5, அடி 16 - 17

117 கைலாசபதி, க. ஒப்பியல் இலக்கியம், ப. 158

118 நாகசாமி, இரா. யாவரும் கேளிர், ப. 105, 106

119 The author has given an exhaustive analysis of this book in a separate essay (H. Licht; Drei erotiche Kapital aus don Tischgeasprachen des Athenaies, 1909) so adds only a few details here. After drawing attention to the fact that an old man should not we young woman, there follows a long list of the miseries and sorrows which have been brought into the world through women. They have been the cause of many wars, from the Trojan to that which raged for ten years round the walls of the city of Cirrha for the sake of some girls who had been carried off. Whole families have been murdered for the sake of women and discerd has entered many communities, which formerly were flourishing, through their jealousy and passion. The power of love is quite unconquerable, a truth which is supported by some beautiful quotations from Euripides and Pindar.
Hans Licht, Sexual Life in Ancient Greece. P. 286.

120 Trapped in a holecaust, white-clad Carthaginians in 146 B.C. fight to death against Romans "Carthage. must be destroyed" Cate the Elder had repeatedly urged his follow senators. Rather than surrender, the wife of the city's ruler throw herself into the flaming Temple of Eshmun.

Roman sold survivers into slavery and razed the rival city. The Phoeniciams Sea lords of Antiguity. National Geographic - August 1974 P. 181.

121 The free living women were generally ex-slaves, freed woman at least they were cortainly not Roman by birth. -Sex in Rome. P. 60.

122 Religious prostitution already existed in the Babylonian cult of Mylitta and in the similar service of Aphrodite of Bybles, a city in Phoenicis, the modern Jobeil. Herodotus (i. 195) mentions the following as being, in his opinions, the most intelligent of the Babylonian customs, and remarks that he has heard that it was also practised among the Eneti in Illyria. Once a year, he says in every village the numerous marriageable young women were assmebled together at an appointed, place round which the men soon collected. A herald then offered each one for sale, and first of all the most beautiful among them. - Hans Licht, Sexual Life in Ancient Greece. P. 369.

123 பிள்ளை, கே. கே. தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், ப. 321, 322 சுந்தரர், திருவாரூர் கோயில் தேவரடியாராகிய பரவை நாச்சியை மணந்ததை நினைக.

124 பரத்தை என்பது புறப்பெண்டிர் மாட்டுப் பிரியும் பிரிவு என்றவாறு. பரம் என்பது புறம். அஃது ஆரியச் சொல். - இறையனர் களவியல் உரை, நூ. 35

125 Thurston, Ethno. P. 441, 463.

126 அறவாணன், க. ப. பதிப்பு, அவிநயம். ப. 63

127 இறையனர் களவியல் உரை, ப. 37

128 நம்பி அகப்பொருள் விளக்கம், ஒழிபியல் 242

129 மாணிக்கம், டாக்டர் வ. சுப. தமிழ்க்காதல் ப. 39

130 பாரதி, அகத். ப. 77

131 'அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என எழு பெற்றித்தாகும்' என்று நூற்பிப்பர் நாற்கவிராச நம்பி, நூ. 2.

132 'சொல் எதிர் மொழிதல் - அருமைத்து ஆகலின்
அல்ல கூற்றுமொழி அவன் வயினான' தொல் - களவியல் 20

133 Of these (Kali. and Paripadal) the former is earlier compared with latter which refers to an open conflict the other. T.P. Meenakshisundaram Tamil bird's. eye view 1976. P. 9.

134 வையாபுரிப்பிள்ளை, எஸ். தமிழின் மறுமலர்ச்சி ப. 10 1976 P. 9

135 இளையபெருமாள், மா. செந்தமிழ். மதுரை தமிழ்ச்சங்க இதழ் 1966.

136 சண்முகதாஸ், அ. நாடக வழக்கும் உலகியல் வழக்கும். இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், 1968 ப. 192

137 அறவாணன், க. ப. கவிதையின் உயிர் உள்ளம் உடல், ப. 79, 80

138 அகம். 1

புறத்திணை இயல்
உரை வேறுபாடுகள்

7

புறத்திணை இயல்
உரை வேறுபாடுகள்

போர்க்காரணங்கள்

தொல்காப்பியர் காட்டும் மக்கள் தொகுதி, குடும்ப நிலையைத் தாண்டி, சமூக நிலையைக் கடந்து அரசு நிலையை எய்தி இருந்தது.[1] அவர் கால அரசு, தமிழக அளவில் மூன்றுகப் பிரிந்தது.[2] அம் மூன்றினிடையே போர்களும் பூசல்களும் நிகழ்ந்தன. பழைய அரசுகள் எதுவாயினும் அவற்றினிடையே, போர்கள் நடந்தன என்பது வரலாற்றுண்மை. கிரேக்க, உரோம, எகிப்திய பண்டை வரலாறுகள் இதனை உறுதி செய்கின்றன.[3] போர்கள் ஏன் நிகழ்தல் வேண்டும் என்பது அடிப்படை வினா.[4] சில ஆண்டு களுக்கு முன்பு, பால் உணர்வே அனைத்திற்கும் அடித்தளன் என்ற பிராய்டின் கொள்கை விடையாகத் தரப்பட்டது. இவ்விடை சரி என்பது போல 'மகட்பாற் காஞ்சி' — போன்ற புறத்திணைத் துறைகள் அமைந்துள்ளன. எனினும், இது மட்டுமே போர் அனைத்திற்கும் பொது மூலம் என்பதற்கில்லை. நீட்சேயின் (Nietzsche) கருத்தான 'ஆதிக்கம் செலுத்தும் விருப்பம்' (Will Zur Machi), பெர்க்சானின் (Bergson) கருத்தான 'வாழ்க்கையின் முதன்மை ஆர்வங்கள் (Clan Vital) போன்றனவும் காரணம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த எம்பொடோகிள்சு (Empodocles) என்ற கிரேக்க அறிஞர்,

> அன்பும், வெறுப்பும், கவர்ச்சியும், விலக்கலுந்தான் சமூகம் உட்பட அண்டம் முழுவதிலும் காணப்படுகின்ற மூலக் கூறுகள். போர்தான் யாவற்றிற்கும் தந்தை, எல்லோருக்கும் அரசன்...போராட்டத்தின் மூலந்தான் எல்லாப் பொருள்களும் உயிர்த் தன்மை அடை கின்றன'

என்பர். இவருக்கு ஒரு நூற்றாண்டிற்குப்பின் வாழ்ந்த எராக்கிலிடசு (Heraclitus) டார்வின், கபென்சர், ஆகிய கூர்தலறக் கொள்கை யாளரால் 'வாழ்க்கைப் போராட்டத்தில் தக்கவை பிழைத்தல் (Survival of the fittest) என்ற கருத்து பரப்பப் பட்டது. வல்லந்தப் பூசல், போர் ஆகியவற்றின் ஆக்கும் ஆற்றலை சோரல். (Sorel) நன்கு வற்புறுத்துவர். பிறகு அக் கருத்தையே நீட்சே (Nietzsche). ஏ. சி. கெல்லர் (A. G. Keller) போன்றோர் வற்புறுத் தினர். இவர்கள், பூசல், சமூகத்திற்குத் தேவையான ஒன்று எனக் கூறினர். அதனுடன் பூசலும், போரும் சமூக முன்னேற் றத்திற்கு உதவுவன என்றும் கருதினர். எங்ஙனமெனில், தாழ்ந்த திறமையற்ற மனிதர்கள் ஒதுக்கப்பட்டுத் திறமையான உயர்ந்த வர்களைத் தங்கவைக்கும் ஓர் இயல்பான செயல் முறையாக அதனை எண்ணினர்.[5] கி. மு. மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த சாங் — ட்சே என்ற சீன அறிஞர், 'போர் வேண்டும்' என்ற கொள்கை யினர்.[6] இவற்றை நோக்க, அன்றைய அறிஞர், போரை எத்துணை வற்புறுத்தினர் என்பது தெளிவாகும். தமிழகத்திலும் இத்தகு போக்கே காணப்பட்டது. தொல்காப்பியமும், சங்க இலக்கியங் களும் இச்செய்தியை உறுதிப்படுத்தும். தமிழர் வாழ்வின் இரு கண்களில் ஒன்று புறத்திணை என்பது தொல்காப்பியத்தால் துலக்க முறும். தமிழர் போர் என்று கேட்டால் அதனை விரும்பி ஆர்ப் பரிக்கும் சிவந்த கண்ணினர்.[7] ஊரிலுள்ள பொதுமன்றத்தில் தொங்கும் முழவு, காற்றுப்பட்டு ஒலி எழுப்ப, அதனைப் போர்ப் பறை ஒலி என மகிழ்வர்.[8] வீரர், போர் என்று கேட்டவுடன் கிளர்ந்தெழுவர். பறவைகள் தீ நிமித்தம் உணர்ந்த மன்னன் போரைத் தவிர்ப்பான். வந்த போர் போனதே என்று வீரர் நொந்து போவர். மனம் நைந்து, தம்முடைய பூரித்த தோள்களைத் தட்டி ஒருவரோடொருவர் பொருது மடிய வேண்டும் என்னும் மறப்பண்பு கொண்டு நிற்பர்[9] மன்னர், தம் நகரில் இருத்தலைவிட, போர்ப் பாசறையின் கண்ணே இருத்தலை மிக விழைவர்.[10] போர்க் காதல் இருத்தலால், அரசர், இரவிலும் உறங்கார்.[11] விழுப்புண் பெறுத நாட்களை எல்லாம் வீணுகி விட்ட நாட்கள் என்று கருதுவர்.[12]

உளஇயல் காரணம்

மாந்தன் அடிப்படையில் விலங்கே. ஆனால் அவன் ஒரு சமூக விலங்கு. மனிதன், ஏனைய மனிதர்களுடன் ஓநாய் போலப் பழகினன். (Homo Homini Iupus)[13] விலங்கினின்று வளர்ந்த மாந்த உருவத்தை அவன் பெற்றிருந்த போதும் அவனிடமுள்ள விலங்குணர்வுகள் மடிந்து விடுவதில்லை. அவ்வுணர்வுகளின் வேகத் தைத் தணிக்கவே பலவேறு விளையாட்டுகளைக் கண்டறிந்தான்.

மாந்தர் தம்முள் மற்போர் புரிந்தனர்; விற்போர், வாட்போர் செய்தனர்; சேவற்கோழி, ஆட்டுக்கிடா, ஏறு, காடை முதலிய வற்றைப் பொரச் செய்து வெற்றி தோல்வி கண்டனர்.[14] வட்டாலும் வல்லாலும், சொல்லாலும் தம்முள் முரணினர்.[15] இத்தகு விளையாட்டுகளைத் தமிழகத்திலும் கிரேக்க உரோம நாடு களிலும் மிகப் பலவாகக் காணலாம். விளையாட்டுகள், ஒரு வகை யில், மாந்த மனத்தில் பொங்கி வழியும் போருணர்ச்சிகளைத் தணிப் பதற்கே தோன்றின. இவை போதிய அளவு போருணர்ச்சியைத் தணிக்காத போது, போருணர்ச்சி பொங்கும்.

வீர விருப்பம்

தம் மற ஆற்றலை வெளிப்படுத்தி உலகினர்க்குக் காட்ட வேண்டும் என்ற விழைவும் போருக்குக் ஒரு காரணம். போர்க் களம், தனிமாந்த விழைவிற்கு இடனாக அமைந்தது. வீர ஊழிக் காலத்து (Heroic Age) மாந்தர் இத்தகையினர். யயாதி, கார்த்த வீர அர்ச்சுனன் ஆகியோர், 'இரதி' என்ற வீரப்பட்டத்தை விரும்பிப் பொருதனர். பரசுராமன், தன் வீரச் செயல்களை விளம்பரப் படுத்த விழைந்தனன்.[16] பன்னிருபடலம், புறப் பொருள் வெண்பா மாலை நூலாசிரியரால், காட்டப்பெறும் தன்னுறு தொழில், வீர விருப்பின் விளைவே.

பொரு விருப்பம் (Pugnacity)

பண்டைய சமூகங்களில், மறச் செயல்கள் தலைமை பெற்றிருந் தன. கிரேக்க வீரன் அசில்லீசு (Achillus) தன் முன்னோர் பிறரைக் கொல்வதில் பேராற்றலர் என்றும், பிறரைக் கொன்று வெல்வது தன் குடும்பத் தொழில் என்றும் பெருமை பேசினன்.[17] வஞ் சினங் கூறுவதாய் அமையும் புறத்திணைத் துறைகளும், புற நானூற்றுப் பாடல்களும் பொரு விருப்பப் பாங்கைப் புலப்படுத் துவன.[18] புறநானூற்றுப் பாக்கள் உயிரினும் மறப்பணி ஆற்றி உயிர் துறத்தலே உயர்வு என்ற போக்கிற் செல்லும் பாங்கின. சேரன் செங்குட்டுவன் பொரு விருப்பால் பொதிய மலையில் கல் எடுப்பதைத் தவிர்த்து பொன் னிமயத்தில் கல் எடுக்க எண்ணினன்.[19]

மண்ணாசை

தாம் ஆளும் பகுதி மட்டுமன்றித் தம்மரசை மேலும் விரிவு படுத்த மன்னர் எண்ணுவர். அவ்வெண்ணத்தால் போர் மூளும். எஞ்சா மண் நசையால், வேந்தரும் வேந்தரும் தம்முள் பொருவர்.[20] உலகம், பிற அரசர்களுக்கும் பொது என்னும் சொல்லைப் பொருது, தன்நாடு இடம் சிறிது என்னும் மேற்கோள்

உந்தப் போர் புரியும் மன்னனுக விளங்கினன் சேரமான் கடுங்கோ வாழியாதன்.[21] பாண்டவர் ஆண்ட மண்ணையும் பற்ற நினைத் தான் துரியோதனன். உலகம் அனைத்தும் தன்கீழ் வர வேண்டும் என்று விரும்பினன் அலெக்சாண்டர். இவை மண்ணவாவிற்குச் சான்றுகள்.

பொருமை

மற்றவன் வாழ்தலைக் காணப் பொருதது மனித மனம். அரசுகளிடையே பொருமையின் புகைச்சல்கள் போராக விரிந்திருக்கின்றன. பாரி வள்ளலின் புகழ் வான் அளந்து வளர்ந்தது. இதனைக் காண, கேட்கப் பொருததாலேயே மூவேந்தரும், பாரியின் மீது படை தொடுத்தனர். பாண்டவர்தம், செல்வ வாழ்வையும் செல்வாக்கு வாழ்வையும் நூற்றுவர் கண்களால் பார்க்கப் பொறுக்கவில்லை. அதன் விளைவே பாரதப் போர். யூதர்தம் இன்ப வாழ்வைப் பார்க்கப் பொறுக்காத அராபிய மனநிலையே — போர்களாக வெடித்தது.

தலைமை விருப்பம்

மண்ணில் ஆளும் மற்ற மன்னவரினும், தான் பெரியவனுய் இலங்க வேண்டும் என்ற அவா, பல போர்களுக்கு வித்திட்டது; ஐரோப்பாவில், ஆங்கிலேயரும், பிரஞ்சு நாட்டாரும் இக்காரணங் கொண்டே, தம் மண்டலத்திலும், தம் குடியிருப்பு மண்டலங் களிலும் ஓயாது போர் செய்தனர். சங்க காலத் தமிழகத்தில், வெண்ணிப் பறந்தலை, கருவூர், கூடல், வாகைப் பறந்தலை, நெய் தலங்கானல், தலையாலங்கானம், கானப்பேர் முதலிய இடங் களில் இவ்வடிப்படையிலேயே, மூவேந்தர் இடையேயும், குறுநில மன்னர் இடையேயும் போர்கள் நிகழ்ந்தன. தொல்காப்பியர் காலத்தில், போர்கள் மூவேந்தர் இடையே நிகழ்ந்தன என்பதைப், 'போந்தை வேம்பே ஆர் என வரூஉம் மாபெருந்தானையர் மலைந்த பூவும்' என்ற அவர்தம் தொடர் உணர்த்தும்.[22]

உரிமைப் போராட்டம்

ஒரு வேந்தனுக்கும், மற்றொரு வேந்தனுக்கும் இடையே போர் மூளுதல் ஒரு வகை. இதற்கு மாருக ஒரு குலத்து வேந்தருக்குள் ளேயே போர் மூளுதல் உண்டு. அரசு கட்டில் உரிமை பற்றித் தாயாதியரிடையே இவ்வாறு போர்கள் நேருதல் உலக வரலாறு. கரிகாலனுக்கு உரிய அரசுரிமையை மாற்றூர் கைப்பற்றி ஆள, அதனை மீட்பதற்காகக் கரிகாலன் நடத்திய போர்ச் செயல்களைப் பட்டினப்பாலையும், பொருநராற்றுப் படையும் எடுத்துரைக் கின்றன. உரிமை காரணமாக, சோழன் நலங்கிள்ளிக்கும், நெடுங் கிள்ளிக்கும் இடையே போர் மூண்டது.[23]

அரசர்களின் புதல்வர் தமக்கு வரும் அரசுரிமையைத் தந்தையர் தரும் முன்பே தாம் பெறுவதற்காகத் தந்தையருடன் போர் புரிவதுண்டு. சாசகாரை அகற்றி விட்டுத் தன் மூத்த தமையர்களையும் ஒழித்துவிட்டு ஔரங்கசீப் அரசாண்டதை வடபுல வரலாறு காட்டும். பட்டத்தரசியின் மகனுக்கும், பின்முறை மனைவி மகனுக்கும் இடையே அரசுரிமை பற்றி எழுந்த போர், பாண்டி நாட்டையே இசுலாமியர் கையில் சிக்கச் செய்தது என்பதை, வீரபாண்டியன் — சுந்தர பாண்டியன் வரலாறு உணர்த்தும்.[24]

தனிமானம்

தன்னைப் பிறன் 'இளைஞன்' என்றோ, ஆற்றல் அற்றவன்' என்றோ இகழும் போது வஞ்சினப் போர் மூளுதல் உண்டு. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப், பகைவர், 'இளைஞன்' என்று இகழ்ந்தனர். இகழ்ந்தவர் தம்மைத் தலையாலங்கானம் என்னும் இடத்தில் எதிர்த்து நின்று தோற்கடித்தான் நெடுஞ்செழியன்.[25] நலங்கிள்ளி, தன் ஆற்றலைப் போற்றுத மாற்றலரை அழித்தே தீருவேன் என்று வஞ்சினப் போர் தொடுத்தான்.[26] பரசுராமன் முனிவன். அவனது தந்தை சமதக்கினி, கைகயன் என்ற மன்னனால் கொல்லப் பட்டான். சீற்றம் கொண்ட பரசுராமன், கைகய மன்னனின் இருபத்தோரு தலைமுறையை வெட்டிப் பழி தீர்த்துக் கொண்டான்.

இனமானம்

வடபுலத்து இருந்து வந்தோர், சேரன் செங்குட்டுவனிடம் தமிழ்ப்புல வேந்தரை வடபுலத்தார் இகழ்ந்துரைத்ததாகக் கூறினர். தன் இனம் இழிக்கப் பட்டதைக் கேள்வியுற்ற செங்குட்டுவன் பொங்கினான். தமிழரை இகழ்ந்தோரை விடேன் என்று வடபுலப் படை எடுப்பை மேற் கொண்டான்.[27]

மகளிர்

காசி வேந்தன் தன் பெண்களுக்காகச் சுயம்வரம் ஏற்பாடு செய்தான். வீடுமர் அங்குச் சென்றார். தம் தம்பிக்காக அவ் அரசிளங்குமரிகளைக் கவர்ந்தார். போர் மூண்டது.[28] இச்செய்தி பாரதத்தில் வருவது. இராமாயண, மகாபாரதப் போர்கள் மகளிரை மையமாக வைத்து எழுந்தவையே. குறிப்பாக, இராமாயணப் போர், சீதையைக் கவர்ந்ததை வைத்து எழுந்ததும், வாலி-சுக்கிரீவ/இராமன் ஆகியோரின் போர், பெண்ணை வைத்து எழுந்ததும் எண்ணத் தக்கன. தொல்காப்பியப் புறத்திணை இதனை, 'நிகர்த்த மேல் வந்த வேந்தனெடு முதுகுடி மகட்பாடு

அஞ்சிய மகட்பால்' எனப் புகலும்.[29] புறப்பொருள் வெண்பா மாலை, 'மகள்பாற் காஞ்சி' எனக் குறிப்பிடும். புறநானூறு 336-54, 356 என்ற எண்களுக்குரிய பாக்கள், மகட்பாற் காஞ்சித் துறையின; 109, 110, 111 ஆம் எண்ணுடைய பாக்கள் 'மகள் மறுத்தல்' என்ற துறையின.[30]

தொல்காப்பியப் புறத்திணையும் போர்க் காரணங்களும்

வேந்தர் இடையேயும், மாந்தர் இடையேயும் போர் எழுவது உலக இயற்கை. அஃது எழுவதற்கான காரணங்களைத் தொல் காப்பியம் பட்டியல் இடவில்லை; தொல்காப்பிய உரைகளும் பட்டியல் இடவில்லை. ஆனால், மூலமும், உரைகளும் ஆங்காங்கே அவற்றைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டும்.

பகை

பகைமையே, போருக்குக் காரணம் என்பதை 'வேற்றுப் புலம்' புறத்திணை (2) 'உறுபகை வேந்து' (5) உடல் வேந்து (5) என்ற சொற்றொடர்கள் காட்டும்.

மண்ணாசை

மாற்றரசின் நிலத்தைத் தன் புலத்தோடு சேர்த்துக் கொள்ளும் அவா, போராகப் புலர்தல் உண்டு என்பதை 'எஞ்சா மண்நசை வேந்தன், (6), 'கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்' (10) என்பன உணர்த்தும்.

மறப்பணி

தன் மறப்பணியைக் காட்டுவதற்காகப் போர் நிகழ்தல் உண்டு என்பதை மைந்து பொருளாக வந்த வேந்தன் (12) என்ற தொடர் காட்டும்.

வரும் போர்

தான் வலிய போருக்குப் போகாது இருக்க, பகைவர் தாமே வலிந்து சண்டைக்கு வரும் போது, வேந்தர் போர் ஆற்றுதல் உண்டு. இதனை, வந்த வேந்தனைச் சென்று தலை அழிக்கும் சிறப் பின்று' (12) 'பெரும்பகை தாங்கும் வேல்' (17) 'அரும்பகை தாங்கும் ஆற்றல்' (17) என்ற தொடர்கள் வலியுறுத்தும்.

பெருமை

பெருமைக்காகப் போர் செய்தல் உண்டு என்பதனை, 'ஒருவன் தாங்கிய பெருமை' (7) 'புண் கிழித்து முடியும் மறம்' (19) என்பன தெளிவிக்கும்.

பெண் கேட்டல்

வேந்தன் பெண் கேட்டலால், போர் தொடங்குதல் உண்டு என்பதனை, 'வேந்தனெடு முதுகுடி மகட்பாடு அஞ்சிய மகட்பால்' (19) என்ற தொடர் தெளிவிக்கும்.

தன்னுறு தொழிலும் மன்னுறு தொழிலும்

தொல்காப்பியமும், அதன் உரைகளும், புறத்திணை பற்றிப் பேசும் பிற நூல்களும் போர்க் காரணங்களை வரன்முறை இட்டுக் காட்டவில்லை. ஆனால் போரிடு முறைகளைத் திணைகளாகப் பகுத்துக் காட்டும். இவற்றுள் ஒன்று முன்னப்பாகக் கருதத் தக்கது. வெட்சிப்படை எடுப்பு இருவகையில் நிகழும். அரசன் ஆணை பெற்றுப் போர் தொடுப்பது ஒருவகை; அது மன்னுறு தொழில் எனப்படும். அரசன் ஆணை பெறாது மறவர் தாமே படை எடுப்பது மற்றொரு வகை. இது தன்னுறு தொழில் எனப்படும். தொல்காப்பியர் இவற்றுள் ஒருவகையை மட்டுமே போற்றுவதாகக் கருதுவர். 'வேந்து விடு முன்னஞர்' என்பது அவர்தம் வெட்சிக் கூற்று (புறத்திணை). பன்னிருபடல நூலாரும், புறப் பொருள் வெண்பா மாலையாரும், இரண்டையும் போற்றுவர்.[31] தொல்காப்பிய உரை ஆசிரியர்கள் தன்னுறு தொழில் தொல்காப்பியர்க்கு உடன்பாடு அன்று என மறுப்பர்.

> ''பன்னிரு படலத்துள் 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று அன்ன இருவகைத்தே வெட்சி' என இரண்டு கூறுபடக் கூறினராயினும், முன் வருகின்ற வஞ்சி, உழிஞை, தும்பை முதலாயின எடுத்துச் செலவு, எயில்காத்தல், போர் செய்தல் என்பன அரசர் மேல் இயன்று வருதலின் வேந்துறு தொழில் ஒழித்து, தன்னுறு தொழில் எனத் தன் நாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆன்நிரை கோடலின் இவர் அரசரது ஆணையை நீங்கினராவார். ஆதலால் அவர் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம்''[32]

என்பர் இளம்பூரணர். சோமசுந்தர பாரதியாரும் இளம்பூரணரை வழி மொழிவர்.[33] நச்சினார்க்கினியர், இளம்பூரணரை மறுத்து எழுதினர் அல்லர். ஆனால் தன்னுறு தொழிலை உடன்பட்டு எழுதுவர்.[34] அவர்தம் விளக்கம் வருமாறு.

(1) 'கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரை மீட்டோர் பூச்சூடுதலின் பெற்ற பெயராதலின் வெட்சித் திணை போல ஒழுக்கமன்று'

(2) 'தன்னுறு தொழிலாதலின் கரந்தையாம்'

(3) 'கெடுக சிந்தை கடிது இவள் துணிவே' என்னும் புறப் பாட்டும் இதன்பாற் படும்.

இவை தன்னுறு தொழில். இப்பகுதிகளால் இரண்டு விளக்க மாகும். கரந்தை— தன்னுறு தொழில் என்பதொன்று. தன்னுறு தொழில் ஆவதால், அது புறத்திணை ஒழுக்கமாகாது என்பது பிறி தொன்று. கரந்தை தன்னுறு தொழில் என்ற குறிப்பைப் பிற உரையாசிரியர் குறிக்கவில்லை. அவர்க்கு அஃது உடன்பாடும் அன்று, நச்சினார்க்கினியர் உரைப்படி, கரந்தை, வெட்சித் திணைக்குள் அடக்கம். ஆகவே, தன்னுறு தொழில் ஒரு வகையில் தொல்காப்பியர்க்கு உடன்பாடு. இஃது இளம்பூரணர் கொள் கைக்கு முற்றும் அரண் ஆகும். இவ்வுரை வேறுபாடு ஆய்விற் குரியது.

கரந்தை தன்னுறு தொழிலா?

நச்சினார்க்கினியர் கரந்தையைத் தன்னுறு தொழிலாகக் கருதுவர். அவர்தம் கருத்தைப் பண்டைப் போர் முறையும், தொல்காப்பியப் புறத் திணைப் போக்கும் புறநானூற்றுப் பாடல் களும், கரந்தை பற்றி எழுந்த கல்வெட்டுகளும் அரண் செய் கின்றனவா என்பது ஆயத்தக்கது.

நிரை மீட்டல்

நிரை மீட்டல் கரந்தை என்பது வெள்ளிடை. வெட்சிப்படை யார், வேற்றுப்புலத்து வந்து நிரை கவர்வர். கவருகையில் அதனைக் காத்திருக்கும் மறவர் அறிந்து துணுக்குறுவர். உடன் கிளர்ந்தெழுந்து வெட்சியாரை வீழ்த்த முனைவர். தம் நிரையை மீட்க நினைவர். மாறுக, அப் பரபரப்பில், மன்னனின் ஆணை கேட்டுக் காத்திரார். ஆகவே, அக்கணம் நிகழும் போர், தன்னுறு தொழிலாக அமையும். அவ்வாறு அமைதலே இயல்பு.

தொல்காப்பியர் காட்டும் கரந்தைப் பகுதிகள்

தொல்காப்பியர் கரந்தைப் பிரிவுகளாகக் குறிக்கும், ஆரமர் ஓட்டல், ஆ பெயர்த்துத் தருதல்—என்பன முற்றுமாகத் தன்னுறு தொழில்களே. சீர்சால் வேந்தன் சிறப்பு எடுத்து உரைத்தல், தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல் என்பன ஆக்களை மீட்ட மகிழ்வில், கரந்தை மறவர் தமக்குள் மகிழ்ந்து ஆர்ப்பதைக் குறிப்பன. எனவே தொல்காப்பிய நூற்போக்கும் கரந்தை தன்னுறு தொழில் என்ற கருத்தை அரண் செய்யும்.

புறநானூற்றுப் பாடல்கள்

புறநானூறு புறத்திணை வழி தொகுக்கப்பட்ட சங்க நூல். இந்நூலுள் கரந்தை பற்றிய பதிஞெரு பாக்கள் இடம் பெற்றுள்ளன. 259, 260, 261, 263, 264, 265, 270, 287, 290, 291, 298 இவை, தன்னுறு தொழிலும், மன்னுறு தொழிலுமாக அமைந்துள்ளன. இவற்றுள் இரண்டு (புறம். 261, 263) தன்னுறு தொழிற் பாடல்களாக அமைந்துள்ளன.

'பாண! நீ இவ்வழியே செல்கின்றுயாயின் வழியில் உடன் வந்த மறவர் அஞ்சி நீங்கவும், நீங்காது நின்று, வெட்சியாருடன் பொருது நடுகல்லாகியவனைக் காண்பாய்' என வரும் புறப் பாடலின் பொழிப்பு மறவர் தாமாகவே பொரும் மாண்பினர் என்பதைப் புலப்படுத்தும்.

> 'நாகு முலை அன்ன நறும்பூம் கரந்தை
> விர்கறி யாளர் மரபிற் சூட்ட
> நிரை இவண் தந்து'

என்பதைத் (புறம். 261) தன்னுறு தொழிலிற்குக் காட்டுவர் நச்சினர்க்கினியர்.[35]

கரந்தையைப் பற்றிப் பேசியதை அடுத்துத் தொல்காப்பியர் 'நடுகல்' பற்றிக் குறிப்பது நினைக்கத் தக்கது. நடுகல்லைப் பற்றிய புறப்பாடல்களுள் பெரும் பான்மை கரந்தைத் திணையைச் சார்ந்தவை.[36] தொடக்கக் காலத்தில் கரந்தை வீரருக்கு மட்டும் நடுகல் எடுக்கப் பெற்றதோ என்று உய்த்துணர்தற்கு இடனுண்டு. இவ்வுய்த்துணர்வைச் செங்கம் வட்டத்தில் கிடைத்த நடுகல் கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன.[37] செங்கம் வட்டாரத்தில் கிடைத்த நடுகல் கல்வெட்டுகளின் எண்ணிக்கை 58; அவற்றுள் தொறு கொண்ட ஞான்றும், மீட்ட ஞான்றும் இறந்த வீரர் களுக்கு எடுத்த நடுகல்லைக் குறிப்பன 18; அவற்றுள் எப்பிரிவின என்று இரண்டை முடிவு செய்ய முடியவில்லை. எஞ்சிய பதினறனுள், பதினைந்து கரந்தை மறவர்க்கு எழுப்பப்பட்ட கல்லைப் பற்றியவை. இவற்றுள் நான்கைத் தவிர, எஞ்சிய பன்னிரண்டும் தன்னுறு தொழிலின. (பார்க்க அட்டவணை : 20)

வெட்சியுள் தன்னுறு தொழில்

வெட்சித்திணையுள், மறவர் தாமாகப் படை மேற்கொள்வது இல்லை என்பது இளம்பூரணர் துணிபு. ஆராய்ந்து பார்க்கும் போது இதுவும் மறுபார்வைக் குள்ளாகும். தொல்காப்பியர் எங்கும், தன்னுறு தொழிலை மறுத்து மொழியவில்லை, வெட்சித்

அட்டவணை 20

கல்வெட்டுகள்

எண்	திணை	கவரப் பட்ட பொருள்	தன்னுறு தொழில்	மன்னுறு தொழில்
1	கரந்தை	தொறு	நந்தியார்	.....
2	கரந்தை	தொறு	அக்கந்தைக் கோடன்	....
3	கரந்தை	தொறு	பொன்னரம்பனூர் கொல்லகச் சேவகன் காகண்டி அண்ணல் வன்	....
4	கரந்தை	தொறு	கணிமாதன்	.....
5	கரந்தை?	எருமை	... ...	கருந்தேவக் கத்தி
6	வெட்சி?	மறி தொறு	சிற்றுபாடி பூனை யனூர்	பெரும்பாண தியரசர்
7	கரந்தை	தொறு	வண்ணக்க சாத்தன்	வேணாட்டுப் பாசாறு ஆள் கிற பகைமதர்
8	கரந்தை	ஆன் தொறு	மங்கல வுண்டன்	.....
9	கரந்தை	தொறு	வண்ணக்க கடை யனூர்	.....
0		எருமைத் தொறு	காரிப் பெருமான் ணன்	.....
0	கரந்தை	எருமை	சாகாடச் சிற்றன்	.....
1	கரந்தை	தொறு	மொடையன்	.....
2	கரந்தை	தொறு	கள்ளன்தாழன்	வானகோவ ரையன்
3	கரந்தை	எருமை தொறு	தந்தையும் மகனும்	
4	கரந்தை	தொறு	கத்தையன்	.....
5	கரந்தை	எருமை	வீரர் இருவர்	.....
6	கரந்தை	தொறு	நம்மடியானம் மம்ம	.....

காட்டும் கரந்தை

எண் கல் வெட்டு	இடம் மாவட்டம்	ஊர்	கல்வெட்டுக் காலம்
1971/77	வடஆர்க்காடு	தண்டம்பட்டு	7 ஆம் நூற்
1971/88	வடஆர்க்காடு	மோத்தகல்	7 ஆம் நூற்
1971/50	வடஆர்க்காடு	சே. கூடலூர்	7 ஆம் நூற்
1971/36	வடஆர்க்காடு	சாத்தனூர்	7 ஆம் நூற்
1971/59	வடஆர்க்காடு	எடுத்தனூர்	7 ஆம் நூற்
1971/73	வடஆர்க்காடு	தாழையூத்து	8 ஆம் நூற்
1971/91	வடஆர்க்காடு	போந்தை	8 ஆம் நூற்
1971/37	வடஆர்க்காடு	மல்லிகாபுரம்	8 ஆம் நூற்
1971/74	வடஆர்க்காடு	தாழையூத்து	8 ஆம் நூற்
1971/56	வடஆர்க்காடு	சின்னய்யன் பேட்டை	9 ஆம் நூற்
1971/57	வடஆர்க்காடு	சின்னய்யன் பேட்டை	9 ஆம் நூற்
1971/45	வடஆர்க்காடு	அய்த்தாம் பாளையம்	கி.பி. 911
1971/39	வடஆர்க்காடு	சாத்தனூர்	கி.பி. 911
1971/75	வடஆர்க்காடு	தாழையூத்து	கி.பி. 930
1971/79	வடஆர்க்காடு	செங்கம்	கி.பி. 10 ஆம் நூற்
1971/76	வடஆர்க்காடு	தாழையூத்து	கி.பி. 10 ஆம் நூற்
1971/70	வடஆர்க்காடு	கோணும் குட்டை	கி.பி. 10 ஆம் நூற்

திணைகளாகக் கூறப்படும் 'ஊர்கொலை' (புறத்திணை. வரி. 5) அரசாணை பெற்றுச் செய்வதாகச் சொல்வது-செய்வது-அறமன்று. ஏனைய ஆகோள், பூசல் மாற்று, நோய் இன்று உய்த்தல், நுவலி வழித் தோற்றம், தந்து நிறை, பாதீடு, உண்டாட்டு கொடை என்பன அரசர் ஆணையின்றியும் செய்யப் பெறுவன; அவ்வாறு செய்யப் பெறுவனவே மிகுதி.

> "குளிர்ந்த பெரிய கண்ணை உடைய கள் விற்பவளே; தறு கண்மை உடைய இந்த மறவன் தன்கழலிலே வீரக் கழலைக் கட்டினான். அந்த அளவிலேயே பகைவருடைய ஆனிரைகள் இன்று காலை நமது நெடிய முற்றத் தினிடையே வந்து நின்றன பார். அவன் அத்தகை யவன் ஆதலின் நீ பின்பு கள்வார்ப்பேன் என்று பொறுத் துக் கொள்வானல்லன் இவன். கள் அருத சாடியில் உள்ள கள்ளின் தெளிவை இவனுக்கு மறுக்காமல் வார்ப் பாயாக."

என்பது தன்னுறு தொழிலிற்குப் புறப்பொருள் வெண்பா மாலை யார் காட்டும் பாட்டின் பொழிப்பு. இப்பாட்டையும் புற நானூற்றில் வெட்சித் திணையில் உண்டாட்டுத் துறைக்குக் காட்டப் பெறும் 256, 258, 263, 269, 297 ஆம் எண்ணுள்ள பாக் களின் போக்கையும் பொருத்திப் பார்ப்பின் புறப்பொருள் வெண்பா மாலைப் பா மட்டுமன்றிப், புறப்பாட்டும், தன்னுறு தொழிலின என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தி நிற்கும். 'கள் வீலையாட்டி' எனத் தொடங்கும் வேட்டுவரிப் (14) பாடலுக்கு உரை எழுதும் அடியார்க்கு நல்லார், மேலே காட்டப் பட்ட புறப் பொருள் வெண்பா மாலைப் பாவை எடுத்துக் காட்டி இது தன்னுறு தொழில் என்று குறிப்பிடுவர்.

கல்வெட்டுச் சான்றுகள்

கல்வெட்டுகள் காட்டும் சான்றுகள் கற்பனைகள் அல்ல. என்றோ ஒரு நாள் நடந்தவை. தண்டம்பட்டு நடுகல் கல் வெட்டும், தாழையூத்து நடுகல் கல்வெட்டும் வெட்சித் திணை ஆய்வில் கருதத் தக்கன. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டு) பதினெட்டாம் ஆட்சி ஆண்டில் நடந்த நிகழ்ச்சியைத் தண்டம்பட்டுக் கல்வெட்டு உணர்த்தும். வேணாட்டு ஆந்தை பாடி ஈசை பெரும்பாண் அரசரின் மருமக்கள் பொற் சேந்தியார்; சேந்தியார்தம் சேவகர் பொல்லாத கள்வர். அவர்கள் ஆநிரைகளைக் கவர்ந்து விடுகின்றனர். ஆநிரைகளின் உரிமையாள ராகிய நந்தியார், வெட்சியாரை எதிர்த்துப் பொருகின்றார். மாடு களை மீட்டு விடுகின்றார். எனினும், வெட்சியாரால் கொல்லப்படு

கின்றார். இதனைக் கல்வெட்டு 'பொற் சேந்தியாஞ் சேவகரு தொறுக் கொண்ட ஞான்று மீட்டு பட்டான் வேணாட்டு நந்தி'[8] (1971-77) என்கிறது. இக்கல்வெட்டில் அரசர் ஆணையின்றி, ஆட்கள், மாடுகளைக் கவர்ந்திருக்கின்றனர் என்பது குறிப்பாக உள்ளது. இதனினும் தெளிவாகத் தாழையூத்துக் கல்வெட்டு' வெட்சியாரை 'வேட்டுவர்' என்றே சுட்டுகிறது.

'வேட்டுவர் தாழை ஊர் தொறுக் கொண்ட
நான்று தாழை ஊருடைய விண்ணக்க கடையனூர்
தொறுமீட்டுப் பட்டார்' (1971/74)

வேட்டுவர், அரசர் ஆணையின்றி இயங்குதல் வெளிப்படை. இவ்விரு கல்வெட்டு மொழிகளையும் நோக்க, வெட்சித் திணையுள் தன்னுறு தொழில் இருந்தமை தெளிவாகும். எனினும், சிலர், புறநானூறும், கல்வெட்டுகளும், தொல்காப்பியத்திற்கு பிற்பட்டனவே என்று தள்ளக் கூடும். அன்னர், பண்டைப் போர் முறைகளையும், வீர ஊழிக்கால அமைதியையும் ஆய்ந்துணர்தல் வேண்டும்.

வீர ஊழிக்காலம்

வீரர் முதன்மையாகப் போற்றப்பட்ட காலத்தை வீரஊழி (Heroic Age) என்பர். மாந்த வரலாற்றின் ஒவ்வொரு கால கட்டத்திலும் சிற்சில சிறப்பியல்புகள் போற்றப்பட்டன. மிகப் பழங்காலத்தில் வீரமே மிகுதியாகப் போற்றப் பட்டது. அவ்வாறு போற்றப் பட்ட காலத்தை அவ்வக் கால இலக்கியங்கள் படம் பிடித்துக் காட்டும்; மாந்தர்தம் வீர இயல்பை முனைப் பாக்கிப் படைக்கப் பட்ட இலக்கியங்களை, வீரஊழிக் கவிதை (Heroic Poetry) என்பர். தமிழிலும் அத்தகு வீரஊழிக் கவிதைக் காலம் ஒன்று இருந்தது. அது சங்க காலமே என்பர்.[38] சங்க காலத்தில் படை, பாடப்பட்டதற் கிணையாக, கொடையும் பாடப்பட்டது; மறம் பாடப் பட்டதற் கிணையாக அறமும் பாடப் பட்டது. எனவே சங்க காலத்தை வீரம் மட்டுமே செறிந்த 'வீரஊழி' என்பதை மறுப்பர்.[39] புறத்திணைகள் ஏழனுள், காஞ்சி, பாடாண் என்பன முரட்டு வீரத்தினின்று பண்பட்ட பாதைக்கு அழைப்பவை. காஞ்சி மறப்பாதையை மறந்து, அறப் பாதைக்கு அழைப்பது. பாடாண் மாந்தரின் கொடை நலனையும் உயர்த்திப் பாடுவது. வாகையில் கூட, பல துறைகள், மறத் தோடு தொடர்பறுத்தவை. எஞ்சி இருக்கும் திணைகள், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை. இவற்றுள் வஞ்சி, உழிஞை, தும்பை என்ற மூன்றும் எடுத்துச் செலவு, எயில் காத்தல், போர் நிகழ்த்தல் என முற்றுமாக அரசன் ஆணையைத் தழுவி அமைபவை. இத்

திணையில் இடம் பெற்றுள்ள புறநானூறு, பதிற்றுப் பத்துப் பாக்கள் அனைத்தும் அரசனைத் தொடர்புறுத்திப் புகழ்பவை. தன்னிச்சையான வீரத்தை முற்றுமாகக் கொண்டு நிற்பது வெட்சி ஒன்றே. வெட்சி, கரந்தை என்பவற்றுள் இடம் பெற்றுள்ள துறைப் பிரிவுகள் அனைத்தும் தனி மாந்த மறத்தைப் போற்றுபவை. ஆநிரை கோடல் என்பது ஏறத்தாழ, அயலார் பசுச் செல்வத்தைக் கொள்ளை கொள்ளுதலே. கொள்ளை இடல் வீரஊழிக் கால இயல்பு. ஆழ்ந்து பார்ப்பின் வெட்சிப் போர் பின்வரும் வஞ்சிப் போருக்கு முன்னோட்டம் அன்று; வெட்சிப் போரே தனிவகைப் போர்.

ஆநிரை கவர்தலின் நோக்கம்

ஆநிரைகளைக் கவர்தலின் நோக்கம், ஆநிரைகளை காப்பதற்கே என்பர்.

> "பகைவரது நாட்டின்மேல் படையொடு சென்று போர் செய்யக் கருதிய வேந்தன், அந்நாட்டில் வாழும் அறவோராகிய அந்தணர், மகளிர், பிணியாளர் முதலிய தீங்கு செய்யத் தகாத மக்களைப் போரால் விளையும் துன்பங்களினின்றும் விலக்கி உய்வித்தல் வேண்டி, "யாம் போர் கருதி நுமது நாட்டில் புகுகின்றேம். நீவிர் நுமக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் செல்லுமின்" என இவ்வாறு அவர்களுக்கு அறிவித்தலும், அவ்வறிவிப்பினை உணர்ந்து வெளிச் செல்லும் பகுத்துணர்வு இல்லாத பசுக் கூட்டங்களை ஒருவரும் அறியாதபடி நள்ளிரவில் தன் படை வீரர்களை அனுப்பிக் களவில் கவர்ந்து வரச் செய்து பாதுகாத்தலும் அறநெறி வழாது மேற்கொள்ளுதற்குரிய பண்டைத் தமிழர் போர் முறையாகும்."[40]

இம்மரபு பொருந்துமா என்பது ஆய்விற்குரியது. ஆநிரைகளைக் கவர்ந்து சென்ற வெட்சி மறவர், அவற்றைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்று போற்றிக் கொண்டனரா? இல்லையே! அவற்றைத் தமக்குள் பகிர்ந்து உரிமை கொண்டாடினர் என்பதைப் 'பாதீடு' என்ற வெட்சித் துறையும், தம்முடன் வந்தவரின்றி ஏனையோர்க்கும் ஆக்களை ஈந்து மகிழ்ந்தனர் என்பதைக் 'கொடை' என்ற துறையும் அவற்றிற்குக் காட்டப்படும் பாக்களும் தெளிவுறுத்தும்.[41] மாறாக, கவர்ந்த ஆநிரையை, கரந்தை மறவரின் வன்முறைப் போரானன்றி வேறு வகையில், வெட்சி மறவர், திரும்பி அளித்ததாக, இலக்கணச் சான்றோ, இலக்கியச் சான்றுகளோ இல்லை. எனவே, ஆநிரை காக்கப் பட்டது என்பதினும் கவரப்பட்டது என்பதே முறை. தொல்

காப்பியர் வெட்சியை 'வேற்றுப் புலக் களவு' என்பதும், களவிற் குரிய நிலமாகிய அகக் குறிஞ்சிக்குப் புறஞ்ச புறவெட்சி அமை வதும் கருதத் தக்கன. இளங்கோ அடிகள், தம் சிலப்பதிகாரத் துள், 'கரந்தை அலறக் கவர்ந்த இன நிரைகள்' என்று பாடுவதும் ஒப்பவைத்து உன்னத் தக்கது.[42] வெட்சி வீரர், கரந்தை வீரரைக் கொன்ற செய்தியை ஒரு நடுகல் கல்வெட்டு காட்டும். தன் எருமைகளைக் காத்து நின்ருன் கருந்தேவக்கத்தி என்ற வீரன்; தனக்குத் துணையாகக் 'கோவிவன்' என்ற நாயையும் உடன் வைத் திருந்தான் அவன். இரண்டு பேர், எருமைகளைக் கவர வந்தனர். வெட்சி வீரர்களுக்கும் கரந்தை வீரனுக்கும் ஊடே கடும்போர்; நாய், வந்த வெட்சியாரைக் கடித்துக் குதறியது. வெட்சி மறவர், தம்முடன் பொருத கரந்தை மறவனைக் கொன்றனர். நாய் மட் டும் தப்பியது. இச் செய்தியைக் கூறும் கல்வெட்டு. எருமை கவர வந்த வெட்சியாரைக் 'கள்ளர்' என்றே குறிப்பிடுகிறது (197/59) எருமை கவர வந்தாரைக் 'கள்ளர்' என்று இக்கல்வெட்டுக் குறிப் பதும் அன்றி, கி.பி. 911 ஆம் ஆண்டைச் சார்ந்த செங்கம் வட்டப் பிறிதொரு கல்வெட்டு (1971/39)'ஆனே மங்கலம் முடைய கள்ளன்' எனக் குறிப்பதும், கி.பி. 930 ஆம் ஆண்டைச் சேர்ந்த மற்றொரு கல்வெட்டு, (1971/75) 'எருமை தொறு கள்ளர் கொள்ள' என்று குறிப்பதும் இங்கே இணைத்து நினைக்கத் தக்கன. ஆக, இலக்கிய, இலக்கண, கல்வெட்டுச் சான்றுகள், வெட்சியில் தன்னுறு தொழி லாக நிரை கவர்தல் உண்டு என்று சாற்றுகின்றன.

இருளர்

இருளர்கள் தமிழகப் பழங்குடியினர். அவர்கள் தற்போது வடார்க்காடு மாவட்ட நவிர மலைக் காடுகளில் வாழுகின்றனர். இவர்கள் இக்காலத்தும் மாடுகளைத் திருடிக் காட்டிற்குக் கொண்டு சென்று விடுகின்றனர்.[43] இச் செய்தி, பழைய ஆநிரைக் களவின் எச்சமாகும்.

வெட்சித் திணையும் இலக்கியங்களும்

வெட்சித்திணை, மற்றைய திணைகளைக் காட்டினும் வீர ஊழி யோடு நெருக்கத் தொடர்புடையது. ஆனுல் சங்க இலக்கியம் வீர ஊழியோடு தொடர்புடையது. எனினும், முற்றுமாக, வீர ஊழிக்கே உரியது என்பதற்கில்லை. வீரத்தைக் காட்டினும் கொடை முதலான பிறவே, பெரிதும், புறத்திணை இலக்கியங் களில் இடம் பெற்றுள்ளன. பதிற்றுப் பத்து முற்றுமாகப் பாடாண் திணையை அடியாகக் கொண்டது. புறநானூறு வீரப் பாடல்களைப் பெற்றிருப்பது எனினும் மற்றவற்றைப் பார்க்க மிகக்

குறைவாகவே, மறம் உணர்த்தும் பாக்களைப் பெற்றிருக்கிறது. (பார்க்க : அட்டவணை 21,) ஆக சங்க இலக்கியங்களின் பொருளடக்கத்தை நோக்க, சங்க காலத்தை முற்றுமாக வீர ஊழிக் காலம் என்பது பொருத்தம் அற்றுப் போகிறது. எனினும் தமிழிலக்கிய வரலாறு, மறவர்களை மாண்புறுத்திப் பாடும் வீர ஊழியைப் பெற்றிருந்தது. அவ்வாறு அது பெற்றிருந்த காலம், சங்க காலத்திற்கு முற்பட்ட காலமாகும். முற்சங்க காலத்தில் தனி மாந்த வீரத்தைப் புகழ்ந்து பேசும், வெட்சித்திணைப் பாக்கள் நிரம்ப இருந்திருத்தல் வேண்டும். அவை, அக்கால மறவர்தம் தன்னுறு தொழிலைப் புகழ்ந்து பேசி இருத்தல் வேண்டும். பிற்கால உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள் பாக்களை மறந்துவிட்டு, வெட்சித் திணையின் துறைப் பெயர்களை உற்று நோக்குக. அப் பெயர்கள், பண்டை மறவர்தம் தனிப்பெரும் மறத்தைச் சுட்டி நிற்கின்றன.

1 நள்ளிரவுக் களவை - ஆநிரை கோடல் வெட்சித்திணையின் அடிப்படையாக இருத்தல்.

2 அரசர் ஆணை இன்றியும் கரந்தை மறவர் ஆரமர் ஓட்டுதலும் ஆபெயர்த்துத் தருதலும் அமைந்திருத்தல்.

3 ஊர்கொலை, ஆகோள், பூசல்மாற்று, தந்துநிறை, பாதீடு உண்டாட்டு, கொடை முதலாயின அரசர் ஆணை இன்றி அமர் புரியும் மறவர் பெருமை பேசுதல்.

4 அரசர், தலைவர் அன்றித் தனி மறவர்க்கும் நடுகல் நாட்டப்படல்.

எனவே கொள்ளையிடலுக்கு முதன்மை அளிக்கப் படுதல், தனி மறவர் போற்றப்படுதல், தன்னுறு தொழிலினராய் மறவர் இயங்குதல், நடுகல் வணக்கத்தை மேற் கொள்ளுதல் — ஆகியன, வீரஊழிக் கால இயல்புகள். இவற்றை வெட்சித் துறைகள் விளக்குவதால், அவை வீரஊழிக் காலத்தன என்பதையும் தன்னுறு தொழிலின என்பதையும் ஓர்க.

மறப்பதற்கரிய மறப்பணி ஆற்றிய மறவர் அனைவர்க்கும் நடுகல் நாட்டுதல் உண்டு எனில், நடுகல் பற்றிய விளக்கங்களைத் தொல்காப்பியர், எல்லாத் திணைகளுக்கும் பொதுவாகக் குறித்திருப்பர். அவ்வாறு அவர் குறிப்பிடாமல், வெட்சித் திணைத் துறைகளின் வரிசையில் காட்சி, கால்கோள், 'நீர்ப்படை நடுகல்' என்று குறித்தது எண்ணத்தக்கது. 'இறந்தவனது ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்க

பொருள் அடிப்படையில் புறநானூற்றுப் பாக்கள்

எண்	பொருள்	திணை	எண்ணிக்கை	பாடல் எண்கள்
1	வீரம்	வெட்சி	5	புறம். 257, -8, 262, 269, 297
2	வீரம்	கரந்தை	11	259-61, 263-5, 270, 287, 290. 291, 298
3	வீரம்	வஞ்சி	12	4, 7, 16, 36, 41, 45 - 47, 57, 98, 213, 292
4	வீரம்	நொச்சி	6	109, 110, 111, 271, 272, 299
5	வீரம்	தும்பை	25	62, 63, 80, 87, 88, 89, 90, 273-8, 283, 284, 286, 288, 294, 295, 300, 304, 307, 309, 310, 311
6	நிலையாமை/வீரம்	காஞ்சி	29	71-3, 109-11, 280, 293, 336-54, 365, 366
7	வீரம்/பிற	வாகை	77	17, 19-23, 25, 26, 31, 33, 37, 42-44, 51-54, 61, 66, 76-79, 81, 82, 86, 93, 94, 98, 100, 104, 125, 166, 167, 170, 174, 178-81, 191, 251, 252, 279, 281, 285, 296, 305, 306, 308, 312-22, 326-35, 368-73.
			165	
8	வீரமல்லாப் பிற		233	
			398	

லாம். அங்குள்ள பொருளில் (நடுகல் முதலானவற்றில்) நுழைந்து கொள்ளச் செய்யலாம் என்ற நம்பிக்கை உலகம் எங்கும் பண்டைய மக்களின் பண்பாட்டில் காணப்படுகிறது. இதனை விரிவாக விளக்கும் சே. சி. பிரேசர் நூற்றுக்கு மேற்பட்ட உலகப் பழங்கதைகளை எடுத்துக் காட்டுவர்.[44] பழைய இனக்குழு மக்களிடம் பரவலாக இருந்த நடுகல் பழக்கம், பண்டைய தமிழரிடமும் இருந்திருத்தல் வேண்டும். அவற்றைக் கண்ட தொல்காப்பியர், நடுகல் இடம் பெற்ற, தனி மாந்தப் போர் இடம் பெற்ற, தன்னுறு தொழில் அமைந்த வெட்சித் திணையை முதலாவதாகப் போற்றிக் கொண்டார். தொல்காப்பியர், வெட்சித் திணையை முதலாவதாகப் போற்றிக் கொண்டதன் காரணம், அது போரின் தொடக்கம் என்பதால் அன்று. போர்களில் அதுவே முதலாவது; பழமையானது என்பது பற்றியே ஆம் என்க.

சங்க காலத்து நிரைகவர் போர்கள்

2381 பாக்கள் சங்க காலத்தின : அவற்றுள் 16 பாக்களே வெட்சி, கரந்தை (5 — 11)யைச் சேர்ந்தவை. வீரஊழிக் காலத்தின் தேய்வாக சங்க காலம் இருந்ததை இது காட்டும். ஐரிசு நாட்டு வீரஊழிப் பாக்களில் ஆநிரை கவர்தல் அடிக்கடி கூறப்படும். தமிழிலும், தொல்காப்பியர் காலத்தில் அத்தகு நிலைமை இருந்திருத்தல்கூடும். தொல்காப்பியர்க்குப் பின் நிரை கவர் போர்கள் குறைந்தன என்றே கொள்ளல் தகும்.

ஆநிரை கோடல்

பகைப்புலத்தார் ஆக்களைக் கவர்ந்து வருதல் வெட்சியாகும். 'வேற்றுப்புலக் களவின் ஆதந்து' என்பர் தொல்காப்பியர். 'வெட்சி நிரை கவர்தல் மீட்டல் கரந்தையாம்' எனவரும் ஒரு பழம்பாட்டு.

> வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
> சென்றிகல் முனை ஆதந்தன்று

எனவரும் புறப்பொருள் வெண்பாமாலை.[45] சங்க இலக்கியங்களும் நிரை கவர்தலையும், மீட்டலையும் காட்டும்.[46] ஆநிரை அன்றி, யானைகளையும் கவர்தல் உண்டு என்பர் நச்சர்.[47]

எருமைகளைக் கவர்தல்

பகைப்புலத்தாரிடத்துள்ள எருமைகளையும் வெட்சியார் கவர்தல் உண்டு; கரந்தையார் மீட்டல் உண்டு என்பதைப் பிற்காலக் கல்வெட்டுகள் காட்டும். கல்வெட்டுகளில் 'எருமைத் தொறு

கொண்ட ஞான்று', எருமைத் தொறு இடுவித்த ஞான்று, எருமைத் தொறு மீட்ட ஞான்று' என்று வரும் தொடர்கள் இதனை வற்புறுத்தும்.[48]

ஆடுகளைக் கவர்தல்

பசுக்களைக் கவர்தல், யானைகளைக் கவர்தல், எருமை மாடுகளைக் கவர்தல்,—ஆகியன மட்டுமின்றி, ஆடுகளும் வெட்சியில் கவரப்பட்டன. இதனைக் கல்வெட்டுகள், 'மறிதொறுக் கொண்ட ஞான்று' என்று குறிக்கும். கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாழையூத்துக் கல்வெட்டொன்று, மறி தொறு கொண்ட ஞான்று பட்ட வீரனுக்கு நடுகல் எடுக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டும்.

> 'கோவிசைய நரசிங்க பருமற்கு யாண்டு பத்தாவது மீவேண்ணூட்டுக் கோவலூர் ஊரரைசர் பெரும்பாணதி யரைசர் சேவகன் சிற்றுபாடி பனையனூர் மறிதொறுக் கொண்ட ஞான்று பட்டான்.[49]

இவற்றால், தமிழகப் போர் முனைகளில், மாடு கவர்தல், ஆடு கவர்தல், எருமை கவர்தல், யானை கவர்தல் ஆகியன இருந்தன என்பது தெளிவாம். ஆனால், வெட்சித் திணையைப் பேசும், தொல் காப்பியமும், இளம். உரையும், பிற இலக்கண நூல்களும் கவரப் படுதலைச் சுட்டவும் இல்லை.

ஆநிரை கவர்தலும் ஆநிரை காக்கப்படுதலும்

பகை நாட்டினின்று ஆநிரைகளைக் கவர்தலின் நோக்கம் அவற்றிற்குப் போரால் ஊனம் வருதலைத் தவிர்ப்பதற்காகவே. பகைவரது நாட்டின்மேல் படை நடாத்த விழையும் வேந்தன், அறவோர், அந்தணர், மகளிர், பிணியாளர் முதலிய தீங்கு செய்யத் தகாத மக்களைப் போரால் விளையும் துன்பங்களினின்றும் விலக்கி உய்வித்தல் வேண்டி, "யாம் போர் கருதி நும் நாட்டிற் புகுகின்றேம். நீவிர் நுமக்குப் பாதுகாவலான இடங்களை நாடிச் செல்லுங்கள்" என அறிவிப்பான். அவ் அறிவிப்பினைக் கேட்டு உணர்ந்து வெளிச் செல்லும் பகுத்தறிவற்றவை பசுக்கள். அவற்றைக் காக்க விரும்பியவன், ஒருவரும் அறியாதபடி நள்ளிரவில் தன்படை வீரர்களை அனுப்பிக் களவில் கவர்ந்து வரச் செய்வன் என்பர்.[50] பசுக்களைக் காத்து ஓம்பும் நோக்கில் அவை கவரப்படவில்லை என்பது முன்பே விளக்கப்பட்டது. இக்கருத்தில் வேறு பிற ஐயங்களும் விளைகின்றன.

1 பசுக்களைக் காக்க நினைப்போர், நள்ளிரவில், ஒருவரும் அறியாதபடி தடுத்த கரந்தையாரைக் கொன்று களவு செய்வானேன்?

2 நள்ளிரவு, களவு, கொலை — இவை அறமா?

3 காக்க வேண்டிய வீட்டு விலங்கு பசு மட்டுமா? மான், முயல், கோழி, ஆடு, எருமை ஆகியன வளர்க்கப் பட்டனவே.[51] அவற்றைக் காக்க அரசன் நினையாதது ஏன்? இவ்வினுக்கள் அளிக்கும் ஒரே விடை. ஆநிரை கவர்ந்ததற்கும், காக்கப்பட வேண்டும் என்று எண்ணப் பட்டதற்கும் காரணம் வேறு இருத்தல் வேண்டும் என்பதே.

பசுமாடும் பார்ப்பனரும்

பசுமாடுகளுடன் பார்ப்பனர்க்கும் கேடு ஒன்றும் வரலாகாது என்பது சங்ககால நெறி.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெரு அ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும் அரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை மறம்,

என்பது புறப்பாட்டு.[52]

'பார்ப்போர் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனும் இவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்க'

என்பது சிலம்பு.[53] இவற்றுள், பசுவும், பார்ப்பனரும் காக்கப்பட வேண்டும் என்ற வேட்கை வெளிப்படையாகப் பேசப்பட்டிருக் கிறது. இதனுல், பார்ப்பனர்,[54] அரசர், வணிகர், வேளாளர் எனற நால்வருள், போரினின்று பார்ப்பனர் மட்டும் ஊனப் படாமல், பசுக்களுடன் காக்கப்பட்டனர் என்பது தெளிவாகிறது. 'வாழ்க அந்தணர், வாழ்க ஆனினம்' என்பது ஞானசம்பந்தர் தேவாரம்.[55] போர்ப்பணி, பார்ப்பனர்க்கு இல்லை என்பது தொல் காப்பிய உரையால் துலக்கமாகும். ஓதல், பகை, தூது - என்ற மூன்று அடிப்படையில் பிரிவுகளைச் சமைத்த தொல்காப்பியம், அந்தணர், அரசர் என்ற உயர்ந்தோர்க்கே ஓதற் பிரிவும், தூதுப் பிரிவும் உண்டு ('ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன,) என்று கூறு வதன் மூலம், அந்தணர்க்குப் பகைவயிற் பிரிவு இல்லை என்பதை எதிர்மறை முகத்தான் உணர்த்துகிறது.[56] அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' என்ற இடத்தும், இளம், நச்சர். ஆகிய இரு பழைய உரையாசிரியர்களும் அந்தணர்க் குரியதாகப் போர்க்

கடமையைச் சுட்டவில்லை. ஆக, தொல்காப்பியப் பார்வையிலும், பழைய உரையாசிரியர் பார்வையிலும் போர்க் கடமை அரசர் கடமை ஆகி விட்டது[57] அரசரின் மகனே அரசன் ஆவன் என்ற கருத்து என்று தோன்றியதோ அன்றே பிறப்படிப்படையில் மனிதப் பகுப்பு அடக்கப் பட்டுவிட்டது என்றுகிறது. சங்க இலக்கிய அரசர் மரபு, பிறப்பு அடிப்படையில் அமைந்தது.[58] அமையவே ஏனைய இனப் பிரிவுகளும் பிறப்பு அடிப்படையில் அமைந்திருந்தன. ஆக, போர்களில், அரசரும், வேளாளரும், தலைமை பெற்றனர். சங்க காலத்தில் போர் யாவர்க்கும் கட்டாய மாக்கப்பட்டது போலத் தோன்றும். 'ஒளிறுவாள் அரும்சமம் முறுக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே.[59] என்பது போன்ற கூற்றுகள் அத்தோற்றத்தை வற்புறுத்தும். ஆனால் ஊன்றிப் பார்ப்பின், இவையெல்லாம் அந்தணரைத் தவிர்த்த ஏனையோர்க்கே என்பது விளக்கமுறும். அதனால்தான் போர்க் காலத்தில் பிறப்பால் அந்தணர் ஆனவர்க்குக் காப்பு அளிக்கப் பட்டது.[60] அந்தணர்க்கு மட்டுமன்றி அவர் மிகவாகப் போற்றும் பசுக்களுக்கும் பாதுகாப்பு நல்கப்பட்டது. வேதங் களில், பல துதிப்பாடல்கள், பசுக்களைக் காப்பாற்றுமாறு வேண்டு வதாக அமைந்துள்ளன.[61] வேத வேள்விகளில், பசு தலைமை வாய்ந்ததாகக் கருதப்பட்டது. 'கபிலை கண்ணிய வேள்வி நிலை' (காளை-பசு) என்றே தொல்காப்பியம் சுட்டுகிறது[62] மணிமேகலை யில் இடம் பெற்றுள்ள ஆபுத்திரன் வரலாறு, அந்தணர், வேள்விக் காகக் கட்டி வைத்திருந்த பசுவைச் சுற்றிப் படைக்கப்படுகிறது.[63] வேத வழக்கைப் பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்ட மகாபாரத விராட பருவத்தில், விராட நகரத்திலிருந்த ஆநிரை களைத் திரிகர்த்தன் என்பான் கவர்ந்து செல்லும் நிகழ்ச்சிகளும், அருச்சுனன், மாறு வேடத்தில் ஆநிரைகளை மீட்டு வரும் நிகழ்ச்சி களும் இடம் பெற்றுள்ளன.[64] பிரம்மா பசுவையும், பிராமண ரையும் ஒரே நாளில் படைத்தனர் என்பர். பசுவும், பிராமணரும் ஒத்த தூய்மைய என்பர்; பசுவைக் கொல்வது பிராமணரைக் கொல்வதற்கு நிகர் என்பர். பசு ஆழ்ந்த மதிப்பிற்குரியது என்பர்; ஆரியருடன் மிகு தொடர்புடையது என்பர்.[65] சமற்கிருதம் உள் ளிட்ட இந்தோ-ஈரோப்பிய மொழிகளிலே போர்வீரர் குழு, எனில் 'பசுக்களைத் தேடிச் செல்வோர் கூட்டம்' எனவும், பாது காப்பு அளித்தல் எனவும் பொருள்படும் சொற்கள் உள்ளன. ஆக இவை அனைத்தையும் ஒருங்கு நோக்க, ஆநிரை, தமிழரைக் காட்டி லும், ஆரியரோடுதான் நெருங்கத் தொடர்புடையது என்பது புலனாகும். எனவே பசுக்களைக் கவரும் பழக்கம், பண்டைத் தமிழர்தம் சொந்தப் பண்பாடு அன்று என்பதும் தெளிவாகும்.

இச்செய்தியை 'ஆநிரை' யுடன் தொடர்புடைய 'தொறு' என்ற சொல் வரலாறும் உறுதி செய்கிறது. ஆநிரை கோடல், பிற்காலக் கல்வெட்டுகளில் 'தொறுக் கொண்ட ஞான்று' என்றே சுட்டப்படுகிறது.[66] பதிற்றுப்பத்து, பசுமாடுகள் கட்டி நிறுத்தப் பட்ட வயலைத் 'தொறுத்த வயல்' [67] என்றே வழங்குகிறது. ஆனால் இச்சொல் வழக்காறு தொல்காப்பியத்துள் இல்லை. 'தொழுவும் ஆனிரையும் தொகுதியும் தொறு எனல்' என்பது பிங்கல நிகண்டு.[68]

'தொறு' என்பது 'துரு' என்றும் வழங்குகிறது.[69] இச்சொல், தமிழ், கன்னடம், கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம், செக்கு, செர் மனி, அசீரியம் ஆகிய மொழிகளிலும் ஏறத்தாழ ஒத்த வடிவத்தில் புழங்குகிறது. இச்சொல் எம்மொழிக்கு உரியது என்பது ஆய்விற் குரியது.

தவ்ரசு மலையைச் சார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்த இட்டைட் (Hittites) மக்கள் புயற்காற்றுத் தெய்வத்தையும் அந்தத் தெய்வத்தின் ஊர்தி ஆகிய எருதையும் வணங்கினர்கள். தவ்ரசு மலைகளிலே ஆங்காங்கே எருதுகளுக்குச் சிறு சிறு கோவில் கள் அமைந்திருந்தன. இங்கிருந்துதான் எருது வழிபாட்டு வழக்கம் வேறு நாடுகளுக்குச் சென்றது என்பர். எகிப்து, பாபி லோனியம், கிரேக்கம் முதலிய நாடுகளுக்கு எருது வழிபாடு இங்கி ருந்து சென்றது. இங்கிருந்து எருது வழிபாடு இந்தியாவிற்கும் வந்திருத்தல் கூடும்.[70]

ஆக, ஆநிரை என்பதனோடு இணையான 'தொறு' என்ற சொல், எருது வழிபாடு என்பன தமிழர் தம் உடைமைகள் அல்ல என்பது இச்சொல் லாய்வாலும் உறுதி ஆகிறது.

ஆநிரை கோடலே அயல்நாட்டுப் பழக்கமா?

பசுக்கள், தமிழரினும், ஆரியருடனே நெருக்கத் தொடர் புடையவை. ஆனால் இவ்வாறு நிரை கவரும் பழக்கம் எல்லா ருக்கும் உரியது. மிகப் பழங்காலத்தில் ஆடு மாடு முதலாயினவே செல்வங்களாகக் கருதப்பட்டன. திருவள்ளுவர் செல்வம் என்ற பொருளிலேயே 'மாடு' என்பதை ஆளுவர்.[71] பழங்குடி மக்கள் பக்கத்துள்ளார் தம் செல்வத்தைக் கவருதல் பண்டைய மரபாக இருந்தது. தமிழரிடமும் இப்பழக்கம், பழங்காலத்தில் எருமை கவர்தலாகவே இருந்திருத்தல் வேண்டும். எருமை மாடுகளே, பழந்தமிழரின் உடைமைகள். இன்றும் தென்புலப் பழங்குடியின ரான தோடர், கோத்தர்—ஆகியோர் எருமைகளையே செல்வ மாக போற்றுவர்.[72]

திராவிட பழங்குடியினரிடம் எருமைச் செல்வம்

நீலகிரிப் பகுதியில் இன்றும் வாழும் தோதுவர், திராவிடப் பழங்குடியினர். இவர் பேசும் மொழி திராவிடம் ஆகும். இவர் தம் வாழ்வு, எருமைச் செல்வத்தைச் சுற்றியே அமைந்துள்ளது. அதனால் இவரை, 'எருமையின் குழந்தைகள்' என்றே மொழிவர். எருமையை வைத்தே இவர் தம் செல்வம் கணக்கிடப்படும்.[73] இவர் பேசும் தோடர் மொழியில் எருமையைக் குறிக்க நூற்றிற்கு மேல் சொற்கள் புழங்குகின்றன. தெய்வத்திற்கு அடுத்த படியாக எருமையைத்தான் தெய்வமாக வழிபடுகின்றனர். இவர் தம் வாழ்க்கையில் பலவகைச் சடங்குகள் உள்ளன. அச் சடங்குகள் பெரும்பாலும் எருமைகளை அடிப்படையாகக் கொண்டவை.[74] தோதுவர் மட்டுமின்றி, திராவிடப் பழங்குடியினரான கோத்தர் களும் எருமையைப் பெரிதாகப் போற்றுவர்.[75]

சங்க இலக்கியத்துள், தமிழ் நாட்டவராகக் குறிக்கப்படும், 'எருமை வெளியனார்'[76] எருமை வெளியனார் மகனார் 'கடலனார்'[77] என்ற புலவர் பெயர்கள் வழங்குகின்றன. 'எருமை வெளிய' என்ற பெயரினை உடையவன் சங்கப் புலவர்களால் பாடப் பட்டிருக்கிறான்.[78] 'எருமை ஊரன்' என்றே ஒருவன் குறிக்கப் படுகிறான்.[79] பண்டு, மைசூர் நாடு தமிழ்ப்புலமாக இருந்த போது அஃது எருமை நல்நாடு என்றே வழங்கப்பட்டது. மைசூர் - எருமை ஊர் என்றே போற்றப்பட்டது. எருமை ஊரே, சமற்கிருத ஆதிக்கக் காலத்தில் மகிஷனூர் ஆகி மகிஷனூர், மைசூர் என்று ஆகி இருத்தல் வேண்டும்.[80] இச்சங்க இலக்கியச் சான்றுகள், எருமை, தமிழரோடு ஒன்றி இருந்த உயர் வைக் காட்டுகின்றன.

தொல்காப்பியர் காட்டும் கருப்பொருள் பட்டியலில், ஒவ் வொரு நிலத்திற்கும் பொருத்தி விளக்கும் இளம்., பசுவை யாண்டும் சுட்டாமல், எருமையை மருதக் கருப்பொருளாகச் சுட்டிப் போற்றுகிறமை ஈண்டு எண்ணத்தகும்.[81]

மாடு—செல்வம்

செல்வக் கவர்ச்சியே வெட்சிப் போருக்கு மூலம். அக்காலச் செல்வம் மாடுகளே. தமிழரைப் பொறுத்த அளவில் மாடுகளே ஒரு காலத்தில் செல்வமாக இருந்தன என்பதை 'மாடு அல்ல மற்றையவை'[82] என்ற குறளாட்சி காட்டும். மாடு என்பது எருமைகளையே குறிப்பது. இன்றும் திராவிடப் பழங்குடியின ரான தோதுவர் எருமை மாடுகளையே செல்வமாகப் போற்றுவது இதனை வற்புறுத்தும். சங்க இலக்கிய வழக்காறும் எருமையைப்

அட்டவணை 22

வெட்சி, கரந்தை உட்பிரிவுகளும் பொருளும்

எண் (1)	வெட்சி வகை (2)	நிரை கவர்தல் (வெட்சிப் பொருள்) (3)	நிரை மீட்டல் (கரந்தைப் பொருள்) (4)
1	படை இயங்கு அரவம்	நிரை கோடற்கு எழுந்தபடை பாடிப் புறத்துப் பொருந்தும் அரவம்	நிரை மீட்டற்கு எழுந்த படை விரைந்து செல்லும் அரவம்
2	பாக்கத்து விரிச்சி	நிரை கோடற்கு எழுந்தோர் போந்து விட்ட பாக்கத்துக் கங்குலின் நல்வாய்ப்புள் கேட்டலும்	நிரை மீட்டற்கு எழுந்தோர் இடைப் புலத்துப் புறம் போந்தோர் கூறியவற்றை வாய்ப்புள்ளாகக் கேட்டலும்
3	புரைகெடப் போகிய செலவு	நிடைகோடற்கு எழுந்தோர் ஆண்டு நின்று மீண்டு போய்ப் பற்றூர் புலத்து ஒற்றர் உணராமல் பிற்றை ஞான்று சேறலும்	நிரை மீட்டற்கு எழுந்தோர் ஆண்டு ஒற்றப்படாமல் சேறலும்
4	புடைகெட ஒற்றின் ஆகிய வேய்	நிரைகோடற்கு எழுந்தோர் பகைப்புலத்து ஒற்றர் உணராமல் சென்று ஒற்றி அவ்வொற்று வகையான் அவர் உணர்த்திய குறளைச் சொல்	நிரைமீட்டற்கு எழுந்தோர்தமது அங்ஙனம் ஒற்றிய ஒற்று வகையான் வந்து ஓதிய குறளைச்சொல்
5	வேய்ப்புறம் முற்றின்ஆகிய	நிரைகோடற்கு எழுந்தோர் வேய் உரைத் தோரிடத்துச் செய்யும் சிறப்புகள் முடிந்த பின்னர் உளதாகிய நிரைப் புறத்து ஒடுங்கிய இருக்கைப் பகுதி	நிரை மீட்டற்கு எழுந்தோர் தமது நிரைப் புறத்துச் சென்று விரைவு ஒழிந்து இருக்கின்ற இருக்கை
6	முற்றிய ஊர்கொலை	நிரை கோடற்கு எழுந்தோர் அவர் புறஞ் சேரியை வளைத்துக் கொண்டு ஆண்டு நின்ற நிரைகாவலரைக் கொன்று பகை அறுத்தல்	நிரை மீட்டற்கு எழுந்தோர் அவ்வூரை விட்டுச் சிற்றூரைக் காத்துக் கோறல்

7	ஆகோள்	நிரை கோடற்கு எழுந்தோர், எதிர் விலக்கு வோர் இலராக நிரையகப்படுத்தி மீட்டல்	நிரை மீட்டற்கு எழுந்தோர் தமது நிரையை சுற்றமின்றி மீட்டல்
8	பூசல் மாற்று	நிரை கொண்டு போகின்றூர் தம்பின்னே உளைத்தற் குரலோடு தொடர்ந்து சென்று ஆற்றிடைப் போர் செய்தோரை மீண்டு பூசலை மாற்றுதல்	நிரையை மீட்டுக் கொண்டு போகின்றோர் தம் பின்னர் வந்து போர் செய்தோரை மீண்டு நின்று பூசலை மாற்றுதல்
9	நோய் இன்று உய்த்தல்	நிரை கொண்டார் அங்ஙனம் நின்று சிலர் பூசல் மாற்றத் தாம் கொண்ட நிரையினை இன்புறுத் திக் கொண்டு போதல்	மீட்டோரும் அங்ஙனம் நின்று நின்று சிலர் பூசல் மாற்றத் தாம் மீட்ட நிரையினை இன்புறுத்திக் கொண்டு போதல்
10	நுவலுழித் தோற்றம்	பாடி வீட்டுள்ளோர் மகிழ்ந்துரைத்தற்குக் காரணமான நிரை கொண்டோர் வரவு	ஊரிலுள்ளோர் கண்டு மகிழ்ந் துரைத்தற்குக் காரணமான நிரை மீட்டோர் வரவு
11	தந்து நிறை	நிரை கொண்டோர் தாம் கொண்ட நிரையைத் தம் ஊர்ப்புறத்துத் தந்து நிறுத்தல்	நிரை மீட்டோர் தாம் மீட்ட நிரையினைத் தந்து நிறுத்தல்
12	பாதீடு	வேந்தன் ஏவலால் தாம் கொண்ட நிரையைப் பகுத்துக் கோடல்	மீட்டோரும் தத்தம் நிரையைப் பகுத்துக் கோடல்
13	உண்டாட்டு	நிரை கொண்டோர் தாம் கொண்ட நிரையைப் பார்த்துத் தாம் கொண்ட மகிழ்ச்சியால் சுற்றத் தொடு கள்ளுண்டு மகிழ்ந்து விளையாடுதல்	நிரை மீட்டோர் வென்று நிரை மீட்ட கொற்றத்தான் உண் டாடுதல்
14	கொடை	தாம் கொண்ட நிரையை இரவலர்க்கு வரை யாது கொடுத்து மனம் மகிழுதல்	நிரை மீட்டோர்க்கு வென்றிப் பொருட்டு விளைந்த கொடைப் பகுதி

போற்றும் ஒரு நாட்டையே 'எருமை நன்னாடு' என்று அன்றைய தமிழர் போற்றினர். எருமைமாடுகளைக்கவர்தலையும், மீட்டலையும் கல்வெட்டுகள் குறிப்பிடும். இவற்றை நோக்க பண்டைய வெட்சிப் போரில், தமிழரிடத்து எருமைத் தொறு கவர்தலே இருந்திருத்தல் வேண்டும். காலப் போக்கில் பசுமாடுகளுடன் வந்த ஆரியர்தம் வரவும், உறவும் பெருகிய பிறகு போரில் புண் படாமல் அந்தணர் காக்கப்பட்டது போன்று, தம் பசுநிரை களையும் காக்க ஆரியர் வழிவகை செய்தனர் போலும்.[83]

வெட்சித்திணை

வெட்சித் திணையைப் பதினொன்று வகை என வரையறுப்பர் தொல்காப்பியர். இப்பதினொன்களுக்கும், இளம்., பாரதி,குழந்தை ஆகியோர் உரை காணும் முறை ஒரு வகை.அன்னோர், வெட்சிக் குரிய நிரை கவர்தலையே பதினொன்று ஆக்கி உரைப்பர். நச்சர் உரை காணும் முறை பிறிதொரு வகை. நச்சர் ஒவ்வொரு வகை யையும், வெட்சிக்கும் கரந்தைக்குமாகப் பொருத்தி, இருபத் தெட்டாக்கி உரைப்பர். நச்சர் விளக்கும் முறையாவது: (பார்க்க அட்டவணை. 22)

நச்சர், ஒவ்வொரு வகையையும் கரந்தைத்திணையோடு (நான்காவது கட்டத்தில் இருப்பன) பொருத்தி உரைப்பது போல மற்றவர் உரைக்கவில்லை. அன்றியும் இவ்வாறு கரந்தையோடு பொருந்த உரைப்பதைப் பொருந்தாது என்பதைக் குறிப்பால் சுட்டுவர் பாரதி.[84]

ஆழ்ந்து நோக்கின் நச்சர் பொருளுரையின் பொருத்தம் புலப் படும். தொல்காப்பியர் கருத்தில், நிரை கவர்தலும், மீட்டலும் வெட்சியின்பாற்படும்; கரந்தை எனத் தனித்திணை இன்று. எனவே, இங்கே கூறப்பட்ட வகைகள் நிரை கவர்தலுக்கும் நிரை மீட்டலுக்கும் பொருந்தி இருப்பது வெள்ளிடை. அது நச்சர் உரையால் உறுதியுறுகிறது. வெட்சி அரவம் முதலாயினவற்றை நிரை மீட்டலுடன் பொருந்த உரைப்பது தொல்காப்பிய நூற் பாவின் பொருட் செறிவையும் சிறப்பிக்கிறது. ஆகவே நச்சர். உரையை, மயக்கம் என ஒதுக்காது, சிறந்த விளக்கம் என்று கொள்ளலாம்.

புடைகெடப் போகிய செலவு

பக்கத்து இடம் இல்லையாம்படி படை பரந்து செல்லுதல் என்பர் பாரதி. 'செவ்வானம் செல்வது போல் செல்கின்றார்' என்று காட்டும் காட்டுவர். இளம்பூரணரும். நச்சினார்க்கினியரும்

'தம் நாட்டகத்து இருக்கும் ஒற்றர்கள் அறியாதவாறு போதல்' என்பர். முன் தங்கி இருந்த இடத்தைவிட்டுப் பகைவர் இடம் போவர் என்பர் குழந்தை. உரை வேறுபாட்டிற்கு மூலமாக நிற்பது 'புடை' என்ற சொல்.

இளம்பூரணர்: பக்கம் கெடப் போகிய செலவு. பக்கம் கெடுதலாவது, மாற்றரசர் பக்கத்தாராகித் தம்மாட்டு ஒற்றெடு நிற்பார் அறியாமல் போதல். பக்கத்தில் உள்ளாரைப் பக்கம் என்ப.

பாரதி: புடை - பக்கம் - பக்கத்து இடம் இல்லையாம் படி படை பரந்து செல்லுதல்.

குழந்தை: புடை - இடம்: முன் தங்கி இருந்த இடம்.

மூன்று உரை வகையுள் இளம்பூரணர் உரையே சிறந்து நிற்கிறது. வெட்சிப் போரைப் பிறர் பெரும்படை எடுப்பு என்று எண்ணி உரை எழுதுவர். அதனால்தான் பக்கத்து இடம் இல்லையாம்படி, இடம் அடைத்துக் கொண்டு படை நடத்திச் செல்வதாக உரைப்பர். வெட்சிப்போர் அத்தகையது அன்று. சிறுசிறு குழு இடையே நடக்கும் போர். மேலும் சில சமயங்களில் அஃது ஓரிருவர் இடையே கூட நடத்தல் உண்டு. நிரை கவரச் செல்வான் ஒருவனே என்ற கருத்துப்படப் புறநானூற்றில் பாடல் அமைந்துள்ளது.[85] புறநானூற்றினும் மேலும் தெளிவாக 'ஒருமகன்' ஆக வெட்சி சூடி நிரை கொள்ளப் போவதைச் சிலப்பதிகாரம் காட்டும்.[86]

ஆக மேற்கண்ட சான்றுகளைக் கருத, வெட்சிப் போரைப் பெரும்படை எடுப்பு எனக் கருதும் உரை பொருத்தமின்று என்பது புலப்படும். தன் நாட்டில், தன் பக்கத்தில் உள்ள அயல் நாட்டு ஒற்றர் அறியாமல், வெட்சி வீரன் செல்வான் என விளக்கும் இளம். உரையே இங்குப் பொருந்துவது.

பூசல் மாற்று

வெட்சி வகையுள் ஒன்றான பூசல் மாற்று என்பதும் ஈண்டு இணைத்து நோக்கத் தக்கது. இது பெரும்போர் அன்று. 'வெறும் பூசலே' என்று வேறுபாட்டைக் காட்டுதற்காகவே, தொல்காப்பியர் 'பூசல்' என்ற சொல்லைப் பெய்தனர். வெட்சியுள் அடங்கியுள்ள பூசல் என்பதும், வெட்சி ஒரு படையெடுப்பு அன்று என்பதை உணர்த்துவதாகும். 'முன்னூர்ப் பூசல்' என்றே இதனைப் புறநானூறு குறிப்பிடும்.[87] கம்பவர்மன் காலக் கல்வெட்டு அவன் காலத்து நடந்த வெட்சிப் போரைப் பூசல்' என்றே பேசும்.[88]

முற்றிய ஊர்கொலை

சூழப்பட்ட ஊரை அழித்தல் என்பர் இளம். வெட்சியார் நிரைகவரும் போது தடுக்கச் சூழ்ந்த நிரை காவலரைக் கொல்லுதல் என்பர் பிறர். ஊர் என்பது ஆகுபெயராக நின்று நிரை காவலரைக் குறித்தது. தம் காவலில் உள்ள நிரைகள் கவரப்படும் போது காவலர் தடுப்பர்; பொருவர். நிரை கவரும்போது இவ்வாறு நிகழும் பூசலில், இரு திறத்தாரும் கொல்லப்படுவர். இச்செய்தியை புறநானூற்றுக் கரந்தைப் பாடல்கள் உறுதி செய்யும்.[89] வெட்சி வீரர், தம்மை எதிர்த்தவரை வாளால் வெட்டிச் சாய்ப்பதைப் புறநானூற்று வெட்சித் திணைப்பாட்டுப் படம் பிடித்துக் காட்டும்.[90] இலக்கிய வழக்காறுகள் மட்டும் அன்றிக் கல்வெட்டுச் செய்திகளும், இக்கொலைச் செய்தியை உறுதி செய்யும்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில், தொண்டை நாட்டை ஆண்டவன் கம்பவர்ம பல்லவன். அவனது மூன்றாம் ஆட்சி ஆண்டில் நடந்த வெட்சிப் போரைப் பற்றிச் சின்னய்யன் பேட்டைக் கல்வெட்டு எடுத்துரைக்கும். எயில் நாட்டார், பாசாற்றூரில் இருந்த எருமைத் தொறுவைக் கவர வந்தனர். பாசாற்றூரார் எருமைகளை மீட்கப் பொருதனர். காரிப் பெருமான்மிகக் கடுமையாக வெட்சியாரைத் தாக்கினன். மலையருகிலும், ஆற்றுக்கரை அருகிலுமாக வெட்சியாரைத் துரத்திதுரத்தி அடித்தான். ஆனால், காரிப் பெருமகன் அம்பறாத் தூணியில் இருந்த அம்புகள் அனைத்தும் தீர்ந்து விட்டன. தன் உடைவாளை உருவிப் பொருதான். வெட்சி வீரர்கள் அம்புகள் காரிப் பெருமானின வீர மேனியைப் பதம் பார்த்தன. காரிப் பெருமான் அங்கேயே மடிந்து வீழ்ந்தான்.[91] ஆக மேலே கண்ட, இலக்கிய, கல்வெட்டுச் செய்திகளை நோக்க 'ஊர் கொலை' என்பதற்கு, எதிர்த்த மறவரைக் கொல்லுதல் என்று பொருள் கொள்ளுதலே பொருத்தம்.

குடிநிலை, துடிநிலை, கொடிநிலை

'மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த கொற்றவைநிலையும் அகத்திணைப் புறனே' என்பது தொல்காப்பிய நூற்பா. இதன்கண் இளம். 'குடிநிலை' என்று பாடம் ஓத, நச்சர். 'துடிநிலை' என்று பாடமோதி உரை வகுப்பர். பாரதி நச்சர்; கருத்தை வழிமொழிவர். பின்னர், 'துடிநிலை' என்ற பாடத்திலும், கொடிநிலை என்ற பாடம், மிகப் பொருந்துவது என்பர்.

குடிநிலை என்ற பாடமும் பொருளும்

மறத்தொழில் முடித்தலை உடைய குடியினது நிலைமையைக் கூறுவது என்பர் இளம். இதற்குச் சான்றாக, புறநானூறு 279, 289

ஆம் பாக்களையும், பெரும்பாண் ஆற்றுப்படை (134-146) வரிகளை யும் காட்டுவர். இப்பாக்கள் ஆண்பால் பெருமை கூறுவனவாயும் பெண்பால் பெருமை கூறுவனவாயும் அமைந்துள. இவற்றை வாகைத் திணைக்கண் வகைப்படுத்துவர் புறப்பொருள் வெண்பா மாலை ஆசிரியர். புறநானூற்றுத் துறை வகுத்தவர்தம் கருத்தும் வாகைத்திணையே என்பது, 279, 289 ஆம் புறப்பாக்களின் திணை, துறைக் குறிப்புகளால் விளக்கமாகும். வென்ற குடிமக்களின் பெருமை பேசப் பெறுதலே இயல்பு என்பதால், இவை வாகைத் திணைக்குள் போற்றப்பட்டன போலும். இவற்றைக் குறும்போர் தொடங்க இருக்கும் வெட்சியில் பேசுவது பொருத்தம் அன்று.

கொடிநிலை என்ற பாடமும் பொருளும்

தற்காலத்துக் கொடி பிடித்துச் செல்லும் கோலத்தைக் கண்டு, அக்கால மறவரும் கொடி பிடித்துச் சென்றனர் என்று கருதிப் போலும் கொடிநிலை எனப் பாட மோதிப் பொருள் உரைத் தனர். வெட்சிப் பூசலைக் குறும்போர் என்று கருதாமல், பெரும் படை எடுப்பு என்றும், அதனைப் படையெடுப்பின் முன்னேட்டம் (Prelude) என்றும் கருதுவதால் இவ்வாறு பொருள் காண நேரிட் டது. வெட்சி-தனிப்பெரும் போர் அன்று; போர்த்தொடக்கமும் அன்று; அடங்கா மறவர் குழு தம்முள் பசுக் களவிற்காக நிகழ்த் திக்கொண்ட பூசலே.[92] ஆதலால் போர்த் தொடக்கத்தில் கொடி பிடிப்பர்' என்ற கருத்தில் பொருள் உரைப்பது பொருந்து மாறில்லை அன்றியும் கொடியை அரசர்க்குரியதாகவே தொல் காப்பியர் அறிவிப்பர்.[93] மூனைஞர் இடையே நிகழும் போரில் கொடிநிலை அக்காலத்தில் அத்தனைச் சிறந்திருக்க வாய்ப்பில்லை.

கொடிநிலை என்ற பாடமும் பொருளும் காண சோமசுந்தர பாரதிக்கு பிறிதோரிடத்தில் அவர் கொண்ட பாடமே அடிப் படைக் காரணம். பாடாண் திணையில் (33), பிறர் எல்லாம், 'கொடிநிலை கந்தழி, வள்ளி' என்று கொள்ள, பாரதி, 'கொடிநிலை, காந்தள், வள்ளி' என்று பாடம் ஓதினர். காந்தள், வள்ளி என்பன முன் நூற்பாக்களில் கூறப்பட, கொடிநிலை ஒன்றுமே கூறப்படாதிருத்தலைக் கண்ட அவர் இந்நூற்பாவில், மறங்கடைக் கூட்டிய கொடிநிலை' என்று பாடம் காட்டினர்.[94]

வெட்சியைப் பூசல் என்றே கொள்ள வேண்டி இருத்த லானும், கொடியை ஊர் மறவர் எல்லாம் பிடித்தார் என்பது தொல்காப்பியர்க்கு முற்பட்ட பழக்கம் அன்று என்பதனானும், தொல்காப்பியரே கொடியை அரசர்க்குரிய ஒன்றாக அமைத்த லானும், அனைத்து மறவர்க்குரியதாக அவர் அமைக்காமையானும்,

சோமசுந்தர பாரதி தாம் பாடாண்திணை நூற்பாவிற்கு ஒதும் பாட பேதம், பழம் பிரதிகள் எதனுள்ளும் காணப்படாமை யானும் 'கொடிநிலை' என்ற பாடம் பொருத்தமற்றதாகிறது. நச்சர், 'குடிநிலை' என்பதைத் 'துடிநிலை' எனத் திரித்ததாகக் கூறு வதும் பொருந்துமாறில்லை. 'குடிநிலை' என்று பாடம் ஓதிப் பொருள் உரைக்கும் இளம்பூரணத்திலேயே 'துடிநிலை' வேறு பாட மாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே 'கொடிநிலை' என்பது பழம் பாடம் அன்று என்பதும், தொல்காப்பியர்க்குப் பொருந்துவது அன்று என்பதும், தெளிவாகும்.

துடிநிலை என்ற பாடமும் பொருளும்

துடிநிலை என்பதைப் பாடமாகக் கொண்டு நச்சினார்க்கினியர் உரை எழுதுவர். 'போர்க்களத்து மறவரது மறத்திணைக் கடைக் கூட்டிய துடிநிலை' என அவர் பொருளுரைப்பர். நிரை கவர் வோரும், மீட்போரும் துடியை முழக்குவர். போர்க் காலத்தில் வெட்சி வீரர் நிரை கவரும்போது துடியை அடிப்பதாக வரும் அக நானூறு நச்சினார்க்கினியர் கருத்தை வற்புறுத்தும்.[95]

பெரும்போரில் முழக்கப்படுவது முரசு. வெட்சிப் பூசலின், மறவர் குழு அடிப்பது துடி. இந்த வேறுபாட்டை அகநானூற்றி லுள்ள வழக்கு நினைவுறுத்தும்.[96] போர் முரசு, போரின் தொடக் கத்தில், மறவர்களைத் திரட்ட முழக்கப்படும். ஆனால் துடி அடிப்பது போருக்கு முற்செயல் அன்று. நிரைகளைக் கவரும் போது துடியை அடித்து முழக்குவர் என்பதை 'ஆடுகொள் பூசலின் பாடு சிறந்து எறியும் பெருந்துடி' என்ற அகப்பாட்டு வரி கர்ட்டும். இவற்றுனும், வெட்சி — பெரும் போரைக் குறிப்பதன்று என் பதும், குழுப்பூசலையே குறிக்கிறது என்பதும் வலியுறும்.

துடிநிலையும் புறநானூறும்

குடிநிலை உரைத்தல் ஒரு பாட்டின் துறையாகப் புற நானூற்றில் (290) கூறப்படினும், துடிநிலை, வெட்சி மறவரோடு இணைத்துக் காட்டப் பட்டுள்ளமையைக் காணலாம். 269 ஆம் வெட்சிப் பாட்டில் உவலைக் கண்ணித் துடியன் வெட்சி மறவனைக் குறிக்கப் பெறுவன். 287 ஆம் புறப்பாட்டில் கரந்தைத் திணையில் 'துடி எறியும் புலையன்' அழைக்கப் பெறுவன். 291 ஆம் புறப்பாட்டில், 'துடியர்' விளிக்கப்படுவர். ஆக இவற்றை நோக்க, துடி அடித்தல், வெட்சி மறவர்தம் வினைப்பாடு என்பது தெளிவுறும். துடி அடித்தல் கரந்தை மறவரிடம் இருந்த தாக இலக்கிய வழக்காறுகளைக் கண்ட நச்சினார்க்கினியர், துடி நிலைத்துறையை விளக்கும்போது, நிரை கொண்டோர்க்கும், மீட்

டோர்க்கும் பொது என்றனர்; மற்றவர் இவ்வுண்மையைக் கண்டு கூறினரில்லை;

துடியும் பாலைக் கருப்பொருளும்

பாலை நிலத்திற்குரிய கருப்பொருளில், பறை பற்றிக் கூறுகிற போது, நச்சர். 'நிரை கோட் பறை' என்பர்.[97] நம்பி அகப் பொருளார், 'துடி' என்பர்.[98] இவ்விரண்டையும் பொருத்தி நோக்கத் 'துடி' என்பது நிரை கொள்ளுதலுக்காக அடிக்கப்படும் 'பறை' என்பது தெளிவாகும்.

கொற்றவை

பாலைக்குரிய தெய்வத்தைக் குறிப்பிடும் பொழுது இளம். கொற்றவையைக் குறிப்பர்.[99] நம்பி அகப்பொருளார் கொற்ற வையைக் கன்னி என்று குறிப்பர்.[100] ஆக இவற்றை நோக்க, துடி நிலையைக் கொண்ட பாலை நிலத் தெய்வம் கொற்றவை என்பதாயிற்று. தொல்காப்பியர், மறங்கடைக் கூட்டிய துடி நிலையை அடுத்துச் சிறந்த கொற்றவை நிலையைக் குறிப்பர்.[101] எனவே, பாலை நிலப்பொருத்தமும் கொற்றவை என்ற கருப் பொருள் பொருத்தமும், சேர்ந்தமைந்து குடிநிலை, கொடிநிலை எனப் பாடம் அமைப்பது - பொருளுரைப்பது - பொருத்தம் அன்று. துடிநிலை எனப் பாடம் அமைப்பது, பொருள் உரைப் பதுவே பொருத்தம் என்பதை உறுதி செய்யும்.

துடிநிலையும் கொற்றவை நிலையும்

துடி அடிப்பதும், கொற்றவை வழிபாடும் பாலை நிலத்திற்குப் பொருந்துவன. அன்றியும், பாலை நிலக் கருப்பொருளுள் ஒன்றான, தொழில் களவு என்பதும் ஈண்டு எண்ணத் தக்கது. இளம். 'ஆறலைத்தல்' என்பர்.[102] பறை பற்றிக் கூறும் போது 'நிரை கோட்பறை' என்பர்.[103] குறை கோடல் என்பது கொள்ளை அடித்தலாம். 'களவில் தந்து ஓம்பல்' வெட்சித் திணையாம். எனவே வெட்சி என்பது முறையான போரின் முன்னேட்டம் அன்று. மறவர் குழுவினர்தம் களவுப் பூசலே. இப்பூசல் தொல் காப்பியர்க்கும் உடன்பாடு. அதனால்தான், துடிநிலை, கொற்றவை நிலை என்ற இரண்டையும் அவர் வெட்சித் திணையில் வைத்துப் போற்றினர்.[104]

துடிநிலையும், கொற்றவை நிலையும் திணைப்புறன்

'மறங்கடைக் கூட்டிய துடிநிலை, சிறந்த கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே' என்றனர் தொல்காப்பியர். அத்திணைப் புறன்' என்பதற்கு, குறிஞ்சித் திணைக்குப் புறன்' என்றே இளம்

பூரணரும், சோம சுந்தர பாரதியும் வரைவர். நச்சினார்க்கினியர் 'வெட்சிக்குப் புறனடை' என்று வேறுபட்டு உரைப்பர். புலவர் குழந்தை நச்சினார்க்கினியரை அப்படியே வழிமொழிவர். நச்சினார்க்கினியர்தம் உரையைச் சோமசுந்தர பாரதி மறுப்பர். அவர்தம் மறுப்பு பொருந்துவ தன்று.

வெட்சி வகையாகக் கூறப்பட்ட பதினன்கினின்று துடி நிலையும், கொற்றவை நிலையும் வேறுபட்டிருப்பதை நச்சர் ஆழ்ந்து சிந்தித்த பின்பே, அவற்றைப் புறனடை என வழங்கி இருத்தல் வேண்டும்.

முன்னே கூறியவற்றுள், துடிநிலை, கொற்றவை நிலை என்ற இரண்டும் பாலைத் திணையின்பாற்பட்டன என்பது விளக்கமாயிற்று. வெட்சித் திணையோ, குறிஞ்சித் திணையின் புறன், அதன் கண், பாலைத் திணைக்குரிய துடிநிலை, கொற்றவைநிலை என்பவற்றை எப்படிச் சேர்ப்பது எனத் தொல்காப்பியர் கருதினராதல் வேண்டும். குறிஞ்சிக்குரிய தெய்வம் சேயோன் என்று முன்பு கூறியவர், இங்கே குறிஞ்சிப் புறனான வெட்சித் திணையில் கொற்றவையைக் கூறுதல் பற்றிக் தடக்கம் காட்டி இருத்தல் வேண்டும். இத்தயக்கம். மூத்த உரையாசிரியரான இளம் பூரணருக்கும் வந்தது. எனவேதான், 'மறங்கடைக் கூட்டிய... ..' என்ற நூற்பாவின் உரை இறுதியில்,

'கொற்றவை நிலை என்றதனானே, குறிஞ்சித் திணைக்கு முருகனே அன்றிக் கொற்றவையும் தெய்வம் என்பது பெற்றும்' என்று எழுதினர். இளம்பூரணரே, அகத்திணையில் (20) நூற்பா விளக்கத்தில் பாலைக்குரிய தெய்வமாகக் கொற்றவையைக் குறிப்பர். அவ்வாறு குறித்தவர், தமக்குத்தாமே முரணி, இங்குக் கொற்றவையைக் குறிஞ்சித் தெய்வம் ஆக்குவர். இம்முரண் பாட்டை நச்சினார்க்கினியர் கண்டிருத்தல் வேண்டும். இம் முரண் பாட்டினைத் தவிர்க்கவே, தம் உரையில், புறனடை (விதிவிலக்கு) என்று குறித்தனர்.

இவ்விரண்டும் வெட்சிக்கே உரியவை எனினும் வாகைத் திணைக்கும் உரியவை. நிரைகளைக் கவர்ந்து சென்ற பின்னரே துடியை மிகுதியாக, மகிழ்ச்சியாய் அடித்து ஆரவாரிப்பர். கொற்றவையை, வெற்றிக்குப் பின்பே வீறுடன் வழிபடுவர்.[105] இரண்டும், வெற்றியை வைத்துச் சிறப்புறுவன. வாகைத் திணையின. இவற்றுனும் பாலைத்திணைக்குப் புறனாக வாகைத் திணை கூறப்பட்டது. வாகைத்திணைக்கு மட்டும் அன்றி, துடி முழக்கலும், கொற்றவை வழிபாடும், எல்லாத் திணைகட்கும் ஓரளவு பொது

வானவை. இப்பொதுமை வெட்சியின் பிற வகை துறைகட்கு இல்லை. எனவே, திணைப் பொதுமையும், வெட்சிக்கே உரிய சிறப்பையும் கருதித் தொல்காப்பியர், வெட்சி வகைப் பட்டியலுள் அடக்காது தனியாகப்-புறனுக-இவற்றை அமைத்தனர் போலும்.

வெறி அறி சிறப்பின் வெவ்வாய் வேலன்.....துறைத்தே

படையியங்கு அரவம் முதலாக, கொற்றவை நிலை ஈறுக (61-62) வெட்சித் திணையின் வகைகள் கூறப்பட்டன. இனி, வெட்சித் திணையின் பிறிதொரு கூறுகிய கரந்தைக்குரிய துறைகள், 'வெறி யறி சிறப்பின்' என்ற நூற்பாவின் மூலம் கூறப்படும். இளம் பூரணர் இவ்வாறே கருதுவர்.

> 'வேலன் முதலாக வெட்சித் திணைக்குரிய துறை கூறினார். இனி அதற்கு மாறுகிய கரந்தைத் திணையாமாறு உணர்த்துதல் நுதலிற்று. அதுவும் ஆநிரை மீட்டல் காரணமாக அந்நிலத்தின் கண் நிகழ்வதாகலின் வெட்சிப் பாற்பட்டுக் குறிஞ்சிக்குப் புறனுயிற்று.[106]

இளம்பூரணர், இவ்வாறு கூறியிருப்ப, நச்சினார்க்கினியர் மாறுபடுவர். 'வெறி அறி சிறப்பின்' என்ற நூற்பாத் துறைகள் இருபத்தொன்றும் பொதுவியல் புகலுவன. அவை புறத்திணை ஏழனுக்கும் பொது எனப் புகல்வர். இவை வேந்தன் ஆணையின்றித் தன்னுறு தொழிலாய் நிகழ்வன. ஆதலின் இவற்றை வழுக்கள் என்பர். இவர் உரையை அங்ஙனமே புலவர் குழந்தை வழி மொழிவர்; அன்றியும் இந்நூற்பாவையே, வெட்சி ஒத்தினின்று அகற்றி, எழுதிணைச் செய்திகளும் முடிந்த பிறகு 'பொதுவியல்' எனத் தனி இயலாகப் போற்றுவர் குழந்தை. இவ்வாறு இவற்றைப் பொதுவியலாகப் போற்றுதற்கும், வழு என வரை தற்கும் காரணம், புறப்பொருள் வெண்பா மாலைச் செல்வாக்கே. இந்நூற்பாவில் கூறப்பட்ட துறைகளுள் பெரும்பாலான புறப் பொருள் வெண்பா மாலை ஆசிரியரால், பொதுவியலாகக் கொள்ளப்பட்டுள.[107]

புறப்பொருள் வெண்பாமாலைக்குப் பலநூறு ஆண்டுகள் முன் தோன்றிய தொல்காப்பியத்தைப் பின்னூற் பார்வையில் பார்த்தல் இலக்கிய வரலாற்று வழு. அன்றியும் தொல்காப்பி யரும், ஐயனரிதனாரும் அடிப்படையிலேயே முரண்படு கொள்கை யினர். முன்னவர் புறத்திணை ஏழு எனப் போற்றுவர்; பின்னவர், பன்னிரண்டு எனப் போற்றுவர். இருவரையும் ஒரு பார்வையில் பார்ப்பது வழு. அன்றியும் நடுகல்லைப் பற்றிப் பேசுவன வெட்சி யும் கரந்தையுமே. தொல்காப்பியர் காலத்தில் வெட்சியார்க்கும்

கரந்தையார்க்குமே நடுகல்கள் நாட்டப்பட்டன. நடுகற் செய்திகளை, வெட்சித்திணை - கரந்தை பற்றிய நூற்பாவில் மட்டுமே தொல்காப்பியர் அமைத்திருப்பதனால் இது தெளிவாகும். அன்றியும், நடுகல் பற்றி வரும் புறநானூற்றுப் பாடல்களும் மிகப் பெரும்பான்மை, கரந்தைத் திணையில் அமைந்துள்ளமை இக் கருத்தை வலியுறுத்தும்.

கரந்தை — புறநானூறு பாக்களின் எண்கள் 260, 261, 263, 264

வாகை — புறநானூறு பாக்களின் எண்கள் 306, 314, 329, 335

பொதுவியல் — புறநானூறு பாக்களின் எண்கள் 221, 223 232

இவற்றுள் வாகைத் திணையில் இருப்பன நடுகல் பற்றிய செய்தி உடையவை — என்பதன்றி நடுகல்லிற்குரிய தோற்ற வீரத்தைக் கூறுவன அல்ல.

கல்வெட்டுகளிலும், குறிப்பிடத்தக்க செம்பாகம், வெட்சி அல்லது கரந்தைப் போர் வீரர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகற்களே சுட்டப்படும்.[108]

நடுகல் வணக்கம் என்பதும், பழங்குடி மக்களின் அச்ச வழி பாடே.

> 'தமிழகத்தில் நடுகல் வணக்கம் பண்டை வரலாற்றுக் காலத்தில் இருந்தது. நடுகல் வீரர்களின் ஆன்மாக்களுக்கு ஊரையும் மந்தையையும், ஊர் மக்களையும் பாதுகாக்கக் கூடிய ஆற்றல் உண்டு என்ற நம்பிக்கையில்தான், அவர்களுடைய நடுகற்களுக்குப் பெரும்படை செய்து உணவும், கள்ளும் படைத்தும், ஆடிப்பாடி வாழ்த்தி மகிழ்விக்க முயன்றதும் ஆகிய செயல்களை ஊராரும் உறவினரும் செய்தார்கள்.'[109]

இச்செய்தி; மறவர் குழுவினர், தம் இச்சையாகப் பொருததையும், பொருது மாண்டோரை, அன்றைய இனக்குழுவினர் போற்றியதையும், காட்டுகிறது. ஆக தொல்காப்பிய நூற்பாப் போக்கு, புறநானூற்றுத் திணைக் கூறுபாடு, கல்வெட்டு அமைதி, நடுகல் வணக்கத்தின் தோற்றம் என்பனவற்றை நோக்க, 'வெறி அறி சிறப்பின்' என்ற நூற்பாவைக் கரந்தைக் குரியதாகக் போற்றுவதே பொருத்தமாம். நொச்சி உழிஞைக்குள் அடங்கியதைப் போல, கரந்தையை வெட்சிக்குள் அடக்கினர் என்று கொள்ளுதல் வேண்டும்.

வாடா வள்ளி

தெய்வத்திற்குரிய கடன்களைச் செய்யும் சிறப்பினையும், உயிர்ப்பலி வேண்டும் எனக் கேட்கும் கொடிய வாயையும் உடையனவாய்த் தெய்வம் ஏறி, காந்தள் பூச்சூடி, வேலன் வெறி ஆடுவான்.[110] அவ்வாறு ஆடுதலுக்குப் பெயர் காந்தள். இவ்வாட்டம் பெரும்பாலும் கரந்தைப் போருக்குப் பின் நிகழும். இவ் ஆட்டத்தைப் போல நிகழும், பிறிதோர் ஆட்டத்தையே 'வாடா வள்ளி' என்றனர். வள்ளி என்பது ஆடும் ஒருவகைக் கூத்திற்கும், வாடும் ஒரு வகைக் கொடிக்கும் பொது என்பதால் ஆட்டத்தினின்று வேறுபடுத்த (வாடா வள்ளி) எனக் கூறினர். இதனை ஒரு கூத்து என்ற அளவில் பொருள் விளக்கிய இளம்., தம் காலத்து உதாரணம் இன்மையால் 'உதாரணம் வந்த வழிக் கண்டு கொள்க' என்று உரைத்தனர். நச்சினார்க்கினியர், 'இது பெண் பாற்குப் பெருவரவிற்று' என்றனர். சோமசுந்தர பாரதி, 'முருகனைப் பரசி வேலன் ஆடுவது காந்தள்', அக்கடவுளைப் பாடிப் பெண்டிர் ஆடும் கூத்து வள்ளி' என்றனர்.

'வள்ளி — குறிஞ்சி நிலக் குறத்தி; குறத்தி போலக் கோலம் கொண்டாடுவது வள்ளிக் கூத்து. ஆண்கள் குறத்தி போல வேடம் கொண்டாடுதலும் உண்டு. இஃது அகத்திணைக்கண் வாராது. மறக்குடி மகளிர் போர்க்களத்தில் வள்ளிக் கூத்தாடி, மறவர்க்கு ஊக்கம் ஊட்டுவர். இது பெண், ஆண் இருவர்க்கும் பொது' என்பது புலவர் குழந்தை தரும் விளக்கம்.[111]

பெண்டிர்க்கே உரியது என்பதும், போர்க்களத்தில் மகளிர் வேடம் இட்டு ஆடுவது என்பதும் பொருந்தாதன. மறவர் தம் பூசல் வென்றியை நினைந்து மகிழ்ந்து ஆடும் ஒருவகைக் கூத்து என்று கொள்ளுதலே பொருந்தும். இவ்வகையில், இளம்பூரணர், பொருள் கொண்டதே பொருந்தும். மலையாள நாட்டில் இத்தகு ஆட்டம் இன்றும் வழக்கில் உள்ளது. அங்குள்ள (வேலன்மார்) என்பார் இவ்வாட்டத்தை ஆடுகின்றனர். மலையாள வேலன், 'குஞ்ஞாரக் குறத்தி' என்ற தெய்வக் கோலம் கட்டி ஆடுவான். குறி சொல்லும் குறத்தி போன்ற வேடம் பூணுவான். இக் குறத்திக் கோலம் குறவள்ளியின் கோலம் ஆகும். நச்சர். எடுத்துரைக்கும் பாட்டு இதற்கு மிகப் பொருந்தி நிற்கிறது.

'மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக்
கண்ட முருகனும் கண்களித்தான் — பண்டே
குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப்
பிறமகன் நோற்றுன் பெரிது.'

இவ்வள்ளிக் கூத்தைக் கருங்கூத்து என்பர். இழிந்தோர் காணும் கூத்து என்பர் நச்சர். மேற்கண்ட வேலன் ஆடும் தெய் வாட்டத்தை, உயர்ந்த சாதியினர் பார்க்க மாட்டார். இவ் வழக்கம் இன்றும் கேரளத்தில் உள்ளது.[112]

மாயோன் மேய மன்பெரும் சிறப்பின் தாவா விழுப்புகழ் பூவை நிலை (63)

பூவை என்பது காயாம் பூவை உணர்த்துவது. இப்பூ நீல நிறத்தது. திருமாலின் நிறத்தை நிகர்த்தது. திருமாலினுடைய காத்தல் புகழையும், பிற புகழ்களையும் மானிட அரசர்களுடன் சார்த்தி உவமித்துக் கூறுவது — என்பர் நச்சர். இக்கருத்தையே இளம்பூரணர்,

> 'இஃது உரை அன்று என்பார் மாயோன் முதலாகிய தேவர்களோடு உவமித்தலே பூவை நிலைஎன்ப'

எனத் தம் உரையில் குறிப்பர். ஆனால் இக் குறிப்பிற்கு முன்னரே, அவர் வேறொரு வகையில் உரை வகுப்பர். பூவைநிலை, உன்னநிலை போன்றதொரு நிமித்தம் பார்க்கும் வழக்கு என்பர்.

> 'மாயோனைப் பொருந்திய நிலைபெற்ற பெரும் சிறப்பினை உடைய கெடாத விழுப்புகழைப் பொருந்திய பூவை நிலையைக் கூறுதல்.
>
> பூவை மலர்ச்சியைக் கண்டு மாயோன் நிறத்தை ஒத்த தெனப் புகழ்தல், நாடெல்லை காடு ஆதலின், அக்காட் டிடைச் செல்வோர், அப்பூவையைக் கண்டு கூறுதல். உன்னம் கண்டு கூறினர் போல இதுவும் ஓர் வழக்கு'

என்ற இளம்பூரணர் உரையைத் தழுவி, சோம சுந்தர பாரதியும் உரை செய்வர்.

நிமித்தம் காட்டல்

பூவை நிலை, மறவர்களின் போர்த்துறை. அது தன்னுறு தொழிலாகவும் நிகழும். தன்னுறு தொழிலினர், மன்னனை மாயோனைக் கருதி வாழ்த்த இடம் இல்லை. கரந்தை மறவர், செல்லும் வழியில் உள்ள உன்ன மரத்தைக் கவனிப்பர். அது நன்கு வாடாமல், தழைத்திருக்குமானால் தமக்கு நன்மை - வெற்றி என்றும், வாடித் துவண்டிருக்குமானால் தமக்குத் தீமை — தோல்வி என்றும் நிமித்தம் கொள்ளுவர். அவ்வாறே, பூவை மலர்களின் மலர்ச்சியைப் பார்த்து வெற்றி என்றும், வாட்டத்தைப் பார்த்துத் தோல்வி என்றும் மறவர் நிமித்தம் கொள்ளுவர்.

மாயோனைப் போன்ற மன்னவரை வாழ்த்துதல் என்ற கருத்தினது பூவைநிலை எனில், இத்துறை, வெட்சிக் கரந்தையில் இடம் பெறுதல் பொருத்தம் இல்லை. அது பாடாண் திணையிலேயே இடம் பெறுதல் வேண்டும். புறப்பொருள் வெண்பாமாலை இலக்கண விளக்கம் ஆகிய நூல்களுள்ளும், பூவைநிலை பாடாண் திணையிலேயே பேசப்பட்டுள்ளமை காண்க.[118] பூவைநிலை, தொல்காப்பிய நூற்போக்கின்படி. வெட்சியைச் சார்ந்தது பாடாண் திணையைச் சார்ந்தது அன்று. எனவே, பூவைநிலையை நிமித்தம் காட்டுதலாகப் பொருள் கொள்ளுதலே பொருத்தம்.

ஆர் அமர் ஓட்டல் (63)

'நிரை கவர்ந்த படை மறவரைக் கரந்தை மறவர் தோற்றோடச் செய்தல் என்பர் இளம். பாரதி ஆகியோர். நச்சர். குறுநில மன்னர் முடி மன்னரை வெல்லுதலும், காட்டில் வாழும் மறவர் வெல்லுதலும், வேந்தற்குத் துணையாகச் சென்றவர் பகை வேந்தரை வெல்லுதலும் என்று உரை விரிப்பர். குழந்தையும் நச்சரைத் தழுவி உரைப்பர். நச்சர். குழந்தை ஆகியோர் உரை, இத்துறை கரந்தைக்குரியது என்ற அடிப்படையை மறந்து விட்டு எழுதியதாகப் படுகிறது. கரந்தை தன்னுறு தொழில் என்பது நச்சர். கூறிய கருத்து:

> 'ஆரமரோட்டல் முதலிய ஏழு துறைக்கும் உரிய மரபினை உடைய கரந்தையாம்; கரந்தையாவது தன்னுறு தொழிலாக நிரை மீட்டோர் பூச்சூடுதல்,[114]

மேலே கண்டவாறு கூறும் நச்சர், (ஆரம ரோட்டல்) என்ற துறை விளக்கத்தில் வெட்சிப்படையெடுப்புப் போல விரித்துப் பொருள் விளக்கி இருப்பது பொருந்துவதாக இல்லை. 'ஆரம ரோட்டல்' என்ற துறையை அடுத்து (ஆபெயர்த்துத் தருதல்) என்ற துறை அமைந்துள்ளது. நிரை கவர்ந்த வெட்சி மறவரை ஓட்டாமல், நிரையைப் பெயர்த்துத் தருதல் எங்ஙனம் இயலும்? எனவே, பின் வரும் துறையாலும், இத்துறை கரந்தையே என்பதும், அவ்வாறு பொருள் கொள்ளுதலே பொருந்துவது என்பதும் விளக்கமாம்.

தலைத்தாள் நெடுமொழி தன்னொடு புணர்த்தல்

தன்னிடத்திலுள்ள போர்த் திறமையைத் தன்னோடு பொருத்தி உரைத்தல். ஒரு மறவன் யானை மீது போர் தொடுக்க மாட்டேன் என்று கூறுவன். தான் இரு கைப் பெற்றிருக்க, யானையோ ஒரு கைதானே பெற்றிருக்கிறது என்பது அவன்

மறவுரை. யானையோ விலங்கு; தன் இனக் கூட்டத்தைவிட்டுப் பிரிந்து விட்டாலோ வலுக்குறைவு; அதற்குரிய கையோ ஒன்று. அங்ஙனம் இருக்க, இருகை உடைய நான் அதனோடு பொருவனோ? மாட்டேன்; அது எனக்கு இழிவு,[115] என்பது அவனுரையின் பிழிவு.

மறவர், தம் திறம் கூறி மாண்புரைப்பதே இத்துறைக்குரிய இலக்கணம். கரந்தை தன்னுறு தொழில் என்பதும், வெட்சி கரந்தைப்போர்கள் மறவர்தம் பொருதிறம் புகல்வன என்பதும் கருதின், இத்துறை மறவரின் மறம் புகலும் துறை என்பது தெளிவுறும். மாறுக, இத்துறையை வஞ்சினங் கூறுதலாகக் கூறி, பூதப் பாண்டியன் (புறம். 71), நெடுஞ்செழியன் (புறம். 72), நலங்கிள்ளி (புறம். 73), ஆகிய அரசர் வஞ்சினம் மொழிவதை எடுத்துக் காட்டுவர்.[116] அது பொருந்தாது. மன்னவர் வஞ்சித் திறம், காஞ்சித் திணையில், 'இன்னது பிழைப்பின் இது ஆகியர் எனத் துன்னரும் சிறப்பின் வஞ்சினம்' எனத் தொல்காப்பியரால் கூறப் படுதலும், உரையாசிரியர்கள் மேற்கண்ட புறப்பாடல்களையே எடுத்துக்காட்டுதலும், புறநானூற்றிலும், அப்பாடல்களுக்குத் 'தலைத்தாள் நெடுமொழி தன்னோடு புணர்த்தல்' எனத் திணைத் துறைக் கூறப்படாமையும், வஞ்சினக் காஞ்சி என்று கூறப்பட்டிருத்தலும் இக்கருத்தை வற்புறுத்தும்.

நடுகல் (63)

காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தல் என்பன, நடுகல் பற்றித் தொல்காப்பியர் குறிப்பன. இவ்வாறனுக்கும்,

1 பொருது வீழ்ந்தார்க்கு நடுதற் பொருட்டுத் தக்கதோர் கல்லைத் தேர்ந்து காணல்.

2 தேர்ந்து கண்ட கல்லைக் கொணர்தல்

4 விழாவொடு அக்கல்லைத் தூய நீரால் குளிப்பித்தல்

4 பிறகு அதனை நடுதல்

5 சிறந்த முறையில் நாட்டிய கல்லுக்கு மிக்க பலியுணவு படைத்தல்,

6 அவ்வாறு கடவுள் ஏற்றிப் பலியூட்டிய அக்கல்லைப் பழிச்சுதல்.

என்பனவே அனைத்து உரைகாரரும் காணும் பொதுப்பொருள். எனினும், நச்சினார்க்கினியரும், குழந்தையும், ஒவ்வொரு துறை

யையும் இரு கூறுகப் பகுத்தும் பொருளுரைப்பர். அவர் உரைக்கு மாறு : (பார்க்க அட்டவணை : 23)

நச்சர். கூறும் முதற்பொருள்கள் (மூன்றும் கட்டத்தில் இருப்பவை). ஏனைய உரையாசிரியர் கூறும் பொருளினின்று ஓரளவு மாறியுள்ளன. அவர் கூறும் துணைப் பொருள்கள் (நான்காம் கட்டத்தில் உள்ளவை) ஏறத்தாழ, மற்றைய உரைகாரரிடமிருந்து முற்றுமாக வேறுபட்டுள. இவ் வேறுபாட்டையும் முறையான பொருளையும் அறிய வேண்டுமெனில் நடுகல்லின் வரலாற்றை அறிவியல் கண்ணோட்டத்தோடு அணுகுதல் வேண்டும்.

நடுகல் வகை

தமிழ் நாட்டில் உள்ள நடுகற்களை ஒன்பது வகையாகப் பாகுபடுத்தலாம்.

1 நிரை கவரும் போதோ, மீட்டும் போதோ பட்டவர்க்கு எடுப்பவை.

2 போர்க்களத்தில் போர் செய்து மடிந்த மறவர்க்கு எடுப்பவை.

3 போர்க்களத்தில் போர் செய்து மடிந்த மன்னவர்க்கோ இளவரசர்க்கோ, தளபதிக்கோ—ஏனைய அரசியல் அதிகாரிகளுக்கோ எடுப்பவை,

4 மானத்தின் காரணமாக வடக்கிருந்து உயிர் நீத்த மன்னவர்க்கு எடுப்பவை.

5 சண்டையிட்டு மடிந்த எவருக்கும் எடுப்பவை.

6 உண்ணு நோன்பு இருந்து உயிர் நீத்த சமண முனிவர்க்கு எடுப்பவை.

7 மறப்பணி அல்லது மதிக்கும் பணி ஆற்றிய மகளிர்க்கு எடுப்பவை.

8 மதிக்கும் பணி ஆற்றிய எவருக்கும் எடுப்பவை.

9 இறந்தவர் அனைவருக்கும் எடுப்பவை.

கால அடிப்படையில் நடுகற்கள்

தமிழ் நாட்டு வரலாற்றைக் கொண்டு, ஒவ்வொரு நடுகல் கட்டமும் முதன் முதல் தோன்றிய காலத்தை (ஓரளவு உறழ்ச்சி இருந்தாலும்) பின் வருமாறு அமைக்கலாம்.

வீர ஊழிக்காலத்தவை: (1, 2) நிரை கவர்ந்தோ மீட்டோ பட்டவர்க்கும், போர்க்களத்தில் போர் செய்து மடிந்த மறவர்க்கும் எடுப்பன.

நச்சினார்க்கினியர் கூறும் பொருள்

எண் (1)	நடுகல் முறை (2)	முதற்பொருள் (3)	துணைப்பொருள் (4)
1	காட்சி	கல்கெழு சுரத்தில் சென்று கற்காண்டல்	அது கொணர்ந்து செய்வன செய்து நாட்டிப் பின்னர்க் கற்காண்டல்
2	கால்கோள்	கல்லுறுத்து இயற்றுதற்குக் கால்கோடல்	நாட்டிய பின்னர் அவன் ஆண்டு வருவதற்குக் கால்கோடல்
3	நீர்ப்படை	கண்டு கால்கொண்ட கல்லினை நீர்ப் படுத்துத் தூய்மை செய்தல்	பின்னர்ப் பெயரும் பீடும் எழுதி நாட்டிய வழி நீராட்டுதல்
4	நடுதல்	கல்லினை நடுதல்	அக்கல்லின்கண் மறவினை நடுதல்
5	சீர்த்தகு சிறப் பின் பெரும்படை	அவன் செய்த புகழைத் தகும்படி பொறித்தல்	அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ் சிறப்புகளைப் படைத்தல்
6	வாழ்த்தல்	கால் கொள்ளுங்கால் தெய்வத்திற்குச் சிறப் புச் செய்து வாழ்த்தல்	பின்னர் நடப்பட்ட கல்லினைத் தெய்வமாக்கி வாழ்த்தல்

சான்று : தொல்காப்பியர் கூறும், வெட்சி, கரந்தை திணை, புறத்திணை 63, புறநானூறு 260, 261, 263, 264, 335.

சங்க காலத்தவை : (3, 4) போர்க்களத்தில் மறப்பணி ஆற்றி மடிந்த மன்னன் முதலான அரசியல் அதிகாரிகளுக்கும் மானம் அழிந்து வடக்கிருந்து உயிர்நீத்த மன்னவர்க்கும் எடுப்பன.

சான்று : (3) - புறம். 232. (4) - புறம். 221, 223

சங்கம் மருவிய காலத்தவை : (7) மறப்பணி அல்லது மதிக்கும் பணி ஆற்றிய மறப் பெண்டிர்க்கு எடுப்பது; சிலப்பதி காரக் கண்ணகிக்கு நடுகல் எடுத்தமை. மாசதிக்கல் என்று பெயர். கன்னட நாட்டில் இது மிகுதி. கேரளாவில் (புலச்சிக் கல்' என்பர். புலச்சி - என்முல் உத்தமப் பெண் என்று பொருள்)

களப்பிரர் பல்லவர் காலத்தவை: (5, 6, 8) சண்டை இட்டு மடிந்த எவருக்கும், உண்ணு நோன்பு இருந்து உயிர் நீத்த சமண முனிவர்க்கும் எடுப்பன.

சான்று : நிசீதிகைக் கற்கள் 239/1904)

பிற்காலத்தவை : (8, 9) மதிப்புப் பணி ஆற்றியார்க்கும், இறந் தார் எவருக்கும் கல் எடுத்துக் காடாற்றுப் படுத்துவது.

கன்னட நாட்டில் குளங்களைத் தோண்டி மக்களுக்கு நன்மை செய்த பெரியோர்க்கு நடுகற்கள் நடப்பட்டுள்ளன. கோவை மாவட்டம் தொட்டிய நாயக்கர், இறந்தோர்க்குச் செய்யும் ஈமக் கடனைக் (கல்லெடுத்தல்) என்றே இன்றும் வழங்குவர். (கருமாதி கல்லெடுப்பு,) என்ற வழக்கு தமிழகம் எங்கும் வழங்குகிறது. இவ் வழக்குகள், இறந்தவர் அனைவர்க்கும், கல்எடுக்கும் பழக்கத்தைக் காட்டும்.

பண்டைய நாகரிக மக்களிடமும் நடுகல் முறை

தொல்பழம் நாகரிகமும், பண்பாடும் பெற்ற மக்களிடம் முந்தையோரை நினைவுறுத்தி வணங்கும் பழக்கம் இருந்துள்ளது. ஏதென்சு கிரேக்க நாட்டுத் தலைநகரம்; பழைய பண்பாடு நடமாடிய நகரம். சாக்ரடீசு, பிளேட்டோ, அரிசுடாடில் போன்ற அறிஞர் வாழ்ந்த பெருநகர். அந்நகரில், இறந்தவரைப் புதைத்த இடங்களில் நெடுங்கற்கள் நிறுத்துவது வழக்கம். சில சமயம் அழகிய தூண்கள் அமைக்கப்படும். சில சமயங்களில், கூரையுடன் கூடிய சில கோயில் கூட அமைத்தல் உண்டு. அவற்

றில், மறைந்தவரோடு தொடர்புடைய பொருத்தமான காட்சிகள் பொறிக்கப்படும். குதிரையிலிருந்து பகைவரை வீழ்த்தும் காட்சி, குழந்தைகளுடன் பெற்றோர் உண்ணும் காட்சி, வேலை செய்வான் தனக்குரிய வேலையில் ஈடுபட்டிருப்பது போன்ற காட்சி போன்றவை. அவரவர் வாழ்க்கைக்குத் தக பொறிக்கப்படும். தண்ணீர்ச் சொம்பு, தூணின் தூம்பில் வைக்கப்பட்டிருக்கும். அது மணம் முடியாது மடிந்துவிட்ட மகளிர்க்கு எடுக்கப்பட்ட நினைவுத் தூண ஆகும். நினைவுக் கல்களில் மலர் வட்டங்கள் பிறந்தநாள் தொறும் வைக்கப்பெறும். மடிந்தவர்க்கு விருப்பமான பொருள்கள் சேர்த்துப் புதைக்கப்படும்.

நடுகல் தூண்களில் இறந்தவர்தம் பெயர், தந்தையார் பெயர், அலுவலகப் பொறுப்பு ஆகியன சுருக்கமாகப் பொறிக்கப்படும். பெயருக்கு முன்னால் கிரேக்க மொழியில் 'நல்லவன்' அல்லது 'நல்லவள்' என்ற சொற்கள் பொறிக்கப்படும். காலப் போக்கில் பெயர் பொறிக்கும் இப்பழக்கம், தம் பெருமை பெருக்கும் பழக்கமாகப் பெருகியது. கிரேக்க வரலாற்றுசிரியனாகிய தியோபிராசுடசு (Theophrastus) இந்தப் பழக்கத்தைத் தன் நூலில் கிண்டல் செய்கிறான். "சில பெண்களுக்குத் தம் பெயர், தம் கணவன்மார் பெயர், தம் தந்தையார் பெயர், தாயார்பெயர், பிறந்த நாள் முதலான பிற செய்திகளையும் விரித்துப் பொறிக்கப்படும்" என்று அங்கதமாக எழுதுவன்.[117]

'ஏயின் வண்ணக் கடல் பரப்பில், கப்பல் வரும்போது வழியில் தென்படும் கரை ஓரங்களில் மறவர் நினைவுக் கற்கள் (Memorials of warriors) நிறுத்தப்பட்டிருக்கும். அவையெல்லாம் போரில், மடிந்த மறவர்களின் நினைவாக எழுப்பப்பட்டவை. அவர்கள் எல்லாம் தம் புகழ் நிறுத்தித் தாம் மாய்ந்தவர் ஆவார். இவ்வாறு இலியட் என்ற இதிகாசம் கூறும்.[118]

நீல ஆற்றின் ஓரத்தில் நாலாயிரம் ஆண்டுகளாக நின்று தவம் செய்யும் பிரமிட் கோபுரமும், சுபிங்சு (Spinx) உருவமும் எகிப்திய மக்களின் பழமையையும், நாகரிகச் செழுமையையும், கட்டடக் கலைத் திறமையையும் காட்டுவன. எகிப்தியர் பன்னூறு ஆண்டுகளுக்கு முன் உலகத்தார் மறக்காமல் இருக்க ஏதேனும் தாம் செய்தல் வேண்டும் என்று துடித்தனர். அத்துடிப்பின் விளைவாக நினைவுச் சின்னங்கள் கல்லறைகளை ஒட்டி எழுப்பப் பட்டன. அவை அவர்தம் கட்டடம் கட்டும் திறமையையும் நினைவுக்கல் எழுப்பிய நிகழ்வையும் காட்டும்.[119]

பழங்குடிகளிலும் நடுகல் பழக்கம்

காசிகள் இந்தியப் பழங்குடியினர். இவர்களிடம் உள்ள நடுகல் வழக்கத்தை டேவிட் ராய் என்பார் நேரில் கண்டு விளக்கியுள்ளார். அவ்வழக்கம் அனைத்தும், தமிழில் கூறப்படும் காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல் என்பவற்றோடு பெரிதும் ஒத்துள்ளன.[120]

கோண்டு (Gond) என்ற பழங்குடிகளில் ஒரு பிரிவினர் கோயர். இவர் கோதாவிரி, விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம் ஆகிய மாவட்டங்களில் வாழ்கின்றனர். தெலுங்கு பேசும், இத் திராவிடப் பழங்குடியினர் இறந்தவர்களை எரிப்பர்; எரிந்தவர் எலும்புகளைத் திரட்டி ஓர் இடத்தில் புதைப்பர். புதைத்த அவ் விடத்தில் ஒரு நடுகல்லை நட்டு வழிபடுவர்.[121]

கதபர் என்ற பழங்குடிகள் ஆந்திராவில் வசிக்கின்றனர். பங்குனி மாதங்களில் விழா எடுப்பர்; எருமைப் பலி கொடுப்பர்; இறந்தவர்களைப் புதைப்பர். புதைத்த இடத்தில் நடுகல் நடுவர்.[122]

கசவர்கள், தமிழகத்து நீலகிரிப் பகுதியில் வாழும் பழங்குடியினர். இவர்களிடம் நடுகல் நடும் பழக்கம் இன்றும் உள்ளது. எவரேனும் இறக்க நேரின், இறந்தவர்தம் கால்களை வெட்டுவர். இப் பழக்கம் 'குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும் ஆளன்று' என்று வாளில் தப்பாப் பண்டைய வழக்கின் எச்சம் போலும். பிணத்தைக் குழியினுள் இட்டு மூடி விடுவர். பெரிய பாறைங் கல்லைக் கொண்டு மூடுவர். அக் கல்லைக் கோட்டைக் கல் என்பர்; இறந்த மூன்றாவது நாளன்று பிணத்தை வைத்த இடத்தில் ஒரு கல்லை நடுவர்; பூசை செய்வர். ஒவ்வோர் ஆண்டிலும் அங்கு 'ஆண்டு பூசை' நிகழ்த்துவர். அன்றும் ஒரு கல்லினை நடுவர்; அரிசிப் பொங்கலிடுவர்; அதனைப் படைப்பர். பூசை செய்வர்.[123]

இருளர் என்ற பழங்குடியினர், நீலகிரி வட்டாரத்திலேயே வாழ்கின்றனர். இவர், தம்முள் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கத்தினர். புதைத்த இடத்தில் நடுகல் நடுவர். இருள இனத்தின் உட்பிரிவு ஒவ்வொன்றிற்கும் தனித்தனி நடுகற்கள் உள்ளன. பழைய காலத்தில் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரையும் இறந்தவுடன் ஒரே குழியில் புதைத்து வந்தனர். சில இடங்களில் ஆண்களுக்கு ஓரிடம், பெண்களுக்கு ஓரிடம் எனப் பிரித்துப் புதைப்பர்.[124] இத்தகு பழக்கமெல்லாம், 'இறப்பிற்குப் பிறகும் அவர் வாழ்கிறார்' என்று கருதுவதின் அடிப்படையில் தோன்றியவை போலும்.

நடுகல்லின் தோற்றம்

மடிந்த மறவர்க்கு நடுகல் இடும் பழக்கம் என்று தோன்றியது? ஏன் தோன்றியது? பண்டு, இறந்தோரை மேல் முகட்டில் எறிந்து விடுதல் வழக்கம். பெரிய காடுகளில் தூக்கி வீசி விடுவது வழக்கம். காடுகளில் எறிந்து விடும் பழக்கம் இருந்ததையே புற நானூற்றில் வரும் பெருங்காடு (364) என்ற வழக்கும், இன்றும் வழங்கும் சுடு — காடு, இடு — காடு என்ற சொற்களும் புலப் படுத்தி நிற்கும். கருமாதி, 'காடாத்து' (காடு ஆற்று) என்ற இன்றைய வழக்காறுகளும் வற்புறுத்தும். இவ்வாறு பிணமாக எறிந்து விடும் பழக்கம் இன்றும் சில உலகப் பழங்குடிகளிடம் எச்ச மாக நிற்பது.

சிலர் பிணத்தைச் சுடுவர்; வேறு சிலர் குழி தோண்டிப் புதைப்பர்; சிலர், நிலத்துக்குக் கீழே தாழ்ந்த இடங்களில் அடைப்பர்; சிலர் தாழியில் வைத்து மூடுவர்' என்று அன்றைய முறைகளே மணிமேகலை அடுக்கும்.

> 'சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
> தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்.[125]

பழங்காலத்தில், பிணங்கள் புதைக்கப்படும் இடங்களுக்கு மேலும், அவ்விடங்களைச் சூழ்ந்தும் பலவேறு வகையில் கற்களை அமைப்பர். சில இடங்களில், ஈமப் பொருள்கள் புதைக்கப்பட்ட இடத்தின் மீது ஒரு பெரிய கல் செங்குத்தாக நிறுத்தப்படும். சில இடங்களில் பல செங்குத்துக் கற்கள் ஒரு வரிசையாகவோ, இரண்டு வரிசைகளாகவோ அதற்கும் மேற்பட்ட வரிசைகளாகவோ நிறுத்தப்படும். இப்படி நிறுத்தப்படுபவை 10, 15 அடிக்கும் மேல் உயரமானவையாகவும், பெரும்பாலானவை மூன்றிலிருந்து ஆறு அடி உயரம் கொண்டவையாகவும் அமையும் சில கற்கள் செதுக்கப்பட்டும், பல செதுக்கப் படாமலும் நிறுத்தப்படும்.[126] கருங்கற்களைப் பல வேறுவகையில் வைப்பதன் நோக்கம், பிணங்களை, நரி, நாய், முதலான விலங்குகள் பிடுங்கி இழுக்கா வண்ணம் தடுப்பதற்காகவே. தாழியில் மூடிப் புதைத்ததன் நோக்கங் கூட இவ்வடிப்படையிலேயே அமைந்தது ஆதல் வேண்டும். இவ்வாறு அமைக்கப்படும் உயரிய கல்வரிசையே காலப் போக்கில் நடுகல் நடுதலாக உருக் கொண்டது.[127] காலம் செல்லச் செல்ல தொடங்கிய நோக்கம் மறக்கப்பட்டது. தெய்வீக விளக்கங்கள் புதுவதாகக் கொடுக்கப்பட்டன.

> 'இறந்தவன் ஆன்மாவைச் சில சடங்குகள் மூலம் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரவழைக்கலாம். அங்குள்ள

ஒரு பொருளில் நுழைந்து கொள்ளச் செய்யலாம்' என்ற நம்பிக்கை உலகம் முழுதும் பழங்குடி மக்கள் பண்பாடாக உள்ளது. ஆன்மா உடலிலிருந்து பிரிந்து சாவு ஏற்படாமலேயே சில காலம் இருத்தல் கூடும் என்பது பண்டைய மக்களின் நம்பிக்கை. சில காலம் இருத்தல் இயலுமானால் நெடுநாட்கள் இருத்தலும் இயல்பே. அப்படிப் பிரிந்திருக்கும் பொழுது ஒரு பகுதி ஆன்மா வேறிடத்திலும், ஒரு பகுதி ஆவியின் இருப்பிடத்திலும் இருக்கும். உடலைவிட்டுப் பிரிந்திருக்கும் ஆன்மா ஒரு பறவை செடி, மரம், பெட்டி, புழு, மீன் முதலியவற்றில் இருக்கும். இவற்றிற்குத் துன்பம் நேரின், ஆன்மாவின் எஞ்சிய பகுதி உறையும் உடலுக்கும் துன்பம் நேரும். நெடுநாள் ஆவி குடி இருக்க வேண்டுமெனில், அழியாத, கடினமான உயிர் இல்லாத பொருள் தேவை என்ற நம்பிக்கை, மேற்கூறிய உயிருள்ள பொருளில் உயிர் போய்த் தங்குகிறது என்ற நம்பிக்கையின் வளர்ச்சியாகத் தோன்றியது. காலத்தால் பிற்பட்ட பண்டைய மக்களின் கதைகளில் கற்களின் ஆன்மா நெடுநாள் தங்க முடியும் என்ற கருத்துத் தோன்றியது.''

கல், வைரம், முத்து போன்றவற்றில் அரக்கர்களின் உயிர் நெடுநாள் தங்கி இருந்ததாக உலகம் எங்கும் கதைகள் உள்ளன. இராவணனின் உயிர் எங்கோ ஒரு சிமிழியில் உள்ள வண்டிடம் இருந்ததாகக் கூறப்படுவது இது போன்ற ஒரு கதையே. ஆப்பிரிக்கப் பழங்குடிகளிடம் இதனினும் வலிய நம்பிக்கை இருந்தது. குடிமக்கள் ஒவ்வொருவரின் ஆன்மாவும் ஒரு மரப் பலகையில் குடி இருக்கிறது என்பது அவர்தம் நம்பிக்கை. ஒவ்வோர் ஆடவனும், தன்னுடன் மரப்பலகையை எப்பொழுதும் சுமந்து செல்வான். இந்த மரப்பலகையை ஒட்டியே பெரும் போர் மூண்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஆப்பிரிக்காவில், குமாசி (Kumasi) என்ற இடத்தில் அசாந்தி (Ashanti) என்ற ஒரு பழங்குடியின் நாட்டை ஆங்கிலேயர் கைப்பற்றினர். அசாந்தி மக்கள், பலகையில் தம் உயிர் இருக்கிறது என்று அதனைப் போற்றும் மரபினர். தங்கக் கவசம் இட்ட மரப் பலகை ஒன்றையே இனக்குறியாகத் தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றி வந்தனர். அசாந்தி நாட்டைக் கைப்பற்றிய ஆங்கில ஆளுநர், அம்மக்களின் 'வழிபடு பொற் பலகையைத் தமக்கு உரிமையான பீடம், எனத் தவருக எண்ணி அதனைக் கொடுத்துவிடும்படி கட்டளையிட்டார். இதனை எதிர்த்து ஆயிரக்கணக்கான அசாந்தி மக்கள் போராடி உயிர் துறந்தனர்.

இராட்ரே (Rattray) என்ற மாந்த இயல் அறிஞர், இப் பொற்பல கையின் கருத்தை ஆங்கில ஆளுநர்க்கும் அதிகாரிகளுக்கும் விளக்கினர்: "அசாந்திக் குடிமக்கள் ஆவியின் திரண்ட ஆன்மா அப் பொற் பலகையில் குடி இருப்பதாக அவர்கள் எண்ணியதால், அதனை இழந்தால் அவர்கள் அழிந்து போவார்கள் என்று கருதி அதற்காகப் போர் புரிந்தனர். அப் பலகையின் மேல் எவரும் அமர்வதில்லை. அதன் சிறப்பினால் அதனைக் குடிமக்கள் தரையில் வைக்காமல், எப்போதும் சுமந்து காத்து வருகின்றனர்.[128]

பண்டைய தமிழ் மன்னர், காவல் மரத்தைத் தம் உயிரினும் மேலாகக் கருதியதும், முரசு வைக்கப்படும் மரக்கட்டிலை மிகவாய்ப் போற்றியதும் இங்கே நினைக்கத் தக்கன.

இவ்வாறு தம் ஆவி மரம் முதலான பொருளில் இருக்கும் நம்பிக்கையே, உடல் அழிந்த பின்னும், அந்த அரம் போன்ற கல்லில். இறந்தவனின் ஆவி தங்கி இருக்கும் என்று நம்பச் செய்தது. இவ்வாறு ஆவி கல்லில் குடி புகுந்திருக்கும் என்ற நம்பிக்கை, தமிழகப் பழங்குடியிடம் இருந்திருத்தல் வேண்டும். கல்லைத் தேடிக் கண்டறியும் நோக்கம் இதனாலேயே ஏற்பட்டிருத் தல் வேண்டும். காட்சி அல்லது கல் சாண்டல் என்று நடுகல்லின் தோற்றக் காரணம் இதுவே ஆதல் கூடும்.

ஆவி நம்பிக்கை

காலப் போக்கில் ஆவி குடி புகுந்திருக்கும் கல்லைக் கண்டு பிடிக்க முயலாமல் ஒரு கல்லில் ஆவியை மந்திர ஆற்றலால் புகச் செய்யலாம் என்ற நம்பிக்கை தோன்றி இருத்தல் வேண்டும். தேங்காய் அல்லது முட்டையில் வரவழைத்து, வீட்டில் திரியும் ஆவியை வெளியே கொண்டு போய்விட்டு விடலாம் என்ற நம்பிக்கை இன்றும் உள்ளது. இந் நம்பிக்கையை எதிர் மறித்தால் ஓரிடத்திற்கு ஆவியைக் கொண்டு வந்துவிட முடியும் என்ற நம் பிக்கை உட்கிடையாகக் கிடப்பது புலப்படும். தெய்வ உருவங் களைப் பிரதிட்டை செய்து, மந்திர ஆவாதனங்களைச் செய்து, தெய்வத்தைக் கல் உருவங்களில் புகுத்த முடியும் என்ற நம்பிக்கை வழங்குகிறது அல்லவா? இதன் தொடக்க வடிவமே, நடுகல்லை நட்டு, அதன்கண் ஆவியை அழைப்பது; அமைப்பது. நச்சர். — நடுதல் என்பதற்குக் 'கல்லினை நடுதல்', அக்கல்லின்கண் மறவனை நடுதல் என்று விளக்குவதும் கால்கோள் என்பதற்குக் கல்லை நாட்டிய பின்னர் அவன் (இறந்த மறவன்) ஆண்டு வருவதற்குக் கால் கோடல், என்று விளக்குவதும் பொருந்தி நிற்கின்றன. மற்றைய உரையாசிரியர், வறிதே உரைத்த உரைக் குறிப்புகளிலும், நச்சர். உரைத்த குறிப்பின் சிறப்பும் தெரியவரும்.

நீர்ப்படை

தூய நீரில், நீராட்டுதல் நீர்ப்படையாம். கங்கை நீர் தூயநீர் எனக் கருதப்பட்டது. அதனாலேயே கண்ணகிக்கல், கங்கை நீரில் நீராட்டப்பட்டது. நீருக்குப் பல ஆற்றல்கள் உண்டு என்று பண்டையோர் நம்பினர். தூயநீர் என்று சில இடத்து நீரினைக் கருதினர். (அந்நீர், மலட்டுத் தன்மையைப் போக்கும்) இறந்தவன் சாம்பலை அங்குக் கரைத்தால் அவன் ஆவி சுவர்க்கம் புகும் என்று எண்ணினர். நீருக்கும் வெற்றுக் கல்லை ஆவி புகும் கல்லாக்கும் ஆற்றல் உண்டு என்று நம்பினர்.[129] அதனாலேயே கல்லைக் கண்டவர், அதனை நாட்டி நீர்ப்படுத்தினர். இந்நீர்ப்படுத்தல் மந்திர நீராட்டு ஆகும்.[130] நச்சர். ''தெண்ணீர் ஆடுமின் தீர்த்தமாம் அதுவே'' என்று புனித தீர்த்தத்தைக் குறிப்பதும் இக் கருத்தை வலிவு படுத்தும்.

சீர்த்தகு மரபிற் பெரும்படை

மக்கள் மடிந்த மறவர்களுக்குக் கல் எடுத்து வழிபாடு ஆற்றினர்; பல பலி உணவுகளைக் கொடுத்துப் படைத்தனர். படைப்புக்குரியதே படை எனப்பட்டது. படைத்தல் இறைவனுக்கு முன் பழம், பூ பொருள் முதலியன வைத்துப் பூசை செய்தல். அதுவே படை, பெரும்படை, சீர்த்தகு மரபிற் பெரும்படை எனப்பட்டது. படைப்பிற்குரிய கல் நிற்கும் இடமே பிற்காலத்து வழிபடும் இடமும் ஆயிற்று. மறக்களத்தில் மடிந்த மன்னர்க்குக் கல் எடுத்துக் கோயில் எடுக்கும் முறை 'பள்ளிப்படை' என்றே போற்றப்பட்டது.

ஒரு கால நடுகல் இடங்களே பிற்காலத்தில் கோயில்கள் ஆகியுள்ளன.[131] பல்லவன் கம்பவர்மனுக்கு எடுக்கப்பட்ட பள்ளிப்படை பிற்காலத்துக் கோயிலாகி உள்ளது. கி.பி. 880இல் திருப்புறம்பியத்தில் உயிர் நீத்த முதலாம் பிருதிவி பதிக்கு எடுக்கப்பட்ட நடுகல், பிற்காலத்தில் வழிபாட்டிற்குரிய கோயிலாகி விட்டது; கி.பி. 891-907இல் ஆந்திர மன்னன் காளகத்திக்கு அண்மையிலுள்ள தொண்டைமானூட்டில் இறந்தான்; அவனுக்காக முதல் பராந்தக சோழனால் எடுக்கப்பட்ட பள்ளிப்படை, பிற்காலத்துப் பெருங் கோயிலாயிற்று; அரிஞ்சய சோழன் ஆற்றூரில் இறந்ததன் நினைவாக, முதலாம் இராசராசன் பள்ளிப்படை ஒன்று கட்டினான். அது திரு அரிஞ்சிகை ஈசுவரம் என்றாயிற்று. திருநல்லம் என்ற கோனேரி ராசபுரத்தில், தம் கணவர் கண்டராதித்தர் தம் நினைவாக, அவர் மனைவியார் ஒரு பள்ளிப்படை எழுப்பினர். அதுவும் வழிபடு கோயிலாயிற்று. நடுகற்கள் பிற்காலக் கோயில்களுக்கு ஒருவகையில் முன்னோடி என்பதற்கு

மேலே உள்ளவை சான்று. நடுகற்கள், இவ்வாறு வழிபடு தலங் களாவானேன்? மறவர் நடுகற்களைச் வழிப்பட்டுச் செல்லும் மரபை சங்க இலக்கியங்கள் காட்டும். தொல்காப்பியரும், 'பெரும்படை' என்றும், 'வாழ்த்தல்' என்றும் குறிப்பர். தலைமுறை தலைமுறை யாக நடுகற்கள் வழிபடப்பட்டன என்பதைச் 'சீர்த்தகு மரபிற் பெரும்படை' வாழ்த்தல் என்ற தொல்காப்பியர்தம் தொடர் எடுத்துணர்த்துகிறது. கேரளாவில் நடுகல்லைப் 'படைக்கல்' என்றே இன்றும் வழங்குவர். நடுகல், நினைவுக்கல், வீரக்கல் என்று நிலைகளைக் கடந்து 'வழிபடுகல்'லாகத் தொல்காப்பியர்க்கு முன்பே ஆகிவிட்டமையை அவர்தம் தொடர் புலப்படுத்தும். மறவர் நினைவு காக்கும் வீரக்கற்கள், வழிபடு மாண்பைப் பெறுவானேன்?

இறந்து போனவர்களுடைய ஆன்மா ஆற்றல் வாய்ந்தது. அஃது ஆக்கவல்லது; அழிக்க வல்லது. அவ்வான்மா அவர்தம் தலைமுறையின் தொடர்பு கொள்ளும். அவற்றைச் சடங்குகள், வழிபாடுகளை, சாந்திகள் மூலம் தலைமுறையினர் மகிழ்வித்தால் அவர்களுக்கு அவர்களுடைய முன்னோர்களின் ஆவி ஆற்றல் அளிக் கும். போரில் உதவும். ஆடுமாடுகளைப் பாதுகாக்கும். வயல்களில் விளைச்சலை மிகுதிப்படுத்தும். இதற்காகத் தம் முன்னோர்களின் ஆவிகளுக்குச் சடங்குகள் நடத்தி ஊட்டுக் கொடுத்தல் வேண்டும். படையல் போட வேண்டும்.[182] இக்காரணங்களால் தான் பண் டைய மக்கள், நடுகற்களை வணங்கி, பலி கொடுத்து வழிபட்டனர் நடுகற்களைச் சுற்றிக் கிடுகு, வேல் முதலியனவற்றை வேலியைப் போல் ஊன்றிக் காத்தனர். இந்த நிலையையே தொல்காப்பியரின் 'சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல்' என்ற வரி காட்டும். 'அக்கல்லைத் தெய்வமாக்கி அதற்குப் பெருஞ்சிறப்புகளைப் படைத் தல்' என்ற நச்சர். உரை அதனைத் தெளிவு படுத்தி நிற்கிறது. 'நடு கல் மறவர்களை அன்றி, வேறு கடவுளரை வணங்குவதை அறியார் என்ற சங்க இலக்கியக் கருத்து இதனையே நினைவூட்டும்.[183]

எழுத்து பொறித்தல்

'சீர்த்தகு மரபிற் பெரும்படை' என்பதற்கு நச்சர்., 'அவன் செய்த புகழைத் தரும்படி பொறித்தல்' என்று உரை கூறினர். இளம்., 'நாட்டிய கல்லிற்குக் கோட்டம் செய்தல் என்று விளக் கினர். எழுத்தைப் பற்றிக் குறிக்கவில்லை.

சங்க இலக்கியங்களில் நடுகற்களில் பீடும் பெயரும் எழுதிய குறிப்புகள் உள்ளன. நடுகல் 'எழுத்துடை நடுகல்' என்றே குறிக் கப்பட்டுள்ளது.

தம் காலத்தும், தமக்கு முற்காலத்தும், எடுக்கப்பட்ட நடுகற் களில் பெயரும் பீடும் பொறிக்கப்பட்டமையை, பொறிக்கப்

பட்ட கல்வெட்டுகளைப் பார்த்து நச்சர்., தொல்காப்பிய நூற்பாவிலும் தம் காலப் பொருளை ஏற்றினர் போலும்.' 'காட்சி கால்கோள், என வரும் ஆறுதுறைப் பகுதிகளிலும் நடுகல்லில் எழுதுதல் பற்றி யாதொரு குறிப்பும் சொல்லாமை வெளிப்படை. 'சீர்த்தகு மரபிற் பெரும்படை' என்பதில் சற்றும் எழுதுதல் பற்றிச் சான்றில்லாமை வெள்ளிடை. ஆகவே, 'பெரும்படை' என்ற துறைக்குப் 'புகழைத் தகும்படி பொறித்தல்' என்ற நச்சர். தரும் விளக்கம் கால வழு உடையதாகவே அமைகிறது. இளம் பூரணர் விளக்கமும், நச்சினர்க்கினியரே கூறும் இரண்டாம் பொருளுமே பொருந்துவன. மிகு பழங்காலத்தில் வெறும் கல் மட்டுமே நாட்டினர்; காலப் போக்கில் அதன்கண் உருவம் மட்டும் பொறித்தனர்; பின்னர் பீடும் பெயரும் எழுதினர்; அதன் பின்னர். உருவம், பீடு இரண்டையும் பொறித்தனர்.[184] கால நீட்சியில் உருவம் எழுதுதலை விட்டு, உருவத்தைக் கல்லில் சிற்பமாகச் செதுக்கினர்.

வாள் மகிழ்ந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க
நாடவற்கருளிய பிள்ளையாட்டு(63)

களத்தில் வாளால் பொருதான் அரசிளங்குமரன்: வெற்றியால் உயர்ந்து எழுந்தான் அவன். மக்கள் அவன் திறம் கண்டு மகிழ்ந்தனர். பறைகளை மகிழ்ச்சியால் அடித்து முழக்கினர். இளவரசனை உடன் அழைத்து வந்தனர். அவனுக்கு அரசு கொடுத்தனர். இவ்வாறு பிள்ளைப் பருவத்தானைக் கொண்டு ஆடினர். நச்சர். தம் உரை இக்கருத்தினது. இதனை அப்படியே வழி மொழிந்த குழந்தை,

> "தந்தை (அரசன்) போரிற் பட்டதனால் இளவரசற்கு நாட்டவர் முடிசூட்டுதல். இதனால், நாட்டு மக்களே அரசனுக்கு முடி சூட்டுதலாகிய பொதுமக்கள் ஆட்சிமுறை (விரும்பி உடன்பட்ட ஆட்சி) பழந் தமிழகத்து நடந்து வந்தமை பெறப்படும்."

என்று விளக்கினர். இருவருமே நூற்பாவில் அரசன் பற்றிய அல்லது அரசகுமரன் பற்றிய குறிப்பு எதுவும் இல்லாமையைக் கருதவில்லை. அன்றியும், கரந்தை தன்னுறு தொழில் என வரையறுத்துக் கொண்டு விளக்கி வரும் நச்சர்., தம் உரையில் அரசனையும் அரச குமரனையும் பேசுவது, தன்னுறு தொழிலிற்கு மறுதலையாயிற்றே என்பதையும் மறந்தனர். ஆகவே அரசனையோ, அரச இளவலையோ உளத்துட் கொண்டு வகுக்கப்படும் பொருள் இங்குப் பொருத்தமற்ற தாகிறது. அன்றியும், இளவரசனுக்கு மக்கள்

ஆளும் உரிமையை வழங்கினர் என்று உரை செய்வதும், விளக்கு வதும், பண்டைய மரபுகள் அல்ல. அரச மகனுக்குத் தன் தந்தைக் குப்பின் ஆளுவது பிறப்புரிமையாக இருந்தது. 'மன்னர் மகன் மன்னன்' என்ற மரபு தழைத்திருந்த காலத்தில், மக்கள் ஆளும் உரிமையுடன், 'நாடு அவற்கு அருளினர்' என்று உரை செய்வது வரலாற்று வழுவுடையதாம்.

உரையில் இத்தகு முரண் இருப்பதை அறிந்த பாரதி, தம் உரையைப் புதுக்கிப் புகன்றார். 'ஆகோள் அல்லாத வெட்சிப் போரில் வாளால் பொருது வென்று வந்தவனே உவந்து முர சொலிக்க நாட்டை அவனுக்குப் பரிசிலாய் அளிக்கும் பிள்ளை யாட்டு' என்றனர். அரியன செய்த பெரிய மறவனுக்கு அன் பளிப்பு நல்குதல் என்பது அவர்தம் கருத்து. மறவனுக்கு நாட்டை நல்குவது யார்? மன்னவனல்தானே நாட்டை நல்க முடியும். இங்ஙனம் கொள்ளின் தன்னுறு தொழிலாக இயங்கிய கரந்தை மறவனே மன்னவன், நாடு அளித்து ஊக்கியதாக முடியும். கரந்தை - தன்னுறு தொழில் என்ற அடிப்படை தகர்ந்துவிடும். மக்களைத் தன்னிச்சையாக மறப்போர் விளைக்க விட்டான் என்ற பழி மன்னவனுக்கு வந்து சேரும். ஆதலின், பாரதி உரையும் பொருத்தம் அற்றதாகிறது. அன்றியும் 'பிள்ளையாட்டு' என்பதன் பொருள், இவர்தம் உரையில் துலக்கமாக இல்லை. 'பிள்ளை' என்பது 'கிண்கிணி கலைந்த கால் ஒண்கழல் தொட்டுக் குடுமி கலைந்த சிறுவர் பருவம்'. சொற்பொருளை நுணுகிக் கருதும் நச்சர். 'பிள்ளைப் பருவத்தோனைக் கொண்டு ஆடிய ஆட்டு' என்றது இது பற்றியே. நச்சர். காட்டும் வெண்பாவில், 'புன்தலை ஒள்வாள் புதல்வன்' என்ற அடி அமைந்திருத்தலைக் காண்க, நச்சர். கண்டு, காட்டும் இந்நுண்மை, பாரதி உரையில் இல்லை.

இளம். எழுதும் உரை மேற்கண்ட குறைகள் எதுவும் இல் லாதது. வாளால் மாறுபட்டு எழுந்தவனே மகிழ்ந்து பறை ஒலிப்ப அவற்குத் துறக்க மாகிய நாட்டை அளித்த பிள்ளை யாட்டு' - என்பர். அவர்தம் உரையின் கருத்தாவது: வெட்சி யார், வாள் கொண்டு வந்திருந்தனர். கரந்தையாருடன் மாறு பட்டனர். கரந்தையார் கூட்டத்துள் இருந்த சிறுவன் பகைவனின் வாள் கண்டு அஞ்சவில்லை. வாள் கண்டு, போர் உண்டு என்று மகிழ்ந்தான். கரந்தை வீரர்தம் பறைகள் ஒலி முழக்கின. சிறுவன் துஞ்சவில்லை; அஞ்சவில்லை. வெட்சியானே வீழ்த்தினன். வெட்சியானுக்குச் சுவர்க்க வீடு என்ற நாட்டை நல்கினன். இவ் வாறு பகைவனுக்குத் துறக்கம் அருளிய சிறுவனைச் சூழ்ந்து கரந்தையார் கூடி ஆடி ஆர்ப்பரித்தனர். இதனை இளம். காட்டும் பாட்டு அழகாகப் படம் பிடித்துணர்த்துகிறது.

''மாட்டிய பிள்ளை மறவர் நிறம்கிறந்து
கூட்டிய எஃகம் குடர்மாலை — சூட்டியபின்
மாறுஇரியச் சீறி நுடங்குவாள் கைக்கொண்ட
வேல்திரிய விம்மும் துடி.''

இவ்விளக்கத்தை ஐயனரிதனார் மொழியில் எழுதின், இளம் பூரணர் கூறுவது பிள்ளையாட்டு; நச்சர்., பாரதி, குழந்தை கூறுவது பிள்ளைப் பெயர்ச்சி.[185] தொல்காப்பியர் கூறுவது பிள்ளையாட்டா? பிள்ளைப் பெயர்ச்சியா? பிள்ளையாட்டே என்பது அவர் தம் கூற்றுல் தேற்றம் ஆகிறது. 'வாள் மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து பறை தூங்க நாடு அவற்கு அருளிய பிள்ளையாட்டு என்பது தொல்காப்பியர் கூற்று.

பாரதி, இளம். உரையைப் பிறழ உணர்ந்தனர். உணர்ந்து இளம்பூரணருக்கு மறுப்பும் மொழிந்தனர்.

> 'தனக்கு வெற்றி தந்த வீரனை வேந்தன் நாடுதவிப் பாராட்டுதல் நன்றி மறவா மறக்கட னுகும். இதற்கு, வாட்போரில் இறந்த மறவனுக்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டு என்று இளம்பூரணர் உரை கூறுவர். இதில் 'எழுந்தோனை' என்றதனுல் இற வாமை தெளியப்படும். இறந்தானை எழுந்தான் என்பது மரபன்று. அன்றியும் போரில் இறந்தவர்க்குத் துறக்க நாடு அருளுபவர் அவனைக் கொன்ற பகைவர் ஆவர். அன்றி இறந்த பொருநனின் வேந்தன் ஆகான். புறந் தராது பொருது களத்துயிர் கொடுத்தவனைத் தமரும் பகை வரும் பாராட்டிப் பரிந்திரங்குவர். அவன் இறந்தமைக்கு மகிழ்வது நன்மக்கள் இயல்பன்று. ஈண்டு மகிழ்ந்து நாடவர்க்கு அருளிய பரிசு கூறுதலானும், அஃது உரை யின்மை ஒருதலையாம்.'

இம்மறுப்பு இளம்பூரணர் உரையைப் பிறழ உணர்ந்ததன் பிறப்பு. 'அவற்குத் துறக்கமாகிய நாட்டை அளித்த பிள்ளையாட்டு' என்ற இளம். உரை வரி, 'வெட்சிப் பகைவனுக்குக் கரந்தை இளமறவன் சாவைக் கொடுத்தான்' என்ற பொருளை உணர்த்துவது. அன்றி மறவனுக்கு மன்னவன் சாவை மகிழ்ந்தளித்தான் என்ற பொருளை உணர்த்துவது அன்று. இஃது இளம். காட்டிய பாட்டாலும் உறுதி ஆகிறது. 'மாட்டிய பிள்ளை' என்று அவர் காட்டும் வெண்பா, இளைய வீரன் ஒருவன், எதிரியின் குடலைப் பிடுங்கி வெற் றியால் குதித்தலையே காட்டுகிறது. மாருக, பாரதி கருத்தின்படி மறவனுக்குத் துறக்கம் கொடுக்கும் குறிப்பை அது காட்டவில்லை.

எனவே பாரதி மறுப்புச் சரி அன்று என்பதும், அவர் மறுப்பு பிறழ உணர்ந்ததன் விளைவே என்பதும் விளக்கமாகும்.

வஞ்சித்திணை

'எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே' என்பது தொல்காப்பியம் (64). இந் நூற்பாவிற்கு இளம்பூரணரும், பாரதியும் ஒருவகையில் உரை கண்டனர். நச்சினார்க்கினியரும், குழந்தையும் பிறிதொருவகை யில் உரை கண்டனர். நச்சர். உரைமுறையை மறுத்துப் பாரதி ஒரு கண்டனமும் வெளியிட்டனர்.[186]

இளம்பூரணர், சோமசுந்தரபாரதி உரை

தணியாத மண்ஆசை உடைய ஒரு வேந்தனை அறமறம் உடைய பிறிதொரு மன்னன், அவன் வஞ்ச நெஞ்சம் அஞ்சுமாறு தானே படையொடு மேற்சென்று வென்றடக்குதலைச் சுட்டும்.

நச்சினார்க்கினியர், குழந்தை உரை

இருபெரு வேந்தர்க்கும் இடையீடு ஆகிய மண்ணிடத்து வேட் கையானே ஆண்டு வாழ்வோர்க்கு அஞ்சுதல் உண்டாக அந்நாட்டி டத்தே சென்று ஒரு வேந்தனை ஒரு வேந்தன் கொற்றங்கோடல் குறித்தல் மாத்திரைத்து.

ஒருவன் மண்ணுசையான் மேற்சென்றால் அவனும் அம்மண் அழியாமல் காத்தற்கு எதிரே வருதலின், இருவர்க்கும் மண்ணசை யான் மேற்சேறல் உளதாகலின் அவ்விருவரும் வஞ்சி வேந்தர் ஆவர் என்றுணர்க.

நச்சினார்க்கினியரை மறுப்போர் கூறும் கருத்துகளின் சாறு வருமாறு.[187]

1 நச்சினார்க்கினியர் உரை சூத்திரச் சொல்லமைதிக்கு ஏற்க வில்லை.

2 உயர்ந்த பழந்தமிழ் ஒழுக்கத்தைப் பழிக்கத் தகும் பிழை.

3 ஆரியர் கொள்கையே வஞ்சித்திணை எனக் காட்டப்புகும் விருப்பு.

4 பழந்தமிழ்ப் பாட்டுகள் அரணுக இல்லை;முரணுக உள்ளன.

(அ) 'எஞ்சா மண்ணசை வேந்தனை' என்பதற்கு எஞ்சா மண்ண சையை உடைய வேந்தனை' என்று இரண்டாம் வேற்றுமை உருபை விரிப்பர் சோமசுந்தர பாரதி. 'எஞ்சா மண்ணசையானை'

என்று மூன்றும் வேற்றுமை உருபை விரிப்பர் நச்சர். இரு வழி யிலும் விரிக்க, நூற்பாவின் சொற்கள் அமைந்து கிடக்கின்றன. எனவே ஒன்று சொல்லமைதிக்கு ஏற்றது; மற்றொன்று சொல்ல மைதிக்கு ஏற்றதன்று என்பது பொருந்தாது.

(ஆ) பழந்தமிழ் மன்னர் எல்லாம், மக்கள் எல்லாம் அற அடிப் படையிலேயே போர் தொடுத்தனர் என்ற நிலைவில் முளைத்த கருத்து. இது சரியன்று. போரே அறமற்றது. அதன்கண் அறப் போர் என்ற பாகுபாட்டிற்கு இடன் இல்லை.

சங்கப் பாக்களில் வஞ்சித்திணை

தற்போது, பழந்தமிழர் போர் ஒழுக்கத்தைக் காட்டுவன, சங்க இலக்கியப் பாக்களே. அவற்றுள் வஞ்சித்திணையில் அமைந்த பாக்களை மட்டும்.[188] ஆய்வோம். அவை பண்டைத் தமிழர் வஞ் சிப் போர் அறத்தை அறிவிக்கும்.

1 வஞ்சி மன்னனின் படை எடுப்பால், ஊர்கள் எரிக்கப் படும்; ஊர் மக்கள் அழுது அரற்றுவர். (7) ஊரை எரிக் கும் செந்தீ செக்கர் ஞாயிறு போலத் தோன்றும். கரும்பு வயல்கள் அழியும்; நெல் வயல்கள் கவரப்படும்; மருதம் அழியும். (16, 57, 98)

2 கோட்டையின் உள்ளே அஞ்சி அடங்கிக் கிடக்கும் வேந் தனை வஞ்சி வேந்தன் முற்றுகை இடுவது அறிஞன் ஒரு வனுக்கு நாணத்தை நல்கும். (38)

3 ஒரே குடியைச் சேர்ந்த இருவர் தம்முள் வஞ்சிப் போர் தொடங்கினர். அறிஞன் 'பொய்ம்மலி உவகை செய்யும் இவ்விகல்' என்று கண்டிப்பன் (45).

4 தந்தை, தம் மக்களை எதிர்த்துப் போர் தொடுப்பன். அதனை அறிந்த அறிஞன் அவனைக் கண்டிப்பன் (213).

மேலே கண்டவை வஞ்சிப்போர், மாற்றான் நாட்டை எப்படிச் சீரழித்தது என்பதைக் காட்டும். அம்மாற்றூர் யார்? தமிழரா? தமிழர் அல்லாதாரா? உறையூர் கிள்ளிவளவன், கருவூர் மேல் நிகழ்த்தும் வஞ்சிப் போர் (36), ஓரே சோழர் குடியில் பிறந்த நலங் கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையே வஞ்சிப்போர் (45), அடங்கா மக்கள் மீது அவர்களைப் பெற்றெடுத்த தந்தையே தொடுக்கும் வஞ்சிப்போர் (213). ஆகிய இவை தமிழர்தம் வஞ்சிப் போர் வழக்கினைக் காட்டும். எனவே, உயர்ந்த பழந்தமிழ் ஒழுக் கத்திற்குப் பொருந்தா உரை என்பது பொருந்தாமல் போம்.

அன்றியும் பண்டைய தமிழ்ப் பாக்கள் அரணுக இல்லை முரணுக நிற்கும் (நான்காவது கருத்து என்ற கருத்தும், மேற்கண்ட தமிழ்ப் பாக்களின் சான்றுகளால் தவறுக அமைந்துவிடும்.)

'எஞ்சா மண்ணசையை உடைய வேந்தனை' என மண் அவாவால் வலிய வந்த வேந்தனை, வேந்தன் எதிர்த்து நடத்திய போர் என்று உரை கூறும் போது, எதிர்த்த வேந்தன் அறப்போக்கினன் என்ற கருத்தே, அறிஞரை மயக்குவது. எதிர்த்த வேந்தன் தமிழன் என்கிற போது, எஞ்சா மண்ணசையால் போர் தொடுத்த வேந்தனும் தமிழனே என்பதை நினைவுகூருதல் வேண்டும். நினைவு கூரவே ஆரிய வழக்கால் கூறப்பட்ட உரை என்ற கருத்தும் சரிந்து விடும்.

தொல்காப்பியம் அறம் பயிற்ற வந்த நூல் அன்று; தொல் காப்பியர்க்கு முன்பு இருந்த இலக்கிய வழக்காறுகளை விளக்க வந்த நூலே. இவற்றை மனத்துள் கொள்ளின், ஒழுக்கத்தைக் கூறுவார், ஒழுங்கின்மையைக் கூறார் என்பன பேசப்பெறு. தொல்காப்பியர் ஊர் கொலையைப் பேசுவர்; உண்டாட்டைப் பேசுவர்; (61) எரி கொளுவுதலைப் பேசுவர்; (65), இவற்றைத் தொல்காப்பியர், ஊராரைக் கொல்லச் சொல்லுகிறார்; கள்ளுண்டு ஆடச் சொல்லுகிறார்; தெருக்களை நெருப்பில் கொளுத்தச் சொல்கிறார் என்று கொள்ளுவது? அவ்வாறு கொள்ளுவது அடிப்படை வழு. தொல்காப்பியர் போர் அறம் புகன்றார் இல்லை; போர்ச் செயல்களையே புகன்றார் என்று கொள்ளுதல் வேண்டும்.

வேந்தர்க்கும் மாந்தர்க்கும் போர் உணர்வு பொது. ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும் புதுவன அல்ல; உலக இயற்கை. 'போர்! போர்' என வாளும் தோளும் துடிப்பது பண்டைய மண்ணின் பாங்கு. கண்ணகிக்குப் பொதிய மலைக்கல் வேண்டா; இமயமலைக்கல் வேண்டும் என்ற சேரன் செங்குட்டுவன், மண்ணசையால், புகலா விடினும் மற ஆசையால் புகலுவன்.[189] எனவே மண்ணசையால் போர் நிகழ்த்தினர் என வஞ்சித்திணையை விளக்குவது வழு அன்று. வரலாறு என்றே கொள்ளுதல் வேண்டும். திருமாவளவன், தன் தமிழ் நாட்டில், தன்னை எதிர்ப்பார் இல்லையே என்று கவன்றனன். அவனை செருவெங் காதலன். எனவே தன் தோளாற்றலை வடபுல மன்னர்க்குக் காட்ட விழைந்தனன்.[140] இவ்வாறு ஒரு மன்னன் விழைவது குற்றமன்று. அதுவே அரச அறம்.

வஞ்சி என்பதற்குப் புறப்பொருள் வெண்பாமாலையாரும் ஏறத்தாழ, இதே கருத்தில் கொளு அமைத்தனர்.

'வாடா வஞ்சி தலைமலைந்து
கூடார் மண் கொளல் குறித்தன்று'

என்பர் ஐயனரிதனார்.[141] போர்க் காரணங்களை விளக்கும் அறிஞர், பொருளாதார, இன, தாளிகை, பிரச்சாரம், தொழிலியல், அரசியல் என்ற ஆறினை அடக்குவர். இவற்றுள், பொருளியல், இனஇயல், அரசியல் அடித்தளங்கள் அனைத்து நாடுகளிலும் போர்களை மூட்டின என்று நிறுவுனர்.[142] கிரேக்க, உரோம இசுரவேல், எகிப்திய, இந்திய வரலாறுகள் இவற்றிற்குச் சான்றுகளாக நிற்பன. தமிழக வரலாறும் இதற்கு விலக்கன்று. தமிழ் மன்னர் இடையே நிகழ்ந்த போர்களும், தமிழ் மன்னர்க்கும், ஈழ மன்னர்க்கும் இடையே நிகழ்ந்த பிற்காலப் போர்களும் தமிழர் தம் மண்நசையைப் புலப்படுத்துவன. ஆகவே, மண்நசையால் மன்னவர் போர் நிகழ்த்தினர்' என்ற கருத்தினரான நச்சர். உரையைப் புறக்கணித்தல் பொருத்தம் அன்று.

கொடுத்தல் எய்திய கொடைமை (65)

மாற்று மண் மேல், படை [தொடுத்துச் செல்லும் மன்னவன் பாணர், புலவர், முதலியோர்க்குப் பரிசில் வழங்குதல் என்ற கருத்துப்பட உரையும், எடுத்துக் காட்டும் வரைந்தனர் இளம். இவர்தம் உரையை இரண்டாம் உரையாகப் போற்றிக் கொண்டனர் நச்சர். படை எடுத்தலில் கண்ணும் கருத்துமாய் நிற்கும் மன்னன், பாணர் முதலானோர்க்குப் பரிசில் வழங்கினன் என்பது பொருந்துமாறில்லை. அவ்வாறு போருக்குமுன் பரிசு வழங்கும் போர் மரபும் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே போர் முன் கொடை என்ற உரை பொருந்துமாறில்லை. இதனை அறிந்த சோமசுந்தரபாரதி, 'தானை மறவர்க்குத் தக்காங்குப் பண்பறிந்து வரிசையின் வழங்கும் கொடைப் பெருமை' என உரை வகுத்தனர். இவ்வுரைப்பொருத்தமும் ஆய்விற் குரியது. பாணர் புலவர்க்குப் பரிசில் வழங்குவதை மாற்றி, மறவர்க்குப் பரிசில் வழங்குவது என்றனர். மறவர்க்குச் சீர்மை செய்வது போருக்கு முன்பா? பின்பா? போருக்குப் பின்பே. இச்செய்தி புறநானூற்றுப் பாக்களாலும், சிலப்பதிகாரத்தாலும் தெளிவாகும். இளங்கோ, வெற்றிக்குப்பின் பரிசில் வழங்கும் நிகழ்ச்சியை வருணிப்பர். தென்தமிழ் ஆற்றல் அறியாது மலைந்து ஆரிய மன்னரைச் செங்குட்டுவன் வென்றனன். அவ் வெற்றிக்குக் காரணமான வீரர் பலர். அவர் தம்மை 'வருக' என அழைத்துப் பொன்னுல் செய்யப் பெற்ற வாகைப் பூவை அவர்க்கு அணிவித்தனன்.[143] மாடல

மறையோனுக்குத் தன் எடை அளவு தங்கமும் வாரி வழங்கினன்.[144] எனவே போருக்குப்பின் பரிசில் நல்குதலே பண்டை மரபு. ஆதலின் கொடை என்பது போருக்குப்பின் எனக் கூட்டுதலே பொருந்தும். ஆனால் வஞ்சிப்போர், போரின் முடிப்பன்று. போரின் தொடக்கம். எனவே, போருக்குப்பின் வழங்கும் கொடைமை ஈண்டுப் பொருந்த அமையாது.

போர் தொடங்கும் முன், வேந்தனே, தன் மறவர்க்குப் போர்க் கருவிகளை முறைக்காக முதலில் எடுத்து நல்குவன். அரசர்க்குரிய ஐந்து வழக்கங்களுள்[145] ஒன்றுக, படை வழங்குதலை இளம். குறிப்பர். எனவே 'போர் மேற்செல்லும் வேந்தர் தத்தம் படையாளருக்குப் படைக்கலம் முதலியன கொடுத்தல்' என்ற நச்சர்தம் முதற் பொருள் இங்குப் பொருந்தி நிற்கிறது.

மாராயம் பெற்ற நெடுமொழி

மாராயம் — உவகை. உவகையால் பெற்ற நெடிய மொழி என்பர் இளம். வேந்தனால் ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களும், நாடு, ஊர் முதலியனவும் பெற்றுச் சிறப்பெய்திய அதனால், தானே ஆயினும், பிறரே ஆயினும் கூறும் கூற்றுச் சொல் என்பர் நச்சர். சோமசுந்தர பாரதி, குழந்தை ஆகியோரும் நச்சர் கருத்தினரே. மாராயம் — உவகையைக் குறிப்பதா, பட்டச் சிறப்பினைக் குறிப்பதா என்பதே அடிப்படை வினா. திவாகர நிகண்டு, மாராயத்திற்கு உவகை என்று ஒரு பொருள் கூறும்.[146] கூறுமாயினும் போர்ச் செயலில், அது பொருந்துமா என்பது ஆய்விற் குரியது.

போருக்கு முன் படை வழங்குதல் முன்பு கூறப்பட்டது. போரில் அரியன ஆற்றியோருக்குப் பரிசையும் பாராட்டையும் வழங்குதல் போர் மரபு. எனவே, 'மாராயம்' என்பது மன்னன் சிறப்புச் செய்தலைக் குறித்ததாகக் கொள்ளுதலே பொருந்துவது. போரில் அரியன செய்தாரைப் பட்டம் அளித்துப் பாராட்டுதல் மன்னர் மாண்பு. அவர் தரும் பட்டங்களுள் மாராயம் என்பதும் ஒன்று. மா - ராயம் பேரரசனால் பெறும் சிறப்பு. மாராயம் பட்டம் பெற்ற பலரைப் பிற்காலக் கல்வெட்டுகள் காட்டும். மாராயன் அருண்மொழியான உத்தம சோழ பிரம்மராயன்' என்பான் முதல் இராசேந்திர சோழன் (கி. பி. 1012 - 1044) காலத்து வாழ்ந்த படைத்தலைவன். 'மாராயன்' என்பது பாண்டியர் காலத்தும், பிற்காலச் சோழர் காலத்தும் பெருக வழங்கப்பட்ட பட்டமாகும்.[147] தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டத்தில் 'மாராயக்குடி' என்ற ஊரே உள்ளது. ஆக இவை அனைத்தும் ஒரு காலத்தில் 'மாராயம்' என்பது பட்டப் பெயராக

விளங்கிய மாண்பைக் காட்டுவன. எனவே, 'மாராயம்' என்ற நூற்பாச் சொல், வேந்தன் தந்த சிறப்பை உயர்த்துவதாகக் கொள்ளுதலே சீரிது,

காவிதி, ஏனாதி, மாராயம் போன்ற பட்டங்களைப் பெற்ற மறவர்க்குப் பொற்பூவும், மோதிரமும்: இறையிலி நிலமும் அளிக்கப்படும். இங்ஙனம் மறப்பணி ஆற்றுவோரைச் சிறப்பிக்கும் மாண்பு, பழைய நாடுகள் எங்கணும் இருந்துளது. உரோம நாட்டில் அரியன புரியும் மறவர் பலவகைகளால் சிறப்பிக்கப் பெறுவர். அதன் அடையாளமாகப் பெறும் சிறப்பிற்குத் தக பொன் முடியோ, வெண்பொன் முடியோ சூட்டப்படும்; பல சிறப்பணிகள் (Medals) அளிக்கப்படும். 120 போர்க்களத்தில் பங்கேற்றுத் தனிப்போரில் (Single Combat) எட்டுமுறை வென்று, மார்பில் 45 விழுப்புண்கள் பெற்றுப் புறத்தில் ஒரு புண்ணும் பெறாது வென்று நிற்கும் உரோம மறவன் மிகவாகச் சிறப்பிக்கப் பெறுவான். அவனுக்குப் பல வேறு பரிசுகள், சிறப்பணிகள் நல்கப் பெறும். தனிமறவன் சிறப்புப் பெறுதல் மட்டுமன்றி, பாராட்டுக்குரிய படைப் பிரிவும் (Unit) பட்டங்களால் சிறப்பிக்கப்படும்.[148] ஒத்திருக்கும், இப்பண்டைய உலக மரபைக் கருத, மாராயம் என்ற சொல் பட்டத்தைக் குறித்தது என்று கொள்ளுதலே இலக்கிய வரலாற்றிற்கும், நாட்டு வரலாற்றிற்கும் உலக வரலாற்றிற்கும் பொருந்தும்.

குன்றுச் சிறப்பின் கொற்றவள்ளை

குறையாத சீருடைய மன்னர் வெற்றிக்குப் புகழும், மாற்றூர் தோல்விக்குப் பரிவும் குறித்து மகளிர் பாடும் உலக்கைப் பாட்டு என்பர். நச்சர், பாரதி, குழந்தை ஆகிய மூவரும் இக் கருத்தினர். வள்ளை உரற்பாட்டை, வென்ற வேந்தன் நாட்டு மகளிர் நெல் முதலியன குற்றும் போது அவ்வாறு தம்மரசன் வெற்றியைப் பாடிக்கொண்டு குற்றுவர். பழைய உரையாசிரியராகிய இளம்; 'தோற்ற மன்னவன் வென்றவனுக்கு அளிக்கும் திறை' என விளக்குவர். நச்சர்., வேறுரை கூறினும், இளம் உரையையும் தவிர்க்காது தழுவுவர்.

இத்துறை வஞ்சித்திணைக் குரியது. வஞ்சியின் வரையறையாது? வேந்தனே வேந்தன் அடுவது. உரற்பாட்டோ, போர் அடுஞ் செயலை அறைவது அன்று; வென்றவர் மாட்சிமை கூறுவது. தோற்றவர் தாழ்ச்சி கூறுவது. ஏறத்தாழ, இவ்விரண்டும் முன் அமைந்துள்ள வஞ்சித்துறைகளாகிய வென்றோர் விளக்கத்திலும், தோற்றோர் தேய்விலும் அடங்குவன. அவற்றை மீட்டும் ஒரு

துறைப்படுத்திக் கூறியது கூறுவானேன்? தோற்றோர் தேய்வு என்ற துறையை அடுத்து, தோற்றோர் திறை தரலைப் பேசுதலே நிரல் முறை, ஆதலின், திறை தருவது என்ற இளம். உரையே இங்கே இனிப்பது. நச்சர் முதலானோர், பிற்காலப் புறப்பொருள் வெண்பாமாலைப் பயிற்சியால் 'மன்னவன் புகழ்கிளந்து ஒன்னார் நாடு அழிபு இரங்கின்று'[149] எனப் பொருரை புகன்றனர் போலும்.

அழிபடை தட்டோர் தழிஞ்சி

அழித்தல் வல்ல படைக்கலன்களைத் தம் மார்பால் தடுத்தலைச் செய்து, நின்றவர்களைத் தழுவிக் கொள்வது. போரில் புண்பட்ட மற மாந்தரை வேந்தன் நேரில் கண்டு ஆற்றுவன்; தேற்றுவன். இளமையாளை மறந்து, உர மறவரை நினைந்து நள்ளிரவில், மழைப்பொழிவில் மன்னவர் மறவரிடம் பரிவு காட்டுதலை நெடுநல்வாடை காட்டும்.[150] இவ்வாறு அன்றி வேறு இரு வகையிலும் பொருள் உரைப்பர்.[151]

1 தளரும் தன் படையைப் பின் வாங்காது தடுத்து ஊக்கித் திறன் வியந்து தழுவுதல்

2 அழிந்து புறம் கொடுத்து ஓடுபவர் மேல் படைதொடாத் தறுகண்மை. என்று மூன்று பொருள் உரைகளும், 'அழி படை' என்பதை ஒட்டி வேறுபடுவன.

1 அழிபடை — அழிக்க வரும் எதிர்ப்படை.

2 அழிபடை — தளரும் தன்படை.

3 அழிபடை — தளர்ந்து ஓடும் எதிர்ப்படை.

இம்மூன்றனுள், அழிக்க வரும் அயற்படையை எதிர்த்து நிற்கும் ஆற்றலைப் பேசுவதே வஞ்சித்திணை. தமிழ் மன்னர் வரலாறும், தமிழ் மறவர் வரலாறும் முன்னதற்கே பொருந்துவன. 'தளரும் தன்படை' என்பது ஒருவனை உயர்த்தினும், அவன் சார்ந்த படைப் பிரிவைத் தாழ்த்துவது. புறம் இடும் படை என்பது அயற்படையை வீணே பழிப்பது. இவ்வாறு தாழ்த்துவதற்கும், பழிப்பதற்கும் நூற்பாவில் இடம் இல்லை; இலக்கிய உலகிலும் இடம் இல்லை. எனவே, 'அழிபடை' என்பதற்கு அழிக்கும் ஆற்றல் வாய்ந்த படை என்று கொண்டு, அத்தகு படையைத் தாங்கும் ஆற்றல் வாய்ந்தவனை, வேந்தன் தழுவிக் கொண்டான் என்று பொருள் உரைத்தலே பொருந்தும்.

'மடுத்தெழுந்த மறவேந்தர்க்குக்
கொடுத்தளித்துக் குடிஓம்பின்று'

எனவரும் ஐயனரிதனார் கொளவும் இக்கருத்தினதே.[152]

உழிஞைத்திணை முழுமுதல் அரணம் முற்றலும் கோடலும்(66)

கோட்டையைச் சூழ்ந்து கொள்ளுதலும், அக்கோட்டையைக் கைப்பற்றுதலும் உழிஞைத்திணை.[153] கோட்டையை முற்றுதலும், கொள்ளுதலும் உழிஞை வேந்தனின் வினைப்பாடுகள். இவ்வாறு உரை கொள்வர், இளம்., பாரதி ஆகியோர். இளம்., 'கோடல்' என்றற்குக் கோட்டையை அழித்தல் என்று பொருள் கண்டனர். எனினும், முற்றலும், அழித்தலும் உழிஞை வேந்தனின் செயல்களாகவே அவர் கொண்டனர். நச்சர் புதுவதொரு வகையில் பொருள் செய்தனர். கோட்டையை உழிஞை வேந்தன் வளைத்தலும், கோட்டைக்குள்ளிருந்த வேந்தன், கோட்டையைக் காத்தலும் என்று பொருள் கண்டனர். தம் பொருளுக்குத் தக்கவாறு, தொடர்ந்து வரும்'கொள்ளார் தேஎம்' என்ற நூற்பாவையும் இரண்டாகப் பகுத்தனர். அந்நூற்பாவில் உள்ள முதல் நான்கு உழிஞை வேந்தனுக்கு எனவும், அடுத்த நான்கும் நொச்சி வேந்தனுக்கு எனவும் ஆக வகுத்தனர்; விளக்கினர். இவ்வாறே வெட்சித் திணை துறை நூற்பாவிலும் விரித்தனர்; பின் வரும் திணைகளிலும் விளக்குவர். புறத்திணை உணர்த்தும் போர்ச் செயல்களை மனத்துள் கொண்டே, நச்சர் இவ்வாறு கூறினர். மரபு அடிப்படையிலும் எத்தனைப் போர்ச் செயல்கள் உள்ளன?

1 நிரைகளைக் கவருதல் — வெட்சி
2 நிரைகளை மீட்டல் — கரந்தை
3 படை எடுத்தல் — வஞ்சி
4 படை தடுத்தல் — காஞ்சி
5 முற்றுகை செய்தல் — உழிஞை
6 கோட்டையைக் காத்தல் — நொச்சி
7 அதிரப் பொருதல் — தும்பை
8 போரில் வெல்லுதல் — வாகை

இரு திறத்துப் போர்ச் செயல்களையும் உள்ளத்துள் கொண்டு புறத்திணைகளை அணுகின், அவை மேற்கண்டவாறு வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை வாகை என்றே அமையும். பன்னிரு படலத்தாரும், ஐயனரிதனாரும் இவ்வடிப்படையிலேயே புறத்திணைகளை விளக்கினர். இவற்றுடன், பாடாண்,

பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பவற்றைக் கூட்டிப் பன்னிரண்டு என்றனர். புறத்திணைகளை இருவர் செயல் என அணுகினமையால்தான் எட்டாகி, அது மேலும் பன்னிரண்டாக விரிந்தது. ஆனால் ஒவ்வொன்றையும் இரண்டு இரண்டாகப் பிரித்து வந்தோர், தும்பை வாகை என்ற போர்த்திணைகளில் இரட்டை இணை இல்லாமல் ஒன்றுகவே விட்டு விட்டனர். பிற பாடாண் முதலான நான்கிலும், இரட்டை இணை இன்மையைத் தெரிந்து ஒரே திணை எனக் கொண்டனர். போரில் வெல்வோர் ஒரு திறத்தார் தாமே. ஆதலின் வாகையுள் வெல்வோர் ஒரு திறத்தார் தாமே. ஆதலால் வாகையுள் இரண்டைத் தேட இய லாது. வெற்றி பெற்றவரே பாராட்டிற்குரியவர்; பாடுதற்குரியவர்; பாடாண் திணைக்குரியவர். எனவே பாடாண் திணையுள்ளும் இரட் டையைக் காட்டுதல் இயலாது. ஆகவே அதனையும் விட்டனர். இரண்டு, இரண்டு எனப் புறத்திணை எல்லாவற்றுள்ளும் காண முடி யாது என்பதைத் தொல்காப்பியர் நன்கு அறிந்தவர். எனவேதான் அவர் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி எனப் புறத்திணைகளைப் பகுக்கவில்லை. அன்றியும் கூர்ந்து நோக்கின், புறத்திணைகளைத் தொல்காப்பியர், ஒரு திறத்தார் செயல் என்ற பார்வையிலேயே அணுகி உள்ளனர் என்பதும் புலப்படும்.

1 நிரை கவர்தல் வெட்சி என ஒரு திறத்தார் செயலைக் கூறி யவர், நிரை மீட்டல் என்ற மறு திறத்தார் செயலைக் (கரந்தை) கூறவில்லை.

2 வேந்தனை வேந்தன் பொருதது எனப் படை எடுத்தான் செயலை வஞ்சி ஆக்கியவர், படை தடுத்தான் செயலைக் காஞ்சி ஆக்கவில்லை.

3 கோட்டை முற்றுகையிட்ட உழிஞையன் என ஒரு திறத் தார் செயலைக் கூறியவர், கோட்டை காத்த மறு திறத் தார் (நொச்சி) செயலைக் கூறவில்லை.

தொல்காப்பியர் பார்வையில் நிரை கவர்தல், படை எடுத்தல், முற்றுகை இடுதல், போர் செய்தல் என்றே திணைகள் எதிர்ப்பக்கத் தடை இன்றி வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை எனத் தொடர்ந்து அமையும். இவ்வடிப்படையிலேயே அவர்தம் நூற்பாக்களும் அமைந்துள.

வெட்சி : வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின் ஆதந்து ஓம்பல்.

வஞ்சி : எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன் அஞ்சுகத் தலைச் சென்று அடல் குறித்தல்.

உழிஞை : முழுமுதல் அரணம் முற்றல், கோடல்.

தும்பை : சென்று தலைஅழித்தல்.

திணைபற்றிய நூற்பாக்கள் மட்டும் அன்றி, துறை நூற்பாக்களும், தொல்காப்பியர்தம் ஒருதிறப் பார்வையையே வற்புறுத்தும், தொல்காப்பியர், வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்ற நான்கையே அடிப்படையாக்குவர். அகத்திணையுள்ளும் குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கையே அடிப்படையாகக் கொண்டனர். இவ்வடிப்படை மாறுமல் குறிஞ்சியின் புறன் வெட்சி என்றனர்; முல்லையின் புறன் வஞ்சி என்றனர்; மருதத்தின் புறன் உழிஞை என்றனர்; நெய்தலின் புறன் தும்பை என்றனர். நிலப் பிரிவில் அக ஒழுக்கில் பாலையைப் பிரிக்க முடியாதது என்பதால் அதனை மறைமுகமாகப் போற்றினர். இங்கும் வாகை, போர்ச் செயலன்று; போர்ப்பயன். எனவே பாலையின் புறன் வாகை என்றனர். அகத்திணையுள், பெருந்திணையும் கைக்கிளையும் விலகி நிற்பவை. அவை மனமொத்த காதல் அறங்கள் அல்ல; ஆகவே அவை அகப்புறம். புறத்திணை உள்ளும் காஞ்சியும் பாடாணும் விலகி நிற்பவை. அவை போர்ச் செயல்கள் அல்ல. ஆகவே அவை புறப்புறம். எனவே தான், பெருந்திணையின் புறன் காஞ்சி என்றனர்; கைக்கிளைப் புறன் பாடாண் என்றனர். எனவே, புறத்திணை அனைத்தும் ஒரு திறப் போக்கின என்பதே தொல் காப்பியக் கோட்பாடு. ஆதலின் இருதிறமாகக் கொண்டு பொருளுரைப்பது பொருந்தாது.[154]

கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம் (68)

எதிரியின் நாட்டைக் கைப்பற்றத் துடிக்கும் வீறு என்பர் இளம். சோமசுந்தரபாரதி ஆகியோர். நச்சர்., இதற்குப் பிறிதோர் உரை கூறுவர்.

> "பகைவர் நாட்டினைத் தாம் கொள்வதற்கு முன்பே, நாட்டை வெற்றி கொண்டது போல வேண்டியோர்க்குக் கொடுத்தலைக் குறித்த வெற்றி"

எனப் பொருளுரைக்கும் நச்சர்., இராமன் இலங்கையை வெற்றி கொள்ளுதற்கு முன்பே, வீடணனுக்கு வழங்கிய நிகழ்ச்சியை எடுத்துரைப்பர்.

> 'புலவர் யாவரும் நின்னை நோக்கினர்; நீதான் அவர்க்குப் பரிசில் கொடுத்தல் பொருட்டுப் பரிகாரம் இல்லாத கணிச்சி என்னும் படைக்கலத்தை, உயிர் வருந்தச் சுற்றி இயமன் சினந்தது போல, வலியுடனே, நினக்கு மறுதலை

ஆகிய இரு வேந்தருடைய நிலத்தைக் கொள்ள நோக்கின.

என வரும் புறப்பாட்டையும் (42) எடுத்துக் காட்டுவர். இப் பாட்டை அவர் காட்டினர் ஆயினும், பாட்டின்கண், புலவர்க்குப் பொருள் வழங்கினதாக இறந்த காலக் குறிப்பு இல்லை.

போருக்கு முன் பரிசில் நல்குதலாகக் கூறுவது போர்ச் செயற் போக்கிற்குப் பொருந்துமாறில்லை என்பது, 'கொடுத்தல் எய்திய கொடைமை' பற்றிய விளக்கத்தில் காட்டப்பட்டது. நச்சர் காட்டும் பாட்டும், போர்க்கு முன் பொருள் வழங்கினமையைக் காட்டவில்லை. எனவே அயலார் அரணைக் கைப்பிடிக்கக் கருதும் வேந்தன் வீறு எனப் பொருள் கோடலே பொருத்தம்.

தொல் எயிற்கு இவர்தல் (66)

உழிஞை வேந்தன், முழுமுதல் கோட்டையை நெருங்கினன். அவனது படை முடுகியது. கோட்டை மதிலின்கண் அவன் படைஞர் பரவி ஏறினர் — என்பர் இளம்பூரணர். 'ஒரு காலத்தும் அழிவு இல்லாத மதிலை இற்றைப் பகலுள் அழிப்போம் என்று கூறி அஃது அழித்தற்கு விருப்பம் செய்தல்' என்று உரைப்பர் நச்சர். 'பகைவர் முன் பற்றுத பழமையான மதிலைப் பற்றி, முற்றுகை இட்டோர் ஏறுதல்' என்பர் சோமசுந்தரபாரதி. 'இவர்தல்' என்ற சொல்லிற்குப் பொருள் காணுவதில் உள்ள வேறுபாடே, துறை வேறுபாட்டை உண்டாக்குகிறது. அச்சொல்லிற்குப் பரத்தல் (இளம்) விரும்புதல் (நச்சர்) என்பவற்றைவிட, மதில்மேல் ஏறுதல் என்ற சோமசுந்தரபாரதி உரை மிகப் பொருந்தும். உழிஞை — கோட்டையை முற்றுகை இடும் போர். ஆதலின், உழிஞை மறவர், பரந்தார், விரும்பினர் என்பதினும், மதில் மேல் ஏறினர் என்பதே பொருந்தி நிற்கும்.

நிறப்பட ஒருதான் மண்டிய குறுமை (66)

கோட்டைக் குள்ளிருந்து எதிர்க்கும் மறவர் தரும் இடையூறு களுக்கு அஞ்சாது, தான் ஒருவனே தனியாக நின்று செய்யும் குறும் போர் என்பர் இளம்பூரணரும், சோமசுந்தரபாரதியும். வாலி யும், சுக்கிரீவனும் பொருவது, துரியோதனனும், பீமனும் பொருவது — குறும்போர்களே. ஆனால் இவை உழிஞையோடு தொடர்புடையன அல்ல. நச்சர், முழுமுதல் அரணைக் காத்தல் (நொச்சி) என்ற தன் கொள்கைக் கிணங்கப் பொருள் செய்வர். 'அகத்து இருந்தோன் தன் அரண் அழிவு தோன்றிய வழிப் புறத்துப் போர் செய்யும் சிறுமை' என்பர். மறுதிறத்தா ராகிய

நொச்சியார் போருடற்றுவதைக் கூறுவது தொல்காப்பிய விழை வன்று என்பது முன்பே விளக்கப்பட்டது. எனவே, தனிப் போரே இங்குக் குறிக்கப்படுவது. ஐயனரிதனரும், தொல்காப் பியர் கருத்தை வழி மொழிவார் போல்,

'கருதாதார் மதில் குமரிமேல்
ஒருதான் ஆகி இகல் மிகுத்தன்று'

என வகுத்தனர்; அதற்குக் குற்றுழிஞை எனப் பொருந்திய பெயரும் இட்டனர்.[155] உரோம நாட்டில் குற்றுழிஞைப் போரில் ஒருவனுக நின்று வென்றி கொள்வோரை மிகவாகப் போற்றினர். இவ்வாறு எட்டு இடத்தில் ஒரு மறவன் வெல்வாளுயின் அவனுக்குச் சீரும் சிறப்பும் செய்யப்படும்.[156]

குடையும் வாளும் நாள்கோள் (69)

போர்மேற் செல்லும் வேந்தன், கொற்றக் குடையையும் வெற்றிப் போர் வாளையும் முறையே நல்ல நாளில் முதற்கண் போக்குவன் என்பது இளம், நச்சர்[157] உரை. இதனுற் போருக்குச் செல்லும் வேந்தர் 'நல்ல நாள் பார்த்துப் போர் தொடங்கினர் எனத் தெரிகிறது. நாள் பார்ப்பது மூட நம்பிக்கை என்ற கருத்தில் போலும், புலவர் குழந்தை இத்துறைக்கு வேறு பொருள் கூறினர். அவர் கூறுவது.

> 'நாட் கொள்ள லாவது, இன்று மாநாட்டுத் தொடக் கத்தில் கொடி ஏற்று விழாக் கொண்டாடுவது போல, கோட்டைக்குள் புகத் தொடங்கும் முதல் நாளில், குடையை உயர்த்தியும், வாளை நாட்டியும் வீரர்கள் தொடக்க விழாக் கொண்டாடுதலாகும்.[158]

இவ்வாறு பொருள் கொள்ளுதற்கு, இலக்கண மரபும், இலக் கிய மரபும், பழைய நாடுகளின் வரலாறுகளும், பிற்காலத் தமிழ் மன்னர் வரலாறும் இடந்தரவில்லை.

நல்ல நாளைத் தேடி அறிவது என்ற பொருளில், புறப் பொருள் வெண்பாமாலை, இலக்கண விளக்கம் ஆகிய இலக்கண நூல்கள் வரையறை செய்யும்.[159] அன்றியும் உன்னமரம் மலர் வதையும், தளர்வதையும், கொண்டு நன்னிமித்தம், தீ நிமித்தம் அறியப்பட்டன; பூவை மலர் வாட்டமும், வாட்டம் இன்மையும் கொண்டு நன்மையும் தீமையும் அறியப்பட்டன. இவை வெட்சி யார் மேற்கொண்டவை.[160] பாக்கத்து விரிச்சி கேட்பதும், நம்பு வதும் முன்பு குறிக்கப்பட்டன. உன்ன நிலையையும், விரிச்சி கேட்டலையும் உடன்படும் புலவர் குழந்தை, நன்னாள் பார்த்தலை உடன்பட மறுப்பது பொருந்துவதாக இல்லை.

இலக்கிய மரபும், நன்னூலில் மன்னர் போர் தொடக்குதலே எடுத்துரைக்கும். திருமாவளவன், நல்ல நாளில், வாளையும் குடையையும் முரசையும் போக்குவன் என்று காட்டும் சிலம்பு.

'செருவெங் காதலின் திருமாவளவன்
வாளும் குடையும் மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணூர்ப் பெறுக.[161]

வட ஆரிய மன்னரை வணக்குவான் வேண்டி, நல்ல நாளில். வாளையும் குடையையும் சேரன் செங்குட்டுவன் வெளிப் போக்குவன்.[162] எனவே இலக்கியச் சிலம்பும் நன்னூல் காண்டலைக் காட்டும்.

வேந்தர், படை எடுப்பிற்கு முன்னர், நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பர்; உரிய திறம் வாய்ந்த கணிகர்களை நல்ல நாளைக் கண்டறியுமாறு பணிப்பர்: 'நல்ல நாளைப் பார்த்துப் போர் தொடங்குவதே நன்மை தரும்' என மகாபாரதத்தில் வீடுமன் கூறுவன்;[163] நல்ல நாள் குறித்துத் தருமாறு, துரியோதனன் நாள் பார்ப்பதில் திறம் வாய்ந்த சகாதேவனை அணுகிக் கேட்பன்.[164] அர்சவர்த்தனன், நூற்றிற்கு மேலிட்ட கணியர்களைக் கொண்டு தன் 'திக்குவிசய நாளைத் தேர்ந்தறியப் பணிப்பன். கணியர் தக்க காலத்தை நாளைக் கணிப்பர்.[165] இராய்சாச் (Raichash) இந்துத்தான்மேல் படை எடுப்பதற்காக, நன்னாளைக் கண்டறிக எனப் பல கணிகரிடம் வினவுவன். அவர்கள் குறித்த நாளிலேயே படை எடுப்பை அவன் தொடங்குவன். முசுலீம் வரலாற்றிற் குரியனான மீன்காசு (Minkaj) இலட்சுமண சேனன் பிறப்புப் பற்றிக் கூறுவது நாட் கணிப்பின் மரபினை வலிவுபடுத்தும்.

இலட்சுமண சேனனின் பிறப்புக் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. அவன் தந்தையோ அவன் பிறப்பிற்கு முன் இறந்து விட்டார். தாய், கருவுயிர்க்கும் காலம் விரைந்து கொண்டிருந்தது. கணிகர் அரசியிடம் குழந்தை அப்போதே பிறப்பான் ஆயின், அவன் அரசுரிமை எய்த இயலாது. இரண்டு மணிக் காலம் கடந்து பிறப்பான் ஆயின் அவனுக்கே அரசுரிமை என்றனர். தன் குழந்தைப் பிறப்பைத் தள்ளி வைத்தற்காக, அரசி, தலைகீழாக, கால்களை மேலே கட்டச் செய்தாள். இரண்டு மணிக் காலம் குழந்தையைப் பிறவாது தாங்கினாள். பின்னர்க் குழந்தை இலட்சுமண சேனன் பிறந்தான். ஆனால் அந்த ஈகத் தாய் இறந்தாள்.[166]

அசீரியரிடம் (Assyrian) நாள் பார்க்கும் பழக்கமும், கணிகர் சொல்லிய கணிப்பை ஏற்கும் பழக்கமும் இருந்தன. காலக் கணி

கர் வழி நின்-கி-ஈசாக் (Nin-Igi-Azag) என்ற அவர்கள் தெய்வம் பேசுவதாக நம்பினர், வான்மீன்களின் போக்கை ஒட்டி நல்லன அல்லன நிகழும் எனக் கொண்டனர். அதன் பின்னேயே ஒற்றரை விடுத்தலும், வெற்றியை நம்பிப் படை தொடுத்தலும் மேற்கொண்டனர்.[167]

தமிழக வரலாறு, வடபுல வரலாறு, அயல்புல வரலாறு ஆகியன, பண்டு நல்ல நாள் பார்க்கும் பழக்கம் இருந்ததை உறுதி செய்யும். எனவே இவ் வரலாற் றுண்மையை மனத்துள் கொண்டு, நோக்கும் பொழுது, குழந்தை உரை தொல்காப்பியர் காலத்திற் குப் பொருத்தம் அற்றதாகிறது.

முற்றிய அகத்தோன் வீழ்ந்த நொச்சி (69)

உழிஞை மறவரால் வளைக்கப்பட்ட அகப்படைத்தலைவன் அரண்காவல் விரும்பிப் புரியும் அமர் என்றனர் நச்சினார்க் கினியரும், சோமசுந்தரபாரதியும். குழந்தையும் இக் கருத்தினரே. இம்மூவரும் 'வீழ்ந்த' என்பதற்கு 'விரும்பிய' எனப் பொருள் கொண்டனர். இளம்., இவரைப்போல் கொள்ளாது, உழிஞை வீரரால் வளைக்கப்பட்ட அகத் தலைவன் இறந்ததைக் கூறும் நொச்சி என்று உரைத்தனர். தம் கருத்திற்குப் பொருத்தமான காட்டும் நல்கினர்.[168]

> 'போரில் ஒரு மறவன் அணிந்திருந்த நொச்சி மாலை அவன் பகைவர் வாளால் வெட்டுண்டு வீழ்ந்த போது அறுப்புண்டு அவன் குருதியிற் படிந்து உருமாறிப் போயிற்று. போரிடைப் பட்டு வீழ்ந்த பிணங்களைத் தின்றற்குப் பருந்து முதலிய பறவைகள் அங்கே சூழ்ந்து கொண்டிருந்தன. அவற்றுள் ஒரு பருந்து குருதியிற் படிந்து உருமாறிய நொச்சி மாலையைத் தசை எனக் கருதித் தூக்கிக் கொண்டு உயரத்திற் பறந்து போயிற்று.

மேலே கண்ட புறப்பாட்டின் கருத்து, நொச்சி மறவன் வீரச் சாவைக் காட்டும். இப்பாடலை நொச்சித்திணை என வகுத்தவர், துறையைச் 'செருவிடை வீழ்தல்' எனக் குறித்தனர். இங்கே 'வீழ்தல்' என்பது மடிதல் என்ற பொருளினது. உழிஞைத்திணைக் கண், நொச்சியார் வீரத்தைக் காட்டுவதிலும், அவர் மடிந்ததன் மூலம், உழிஞையார் திறம் நுவலப்படுகிறது. உழிஞைத்திணைக் கண் அவர் திறம் நுவலப்படுதலே சிறப்பு. எனவே இளம்பூரணர் உரைப்பதே பொருத்தம்.

மதில் மிசைக்கு இவர்ந்த மேலோர் பக்கம்

மதில்மேல் ஏறி அகற்றப் படாது ஊன்றிய மறவர் பக்கம் என்பது இளம்பூரணர், சோமசுந்தர பாரதி ஆகியோர் கருத்து.

நச்சினார்க்கினியரும் குழந்தையும் வேறு கருத்தினர். கோட்டை மதில் மேல் அன்றி, அரண்மனைக் கோயிலிற் புரிசைகளின் மேல் நின்று பொருதல் என்பர். இவ்வாறு பொருள் கொள்ளுதற்குக் காரணம், நச்சினார்க்கினியர் கொண்ட பாடமே. அவர் 'அக மிசைக்கு இவர்ந்தோன் பக்கம்' எனப் பாடம் கொள்வர். 'அகம் எனக் கொண்டற்கு ஏற்பப் புறஞ்சேரி மதிலையும், ஊரமர் மதிலையும் கடந்து அகத்தே உள்ள அரண்மனை மதில் எனப் பொருள் உரைத் தனர். நச்சர்., உரை, மற்றதினும் பொருந்தி வருகிறது. உழிஞை மறவர், புறஞ்சேரி மதிலைக் கடப்பர். ஊர் மதிலைக் கடப்பர்: இவ் விரண்டையும் கடந்து வென்ற பின்னரே, அரண்மனை மதிலை அணுக முடியும். கோட்டை மதில்கள் மூன்றடுக்காக இருந்த முறைமையை அவர்தம் உரை காட்டும். அன்றியும், தொடர்ந்து வரும், தொல்காப்பிய அடி 'இகல் மதில் குடுமி' எனத் தொடங்கு தற் கேற்ப, தலைஅடி 'அகன்மிசை' என்று எதுகை நயம்பட அமைந்திருத்தலே மற்றதினும் பொருத்தம்.

இகன்மதில் குடுமி கொண்ட மண்ணுமங்கலம் (69)

இகல் செய்த மதிலில் ஒருவன் ஒருவனைக் கொன்று அவன் முடிக்கலம் முதலியன கொண்டு, இறந்த வேந்தன் பெயராலே முடிபுனைந்து நீராடும் மங்கலம். இளம்., நச்சர்., ஆகியோர் இக் கருத்தினரே. குடுமி, என்பதனை முடிக்கலன் என விளக்கினர். மதிலின் முடியைக் கைப்பற்றுதல் என வேறுபட்டு உரைப்பர் சோமசுந்தரபாரதி. முடிக்கலன் பறிப்பது வரலாற்றில் மிகத் தலைமை வாய்ந்தது. கி.பி. 907-953இல் சோழப் பெருநாட்டை ஆண்ட முதல் பராந்தக சோழனுக்கும், அக்காலப் பாண்டி மன்ன னாக இருந்த இராச சிம்ம பாண்டியனுக்கும் இடையே போர் மூண்டது. போரில் சோழன் வென்றான். தோற்ற, பாண்டியன், தன் முன்னோர்களிடமிருந்து தனக்குக் கிடைத்த சுந்தர முடியை யும், பிற அரசச் சின்னங்களையும் எடுத்துக் கொண்டு ஈழம் சென்றான். அப்போது ஈழத்தை ஆண்டு கொண்டிருந்த நான்காம் தப்புலன் (கி.பி. 923-34) பால், கொண்டு வந்த பொருள்களை அடைக்கலப் படுத்தினன். பின்னர், தாயகம் திரும்பி, சேர நாட் டில் வாழ்ந்து வந்தான். பராந்தக சோழன், ஈழத்தின் மீதும் படை எடுத்தான். தப்பி ஓடிய மகிந்தன், பாண்டி முடிக்கலனுடன் ரோகண நாட்டிற்குப் போய்விட்டான். முடிக்கலனைப் பறிக்கும் முயற்சி பல தலைமுறைகளைத் தாண்டி, கி.பி. 1017 இல் ஏறத்தாழ நூறாண்டுகள் கழித்தும் சோழரால் மேற்கொள்ளப்பட்டது. ஈழத் தின் மேல் படை எடுத்துச் சென்று, முதல் இராசேந்திர சோழன், ஒரு நூற்றாண்டிற்கு முன் ஈழத்தில் வைக்கப்பட்ட முடியையும்,

இந்திரன் ஆர்த்தையும் கவர்ந்து வந்தான். இராசேந்திரனது முடி பெற்ற வெற்றிச் சிறப்பை அவனுடைய மெய்க்கீர்த்தி பெருமை யுடன் குறிக்கும்.

> 'பொருகடல் ஈழத்து அரசர்தம் முடியும்
> ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
> முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
> சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
> ... ...
> மாபெரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான
> உடையார் ஸ்ரீ ராசேந்திர சோழ தேவர்'.[169]

படை எடுப்பில், பகை மன்னர் முடி பறிப்பது முதன்மையானது என்பது மேலே காட்டிய ஒரு நூற்றுண்டு வரலாறு காட்டும். மூன்றாவது குலோத்துங்கன் வீரபாண்டியன் என்பவனை வென்றான். அவனை அழைத்து அவனது முடிமேல் தன் அடியை வைத்தான் குலோத்துங்கன். மாற்றரசர்தம் பொன்முடியைக் கைப்பற்று வதிலேயே மன்னவர் கருத்து இருக்கும்.ஏனெனில் வெற்றி தோல்வி அதன் கண்ணேதான் இருந்தது. முடி வீழ்ந்தது என்றால் அரசு வீழ்ந்தது என்றே பொருள். இராசாதிராசனுடன் போர் புரிந்த சுந்தரபாண்டியன், தன் முடிவிழத் தலை விரித்தோடினான் என்று கல்வெட்டு கூறும். முடிகொண்ட சோழன் என்பதே ஒரு சோழ னுக்குப்பட்டப் பெயர். முடிகொண்ட சோழபுரம் என்பது ஓர் ஊர்ப் பெயர். பகை மன்னரின் பொன் முடியைக் கொண்டு கழல் செய்து தம் காலுக்கு அணிவர். 'கடந்தட்டவர் முடி புனைந்த பசும் பொன்னின் அடிபொலியக் கழல் கைஇய வல்லாளன்' எனக் கிள்ளிவளவன் பாராட்டப் படுவன்.[170] மன்னர்தம் முடியை மார்பில் ஆரம் ஆக்கி அணிந்தான் என்ற கருத்தில் 'எழுமுடி மார்ப எனவரும் சிலம்பு.[171] பண்டைய உரையாசிரியர் கொண்ட உரையைக் கல்வெட்டு வரலாறும் உறுதி செய்யும். இதற்கு இவ்வாறு உரை செய்யாமல், மதிலின் முடியை அகப்படுத் தினதாகப் பாரதி கூறும் உரை சிறப்பாக இல்லை.

தொகை நிலை (69)

உழிஞை மன்னனும், பகைவற் குரிய மதிலை அழித்தனன்; மதிலுக் குரிய மன்னன் தோற்றான். அவன் முடிக்கலமும் பிறவும் வென்றவனுக்குக் கொடுத்தான். தோற்ற மன்னனுக்குத் துணை யாக இருந்த ஏனைய மன்னரும், மறவரும் இவற்றைக் கண்டனர். வென்றவனின் வலிவையும், தம் வலியின்மையையும் உணர்ந்து, பகைமை அவிந்து, வென்ற மன்னனை அடக்குவர். வென்ற மன்ன னுக்கு அடங்குவர். இஃது இளம்பூரணர் கருத்து.

'போர் முடிந்தவுடன், பரந்துபட்ட படைக்கடற்கு எல்லாம் சிறப்புச் செய்ய, ஒருங்கு வருக என மறவரைத் தொகுப்பது என்பர் நச்சினார்க்கினியர். மறவரைப் பாராட்ட வேறு பல துறைகள் உள்ளன. ஆதலின் இதனைப் பரிசில் நிலை ஆக்க வேண்டுவதில்லை. தோற்றோர் ஒரு பெருந்தொகையாக முற்றும் அழிவது என்பர் பாரதி. ஒருவரும் எச்சமின்றிக் கொல்லப்பட்டனர் என்ற கருத்தில், தும்பைத் திணையின்கண் கூறப்படும் 'ஒருவரும் ஒழியாத் தொகைநிலை' என்ற கூற்று, சோமசுந்தர பாரதி உரையை வலிவு படுத்தும். அசீரிய மன்னன் அசுர் பணிபால் (Asurbanibal) கூட்டமாகக் கொல்வதில் பெயர் பெற்றவன். கடவுளின் விருப்பம் என்று கூறி, பலரின் நாக்குகளை வெட்டி விடுவான்; உறுப்புகளைத் துண்டித்து விடுவான். மனிதச் சடலங்களை நாய்க்கும், ஓநாய்க்கும், மீன்களுக்கும் விருந்து வைப்பான். வரலாற்றில் இவனுக்கு நிகரான கொடியவன் இல்லை என்பர்.[172] தமிழ் நாட்டு உழிஞை மன்னரை இந்த அளவில் கொள்ளுதற்கு, நூல் இடம் தரவில்லை. அன்றியும், தும்பையில் பின்னே இக்கருத்தில் கூற இருப்பவர், உழிஞையிலும் கூறி இருப்பர் எனக் கருதற்கு இடமில்லை. தும்பை மறவர் அதிரப் பொருதற்காகவே, வாழ்வை இழக்கத் துணிந்து பொருகளம் வருவர். ஆங்கு அனைவரும் மடிவர் என்பது பொருந்தி நிற்கும். பாரதப் போரில், துரியோதனனுடையர் அனைவரும் மடிந்தனர். ஆனால் உழிஞைப் போர் அத்தகையது அன்று. உழிஞையார், போருடற்றவே வந்தனர். எனினும், கோட்டைக்கு உள் வாழ்வோர், அனைவரும் போர் மறவர் அல்லர். மறவரல்லாப் பலர், கோட்டைக்குள் இருத்தல் இயற்கை.

> "முற்றுகை இடப்பட்ட கோட்டைக்கு உள்ளே யானைகள் வெய்துயிர்த்து முழங்கும். குழந்தைகள் பால் இன்றி அலறி அழும்; மகளிர் வறுந்தலை முடிப்பர்; மனை இடங்களில் எழும் அழுகுரல் அரண்மனைக்கண் கேட்கும்".

என விரித்துரைக்கும் சங்கப் பா.[173] சோமசுந்தரபாரதி உரைப்படி, மறவரின்றி மற்றவரும் தொகுதியாகப் பட்டனர் என்று பொருள் கொள்ள நேரிடும். அது முறை அன்று.

ஒரு பெருமன்னன் வீழ்த்தப்படின், அவனைச் சார்ந்து வேறு பல மன்னரும் வென்றவர் பக்கம் தொகையாகச் சேர்வது உலகியல். இரண்டு உலகப் போரிலும் செர்மனியின் வீறுக்கஞ்சிப் பலர் அந்நாட்டைச் சரண் அடைந்தனர். அலெக்சாண்டர் உலகப் படை எடுப்பின் போது எதிர்த்தவர் சிலரே. வெற்றியைக் கேட்ட அளவில் அவனிடம் சரண் அடைந்தவரே பலர். திக்கு விசயம் என்பது கூட ஓரளவு இதனை ஒத்ததுதான். சிலர் எதிர்ப்

பர்: பலர் மதிப்பர். இவற்றை மனத்துட் கொண்டு நோக்கின், இளம். உரைகோடலே பொருத்தம் என்பது புலப்படும்.

தும்பைத்திணை இருநிலம் தீண்டா அருநிலை (71)

தும்பைப் போரில் இரு திறத்தாரும் மைந்து பொருளாகப் பொருதனர். கணையையும், வேலையையும் ஒருவர் மேல் ஒருவர் எறிந்தனர்; மறவர் சிலர்தம் உடல் இரண்டு பட்டது, தலைவேறு, முண்டம் வேறு ஆயிற்று. ஆயினும் தலையும் குதித்தது; முண்டமும் குதித்தது. துண்டு பட்ட நீரட்டை குதித்தலைப் போல அவை குதித்தன என்பர் இளம்பூரணர். வேறுரை செய்தனர் ஆயினும், இளம் உரையையும் தழுவினர் நச்சர். பாரதி, நச்சர்தம் முதல் உரையைத் தழுவி, இளம். உரையை மறுத்து மொழிந்தனர். இரு கூறுபட்ட அட்டைப் பகுதிகள் தனித்தனி ஊர்ந்து இயங்குதல் போலத் துணிக்கப்பட்ட தலையும், உடலும் தனித்தனியாகத் துடிக்கும் என இளம்.பொருள் கூறுதலை மறுப்பர் பாரதி. இரண்டின் மேற்பட்ட வெட்டுண்ட அட்டைத் துண்டுகளும் துடிப்பது இயல்பாதலால் 'இருபாற்பட்ட' என்பது பொருளற்றதாகும். அன்றியும் வெட்டுப்பட்ட தலையும் முண்டமும், நிலத்தில் குதிக்க, வெட்டுப்பட்ட அட்டை நீருள் குதிக்கும். நிலத்தில் இருக்கும் ஒன்றிற்கு நீருடன் வாழும் ஒன்றை ஒப்புமை ஆக்குதல் பொருத்தமற்றது என்பர். இக் காரணங்களிலும் பிறி தொரு செய்தி எண்ணுதற்குரியது. அட்டை என்ற பொருளில் 'அரு' என்ற சொல், தொல்காப்பியத்தில் வேறிடத்தில் வந்துள்ளதா? சங்க இலக்கியத்தில் வழங்கப்பெற்றுள்ளதா? தொல்காப்பியத்திலும் வழங்கவில்லை. சங்க இலக்கியத்திலும் வழங்கவில்லை... சங்க இலக்கியத்திற்கு முன் தோன்றிய தொல்காப்பிய நூலுள் நீரட்டையைப் பொருத்துவது சொல் வரலாற்றிற்குப் பொருத்தமாக இல்லை. எனவே, 'இருநிலம் தீண்டா அரு' என்பதற்கு, 'அறுபட்ட தலை முதலிய உறுப்புகள் பெருநிலம் படியாது முறுகிய முனைப்பால் துடித்தியங்கும் அரிய நிலைமை' எனப் பொருள் கொள்ளுதலே பொருந்தும்.

கூழை தாங்கிய பெருமை (72)

ஒரு மறவன் தன் தலைவனை அவன் உடைபடையுட் புகுந்து அதன் பின்னணியைத் தாக்கும் பகைவரைத் தாக்கி ஏமம் உறக் காக்கும் தளராத் தறுகண்மையாகிய பெருமை என்பர் இளம். இதனைப் பெருமை எனக் கொள்ளாது ஏருமை மறம் என்று ரைப்பர் நச்சர், பாரதி, குழந்தை ஆகியோர். ஏருமை எதற்கும் அஞ்சாது நிற்றலைப் போல, பகைவர்தம் தடைகளுக்கும் இடை

யூறுகளுக்கும் தளராது நிற்கும் ஊக்கம், எருமை மறம் எனப் பட்டது போலும். புறநானூற்றில் எருமை மறம் கூறும் பாக்கள் மூன்று உள்ளன (புறம். 80, 274, 275). சோழன் போர் வைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைப் பொருது நின்ற திறத்தை ஒரு பாடல் பகரும் (புறம் 80). போரின் கண் மறவன் ஒருவன் இடையில் கச்சையால் இறுகிய உடையும் தலையில் மயிற்பீலியால் தொடுக்கப்பட்ட கண்ணியும் உடையனாய், வேலேந்தி நின்று கடும்போர் புரிந்தான். அப்போது அவன்மேல், பெரிய களிறொன்றும் அடர்க்க வந்தது. உடனே அவன் தன் கை வேலைக் களிற்றின் நெற்றியிற் பாய்ச்சினான். வேல்பட்ட யானை வீழ்ந்துபட்டது. இதற்கிடையில் பகைவர் பலர் பொராது வேலேந்தி அவன் பக்கம் வந்தனர்; அவனை அவர்தம் வேல் எறிதலை முறித்தான்; அவர்தம் தலைவனையும் தோளுறப் பற்றினான்; நிலத்தில் மோதினான். அவன் உயிர் போக்கி, உடல் தூக்கி நின்றான் (புறம். 274). போர்க்களத்தே பெரிய போரைச் செய்யும் மறவன் ஒருவன், தன் தோழன் பிறிதொரு புறத்தே பகைவர் வளைத்துக் கொள்ள அவர் நடுவே நின்று பொருவது கண் டான். உடனே அதற்குத் துணைசெய்யக் கருதி, நெடிய வேலைக் கையில் ஏந்திக் கொண்டு விரைந்து செல்லலுற்றான். கன்றைக் காதலிக்கும் கறவைப் பசுப்போல விரைந்தான்; விரைந்தவன் கால்கள் சங்கிலி பூட்டல்போலப் பின்னின. பகைவர், அவனைத் தடுத்தனர்; அவன் தடை அகற்றி நண்பன் இருப்பிடம் அடைந் தனன். அவனது தறுகண்மையை 'எருமை மறம்' என்றனர். இளம் இப்பாவை எடுத்துக் காட்டுவர்; எனினும் 'எருமை மறம்' எனப் பொருள் கொள்ளாது விட்டனர்.

புறநானூற்றில் எருமை என்ற துறை, தும்பைத் திணையின் கண் போற்றப்படுதலும் புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரி யரும் இலக்கண விளக்க ஆசிரியரும் இத் துறையைத் தத்தம் தும்பைத் துறைகளில் ஒன்றாகக் கொள்ளுதலும், 'எருமை மறம்' பெயரே பொருத்தம் என்று காட்டும்.[178]

படை அறுத்துப் பாழி கொள்ளும் ஏமம்

கருவியை அறுத்து மல்லினைக் கொள்ளும் ஏமம் என்பர் இளம். கைப்படையைப் போக்கி மெய்யால் போர் செய்தல் என்பர் நச்சர். மேல் வரும் பகைப் படைக்கலங்களை அழித்து மதுகை கொள்ளும் பாதுகாவல் என்பர் சோமசுந்தரபாரதி.

பாழி — இளம்பூரணர் கூறுவது — மல்
நச்சினார்க்கினியர் — மெய்/வலிமை

பாரதி	— மதுகை, வலிமை, பெருமை
குழந்தை	— மற்போர்

கையகத்திருந்த படைக்கலங்கள் பயன்பட்டு, முற்றும் தீர்ந்த நிராயுதபாணி நிலையில், மறவன் மனம் தளராது தன் தோள் ஆற்றல் காட்டுவான் என்பது கருத்து. இக்கருத்திலேயே, ஐயனரி தனரும்,

'குடை மயங்கி வாளமருட்
படை மயங்கப் பாதி கொண்டன்று'

என்பர். யானை மேல் வேல் போக்கி நின்ற வீரன் தன்மெய் வலியால் மட்டும் போருடற்றல் என்று காட்டுவர்.[174] எனவே நச்சர். கருத்து மிகப் பொருந்தி யுளது. ஏனையோர் கருத்துரைகளும் வழு உடையன அல்ல. மேலே முடித்த பொருளுக்கு உறவு உடையனவே.

வாகைத்திணை: அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்

மாற்றூர் மேற் சென்ற வேந்தன், அவனுடன் பொருது வெற்றி கண்டான். அரசன் தான் கொண்ட கொள்கையை மிகுதிப் படுத்தி வெற்றி கொண்டமை வாகைத்திணை எனப்படும். அரசன் அன்றி, அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியோரும், தத்தம் கொள்கையை மிகுதிப்படுத்திக் கொள்ளுதலும் வாகைக் கண் அடங்கும். இச்செய்தி,

'தாவில் கொள்கை தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப் படுத்தல் என்ப.'

என்ற தொல்காப்பிய நூற்பாவால் தெளிவாகும். அவரவர் துறையில் பிறருடன் உறழ்ந்து மேம்படு வெற்றி பெறுதலே வாகை. உறழ்பவரின்றி ஒரு துறையில் ஒப்பற் றுயரும் பரிசும் வாகையே. எதன் கண்ணும் மேம்பட்டு வீறு பெறுதல் வாகை ஆகவே உறழ்ச்சி இன்றி அமையாத தன்று. இகல்படப் புகழும் பாடாணின் வேருய், உறழ்வாரை வென்றுயரும் வீறும் எதிர்ப்பு மின்றி ஒரு துறையில் மேம்படும் விறலும் ஒப்ப வாகையில் அடங்கும்.[175] எனவே தான், அரசர் மட்டுமன்றி, அந்தணர், வணிகர், வேளாளர், ஒழுக்கங்கள் இங்கே இடம் பெற்றுள்ளன. அரசர் முதலான பகுதியார்தம் ஒழுக்கங்களை விரித்துச் சொல்லாமல் 'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்', 'ஐவகை மரபின் அரசர் பக்கம், 'இரு மூன்று மரபின் ஏனோர் பக்கம்' எனத் தொல்காப்பியர், தொகை எண்களைக் கூறி அமைந்தமையால் உரை

'ஐவகை மரபின் அரசர் பக்கம்' என் பதற்கு உரையாசிரியர் கூறுவன

அட்டவணை 24

எண்	உரையாசிரியர்	1	2	3	4	5
1	இளம்பூரணர்	ஓதல்	வேட்டல்	ஈதல்	படை வழங்குதல்	குடி ஓம்புதல்
2	நச்சினார்க்கினியர்	ஓதல்	வேட்டல்	ஈதல்	காத்தல்	தண்டம் செய்தல்
3	சோமசுந்தர பாரதி	சேரர்	சோழர்	பாண்டியர்	வேளிர்	குறுநில மன்னர்
4	குழந்தை	ஓதல்	ஈதல்	படைக்கலம் பயிறல்	குடிகாத்தல்	செங்கோண்மை
5	அர்த்த சாத்திரம் 1 - 3	ஓதல்	வேட்டல்	ஈதல்	படைகலம் பயிலுதல்	உயிர்களைக் காத்தல்
6	பதிற்றுப்பத்து பா. 21	ஐந்துடன்	போற்றி	அவை துணையாக	படைக்கலம்	உயிர்களைக் காத்தல்
7	பரிமேலழகர் உரை குறள் 384	ஐந்துடன்	போற்றி	அவை துணையாக	படைக்கலம் பயிலுதல்	உயிர்களைக் காத்தல்

அட்டவணை 25

வணிகர்க்குரிய ஆறு தொழில்கள்

எண்	உரை ஆசிரியர்	1	2	3	4	5	6
1	இளம்பூரணர்	ஓதல்	வேட்டல்	ஈதல்	உழவு	வாணிகம்	நிரை ஓம்பல்
2	நச்சினார்க்கினியர்	ஓதல்	வேட்டல்	ஈதல்	உழவு	வாணிகம்	நிரை ஓம்பல்
3	பாரதி	ஆயர்	குறவர்	உழவர்	பரவர்	வினைவலர்	ஏவல் மரபினர்
4	குழந்தை	ஓதல்	ஈதல்	உதவி	விருந்தோம்பல்	நிரை காத்தல்	வாணிபம்
	ஆரிய மரபு[177]	**ஓதல்**	**வேட்டல்**	**ஈதல்**	**உழவு**	**வணிகம்**	**நிரை ஓம்பல்**

'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என்பதற்கு உரைகாரர் கூறுவன

எண்	உரை ஆசிரியர்	1	2	3	4	5	6
1	இளம்பூரணர்	ஓதல்	ஓதுவித்தல்	வேட்டல்	வேட்பித்தல்	ஈதல்	ஏற்றல்
2	நச்சினார்க்கினியர்	ஓதல்	ஓதுவித்தல்	வேட்டல்	வேட்பித்தல்	கொடுத்தல்	கோடல்
3	சோமசுந்தர பாரதி	எண்ணூயிரவர்	மூவாயிரத்தார்	வடமர், சோழியர்	என்பாரைப் போன்ற ஆறு வகையினர்		
4	புலவர் குழந்தை	காலநிலை உரைத்தல்	தேர்நிலை உரைத்தல்	கிழவோர் குறிப்புஎடுத்துரைத்தல்	ஆவோடுபட்ட நிமித்தம் கூறுதல்	செலவுறு இளவி	செலவழுங்குவித்தல்
5	பதிற்றுப் பத்து 24	ஓதல்	ஓதுவித்தல்	வேட்டல்	வேட்பித்தல்	ஈதல்	ஏற்றல்
6	அர்த்தசாத்திரம் 1-1	ஓதல்	ஓதுவித்தல்	வேட்டல்	வேட்பித்தல்	ஈதல்	ஏற்றல்
7	மனு 1.88	ஓதல்	ஓதுவித்தல்	வேட்டல்	வேட்பித்தல்	ஈதல்	ஏற்றல்

வேளாளாக்குரிய ஆறு தொழில்கள்

எண்	உரை ஆசிரியர்	1	2	3	4	5	6
1	இளம்பூரணர்	உழவு	உழவொழிந்த தொழில்	விருந்தோம்பல்	பகடு புறம்தரல்	வழிபாடு	வேதம் ஒழிந்த கல்வி
2	நச்சினார்க்கினியர்	உழவு	ஈதல்	வாணிகம்	பகடு புறம்தரல்	வழிபாடு	வேதம் ஒழிந்த கல்வி
3	நச்சினார்க்கினியர் மேற்கோள்	உழவு	ஈதல்	வாணிகம்	பகடு புறம்தரல்	வேட்டல்	வேதம் ஒழிந்த கல்வி
4	பாரதி - (கூறவில்லை)	...	...	...	...	...	... ...
5	குழந்தை	ஓதல்	ஈதல்	உதவி	விருந்தோம்பல்	நிரைகாத்தல்	உழவு
6	வேதம்						
7	அர்த்த சாத்திரம் 1-3	உயர்ந்தோரை ஓம்புதல்	உழவு	கால்நடை வளர்ப்பு	வாணிகம்	கம்மியம்	ஆடல் பாடல்

காரர் இடையே அத்தொகை எண்களை விரிப்பதில் கருத்து வேறு பாடு தோன்றியது. (பார்க்க அட்டவணை 24, 25, 27)

வேளாளர்க்குரிய ஆறு தொழில்கள்

வேளாளரும் சூத்திரரும் ஒருவர் ஆகார்; வடபுலச் சூத்திரர் வேறு; தென்புல வேளாளர் வேறு. பிராமண, சத்திரிய, வைசி கர்க்குத் தொண்டு புரிவதே சூத்திரர் கடமை என்பர் மனுவும் சாணக்கியரும். தமிழர்—வேளாளர், மறவரினும் முற்றிலும் வேறுபட்டவர். பாரதி, 'இருமூன்று மரபு' என்பதற்கு, அறு வேறு மரபினரான மற்றைய தமிழக மக்கள், என உரைகொண்டு, வேளாளரை விடுத்தனர். அகத்திணைப் பிரிவு ஒத்துகளில் 'நால்வர்' என்று தொல்காப்பியர் குறித்திருப்பதும், புறநானூற்றுள், 'நாற் பால்' என வருவதனனும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு வகையினர் இருந்தனர் என்றுகிறது. ஆகவே, இங்கு முதல் மூவருடன் நிறுத்துவது குன்றக் கூறலாம். எனவே, பழைய உரையாசிரியர் கண்டு கூறிய பொருளே பொருந்துவது. (பார்க்க அட்டவணை 26)

'அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம்' என்பதற்கு,' இளம் பூரணர், நச்சினர்க்கினியர் கூறியவை ஒத்துள்ளன. அவை அர்த்த சாத்திரத்திலும் மனுசுமிருதியிலும் கூறப்பட்ட கருத்து களோத் தழுவி உள்ளன. பார்ப்பனர், அந்தணர், அந்தணாளர், பிராமணர், ஆரியர் என்ற வழக்காறுகள் அனைத்தும் ஒரே கருத்தின; அவை வடபுலத்திலிருந்து வந்த ஆரியரைக் குறிப்பன என்பது பழைய உரையாசிரியர்தம் அடிப்படைக் கருத்து. இவ் வடிப்படையினின்று சோமசுந்தரபாரதியும் குழந்தையும் வேறு பட்ட கருத்தினர். எனவே வேறு பொருள் உரைத்தனர். அன்றியும் வருண சாதி வேறுபாடு தொல்காப்பியக் காலத் தமிழ கத்தில் இல்லை என்பது பின் உரையாசிரியர்தம் கொள்கை.[176] இம்முடிபே, மேற்கண்டவாறு உரைகாண அடிப்படை ஆயிற்று.

இவ்வுரை வேறுபாட்டைத் தெளிந்து, உரிய உரையைக் காண வேண்டின், பார்ப்பான், அவர்தம் மூல இருக்கை, தமிழகத் தொடர்பு, அவரிடம் சாதிப் பகுப்பு இருந்தமை, தமிழர்தம் சாதி பற்றிய கொள்கை, பார்ப்பனர், வருணம், சாதி பற்றிய தொல் காப்பியர் கருத்து ஆகியன வரலாற்றுப் போக்கில் அறியப்படல் வேண்டும். அவ்வறிவே மேற்கண்ட ஐயத்தை அகற்றும்.

ஆரியர்தம் இருக்கை

தமிழகத்திற்கு வரும் முன்னர் ஆரியர் வடபுலத்து வாழ்ந் தனர். தம் நாட்டை 'ஆரிய தேசம்' என்றே வழங்கினர். அவர்

வடபுல மக்களுடன் கலந்து செல்வாக்கு உற்றனர். சமய நிலையில் தலைமை பெற்றிருந்தனர். வேதம் ஓதினர். அவர்தம் வேதங்கள் நான்கு. அவை இருக்கு, யசூர், சாமம், அதர்வனம் என்பவை. இவற்றுள் 'இருக்கு' என்ற வேதமே பழமையானது. அவர்க்கு எழுத்தறிவு இல்லை. எனவே வேதங்களை வாய்மொழிகளாகவே ஓதி வந்தனர். அவர்தம் குல அமைப்பில் நால்வருணப் பாகுபாடு அன்று அமைந்திருக்கவில்லை.[179] எனினும் உயர்வு தாழ்வுகள் தோன்றி விட்டன. மேன்மக்கள் (சத்ர), தாழ்மக்கள் (விஸ்) என்ற பிரிவுகள் இருந்தன. ஆரிய வருணத்தையும், தசயூ வருணத்தையும் இருக்கு வேதம் குறிப்பிடும். இருக்கு வேதத்தின் பத்தாம் மண்டலத்திலுள்ள புருஷசூக்தம் பிராமணர், இராசன்யர் (சத்திரியர்) வைசியர், சூத்திரர் ஆகியோரைக் குறிப்பிடுகிறது.

> "அவர்கள் (சாத்தியர் என்ற தேவர்கள்) புருஷனைக் கூறு படுத்திய போது அவனை எத்தனைப் பகுதிகளாகக் கூறு படுத்தினர்கள்? அவனுடைய வாய் எது? அவனுடைய புயங்கள் எவை? அவனுடைய தொடைகளும் பாதங் களும் எவை?
>
> பிராமணர் அவனுடைய வாய்; இராசன்யன் அவனு டைய புயங்கள். வைசியன் அவனுடைய தொடைகள். சூத்திரன் அவனுடைய கால்கள்; அவனுடைய கால்களி லிருந்து சூத்திரன் பிறந்தான்."

வடநூல்களின் கருத்துப்படி, பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணத்தாரும் ஆரியர்தம் உட்பிரிவினரே. பிராமண ஆரியர், சத்திரிய ஆரியர், வைசிய ஆரியர், சூத்திர ஆரியர் என இருந்தனர். அர்த்த சாத்திரம் நான்கு வருணத்தா ரையும் ஆரியர் என்றே குறிப்பிடும்.[177] பிரமன் என்ற இயற்கை கடந்த ஆற்றலை உடையவன் என்ற பொருளில் 'பிராமணன்' என்ற சொல் வழங்கிற்று. யாகத்தின் மேற்பார்வையாளனாக இருந்து மந்திர தந்திர வழுக்களால் ஏற்படக்கூடிய தீமையைத் தன்மாய மந்திரத்தால் மாறு செய்து தடுக்கும் தனிப்பயிற்சி பெற்ற புரோகிதரே (மந்திர சாதகரே) முதலில் பிராமணர் என்று அழைக்கப்பட்டனர்.[178] பிராமணர் வெண்ணிற மேனியராய் இருந்தனர். 'கரு நிறத்தானைக் கண்டவுடனேயே அவன் பிராமணன் அல்லன் என்று விசாரிக்காது முடிவு செய்யலாம்' என்பர் தம் பாணினி உரையில் பதஞ்சலி.[179]

ஆரியர்தம் தென்புல வருகை

வேத கால ஆரியர், தமிழகத்தை அறிந்திருக்கவில்லை. விந்திய மலைக்கும் நருமதா ஆற்றிற்கும் தென்பால் உள்ள பகுதியை அவர்

கள் தம் வேதத்தில் எங்கும் குறிக்கவில்லை. கி. மு. ஆரும் நூற்றாண்டினராகக் கருதப்படும் பாணினி, தென்புல மாநிலங்கள் எதனையும் குறிக்கவில்லை. கலிங்கத்தையே அவர் தெற்கில் உள்ள கடைசி நாடாகக் கொண்டார். கி.மு. இரண்டாம் நூற்றாண்டினரான மனு, விந்திய மலைகளை ஆரிய நாட்டின் தென்னெல்லை என்பர். அன்றியும், தென்பகுதியை ஒதுக்கத் தக்க பகுதி (Condemned Region) என்பர். ஆரியர் தென்திசையை 'யமதிசை' என்றே குறிப்பர். தென் மொழியை 'அவாக்' (தன் வாக்கு அல்லாத வாக்கைப் பேசுபவர்) எனச் சுட்டுவர். பாணினியின் உரையாசிரியரான காத்தியாயனர் இமயம் முதல் குமரிவரையுள்ள நாடுகளைக் குறிப்பிடுவர். சோழ நாட்டைச் சுட்டிக் காட்டுவர். இவரது காலம் மௌரியப் பேரரசுக்கு முற்பட்ட நவ நந்தரின் ஆட்சிக் காலம் என்பர். அக்காலம் கி.மு. நான்காம் நூற்றாண்டு ஆகும். கி.மு. நான்காம் நூற்றாண்டு அளவில், தென்புல வடபுல அறிவு, பழக்கம் நன்கு விளக்கமாக இருந்தது என்பதற்குக் காத்தியாயனர் தம் குறிப்புகளே சான்று.

சைன சமயம், வடபுலத்தில் பிறந்து வளர்ந்து, தென்புலத்திலும் தழைத்த ஒன்றாகும். அச் சமயத்தில் வழங்கும் வரலாறு ஒன்று வடபுல, தென்புல இணைப்பு வரலாற்றைக் காட்டுவதாகும். சுருத கேவலி பத்திரபாகு என்ற சைனப் பெரியார் கி. மு. 317-297 வரையில் சைன சமயத் தலைவராக இருந்தார். இவர் சந்திர குப்த மோரியனுக்குச் (கி.மு. 322 — 298) சமய குருவாக இருந்தவர். பத்திரபாகு முனிவரும், சந்திர குப்தனும் தென்னாடு வந்து சிரவண பெள்கொளாவில் தங்கினர். அங்கிருந்து கொண்டு விசாக முனிவர் என்ற சைன குரவர் வழியாக, சைன சமயத்தைச் சோழ பாண்டிய நாடுகளில் பரப்பினர். இச் செய்தி மைசூர் நாட்டு வரலாற்றாலும், கி. பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கல்வெட்டுச் சான்றாலும் உறுதியாகிறது.[180] கி.மு. நான்காம் நூற்றாண்டளவில், சைனம் இலங்கையில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. தமிழகத்தின் வழியேதான், சைனம் இலங்கைக்குப் பரவியது. சைனசமயத் துறவிகள், தமிழகத்து மலைகளில் வந்து தங்கி இருந்தனர். அவருக்காகப் பல கற்படுக்கைகள் மன்னர்களாலும் வெட்டப்பட்டன என்பது தமிழகத்தில் கிடைத்துள்ள தமிழிக் கல்வெட்டுகளால் அறியப்படும். இத்தமிழிக் கல்வெட்டுகளின் காலம் கி.மு. இரண்டாம் நூற்றாண்டாகும்.[181] ஆக, சைன சமயத் தொடர்புச் செய்திகளும் கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து வடபுல தென்புல தொடர்பு ஏற்பட்டதை வற்புறுத்தும். புத்த சமயத் தாக்கமும் அசோகன் காலத்திலேயே, தென்புலத்தில் பரவியது.[182]

ஆரிய வேதியர், சைனர், பௌத்தர் பற்றி மேற்கண்ட குறிப்புகள் வடபுலத்தொடர்பு, தென்புலத் தமிழகத்திற்குக் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்கு முன்பே உண்டாயிற்று என்று காட்டும். வேதியர் கொள்கையை எதிர்ப்பதே சைன, பௌத்தர் கொள்கை. எனவே, சைன, பௌத்தர் வருகைக்கு முன்பே ஆரிய வேதியர் தமிழகத்தில் ஊடுருவினர் ஆதல் வேண்டும். (ஆரியத்துள் பிராமணர் பெருஞ் செல்வாக்கில் இருந்தனர். இதனைச் சத்திரியர் எதிர்த்தனர்.[183] அதன் விளைவாகவே, சைன பௌத்த சமயக் குரவர்கள் அனைவரும் சத்திரியராக உள்ளனர். மகாவீரர் சத்திரியர். புத்தர் சத்திரியர். பிராமணர்க்கும் பிராமணர் அல்லாத சத்திரியர்க்கும் இடையே வடபுலத்தில் முதல் களம் நடந்தது. அதனது தொடர்ச்சியே, பின்னர்த் தமிழகத்தில் களப்பிரர் காலத்தில் நடந்தது.)

ஆரிய பிராமணரைத் தமிழர் வேறுபடுத்திச் சுட்டினர். அவரை 'ஆரியர்' என்றே அழைத்தனர். ஆரியப் படைஞரை எதிர்த்தனர். அவர் திசையை மையமாக வைத்து அவர் பேசும் மொழியை 'வடமொழி' என்றனர். 'வடசொல்' என்றனர். அதற்குரிய எழுத்துக்களை 'வடஎழுத்து' என்றனர். அவர், வேதங்களைப் போற்றும் தேயத்தினர் எனும் கருத்தில் 'மறையோர் தேஎம்' என்றனர். ஆரிய நாட்டில் வழங்கும் எண்வகைத் திருமணங்களை , 'மறையோர் தேஎத்து, மன்றல் எட்டு' என்றனர். வடசொற்களை, 'வட எழுத்துக்களை விலக்கி ஏற்றல் வேண்டும்' என்றனர்.

தொல்காப்பியத்துள் ஆளப்பட்டுள்ள வடசொல், வடஎழுத்து என்ற வழக்காறுகள், மறையோர் தேஎம்' என்று அவர் குறிப்பது, 'வேதம்' என்ற பொருளில், மறை என்ற சொல்லைப் பன்முறை ஆளுவது ஆகியன தொல்காப்பியர் காலத்து, வேத ஆரியர் பெற்றிருந்த வாழ்வைக் காட்டுவன.[184] இவை வெளிப்படையான சான்றுகள்.[185] தொல்காப்பியம் போன்ற அருந்தமிழ் இலக்கண நூலில் ஏறும் அளவிற்கு வடமொழி அவர் காலத்து பரவி இருந்தமையை மேற்கண்ட சான்றுகள் வற்புறுத்தும். இவை வடக்கே இருந்து வந்து ஆரிய மொழியையும், எழுத்தையும் குறிப்பிடுவன என்பது வெள்ளிடை. இவற்றை மனத்துள் அமைத்து நூலுள் தொல்காப்பியர், அந்தணர் பற்றியும் பார்ப்பனர் பற்றியும் கூறும் செய்திகளை தொகுத்து நினைத்தல் வேண்டும்.

தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள்ள அந்தணர் பற்றிய செய்திகள்

1 நூல், கரகம், முக்கோல், மனை என்பன அந்தணர்க்குரியவை (பொ. 615)

2 அமாத்திய நிலையும் சேனபதி நிலையும் பெற்ற அந்தணர்க்கு அரச பொறுப்பும் அளிக்கப்படும் (627).

3 அந்தணர்க்குரிய முந்நூல் முதலானவை அரசர்களுக்கும் உரியவாக வரும் (பொ. 617)

4 பரிசில் கடாநிலையும், பரிசில் விடையும் போல்வன கூறியும் பாடாண் திணைக்குரிய கைக்கிளைப் பொருள் கூறியும், கொடைத் தொழில் கூறியும் அவற்றிற் கேற்ப எடுத்தோதிய பெயர் கூறியும் அந்தணரைத் தனிமை வகையால் செய்வதில்லை. (பொ.618).

தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள்ள பார்ப்பனரைப் பற்றிய செய்திகள்

பார்ப்பார்க்கும் கூற்றுகள் உண்டு. (பொ.45) அவையாவன; நீ பிரியின் தலைவிக்கு வேட்கை மிகும் என்றல், தலைவன் பயணம் ஏதுவாக நிகழ்பவற்றைக் கூறல், தலைவன் எண்ணத்தைத் தலைவிக்குக் கூறல்.

தலைவன் பிரிந்தான் எனத் தகவல் தருதல், தலைவனைப் பிரியாதே என வேண்டுதல், (பொ. 175) பார்ப்பார் தம் கூற்றை இயைபொடு பொருந்தி எல்லாரும் கேட்பர் (பொ. 418); கற்பின்கண், பேணுதல் சிறப்பினை உடைய பார்ப்பான் கூற்று நிகழ்த்தல் உண்டு (பொ. 491)

மறையை அந்தணரோடு தொடர்புறுத்தி வரும் இடங்கள்

1 அந்தணர் மறை. (பிறப்பு.20)

வேள்வி, பசு இவற்றோடு தொடர்புறுத்தி வரும் இடம்

1 கபிலை கண்ணிய வேள்வி, பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன், காட்டுப்பசு ஏழு வகை, நாட்டுப் பசு ஏழுவகையாகப் பதினெறு வகைப்பசுவால் வேட்ட புகழை மூலங்கிழார் குறித்தல் காண்க. இது பார்ப்பன வாகைப் பாடாண் என்பர். சோமசுந்தரபாரதி.[186]

மறையை மந்திரத்தோடு தொடர்புறுத்தி வரும் இடங்கள்

1 மறைமொழி கிளந்த மந்திரம் (செய். 158)

2 மறைமொழி தானே மந்திரம் (செய். 171)

அந்தணரை உயர்ந்தோர் எனக் கூறும் இடங்கள்

1 ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன (அகத். 28)

2 மேலோர்[187] முறைமை (அகத். 31)

3 உயர்ந்தோர்க்கு உரிய ஒத்து (அகத். 33)

4 உயர்ந்தோர் பொருள் வயின் ஒழுக்கம். (அகத்.36)

மேலே காட்டிய செய்திகளுள் ஆழ்ந்து கருதத் தக்கன ஆறு:

1 அந்தணர், மறைகளோடு தொடர்பு படுத்தப்படுதல்.

2 அந்தணரை வேள்வியோடு தொடர்புறுத்தல்.

3 அந்தணரை வேள்விப் பசுவோடு தொடர்புறுத்தல்.

4 அந்தணரோடு ஓதுதல் தொடர்பு படுத்தப் படல்.

5 அந்தணர், உயர்ந்தோர், மேலோராகக் கருதப் படுதல்.

6 அந்தணரை முந்நூலோடு இணைத்துக் காட்டல். இவ் வாறிணையும் பின்வரும் வடஇந்திய மரபுகளுடன் இணைத்து நோக்குக.

1 பிராமணரைத் தவிர மற்றவர்க்கு வேதம் ஓதும் உரிமை மறுக்கப்பட்டது.

2 பிராமணர் பூணூல் தரிப்பர். அதன்பின் அவர், இரு பிறப்பாளர் எனப்படுவர்.

3 வேதமும், வேள்வியும் சூத்திரர்க்கு ஆகாதவை.

இருபிரிவுகளையும் இணைத்து நோக்க, தொல்காப்பியத்துள் வரும் வடசொல், வடஎழுத்து, மறையோர், அந்தணர், பார்ப் பனர் ஆகிய குறிப்புகள் அக்காலத்து மதிப்புடன் வாழ்ந்த ஆரிய பிராமணரைப் பற்றிய குறிப்புகளே என்பது தெளிவுறும். அந்தண ரும், பார்ப்பனரும் ஒருவரே என்பது, வேள்விச் சாலையில் நிற்கும் பசுவை வேந்தனிடத்து வாங்கிக் கொள்ளும் அந்தணன் செயலைப் 'பார்ப்பன வாகை' என்றும், கபிலை கண்ணிய வேள்வி நிலை என்றும் குறிப்பதால் உணர்ந்து கொள்ளலாம். தொல்காப்பியத் துள் அந்தணர் என வரும் இடங்கள் மட்டுமே, மறையோடு தொடர்பு படுத்தி வழங்கி இருந்தாலும், 'மறப்பினும் ஒத்துக் கொளல் ஆகும். பார்ப்பான் பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்' என்ற திருவள்ளுவர் கூற்றால் (134) வேதம் ஓதுவார் அந்தணரா கிய பார்ப்பாரே என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

தொல்காப்பியரை அடுத்த சங்க காலத்திலும், ஆரிய பிரா மணர்தம் செல்வாக்குப் பெருகி இருத்தது என்பதைச் சங்க இலக் கியங்கள் எடுத்துரைக்கும்.[188] சங்க இலக்கியத்தில் வரும் குறிப்பு கள் பின்வரும் அடிப்படையில் உள்ளன. அவை அணைத்தும், வட

இந்தியாவில் பிராமணர் பெற்றிருந்த செல்வாக்கை அப்படியே எதிரொலிப்பன.

வேள்விகளைச் செய்வித்தல்

பிராமணர், தமக்காக அரசரை யாகம் செய்ய வேண்டுவது. பல்யானை செல்கெழு குட்டுவன் என்ற சேரனிடமிருந்து பாலைக் கௌதமன் என்ற பார்ப்பான் தானும் தன் மனைவியும் துறக்கம் எய்துவதற்காக ஒன்பது பெருவேள்வி வேட்பிக்கப் பெற்றுப் பின் அரசனைத் துறவு பூணச் செய்து காட்டிற்குப் போகுமாறு செய்தனன்.[189] சோழநாட்டுப் பூஞ்சாற்றூரில் வாழ்ந்த விண்ணந் தாயன் என்னும் கௌணிய கோத்திரப் பார்ப்பான், நால் வேதத்தையும், வேதாங்கம் ஆறையும் கற்றுத் தேர்ந்தும் இருபத்தொரு வேள்விகளையும் குறை இன்றிச் செய்தும் புகழமைந்த மரபுக்குரியன் என்று கூறி அவன் வேள்விப் பணியையும் வள்ளன்மையையும் பாராட்டுவர் ஆவூர் மூலங்கிழார்[190] தாயங்கண்ணனார் என் பார்.

> 'அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த
> தீயொடு விளங்கும்நாடன்'

என்று ஒரு சோழ மன்னனைப் பாராட்டுவர்.[191] அந்தணர்தம் துணையால் அரச யாகம் செய்து சிறப்புற்றான் இராசசூயம் வேட்ட கோப்பெருநற்கிள்ளி. கரிகாற் பெருவளத்தான் வேள்வி செய்ததைச் சிறப்பாகப் பாராட்டுவார் கருங்குழல் ஆதனார்.[192] பல யாகங்களைச் செய்தமையால், பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி எனப் பெயர் பெற்றான் ஒரு பாண்டியன்.[193]

நான்மறை முதல்வர் சுற்றம் ஆக, தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் வேள்விகளைச் செய்தான் என்பர் மாங்குடி மருதனார்.[194] அதியமான் 'அமரர்பேணி ஆவுதி அருத்திய' மரபினன் என்பார் ஔவை.[195] செல்வக் கடுங்கோ வேள்வி செய்து சிறந்தான்.[196] சேரன் இரும்பொறையும் வேள்வி இயற்றிய வீறு பெற்றனன்.[197] இது போன்று வேள்வி இயற்றிய மன்னர் வரலாறுகளை வட இந்திய வரலாற்றிலும் காணலாம்.

போரில் விதிவிலக்கு பெறுதல்

பெரும்போர் மூளுதற்கு முன்னர், ஆக்கள், பெண்கள், நோயாளிகள், குழந்தை பெறுதோர் ஆகியோர், போர்க் கொடுமையால் தாக்கப் பெறுது காக்கப் பெறுவர். இவர்களுடன் பார்ப்பனரும் காக்கப் பெறுவர் என்று கூறும் புறநானூறு.[198] பிறப்பு அடிப்படையில், அரசர், வணிகர், வேளாளர்க்குக் கிட்டாத

வாய்ப்பு அந்தணர்க்கு மட்டும் அளிக்கப்பட்டது. ஆக்களுக்கு அடுத்தபடியாக அந்தணர் காக்கப் பட்டனர் என்பதை 'ஆவும் (1), ஆனியற் பார்ப்பன மாக்களும் (2) என்ற அடி உணர்த்தும். புறநானூற்றிற்குப் பிற்பட்ட சிலப்பதிகாரக் காலத்தில், ஆக்களை விட முதன்மையாளராக, அந்தணர் காக்கப்பட்டனர் என்பதைப் 'பார்ப்பார் (2) பசு பத்தினிப் பெண்டிர்' என வரும் சிலம்பு அறிவுறுத்தும். போரில் அரசரை (சத்திரியர்) மட்டுமே அகனுறுத்தி, பிராமணர் காக்கப்படுதல், வடபுல மரபை எடுத்துரைக்கிறது.[199] வடபுலத்தில் போரில் பங்கேற்பவர் க்ஷத்திரியரே, பிராமணர்க்கு அப்பணி இல்லை. 'பகைவன் நெடுங்சாங்கிடையாக விழுந்து வணங்கினும் பிராமண வீரர்கள் மனம் மாறி எதிர்ப்பை விடுப்பர் ஆதலால் பிராமண வீரரைத் தவிர்த்திடுக என்பர் கௌடில்யர்,[200] ஆரியர், தாமே போர் செய்யார்; ஆனால் ஆட்சி செய்வர். தாம் ஆளும் பொழுது பகைவர் போர் தொடுப்பின், போர் செய்வதற்காக, மகத நாட்டிலும், அநுப நாட்டிலும் இருந்து வந்த விராத்தியரை அழைத்துத் தமக்காகப் போர் செய்யச் செய்வர்.[201] இச் செய்திகள், நேரடிப் போரில் பிராமணர் பங்கு ஏற்கார் என்பதைத் தெரிவிக்கின்றன. புறநானூறும், சிலப்பதிகாரமும் அந்தணரைப் போரில் பங்கேற்காமல் காப்பதை இங்கே இணைத்து நோக்குக. ஓதல், பகை, தூது என்ற மூன்று அடிப்படையில் பிரிவைக் கூறும் தொல்காப்பியர் (27), பகைக்காகப் போருக்காகப் பிரியும் பிரிவை அந்தணர்க்கு வழங்காமை இங்கு எண்ணத் தக்கது: இதனால் அந்தணர் கல்விக்காகப் பிரிவர்; தூது செல்லுதற்காகப் பிரிவர்; ஆனால் களப்போருக்குப் பிரியார் என்பது பெறப்படும். போரில் புண்படாமல், அந்தணர் தம்மைக் காத்துக் கொண்ட திறத்தை இப்பகுதி காட்டும்.

ஆட்சி அதிகாரப் பங்கு

சங்க கால மன்னர்க்கு ஐம்பெருங்குழு துணையாக இருந்தது. அக் குழுவில் 'புரோகிதர்' என்பாரும் ஒருவர். புரோகிதர்- அந்தணரே என்பது வெளிப்படை. மன்னன் அந்தணர்க்கு நோவன செய்யலாகாது என்ற கருத்தில் சோழ மன்னன் பாடப்படுவன்.[202] பாண்டிய மன்னனின் செண்னி, நான் மறை அந்தணரை நோக்கி இறைஞ்சுவதாக' என ஒரு பாண்டிய மன்னன் பாடப்படுவன்.[203] அந்தணர்க்கு மட்டுமே சேர மன்னன் பணிவான் என ஒரு சேர மன்னன் புகழப்படுவன்.[204] இவற்றை நோக்க அந்தணர் பெற்றிருந்த தலைமை புலப்படும்.

'பார்ப்பாரைக் கொல்வது பெரும் கொடுமை' எனக் கருதப் பட்டது. 'பார்ப்பார் தப்பிய கொடுமையோர்க்கு உய்தியே

இல்லை' என்று முழங்கும் புறநானூறு;[205] தொல்காப்பியம் 'பேணுதகு சிறப்பிற் பார்ப்பான்' என்று அடை கொடுத்து உயர்த்தும்,[206]

'அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே' என்பது தொல்காப்பிய நூற்பா,[207] இதற்கு அந்தணர், அமைச்சராயும் புரோகிதராயும் பணிபுரியலாம் என்பர் இளம். அரசர் இல்லாத போது அந்தணர் ஆளலாம் என்பர் பேராசிரியர். போர்க்களத்து மறவனுகச் சேர்வதிலிருந்து விலக்குப் பெற்ற அந்தணர் ஆளும் உரிமையிலிருந்து மட்டும் விலக்குப் பெறவில்லை. பாரதத்தில் வரும் துரோணன், கிருபன் இருவரும் அந்தணர்; தலைமைத் தளபதிகள். மௌரியர் ஆட்சியை அகற்றிச் சுங்கர் ஆட்சியை நிறுவிய புசுயமித்திரன் கடைசி மௌரியனுக்குத் தளபதி யாக இருந்த அந்தணன். சுங்க வமிசத்திடமிருந்து அரியணை யைக் கைப்பற்றிய கன்வர்-அந்தணரே. சாதவாகன குலவேந்தன் கௌதமி புத்திரசதகர்ணி ஏகப் பிராமணன்;பேராரிலும்,மத்தியப் பிரதேசத்திலும் பேரரசு கண்டு பெருமை எய்திய வாகடகர் அந்தணரே. தக்கணத்தின் தென்மேற்குப் பகுதியில் வனவாசியை தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த கதம்பரும் அந்தணரே. வேதம் ஓதுதற்காகக் காஞ்சிக்கு வந்த மயூர சன்மன் அங்கு நேர்ந்த ஒரு நிகழ்ச்சியால் தூண்டப்பட்டுச் சத்திரியத் தொழிலை மேற் கொண்டு கதம்பர் குல ஆட்சியை நிறுவினன். அந்தண முனிவ ரான இந்திர விட்ணுவின் மகனுக்குப் பேரன் கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் மத்தியப் பிரதேசத்தில் கோலோச்சிய மகாராசா மாத்திரி விட்ணு ஆவான். கி.பி. ஆரும் நூற்றாண்டில், சோத்பூர் பிரதேசத்தில் வர்ச்ச அரசை நிறுவிய அரிச்சந்திரன் வேத சாத் திரங்களைக் கற்றுத் தேர்ந்த அந்தணன் ஆவான். உச்சயினி மகேசுவரபுரம் முதலிய இடங்களில் அந்தண அரசர்கள் இருந்ததை இயூன்சுங் குறிப்பிடுவான்.[208]

யாஞப்பாகர்

சங்க இலக்கியத்துள் ஆரியர், யாஞையை ஆரிய மொழி வழி பழக்குவோராய்க் குறிப்பிடப்படுகின்றனர்.[209] 'வடமொழி பயிற் றிக்கல்லா இளைஞர் கவளம் வைப்ப' என்பது முல்லைப் பாட்டு. பழைய கன்னட சாசனங்களில் 'பார்வன்' என்ற சொல் காணப் படுகிறது. 'பாப்பான்' என்பது மலையாள வடிவம்.[210] அதற்கு யாஞப்பாகன் என்றே பொருள். இக்குறிப்பு பார்ப்பனர், யாஞப் பாகராய் இருந்ததையும், பார்ப்பாரும், ஆரியரும் ஒருவரே என்பதையும் காட்டும்.

இரு மரபுகளையும் வேறு பிரித்தறிதல்

தொகுத்துப் பார்க்கையில், அந்தணர் சங்க காலத்துக் குடை, தண்டு, கமண்டலம், மனை, பூணூல், காவி உடை உடையோராய்க்

காட்சி அளித்தனர். (கலி. 9; முல்லைப்பாட்டு 37-38 வரி; தொல் மரபு. 70) வேதம் ஓதினர் (மதுரைக் காஞ்சி 656); வேள்வி செய் தனர் (புறம் 166); தெருக்களும் ஊர்களும் அவர்களுக்கெனத் தனியாக இருந்தன. வேந்தருக்காக அந்தணர் தூது சென்றனர் (புறம். 305) சாவுச் சடங்கு இயற்றினர் (புறம். 93); வேந்தரும் அந்தணரை நன்கு மதித்தனர் (புறம். 6, பதிற். 63): தமிழில் உரையாடவும் பாடல் இயற்றவும் ஆற்றல் பெற்றிருந்தனர்; தமிழர்களின் குடும்ப ஊடல்களில் தலையிட்டு ஊடல் தணிக்கும் அளவிற்கு ஒட்டி உறவாடினர் (கலி. 72, தொல். கற்பு. 52) ஆரியச் சாதி அமைப்பு இடம் பெறுகிறது. (புறம். 183); ஆரிய பிராமணர் அன்றி, ஆரியச் சூத்திரரும், ஆரியக் கூத்தாடுவதிலும், வடமொழி பயிற்சி யானைகளைப் பழக்குவதிலும் ஈடுபட்டிருந்தனர். (அகம். 276, முல்லைப் பாட்டு 31-36,) வேள்வி செய்யாத பார்ப்பனர் சங் கறுத்து வளை செய்தனர். (அகம். 24). தொழுநோய்ப் பார்ப்பன ரும் (கலி. 65) கந்தை கட்டிய வறுமைப் பார்ப்பனரும் (அகம். 337) வாழ்ந்தனர்.

இவ்வாறு தமிழருடன் கலந்து ஆரியர் வாழ்ந்தனர். ஆயினும், அவ்வப்போது தமிழர் தம் நெறியை ஆரியப் பார்ப்பனருக்குச் சுட்டத் தவறவில்லை. 'கேண்மின் அந்தணீர் என விளித்துத் தமிழர் புறத்திணைப் போர் நெறி வேறு; நால் வேத நெறி வேறு' என்று அறிவுறுத்தும் பாட்டொன்று புறநானூற்றில் உள்ளது.[211] இதனைப் போலவே அகத்திலும், 'கற்பொழுக்கத்தைக் காட்டிலும் தமிழர்தம் களவொழுக்கம் சிறந்தது' என்று நான்மறை அந்தண ரைப் பார்த்துக் கூறுவதாகப் பரிபாடல் ஒன்று உள்ளது.[212]

இவ்விரண்டையும் நோக்க, சங்க மாந்தரே தம் நெறி வேறு, ஆரியர் நெறி வேறு என்று அறிந்திருந்தனர் என்பதும், அதே சமயத்தில் அயலார் தமிழகத்தில் வந்து கலந்திருந்தனர் என்பதும் தெளிவாகின்றன.

தொல்காப்பியத்துள் இடம் பெற்ற செய்திகளைப் பின் வந்த சங்க இலக்கியச் செய்திகள் உறுதி செய்கின்றன. அனைத்தும் வட ஆரிய மரபு. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு ஊடுருவி நிலைத்து விட்டதை உறுதி செய்கின்றன. இவற்றை மனத்துள் கொண்டு நோக்கின் அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம் என் பதற்கு, இளம்; நச்சர்; ஆகியோர் கண்டுரைத்த ஓதல் ஓதுவித்தல் முதலியன ஆறு பொருளே பொருத்தமாதல் புலப்படும். ஆரிய மரபுகள் எதுவும் தமிழகத்தில் புகவில்லை என்ற கருத்தில் கூறப் படும் பிற விளக்கங்கள் வரலாற்றுப் பார்வையில் பொருத்த மற்றுப் போம்.

ஆரியருள் நான்கு வருணப் பாகுபாடு

பிராமணர் சத்திரியர் வைசியர் சூத்திரர் – என்ற நான்கு வருணத்தார் ஆரியப் பகுப்பினர் ஆவர். நான்கு என்ற பகுப்பை விரித்துக் கூறுவிடினும், நான்கு வருணத்தார் பற்றிய குறிப்பு இருக்கு வேதத்திலேயே இடம் பெற்றுள்ளது. அருத்த சாத்திரமும், மனுசுமிருதியும் நான்கு வருணத்தை உடன்பட்டு விதிகளை விரிவாக வகுத்துள்ளன. வருணம் என்ற குறிப்பும், வருண அடிப்படையில் விதிகளும் தமிழில் இல்லை. எனினும் இனப் பிரிவுகள் இருந்தமையைச் சங்கத்தமிழ் காட்டும். 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' என்பது புறப்பாட்டு அடி.[213] அந்நான்கு பிரிவுகள் உள்ளும் வேற்றுமை இருந்தது என்பதை 'வேற்றுமை தெரிந்த' என்ற தொடர் உணர்த்தும். 'புலையன்' 'இழிசினன்', 'இழி பிறப்பாளன்' என்னும் சொற்கள் புறநானூற்றில் ஆளப் பெற்றுள்ளன.[214] பின்னே வந்த சிலப்பதிகாரத்தில் 'பால்வேறு தெரிந்த நால்வேறு தெரு' என்ற குறிப்பும், நால்வகை வருணப் பூதங்களைப் பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளன.[215]

சங்கத் தமிழில் தொழில் அடிப்படைப் பாகுபாடு இருந்ததைத் துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற குறிப்புக் காட்டும்.[216] ஆனால், தொழில் சார்ந்த இப் பாகுபாடு, கீழ் மட்டத்திலேயே இருந்தது. எங்கே அரசுரிமை, பிறப்புரிமை ஆகி விட்டதோ, அங்கே, இனம், சாதிப் பாகுபாடுகளும், பிறப்பு அடிப்படையில் அமைந்தன என்று உய்த்துணர்வதில் பிழை இல்லை. சங்க கால அரச மரபு, பிறப்பு அடிப்படையில் அமைந் திருந்தது. அரசனுக்குப்பின் அவன் மகனே பட்டம் ஏறுவன். இது பிறப்பு அடிப்படையில் வந்த உரிமை அன்றே? மிக இளைய சிறுவனாக இருந்தும், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ் செழியனும், கரிகால் வளவனும் பட்டம் ஏற்ற நிகழ்ச்சிகள், பிறப்பு அடிப்படையில் அரச உரிமையைப் பெற்றதைக் காட்டும் சான்றுகள். அரசனுக்கு இருந்த பிறப்பு அடிப்படை இனப்பாகுபாடு, ஏனைய அந்தண, வணிக, வேளாளப் பிரிவுகளில் தடுக்கப் பட்டிருந்தது என்பதற்குச் சான்று இல்லை. மாறாக பிறப்பு அடிப்படையில் குணங்கள் தீர்மானிக்கப் பெற்றன என்பதைத் திருவள்ளுவர் தம் 'குடிமை (96) அதிகாரம் உணர்த்தி நிற்கிறது.

இனப்பாகுபாடு – தொல்காப்பியக் கருத்து

தொல்காப்பியர், இனப்பாகுபாட்டை எதிர்த்ததாகத் தெரிய வில்லை. தொல்காப்பியர் நான்கு பிரிவினரை ஒப்புக் கொண்டிருந்தார் என்பதைப், 'பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே' (பொருள்.28, இளம்.உரை) 'மேலோர் முறைமை நால்வர்க்கும்

உரித்தே' (அகத்திணை.இளம்.உரை 31) என்ற நூற்பாக்களும், அவற்றிற்கு உரைகாரர் எழுதிய உரைகளும் தெளிவுறுத்து கின்றன. நால்வர் இடையே, உயர்ந்தோர், தாழ்ந்தோர், மேலோர், கீழோர் என்ற ஏற்றத் தாழ்வுகள் இருந்தன என்பது, அவர் ஆளும், உயர்ந்தோர். (அகத்.24, 33, 36), மேலோர் (அகத்.31), பின்னோர் (அகத்.32) என்ற வழக்காறுகளால் அறியப் படுகின்றன. இந்நால்வரை அன்றித் தொல்காப்பியர், அடியோர், வினைவலர் (அகத்2.5) என்று குறிப்பன கருதத்தக்கன. தலை வனுக்கும் தலைவிக்கும் இடையே பார்க்க வேண்டிய மனப் பொருத்தங்களை மெய்ப்பாட்டியலில் (25) தொல்காப்பியர் குறிப் பர். அவர் குறிப்பன;

> "பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
> உருவு நிறுத்த காம வாயில்
> நிறையே அருளே உணர்வோடு திருவென
> முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

இந்நூற்பாவால் வரும் 'பிறப்பே' என்பதற்கு 'அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர், நுளையர் என்னூர் போல வருங்குலம்' என உரைப்பர் இளம்பூரணர். 'குடிப் பிறத்தல்' என்பர் பேராசிரியர். புதுமை காண விழையும் பாரதி யும் 'தோன்றிய குடிநிலை' என்றே அங்கு உரை செய்குவர். சாதி யை உடன்படாத திருவள்ளுவரும் 'பிறப்பு ஒழுக்கம்' எனப் பிறப் படிப்படையில் ஒழுக்கம் உண்டென உடன் படுவர்.[217] எனவே இவற்றை எல்லாம் ஒருங்கு தொகுத்து நினைக்க, தொல்காப்பியர் காலத்து, இனப்பாகுபாடு இருந்தமை தெளிவுறும். தெளிவுறவே அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கம், ஐவகை மரபின் அரசர் பக்கம், இருமூன்று மரபின் ஏனோர் பக்கம்' என்பவற்றிற்குப் பழைய உரையாசிரியர் கொண்ட உரையே பொருந்தும் என்பதும் தெளிவுபடும்.

இனப்பூசல் இல்லாமை

ஆரியரைப் போன்றே ஈரானில் அதர்வன், இரதாஸ்தார், வஸ்ட்ரியா சோயண்ட், இயூட்டி என்ற நால் வகையினர் இருந் தனர்.[218] உரோமில் Gins, Curia, Tribe என்ற முப்பிரிவு இருந் தது. கிரேக்க நாட்டில் இனப்பாகுபாடு இருந்தது. பிளேட்டோ, தத் துவஞானியான அரசர்கள், போர் வீரர்கள், தொழிலாளர்கள் என மூன்றுகப் பகுத்துக் கூறினர்.[219] பண்டைய எகிப்து, சப்பான், ஆகிய நாடுகளிலும் இனப்பிரிவுகள் இருந்தன. ஆரியரி டமும் நால்வருணப் பாகுபாடு இருந்தது. தமிழகத்திலும் இனப்

பிரிவு இருந்தது. ஆனால் ஆரியப் பிரிவிற்கும், தமிழ்ப் பிரிவிற்கும் வேற்றுமை உண்டு. இனப்பிரிவு அனைத்தும் தொடக்கத்தில் தொழில் அடிப்படையிலேயே உருவாகி இருத்தல் வேண்டும். ஒவ்வொரு தொழிலினரும் தத்தமக்குள் தொழில் கமுக்கங்களைக் காக்க எண்ணி இருத்தல் வேண்டும்; அதனால், தம்முள் அகமணங் களைச் செய்து கொண்டனர். காலப் போக்கில், இத்தொழில் பிரிவு சாதியாகப் பிரிந்து நிலைபெற்று விட்டது. பண்டு போர் உடற்றியோர் 'மறவர்' என நிலைத்தனர்; படை நடத்தி ஆட்சி செய்தவர் 'படையாட்சி' ஆயினர்; பறை அறைவோர் பறையர் ஆயினர். இந்தியில் 'மாலி' என்றால் தோட்டக்காரர் என்று பொருள். தோட்டத் தொழில் தொடர்பான பிற தொழில்களை ஒட்டி மேலும் பல சாதிகள் பெருகின. பூக்களைப் பயிரிடும் தோட்டக்காரர் 'பூல்மாலி' என்ற சாதி ஆயினர்; பருத்தி பயிரிடும் தோட்டக்காரர் 'கச்சா மாலி' என்ற சாதி ஆயினர்: மஞ்சள் பயி ரிடும் தோட்டக்காரர் 'உறல்தே மாலி' என்ற சாதி ஆயினர்.[220] எனவே, பெரும்பாலான சாதிகள் தொழில் அடிப்படையிலேயே பிறந்தன. சில இடங்களில், அரிய மறப்பணி ஆற்றியோர் உயர் வாகவும், மற்றவர் இழிவாகவும் கருதப்பட்டனர்; சில இடங் களில், புலால் உண்ணுதலை வைத்து உயர்வு தாழ்வு கற்பிக்கப் பட்டது. சில இடங்களில் சடங்குகளும், நம்பிக்கைகளும் சமய வழியில் செல்வாக்குப் பெற்றபோது புரோகிதர்கள் உயர்வாகக் கருதப் பட்டனர்; மற்றவர் இழிவாகக் கருதப்பட்டனர். பிரா மணர், ஆரிய வகுப்பில் உயர்வாகக் கருதப்பட்டமைக்கு இதுவே காரணம். மறவர் உயர்வாகக் கருதப் பட்டமை யையே சத்திரியப் பிரிவு காட்டி நிற்கிறது. சில இடங்களில், மறப்பணி ஆற்றும் மன்னவரும், ம த ப் ப ணி ஆற்றும் புரோகிதரும் ஒருவராகவே இருப்பதுண்டு. அப்போது அவர் மட்டும் உயர்வு; மற்றவர் தாழ்ச்சி, இவ்வாறு அமையாமல், அரசர் வேறு பிராமணர் வேறு என்று இருந்த போது யார் உயர்வு யார் தாழ்ச்சி என்ற போராட்டம் ஆரிய நாட்டில் தொடர்ந்து நடந்தது. வசிட்ட விசுவாமித்திரனின் வரலாறு இதனைக் காட்டுவது.[221] புரோகித மதத்தை (பிராமணரை) எதிர்த்தே பெரும் மதங்கள் வட புலத்தில் தோன்றின; சைனமும், பௌத் தமும் அவ்வாறு தோன்றியவை; பிராமணருக்கும், சத்திரிய ருக்கும் இடையே பூசல் மூண்ட வரலாறு தமிழகப் பண்டை வர லாற்றில் எதுவும் இல்லை. இனப்பிரிவு — நிறப்பிரிவாக வற்புறுத் தப்பட்டு, சாதியமாகப், படம் எடுத்து ஆடிய போதுதான், சாதியச் சமயங்களை எதிர்த்துச் சைனமும், பௌத்தமும் தமிழ கத்தில் கொடி உயர்த்தின. அப்போதுதான் பிறப்பால் ஏற்றத் தாழ்வைக் கற்பித்தல் கூடாது என்று புது முழக்கம் புறப்பட்டது.

'பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற வள்ளுவர் குரல் எழுப்பினர். பிறப்பினால் அந்தணர் ஆவதில்லை; மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுவதால் தான் அந்தணர் ஆக முடியும் என்று அவர் வரையறுத்தார். இது போன்ற நல் முழக்கங்கள் இங்கு மட்டும் அல்லாமல் இந்தியப் புலம் எங்கும் தழைத்தது. மகாபாரதத்தில் 'யார் பிராமணன்?' என்று நகுலன், தருமராசனிடம் கேட்க, தருமன் விடை இறுக்கிறான்.

> ''ஒருவன் பிராமணனோ சூத்திரனோ என்பதை ஒருவனது பிறப்பு வரையறுப்பதில்லை. அவன் அவனது நடத்தையே வரையறுக்கும். நல்ல குணங்கள் உடையனாக ஒரு சூத்திரன் இருப்பானே ஆனால் அவன் சூத்திரன் அல்லன்; பிராமணன்; தீக்குணங்களை உடையவனாக ஒரு பிராமணன் இருப்பானே ஆனால் அவன் பிராமணன் அல்லன்; சூத்திரன்.''[222]

பிறப்பு அடிப்படை, சமூகத்தை நலிவித்தபோது, பிறப்புவழிச் சாதியை எதிர்க்கும் போர்க்குரல் எங்கும் எதிரொலித்ததை மேற் கண்ட பகுதி காட்டும்.

மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவின் தேயம்(74)

மழை, வெயில், பனி என்ற முக்காலத்திலும் பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து, ஆங்கு உண்டாகும் வானவில்லும், மின்னலும், ஊர்கோளும், தூமமும், மீன் வீழ்வும் கோள் நிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறுவர். அவ்வாறு கூறுவாரை அறிவர் என்பர். கணியன் என்பர் இளம்பூரணர், சோமசுந்தரபாரதி ஆகியோர் இக் கருத்தினர்.

நச்சினார்க்கினியரும் குழந்தையும் வேறு கருத்தினர். காமம், வெகுளி, மயக்கம் இல்லாத ஒழுகலாற்றின் இறப்பும், நிகழ்வும் எதிர்வும் என்னும் மூவகைக் காலத்தினும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடையோர் — அறிவர் என்பர் நச்சர். அறிவருக்குச் சான்றாக அகத்தியரைக் காட்டுவர் நச்சர்.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலத்தையும் கண்டு கூறுதல் எளிய செயலன்று. செயல் அருமையை நச்சினார்க்கினியரும் உணர்ந்து அகத்தியரைச் சான்றாகக் காட்டினர். அவ்வாறு காட்டியமையே முக்காலம் அறிதலின் அருமையைக் காட்டுவதாம். எனவேதான் 'முழுதுணர்ந்தார்க் கல்லது முக்காலமும் புலப்படாமையின் அது பொருளன்று என்க' என்று எழுதுவர் இளம்பூரணர்.

வாகைத் திணையோ போர்த்திணை; அகத்திணையுள், போருக்கான காலத்தை ஆய்வதே முதல் நோக்கம். பன்னூறு படைஞரை இடம் விட்டு இடம் பெயர்க்கும் போது, மாற்று நாட்டார் தம் காலச் சூழலை அறிவதும் போர்மேற் செல்வோர்க்கு இன்றி அமையாதவை. இயற்கையின் எதிர்ச் சூழலுக்கு ஆற்றுமல் கிரேக்க அலெக்சாண்டரின் படைஞர் பலர் மாண்டதை வரலாறு காட்டும். இட்லர்தம் பெரும்படை, உருசியப் பனிமழையில் பெருந்தோல்வி கண்டதை உலகப் போர் வரலாறு உணர்த்தும். எனவே, இறப்பு, நிகழ்வு எதிர்வு உணர்த்தும் சோதிடரினும், மழை, பனி, வெயில் என முக்காலத்தையும் முறையே போருக்கேற்ப அறிவிக்கும் காலக் கணிகரே போர்ச் சமூகத்திற்குத் தேவை.

பன்னிரு படலத்தாரும், பனியும் வெயிலும் கூதிரும் யாவும் துணியில் கொள்கையொடு நோன்மை எய்திய, தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை' என வரையறுப்பர்.[223] ஐயனரிதனாரும் இக்கருத்தினரே என்பது கணிவன் முல்லை எடுத்துக் காட்டும் பாடலால் விளக்கமாகிறது.[224]

> 'தன் உடலைப் பேணுமாறு கல்வி அறிவைத் தவறுது போற்றி மக்கள் வருந்தாது உண்மையை உணரும் வகைத் தவறு எதுவும் இன்றி வானமும் நில வுலகமும் உண்டாக்கும் நிகழ்ச்சிகளை எல்லாம் கருதிக் கூறுபவன் சிறந்த கணி ஆவான்'

என்பது அப் பாவின் பொழிப்பு.[225]

ஆக, முக்காலம் உணர்தல் மாந்தர்க்கு எளிதன்று என்பதாலும், போர்ச் செயலில், மழை, பனி, வெயில் ஆகியவற்றின் போக்கு அறிதலே வேண்டும் என்பதாலும், பன்னிரு படலத்தாரும், புறப்பொருள் வெண்பாமாலையாரும் காலம் அறிதலையும், அறிவித்தலையுமே கருதினர் என்பதாலும், இளம் கண்ட உரையே மிகப் பொருந்துகிறது. தமிழகத்திருந்த பதினெண் சித்தர்களை அறிவர் எனக் கூறும் குழந்தை உரை போர்க்கள ஓத்தில் பொருந்தாது.

நாலிரு வழக்கின் தாபதப் பக்கம்

தவநோன்பியர்தம் எண்வகை ஆற்றல்களை விளக்குவது இவ் வாகைத்துறை. இதனைப் புறப்பொருள் வெண்பாமாலையாரும், இலக்கண விளக்கத்தாரும் தாபத வாகை என்பர். தவசிகளின் எண் ஆற்றல்கள் எவை எனக் குறிப்பிடாமல் 'நாலிரு வழக்கு'

அட்டவணை 28

'நாவிரு வழக்கின்

என்பதற்கு உரையாசிரியர்

எண்	உரையாசிரியர்	1	2	3
1	இளம்பூரணர்	நீராடல்	நிலத்திடைக் கிடத்தல்	தோலுடுத்தல்
2	நச்சினர்க்கினியர் செய்வார்க்கு உரியன	ஊணசை இன்மை	நீர்நசை இன்மை	வெப்பம் பொறுத்தல்
3	நச்சினர்க்கினியர் தவம்செய்து யோகம் செய் வார்க்கு	இயமம்	நியமம்	ஆசனம்
4	சோமசுந்தர பாரதி	உண்ணுமை	உறங்காமை	போர்த்தாமை
5	புலவர் குழந்தை	அடக்கம்	நோன்பு	இருக்கை

தாபதப் பக்கம்

கூறுவன

	4	5	6	7	8
1	சடை புனைதல்	எரியோம்பல்	ஊரடையாமை	காட்டிலுள்ள உணவு கோடல்	தெய்வ பூசை அதிதிபூசை செய்தல்
2	தட்பம் பொறுத்தல்	இடம் வரை யறுத்தல்	ஆசனம்வரை யறுத்தல்	இடையிட்டு மொழிதல்	வாய் வாளாமை
3	வளிநிலை	தொகைநிலை	பொறைநிலை	நினைதல்	சமாதி
4	வெயிலில் இருத்தல்	நீரில் நிற்றல்	காமம் கடிதல்	வறுமை பொறுத்தல்	வாய்மை
5	வளிநிலை நிலை	தொகை	பொறை நிலை	நினைத்தல்	கலத்தல்

எனத் தொகை எண்ணுகத் தொல்காப்பியர் குறித்தமையால் பொருள் வேறுபாட்டிற்கு இப்பகுதி இடனுயிற்று. அவரவர், தத்தம் நோக்கில் எட்டை விரித்து விளக்கினர்.

நச்சர். தம் பரந்த அறிவினுல் இதனைப் பதினுறுக்கி உரைப்பர். தவம் செய்வார்க்கு எட்டு என்றும், யோகநெறி நிற் பார்க்கு எட்டு என்றும் அவர் பகுத்துணர்த்துவர். அவர்தம் பகுப்பு,வேறு புறத்திணை நூல்களுள் போற்றப்படாமையின், இங்கு ஏற்பதற்கில்லை. பாரதியும், குழந்தையும் முன் மரபும் இன்றிப் பிற இலக்கியச் சான்றும் இன்றி, இலக்கணச் சான்றும் இன்றி, எட்டு வகையினை எடுத்துணர்த்துவர். தவசியர் பண்புகளுள் ஒன்றுக உண்ணுமையைப் பாரதி கூறுவது பொருத்தம் இன்று. கான் கிழங்குகளையும், பழங்களையும் உண்ணுதல் தவசியர் வழக்காம்; உண்ணுமையை ஒரு நெறியாகக் கூறிய பாரதி, ஏழாம் பண்பாக, வறுமை பொறுத்தலைக் கூறுவது முன்பின் முரணுக உள்ளது. உண்ணுது இருப்பினை வறுமை வாட்டுதல் எங்ஙனம்? 'வாய்மையால் வருந்தல்' - என்பதைத் தவசியர்க்குக் கூறியது பொருந்துமா? வாய்மையால் மகிழ்தலே அவர்தம் பண்பு. குழந்தை, நச்சர்., யோகம் செய்வார்க்குக் கூறியவற்றைத் தமிழ்ப் படுத்திக் கூறியுள்ளனர். அவ்வளவே அவர்தம் கூற்று. உரை மரபு, இலக்கிய, இலக்கண மரபுகளில் போற்றப் படாமை யின் அதனைக் கொள்ளுதற்கு இல்லை. இளம். கண்டு காட்டியன இலக்கிய, இலக்கண மரபுகளால் உறுதி ஆகின்றன.

நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடை புனை தல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவு கோடல், தெய்வ பூசையும் அதிதி பூசையும் செய்தல் என்ற எட்டும் இளம். கூறியன. புறநானூறு 251, 252 ஆம் செய்யுட்கள், (பார்க்க அட்டவணை 28) தாபத வாகையைச் சார்ந்தன. அவை ஏறத்தாழ இளம் பொருளுரையைச் சார்ந்து நிற்கின்றன.

> 'மூங்கிலிடத்தை உடைய நெடிய மலையிடத்து அருவி நீரை ஆடி, காட்டு யானையால் கொண்டு வரப்பட்ட விறகுகளைக் கொண்டு, மிக்க வெம்மையை உடைய செந் தீயை வேட்டு, முதுகின் கண்ணே தாழ்ந்த புரிந்த சடை யைப் புலர்த்துவோன்,'[226]
>
> ஒலிக்கும் வெள்ளிய அருவி நீரில் குளிப்பன். அதனுல் அவன் நிறம் மாறும்: தில்லம் தளிர் போன்ற புற்கென்ற சடையோடு கூடிநிற்பன்; செறிந்த இலையை உடைய தாளியைப் பறிப்பன்,[227]

பழம்பாடல் ஒன்று, இளம் கருத்திற்கு முன்னுரைட்டம் போல தவத்தினர் இயல்புகளை, நீராடல், நிலத்திடை கோடல், தோலு டுத்தல், தொல் எரியோம்பல், ஊரடையாமை, சடை புனைதல்: காட்டில் உணவு ஏற்றல், கடவுட் பூசை ஏற்றல் என நிரல்படக் காட்டும். அப் பழம்பாடல் வருமாறு :

> ''நீரிர் ஆடல், நிலத்திடை கோடல்
> தோலல் உடுத்தல், தொல்எரி ஓம்பல்
> ஊரடை யாமை, உறுசடை புனைதல்,
> காட்டில் உணவு, கடவுள் பூசை
> ஏற்ற தவத்தின் இயல்பென மொழிப''[228]

தொல்காப்பியர் இலக்கணத்தை ஒட்டியும் வெட்டியும் எழுந் தவை இலக்கண விளக்கமும், புறப்பொருள் வெண்பாமாலையும். அவற்றுள், பல செய்திகள் இடம்மாறி இருப்பினும், தொல்காப் பியத்துள் கூறப்பட்டவையே விரித்து எழுதப்பட்டுள்ளன. தொல்காப்பியர் கூறும் 'நாலிரு வழக்கின் தாபத பக்கத்தை' அந் நூல்கள் தாபத வாகை எனக் குறிப்பிடும். அதற்குக் காட்டப் பட்ட வெண்பா, முற்றுமாக இளம் உரையைத் தழுவி நிற்கிறது. அவ்வெண்பா வருமாறு:

> ''நீர்பலகால் மூழ்கி நிலத்தசைஇயத் தோல் உடையாச்
> சோர்சடை தாழச் சுடர் ஓம்பி - ஊரடையார்
> கானகத்த கொண்டு கடவுள் விருந்தோம்பல்
> வானகத்து உய்க்கும் வழி.''[229]

ஆக, புறநானூற்றுள் வரும் வாகைத் திணை, தாபத வாகைத் துறைப் பாடல்கள் பழம்பாடல் ஒன்று, புறப்பொருள் வெண்பா மாலை, இலக்கண விளக்கம் ஆகிய இலக்கண நூல்கள் காட்டும் சான்றுகள் இளம் உரையின் பொருத்தத்தை வலிவுபடுத்தும்.

அனைநிலை வாகை (74)

பார்ப்பனர், அரசர், ஏனோர் (வணிகர், வேளாளர்), அறிவர், தாபதர், பொருநர் ஆகியோர் பெருமையினைச் சிறப்பித்துக் கூறி, இறுதிப் பகுதியாக 'அனைநிலை வாகை' என்பதை அமைத்தனர். இதற்கு இளம்பூரணரும் பாரதியும் ஒருவகையில் பொருளுரைப் பர்; நச்சர் பிறிதொரு வகையில் பொருளுரைப்பர்; குழந்தை மற்றொரு வகையில் பொருளுரைப்பர்.

வாளானும் தோளானும் பொருது வெல்லுதல் பொருந வாகை. அதனைப் போலவே, சொல்லால் வெல்லுதல், பாட்டான் வெல்லுதல், கூத்தான் வெல்லுதல், சூதான் வெல்லுதல், ஆட்டுக்

கிடா, காடை இவற்றுல் வெல்லுதல் 'அணிநிலைவகை' என்பது இளம் விளக்கம். இவற்றை எல்லாம் பொருந வாகைக்குள்ளேயே அடக்குவர். நச்சர். அடக்கி, பார்ப்பனர், அரசர், ஏனோர், அறிவர், தாபதர் பொருநர் ஆகியோர் இடையே ஏற்பட்ட கூட்டுறவால் தோன்றிய மாந்தர்தம் பெருமை பேசுதலே அணி நிலை வகை என்பர்.

> 'பார்ப்பார்க்குப் பார்ப்பனக் கன்னியிடத்துக் கற்பு நிகழ்வதற்கு முன்னே களவில் தோன்றினனும், அவள் பிறர்க்குரியவளாகிய காலத்துக் களவில் தோன்றினனும், அவள் கணவனை இழந்திருந்துழித் தோன்றினனும், ஒழிந்த மூவகை வருணத்துப் பெண்பாற் கண்ணும் இவ் வாறே தோன்றினனும், அவரவர் மக்கட்கண் அவ்வாறே பிறழத் தோன்றினனும் ஆகிய சாதிகளாம். இன்னேரும் தம்தம் தொழில் வகையால் பாகுபட மிகுதிப்படுத்தல் வாகைத்திணையாம். ஒழிந்தபகுதி ஐந்தற்கும் இஃதொக் கும். இன்னும் பெண்பால் உயர்ந்து ஆண்பால் இழிந்த வழிப் பிறந்த சாதிகளும் அணிநிலைவகைபாற்படும்.'

என்பது நச்சர் விளக்கம். குழந்தை, அடிப்படையில் நச்சினர்க்கினியரைத் தழுவி உரைப்பர். எனினும் விளக்குவதில் அவரிடமிருந்து முற்றுமாக வேறுபடுவர்.

'அறுவர் கீழிருந்து அத்தொழில்களைப் பயில்வோர் கூறுபாடு. அவர்கள் பயிற்சியைச் சிறப்பித்துக் கூறுதல். இது மாணுக்கர் சிறப்புக் கூறுதல்' என்பர் குழந்தை. பார்ப்பன வாகை, அரச வாகை ஆகியன போன்று மாணுக்கர் வாகை என்ற ஒன்றைத் தொல்காப்பியர் கூறினர் என்பது குழந்தை கருத்து.

ஒரு கால நூலிற்குப் பின் ஒரு காலத்தில் வாழ்ந்து கொண்டு உரை இயற்றுவோர், தம் காலப் பார்வையில் மூல நூலை அணுகு தல் கால வழுவை உண்டாக்கும். குழந்தை உரை இருபதாம் நூற்றுண்டுப் பார்வையில் தொல்காப்பியர் காலத்தை அணுகு வதால் பிழைபடுகிறது. மாணுக்கர் வாகை என்ற ஒன்றை அவர் கூறுவது கால வழுவே.

தம் காலத்தில் செழித்துத் தழைத்துக் கிடக்கும், ஆரிய வேதங்கள், மனுசுமிருதி, அருத்த சாத்திரங்கள் அவற்றிற்கான விரிவுரைகள், நச்சர். உரைநேர்மையை நெகிழச் செய்துள்ளன. இதுவும் ஒருவகை கால வழுவே. உயர்ந்த சாதியில் பிறந்த ஆண் மகன், அடுத்த சாதியிற் பிறந்த பெண்ணை மணந்து அல்லது

புணர்ந்து பெற்ற மக்களை 'அனுலோமர்' என்பர். உயர்சாதிப் பெண், தாழ் சாதி ஆண்மகனைக் கூடிப் பெற்ற மக்களைப் 'பிரதி லோமர்' என்பர். இவ்வழக்கு வடமொழி ஆரிய வழக்குகள்: நச்சர். அனுலோமர், பிரதிலோமரை மனத்துட் கொண்டே 'அனு நிலை வகை'யை விளக்கியுள்ளார்.[230] ஆரிய முறை பரவியபின் தொல்காப்பியம் எழுந்தது உண்மையே. எனினும் ஆரிய வழக்கு கள் அனைத்தையும் உட்கொண்டு அந்நூல் எழுதப்பட்டது என்பது அடிப்பிழை. 'நால்வர்' என்றும் 'உயர்ந்தோர்' என்றும் தொல் காப்பியர் குறித்தன உண்மையே. அவற்றையும் கடந்து அனு லோமர், பிரதிலோமர் பற்றிக் கூறினர் என்பதற்கு நூலுள் யாண் டும் சான்று இல்லை. அன்றியும், பின் வந்த இலக்கண, இலக் கிய ஆசிரியர்களும், வாகைத் திணையை, நச்சர், பாங்கில் ஓரிடத்தும் விளக்கினர் இல்லை. புறப்பொருள் வெண்பா மாலை, அரச வாகை, பார்ப்பன வாகை, வாணிக வாகை, வேளாண் வாகை, பொருந வாகை, அறிவன் வாகை, தாபத வாகை என்ற அளவிலேயே அமைந்தது. இலக்கண விளக்கமும் ஐயனரிதனர் வழியையே தழுவியது.[231] புற நானூற்றில் இடம் பெற்றுள்ள வாகைத்திணைப் பாக்களுள், அரச வாகை, பார்ப்பனவாகை தாபத வாகை என்பன காணப்படுகின் றனவே. அன்றி, நச்சர். காட்டும் அனுலோம பிரதிலோம வாகை பற்றிய குறிப்புக்கூடக் காணப்படவில்லை.[232]

சொல், வென்றி, பாடல் வென்றி, ஆடல் வென்றி, சூது வென்றி, பூழ் வென்றி ஆகியவற்றை 'அனைநிலை வகை' என்றனர் இளம். நச்சர் இவற்றைப் பொருந வாகையில் பொருத்தினர். மறவர்தம் தோளாலும் வாளாலும் பொருவதே பொருந வாகையின் பொருள். தம் ஆற்றல் இன்றிப் போர்க்களத்தும் இன்றிப் பிறவாற்றுன் வெல்வதைப் பொருந வாகையுள் பொருத்துவது பொருத்தமா? பொருந்தாமை வெளிப்படை. எனவே, நச்சர் தம் உரை வரலாற்றாலும், இலக்கண, இலக்கிய வழக்காலும், சொற் பொருளாலும் பொருந்தாமை தெளிவு. இதற்கு மாறாக மேலே கண்ட சான்றுகள் நின்று பொருந்த அமைந்து கிடக்கும் இளம் உரையே பொருந்தும் என்பது வெள்ளிடை.

பகட்டினும் ஆவினும் துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கம்

பார்ப்பன பக்கம் முதலாக அனைநிலைவகை ஈறாக வாகைத் திணை வகைகள் கூறப்பட்டன. கூதிர்ப்பாசறை முதலாக வாகைத் திணைத்துறைகள் கூறப்படும். அவற்றுள் ஒன்றே 'பகட்டினும் ஆவினும் துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கம்' பகட்டால் பூசை தீர்ந்தார் வேளாளர்; ஆவால் குற்றம் தீர்ந்தார் வணிகர். இவ்விரு குலத்தினரும் அமைந்த பக்கம் என்பர் இளம். பாரதியும் அவர் வழி மொழிகுவர்:

நச்சர்., 'பகட்டினனும், மாவினனும்' எனப் பிரிப்பர், 'பகடு' 'மா' எனப் பிரித்தற்கு இணங்கப் பொருள் கொள்வர். 'எருதும் எருமையும் ஆகிய பகட்டினனும், யானையும், குதிரையும் ஆகிய மாவினனும் குற்றத்தின் நீங்கும் சிறப்பினால் அமைந்தோரது கூறு பாடு' எனப் பொருள் விரிப்பர்.

இளம் 'ஆ' என்று பாடம் ஓத, நச்சர் 'மா' என்று பாடம் ஓதியதால் நேர்ந்த பொருள் வேறுபாடு இது. 'மா' என்று கொண்ட நச்சர். யானை, குதிரை, புனிற்று, காலாள், தேர் ஆகியவற்றை அடக்குவர். பகட்டால் உழவஞ்சாமை கூறப் பட்டது. மாவால், பகை அஞ்சாமை கூறப்பட்டது, வாகைக் குரிய பதினெட்டுத் துறைகளில் முதல் ஒன்பதும் மறத்துறை பற்றி யன; பின் ஒன்பதும் அறத்துறை பற்றியன என்பர் நச்சர். அங் ஙனமாயின் 'பகடும் மாவும்' இடம்பெறும் பத்தாவது துறை நச்சர் கருத்துப்படி அறத்துறைகளுள் ஒன்றாகிறது. அறத்துறை கூறும் அதனுள், யானை, குதிரை முதலிய போர் விலங்குகள் பேசப் படுதல் பொருத்தமாக இல்லை. எனவே 'ஆ' என்று கொண்டு கூறும் இளம். உரையே பொருந்துவது;

கடிமனை நீத்த பால் (75)

பிறர் மனைவியை விரும்பாமை என்பர் இளம். 'கட்டில் நீத்தபால், எனப் பாடம் கொண்டு, அரசன், அரச உரிமையைக் கைவிட்ட பகுதி என்றார் நச்சர்., பாரதி குழந்தை ஆகியோரும், நச்சினார்க்கினியரைத் தழுவிப் பொருள் உரைப்பர்.

பிறர் மனைவியை விரும்பாமை பொது அறம். இயல்பான அறம். அதனைச் சிறக்கச் செய்தன பற்றிப் பாராட்டும் வாகைத் திணையுள் கூறுதல் இன்றியமையாமை இல்லை.

காம அடக்கத்தைக் 'காமம் நீத்த பால்' என்று இதே நூற் பாவின் இறுதியில் கூறுவர் நூலாசிரியர். ஆண்டு பிறர்மனை நய வாமையும் அடங்கும்.

அரசன் தன் பீடத்தை விட்டுத் தானே இறங்குவது அரிய செயல். பரதன், தன் அரியணையை விட்டு இறங்கினான். பார்த்தன் தன் அரியணை விட்டு இறங்கினான்; தசரதன் தன் அரி யணை விட்டு இறங்கினான். பரதனையும், பார்த்தனையும் நச்சினார்க் கினியரே சான்றாகக் காட்டுவர்.

'பதுதி சூழ்ந்த' எனத் தொடங்கும் புறப்பாட்டு (358) அரச உறவு பெரிதா, துறவு பெரிதா என்று வினவி, துறவே அரிது பெரிது எனக் கருத்துரைக்கும். வையமும், தவமும் தூக்கின்,

தவத்துக்கு வையம் சிறு கடுகளவும் நிகர் ஆகாது என்பது அப் பாடலின் முழக்கம்.[283] ஆனால் அரசுக்கட்டிலேத் துறக்கும் பழக்கம் வடபுல வேந்தரிடம் இருந்தது என்பதற்கு நிரம்பச் சான்றுகள் உள்ளன. அரசை விடுத்துத் துறவை ஏற்றுக் கான கத்துச் சென்ற கதைகள் பழந்தமிழர் வரலாற்றில் இல்லே. பரதன் பார்த்தன், நிகழ்ச்சிகளும், மேலே கண்ட புறப்பாட்டும், காடேகும் அரசத் துறவைப் போற்றும். பழந்தமிழர் வரலாற்றில் இல்லாத ஒன்றை மாண்பாகப் புறநானூறு போற்றுவது ஆராயத் தக்கது. புறப்பாடலின் ஆசிரியர் யார் என்பதைக் கூர்த்தறியின் அவ் வாய்வு முடிவு பெறும். வான்மீகியார் என்பார் அப்பாடலின் ஆசிரியர். அவர் இராமாயணம் இயற்றிய வான்மீகியின் குடி யினர் ஆகலாம்; அல்லது வான்மீக இராமாயணத்தில் வல்லவராக இருந்தமையால் அப்பெயர் பெற்றிருக்கலாம்.[284] எவ்வாறு யினும் 'இப்புறப்பாட்டாசிரியர் காலத்தில் வடவர் கூட்டுறவு தமி ழகத்தில் நன்கு பரவி இருந்தது என்பது தெளிய விளங்குகிறது'. அரசு கட்டிலேத் துறந்த அரசியலேக் 'கட்டில் நீத்த பால்' என்ற பாடப்பகுதி விளக்குவதாகக் கொண்டால், தொல்காப்பியக் காலமும் வடவர் கூட்டுறவுக் காலம் என்றே கொள்ள வேண்டி இருக்கும்.

கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை (76)

'வரையறுத்த ஒழுக்கம் கருதும் உரன்' என்பர். புலனே அடக்குதல் என்பது பொருள். அஃது அரியதாகலின், வாகையுள் வைக்கப்பட்டது. இளம்., நச்சர்., பாரதி, குழந்தை ஆகியோர் புலனடக்கம் என இப்பொருளேயே போற்றினர். எனினும் நச்சர். 'வேதம் முதலியவற்றேற் கட்டுதல் அமைந்த ஒழுக்கம்' என்றனர். இல்லறத்திற்கு உரித்தாக நான்கு வருணத்தார்க்கும் சொல்லப்பட்ட அறத்தின்கண் நிற்றல்' என்றனர் இளம். தமிழ் அடிப்படையில் எழுந்த தொல்காப்பிய நூற்பாவிற்கு,வட புலவேத அடிப்படை காட்டுவதைப் பாரதி மறுப்பர். வடபுலத் 'தரும நூல்கள் மக்களுக்குத் தம்முள் மாறுபட விதிப்பனவாதலானும், அவற்றை எழுதியோர் ஆணைக்கு உளச் சான்றுக்கு எதிராக எல் லாரும் கட்டுப்படுதல் இயல்பன்று ஆதலானும், ஒருகால் அவ் வகைக் கட்டுப்பாடு வற்புறுத்தப் படுமேல் அது வாகை ஆகாமை யானும் அது பொருளன்மை அறிக' என்பர் பாரதி. வேத அடிப் படையை நச்சர் காட்டினர் ஆயினும், 'கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமைக்கு, அடக்கமுடைமை (குறள் 6), ஒழுக்கமுடைமை (1) நடுவுநிலேமை (8) பிறனில் விழையாமை (8) வெஃகாமை (2) புறங்கூறுமை (1)தீவினே யச்சம் (1) அழுக்காறுமை (1) பொறை உடைமை (8) எனத் திருக்குறளில் இருந்தே சான்று காட்டினர்.

இங்கு நச்சர்., வேதம் என்று கருதியது திருக்குறளையே என்று கருத இடனுண்டு. திருக்குறள், 'உத்தரவேதம்' எனவும், 'தமிழ் மறை' எனவும் 'பொதுமறை' எனவும்' போற்றப்பட்டமை எண்ணத் தக்கது.[255]

காஞ்சித் திணை-போர்ப்பணியில் பெண்டிர் பங்கு (77)

பெண்டிர்தம் போர்ப்பங்கு, வெட்சி, வஞ்சி, உழிஞை தும்பைத் திணைகளில் காணப்படவில்லை. காஞ்சித் திணையிலேயே அவர்தம் பங்கு பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடுவர். நச்சர், பெண்டிற்குரிய துறைகள் என்றே சிலவற்றை வரைந்து காட்டுவர்.

காஞ்சியில் பெண்டிர் தொடர்பானவை

1 மறப்புண் பட்டுக் கிடக்கும் மணவாளனைப் பேய் தீண்டாமல் காப்பர்.

2 வேலால் விழுப்புண் பெற்றவன் வீர மரணம் அடைவன். அவனைக் கொல்வித்த அதே வேலைத் தன்மேல் பாய்ச்சி மாய்வன்,

3 மன்னவர் பெண் கேட்டு வருவர்; பெற்றவன் எதிர் மறுத்து மொழிகுவன். அவனை மையமாக வைத்துப் போர் மூளும்.

4 மடிந்த மணவாளனது முகத்தைத் தன் முகத்தோடு சேர்த்தும், தன் மார்போடு சேர்த்தும் குமுறி உயிர் துறப்பள்.

5 புகழ் பெற்ற மறத்தலைவன் மடிந்தமை கேட்டு, அவனது பெண் உறவினர் அரற்றுவர்.

6 துணை யாரும் இன்றித் தான் ஒருத்தியாக இருந்து, மறப்புண் கொண்டவனைத் தழுவி அழுவள்.

7 நனிமிகு சுரத்திடை கணவனை இழந்து தனிமகள் புலம்புவள்.

8 காதலனை இழந்த நிலையில் அவள் தவம் புரிகுவள்.

9 கணவன் இறந்துபட, மனைவி அவருடன் எரிதழல் புகுவள்.

10 மகன் களத்தில் மடிந்த வழி, தாயும் மடிகுவள்.

மேற்கண்ட இடங்களில் பொருள் காண்பதில் உரைகாரர் தம்முள் சிற்சிறிதே முரணுவர். குறிப்பாக 'நீத்த கணவன்

தீர்த்த வேலின் பேரெத்த மனைவி, 'ஆஞ்சிக் காஞ்சி', என்பதற்கு நச்சர் 'மறவனின் வேற்புண் பார்த்து மறத்தி அஞ்சுவள்' என்பர். ஆனால் இளம், அவனைக் கொன்ற வேல் கொண்டு அவளையும் கொன்று கொள்வள் என்பர். இரண்டுள் இளம் தம் இரண்டாம் பொருளே சிறக்கும்; எனினும் இதனை ஒட்டி வேறு சில ஐயங்களும் கிளைக்கும்.

1 பெண்டிர் களத்திற்குக் கணவனுடன் செல்லுதல் உண்டா?

2 பெண்டிர் போருக்கு முன்பே, புறத்தே போக்கப் பெறும் அறத்தாறு நுவலும் பூட்கை மறம் என் ஆயிற்று?

3 கணவனைப் பிரிந்து தனிமையில் தவிக்கும் முல்லைப் பாட்டுத் தலைவியும் நெடுநல் வாடைத் தலைவியும் நிற்க, மனைவியைப் பிரிந்து அகத் தலைவன் பாசறை புலம்புதலாகக் கூறப்பெறும் இலக்கிய வழக்காறுகள் முரணவில்லையா?

மேற்கண்ட வினாக்களுக்கு விடை வேண்டும் எனில், பெண்டிர் தம் பங்கு வரலாற்றை அறிதல் வேண்டும். பொதுவாக, போர்க்கள மறவர்க்கு மணத்தை மறுப்பதே பொது வழக்கு. உரோம வீரர்கள், திருமணம் செய்வதினின்று தடை செய்யப்பட்டிருந்தனர். ஒப்பந்தம் பெற்றுச் சில காலம் பணி செய்யும் உயர் அதிகாரிகள் மட்டும் மணம் செய்ய விடப்பட்டனர். ஆனால் அவர்களும், பணியாற்றும் வட்டாரத்தில் மணம் செய்து கொள்வதிலிருந்து தடுக்கப்பட்டிருந்தனர். அகுசுடசு தன் ஆட்சியில், அனைவரையும் மணத்திலிருந்து தடுக்க முயன்றான். அம் முடிவு இருவழிகளில் தவறுகளைக் கிளைக்க விட்டது.

1 கட்டாயப் போர்ப் பருவம் வருவதற்கு முன்னரே பலர் மணம் செய்து கொண்டனர். பதினெட்டு, பத்தொன்பது வயதில் பலர் மணம் முடித்துக் கொண்டனர். சிலர் குழந்தைகட்குப் பெற்றோர்களாகவும் இருந்தனர். இதனால் குறைந்த வயதில் திருமணம் செய்து கொள்வது பெருகியது.

2 போர் மறவராக இருக்கும் போது, முறைப்படி மணம் செய்தல் ஆகாது என அரசு தடுத்தமையால், முறையற்ற களவு மணங்களை மறவர் மேற்கொண்டனர். ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற பின்பே, முன்னைய களவு மணத்தை, முறை மணம் (Official) ஆக்கிக் கொண்டனர். சில

சமயம் இதற்கு வாய்ப்பில்லாமல், களவு மணம் செய்து கொண்டவர், களத்திலேயே மடிந்துவிட நேரிடும். அப்பொழுது அத்தகு மறவரை மணந்து கொண்ட பெண்டிர்நிலை அவலமாக இருக்கும்.[286]

தமிழகத்தில் அத்தகு தடை ஒன்றும் மறவர்க்கு இல்லை. மாறாக, மறப்பணி ஆற்றுவோரே மணவாளர் ஆதல் வேண்டும் என்ற விழைவு சங்க இலக்கியத்தில் புலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏறு தழுவி பெண்ணை மணப்பர் என்ற நிகழ்ச்சி, பெண்டிர்தம் மணம், மறத்தோடு தொடர்பு பட்டிருந்தமையைக் காட்டும். எனினும், மறவர் மணத்தினின்று தடுக்கப்பட்டதன் நோக்கம், போர்ப்பணியில் ஒருமுகப்படவே ஆகும். இந் நோக்கம் தமிழரிடம் வேறு வகையில் இருந்தது என்பது சிலவற்றால் புலனாகிறது.

பெண்டிரைத் தம்முடன் களங்களுக்கு அழைத்துச் செல்வதில்லை. 'எண் அரும்பாசறை பெண்ணொடும் புணரார்' என்ற தொல்காப்பிய நூற்பா இதனை வற்புறுத்தும்.[287] பெண்களைப் போருக்கு உடன் அழைத்துச் செல்வதினின்று மறவர் தடுக்கப் பட்டிருந்தனர் என்பதே இதன் உட்கருத்து. பாண்டியன் நெடுஞ்செழியன், தன் அரசியை அரண்மனையில் விட்டு வந்ததை நெடுநல்வாடை படம் பிடிக்கும்; முல்லைப் பாட்டும் மனைவியின், போர்க்களப்பிரிவை விரித்துரைக்கும். அகப் பாடல்களில் சில 'பாசறைப் புலம்பல்' என்ற துறையின. மனைவியைப் பிரிந்து சென்றிருக்கும் மறவன், போர் அற்ற ஓய்வுப் போதில் அவளை நினைந்து கலங்குவதை அப்பாடல்கள் காட்டும். அகத்திணை இயலில், கணவன், பகை தணிப்பதற்காக மனைவியைப் பிரிந்து செல்வன் என்ற குறிப்பு இடம் பெற்றுள்ளது.[288] இக்குறிப்புகளை ஒருங்கு வைத்து நோக்க, உரோம நாட்டைப் போல மணத்தடை இல்லை. எனினும், போர்க்களத்திற்கு மனைவியை அழைத்துச் செல்லத் தடை இருந்திருக்கிறது என்பது தெளிவாகும்.

கிரேக்கத்தில், உரோம நாட்டை ஒத்த மணத்தடை இல்லை எனினும் தமிழகத்தைப் போலவே பெண்டிர், களம் செல்ல விடப் படுவதில்லை. பெரும்பாலும் பெண்டிர் அனைவரும் கிரேக்கத்தில் இல்லின் உள்ளே உறைந்து வாழ வேண்டிய இற்செறிப்புக் கட்டாயமாக இருந்தது.[289] ஒடிசி என்ற பெருங்காவியத்தில் ஒடிசின் மனைவி, கணவனுடன் போருக்குச் செல்லாமல், அவன் வரவிற்காகப் பல ஆண்டுகள் காத்துக் கிடப்பதாகக் காட்டுவர் ஓமர். இலியத் என்ற பேரிதிகாசத்தில் (ப. 392-496), எக்டர் (Hector) டிரோசன் போருக்குப் புறப்படுவான். புறப்படும் முன், அவன் மனைவி அந்து ரோமகியிடம் அவன் விடைபெறும் கட்டம்

அவலம் நிறைந்தது. அவனை உடன் அழைத்துச் செல்ல வழி யற்றுத் தன் மனைவியையும், மகனையும் அவன் மாறி மாறிப் பார்ப் பதும் பிரிவதும் பேசுவதும் அன்றைக் கிருந்த நிலைமையை அறிவிக் கின்றன.[240]

பெண்டிர்க்குப் போரிலிருந்து விலக்கு

போருக்குப் பெண்களை உடன் அழைத்துச் செல்லுவது தடை யாகத் தமிழகத்தில் வரைப்படுத்தப் படாவிடினும், மரபாகப் போற்றப் பட்டதை இலக்கியங்கள் காட்டும். தொல்காப்பியம் ஓரளவு வரையறுத்தும் காட்டும். போர் தொடங்குவதற்கு முன்னர், போரினால் பாதிக்கப்படா வண்ணம் காப்பாற்றப் பட் டோர் பட்டியலில், பெண்டிர் இடம் பெற்றுள்ளனர். புறநானூறு இதனை அறிவிக்கின்றது.[241] இவற்றால், பெண்டிர், களப்பலிக் கொடுமையைக் காண வண்ணம் காக்கப் பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

போர்க்களத்திலும் போரின்கண்ணும் பெண்டிர் விலக்கப் பட்டனர். பெண்டிரைப் பிரிந்து சென்ற கணவன்மார், பலகாலம் வெளி நாடுகளில் தங்க நேர்ந்தது. உணவுச் செழிப்பிலும், உடற் செழிப்பிலும் கணவன்மார் இருந்தனர். ஆனால் அடுத்த நாள் களப்போரை நினைத்து, அதில் சாவும் வரலாமே என்று நினைத்துக் கள்ளுண்டும், கதைத்தும் காலம் கடத்தினராதல் வேண்டும். சில சமயம், பரத்தையர் உறவும் மேற்கொண்டவராதல் வேண்டும். மறவர்தம் உடல் தவிப்பை அறிந்த மன்னவன் அவர்தம் பரத்த மைக்கு உடன்பட்டவ ராதல் வேண்டும். 'எண்ணரும் பாசறை பெண்ணொடும் புணரார்' (பொருள். 173) என்ற நூற்பாவை அடுத்துப் 'புறத்தோன் ஆங்கண் புணர்வது ஆகும்' என்ற நூற் பாவை அமைப்பர் தொல்காப்பியர். இந்நூற்பாவிற்கு இளம் எழுதிய உரை இங்கு எண்ணத்தக்கது.

'மேற் சொல்லப்பட்ட பாசறைக்கண் புறப்பெண்டிர் புணர்ச்சி பொருந்துவது என்றவாறு. பொருந்துவது என்றதனால் கூட்டம் என்று கொள்க. அவராவார் தாதியரும் கணிகையரும்'.

('கணிகையர்' என்பது பரத்தையரைக் குறிக்கும். 'போர்ப் பாசறைகளை ஒட்டிப் பெரும்பரத்தையர் விடுதிகளை அரசு ஒப்பு தலுடன் இயங்கும். அவை காலை எட்டு மணியிலிருந்து இரவு எட்டு மணிவரை இயங்கும். இரவு எட்டு மணிக்குப் பின்னரே அவை மூடப் பெறும். பின்னரே அப் பரத்தையர் உண்பர்; இரவு பத்து மணிக்கு மேல் ஓய்வு கொள்வர். பின்னர் மறு நாள் எட்டு மணியிலிருந்து அந்த அவல வாழ்வு தொடரும்' என்று மொழிகு வர் 'போரும் அறக் கேடும்' என்ற நூலின் ஆசிரியர் இராய்.[242]

நெடுந்தொலைவு, நெடுங்காலப் பிரிவு பரத்தமைக்கு வித்து[245] மனைவியரை உடன் அழைத்துச் செல்லாக் கட்டுப்பாடு, பரத்தமையைப் பெருக்கியது. பெரும்பாலும் இது வெளிநாடுகளில் நிகழ்ந்தது. பரத்தை என்பது பர + ஸ்திரி = பரத்தை என அமைந்திருக்கலாம். உரோம நாட்டிலும் வெளிநாட்டிலிருந்து கொணரப்பட்ட பெண் அடிமைகளே பரத்தையராய் வாழ்ந்தனர்.[246] தமிழ் நாட்டிலும் கோயில்களில் அடிமைகளாக இருந்த தேவரடியாரே பிற்காலத்துப் பரத்தையர் குலமாகப் பெருகினர். ஆக, 'எண்ணரும் பாசறை பெண்ணெடும் புணரார்' என்ற கட்டுப்பாடு பிறிதொரு வகையில், அறக்கேட்டை விளைத்தது.

பரத்தமையைத் தணிக்க எண்ணுதல்

போர் வாழ்க்கையே பரத்தமைக்கு அடித்தளம். பரத்தமை, பெண்மைக்கு இழுக்கு. ஒதற்பிரிவு, பகைவயிற் பிரிவு, தூதுப்பிரிவு ஆகிய மூன்றைக் கூறிய தொல்காப்பியர் பரத்தமைப் பிரிவைப் பிரிவாகக் கூறுமை எண்ணத் தக்கது. போர்ச் சமூகத்தில் பரத்தமை தவிர்க்கத் தக்கது அன்றேனும், தழைக்கத் தக்கதும் அன்று. எனவே தொல்காப்பியர் காலச் சமூக அமைப்பிலேயே மனைவியரையும் உடன் அழைத்துச் செல்லும்வழக்கை மேற்கொண்டனர் போலும். அதனாலேயே களத்தில் கணவனை இழந்த அவலம் தாளாது அழுது மடியும் காட்சியும், அவனைப் பாய்ந்து கொன்ற வேலாலேயே தன்னை மாய்த்துக் கொள்ளும் காட்சியும், காஞ்சித் துறையில் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் அடங்காது எஞ்சிய போர்கள் உள்ளூர்க் களத்தில் நிகழ்ந்த போது நடந்தன ஆகலாம். பகைவரால், கோட்டை முற்றுகை இடப்பெறும்போது, நிகழும் நொச்சிப் போரில், இறந்த மறவரை, கோட்டைக்குள்ளேயே உறையும் பெண் உறவினர் சென்று கண்டனராதல் வேண்டும். அக்காட்சிகளே மேலே உள்ள பெண்டிர் காஞ்சித்துறைகளாக விரிந்தன ஆதல் கூடும்.

தாமே எய்திய தாங்கு அரும்பையுள் (77-21)

சிறைப்பட்டார் தாம் உற்ற பொறுத்தற்கு அரிய துன்பத்தினைக் கூறும் கூற்று என்பர் இளம். நாயைச் சங்கிலியால் பிணைத்து இழுத்து வரும் துன்பத்தைத் தனக்குப் பொருத்திச் சொல்லும், சேரமான் கணைக்கால் இரும்பொறைப் பாட்டைத் (புறம். 74) தன்னுரைக்கு அவர் எடுத்துக் காட்டுவர்.

'தாமே ஏங்கிய தாங்கரும் பையுள்' என்று பாடம் கொள்வர் நச்சர்; தம் பாடத்திற்குத் தக, 'சுற்றத்தாரும் இன்றி மனைவியர் தாமே தத்தம் கொழுநரைத் தழுவி இருந்து அழுதது கண்டோர்

பொறுத்தற் கரிய நோய்' என உரைப்பர். உரைப்பினும் இளம். உரையையும் எடுத்துக்காட்டி ஏற்பர். நூற்பாவில் வரும் 'தாமே' என்பதற்குச் சிறப்புக் குறிப்பு எழுதுவர் நச்சர். 'தாமே' எனப் பன்மை கூறினர் ஒருவர்க்குத் தலைவியர் பலர் என்றற்கு என்பது அவர்தம் குறிப்பு.

நச்சர், உரையைப் பாரதி மறுப்பர். காரணம் காட்டாது, 'பொருந்தாமை வெளிப்படை' என்பர். 'போரில் ஊறுபட்டு ஓய்ந்தோர் தாங்களே பொறுத்தற்கரிய வருத்தம் கொண்டு ஏங்கும் துன்பக் காஞ்சி' என்று உரை எழுதும் பாரதி, இளம் காட்டிய 'குழவி இறப்பினும்' எனவரும் புறப்பாட்டையே சான்றாகக் காட்டுவர். சிறைப்பட்டார் கூற்று என்ற குறிப்பு இல்லை எனினும் பாரதி உரை இளம்பூரணரையே பெரிதும் தழுவி நிற்கிறது.

போர்க்களத்தில் புண் பெற்றான் ஒருவன் கலங்குவது போலப் பாரதி உரையமைப்பது மரபிற்கு முரணும். புண்பட்டு மகிழ்தலே மறவர் திறம். 'புண்ணொடு வருதல்' என்றே தனித் தெடுத்துப் பேசுவர்.[245] விழுப்புண் படாத நாள் எல்லாம் வீண் என்று மறவர் முழங்குவர்.[246] எனவே விழுப்புண் பட்டதால் மனப்புண் படுவதாக, வருந்துகூற்றாக பாரதி விளக்குவது பண்டைய நெறிக்கு முரண்.

நச்சர்., மனைவியர் கலக்கமாகக் கொள்வர். மனைவியின் நிலை காஞ்சித் திணையிலேயே வேறு துறைகளாகக் கூறப்படும்.

1 இன்னகை மனைவி பேஎய் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சி

2 நீத்த கணவன் தீர்த்த வேலின்
பேஎத்த மனைவி ஆஞ்சி

3 முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலை.

4 கணவனொடு முடிந்த படர்ச்சி

5 நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலை

6 காதலன் இழந்த தாபத நிலை

7 நல்லோள் கணவனொடு நனியழற் புகுஇச்
சொல்லிடை யிட்ட பாலை நிலை

இவ்வாறு ஏழு இடங்களில், கணவனின் துயர் ஒட்டிய மனைவியர் நிலையைத் தொல்காப்பியரே விளக்குவதால் 'தாமே ஏங்கிய தாங் கரும் பையுள்' என்ற துறையையும் மனைவியர் நிலையாகக் கொள்ள வேண்டுவதில்லை.

நச்சர் இத்துறையைப் பெண்பாற் கூற்றுக் கூறுதற்கு ஒரு காரணம்; 'மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமை முதலாக—தலை யொடு முடிந்த நிலை ஈறாக உள்ள முதல் பத்தும் ஆண்பாற்கும், மாய்ந்த பூசல் மயக்கம் முதலாக - காடு வாழ்த்து ஈறாக உள்ள பின் பத்தும் பெண்பாற்கும் உரிய என்பது அவர் கருத்து.[247] இவ்வாறு கொண்டமையால் பின் பத்தினுள் ஒன்றாக இடம் பெற் றுள்ள 'தாமே எய்திய தாங்கரும் பையுளோப் பெண்பாற் கூற்றாக கூற வேண்டிய கட்டாயம் நச்சினார்க்கினியர்க்கு நேர்ந்தது. ஆனால் நச்சர் கருத்துப்படியே, பின்னே உள்ள பத்தும் பெண்பால் துறைகளாக அமையவில்லை.

'கழிந்தோர் தேஎத்து அழிபடர் வுறீஇ ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலை', காதலி இழந்த தாபத நிலை, காடு வாழ்த்து ஆகி யன (பெண்பாற்கே உரிய எனல் இயலாது. எனவே ஆண்பால் துறை பத்து. பெண்பால் துறை பத்து என்ற நச்சர் பிரிப்பு பொருந்துவதாக இல்லை. அப்பிரிப்பைப் பொருந்துவதாகக் கொண்டு, அவர் கூறும் பொருளும் பொருந்துவதாக இல்லை.

'சிறைப்பட்டார் தாம் உற்ற பொறுத்தற்கு அரிய துன்பத் தினைக் கூறும் கூற்று' என்ற இளம் கருத்தே மிகப் பொருந்தி நிற் கிறது. சிறையில், சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய் போலப் பிணித்துத் துன்புறுத்துவர். தாகத்திற்கு நீர் வேண்டும் என்று இரப்பினும் காலங்கடத்தி அவமதிப்பர்' என வரும் புறப்பாட்டுக் குறிப்புகள் நினையத் தக்கன. சிறைக் கொடுமையும், அவமானமும் தாளாது சேரமன்னன் சிறையிலேயே உயிர் துறந்த நிகழ்ச்சியை அப்பாட்டுக் காட்டும். சிறைத் தண்டம் பெருமல், திருமா வளவன் தப்பி வந்த நிகழ்ச்சியைப் பட்டினப்பாலை காட்டும்.[249] மரண தண்டனைக்கு முன்பும், மன்ற விசாரணைக்கு முன்பும், சிறைப்படுத்திக் கொடுமைப்படுத்தல் எங்கும் உண்டு. உரோம நாட்டில் இருந்ததை அதன் வரலாறு காட்டும்.[250]

நல்லாள் கணவனொடு நளிஅழல் புகீஇ இடையிட்ட மாலை சொல் நிலை (77-30, 31)

கணவனொடு கிழத்தி பெரிய தீயில் விழுதற்கு முன் இடை யிட்ட மாலைக்காலத்துக் கூறும் கூற்று என்பர் இளம். நச்சர் 'மாலை நிலை' என்பதற்கு மாறுகப் 'பாலை நிலை' என்று பாடம்

கொண்டு பொருள் உரைப்பர். கற்புடைய மனைவி தன் கணவன் இறந்துபட அவனோடு எரிபுகுதல் வேண்டி எரியை விலக்கினரோடு உறழ்ந்து கூறிய புறங்காட்டு நிலை' என்பர். 'பாலை நிலை' என்ற தொடரை மேலும் தொடர்ந்து விளக்குவர். 'எல்லா நிலத்தும் உளதாகித், தனக்கு வேறு நிலன் இன்றி வருதலானும், நண்பகல் போல், வெங்கனலாள் வெதுப்புதலானும் புறங்காட்டைப் பாலை 'என்ரூர்' என்பர். இவ்விளக்கம் இன்றி, பாலை என்ரூல் பிரிவு ஈண்டு உலகைவிட்டுச் செல்லும் நிலையான பிரிவு என்ற கருத்தில் 'பாலை நிலை' என்ரூர் எனலும் அமையும். பெரும்பிரிவை 'முது பாலை' என்று முன்னர்த் தொல்காப்பியர் குறித்ததை நினைக.[251]

மாலை நிலை என்பதினும், பாலை நிலை என்பதே பொருத்தமாக அமைகிறது. மனைவி, எரி அழல் புகும் நிகழ்ச்சி எப்பொழுதும் அமையலாம்; அவள் மற்றவரைத் தடுத்து எந்தப் பொழுதும் கூற்று நிகழ்த்தி இருக்கலாம். எனவே மாலைக் காலத்தில் கூறும் கூற்று என்ற இளம் பாடலும் பொருளும் அத்துணைச் சிறப்பின அல்ல.

உடன்கட்டை ஏறும் பழக்கம்

பண்டைத் தமிழரிடம் உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்த தில்லை என்பர்.[252] அது சரியன்று என்பதை இக் காஞ்சித் துறை யும் பின்வரும் செய்திகளும் தெளிவாக்கும். பூதப் பாண்டியன் தேவி, பெருங்கோப்பெண்டு, தன் கணவன் மறைவிற்குப் பின் தடுத்தோரைத் தடுத்துத் தீப்புகுந்த நிகழ்ச்சியைப் 'பல்சான்றீரே எனத் தொடங்கும் புறப்பாட்டுக் காட்டும்.[253] பாண்டியன் நெடுஞ்செழியன், 'யானே கள்வன்' என உயிர் துறந்த போது, அவன் மனைவி கோப்பெருந் தேவியும் உடன் உயிர் துறக்கிரூள். ஆய் அண்டிரன் இறந்த போது அவன் மனைவி உடன் கட்டை ஏறி உயிர் நீத்தாள்.[254] கிறித்துவிற்கு முன்பே வடமேற்கு எல்லைப் பகுதிகளிலும், வட இந்தியாவிலும் அரச குடும்பத்தினர் இடையே சதி இருந்தது என்பது சுட்ராபோ (Strabo கி. மு. 20) எழுதிய நில இயல் நூலால் தெரிய வரு கிறது.[255] அரசனது தாயாகிய யசோமதி கணவன் இறந்த போது தற்கொலை செய்து கொண்டாள். முகமது காசிமின் சிந்துப் படையெடுப்பின் போது (கி.பி. 712) சில பெண்கள் உடன் கட்டை ஏறினதாக 'சச்சநாமா' கூறும். கி.பி. 957 — 970 இல் சோழப் பெருநாட்டை ஆண்ட சுந்தர சோழன், தன் மூத்தமகன் ஆதித்த கரிகாலனின் மறைவைப் பொறுக்க லாற்ரூது காஞ்சியில் உயிர் துறந்தான். இவன் மனைவி வானவன்மாதேவி, கணவனின் பிரிவைப் பொறுக்க இயலாமல், உடன்கட்டை ஏறி உயிர் நீத்

தாள் என்பதைப் பின்வரும் கல்வெட்டுக் காட்டும். மார்க்கோ போலா என்ற வெனிசு நகரப் பயணி (கி.பி. 1293) பாண்டி நாட்டைப் பற்றிக் குறிப்பிடும் போது, தமிழகப் பெண்டிர் உடன் கட்டை ஏறுதலையும் அவ்வாறு உடன்கட்டை ஏறிமடிவோரைச் சமூகம் பெரிதும் பாராட்டுதலையும் குறிப்பர்.[256]

'செந்திரு மடந்தைமன் சீராஜ ராஜன்
இந்திர சமானன் இராஜ சர்வஞ்ஞன் எனும்
புலியைப் பயந்த் பொன்மான் கலியைக்
கரந்து கரவாக் காரிகை கரந்த
மூலமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல்[256]

உடன்கட்டை ஏறி உயிர் துறத்தல் பல நாடுகளிலும் இருந்த பழைய வழக்கம். விதவை மறுமணக் கருத்து அரும்பிப் பரவாத தாலும் கைம்பெண் வாழ்வைக் கடைப்பிடிப்பதில் உள்ள துன்பங் களாலும் உலகெங்கும் உடன்கட்டை ஏறும் பழக்கம் இருந்தது. துயித்தானிக் எருளி இன விதவைப் பெண்கள், கணவன் உடன் இறப்பர்; கலாவ் பெண்டிர், தம் கணவனை அடுத்த உலகிலும் சென்று அடைதற்காக உயிர் துறப்பர்.[257] கலிங்கத்துப் பரணியி லும் கணவனை மறு உலகில் வரவேற்கும் முகமாக, மனைவியர் மடிந் தனர் என்ற குறிப்புள்ளது.[258] மராயைச் சேர்ந்த பிரிசியன் இறந்த போது, அவன் மனைவி ஒயென் சூனன் எரியும் தழலில் குதித்து இறந்தனள்; தராசியின் இனப் பெண்டிரும் கணவனுடன் இறந்து விடுதலை விரும்பினர்; சித்திய இனத் தலைவர்கள் இறக்க நேரும் பொழுது, அவருடன் அவர்தம் மனைவியர், அவர்தம் பணி யாட்கள், அவர்தம் தேர்கள், அவர்தம் குதிரைகளும் சேர்த்து எரிக்கப்படும்; இரண்டாம் அமன்கிதேப் இறந்து எரிந்த போது, அவன் எரி மேடையில் பல பெண்டிரின் சடலங்கள் கண்டு எடுக்கப் பெற்றன. சீன நாட்டில், விதவை மறுமணம் செய்வது என்பது கற்புக் கேடாகக் கருதப்பட்டது; கருதப்படவே கணவனுடன் மனைவியர் இறப்பது பெருமையாகப் போற்றப்பட்டது.[259]

தொடக்கத்தில், காதலன் மறைவு தாளாது மடிந்த காதல் நிலையையே பெண்டிர் உடன்கட்டை ஏறுதல் காட்டுகிறது. கணவனுடன் எரிதழல் புகும் மடவாரை 'நல்லோள்' என்று தொல்காப்பியர் குறித்தலைக் காண்க. விருப்பப் போக்காக இருந்த உடன்கட்டை ஏறுதல், காலப் போக்கில், கட்டாயப் போக்காக, காதலற்ற சமூகத்தில் வற்புறுத்தப்பட்டது. திணிப்பது, தவிர்ப்பது ஆகும் என்ற இயல் முறைப்படி, 'உடன் கட்டை ஏறல்' எதிர்க்கப்பட்டது. பின்னர் நிறுத்தப்பட்டது.

எனினும் பழைய நாகரிக நாடுகளில் எல்லாம் இப்பழக்கம் இருந்த மையை உலக வரலாறு காட்டும். காட்டவே, தொல்காப்பியர் குறிக்கும் நளி அழல் புகுதலும் அற்றைத் தமிழகத்து இருந்ததாகக் கொள்ளுதலே பொருந்துவதாகும்.

அரும்பெருஞ் சிறப்பின் புதல்வன் பயந்த தாய் தப வரும் தலைப் பெயல் நிலை(77 — 32, 33)

அரும்பெரும் சிறப்பினை உடைய மகனைப் பெற்ற தாய், மகன் போர்க்களத்தில் மாண்டமை ஆற்றாது தானும் மாண்டது என்பர் இளம். இளம். உரையை இரண்டாம் உரையாகத் தழுவி, 'அவன் பிறர் சிறப்பு மாய்தற்குக் காரணமாகிய பெருஞ் சிறப்பொடு களப்பட்டுத் துறக்கத்துப் போயவழி அவனோடு இறந்துபட வருஉம் தாயது தலைப்பெயல் நிலைமை' என விளக்குவர் நச்சர். 'மாய் பெரும் சிறப்பின் புதல்வன் பெயர' எனப் பாடம் கொண்டு நச்சர். கூறும் முதல் உரை ஆய்விற்குரியது. அவர் உரை வரு மாறு: ஒரு தாயின் மகன் பொருகளத்துப் பொருதுமாயும் பெரும் சிறப்பினை விட்டான்; பொருது மாயாது புறங்கொடுத்துப் போந்தான்; அதனைக் கேள்வியுற்ற தாய் மகனைக் காண ஓடினாள்; அவனோ பிறர் பழித்தவாறு புறம் கொடுத்துக் கிடக்கவில்லை; முகம் கொடுத்து விழுப்புண் பெற்று விண் பார்த்துக் கிடந்தான். படுமகன் கிடக்கை கண்டு ஈன்ற ஞான்றினும் பெரிது மகிழ்ந்தாள் தாய்.

பாரதி, நச்சர் உரையை மறுப்பர். மகன் புறங்காட்டினான் எனப்பழி வைப்பதாகக் கூறுவர். புறநானூறு 278 ஆம் பாட்டு, 'சிறுவன் புறங்கொடுத்து மாறினன், என்ற பழிகேட்டு மாண்டு அமருக்கு என் மகன் புறம் கொடுத்தது உண்மை ஆயின், அவன் பாலுண்ட மார்பை வாளால் அறுத்திடுவன்' என்று ஒருதாய் பொங்கியதைக் காட்டும். கல்லாக் காளையை ஈன்றதாகத் தாய் துடிப்பதைத் தகடூர் யாத்திரைப் பாட்டுக் காட்டும்.[260] எனவே புறங்காட்டினான் என்பது கேட்டுப் பொங்குவது பண்டை மறத் தாயர்தம் மாண்பு.

இத்தகு பழக்கம், தமிழ்த் தாயரிடம் அன்றிப் பல நாட்டின ரிடம் பண்டு விளங்கியுள்ளது. ஆப்பிரிக்கப் பழங்குடியினரான கேல்படே (Kelfadei) என்ற குடியிற் பிறந்த பெண்கள், தம் புதல்வர் களம் செல்லாது இருந்தால், அவரைச் சபிப்பர். 'பழங் குடிப் பெண்டிர், ஆடவர்க்கு நிகரான மறம் உடையவராக விளங் கினர். ஆடவரினும் கொடியவராகவும், மூர்க்கராகவும் இருந் தனர் என்பர் பிரிபால்ட் (Briffault). 'சில பழங்குடியில், மூத்த

நாலிரண்டைத் தொல்காப்பியர் விளக்கும் ஆறு

எண்	உரையாசிரியர்	1	2	3	4	5	6	7	8
1	இளம்பூரணர்	கடவுள் வாழ்த்து	வாழ்த்.தியல்	மங்கலம்	செவியறி வுறூஉ	ஆற்றுப் படை	பரிசில் துறை	கைக்கிளை	வசை வகை
2	நச்சினார்க்கினியர்	பாடாண் பொருட் பகுதி	வெட்சி	பொது வியல்	வஞ்சி	உழிஞை	தும்பை	வாகை	காஞ்சி
3	சோமசுந்தர பாரதி	கொடுப்போ ரேத்தலும் கொடார்ப் பழித்தலும்	இயன் மொழி	கடைநிலை	கண்படை நிலை	வேள்வி நிலை	விளக்கு நிலை	செவியறி வுறூஉ	புறநிலை வாழ்த்து
4	புலவர் குழந்தை	வெட்சி	வஞ்சி	உழிஞை	தும்பை	வாகை	காஞ்சி	தேவர்	மக்கள்
5	அறவாணன்	வெட்சி	வஞ்சி	உழிஞை	தும்பை	வாகை	காஞ்சி	கைக்கிளை	பெருந்திணை

பெண்டிர், ஆடவரினும் கொடூரமாக இருந்தனர்.' கரா கிர்கிசு (Kara - Kirghiz) என்ற பழங்குடிப் பெண்டிர், ஆடவர்க்கு இணையாகப் பொருவர்; அவரினும் கொடியவர்; எத்தா (Edda) என்ப வர்தம் வீரஊழிப் பாடல்கள், பெண் ஆர்வத்தைப் பேரளவு காட்டும்: வீறுமிக்க உரை பலவற்றைப் பெண்டிர் நிகழ்த்துவதைப் புலப்படுத்தும்.[261] இவற்றை ஒருங்கு வைத்து நினைக்க, இத்துறை தாய்மார்தம் மறக்குணத்தைப் புலப்படுத்தும் ஒன்று என்பதை அறியலாம். நச்சர் உரை வழு உடையதன்று என்பதையும் உணரலாம்.

பாடாண் திணை

'நாடுங்காலை நாலிரண்டு உடைத்தே (78)' ஒருவனை வியந்து பாராட்டுவதே பாடாண். அது கைக்கிளைத் திணையின் புறனும். அஃது எட்டு வகைப்படும். தொல்காப்பியர் தொகை எண்களாகக் கிளந்த பகுதிகள் எல்லாம், உரை வேற்றுமை முளைக்கும் தடங்கள். 'நாலிரண்டு' என்று தொல்காப்பியர் கூறியதை வேறு வேறு வகையில் விளக்கினர் உரைகாரர். (பார்க்க அட்டவணை 29)

இளம் கூறுவன, பாடாண் திணைக்குள் சிதறிக் கிடப்பன வற்றுள் சிலவற்றைத் திரட்டிக் கூறுதல் போன்று அமைந்துள்ளன. அவர் கூறியன அல்லாதனவும், பாடாண் திணைக்குள் பிரிவுகளாகக் கிடக்கின்றன. அதனை எஞ்சிய நூற்பாக்கள் தெளிவுறுத்தும். தொல்காப்பியர் இங்கே கூறுவது பாடாண்திணை எட்டு அடிப் படையில் பாகுபட்டுக் கிடப்பதையே ஆம். இப் பார்வையில், நச்சர். காட்டும் பாடாண் பொருட்பகுதி, பொதுவியல் என்பன அடங்கா. பாரதி கூறியது பொருத்தமாக அமையினும், கொடுப் போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்' என்ற நூற்பாவின் இறுதியில், வாயுறை வாழ்த்து செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து, கைக்கிளை வகை என்ற நான்கும், தனித்துப் பிரித்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந் நான்கையும் முன் ஆறனுள் சேர்க்கும் போது எண்ணிக்கை பத்து ஆகிவிடுகிறது. ஆகவே அவர் கருத்துப் பொருந்துமாறில்லை. குழந்தை வெட்சி முதலாகக் காட்டுவது பொருந்துவதே. அவற்றின் பின்னர், தேவரையும், மக்களையும் காட்டுவது பொருத்தமாக இல்லை. அவ்விருவரும், வெட்சி முதலான ஏனைய திணைகளுள்ளேயே அடங்குவர். ஆதலின் அவர்களைப் பிரித்தல் பொருத்தம் இன்று.

முடிவாக, வெட்சிப் பாடாண், வஞ்சிப் பாடாண், உழிஞைப் பாடாண் தும்பைப் பாடாண், கைக்கிளைப் பாடாண், பெருந் திணைப் பாடாண், என்ற எட்டைக் கொள்ளுதலே மிகப் பொருந்தி நிற்கிறது. இவ்வெட்டனுள், பாடாண் திணை உட்பிரிவுகளை

எல்லாம் அடக்கிவிட முடியும். புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும், இக்கருத்தில் இல்லாவிடினும், இவ்வெட்டையும் பாடாண் திணைக் கூறுகளாக ஒரு சேர நினைத்துள்ளார்.[262] இதனை அடுத்து வரும் நூற்பாவும், 'நாலிரண்டு உடைத்தே' என்பதை விரித்துரைப்பதாகவே அமைகிறது. அந்நூற்பாவிற் குரிய பொருளும் இந்நூற்பாவில் விரிக்கப்பட்டவையே எனக் கொள்ளின் தொல்காப்பியர்தம் கருத்தோட்டம் புலப்படும்.

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண் டுடைத்தே'
அவைதாம்[263]
'அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப'

என இரு நூற்பாக்களையும் ஒன்றுடன் ஒன்றைச் சார்த்திப் பொருள் உணர்க.

அமரர்கண் முடியும் அறுவகை (79)

அமரர்கண் முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவர் ஆற்றுப்படை, புகழ்தல், பரவல் என்ற ஆறும் கடவுட் புகழ்ச்சியின்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல், காமப் பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இரு வகையானும் ஒருவனைப் புகழ்தலால், பாடாண் பாட்டாயிற்று என்பர் இளம். கொடிநிலை முதலிய ஆறும் கடவுட் புகழ்ச்சியின்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வரும் காமப்பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வரும் என்பது அவர்தம் கருத்து.

பிறப்பு வகையான் அன்றிச் சிறப்பு வகையால் தேவர்கண்ணே வந்து முடிதல் உடையவாகிய அறுமுறை வாழ்த்தின்கண்ணும், அத்தேவரிடத்தே உயர்ச்சி நீங்கிய பொருள்களே வேண்டும் குறிப்புப் பொருந்தின பகுதிக் கண்ணும், மேற் பாடாண் பகுதி எனப் பகுத்து வாங்கிக் கொண்ட ஒன்றனுள் தேவரும் மக்களும் எனப் பகுத்த இரண்டனுள் தேவர்க்கு உரித்தாம் பகுதி எல்லாம் தொக்கு ஒருங்கு வரும் என்பர் நச்சர்.

போர் மறவர்பாற் சென்று அமைவனவாக முன் இவ்வியலில் விரித்து விளக்கிய வெட்சி முதல் காஞ்சி ஈறான புறத்திணைவகை ஆறினும், குற்றமற்ற அகப்பகுதியில் அன்பளைந்த காதல் திணை வகையினும், அவ்வெழு வகைத் திணைகளுள் இயல்பாக இதற்கேற்

புடைய ஒவ்வொன்றின் கூறே பாடாணுக அமையும் என்று கூறுவர் பாரதி.

உயர்ந்தோர் ஆகிய வான், நீத்தார், அறம், ஆன், அரசன், உலகு என்னும் ஆறையும் வாழ்த்துதலும் குற்றம் நீர்ந்த புணர்ச்சி வேட்கையைப் பொருந்திய வகையினும் தேவர் மக்கள் என்னும் இரு பகுதியுள் தேவர்ப்பகுதி எல்லாம் அடங்கும் என்பர் குழந்தை.

'சான்றோர், புலவர், வேந்தர், ஆனிரை, மழை, உலகு' என்ற ஆறினைக் கூறுவர் இளவழகனர்.[264] தொகை எண்களை விரிப் பதில் கருத்து வேறுபாடு எழுவது தொல்காப்பிய உரைநூற் போக்கு. ஈண்டும் 'அறுவகை' என்ற தொகையை விரிப்பதிலேயே உரைகாரர் ஒவ்வொருவரும் வேறுபட்டனர்.

இளம்., கொடிநிலை, கந்தழி முதலான ஆறினைக் கூறக் காரணம், புறப்பொருள் வெண்பாமாலை போலும். அதன்கண் பாடாண் படலத்துள்,

> 'அமரர்கண் முடியும் அறுவகை ஆகிய
> கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால்
> புலவரை அவர்வயின் புகழ்ந்தாற்றுப் படுத்தல்
> புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர்ப் பணிதல்
> நிகழ்ந்த காமப் பகுதியில் தோன்றிய
> கைக்கிளை வகையும் பெருந்திணை வகையும்'

எனவரும் பகுதி, இளம்பூரணத்துடன் ஒத்திருத்தல் காண்க.

பாடாண் திணை மற்றைய திணைகளைப் போலச் சார்பற்ற தனித்திணை அன்று. வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை. காஞ்சி என்ற ஆறு திணைகளைச் சார்ந்து வருவது. அவ்வத் திணைக் குரியாரைப் பாராட்டுவது பாடாண். 'கொற்ற வள்ளை' என்ற பாடாணை விளக்கும்போது, இளம்., துறை கூறுதல் கருத்தாயின் வஞ்சியாம்; புகழ்தற் கருத்தாயின் பாடாணும்' என்று குறித்தலைக் கருதுக. எனவே, வெட்சிப் பாடாண், வஞ்சிப் பாடாண் என்று முறையே ஆறு திணை மேல் புகழ்ந்து வருதலை அறுவகையாகக் கொள்ளலே முறை.

செந்துறை வண்ணப் பகுதி (80)

பல பிற திணைப்பகுதிகள் பாடாணுகப் பயிலுமிடத்து அத னதன் கூறுபட நிற்கும். வாழ்த்தலும், புகழ்தலும் கூறும்இடத்தும் பண்டைச் சான்றோர் செந்துறை வழக்குச் சுட்டும் பிற இடத்தும் இயற்பாக்களே அன்றி இசை வகை வண்ணக் கூறுகளும் விலக்கப்

படா. இளம்., பாரதி, ஆகிய இருவரும் இக்கருத்தினரே. நச்சர் இக் கருத்தினின்றும் மாறுபடுவர். குழந்தை, நச்சினார்க்கினியரை வழிமொழிவர்.

நச்சர் வண்ணம் என்பதை இசைப்பகுதியாகக் கூறார்; வருணம் என்பதன் திரிபாகக் கொள்வர். 'செந்துறைக்கண் வருணங்களின் கூறுபாடு நிகழ்ந்தன நீக்கு நிலைமையன்று என்பர். இளம் உரையை மனத்துட் கொண்டு மறுத்தும் மொழிவர். அவர் தம் மறுப்பாவது ;

(1) செய்யுளியலில் பாடல் பற்றியோ, ஆடல் பற்றியோ பாடாண் திணையுள் பேசுவது மயங்கக் கூறலாம்.

(2) பிற ஆறு திணைகளுள் கூறுது, பாடாண் திணையுள் மட்டும் கூறுதற்குக் காரணம் இல்லை.

அகத்திணை இயலில் கலிப்பாவும் பரிபாடலும் அகத்திணைச் செய்யுட்குரியவை என்று கூறுவது, உவம இயலில் விளக்க வேண்டிய உள்ளுறை உவமத்தை அகத்திணை இயலில் கூறுவது தொல்காப்பியர்க்கு உடன்பாடு எனின், செய்யுளியலுள் கூறும் வண்ணம் தொடர்பான ஒரு செய்தியைப் பாடாண் திணையுள் கூறுவதும் தொல்காப்பியர்க்கு உடன்பாடே.[265] ஆகவே, நச்சர் கூறுவது பொருத்தமற்றது.

கடவுளும் கடவுள் வாழ்த்தும் (81-85)

இருபதாம் நூற்றாண்டில், கடவுள் மறுப்புக் கொள்கையின் செல்வாக்கால் தொல்காப்பிய நூற்பாவிற்குப் பொருள் செய்வதில் வேறுபாடுகள் எழுகின்றன.

1 காமப்பகுதி கடவுளும் வரையார் (81)

2 குழவி மருங்கினும் கிழவதாகும் (82)

3 ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப (83)

4 மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே (84)

5 கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே (85)

என்ற ஐந்து இடங்களும், கடவுள் மறுப்புப் பார்வையால் பொருள் பிறழ்ந்து போகின்றன.

இவை கடவுளைக் குறிப்பன அல்ல எனத் தாமே முடிவிற்கு வந்து விட்டதால் இவை அரசனைக் குறிப்பன என்ற முடிவிற்கு வர வேண்டியவர் ஆயினர். எனவே அரசனை மையமாக வைத்துப்

பொருள் எழுத வேண்டிய கட்டாயம் சூழ்ந்தது. சூழவே அதற்குத் தகுந்தவாறு பொருள் எழுதினர்.

1 ஓர் அரசனை ஒருத்தி விரும்புதலும், ஓர் அரசன் ஒருத்தியை விரும்புதலும் எனக் காமப் பகுதி அரசரிடத்தும் நீக்கார்.

2 ஓர் அரசனை அல்லாது தலைவனைப் பாடச் சென்ற புலவன் அத்தலைவனது பிள்ளையைச் சிறப்பித்துப் பாடும் பிள்ளைத் தமிழாகும்.

3 ஊர் மகளிர் அப்பிள்ளையைக் காதலிப்பதாகப் பாடுதலும் அப்பாடானுக்கு உரியதென்று கூறுவர்.

4 அகத்திணையின் வழியாகிய புறத்திணை இடத்துப் பாட்டுடைத் தலைவரின் இயற்பெயரைச் சுட்டக் கூறலாம் என வைத்தனர்.[266]

5 அரசக் கொடியைப் போற்றுதல் (கொடிநிலை) அவன் அரணழித்தலைப் போற்றுதல் (கந்தழி), அவன் வள்ளன்மையைப் போற்றுதல் (வள்ளி) என்ற மூன்றும் மன்னன் (கடவுள்) வாழ்த்துதல் ஆகும்.[267]

கடவுள் வாழ்த்தா, அரச வாழ்த்தா என்று அறிய பண்டைய கடவுள் வழிபாட்டின் தோற்றுவாயைத் தெளிதல் வேண்டும். அத்தெளிவே தொல்காப்பிய நூற்பாப் பொருளையும் தெளிவுறுத்தும்.

ஆதி மனிதன் மழையாலும், வெயிலாலும், காற்றாலும், அலைக் கழிக்கப்பட்டான்; அச்சுறுத்தப் பட்டான்; பாம்பு முதலான வற்றால் அவன் அச்ச மூட்டப் பட்டான். அச்சம் ஊட்டியவற்றை எல்லாம் அவன் வழி பட்டான்; அவற்றிற்கு வழிபாடு செய்தான். படையல்கள் இட்டான். அவ்வாறு தவறாது செய்தால் அவை தன்னைத் துன்புறுத்தா என்று நம்பினான். இதனைப் போலவே தனக்கு நன்மை செய்பவற்றையும் அவன் போற்றினான். அவ்வாறு போற்றினால்தான் தனக்குத் தொடர்ந்து நன்மை கிடைக்கும் என்று நம்பினான். அச்சமும், அன்புமே ஆதி வழி பாட்டின் அடிப்படைகள், இறந்தோரை வழிபட்டான். அவர்தம் ஆவியைத் தான் வழி பட்டால்தான், அவை தனக்கு வலிமையும் நன்மையையும் நல்கும் என்று நம்பினான்; இன்றேல் தீமை நல்கும் என்று அஞ்சினான். நடுகல் வழிபாடு ஆவி வழிபாட்டின் எதிரொலியே; அனைத்து வழிபாடுகளும் அச்சம் அல்லது அன்பின் வினைச்சல்களே. இத்தகு வழிபாடுகள் உலக மாந்தர் அனைவர்க்கும் பொது. மாந்தர் தெளிந்த நாகரிகம் வருதற்கு முன்னரே அவரிடம் பரவிவிட்ட ஒன்று. பழைய வழிபாட்டின் மரபுகள்,

மனிதன் பண்பட்டுப் பேச, எழுதத் தொடங்கிய பின்னும் தொடர்ந்தன. இதனை மாந்தர் சமுதாயத்தின் பழைய இலக்கியங்கள் எல்லாம் உறுதி செய்கின்றன. மிகப் பழையது எனக் கருதப் பெறும் ஆரியர்தம் இருக்கு வேதம், மழை, வெயில் முதலானவற்றை வருணனைகவும் உருவகித்துத் தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டிய துதிப் பாடல்களின் தொகுதியே. ஓமர் எழுதிய இலியத், ஒடிசி என்பன கிரேக்க மொழியின் பழைமை வாய்ந்த இலக்கியங்கள். வீர ஊழிக் காலத்தில் எழுதப்பட்டவை. அவை இரண்டும் மனித வாழ்வில் கடவுளரின் இடையீடுகளைச் சித்தரிக்கின்றன. எகிப்தியர்தம் பழைய நூல், 'படாக் கோட்டப்' (Ptach Hotep) இதன் காலம் கி. மு. 3000க்கு முன் என்பர். இதனை இறந்தவர்தம் நூல் (The Book of the dead) என அழைப்பர். இந்நூலின் பகுதிகளை, இறந்தவர் சடலத்துடன் சேர்த்துப் புதைப்பர். ஏனெனில், அந்நூல் மறு உலகிற்கு அழைத்துச் செல்லும்; முடிவில் கடவுள் முன்னிலையில் கொண்டு செல்லும் என்று எகிப்தியர் நம்பினர். பாபிலோனியர் கி. மு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே நாகரிக வாழ்வு வாழ்ந்தனர். அவர்தம் பழைய நூல் 'தியமத்' என்ற தாயைக் குறிந்து எழுதப்பட்ட நூல். அந் நூலில் முழுதும் தேவர்களும் தெய்வங்களும் தோன்றிய நிகழ்ச்சிகள் விளக்கப்பட்டுள்ளன. பாலத்தீனம், கி. மு. விலேயே பெரும்புகழ் பெற்ற நாடு. அந்நாட்டவர்தம் அன்பளிப்பே கிறித்தவ மறையாகிய பைபிள். அது பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்ற இரு பிரிவினது. இரண்டு பிரிவினுள் பழைய ஏற்பாடு மிகப் பழையது. அதற்கும் மூலமான, மிகப் பழைய ஏற்பாடு ஒன்று இருந்ததாகக் கூறுவர். பழைய ஏற்பாடு கடவுளின் புகழ் பாடுவது வெளிப்படை. இரான் கி. மு. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே தோன்மை பெற்றது. அவர்தம் பழைய நூல் 'அவெஸ்தா' என்ற பெயரினது. இந்நூல் தொகுக்கப்பட்ட காலம் கி. மு. 1000 என்பர். இந்நூலின்கண் கடவுள் வழிபாட்டு முறைகள், பேய் பிசாசுகளை ஓட்டுகிற மந்திரங்கள் முதலாயின கூறப்பட்டுள்ளன. சீன நாட்டு மேதை கன்பூசியசு கி.மு. 551 இல், பிறந்தவர். அவர் சீன மக்களால் பெரிதும் போற்றப்படுவர். அவர் கூறும் ஒரு செய்தி இங்கு நினைவுகூரத் தக்கது.

> 'இறந்தவர் தம் ஆவிகளைப் பக்தியோடு போற்றுங்கள் ஆனல் அவற்றினிடமிருந்து வெகு தூரத்தில் நின்று கொள்ளுங்கள். உங்கள் பக்தர்களுடைய ஆவிகளைப் போற்றுங்கள். உங்களுடைய செயல்கள் அனைத்தையும் அவ் ஆவிகள் எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கும்

சாட்சிகளாகக் கருதி நீங்கள் காரியங்களைச் செய்யுங்கள்.[268]

ஆக ஆரிய, எகிப்திய, பாபிலோனிய, பாலஸ்தீன, இரானிய, சீன நாகரிகங்கள் அனைத்தும் மிகப் பழையவை. அவற்றுள், மிகப் பழைய இலக்கியங்கள் தோன்றின. அவற்றுள், ஒன்றேனும், கடவுள், வழிபாடு என்பவற்றினின்று தப்பவில்லை. மாந்தர் நாகரிக வளர்ச்சியில், அவர்தம் பழைய கோட்பாடு கடவுள், ஆவி வழிபாட்டில் பிணைந்திருந்தது. அவ்வாறு பிணைந்திருப்பது இயல்பே. பழைய நாகரிகங்களுள் ஒன்றான தமிழரிடத்தும், அவர்தம் பழைய இலக்கியங்களிடத்தும் கடவுள், ஆவி வழிபாடுகள் இருத்தல் இயல்பே. குறியீட்டுச் சின்ன (Totems) நம்பிக்கைகள் இருத்தலும் இயல்பே. இவ்வடிப்படை உண்மையை மறுத்துவிட்டுத் தற்கால நோக்கில், தொல்காப்பியப் போக்கை அணுகுதல் ஆகாது. தொல்காப்பிய நெஞ்சத்தைத் திறந்து காட்டுதலே நோக்கம். அன்றி, இருபதாம் நூற்றாண்டு நெஞ்சைத் தொல்காப்பியரிடத்துப் புதைத்தல் பொருத்தமன்று.

1 தொல்காப்பிய நூலுள், கடவுள், கடவுள் வாழ்த்து, அமரர், இமையோர், தேவர், வானோர் இமையோர் தேஎம், தெய்வம் என்ற பொதுச் சொற்கள் வந்துள்ளன.[269]

2 சேயோன், மாயோன், வேந்தன், வருணன், கொற்றவை என்ற தெய்வ இயற்பெயர்ச் சொற்கள் ஆளப்பட்டன.[270]

3 உன்னநிலை, பூவைநிலை என்ற குறியீடுகள் இடம் பெற்றுள்ளன.[271]

4 நற்சொல் கேட்டல் (விரிச்சி), நிமித்தங் கோடல் என்பன சுட்டப்பட்டுள்ளன.[272]

5 வேலன் வெறியாட்டு, வள்ளிக்கூத்து என்பன காட்டப்பட்டுள்ளன.[273]

மேலே உள்ள ஐவகைக் குறிப்புகளும் தொல்காப்பியர் கால கடவுள் நம்பிக்கை உணர்வை எடுத்துக் காட்டும். இறை நம்பிக்கை வேண்டுமா வேண்டாவா என்பது வேறு. இறை நம்பிக்கை, அவர் காலத்து இருந்ததா இல்லையா என்பது வேறு. மேற்கண்டவை, அவர் காலத்தில் கடவுள் நம்பிக்கை இருந்தது என்பதைப் பறை சாற்றும்.

கடவுள் வாழ்த்து அவர் பாடவில்லை என்ற ஒரு காரணத்தாலேயே மேற்கண்ட சான்றுகள் பொய்யாகிவிடா. தொல்காப்பியம், அவர் கால நூல்களின் பிழிவு. தொல்காப்பிய நூலுள் கூறப்பட்டன அவர் கால இலக்கியங்களின் உள்ளடக்கம்; அவர்

காலப் புலவர்தம் உள்ளுணர்வு. கடவுள் வாழ்த்து பாடுவது அல்லது பாடாது இருப்பது என்பது அவர்தம் தனிக் கருத்து; வெட்சி, வஞ்சி முதலாயின அவர் தனிக்கருத்துக்கள் அல்ல. ஆய்வு, தொல்காப்பியர்க்குக் கடவுள் வாழ்த்து உடன் பாடா அல்லவா என்பதன்று. தொல்காப்பிய நூலுள் கடவுள் குறிப்பு உண்டா இல்லையா என்பதே. எனவே, கடவுள்வாழ்த்து, தொல்காப்பிய நூலுள் இல்லாமை தொல்காப்பிய நூலுள் கடவுள் கருத்துகள் உள்ளன என்பதற்கு மறுப்பு ஆகாது.

அவையடக்கம், பிற்கால இலக்கிய, இலக்கணங்களுள் இடம் பெற்ற ஓர் உறுப்பு. தொல்காப்பியம் முதலான பண்டைய நூல்களில் இல்லை. அதனால், தொல்காப்பியர் அவைக்கு அடங்காதவர் என்பதா? பிற்கால இலக்கியங்களில், அரச வாழ்த்தும், நாட்டு வாழ்த்தும் இடம் பெற்றுள்ளன. இவை பழைய இலக்கிய முகப்புகளில் இல்லை. அவ்வாறு இல்லாததாலேயே பண்டைய புலவோர், அரசனை வாழ்த்தார், தான் பிறந்த நாட்டினை வாழ்த்தார் என்பதா? கடவுள் வாழ்த்து, தொல்காப்பியர்க்கும், பின் வந்த இலக்கிய, இலக்கணங்களில் முகப்பாக இடம் பெற்றது; அது தொல்காப்பிய நூலுள் இடம் பெறுதது, அக்கால முறை. தொல்காப்பியர்தம் கடவுள் மறுப்பன்று காரணம்.

'காமப் பகுதி கடவுளும் வரையார்' (81) என்பதைத் தொடர்ந்து இரண்டு நூற்பாக்களைக் கூறி, 'மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே' (84) என்ற நூற்பாவை அமைத்தனர் தொல்காப்பியர். காமப்பகுதி கூறும் இடம் (81) குழந்தையைச் சார்த்திக் காதல் பேசும் இடம் (82), ஊரொடு சார்த்திக் காதல் பேசும் இடம் (83) என்ற மூன்றும் அகத்திணை ஒழுக்கம் பேசுவன. அகத்திணை ஆயின், ஒருவர்தம் இயற்பெயர் கூறுதல் ஆகாது.[274] அதனைப்போலவே இங்கும் பெயர் கூறலாகாதா என்ற ஐயம் எழுகிறது. அவ் ஐயம் அகற்றவே 'மெய்ப்பெயரை' இங்குப் போற்றலாம் என்று அமைத்தனர். இவ்வாறு சிறப்பித்துக் கூறுதல் வேண்டுமா? இங்கே பேசப்பட்ட (81-83) நூற்பாக்கள் பாடாண் திணையைச் சேர்ந்தவை. பாடாண் திணை புறத்திணை என்பது வெளிப்படை. புறத்திணை ஆயின், 'மெய்ப்பெயர் கூறுக' என்பது தொல்காப்பியர், முன்பே இட்ட ஆணை.[275] அங்ஙனம் இருக்க, மெய்ப்பெயர் கூறுதல் வேண்டும் என்பது வெளிப்படையாக இருக்க, மீண்டும், தொல்காப்பியர், ''மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே'' என நூற்பா அமைப்பது கூறியது கூறலாகும். அங்ஙனமாயின் இது கூறியது கூறலா? மேலே உள்ளவை (81-83) அரசர்க்காயின், இந்நூற்பா, கூறியது கூறல் என்ற குற்றமாகவே முடியும். அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்

என்ற நால்வர்க்கும் காதல் பொது. காதலி அரசர் மேல் ஏற்றுவது புதுமை அன்று. காதலிக் கடவுளர் மேல் ஏற்றுவதே புதுமை. இந்நூற்பாக்கள், காமத்தைக் கடவுளர் மேல் ஏற்றிக் கூறவே, கடவுளர் மெய்ப்பெயர் சுட்டலாமா வேண்டாவா என்ற ஐயம் எழும். எழவே, 'மெய்பெயர் சுட்டுக' என்று நூற்பா யாத்தனர் தொல் காப்பியர். இவ்வாறு கூறின், இந்நூற்பா வேறொரு புதுப்பயனை நல்குகிறது. நல்கவே கூறியது கூறல் என்ற குற்றம் அற்றதாகிறது.[276]

எனவே, மாந்தரியலின் தோற்றம், உலகப் பழைய இலக்கியங்களில் கடவுளர் வழிபாடு அமைந்துள்ளமை, நூற்பா அமைவு என்ற மூன்றையும் அடித்தளங்களாக வைத்து நோக்குகிறபோது, இவ்விடங்களில், கடவுளை வைத்துப் பொருள் உரைப்பதே பொருத்தம்.

கொடிநிலை, கந்தழி வள்ளி என்பவற்றை அரசனது கொடியைப் போற்றுதல், அரசன், பகைவர் கோட்டையை அழித்தலைப் பாராட்டுதல், அரசனது கொடையைப் பாராட்டுதல் எனப் பொருளுரை செய்வர். அரசனை அடிப்படையாகக் கொள்ளுதல் தவறு என்பது மேலே விளக்கப்பட்டது. அரசனை மையமாக வைத்துக் கூறும் சொற்பொருளும் பிழையுடையனவே.

வள்ளி என்பதை அரச வள்ளன்மை என்பர். அரசனின் கொடையுள்ளம் புகழப்பட்ட பாடாண் என்பர். அரசனின் கொடைத்திறம், (பாடாண் திணை) இருபத்தொன்பதாம் நூற்பாவில், 'கொடுப்போர் ஏத்தல்' என முதல் துறையாகக் குறிக்கப்படும். எனவே, இருபத்தேழாம் நூற்பாவிலும் 'கொடையைக்' கூறினர் எனல் பொருத்தம் இன்று.

கந்தழி என்பதை அரண் அழித்தல் என்பர். அரணை முற்றுதலும் அழித்தலும் உழிஞைத் திணையாம் (8). அகத்தரசனை அழித்தது கூறும் 'உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு' (68-2) உழிஞைத் திணையில் இரண்டாம் வகையாகப் போற்றப்படும். இதுவே பாடாண் திணையாகப் புகழ்தற் கருத்தில் 'மன்எயில் அழித்த மண்ணு மங்கலமாகப்' (பாடாண் திணை 30) பாடாண் திணையில் சிறப்பிக்கப்படும் :

கொடி அரசனோடு சார்த்தி ஒரே ஓர் இடத்தில் மட்டும் தொல் காப்பியத்தில் குறிக்கப்படும்.[277] குடை நாட்கோள், குடை நிலை, குடை மங்கலம் குறிக்கப்பட்ட அளவிற்குக் கொடிநிலை குறிக்கப்படாமை நினைதற்குரியது. தொல்காப்பியர் காலத்தில் குடை, வாள், போன்றன பெற்ற அளவு தலைமை, கொடிக்கு

இல்லை போலும். சங்க இலக்கியத்துள், கொடி அரசனுடன் மட்டு மின்றி, கடவுளர் கோயிலுடன் இணைத்து நினைக்கப் பட்டமை எண்ணத் தக்கது.[278]

கொடி, களத்தில் கொண்டு செல்லுதல் ஒரு குறியீடே - அடையாளமே; எனினும் பண்டு, அதுவே ஒரு போர்க் கருவி யாகப் பயன்பட்டிருத்தல் வேண்டும். சேரர்க்கு வில்லே கொடி யாக இருந்தமை எண்ணத் தக்கது. இந்திரனின் கொடி 'வாள்' ஆகும்; போருக்குப் பயன்படுத்தும் கோல்களைக் கொடி வழியாக மறைத்து அணியாக அடையாளமாக எடுத்துச் சென்றனர். களத்தில் கொடிக்கம்பையே அவன் கருவியாக ஒரு காலத்தில் பயன்படுத்தி இருத்தல் வேண்டும். அதனால்தான் கொடியைக் கைப்பற்றிவிட்டால் வெற்றியாகக் கருதப்பட்டது.[279] கொடியில் மருந்து பூசப்பட்டு எடுத்துச் செல்லப்படும் எனினும் களத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டவுடன், களத்தில் வஞ்சமாக வைக்கப்பட் டுள்ள நஞ்சை அது அகற்றும் என்றும் கௌடில்யர் கூறுவர்.[280] கொடியைப் போலவே தனிக்கம்புகளும் கொண்டு செல்லப் பட்டன. நாளடைவில் கம்பு முனைகளில் ஈட்டி முனைகளைச் செருகிக் களத்திற்கு எடுத்துச் சென்றனர். கொடி, கொம்பு இவற்றிற்குப்பின் இரும்பின் பயன் விரிவாக உணரப்பட்ட பிறகு வாள் எடுத்துச் செல்லப்பட்டது. பகைஞர், விலங்குகளிட மிருந்து, கொடிக்கொம்பும், ஈட்டிக் கம்பும், வாளும் அவரைக் காப்பாற்றின. தம்மைக் காப்பாற்றியதை நினைவுகூரும் முகமாக வும், இனியும் அவை காப்பாற்ற வேண்டும் என்று வேண்டும் முக மாகவும் மனிதன் அவற்றை வழிபடத் தொடங்கி இருத்தல் வேண்டும். பிற்கால மன்னர்கள், தம் முரசு, குடை, வாள் இவற் றைப் பூசித்துப் போற்றுவது இவ்வடிப்படையிலேயே வளர்ந்திருத் தல் வேண்டும். வீரவூழிக் காலத்தில் பகைவரிடமிருந்தும் காக்கும் பொருளாகப் பயன் பட்டவையே காலப் போக்கில் வழிபடு பொருள்களாகிவிட்டன.

வடமலையாளத்தில் பார்சினிக்கடவு என்ற ஊரில் முத்தப்பன் என்ற சிறந்த தெய்யாட்டம் நடைபெறுகிறது. இங்கு முத்தப் பன் என்ற வேட்டைத் தெய்வத்திற்குப் பூசை போட மூங்கில் குச்சியைத் தரையில் நிறுத்தி வைத்து அவல், பொரி கள், தேங்காய் வைத்துப் படைப்பர். இந்த மூங்கில் குச்சியைப் பழங் குற்றி வைத்தல் என்பர். இதுவே சங்க காலத்திலும் பிற்காலத்திலும் தமிழில் கந்துநிலை, ஆதீண்டு குற்றி என்று தொழப்பட்டது.[281] இதுவே கந்தழி வழிபாடு.

கொடி மரத்தைக் கோயிலுக்கு முன் நாட்டி வழிபாடு நிகழ்த்துதல் வரலாறு. அதுவே கொடிநிலை எனப்பட்டது.

வாள் நாட்டி வழிபடும் வழக்கமே, 'வள்ளி' என்று ஆயிற்று. 'வள்' என்பதற்குக் கூர்மை என்ப தொரு பொருள். வாள், வேல் என்பன கூர்மையோடு தொடர் புடையவை. வெட்சிப் போர்த் தெய்வமான முருகன் கோயில் முன்னும், கொற்றவை (காளி) கோயில் முன்னும் வேல்நாட்டி வழிபாடு செய்தல் இன்றும் உள்ள நடைமுறை. வெறும் வேலையே முருக தெய்வமாகக் கருதலும் தமிழர் வழக்கு.[282]

எனவே, கொடிநிலை - கொடி மரத்தைப் போற்றுதல், கந்து நிலையைப் போற்றுதல், வேலை வாளை அல்லது வள்ளியைப் போற்றுதல் என்ற கருத்திலேயே மேற்கண்ட மூன்றும் வழங்கி இருத்தல் வேண்டும். இம்மூன்றும் கடவுளோடு, சிறப்பாக முருகக் கடவுளோடு நெருங்கிய தொடர்புடையவை என்பதும் கருதத்தக்கது.

கடவுளர்தம் காமப் பகுதி, குழவி மருங்கு, ஊர், தோற்றம் ஆகியன பற்றிய உரைகளிலும் இடையே வேறுபாடு உள்ளது; இவற்றை அரசன் என்ற அடிப்படையில் அணுகுதலைவிட, கடவுள் என்ற அடிப்படையிலேயே அணுகுதல் வேண்டும் என்பது முன்பே விளக்கப்பட்டது. (பார்க்க அட்டவணை 30)

உரை வேறுபாட்டிற்கு ஒரு காரணம் கடவுள் மறுப்பு. பிறி தொரு காரணம் 81, 82, 83, 84, 85, என்ற ஐந்து நூற்பாக்களையும் துண்டு துண்டாகக் கருதினமை ஆகும். முழுப் பார்வை இன்மை ஆகும். இவ்வைந்து நூற்பாக்களும், கடவுள் பாடாண் என்ற ஓர் ஒத்தைப் பற்றியன ஆகும். அவ்வைந்தனுள் முதல் மூன்றும் ஒரு குழு; நான்காவது தனி; ஐந்தாவது தனி. நான்காவதும் ஐந்தா வதும் முன்பு விளக்கப்பட்டன. முதல் மூன்றையும் ஒரு குழு வாகக் கொண்டு, பொருள் உரைப்பின் நூற்பாக்கள் பொருள் குழப்பம் இன்றி நிரல்பட அமைந்திருத்தல் துலங்கும்.

1 அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் அன்றிக் கடவுளரைச் சார்ந்தும் காமப்பகுதி பாடப்படும்.

2 கடவுளரைக் குழந்தையாக உருவகித்தும் பாடப்படும்.

3 கடவுளர் பிறப்பு, அவர் ஊர் ஆகியனவும் பாடப்படும்.

தொல்காப்பியர் காலத்தில், மறமுக்கள் நிலை கடந்து, தலை மக்கள் நிலை தாண்டி வழிபாட்டு நிலை வந்துற்றது. அதனால் முருகன் முதலியோர்தம் வழிபாடு பெருகி விட்டமையைச் 'சேயோன்' என்ற குறிப்பும் வேலன் வெறியாடல் பற்றிய குறிப்பும், காந்தள், வள்ளிக் கூத்துப் பற்றிய குறிப்புகளும் தெரி

வரிசை எண்	உரையாசிரியர்	காமப்பகுதி	குழவிமருங்கு	ஊர்	தோற்றம்
1	இளம்பூரணர்	கடவுள்மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கம், மானிடப் பெண்டிர் நயந்தபக்கம்	குழவிப்பருவத்தும் காமப்பகுதி	ஊரின்கண் காமப்பகுதி	நிகழ்த்தல் கூடிவந்த
2	நச்சினார்க்கினியர்	கடவுள்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயத்தல், மானிடப்பெண்டிர் நயத்தல்	பிள்ளைத்தமிழ்	ஊரில் பொது மகளிரோடு விளக்கம்(உலா)	
3	புறப்பொருள் வெண்பாமாலை	கடவுட் பக்கத்து மேனோர் பக்கம், மடவரல் மகளிர் மகிழ்ந்த பக்கம்	மாதர் மகிழ்ந்த குழவி	ஊரின்கண் தோன்றிய	காமப் பகுதி
4	சோமசுந்தர பாரதி	கடவுள், கடவுளொடு காதல் கொண்டமை (சீதை-இராமன்) கடவுள், மானிடர் மாட்டுக் காதல் கொண்டமை (முருகன்-வள்ளி)	ஆண் சிறுவன்மீது பெண்காதல்கொள் ளல் பெண் சிறுமி மீது ஆடவன் காதல்கொள்ளல்	தலைமக்கள் ஊர்	தலை மக்கள் பிறப்பு
5	புலவர் குழந்தை	அரசனைப் பெண் ஒருத்தி விரும்புதல், பெண் ஒருத்தியை அரசன் விரும்புதல்	பிள்ளையாட்டு	ஊர்மகளிர் பிள்ளையை விரும்புவதாகப் பாடுதல்	
6	அறவாணன்	கடவுளரைச் சார்ந்தும் காமப்பகுதி பாடப்படும்	கடவுளைக்குழந்தை யாக்கியும் பாடப் படும்	கடவுள் பிறந்த ஊர் எனவும் பாடப்படும்	கடவுள் சிறப்பு என வும்பாடப் படும்

விக்கின்றன. வாடா வள்ளி என்பது குறமகள் வேடமிட்டு ஆடும் கூத்து. வேலன் வெறியாட்டு என்பது வேலேந்தி வேலவன் ஆடும் தெய்வாட்டம். இவை முருகனின் காமப்பகுதியையும், வீரப் பகுதியையும் அறிவிக்கின்றன. முருகன், இளையவன் என்ற கருத்தில் 'சேயோன் மேய மைவரை உலகம்' என்பது தொல் காப்பியரால் ஆளப்படும். இது 'குழவி மருங்கு' என்பதன் நினைவூட்டுதலாகலாம். சேயோனுக்குரிய இடம், குறிஞ்சி எனக் குறிப்பது 'ஊரொடு தோற்றம்' ஆகலாம்.

தொல்காப்பியர்க்கு முன்பே, கிருட்டிணன், இராம அவதாரக் கதைகள் நாடெங்கும் பரவி இருந்தன. கண்ணனின் குழந்த மையும்[283] அவன் மகளிரோடு வம்பு செய்யும் காதற் குறும்பு களும், அவன் பிறப்பு, ஊர் பற்றிய செய்திகளும் தொல்காப்பியர் செவிமடுத்திருக்கலாம். இராமனின் பிறப்பு, சீதை காதல் முதலியன அவர் காலத்தில் வழங்கி இருக்கலாம். ஆக, தன் நாட்டு முருகன், வடபுல நாட்டுக் கண்ணன், இராமன் ஆகியோர் தம் கதைகள், தொல்காப்பிய நூற்பாவிற்குக் கருவாக இருக்க லாம். தமிழில் மிகப் பழைய பாரதம் ஒன்று இருந்து இறந்தது என்ற இலக்கிய வரலாற்றுச் செய்தியையும் புறக்கணித்தற் கில்லை.[284]

குறிப்புகள்

1 அரசு என்பது சமூகமும், சமூகத்திற் மேற்பட்ட சிலவும் ஆகும். பாசுகல்கிசுபர்ட்: சமூக இயலின் அடிப்படைக் கோட்பாடுகள். தமிழ் மொழி பெயர்ப்பு. ஜெ. நாராயணன், 1964, ப. 134.

2 தொல்காப்பிய நூற்பா. செய் 75

3 Blunt A.W.F. The Ancient world 1932. P. 202.

4 தற்கால உலகில் போர் மூளுதற்குரிய காரணங்கள் பற்றிப் பல அறிஞர் ஆராய்ந்து தம் கருத்துகளைக் கூறி யுள்ளனர். பொருளியல், தொழிலியல் இன இயல், சமய இயல், அறிவியல். அரசியல், காரணங்கள் ஆராயப் பட்டுள்ளன.

5 சமூக இயல் அடிப்படைக் கோட்பாடுகள். ப. 64

6 வையாபுரிப் பிள்ளை, எஸ். இலக்கிய உதயம், 1965, 162.

7 செரு வேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர், அகம். 157

8 'பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே' புறம். 89

9 'உட்பகை ஒரு திறம் பட்டெனப் புட்கைக்
கேவான் ஆகலின் சாவேம் யாம்' என
நீங்கா மறவர் வீங்கு தோள் புடைப்ப புறம். 68

10 'நல்லிசை வேட்டம் வேண்டி வெல்போர்ப்
பாசறை அல்லது நீ ஒல்லோயே' புறம்.31

11 மண்டமர் நசையொடு கண்பாட பெருஅது'- முல்லைப் பாட்டு 67.

12 திருக்குறள், படைச் செருக்கு 6.

13 சமூக. அ.கோ. ப. 66.

14 பட்டினப் பாலை, ப. 77-105.

15 நச்சர். புறத்திணை 60, 'மாபெருந் தானையர் மலைந்த பூ' என் பதன் உரை.

16 Ramachandra Dikshitar. V.R. 'War in Ancient India. 1944. P. 14.

17 Achilis resembles his forefathers in killing and as a warrior, killing is his family profession. Kailasapathy, Tamil Heroic poetry P. 249.

18 தொல்காப்பியப் புறத்திணை இயல் நூற்பாக்கள். புறநானூற் றுப் பாக்களுள் ஒரு பகுதி; புறநானூற்றுத்திணை அட்டவணை பார்க்க : அறவாணன் பிஎச்.டி. ஆய்வேடு.

19 சிலப்பதிகாரம் - வஞ்சிக்காண்டம். காட்சிக்காதை 122-125.

20 'எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச் சென்று அடல்குறித்தன்றே'
-தொல். புறத். நச்சர். 62.

21 'வையம் காவலர் வழி மொழிந் தொழுகப்
போகம் வேண்டிப் பொதுச் சொற் பொருஅ
இடம்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப' புறம். 8

22 தொல். புறத். 5.

23 புறம். 45.

24 சதாசிவப் பண்டாரத்தார். பாண்டியர் வரலாறு 1956, ப. 150

25 புறம். 72.

26 புறம். 73.

27 சிலப்பதிகாரம் - வஞ்சிக்காண்டம் -வாழ்த்துக் காதை-உரைப் பாட்டுமடை.

28 மகாபாரதம், ஆதிபர்வம், அத்தி, 109.

29 தொல். புறத். 77.

30 செயராமன், டாக்டர் ந. வையை - வியாழன் வட்டக் கருத் தரங்கு II.

31 'தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென்று
அன்ன இருவகைத்தே வெட்சி - பன்னிரு படலம்'
இளம். மேற்கோள்; புறத். 60.

32 இளம். புறத். 60.

33 தொல். பொருட்படலம். புறத். ப. 33.

34 நச்சர். புறத், ப. 154, 155.

35 நச்சர். தொல். புறத்திணை, ப. 155.

36 Nagaswamy. R. (Ed.) Seminar on Herostones 1974 P. 106.

37 'கல்வெட்டுகள் காட்டும் சுரந்தை' - என்ற அட்டவணையைக் காண்க. பின்வரும் கல்வெட்டுத் தொடர்கள், கரந்தை மற வர், தன்னுறு தொழிலாக மீட்டுப் பட்டமையைக் காட்டும்.

1 பொற்சேந்தியாம் வே சேவசரு தொறுக் கொண்ட ஞான்று மீட்டுப்பட்டான் வேணாட்டு நந்தி. (1971/77)

2 தொறுக் கொண்ட ஞான்று பொன் மோதன்னூர் சேவ கன் அக்கந்தை கோடன் தொறு விடுவித்துப் பட்டான் (1971/88)

3 தொறுக் கொண்ட ஞான்று தொறு இடுவித்துப் பட்டான் பொன்னரம்பனூர் கொல்லகச் சேவகன் காகண்டி. அண்ணுவன். (1971/50)

4 மேற்காவலூர் நாட்டைச் சேர்ந்த அளிவிறிபாடி கடி பகையார் தொறு கொண்ட ஞான்று இடுவித்துப் பட் டாரு உணங்கையார் மகனூர் கோத்தையார் என்பாரின் சேவகர் ஆராகவண்கர் மக்கள் கணிமாதனூர். (1971/36)

5 கோவூர் நாட்டு கோஇல் பட்டர் வந்து தொறுக் கொண்ட ஞான்று மேற்செங்கை மாம்முடைய பார தாயர் மகன் தொறு மீட்டு. (1971/78)

6 மீகொன்றை நாட்டு பாசாற்று பகைமதர் சேவகன் தொறு இடுவித்துப் பட்டான். (1971/90)

7 மீகொன்றை நாட்டு பாசாருள் பகைமதர் சேவகர் தொறு இடுவித்துப்பட்டார் வண்ணக்க க சாத்தனூர். (1971/91)

8 ஆன் தொறுக் கொண்ட ஞான்று பகைமூர் சேவகர் குமார மங்கலவுண்டன் தொறு இடுவித்துப் பட்டான். (1971/37

9 வேட்டுவர் தாழை ஊர் தொறுக் கொண்ட நான்று தாழை ஊருடைய வண்ணக்க கடையனூர் தொறு மீட்டு பட்டார். (1971/74)

10 எருமைத் தொறு எயினுட்டார் கொள்ளப் பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று கோவூர் நாட்டுச் சிற்றிடை யாற்று முதுகொன்றை மூக்கின் மீமலை அயங்கயக் கரை யிற் சென்று முட்டி மலையனூருடைய செம்பர் மகன்னை காரிப் பெருமாண்ணன் உரையில் அம்புமாள எவ்விப் பத்திர முருவி எதிலே சென்று பட்டான். (1971/56)

11 எருமை கொண்ர ஞான்று பூசல் லோடி மேல் வேணுட்டு மணிக்கல வடகுரில் முட்டி எருமைத் தொறு மீட்டு பட் டான் சாகாடச் சிற்றன். (1971/57)

12 ஆந்தை பொன்னி மகன் மொடையன் தொறு மீட்டு பட்டான். (1971/45)

13 ஆனமங்கலம் முடைய கள்ளன் தாழன் மேல் சோவல் லூர் நாட்டு அளவிப்பாடி தொறு மீட்டுப் பட்டான். (1971/39)

14 எருமை தொறு கள்ளர் கொள்ள போகாமைப் பட்டாரி தந்தையும் மகனும். (1971/75)

15 தொக்கைபாடி இரையமன் மகன் கத்தையன் தொகிகை பாடி தொறு மீட்டுப் பட்டான், (1971/79)

16 மாரபாடி மயர் உடையா வார்ந்தன் கிரியுடையானும் மகன் மாரயும் எருமை மீட்டுப் பட்டார். (1971/76)

17 தொறுக் கொள்ள மீட்டுப் பட்டான் நம்மடி யாணம்மன். (1971/70)

38 Kailasapathy, Tamil Heroic Poetry. P. 229-271,

39 செயராமன், டாக்டர் நா.சங்க இலக்கியத்தில் பாடாண்திணை, 1975, ப. 310, 311.

40 வெள்ளைவாரணர், க. தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப் பியம், 1957. ப. 92, 93.

41 தொல்காப்பியரும், புறப்பொருள் வெண்பாமாலையாரும் கூறு வன. துறைகளின் பெயரைக் கூறும் தொல்காப்பியர் அவற்றை விளக்கினரில்லை, புறப்பொருள் வெண்பாமாலையார் அதனை விளக்குவர். அவர்தம் விளக்கமாவது,

பாதீடு : அவர்களைச் சுற்றம் கவர்ந்த கணநிரை
அவரவர் வினவயின் அறிந்து ஈந்தன்று' 13

கொடை : ஈண்டிய நிரை ஒழிவின்றி
வேண்டியோர்க்கு விரும்பி வீசின்று. 15

42 சிலம்பு. வேட்டுவவரி 15.

43 சந்திரமூர்த்தி, மா. நடுகல் உள்ளும் புறமும், நடுகல் கருத்தரங்கு, ப. 31.

44 Fraza. J.G, The Golden lough. Quoted by N. Vanamamala Seminar on Hero stones. P. 46.

45 பு. வெ, கொளு. 1.

46 அகம். 35, 67, 131, 269: புறம். 261, 263, 265.

47 நச்சர். புறத்திணை ப. 152.
(ஆ பெயர்த்துத்) 'தருதல்' என்ற மிகையானே நிரையல்லாத கோடலும் அத்துறைப்பாற் படும். 'வலஞ்சுரி மராஅத்து' (அகம், 83) என்னும் களிற்றி யாணை நிரையுள்,

'கறையடி மடப்பிடி கானத் தலறக்
கறிற்றுள் கன்றெழித்த உவகையர் கலிசிறந்து
கருங்கால் மராஅத்துக் கொழுங் கொம்பு பிளந்து
பெரும்பொளி வெண்ணூர் அழுந்துபடப் பூட்டி
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்
நறவு கொடை நல்இல் புதன் முதல் பிணிக்கும்
கல்லா இளையர் பெருமகன் புல்லி'

என யாணைக் கவர்ந்தவாறு காண்க.

48 செங்கம் நடுகற்கள், 1971/59, 1971/56, 1971/57, 1971/75, 1971/76.

49 தமிழ் நாடு தொல் பொருளாய்வுத் துறை — தொடர் எண் 1971/73.

50 வெள்ளை வாரணம், க. தொல்காப்பியம், ப. 93.

51 பெரும்பாணாற்றுப்படை 148 — 154.

52 புறம்- 9

53 சிலம்பு, வஞ்சினமாலை 53

54 அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும், தொல். புறத். 16

55 தேவாரம் சம்பந்தர். பதிகம் 312.

56 இளம். பொருள், 27, 28

57 நச்சர். புறத். ப. 212

58 நாகசாமி, இரா. யாவரும் கேளிர், 17-19

59 புறநானூறு 312

60 'ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்' புறம். 9

61 All early raids were chiefly for cattle. There are a large number of hymns in the Atharva Veda praying for the protection of cows and cattle. In the 13th hymn of Book

xix there are references to cow stalls and Kine - winning chariets (5 and 7. see also book. II - 26; IV - 21; VI.59) From this references and form that in book VI 673 we may conclude that cattle lifting was practised on an extensive scale in the vedie age. V. R. R. Dikshithar war in Ancient India P. 15.

62 தொல்காப்பியம். புறத் 29

63 மணிமேகலை காதை 13.

64 Virat Parva. chapter. XXXII f. Mahabaratham

65 From the point of Reverence and Utility the cow was looked upon as the most sacred animal but from the point of grace, vigour, majesty, speed etc; horse was held in high esteem by the Aryan in Vedic Age.

Jogiraj Basu. India of the Age of the Brahmanas 1969. P 255.

Of all the animals cow is the sacred to the Hindu. Infact cow is believed to be a porsonification of all the Gods of the Panthoen and of the centre of Pilgrimage. The cow is held in great honour in heaven, and the highest heaven of Vishnu 'Goloka' is named after her. The Cow and the Brahman were created by Brahma on the same day, and are equally sacred. Hence the Killing of cow is a sin as heinous as Brahmanicide. Thomas. P. Hindu Religion Customs and manners. 1956. P. 34

66 செங்கம் நடுகற்கள், ப. 4

67 பதிற்றுப்பத்து, 13-1

68 பிங்கல நிகண்டு, மரப்பெயர் 169, 170, 171

69 அகம். 35. மலைபடுகடாம் 217, 414, பொருநராற்றுப்படை 103, 'ஆடு என்ற பொருளில், பசு என்ற பொருளில் நற்றிணை 192, சீவக சிந்தாமணி, கோவிந்தை – 69, பெருங்கதை, உஞ்சை விழாக் கொண்டது 215.

70 வேங்கடசாமி, மயிலை. சீனி. 'தொறு' என்னும் சொல்லின் வரலாறு, இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்க நிகழ்ச்சி, ப. 220

71 திருக்குறள், 400

72 அகத்தியலிங்கம், ச. பதிப்பு, தமிழகப் பழங்குடி மக்கள், ப, 20, 51

73 தோடர்கள் அரைகுறையாக மட்டுப்படுத்திய எருமைகளை வீட்டு விலங்குகளாக வைத்திருப்பர். அவற்றின் பால், முத

லான பொருள்களைச் சார்ந்தே வாழ்கின்றனர். தோடர் களின் செல்வம் அவர்கள் வைத்திருக்கும் எருமைகளின் எண்ணிக்கையைக் கொண்டே கருதப்படுகிறது. வேல்ஸ் இளவரசர் ஒருமுறை இங்கே வந்தபோழ்து பைபிளை அவர் களுக்குச் சொல்லும் பாதிரியார் ஒருவர் பைபிளைப் படங் களின் — சித்திரங்கள் மூலமாகவும் விளக்குவதுண்டு.

ஒருநாள் பிற்பகல் வேளை தோடர்கள் தத்தம் குடிசைகளை விட்டு வெளி வர மறுத்து விட்டனர். இப்பாதிரியார், அவர்கள் நகைச்சுவையை விரும்புவதாக எண்ணி வேல்ஸ் இளவரசரின் ஓவியத்தைக் காட்டி அவரது வருகைக்கான காரணத்தை அவர்களுக்கு விளக்கிக் கவர நினைத்து அவரு டைய செல்வத்தைப் பற்றி விளக்கினர். இளவரசர் மிகப் பெரும் செல்வந்தர். 200 பேர் அவருடன் வந்திருக்கின்றனர் என்று மிகவும் பெருமையாகக் கூறிக்கொண்டு சென்றார். உடனே ஒரு முதிய தோடர் குறுக்கிட்டு, 'இருக்கும்! இருக்கும்! ஆனால் எத்தனை எருமை மாடுகளை அவர் தம்முடன் கொண்டு வந்திருக்கிறார்?' என்று கேட்டாரே பார்க்கலாம்!

Thurston Caste — தர்ஸ்டன், தமிழ் மொழி பெயர்ப்பு. ஆய்வாளனுடையது. ப. 117

74 அகத்தியலிங்கம், டாக்டர் ச. பதிப்பு, சு. சக்திவேல், தமிழகப் பழங்குடி மக்கள், ப. 61, ப. 55

75 சுப்பையா, கோ. கோத்தர்கள், தமிழகப் பழங்குடி மக்கள் ப. 20.

76 அகம். 73, புறம். 273, 303.

77 அகம். 72.

78 அகம். 36, 115, 253

79 அகம். 36

80 அகம். 253

81 அறவாணன், க. ப., புரட்சிப் பொறிகள், ப. 61

82 இளம், பொருள். மருதக் கருப்பொருள், 20

83 'பாண்டு' (Bantu) என்பவர் தென்ஆப்பிரிக்கப் பழங்குடியினர். இவர்தம் செல்வம் ஆகக் கருதுவது கால்நடையையே. கால் நடை, பணத்தின் இடத்தில் பயன்படுத்தப்படுகிறது. தலை வனுக்குத் தரப்படும் கப்பமாக, நீதி மன்றங்களில் செலுத்தப் படும் தண்டமாகத் திருமணத்தில் பெண் பரிசமாக கால் நடைகளே செலுத்தப்படுகின்றன. இத்தகு வழக்கம் கிழக்கு ஆப்பிரிக்கப் பழங்குடியினரான அம்பா (Amba) அக்கோலி, (Acholi), டாமா (Dama), கண்டா (Ganda) இமா (Hima)

காரமோசா (Karmoja) போன்றேரிடத்தும் உண்டு — செய தேவ் - இரகுபதி. பழங்காலப் பழங்குடிப் பண்பாடு, ப. 38

ஆங்கிலத்தில் செல்வம் என்ற பொருளைத் தருஞ் சொற்களுள் Pecuniary என்ற இலத்தீன் சொல்லினின்று வந்ததாகும். இலத்தீனில் 'Pecu) என்பது வேர்ச் சொல்லாகும், 'Pecu' என்பது மாடுகளையும் (cattle) செல்வத்தையும், உடைமைகளையும் குறிக்கும் பொதுச் சொல்லாகும். இச் சொற் பொருள், தமிழில் 'மாடு' என்ற சொற்பொருளோடு ஒத்து இருத்தல் கருதத்தக்கது.

84 புறநானூற்றில் ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களையும் காப்பாற்றச் சொல்லும் பாடல், வேத ஆரியர்க்காக யாகம் பல செய்து பெயர் பெற்ற பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடுவது என்பதும், அவன் காலத்தில் ஆன் முன் நிற்க, பார்ப்பனர் பின்னிருந்த நிலைமை மாறி சிலப்பதிகாரத்தில் பார்பனர் முன் நிற்க, பசு பின் நின்றதைப் பார்க்கலாம்.

85 வெட்சியோடு கரந்தையை மயங்க வைக்கும் நச்சினார்க்கினியர் சோமசுந்தரபாரதி, புறத். ப, 67.

86 'முட்காற் காரை முதுபழ லேர்ப்பத்
தெறிப்ப விளைந்த தீங்கந் தாரம்
நிறுத்த வாய்ந் தலைச்சென் றூண்டு
பச்சூன் தின்று பைந்நிணம் பெருத்த
எச்சில் ஈர்ங்கை விற்புறம் திமிரிப்
புலம்புக் கனனே புல்லணற் காளை
ஒருமுறை உண்ணு அளவைப் பெருநிரை
ஊர்ப்புறம் நிறையத் தருகுவன் யார்க்கும்
தொடுதல் ஓம்புமதி முதுகண் சாடி
ஆதரக் கழுமிய துகளன்
காய்தலும் உண்டக் கள்வெய்யோனே.,
—புறம். 258; வெட்சித்திணை, உண்டாட்டுத் துறை.

87 'உட்குடைச் சீறூர் ஒருமகன் ஆநிரை கொள்ள உற்ற காலை வெட்சி மலர்புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டும் போலும்! வெட்சி மலர்புனைய வெள்வாள் உழத்தியும் வேண்டின் வேற்றூர்க் கட்சியுள் காரி கடிய குரல் இசைத்துக் காட்டும் போலும்., சிலம்பு. வேட்டுவவரி. 13.

88 புறம். 260, வரி. 12

89 எருமைத்தொறு எயினூட்டார் கொள்ளப் பாசாற்றூர் பூசலிடப் பூசல் சென்று. த. நா. தொ. க. 1971/56

90 கரந்தை. புறம். 259 - 61; 263 - 65; 270, 287, 290 -91, 298.

91 'குயில்வாய் அன்ன கூர்முகை அதிரல்
பயிலா தல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகற் கொண்ட புலக்கண் வெப்பர்
ஒன்றிரு முறை இருந்துண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றது
கொள்ளாய் என்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய வறிந்துமாறு செருவில்
பல்லான் இனநிரை தரீஇய வில்லோர்க்
கொடுஞ் சிறைக் குரூஉப்பருந் தார்ப்பத்
தடிந்துமாறு பெயர்ந்த இக்கருங்கை வாளே.
—புறம். வெட்சித்திணை, 269

உண்டாட்டுத் துறை

92 'ஸ்ரீகோவிசைய கம்ப பருமற்கு யாண்டு
மூன்றுவது வயிரமேக வாணகோ வரையர் சேவகன்
மீகுன்றை ஞாட்டு மலையனூர் குடைய செம்பத்
தொண்டன் மகன் காரிப் பெருமான் பாசாற்
றெருமைத் தொறு எயினூட்டார் கொள்ளப்
பாசாற்றூர் பூசலிடப் பூசல் என்று கோவூர்
நாட்டுச் சிற்றிடையாற்று முதுகொன்றை
மூக்கின் மேலை அயங்கயக் கரையில் சென்று
முட்டி மலையனூர் குடைய செம்பர் மகன்னன
காரிப் பெருமான்னன் உரையில் அம்பு மாள எவ்விப்
பத்திரம் உருவு எதிரே சென்று பட்டான்.,

93 வெட்சி நிரை கவர்தல் - பின்வரும் பெரும்போரின் தொடக்கம் என்றற்குப் பிற்காலக் கல்வெட்டுகளிலும் சான்றுகள் கிட்டவில்லை.

Arunachalam. P. Vetchi; or The first stage of war during the Sangam period. proceedings of the IInd International conference seminar of Tamil Studies. Madras. 1968. P. 208. 211

94 தொல். பொருளதிகாரம். 616

95 "இவ்வியலின்பின் 'கடவுள் வாழ்த்தொடு' கண்ணி வரும் துறைகள் எனக் கூறப்படுவன மூன்று. அவற்றுள் முதலது

கொடிநிலை. அஃதொழிந்த மற்றிரண்டும் புறத்திணைத் துறைகளாக முன் வேறு சூத்திரங்களில் விளக்கப் பெற்று உள்ளன. அவற்றோடு அவ்வாறு புறத்திணை எதற்கும் துறையாக யாண்டும் விளக்கவோ சுட்டவோ பெறுத கொடிநிலையை வாளாக் கூட்டி ஒரு பரிசாய் எண்ணுதல் அமைவுடைத்தன்று. புறத்துறைகளாக வேறு சூத்திரங்களில் விளக்கப்படும் இரண்டனொடு பின் சூத்திரத்தில் கொடிநிலை வாளாக்கூட்டிக் கூறப்பெறுதலால், அவை ஒப்பக்கொடிநிலையும் புறத்துறையாம் பரிசு பிறிதோரிடத்தில் சுட்டப் பெறுதல் முறையாகும். அதனாலும், கொடி எடுப்பு போர்த்துவக்கத்தில் நிகழ்வது ஒன்றுதலானும், கொடி நிலையைக் கொற்றவை நிலையோடு வெட்சி வகையாய் இதில் தொல் காப்பியர் கூறினர் எனக் கொள்ளுதலே சிறக்கும். அக் கொடிநிலைப் பாடம், நாளடைவில் ஏடு எழுதுவோரால் குடிநிலையாக மாறி இளம்பூரணர் கண்டிருத்தல் வேண்டும்; அப்பாடம் சிறவாமையால் அதனைப் பொருள் பொருந்தப் போர்க்குரிய துடிநிலையாக்கி நச்சர். பாடம் கொண்டதாகக் கருதற்கு இடனுளது.''

பாரதி, புறத்திணை இயல் உரை, ப. 55

96 'நெடுநெறிக் குதிரைக் கூர்வேல் அஞ்சி
கடுமுனை அலைந்த கொடுவில் ஆடவர்
ஆடுகொள் பூசலின் பாடு சிறந்து எறியும்
பெருந்துடி' —அகம். 372

97 முரசு வேறுகவும், துடி வேறுகவும் வழங்கப்பட்டமையைப் புறம், 369 ஆம் பாடலும், வில்லி பாரதம், கன்னபருவம் 24 ஆம் பாடலும் காட்டுகின்றன.

98 நச்சர். பொருள். 18

99 நம்பியகப் பொருள் 21

100 இளம். பொருள். 20

101 நம்பி அகப்பொருள் 21

102 தொல். பொருள். 62

103 இளம். பொருள். 21 ,ஆறலை கள்வர்' என்பது சங்க இலக்கிய வழக்கு.

104 நச்சர். பொருள். 18.

105 பழங்கால மறவர் கூட்டங்களுள் இத்தகு தெய்வ வழிபாடு இருந்திருக்கிறது. செல்ட்டிக் (Celtic) மக்களிடம், வீரத் தெய்வ வழிபாடு இருந்துள்ளது. போர் வெற்றிக்குப் பின், சிறைப்பட்டோரை வெட்டுவர். குருதி ஆறாக ஓடும்.

இருபது மதுச் சாடிகளில் பிடிக்கும் அளவிற்குக் குருதி பெருகும். கி. பி. 105 இல் உயிர்பலி கொடுத்து வழிபடும் நிகழ்ச்சி ஒன்றை ஒரோசியசு (Orosius) குறிப்பிடுவர். தசீடசு (Tacitus) செர்மானியப் பழங்குடிகளிடம் இத்தகு பழக்கம் இருந்ததாகக் குறிப்பர். தியோடரசு (Diodoras) என்பாரும் எடுத்துரைப்பர்.

106 It was performed at the end of a battle by the visitors. Dr. K. Kailasapathy, Tamil Heroic Poetry P. 242

அசீரியரும் போர்த் தேவதையை வணங்கினர். அவளே ஒரு மறத்தி. படைகளின் தலைவி. அவள் கனவில் தோன்றுவள். இரண்டு அம்பறாத் தூணிகளுடன் தோன்றுவள் அவை இரண்டு பக்கத்திலும் தொங்கும். ஒரு கையில் அம்பும், ஒரு கையில் வாளுமாக இருப்பள். Delaporte L. Mesopotamia. Assyrian civilization. P. 310

107 இளம். நூற்பாக் கொளு. 63

108 பு. வெ. பொதுவியல்; துறை எண்கள் 240, 241, 242, 243, 246 247, 248 - 253.

109 Nearly all the inscriptions record the death of heroes in the course of compaigns for capturing the cattle or rescuing them.

V. S. Subramanyam. An Interesting Hero Stone Inscription from Changam Seminar on Hero Stones P. 12

110 வானமாமலை, நா. நடுகற்களும் நம்பிக்கைகளும், Seminar on Hero - Stones Ed. by R. Nagaswamy P. 52

111 இத்தகைய ஆட்டம், இன்றும் கேரளத்தில் உள்ளது. பார்க்க பி. எல். சாமி, மலையாள நாட்டில் வேலன் ஆட்டம். வ. சுப்பையா பிள்ளை பவள விழா மலர். ப. 153 - 164

112 புலவர் குழந்தை உரை. தொல்காப்பியம்' பொருளதிகாரம். ப. 530.

113 சாமி. பி. எல். மலையாள நாட்டில் வேலன் ஆட்டம், வ. வ. சுப்பையா பிள்ளை பவள விழா மலர் ப. 160.

114 பு. வெ. பாடாண்: துறை எண் 192, இலக்கண விளக்கம் பாடாண் 617.

115 நச்சர். புறத். ப. 155

116 நச்சர். மேற்கோள் பாடல். புறத். ப. 153

117 பாரதி. புறத். ப. 66

118 Tucker, T. G. Life in Ancient Athens P. 179

119 Some day in time to come a traveller sailing his many eared ship over the wine dark sea shall say, "This is the memroial of a warship or who died long age slain in battle by glorious Hector" So shall it be said any my never perish'

— Ibid. IV 87

120 வையாபுரிப் பிள்ளை, எசு. இலக்கிய உதயம். ப. 11.

121 David Roy. The megalithic Culture of the Khasis. 1963 Quoted by Dr. K. Kailasapathy, Tamil heroic poetry p. 236

122 செயதேவ், சி. சே. இரகுபதி, மு,
பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும். ப. 32

123 செயதேவ், சி. சே, இரகுபதி, மு.
பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும், ப, 29

124 தமிழகப் பழங்குடி மக்கள், ப. 44

125 தமிழகப் பழங்குடி மக்கள், ப. 96

126 மணிமேகலை 6 : 66 - 67 ஆசிரியர், கால வரிசையில் கூறுது தம் பார்வையில் சிறப்பு வரிசையில் கூறினதாகக் கருதல் வேண்டும்.

127 தமிழ் நாட்டு வரலாறு, தொல் பழங்காலம், ப. 205

128 சங்க கால நடுகல் 'நெடுநிலை நடுகல்' என்று குறிக்கப்படுகிறது. (அகம். 289) வழியில் இருந்த நடுகல் ஓர் ஆள் போலவே இருந்ததால் அதனை உதைத்தது யானை (அகம். 315), நடுகல் 'யானை' போன்றே பெரிதாக இருந்தது. (ஐங்குறு 352). கொங்குநாட்டுக் குடுமியான் மலையம், பாசூர், பிரவு நகர் ஆகிய இடங்களில் '18' 3½' நடுகற்கள் உள்ளன. இவற்றில் எழுத்தோ, சிற்பமோ இல்லை. கேரள நாட்டுத் திருச்சூர் மாவட்டம் குட்டூர் என்ற இடத்தில் 18 அடி உயர 26 நடு கற்கள் உள்ளன.

129 செயதேவ், சி. சே., இரகுபதி, மு. பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும், ப 39.

130 Vanamamalai, N. Hero Stones and Folk Beliefs. Journal of Tamil Studies vol. II P. 39.

131 கல்லுக்கு முன்னர். மர உரு எடுத்தல் இருந்திருத்தல் கூடும். கற்கோயில்களுக்கு முன், மரக் கோயில்கள் இருந்ததைப் போல, மரத்தைச் செதுக்குதல் முதலான வேலைகள் தொடங்குவதற்கு முன்பு நீரில் ஊற வைப்பர். நீர்ப்படுத்திய மரமே செதுக்கு பணிக்கு எளிதாக இருக்கும். மரம், கல்லான போதும் நீர்ப்படுத்தும் பழக்கம் தொடர்ந்தது போலும்.

132 நாகசாமி, இரா. தமிழகக் கோயிற் கலைகள் ப. 28

133 Veniar Elwin. The Religion of a tribe-chapter on Ancestor worship. Quoted by N. Vanamamalai - Seminar on Hero Stones P 51

134 புறம். 335.

135 இத்துறை விளக்க 'இறுதியில், இதனைப் பிள்ளைத் தன்மையினின்று பெயர்த்தலின் பிள்ளைப் பெயர்ச்சியும் என்ப' என்பர் நச்சர். இரண்டையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவர் ஐயனரிதனார்.

பிள்ளையாட்டு : கூடலர் குடர் மாலை சூட்டி
வேல் திரித்து விரும்பி ஆடின்று.

பிள்ளைப் பெயர்ச்சி: போர்தாங்கிப் புண் விளங்கியோனைத் தார் வேந்தன் தலை அளித்தன்று. — பு. வெ. 30, 33.

136 தொல். பொருள் புறத். ப. 73 — 78; இளவழகனாரும் தம் 'பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை' என்ற நூலில் நச்சர். உரையை மறுத்து மொழிவர். ப. 46.

137 முதல் மூன்றும் பாரதி மறுப்புகள்; நான்காவது இளவழகனார் மறுப்பு.

138 வஞ்சித்திணைப் பாக்கள் புறநானூற்றில், 4, 7, 16, 36, 41, 45, 46, 47, 57, 98, 213, 292 (12 பாக்கள்).

139 " பொதியிற் குன்றத்துக் கற்கால் கொண்டு
முதுநீர்க் காவிரி முன்துறைப் படுதல்
மறத்தகை நெடுவாள் எம்குடிப் பிறந்தோர்க்குச்
சிறப்பொடு வரூஉம் செய்கையே அன்று."
— சிலம்பு. காட்சிக்காதை 122 — 125

140 சிலம்பு. இந்திரவிழவூரெடுத்த காதை, 89—92.

141 பு. வெ. 36

142 Arthur porritt (Ed.) The Cause of War. Introduction

143 சிலம்பு. நீர்ப்படைக் காதை, அடிகள் 25 — 46

144 மே. நூ. அடிகள் 175 — 76

145 ஐவகை மரபின் அரசர் பக்கமும், தொல். புறத். 74

146 Tamil Lexicon vol. V. P. 3173

147 சதாசிவ பண்டாரத்தார். பாண்டியர் வரலாறு, ப. 178. 'காவிதி' என்ற பட்டத்தை மதுரைக் காஞ்சியும் (494—499), 'ஏனாதி' என்ற பட்டத்தைக் கலித்தொகையும் (81 : 17) சுட்டுகின்றன.

148 A veteran of 120 battles, eight times champion in single cambat, with 45 scars on the front of his body and none on his back, he is reported to have been awarded no less than 160 armillae, and 26 Ceronae of which 14 were ceronae civicae (Crowns of oak leaves granted for saving the life a fellow citizen) eight ceronae aureae.....Cowards and Punishments. G. R. Watson.

The Roman Soldier P. 114-116.

149 பு. வெ. 43.

150 நெடுநல்வாடை, வரி. 176 — 188.

151 பாரதி, புறத். ப. 89, 90, தழிஞ்சி : அழிகுநர் புறக்கொடை அயில்வாள் ஓச்சாக் கழிதறு கண்மை காதலித்து உரைத் தன்று. பு. வெ. 55

152 பு. வெ. குறுவஞ்சி 52.

153 திராவிடர்கள் இரும்பால் ஆன கோட்டையைக் கட்டி இருந் தனர். அவற்றை அழிக்க ஆரியர் பெரும்பாடு பட்டனர். முடிவில் அழித்தனர். அழித்தவர்க்குத் தலைமை தாங்கியவன் இந்திரன். திராவிடர் கோட்டைகளை இந்திரன் அழித்த தால், அவனுக்குப் புரந்தரன் (கோட்டைகளை அழித்தவன்) என்றே ஒரு பெயருண்டு.

The oldest literary record of India. viz. the Rgveda also testifies to the pre-historic origin of the art of fortification. There are numerous passages throughout the work which point to the conclusion that the pre-Aryan inhabitants of India (called Dasas or Dasyus) were excellent builders in their days, and had numerous forts and strong-holds in their possession. Thus Sambhars is said to have had ninety (Rv. i. 130, 7) ninety nine (ib. ii. 19, 6)or a hundred ib ii. 14, 6) forts. Sambhra is called a Dasa (ib. vi. 26, 5) He was the formidable fee of the Aryan chief, Divedasa Atithigva. Besides, the Rgveda sometimes refers to the non-Aryans as being in possession of "iron castles" In ii.20,8, for instance, we have; 'When they placed the thunder-belt in his (Indira's) hand, he slow the Dasyus and overthrow their iron castles" Perhaps the epithet iron is used to connots excessive strength.

-Chakravarti P. C. The Art of War in Ancient India P. 127

154 பிற்காலப் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூற்றுத் துறைப் பகுப்பு ஆகியன உரைகாரர்களை ஏழா பன்னிரண்டா என ஆய வைத்துள்ளன. ஏழே என முடிவுரைத்தனர் ஆயினும், ஏழுக்குள் ஏனைய ஐந்தையும் காண முயன்றனர். பார்க்க : இளம்பூரணர் புறத்திணை முன்னுரை. நச்சர். வெட்சி, உழிஞை என உரைப்படுத்தினர். இம் முயற்சியால், மூல நூலாசிரியர்தம் நோக்கைப் புரிந்து கொள்வது சிக்கலாகி விட்டது.

155 பு. வெ. குற்றுழிஞை. 107.

156 A veteran of 120 battles, eight times champion in single combat, with forty five scars on the front of his body and none on his back, he is reported to have been awarded no less than eighteen hastae purse, twenty-five phalare, 83 torques, more than 160 armillae, and twenty-six cornae, of which fourteen were coronse civiae (crowns of oak leaves greated for saving the life of a fellow-citizen) eight coronae aureae, three coronae nurales, and one the covoted corona obsidionalis or corona graminea, the highest decoration for valour, a wreath of grass awarded to the deliverer of a besieged army.

Watson. G. R. The Roman Soldier P. 116

157 குடைநாட் கோள் (96) வாள் நாட்கோள் (97) என்பவற்றைத் தொல்காப்பியர் போல் உழிஞையில் கூறும் ஐயனாரிதனார், வஞ்சியிலும், குடை நிலை (38), வாள் நிலை (39) என்பவற்றைப் போற்றுவர். இளங்கோவும், தம் சிலம்பில், வஞ்சியை ஒட்டி, குடை, வாள் நாட்கோளைப் பேசுவர்.

மறமிகு வாளும் மாலை வெண்குடையும்
புறநிலைக் கோட்டப் புரிசையிற் புகுத்திப்
புரைதீர் வஞ்சி போந்தையிற் றொடுப்போன்
— சிலம்பு, கால்கோள். 44 — 46

158 புலவர் குழந்தை உரை. ப. 467.

159 பு. வெ. 38, 39, 96, 97;

160 தொல். புறத். 63

161 சிலம்பு. இந்திரவிழவு ரெடுத்த காதை, அடி. 90 — 92

162 மே. நூ. — கால்கோட் காதை 44 — 46

163 வில்லி பாரதம், படை எழுச்சி சருக்கம் 25

164 மே. நூ. 27

165 Harsacarthra tr. by Cowell and Thomas P. 197

166 Quoted by Prof. P.C. Chakravarthi. in his book 'The Art of War in Ancient India P.96. The same story is available in

different names and context in Tamil Ref: Periyapuranam, Koocinkar Naayanar puranam.

167 Delaporte, L. Mesopotamia - The Babylonian and Assyrian Civilization P. 272, 273.

168 புறம். 272

169 சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, ப. 270

170 புறம். 40

171 சிலம்பு. 28-169.

172 Delaporte, L. Mesopotamia P. 280

173 புறம். 44.

173. அ., பு.வெ. 139; வெயர் பொடிப்பச் சினங்கடைஇப்
பெயர் படைக்குப் பின் நின்றன்று;
-இலக்கண விளக்கம், ப. 167.

174 பு.வெ. 140.

175 பாரதி, புறத். ப. 124.

176 பாரதி, புறத். ப. 126-132, குழந்தை, பொருள் உரை. ப. 483.

177 அர்த்த சாத்திரம், அதிகாரம் 3, அத்தியாயம், 70.

178 இராமகிருஷ்ணன், இ.ப. தமிழரும், ப. 154.

179. மே.நூ. ப. 162.

180 அறவாணன், க.ப. சைனரின் தமிழ் இலக்கண நன்கொடை ப. 5-8.

181 Mahadevan, I. Seminar on Inscriptions P. 57-73,

182 K. K. Pillai, Journal of the Academy of Tamil Culture P. 161. Pl. refer F, N. 411.

183 J. Muir, The Origin of Castes in the Vedic Ages Chapter. IV Early contexts between the Bramanas and kshatriyan. P. 296

184 வடசொல் :
வடஎழுத்து :
மறையோர் ; களவு 1.4.
மறை. 1. பாயிரம் 10, பிறப்பு, 20.5,
செய். 158-5, 171-2, 178-4, நரம்பின் மறைய - நூல் மரபு 33-2

185 சிலர், தொல்காப்பியர் வடசொற்களை ஆண்டிருப்பதையும், வடநூற் கருத்துகளை மேற்கொண்டிருப்பதையும் எடுத்துக் காட்டுவர். வையாபுரிப்பிள்ளை, தமிழ்ச் சுடர் மணிகள், ப. 50.

186 பார்ப்பார்க்கும் கூற்றுகள் உண்டு. (பொருள். 45), அவை யாவன: நீ பிரியின் தலைவிக்கு வேட்கை மிகும் என்றல், தலை வன் பயணம் ஏதுவாக நிகழ்பவற்றைக் கூறல், தலைவன் எண்ணத்தைத் தலைவிக்குக் கூறல். பாரதி, புறத். ப. 216.

187 இவ்வாய்வாளன் கொள்ளும் பொருள் வேறு.

188 K.K. Pillai, Aryan Influence in Tamilaham during the Sangam Epic—Tamil Culture vol. XII P. 159-160, 283.

189 பதிற்றுப்பத்து, பதிகம் 3.

190 புறம். 166.

191 புறம். 397

192 புறம். 224

193 புறம். 15.

194 புறம். 26.

195 புறம். 99.

196 பதிற்றுப்பத்து 70

197 பதிற்றுப்பத்து 74.

198 புறம். 9

199 War In Ancient India : Dikshitar, V. R. R.,
The Warrior caste, In a country where there were many castes and communities whose occupations were hereditary, the standing army came to consist largely of the members of the heroditary fighting castes, thus maintaining a group solely devoted to the waging of war. This gave rise to the Kshtriya or warrior caste, and the kshtram dharmam came to mean the primary duty of war. To serve the country by participating in war became the svadharma of this warrior community.

No doubt there was compulsory military service; But it was confind to one particular caste and it was not universal.

Dikshitar. V. R. R. War in Ancient India. P. 5,6.

200 அர்த்த சாத்திரம் அதிகாரம் 9, அத்தியாயம். 123

201 A thesis has been put forward by Prof. N. Ghose of the Dacca University in his Indian Literature and Culture Origins, that it was the Vratyas who occupied the ancient Magadha and Anupa Desa and supplied man-power to the Indo-Aryans; that these Vratyas became absorbed into the Aryan fold by the Vratya Stoma ceremony which is,

according to him, a conversion ritual; that those Vratyan formed the warrior caste and fought battles on behalf of the Indo-Aryan that the result of this synthesis of culture was the birth of the Atharva Veda and other later literature glorifying the Kastriyas in particular. The theory is ingenious, but it is not convincing. See also Bhandarkar's, some Aspects of Ancient Indian Culture (Madras University 1940) Lecture IV,

Dikshitar V. R. R. War in Ancient India P. 6

202 'நின்முன்னோர் எல்லாம் பார்ப்பார் நோவலர் செய்யலர்' -புறம். 43

203 இறைஞ்சு பெரும. நின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே - புறம். 6.

204 பதிற்றுப்பத்து 63.

205 புறம். 34.

206 தொல். பொருள். 502.

207 மே. நூ. 637.

208 இராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும் தமிழரும், ப. 165.

209 அகம். 279, முல்லைப் பாட்டு 31-37, மலைபடுகடாம், 326-27.

210 பார்ப்பான் என்ற சொல் 'பிராமணன்' என்பதன் தற்பவம்- இளங்குளம் குஞ்சன் பிள்ளை, பண்டைய கேரளம், ப. 283.

211 புறம். 362

212 பரிபாடல் 9:81-2, சி. சத்திய மூர்த்தி
இரு மரபுகள், இ ப.த. மன்றம், 1973, ப. 150.

213 புறம். 183, ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாட்டு 183

214 இழிசினன், புறம். 82, 287, 289; புலையன்-புறம். 287, 360; புலத்தி - புறம். 257, 311.

215 சிலம்பு. 22; 110, 22:16-108.

216 புறம். 335

217 'மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்.' - திருக்குறள்: 134

218 The existence of the forefold division of society in Iran viz; Athravans, Rathaestars, Vstria Fshouyants and Hauti, corresponding to the four varnas in India, must have been known to the early Aryan speaking colonizers, and functional division of society on similar lines could have been practised.

Majumdar. D. M and Madan, T.N. An Introduction to Social Anthropology P. 226

219 சமூக இயலின் அடிப்படைக் கோட்பாடுகள், ப. 77.

220 மே. நூ. அடிக்குறிப்பு, ப; 461.

221 Muir, J, The Origin of Castes in the Vedic Age. P. 317

222 Vanaparva Chapt XII

223 அறவாணன் பதிப்பு. அவிநயம். ப. 62.

224 'புரிவின்றி யாக்கையேல் போற்றுவ போற்றிப்
பிரிவின்றிப் பட்டாங்கு அறியத் - திரிவின்றி
விண் இவ்வுலகம் விளக்கும் விளைவெல்லாம்
கண்ணி உரைப்பான் கணி. -பு.வெ. வாகை. 20.

225 இலக்கண விளக்கத்தாரும் இப்பாடலையே எடுத்துக் காட்டுவர்.

226 'ஓவத்தன்ன.....
கழைக்கண் நெடுவரை அருளி அடிக்
கான யானை தந்த விறகிற்
கடுந்தெறற் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்துவோனே' -புறம். 251.

227 'கறங்கு வெள்ளருவி ஏற்றலில் நிறம் பெயர்ந்து
'தில்லை அன்ன புல்லென் சடையோடு
அள்ளலைத் தாளி கொய்யு மான். -புறம். 252

228 நச்சர். மேற்கோள். புறத்திணை, ப. 219.

229 பு.வெ. வாகை, 14 இலக்கண விளக்கம், ப. 192.

230 நாகசாமி, இரா. யாவரும் கேளிர், ப. 233.

231 பு.வெ. 8, இலக்கண விளக்கம் (613) வாகைத்திணை, துறை களைப் பார்க்க.

232 புறநானூற்றுத் திணை துறை அட்டவணை பார்க்க.

233 'பருதி சூழ்ந்த இப்பயங்கெழு மாநிலம்
ஒருபகல் எழுவர் எய்தி யற்றே
'வையமும் தவமும் தூக்கின் தவத்துக்
கையவி அனைத்தும் ஆற்றாது: ஆகலின்
கைவிட்டனரே காதலர் அதனால்
விட்டோரை விடாஅள் திருவே
விடாஅதோர் இவள் விடப்பட்டோரே' -புறம். 358.

234 ஔவை துரைசாமிப்பிள்ளை, குறிப்பு, புறம். 358

235 திருவள்ளுவமாலை, 15, 23, கி.வா. ஜகந்நாதன் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, வேதமும் குறளும், ப. 9, 10.

236 The men served for at least twenty-five years, and often for a great deal longer and though many did have children after they had retired, the best years of their lives in that

respect were for behind them. The soldier's answer was obvious. If he could not be married officially he would be married unefficially, The men's intentions, therefore, were working against the official policy.

The local women with whom the soldiers formed more or less permanent associations were usually of perogrine status, atleast in the frontier areas where most of the soldiers were stationed. Many of them formed life long partnerships with their husbands and their marriages became regularized after the husbands retirement from service. The inscriptions on tembstones set up by adsoring husbands naturally make no distinction wives who were legally married, and therefore coniguges in the strict sense and the others, who would be in common usuage focariae. In the same way, the wives make affectionate dedications in honour of their husbands.

Watson' G. R. The Roman soldier. P. 134 135

237 தொல். கற்பியல். 34.

238 தொல். அகத். 30.

239 Hans Licht. Sexual Life in Ancient Greece P. 18 The Greek woman.

240 Ibid P.19 & 20

Where in all literature is the parting of a husband and wife represented with greater depth of feeling than in the famous scene in the Iliad (vi. 392-496), in which Hector takes leave of Andromache ?

"When now he was come to the gate, as he passed through the great city, the Scaean gate, whereby he was minded to go forth to the plain there came running to meet him his boundeous wife, Andremache, daughter of great-hearted Eotion. Eotion that dwelt beneath wooded Placus, in Thebe under Placus, and was lord ever men of Cilicis; for it was his daughter that bronze-harnessed Hector had to wife. She now met him and with her came a handmaid bearing in her bosom the tender boy, a mere baby, the well-loved of Hector, like to a fair star. Him Hector was went to call Scamandrius, but other men Astyanax; for only Hector guarded Ilies. Then Hector smiled, as he glanced at his boy in silence, but And

Romache came close to his side weeping, and clasped his hand and spoke to him, saying; 'Ah, my husband this proves of thine will be thy doom, neither hast thou any pity for thine infant child nor for hapless me that shall soon be thy widow; for soon will the Achaeans all set upon them and slay thee. Ibid 19 20

241 *புறநானூறு* 9

242 "The girls rose at eight O'clock. By half past eight they (there were about fifteen of them) had to be at the estaminet, for the British soldiers were at that hour already arriving in crowds from the neighbouring districts where they were resting. Work lasted till midday, was resumed at one-thirty and continued till eight p.m. The clients came into the estaminet one. by one., made a rapid choice-for drinking was prohibited-before going upstairs' paid the fee to the proprietress, then handed the girls her 'little present' and carried out a quick coitue. The British soldiers, like the Americans, were quite generous, and would easily give 20 or 30 francs all of which belonged to the girl, the proprietress being satisfied with the entry fee. which variod during the War ,from 2½ to 5 francs. At eight p. m. the house closed down. "Sleeping-in" was prohibited. Then the girls had their dinner, after which they could play cards or write letters till ten O'clock. The next day the same happened all over again.

Roy. S. L. War and Immorality P. 13

243 The need for prostitution arises from the fact that many men are either unmarried or away from their wives on journeys. Society therefore set a certain class of women for the satisfaction of these masculine needs, Robert. E. Enger. Bertrand Russels Best.

244 P. 53

The free living woman were generally ex-slaves, freed men; atleast they were not certainly Roman by birth.

Otte Kiefer, Sex in Rome p. 60

245 *பு. வெ. கரந்தை* 5

246 *திருக்குறள், படைச்செருக்கு* 6

247 *இனிவருகின்ற பத்தும் பெண்பாற்கே உரிமையின், அவற்றிற்கும் ஈரைந்து என்பதனைக் கூட்டி முடிக்க. நச்சர். புறத்திணை. ப.* 244.

248 புறம்.74

249 பட்டினப்பாலை, அடி. 220 - 226

250 Watson, G. R. The Roman Soldier P. 126

251 நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து தனிமகள் புலம்பிய முதுபாலை - நச்சர். குறிப்பு, ப. 246

252 பொதுவாக இப்பழக்கம் பல நாடுகளிலும் குறிப்பாக அரச குலத்தில் இருந்திருக்கிறது.

Trapped in a holocarst white-clad earthaginians in 146 B. C. fight to the death against Romans "Carthage must be destroyed" Cate the Elder had repeatedly inged his fellow senators. Rather than surrender, the wife of city's ruler throw herself in the flaming Temple of Eshmum. THE PHONECIANS. National Geographic, August 1974 P. 181

253 புறம். 246

254 புறம். 240

255 இளங் குளம் குஞ்சன் பிள்ளை பண்டைய கேரளம், ப. 42

256 திருக்கோவிலூர்க் கல்வெட்டு

256-A Many of the women also when their husbands die and are placed on the pile to be bunt do burn themselves along with the bodies. And such women as do this have great praise from all.-Nilakanta Sastri K.A.; Foreign Notices of South India, 1972 & 167.

257 Chandra Cakravarti, Sex Life in Ancient India, P. 99

258 Chandra Cakravarti, Sex Life in Ancient India, P. 99

259 கலிங்கத்துப்பரணி, களம் காட்டியது. 481 11- 12

260 நச்சர். மேற்கோள். புறத். ப. 249

261 Quoted by Kailasapathy, K., Tamil Heroic Poetry P. 270,271

262 புறப்பொருள் வெண்பாமாலை, பாடாண் படலம், வரி.21 - 26.

263 ஆய்வாளன் விளக்கம் கருதிச் சேர்த்தது.

264 இளவழகனார். பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை ப. 148

265 விளையாட்டுப் போட்டிகளில் வெல்வோரை இசைபடப் பாடி மகிழ்விப்பர் பழங் கிரேக்கப் பாவலர் பிண்டார் (Pindar) பாடாண் பாடல்களைப் பாடியவர். டாக்டர். தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு. 11. 66.

266 1 — 4 புலவர் குழந்தை கூறுவன.

267 5 பண்டித அ. கி. நாயுடு-தொல்காப்பியர் கண்ட சமுதாயம், ப. 267 - 270

268 வையாபுரிப் பிள்ளை, எஸ். இலக்கிய உதயம், ப. 143

269 கடவுள். பொருள். 81, கடவுள் வாழ்த்து. பொருள். 85, அமரர், பொருள். 79, இமையோர். பொருள். 244, தேவர் - பொருள், 442 வானோர் - பொருள். 144, இமையோர் தேயம் - பொருள். 244, தெய்வம் - சொல், 4, 58, பொருள். 20, 39, 50, 113, 148, 218, 415.

270 சேயோன் முதல் வருணன் வரை பொருள். 5, கொற்றவை, பொருள். 62.

271 உன்னநிலை, பூவை நிலை

272 விரிச்சி எனும் துறை.

273 வேலன், பொருள். 63; வள்ளி. பொருள். 85

274 அகத்திணை இயல் 5

275 மே. நூ.

276 இத்தகு சிக்கல் வருவதை எண்ணியே குழந்தை ('மெய்ப் பெயர் மருகின் (84) என்ற நூற்பாவைப் புறத்திணை இயலி லிருந்து அகற்றி, அகத்திணை இயல் இறுதி நூற்பாவாகச் சேர்த்தனர் போலும். அத்தகு இடப்பெயர்ச்சி யாரிடத்தும் இல்லாமையானும், நூற்பாவின், போக்கிற் கியையாமை யானும் அதனைக் கொள்ளுதற்கு இல்லை.

277 பீர்க்கொடி - புள்ளி - 68 - 1, 70 - 1, 91 - 2, பனைக் கொடி - எழுத்து - 286, அரசர் கொடி - பொருள் 616.

278 கொடி - கடவுளைச் சார்ந்து சங்க இலக்கியத்தில் வரும் இடங்கள்.

279 Dikshithar. The War in Ancient India. P. 374

280 Ibid. P. 372

281 சாமி, பி. எல்., மலையாள நாட்டில் வேலன் ஆட்டம். வ. சுப்பையாபிள்ளை. பவள விழா மலர் ப. 153 - 164

282 We mentioned that the term vel in the Bull tongue originally meant a spear. It is out of this word that the personal term velan was later on coined, and applied to the great here who led the Bulls in the velosuran war, fought in the Cradle. After the great fight the Bulls me know deified and worshipped here. As a further mark of respect they are seen styling themselves as the descendants of that God

and call themselves Velans, which Literally means the sons of Velan. As time rolls on even the term Velan is abbreviated to Vel and is used indifferently to designate the hero God as well as his people. So we have infect two terms namely, Vel and Velan that art used to design to both the hero God as well as his people.

-Chockalingam, V (Origin. I. E. Races) 1935 P. 149 vol.I,

283 நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் பெரியாழ்வார் பாசுரங்கள், கண்ணனின் குறும்புகளே விளக்குவன. அப்பாடல்களின் வளர்ச்சியே பிள்ளைத்தமிழ். நச்சினார்க்கினியர், பிள்ளைத் தமிழோடு குழவி மருங்கை இணைப்பதும் இங்கே நினைக்கத் தகும்.

284 பாரதப் போருக்குத் தமிழ் வேந்தர் பெருஞ்சோறளித்த செய்தி (புறம் 2) காசிபன், கௌதமன், கௌசிகன், வாதுளி, ஆத்திரேயன், கௌணியன், வான்மீகி,பாரதம் பாடிய பெருந் தேவனார் என்பன போன்ற பெயர்கள் சங்க இலக்கியப் புலவர்களின் பெயர்களாக இருப்பதும் நினைக்கத்தக்கது.

நிறைவுரை

8

நிறைவுரை

அகமும் புறமும்

பொருளதிகாரமே தொல்காப்பியத்தின் கருவறை. பிற இரண்டு அதிகாரங்களும் அக்கருவறைக்கு அழைத்துச் செல்லும் வாயில்களே. பொருள் என்பது சொல்லின் பொருள் அன்று. வாழ்வின் பொருள். அகமும்,புறமுமே அன்றைய வாழ்வு; அன்றைய வாழ்வின் பொருள். மாந்தர்தம் காதல் வாழ்வே அகம்; அவர்தம் கடமை வாழ்வே புறம். அன்று கடமை வாழ்வைத் தழுவியே காதல் வாழ்வு அமைந்தது. நாட்டு வாழ்க்கைக்குப் பின்பே வீட்டு வாழ்க்கை நெடுநல் வாடை நெடுஞ்செழியனும், முல்லைப் பாட்டுக் கிளவித் தலைவனும் போர்க் கடமையில் மூழ்கி, காதல் நினைவைத் தவிர்த் தனர். தொல்காப்பியத் தமிழரும், புறத்தை நோக்கியே அகத்தை அமைத்துக் கொண்டனர். தொல்காப்பிய இலக்கணம், தமிழரை நோக்கித் தழைத்த இலக்கியங்களையும் இலக்கணங்களை யும் தழுவி எழுந்தது. அஃது எடுக்கப்பட்ட நிழற்படத்தை வைத்து எடுக்கப்பட்ட நிழற்படம். பண்டைய நாளில் போரும், காதலுமே மாந்தரிடத்துத் தலைமை பெற்றிருந்தன. உலகெங்கும் இவ் விரண்டுமே பண்டு மேலோங்கி இருந்தன. துணைவியை அணைக்க அன்பும், பகைவனை அழிக்க வன்பும் உடையராய் ஆடவர் விளங்கினர்.ஈரமும் வீரமும் ஒரே இடத்தில் இருந்தன. எனவேதான் தொல்காப்பியத் தலைமைப் பொருளும் அகத்திணை இயலாகவும், புறத்திணை இயலாகவும் அமைந்தது. பிறர் இயல்கள் அகத்தையும்,

புறத்தையும் தழுவியவை; அல்லது அக, புற இலக்கியங்களைத் தழுவியவை. இவ்வாய்வும், அக, புறத்திணை இயல்களை ஒட்டியது. உரையாசிரியர்,வேறுபடும் இடங்கள் மட்டும் ஆய்வு செய்யப் பெற்றுள்ளன. பல கருத்துகளின் வலிவு மெலிவுகளை ஆராயும் பொழுது, முன்னோர்க் கருத்து மறுக்கப்பட்டும், சில புதுக்கப்பட்டும், சில புதுவதாக அறியப்பட்டும் ஆங்காங்கு உரைக்கப்பட்டன. அவற்றுள் இவ்வாய்வால் புதுவதாகக் கண்டறியப் பெற்றன மட்டும் ஈண்டுத் தொகுத்துரைக்கப் பெறும்.

தொல்காப்பியர் காலம்

தொல்காப்பியர், சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டவர். பிற்பட்டவர் என்ற கருத்துச் சரி அன்று. இக்கருத்தை வலிவு படுத்தும் புதுச் சான்றுகளாவன.

முருகன் : பொதுநிலத் தெய்வமாதல்

தொல்காப்பியத்துள் சேயோன் (முருகன்) மலைத் தெய்வமாகக் குறிக்கப்படுவன். சங்க காலத்திலோ, முருகன் கடல் நிலத் தெய்வம் ஆயினமையைத் திருச்செந்தூர் முருக வழிபாடு காட்டும். முருகன் முதலான பிற தெய்வங்களும், ஒவ்வொரு நிலத்திற் குரியன என்ற சிறப்புரிமையை இழந்து, எல்லா நிலத்திற்கும் உரியவை என்ற பொதுவுரிமையைச் சங்க காலத்தில் எய்தி விட்டன.

கடவுள் வாழ்த்து - நூல் முகப்பில் இடம் பெறுமை

நூல் முகப்பில் கடவுள் வாழ்த்து இல்லாமை, முன்னை நிலை; கடவுள் வாழ்த்து உள்ளமை பின்னை நிலை. தொல்காப்பியம், கடவுள் வாழ்த்திணைப் பெறுமையும், சங்கத் தொகைநூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலன பெற்றமையும், தொல்காப்பியப் பழமையைத் துலக்கும்.

நடுகல்லில் எழுத்துப் பொறிக்காமை

நடுகல்லில் பெயரும், பீடும் எழுதாமை முன்னைய நிலை. பெயரும் பீடும் எழுதுதல் சங்க கால நிலை. தொல்காப்பியம் எழுதா நடுகல்லைக் குறிக்கும். எனவே, அந்நூல், சங்க இலக்கியத்திற்கும் முந்தையது.

கடற்படை சுட்டப்படாமை

கடல் வணிகப் போக்குவரத்து மட்டும் இருந்த காலம் முற்காலம்; கடற்படை வந்த காலம் பிற்காலம். சங்க இலக்கியம் கடற்படையைக் காட்ட, தொல்காப்பியம் பிற படைகளைச்

சுட்டினும் கடற்படையைச் சுட்டவில்லை. சுட்டாமை, அதன் முன்மையைப் புலப்படுத்தும்.

காவல் மரம் கூறப்படாமை

சங்க காலத்தில் அரசனுடன் சார்த்திக் காவல் மரம் பரக்கப் பேசப்பெறும். அரசனின் உடைமைகளை வருணிக்கும் தொல் காப்பியம், காவல் மரம் பற்றிக் குறிக்காமை அதன் பழைமை யைக் காட்டுவதாம்.

இளவேனிற் பொழுது

தொல்காப்பியர் வேனிலைப் பாலைக்குரிய கொடிய ஒன்றாகக் காட்டுவர். நண்பகலை அதற்குரிய பொழுதாக்குவர். கோடையை அதற்குரிய காலமாக்குவர். சங்க காலத்தாரோ வேனிலை இனிய பொழுதாக்குவர்; அதன் வரவு கண்டு இன்பக் களிகொள்வர். வேனில், வட இந்திய மாந்தர்க்கு இனிய பொழுது; எனவே வசந்தத்தை 'வருக வருக' என வரவேற்பர். தமிழ் இலக்கியத் தில், சமற்கிருதத் தாக்கம் ஏற்பட்ட பின்னரே வசந்தத்தை வேனிலாக்கி, வரவேற்கும் பாங்கும் பெருகியது. வேனிலைக் கொடிய பொழுதாகச் சொல்லும் நிலை பழையது; இனிய பொழு தாக்கிச் சொல்லும் நிலை புதியது. தொல்காப்பியம், வேனிலைக் கொடியதாகக் குறிப்பதால் அது, சங்க இலக்கியத்தினும் பழையது.

எகர ஒகர வரிவடிவு

எகர, ஒகர, மெய் எழுத்துகள் ஒரு காலத்துப் புள்ளி இட்டே எழுதப் பெற்றன. தொல்காப்பியர் காலத்துப் புள்ளி இடப் பெற்றது என்பது அவர்தம் நூற்பாக்களால் தேற்றமாம். பிற் காலத்துப் புள்ளி இடப்படாமலும் எழுதப்பெற்றது. அதனை நன்னூல் தெளிவுறுத்தும். தொல்காப்பியர், புள்ளி இட்டு எழுதப் பெற்ற தமிழிக் கல்வெட்டுகளின் காலத்தைச் சேர்ந்தவர். அக் காலம், சங்க காலத்தின் பிற்பட்ட காலம் அன்று.

தொல்காப்பியர் தென்னை மரத்தைச் சுட்டாமை

தொல்காப்பியர் முப்பத்து நான்கு மரங்களைக் குறிப்பர் ஆனால் அவர் தென்னை மரத்தை எங்கும் சுட்டாமை எண்ணத் தகுந்தது. பிற்கால இலக்கண நூல்களுள் தென்னை மரப்பெயர், புணரியலுள் சுட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியத்துள் சுட்டப் படவில்லை. தென்னை மரமும், தமிழகத்தில் பிறந்து வளர்ந்த மர இனம் அன்று; தெற்கு நாடுகளிலிருந்து கடல்வழி மிதந்து வந்து பயிரான மரம். அம்மரம், தமிழகத்திற்கு வந்து பயன்படு மரமாக மாறுதற்கு முன்பே, தொல்காப்பியர் தோன்றினராதல் வேண்டும்.

வழக்கும் செய்யுளும்

கிரேக்கர், எழுத்து மொழி நோக்கி இலக்கணம் படைத்தனர். ஆரியர் வாய்மொழி நோக்கி இலக்கணம் படைத்தனர். தமிழர் இரண்டையும் நோக்கி இலக்கணம் படைத்தனர். தொல்காப்பியர் இவ்வகையினர்.

பழைமைக்கும் பழைமை

தொல்காப்பியர் கூறினவற்றை முற்றுமாக அவர் காலத்தன என்று கருதற்க. அவர் காலத்திற்கு முன்பிருந்த இலக்கிய, இலக்கணச் செய்திகளையும் அவர் தொகுத்து அளித்தனர். அதனாலேயே 'புலந்தொகுத்தோன்' எனப் பாயிரத்தால் பாராட்டப்பட்டனர்.

தொல்காப்பிய உரை தோன்றக் காரணம்

இலக்கியங்களின் மொழி நடையைவிட இலக்கணங்களின் நூற்பா நடை, மிகுந்த செறிவுடையது. அதனால் இலக்கியங்களை விட இலக்கணங்களுக்கு உரை மிக இன்றியமையாத தாயிற்று. தொல்காப்பிய நூற்பாக்களின் செறிவும், பழமையும் தலைமையும் அந்நூலிற்கு உரை எழுதும் வாய்ப்பை உருவாக்கின. இருபதாம் நூற்றாண்டில், தமிழிற்கு ஏற்பட்ட தலைமை, பிராமணர் அல்லாதார் இயக்கம் ஆகியன, தமிழில் தனிப் பழம்பெரும் நூலான தொல்காப்பியத்தை ஆராயத் தூண்டின.

தொல்காப்பிய உரைகளில் வேறுபாடு தோன்றக் காரணங்கள்

மூல நூலாசிரியர்தம் மயக்கச் சொல்லாட்சிகளும் உரையாசிரியர்தம் நோக்கும் போக்கும், ஏடுபெயர்த்து எழுதுவோர்தம் கவனக் குறைவும் தொல்காப்பிய உரை வேறுபாட்டிற்குக் காரணங்களாம்.

உரைகளில் வேறுபாடு தோன்றுமைக்குக் காரணங்கள்

நூலாசிரியர் ஐயமற விளக்குவதாலும், அவர் சில நூற்பாக்களில் வகை, தொகைப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதாலும், சில நூற்பாக்கள் உரைகாரர் பார்வையில் ஆழ ஆராயப்படாமையாலும் குறிப்பிட்ட சில நூற்பாக்கள், உரை வேறுபாட்டைப் பெறவில்லை.

தொல்காப்பியக் காலக் காதல்

தொல்காப்பியக் காலத்தில் நில உரிமை பெருகி, அரசுரிமை உருவாகி விட்டது. கிழவன் கிழத்தி, தலைவன் தலைவி, முதலான சொற்களும், 'எஞ்சா மண்நசை' என்ற சொற்றொடரும், மூவேந்தரைப் பற்றி அவர் தரும் குறிப்புகளும் தொல்காப்பியர் கால

நிலவுடைமைச் சமுதாயத்தை உணர்த்தும். இத்தகு அரசச் சூழ் நிலையே 'ஐந்திணை' என்ற முறைக்காதல் வளர வாய்ப்பாயிற்று. பாங்கன் பாங்கி, தோழி, செவிலி என்ற தொல்காப்பியக் குறியீடு கள் காதலர் வாழ்வை அரண்மனைச் சார்பாக்கும்.

பெயர் வைப்பிற்கு அடிப்படை—கருப்பொருளே

குறிஞ்சி முதலிய பெயர் வைப்புகள், உரிப்பொருள் அடிப் படையில் அமைந்தன அல்ல. அவை கருப்பொருள் அடிப்படை யில் அமைந்தனவே.

திணைப் பிரிப்பிற்கு அடிப்படை

முதற்பொருள், கருப்பொருள் என்ற இரண்டன் பின்புலத் திலேயே உரிப்பொருள் உருக்கொள்ளும். முன்னிரண்டும் கார ணம்; பின் ஒன்றும் காரியம். சங்கப் பாடல்களுக்கு முதலிரண்டை அடிப்படையாக வைத்தே சான்றோர் திணை வகுத்தனர்.

சிறுபொழுது

சிறுபொழுது ஐந்தே என்பர் சிலர்; ஆறே என்பர் வேறு சிலர். சிறுபொழுது ஆறு என்பதே தொல்காப்பியர் கருத்து.

தொல்காப்பியக் காலத்து அடியோர்

தொல்காப்பியர் கருத்துவழி, அடியோரும் ஏவலரும் இருந் தனர் எனலே நேரிது. பண்டைய உலக வரலாறு, அன்றைய நாளில் இருந்த போர் அடிமையைப் புகலும். தொல்காப்பியம், பண்டைத் தமிழர் தம் வாழ்வியல் நூல். ஆதலின், அன்று அடியோர் இருந்தனர் எனலே முறை. ஆனால் அவ்வடியோர், கிரேக்க, உரோம நாடுகளில் வாழ்ந்த அடிமைகளைப் போல, முற்றும் தாழ்ச் சியுற்று வாழவில்லை.

தொல்காப்பியர் கால இனப்பிரிவு

தொல்காப்பியக் காலம், ஆரிய வரவிற்கும் உறவிற்கும் உட் பட்ட காலமே. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய இனப்பிரிவு, தொழில் அடிப்படையைத் தாண்டித் தொல்காப்பியர் காலத்திலேயே பிறப்பு அடிப்படையை நெருங்கிவிட்டது.

உடன்போக்குப் பிரிவு

உடன்போக்குப் பிரிவை, பண்டைய தமிழிலக்கணம், இலக்கியம் ஆகியன மொழியும். இது முற்காலத் தமிழ் நாட்டின் உண்மைப் பழக்கம் என்பதைத் திராவிடப் பழங்குடிமக்களின் வாழ்வியல்

வற்புறுத்தும். பல திராவிடப் பழங்குடியினரிடம் உடன்போக்கு இன்றும் ஒழுக்கமாகப் பின்பற்றப்படும்.

ஓதற் பிரிவு

ஓதற் பிரிவு - ஆரியர், தம் வடபுல நாட்டிற்கு வேதம் பயிலுதற்காகப் பிரிந்து சென்ற பிரிவைக் குறிப்பதாம்.

கடற் பிரிவு

கடற் பிரிவு பண்டு இருந்தது. ஆனால் அப்பிரிவு இருந்ததற்கான, சான்று சங்கப் பாட்டுகளுள் இல்லை. கடற்பிரிவு, பொருள் வயிற்பிரிவாகவே பண்டு இருந்தது, போர்வயிற் பிரிவாக இல்லை. கலம் இருந்தது; கடல் இருந்தது; கடல் வணிகம் இருந்தது. ஆனால் கடற்படை இல்லை.

பரத்தையர் பிரிவு

பரத்தையர் பிரிவு பெரும்பாலும் பகைவயின் பிரியும் போது அயல் நாட்டில் நிகழ்ந்தது. பகை நாட்டில் இருந்து பிடித்து வந்த மகளிர் சமூகமே பிற்காலத்தில் பரத்தையர் சமூகமாகக் கால் கொண்டது. உரோமிலும், தமிழகத்திலும் இது போன்ற ஒத்த நிலை இருந்தது.

பா மாந்தர் கூற்றுகள்

தலைவன், தலைவி காதல் வாழ்வில், தலைவியர் குடும்பத் தொடர்பே பெருகப் பேசப் பெறும். செவிலி, நற்றாய், தோழி ஆகியோர்தம் பங்கும் பாங்கும் கூற்றுகளாகப் பேசப் பெறும். தலைவன் பக்கம், பாங்கன் ஒருவனே குறிக்கப்படுவன். தலைவன், தலைவி ஆகியோர்தம் தந்தையார் பற்றி இலக்கண உலகில் குறிப்பின்மை வியக்கத் தக்கது.

கைக்கிளை

கைக்கிளை சமுதாயத்தின் தொடக்க நிலையையும், தனிமாந்தரின் இளமைக்கால நிலையையும் காட்டும் வழுப்பட்டகாம நிலைவு. இதனைப் பின் வந்த இலக்கண ஆசிரியர், நெறிப்பட்ட களவுக் காதலின் தொடக்க நிகழ்ச்சிகளாகக் காட்டியது வழு.

பெருந்திணை

கைக்கிளை நிலைவின் கலக்கம்; மென்முறை. பெருந்திணை செயலின் தொடக்கம்; வன்முறை. கைக்கிளை, பெருந்திணை என்ற இரண்டையும் ஆரிய எண் மனத்துடன் பொருத்துதல் இழுக்கு. வாழலாகாது, பாடலாகாது எனக் கைக்கிளையும் பெருந்திணையும்

தொல்காப்பியரால் ஒதுக்கப் பெற்றன; சங்க இலக்கியப் புலவராலும் விலக்கப் பெற்றன.

கைக்கிளை, பெருந்திணை உறவுகள், அயற்புலம் படை நடத்திச் சென்ற போர் மறவர்கள் நிகழ்த்திய மிகுகாமச் செயல்களாம்.

கைக்கிளை, பெருந்திணைகளைப் புறமாக ஒதுக்காமல் ஆண்-பெண் உறவு என்ற நிலையில் அகமாகக் கொள்ளுதலே முறைமை.

நாடக வழக்கு

'நாடக வழக்கும் உலகியல் வழக்கும்' என்ற நூற்பாவிற்கு அகச்செய்யுள்களைக் கலிப்பாவிலும், பரிபாடலிலும் பாடுதல் வேண்டும் என்று உரை வகுத்தல் பிழை. உரையாடற் போக்கிலும் ஊர்ப் புறப் போக்கிலும் அமையும் காதற் கருவைக் கலியிலும், பரிபாடலிலும் இசை தழுவி அமைத்தல் வேண்டும் என்பதே நூற்பாக் கருத்து. இந்நூற்பாவை, அகப்பா அனைத்திற்கும் வரையப்பட்ட சட்டம் என்று கொள்ள வேண்டா. அகப்பாவில் ஒரு கூறுனை, எளிய மக்களைத் தழுவி வரும் இலக்கியங்கட்கு மட்டும் வடிவம் காட்டினதாகக் கொள்ளுதல் வேண்டும்.

அகத்தில் பெயர் சுட்டல்

அகப்பாக்களில் இயற்பெயர் சுட்டலாகாது என்ற ஆணை தமிழ்ப் பாவுலகம், தற்சார்புடையதாகப் போய்விடக் கூடாதே என்பதற்காக இடப்பட்டது. குறிப்பிட்ட ஒருவனை அல்லது ஒருத்தியைப் பெயரிட்டுப் பாடுவது எனின், அது பெரும்பாலும் 'தனி மனித வாழ்த்துப் 'பாவாக' வடிவு எடுத்துவிடும். 'யாரோ ஒருவன் யாரோ ஒருத்தி' எனின், பாவலனின் எழுத்துச் சிறகு இடையூறின்றிக் கற்பனை வானில், கருத்து வெளியில் பறக்கும். அவ்வாறு இயல்பாகச் சமைவதே நல்ல கவிதையாக அமையும். எனவேதான் 'இயற்பெயர் சுட்டலாகாது' என்ற மரபைப் போற்றினர்.

புறத்திணை-போர்த்திணை

பண்டு, உலக சமுதாயங்கள் அனைத்திலும் போரே தலைமையும் முதன்மையும் எய்தி இருந்தது. தொல்காப்பியர் காலச் சமுதாயம் அதற்கு விலக்கன்று. போர்வயிற் பிரியும் மறக்காதலனைத் தடுப்பது போல, இலக்கியச் சான்றோ, இலக்கணக் குறிப்போ ஒன்று கூட இல்லாமை உன்னத் தக்கது. தொல்காப்பியப் புறத்திணை, அகத்திணையினும் தலைமை உடையது. அகமா புறமா எனில், புறமே முதல் என்பது அற்றைநாட் கருத்து.

போர்க் காரணங்கள்

புறம் என்பது மறப்பணியும், அறப்பணியுமே. முன்பு, பெரிதும் மறப்பணியே மேலோங்கி இருந்தது. மறமே, மணத்திற் கும் காரணமாக இருந்ததை 'ஏறுதழுவல்' காட்டும். புறமே, அகத்திற்கும் காரணம் என்பதை இஃது ஒருவகையில் உணர்த்தும். மறம் தழுவிய போருக்கு, உள இயல், வீர விருப்பம், பொரு விருப்பம், மண்ணுசை, பொருமை, தலைமை விருப்பம், உரிமைப் போராட்டம், தனிமானம், இனமானம், பெண் கேட்டல் ஆகியன காரணங்களாம். இவற்றுள் சிலவற்றைத் தொல்காப்பியம் புகலும்.

வெட்சித்திணை-போரின் தொடக்கம் அன்று

வெட்சிப் போர், பின்வரும், பெரும் போரின் தொடக்கம் அன்று. போரின் தொடக்கம் என்பதற்கு, இலக்கியச் சான்றும் இல்லை; இலக்கணச் சான்றும் இல்லை; கல்வெட்டுச் சான்றும் இல்லை. பிற்கால மன்னர் வரலாற்றுச் சான்றும் இல்லை. எனவே வெட்சிப் போர் என்பது வீர ஊழிக் காலத்தில் நிகழ்ந்த குறும் போர்; குழுப்போர். நில உடைமையும், நில உரிமையும் நிலை பெறுக் காலத்திருந்த களவுப் போர். இது தொடக்கத்தில் தன்னுறு தொழிலாகவே இருந்தது. காலப்போக்கில் மன்னுறு தொழிலாக வளர்ந்தது.

நிரைகவர்தல்-காப்பதற்கன்று

வெட்சிப் போரின் தலைமைச் செயல் நிரை கவர்தலே. நிரை கவர்தல், நிரையைக் காப்பதற்காக என்பர். அது சரியன்று. கவர்ந்த நிரையைக் கவர்ந்தோர், தமக்குத் தாமே பகிர்ந்து (பாதீடு) கொள்வர், ' கடுங்கண் மழவர்' கவர்ந்த நிரையைக் கொன்று தின்பர் (அகம்.309) எனவரும் இலக்கிய இலக்கணச் செய்திகள் நிரை கவர்தல், காத்தலுக்காக அன்று என்பதை நிறுவும்.

நிரைகாத்தல் ஆரியப் பழக்கம்

எருமை, ஆடு முதலான பல வீட்டு விலங்குகளும் இருக்க, பசுக்கள் மட்டும் கவரப்படுவானேன்? வணிகர், வேளாளர், அடி யார், ஏவலர் முதலானோர் இருக்க அந்தணர் மட்டும் போர்ப் பங்கு ஏற்பினின்று விலக்குப் பெறுவானேன்? அந்தணரும், பசுவும் சேர்த்துக் காக்கப்படும் நிகழ்ச்சி, ஆரிய வரவால், உறவால் ஏற்பட்டது எனக் கருதவேண்டி உளது.

நடுகல்-வெட்சி/கரந்தை மறவர்க்கு மட்டுமே

நடுகல், வெட்சிக் கரந்தைத்திணை நூற்பாவில் மட்டும் கூறப் படுவது. முன்னொரு காலத்தில், நடுகல் நாட்டும் வழக்கம், வெட்சி, கரந்தை மறவர்க்கு மட்டுமே இருந்தது என்பதைக் காட்டுவது. நடுகற்கள் பல, ஊர் ஒதுக்குப் புறத்தில் இருப்பதும் வீரன், காடன், மாடன் எனப் பொதுமக்கள் பெயரால் அவை குறிக்கப்படுவதும், இலக்கணத்தில் வெட்சிக் கரந்தையில் மட்டுமே அவை போற்றப்படுவதும், நடுகல் நடும் பழக்கம், பொதுமக்கள் அளவிலேயே கீழ் மட்டத்தில் நிகழ்ந்தது என்பதைக் காட்டும்.

ஆரியர் வரவும் தொல்காப்பியரும்

ஆரியர் சங்க காலத்திற்கு முன்பே தமிழகத்திற்குள் நுழைந்து நிலை பெற்றனர். அவர்தம் கருத்துகளும் தமிழரிடம் பரவின. தொல்காப்பியர் பிறர்மனை நயத்தலைக் 'கடிமனை நீத்த பால்' எனக் குறித்தலும், தெய்வங்கள் குழந்தைப் பருவம்படக் காதலோடு தொடர்புறுத்திப் பாடப்படுதலைப் பாடாண் திணை யாகக் குறித்தலும் கருதத்தக்கன. இவற்றை இராமாயணப், பாரதக் கதைகளின் எதிரொலிகளோ என்று கருத வேண்டி யுள்ளது.

தொல்காப்பிய அகத்திணை இயல் புறத்திணை இயல் தொடர்பாக மேலும் ஆராய வேண்டுவன

ஆராய்ச்சி, இன்று முடிவது அன்று. என்றும் நின்று இலங்குவது. உண்மை நாட்டம் இருக்கும்வரை ஆய்வு நாட்டமும் வளரும்; விளங்கும். தொல்காப்பிய ஆய்வு, பல முனைகளில் பெருகுதல் வேண்டும். இத்தகு ஆய்வு, தமிழ் இலக்கிய உலகிலும், பண்பாட்டு, நாகரிக வரலாற்று உலகிலும் மிகத்துணைசெய்யும் என்பதைக் கருதிச் சில தலைப்புகள் ஈண்டுப் பரிந்துரை செய்யப் பெறுகின்றன.

1 தொல்காப்பியமும் திராவிடப் பழங்குடி மக்களும்

தொல்காப்பியர் காதல் மணம் தொடர்பாகக் குறித்தன அனைத்தும் இன்று நகர்வாழ் நம்மிடை உயர்வு நவிற்சிகளாகத் தென்படும். ஆனால் உண்மையில் தொல்காப்பியர் காலப் பார்வையில் அவை இயல்பு நவிற்சிகளே. நம்மிடம் வழக்கில் இல்லாத சில பழக்க வழக்கங்கள், திராவிடப் பழங்குடியினரிடம் இன்றும் இருக்கக் காணலாம். எடுத்துக்காட்டு: உடன்போக்கு. இது போன்ற வேறு பலவும் திராவிடப் பழங்குடி ஆய்வில் துலங்கும். அத்துலக்கம், தொல்காப்பியத்தை மேலும் நமக்கு விளக்கும்.

2 தொல்காப்பியமும் உலகப் பழங்குடி மக்களும்

நிறத்தாலும், மொழியாலும் மாந்தர், பிரிவுற்றும் பிளவுற்று இருந்தாலும், அவர்தம் உள்ளுணர்வுகளும் ஊற்றுணர்வுகளும் உலகெங்கும்,ஒத்தே உள்ளன. இப்பொதுமை பழங்குடியினர் இடையேயும் இருத்தல் இயல்பு. ஆதலின், உலகப்பழங்குடி ஆராய்ச்சியுடன் சார்ந்த தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி மேலும் பல உண்மைகளை நமக்கு உணர்த்தும்.

3. தொல்காப்பியப் பொருளதிகாரமும் (தமிழர் தவிர) பிற திராவிடர்தம் பண்பாடும்

தொல்காப்பியம், இற்றைத் தமிழக எல்லையில் எழுந்த நூலன்று. அந்நூல் எழுந்தபோது தமிழகம் செந்தமிழ் நிலமாகவும்,

பிற தென்னக நாடுகளுள் பெரும்பாலான கொடுந்தமிழ்ப் பகுதியாகவும் இலங்கின. தொல்காப்பியர், இரு நிலத்துச் செல்வாக்கிற்கும் இலக்காகி இருப்பர். அவர்தம் நூலும் இலக்காகி இருக்கும். எழுத்ததிகாரப் பகுதிகளுள் சில, இற்றைத் தமிழிற்குப் பொருந்தாமல், பக்கத்துத் திராவிட மொழிகளுக்குப் பொருந்தி உள்ளன. அத்தகு பொருத்தம் வாழ்வியலிலும் வழங்கும். அவற்றை ஆழ்ந்தறிவது திராவிட இன ஆய்விற்கு உதவும்.

4 தொல்காப்பியமும், சமற்கிருதக் காதல், போர் பற்றிய இலக்கிய இலக்கணங்களும்

தமிழருடன் நெடுங்காலமாகத் தொடர்பு கொண்ட மொழி சமற்கிருதம். எனவே அம்மொழியில் தமிழின் தாக்கமும் தமிழில் அம்மொழியின் தாக்கமும் இருத்தல் இயற்கை. அகம். புறம் என்ற பொருட் பாகுபாட்டு ஆய்வு தமிழர்க்கே உரியதா என்பது சமற்கிருத ஒப்பியல் ஆய்வால் புலப்படும்.

5 தொல்காப்பிய அகத்திணையும், சங்க இலக்கிய அகப்பாக்களும்

தொல்காப்பிய அகத்திணையும், சங்க இலக்கிய அகப்பாகி கூற்றுகளும் தம்முள் முற்றும் முரணுமல் உள்ளனவா என்பது ஆய்விற் குரியது. அவ்வாய்விற்கு, இவ் வொப்பியலாய்வு பெருந்துணையாக அமையும்.

6 தொல்காப்பியப் புறத்திணையும் சங்க இலக்கியப் புறப்பாக்களும்

புறநானூற்றுத் துறைகள், தொல்காப்பியப் புறத்திணைத் துறைகளிலிருந்து வேறுபட்டு நிற்கின்றன. அவ்வேறுபாட்டைத் தவிர்க்க முனைவர் நச்சினார்க்கினியர். எனினும் இவ்வாய்வு முற்றுப் பெறவில்லை. இத்தலைப்புத் தொல்காப்பியத்தையும், சங்க இலக்கியத்தையும் மேலும் விளக்க முறுத்தும்.

7 தொல்காப்பிய உரைகளில் சமற்கிருதக் கருத்துகளின் செல்வாக்கு

தொல்காப்பிய உரை எழுதப்பட்ட இடைக்காலத்தில் (கி. பி. 10—15ஆம் நூற்றாண்டு) தமிழகத்தில் சமற்கிருதக் கல்வி மேலோங்கி இருந்தது. சில உரைகாரர், தமிழிலும் சமற்கிருதத்திலும் ஒருசேரப் புலமை பெற்றிருந்தனர். சமற்கிருதச் சூழலும், அறிவும் தொல்காப்பிய உரைகளில் எத்துணை அளவு படிந்துள்ளன என்பது இவ்வாய்வால் தெளிவு பெறும்.

8 தொல்காப்பிய உரைகளும், சமகாலச் சமற்கிருத இலக்கண உரைகளும்

சமற்கிருதத்தில் எழுதப்பட்ட பாடியங்களின் செல்வாக்கு தொல்காப்பிய உரைவரைவின் பெருக்கத்திற்குக் காரணமாக இருந்தது. ஈதன்றி வேறு ஏதேனும் ஒற்றுமைகள் உள்ளனவா என்பது இவ்வாய்வால் தெளிவுபடும்.

9 தொல்காப்பிய ஒவ்வோர் இயலும், உரையும் பற்றித் தனித்தனி ஆய்வு

மூல நூற்பயிற்சிக்குரிய முதன்மைக்குச் சற்றும் குறைவு இல்லாதது உரை நூற் பயிற்சி. சில உரை நூல்கள் மூல நூலைக் கடந்தும் சிறப்பெய்தி நிற்கின்றன. ஆதலின் உரையாய்வு தொல்காப்பியத்தைப் பொறுத்தவரை மேலும் ஆழமாகவும், அகலமாகவும் ஆக்கப்படுதல் வேண்டும். அவ்வாக்கம், தமிழ் இலக்கண ஆய்வின் குறிப்பிடத்தக்க கட்டமாக இலங்கும்.

பொருளடைவு

எண்கள் பக்கங்களைக் குறிக்கும்

அகசுடசு 93
அகம் என்ற பெயர் 89
அகத்திணை - 90
அகத்திணை இயல் உரை வேறு பாடு 7
அகத்திணை இயல் புத்துரை 58
அகத்திணை ஏழு 90
அகத்திணையியல் உரைவளம் 5
அகத்திணையில் பிறர் செய்திகள் 126
அகத்திணை வைப்பு முறை 126
அகத்தியருக்கு - 58
அகத்தியலிங்கம். ச. 39, 214
அசாந்தி 267
அசில் லீசு 225
அசீரிய 4
அசீரிய மொழி 113
அசீரியர் 34
அசீரியர்களை 54
அசீரியரிடம் 286
அசீரியரிடையே 134
அசுர் பணிபால் 290
அசோகன் கல்வெட்டு 37
அட்டவணைகள் 11
அடிமைகளை 113
அடியார்க்கு நல்லார் 61
அடையாளப் பூ 95
அண்ணாமலை அரசர் 64
அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 58
அண்ணாமலை வள்ளலின் 58
அணுகும் முறை 10
அபிங்சு 264
அமெரிக்கப் போர் வீரர் 210
அமெரிக்காவிலுள்ள 38
அயல்நாடுகளில் பெண்ணுரிமை 134
அர்த்த சாத்திரத்தில் 34
அர்த்த சாத்திரமும் 113
அரங்கன். டாக்டர். கி 39
அரசக் காதல் 94
அரசஞ் சண்முகனார் 56
அரவிந்தன் மு. வை. 49
அரிச்சந்திரன் 305
அருணாசலம் டாக்டர். ப 33
அருணாசலம் பிள்ளை மு. 5
அருணாசலம் பிள்ளை உரை 70
அருணாசலம் பிள்ளையின் உரைத் திறன் 71
அருணாசலம் பிள்ளையின் உரை முறை 71
அருநிலை 291
அலெக்சாண்டர் 226
அவெஸ்தா 336
அழிபடை 280
அறச்சலூர்க் கல்வெட்டு 25
அறவாணன். க. ப. 219
ஆசிரியர் தம் இருக்கை 297
ஆசிரியர் தம் தென்புல வருகை 298
ஆடுகளைக் கவர்தல் 241
ஆதிநாதன். சிவ. 12
ஆநிரை கவர்தலின் 236
ஆப்பிரிக்கப் 329
ஆப்பிரிக்காவில் 267
ஆய்விற்கு உதவியோர் 11
ஆய்விற்குப் பயன்பட்ட பதிப்புகள் 6
ஆய்வின் அளவு 8
ஆய்வின் பிரிவுகள் 8
ஆய்வு எல்லை 6
ஆய்வுத் திட்டங்கள் 8
ஆய்வு முகம் 6
ஆய்வு முடிவு 7

ஆய்வை அமைத்துள்ள முறை 6
ஆராய்ச்சித் தலைப்பு 5
ஆரிய 337
ஆரிய அந்தணர் 144
ஆரிய எதிர்ப்பு 80
ஆரிய சமுதாயத் 113
ஆரியர் 32, 58
ஆரியர் தம் கலப்பும் 143
ஆரியரும் 35
ஆவி நம்பிக்கை 268
ஆறுமுகனூர். டாக்டர். க. 5
இசுரேல். டாக்டர். எம். 5
இட்டைட் - 244
இந்திய ஒழுக்கம் 179
இந்தியன் எக்ஸ்பிரஸ் 39
இயற்பெயர் சுட்டல் 200
இயற்பெயர் சுட்டுதல் 192
இயூன்சுங் 305
இராகவையங்கார் மு. 36, 203, 217
இராச குருமார்கள் 55
இராசமாணிக்கம் 5
இராசராச சோழன் 55
இராசேந்திர சோழன் 55
இராட்ரே268
இராம 343
இராமகிருஷ்ணன் 208
இராமன் 227
இராய் சாச் 286
இராணிய 337
இருக்கு 336
இருளர் 237, 265
இலக்கணப் படைப்பின் 32
இலக்குவனூர் டாக்டர். சி. 51, 59
இலங்கை 54
இலட்சுமண சேனனின் 286
இலியத் 54, 336
இளவேனில் 20, 35
இளங்கோவடிகள் 34
இளம் பூரணர் 60
இளம் பூரணர் உரை 62
இளம் பூரணர் உரைச் சிறப்பு 62
இளம் பூரணர் தம் காலம் 61
இளைய பெருமாள் 219
இனப்பாகுபாடு 307
இனப்பூசல் இல்லாமை 308
இனப்பெயர் 114
இனமானம் 227
ஈரானின் 308
உச்சயினி 305
உசிலங் குளத்தில் 58
உடன் கட்டை 327
உத்திரமேரூர் - 55
உயர்ந்தோர் 137
உயிர்மெய் வரிவடிவம் 23
உரிப் பொருள் 99
உரிப்பொருள் பெயர் 97
உரிமைப் போராட்டம் 226
உரை ஆசிரியர் நோக்கும் 77
உரை இல்லாத காலம் 43
உரை தோன்றிய காலம் 43
உரையாசிரியர் 61, 82
உரை வரலாறு 7
உரை விரிவு 46
உரோம் 205
உரோம 4, 112, 279
உராம நாட்டு ஒழுக்கம் 179
உரோமரும் 93
உரோமானியர் 54
உரோமில் 308
உரோமை 91, 113, 135
உலக வரலாற்றுச் செய்திகள் 9
உலகியல் வழக்கு193, 198
எகர ஒகரம் 24
எகிப்திய 331
எகிப்தில் 113
எகிப்து 54, 308
எஞ்சியோர் தம் கூற்று 169
எண்வகை மணமும் 182
எத்தா (Edda) 331
எழுத்தின் கலை 32
எழுத்து பொறித்தல் 270
எழுத்து வரிவடிவம் 22
எழுதாக் கிளவி 44
எருமைகளைக் கவர்தல் 240
எற்பாடு 105
ஏட்டுமுறை 81
ஏடு பெயர்த்து எழுதுவோர் 81, 82
ஏதென்சிலும்134
ஐந்திணை 92
ஒடிசி 54, 336
ஒழுக்க அடிப்படை 95
ஓதல் பிரிவு 144
ஔரங்கசீப் 227
கசவர்கள் 265

கடவுள் வாழ்த்து இல்லாமை 17
கடவுள் வாழ்த்தும் 334
கடற்படை 18
கடற் பிரிவு 18, 148
கடிமணீ நீத்தபால் 318
கண்டோர் கூற்று 167
கதபர் 265
கதம்பரும் 305
கப்பற் படை 19
கப்பான் 308
கராகிர்கிசு 331
கராமும் 108
கருப் பொருள் 107
கல்வெட்டுச் சான்று 24, 26, 234
கலந்த பொழுது 130
கள்வகை 27
களவு மணம் 33
கற்பு மணமே 33
கன்பூசியசு 336
காங்கிரசு இயக்கத்தில் 64
காசிகள் 265
காசிவேந்தன் 227
காசுமீர பிராமணரும் 55
காதல் 91
காந்தியவாதி 58
காமம்சாலா இளமைக்காதல் 177
கார்த்த வீர அர்சுனன் 225
காரமோசா 350
கால்டுவெல் 56
காவல்மரம் 19
கிரிசும ருது 35
கிருட்டிண 343
கிருபன் 305
கிரேக்க 4, 91, 179, 264
கிரேக்கச் சான்று 19
கிரேக்கத் தூதன் 179
கிரேக்கத்தில் 112
கிரேக்க நாட்டில் 308
கிரேக்கம் 134
கிரேக்கரும் 93
கிரேக்கர் 32
கிரேக்க வீரன் 225
குஞ்ஞாரக் குறத்தி 257
குடவோலை முறை 55
குடிநிலை 250
குப்தர் 54
குமாசி 267
குலோத்துங்க சோழன் 55
குழந்தை 70
குழந்தை உரை 59
குழந்தை உரை முறை 70
குழந்தையின் உரைத்திறன் 70
குளோறியா சுந்தரமதி 207
குறிப்புகள் 8
குறிஞ்சி 119
குறும்பர் 92
கூழை தாங்கிய பெருமை 291
கூற்றுகள் 165
கேமந்த ருது 35
கேரளபுத்திரர் 37
கேல்படே 329
கைக்கிளை 91, 170
கைக்கிளைத் திணை 174
கைகயன் - 227
கைலாசபதி. க 34, 217
கொடிநிலை 251
கொண்டதலைக் கழிதல் 130
கொற்றவள்ளை 279
கொற்றவை 17, 283, 341
கோசிகமாணி 210
கோண்டு 91, 265
கோடர் 92
கௌடில்யர் 340
சக்தி வேல் 214
சங்க இலக்கியவழக்கு 79
சங்கர நாராயணன் ஏ. 5
சச்ச நாமா 327
சஞ்சீவி டாக்டர். ந 11, 49
சண்முக தாசு 219
சண்முகம். டாக்டர் செ. வை 5
சண்முக விருத்தி மறுப்பு 56
சண்முகனர் கொடுமுடி. ச. 12
சத்தியாக்கிரக 94
சதுர்வேதி மங்கலங்கள் 55
சுந்தர பாண்டியன் 227
சமதக்கினி 227
சமயக் கண்ணோட்டம் 85
சமற்கிருதம் 54, 243
சமக்கிருத உரைகள் 47
சமக்கிருதத்தில் 32
சமூகக் கண்ணோட்டம் 85
சரத் ருது 35
சாதி பேதம் 85
சாதீய எதிர்ப்பு 58
சாந்தாராம், இரா. 12
சாமி, பி. எல் 39

சாமிநாத அய்யர் 57
சாரங்கபாணி டாக்டர் இரா. 5
சிக்கலும் தீர்வும் 9
சிசி ருது 35
சித்திய இனம் 328
சிதம்பரம் பிள்ளை 58
சிந்துவெளி 57, 114
சிவஞான முனிவர் 56
சிறு பொழுதுகள் 104
சீதாபாய், ஆர். 5
சீதையை 227
சீனர் 4, 113, 135, 179, 328, 336
சுக்கிரீவ 227
சுநீத்குமார் சட்டர்ஜி 71
சுப்பிரமணியம் டாக்டர். சி, 5
சுப்பிரமணியம் டாக்டர்.வி. ஐ. 85
சுப்பையா. கோ, 349
சுயமரியாதை இயக்கம் 80
சுரு 108
சூழலின் தாக்கம் 97
செஞ்சு 92, 133
செந்தமிழ் 4
செந்தமிழ்ச்செல்வி 4
செப்பறை மெய்கண்ட தேவர் 56
செயராமன். டாக்டர். ந. 345
செல்ட்டிக் 352
சென்னையிலும் 64
சைவ 48
சைன 48
சொல்லைப் பிரிக்கும் முறை 78
சொற்பொருள் அமைதி 9
சோமசுந்தரபாரதி 64
சோழகர் 133
சோளகர் 92
ஞானப் பிரகாசம் வி. மி. 36
டெசீடசு 93
டேவிட்ராய் 265
டைக்கிரடீசு 113
தமிழ்க் கல்சர் 4
தமிழ்ப் பொழில் 4
தமிழரும் மலரும் 96
தமிழிக் கல்வெட்டுகள் 23
தமிழியல் 4
தலைவன் கூற்று 167
தலைமை விருப்பம் 226
தவ்ரசு 244
தனிமானம் 227
தாமோதரம் பிள்ளை 57
தாமோதரன், டாக்டர். அ 49
தாய்க் கூற்று 165
தாவீது, டாக்டர். எசு. எசு. 5
திணை மயக்கம் 100
திணையைத் தீர்மானித்தல் 98
தியோ பிராசுடசு 264
திராவிட 57, 59, 245
திராவிடர் கழகம் 80
திருநெல்வேலியிலும் 64
திருவள்ளுவர் காலம் 18
தில்லைநாயகம், வே. 11
துடிநிலை 252
துரியோதனன் 286, 290
துரியோதனுதியர் 290
துரைந்திரநாதன், செ. 12
துரோணன் 305
தெளிவற்ற சுட்டுச்சொல் 77
தென்குமரி 32
தென்னை 27, 37
தென்னையின் காலம் 28
தென்னையின் தோற்றம் 28
தொகை எண்களை ஆளுதல் 76
தொகை நிலை 289
தொல்காப்பிய அமைப்பு 31
தொல்காப்பிய உரை வேறு பாடுகள் 7
தொல்காப்பியக் களஞ்சியம் 6
தொல்காப்பிய உரைகள் 7
தொல்காப்பியர் 7
தொல்காப்பியர் ஊர் 31
தொல்காப்பியர் நோக்கம் 31
தொல்காப்பியர் நோக்கு 31
தொல்காப்பியர் பிறப்பகம் 30
தொல்காப்பிய விருத்தி உரை 59
தொறு 244
தோடர் 92, 178, 348
தோழி கூற்று 165
நக்கண்ணை காதல் 174
நச்சினார்க்கினியர் 62
உரைச்சிறப்பு 63
உரைமுறை 63
காலம் 62
நடுகல் 260
வகை 261
வணக்கம் 256

நடுகல் வழிபாடு 18
நல்லநாளை 286
நல்ல பெருமாள் 208
நாகசாமி, டாக்டர். இரா. 217
நாகலோகம் 37
நாடக வழக்கு 193, 198
நற்ணயச் சான்று 26
நாத்திக நோக்கு 82
பார்வை 80
நாற் கவிராச நம்பி 175
நிகண்டுகள் 32
நிகழ்ந்தது கூறி நிலையல் 150
நிணைத்தல் 149
நிமித்தம் காட்டல் 258
நிருக்தம் 32
நிரை மீட்டல் 230
நிலப்பாகுபாடு 97
நின். கி. ஈசாக் 287
நீதிக் கட்சி 58
நீர்ப்படை 269
நீல ஆறு 264
நீலகிரி 265
நூலாசிரியர் 82
நெய்தல் 120
நேமிநாத உரை 33
பசுமாடு 242
பசுபிக் பெருங்கடல் 18
படாக் கோட்டப் 336
படையாட்சி 309
பண்டைய நாடு 187
பண்டைய பற்று 54
பதினெண் கீழ்க்கணக்கு 18
பரசுராமர் 38, 225, 227
பரணி 61
பரத்தமை 189, 324
பலபொருள் சொல்லாட்சி 76
பவணந்தி 23
பழங்குடி 10, 265
பனுமா நிலம் 38
பனை 27, 39
பாஸ்கல் கிஸ்பர்ட் 207
பாடபேதம் 81
பாடாண் திணை 331
பாடி மாற்றம் 198
பாண்டவர் 226
பாண்டு 349
பாணினீயம் 32
பாபிலோனியா 4,54,113,336,337
பார்சினிக்கடவு 340
பார்ப்பனப் பக்கம் 293
பார்ப்பனர் 242
பார்மோசன் 91
பாரத் வாசி 55
பாரதப் போர் 290
பாரதி, சோமசுந்தர. உரைச் சிறப்பு. 64
உரைமுறை 64
பாலசுப்பிரமணியம், க 11
பாலசுப்பிரமணியம், டாக்டர் க. 39
பாலத்தீனம் 336, 337
பாலினேசியாத் தீவு 38
பாலை 120
பாலைப் பிரிவு 122
பிரமிட் 264
பிராமணர் 55, 57, 310
பிராமணர் அல்லாதார் 57
பிரிந்திவண் இரங்கல் 131
பிரிபால்ட் 329
பிள்ளை. கே. கே. 218
பின்னிணைப்புகள் 8
பின்னேர் 148
பிலோ இருதயநாத் 214
புகலூர்க் கல்வெட்டு 25
புசுயமித்திரன் 305
புத்திரசதகர்ணி 305
புரோகிதர் 135, 141
புலன்நெறி 197
புறத்திணை 122
உரை வேறுபாடு 7
புத்துரை 58
புறப் பொருள் வெண்பாமாலை 175
பூசல் மாற்று 249
பெண் கேட்டல் 229
பெண்டிர் பங்கு 320
பெயர் பெறுதல் 94
பெயர் வைப்பு 114
பெருந்திணை 94, 170, 180
பெரும்பொழுது 102
பெருமாள், ப. 11
பொரு விருப்பம் 225
பொருள் மயக்கம் 76
பொழுது 102
பொருமை 226

பேய்க் காஞ்சி 80
பேராசிரியர் 49, 198
மகளிர் 227
மகாபாரதம் ஆதிபருவம் 345
மகேசுரபுரம் 305
மடலூராமை 181
மண்ணுசை 225
மண் நசை 94
மணிப் பிரவாள உரை 48
மருதம் 119
மலர்வழி நிலப்பெயர் 96
மலையாளப் புலச்செறுமல் 92
மலையாள நாட்டில் 257
மறவர் 309
மனுதர்ம நூல் 113
மஞ்சுகர். ந. 11
மாடு - செல்வம் 245
மாணிக்கம் டாக்டர். வ. சுப. 49, 214, 218
மார்சல் 57
மாராயம் 278
மாலி 309
மானிடவியல் சான்றுகள் 178
மிக்க காமத்து மிடல் 182
முத்துக் குமாரசாமி. இரா. 11
முத்தைய வேள் 58
முந்நீர் 149
முப்பாகு பாடு 169
முரசொலி 203
முருகன் கடல் தெய்வம் 17
முல்லை 119
முறைமை 92
முன்னைய நான்கு 176
மூன்றன் பகுதி 168
மெகத்தனீசு 179
மெசபதோமியா 134
மெய்ப்பாட்டியல் புத்துரை 58
மெய் பெறும் புள்ளி 25
மேலோர் முறைமை 147
மொகஞ் சொதரோ 57
வசந்தருது 21, 35
வஞ்சித்திணை 274
வட்டெழுத்து 25
வடவேங்கடம் 32
வர்சருது 35
வரிவடிவச் செய்திகள் 22
வருணப்பாகு பாடு 55, 307
வருணசிரமம் 64, 141, 142
வரையறுத்து நுதலிப் புகாதிருத்தல் 77
வாடாவள்ளி 257
வாய் மொழி இலக்கியம் 44
வாய் மொழி முறை 81
வாலி 227
வான்மீகி இராமாயணம் 206, 214
விக்கிரகம் 145
வித்தியானந்தன், டாக்டர். 217
வியட்நாமியர் 210
விரவும் பொருளும் விரவல் 151
வீட்டு வாழ்க்கை 123
வீர ஊழிக் காலம் 235
வீரபாண்டியன் 227
வீரமாமுனிவர் 36
வீர விருப்பம் 225
வெட்சித்திணை 248
வெட்சிப்போர் 3
வெள்ளைவாரணன் வித்துவான் க. 33
வேங்கடசாமி மயிலை சீனி 348
வேதக் கல்வி 54
வேலுப்பிள்ளை. ஆ. 36
வேள்விகளை 303
வேளாளர்க்குரிய 297
வைணவ 48
வையாபுரிப்பிள்ளை. எசு 39, 219
யசோமதி 327
யயாதி 225
யாப்பருங்கல விருத்தி 60
யானைப் பாகர் 305
யூதர் 113
யூப்ரடீசு 113
Assyrian 34
Babylonian 34
Candra Cakravarti 203
Chou Asiang 213
Deloperte 207
David E. Ludden 209
Hanslicht 203
Kamil Zvelebil Dr. 85
Mesopotamia 34
Mahadevan I 36
Mayuranathan. P. V. 39
Nilakanta Sastri. K. A 49
Otte Kiffer 203
Ramachandra Dikshitar V.R344
Reginald Child 37, 39
Strabo 327
Shanmugam Pillai 209
Thurston 203
Tucker 211
Watson, G. R. 209

மேற்கோள் நூல்கள்

தமிழ் நூல்களும், இதழ்களும்

1 அகத்தியலிங்கம், ச, பாலசுப்பிரமணியம், க. இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை 1975 பதிப்பு.

2 அருணாசலம். மு., தமிழ் இலக்கிய வரலாறுகள் (நூற்றாண்டு வரிசை) திருச்சிற்றம்பலம், மாயூரம். 1969—1975.

3 அருணாசலம், மு. வித்துவான், அகத்திணை இயல் உரைவளம், மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு, மதுரை. 1975.

4 அருணாசலம், டாக்டர் ப. தொல்காப்பியர். முதற்பதிப்பு, தமிழ்ப் புத்தகாலயம், 576, பைகிராப்சு ரோடு, சென்னை 5, 1975

5 அறவாணன், க. ப., சைனரின் தமிழிலக்கண நன்கொடை, சைன இளைஞர் மன்றம், சென்னை 600 017, 1974

6 அறவாணன், க. ப., தாயம்மாள் அறவாணன், தொல்காப்பியக் களஞ்சியம், தமிழ்க் கோட்டம், வெளியீடு, பாரி நிலையம், சென்னை 1, 1975.

7 அன்னகாமு, மேல்மலை மக்கள், முதற் பதிப்பு, சர்வோதய பிரசுராலயம், தஞ்சாவூர், 1961.

8 ஆய்வுக் கோவை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்க வெளியீடு 1971, 1973, 1976

9 இராகவையங்கார், மு., ஆராய்ச்சித் தொகுதி, 1938.

10 இராகவையங்கார். மு., தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி.

11 இராமகிருட்டிணன், எசு., இந்தியப் பண்பாடும் தமிழரும், முதற் பதிப்பு, மீனாட்சி புத்தக நிலையம், 6, மேலக் கோபுரத் தெரு, மதுரை 1, 1971.

12 இராமகிருட்டிணன், மு., பிரதி பேத ஆராய்ச்சி, பாரதி புத்தக நிலையம், மதுரை 1, 1960,

13 இலக்குவனார், பேரா. சி. தொல்காப்பிய ஆராய்ச்சி முதற் பதிப்பு, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961

14 இலட்சுமணன், கே. எசு, தென்னைச் செல்வம். 1967

15 குளோறியா சுந்தரமதி, இலா. சங்க இலக்கிய மருதம், முதற் பதிப்பு, தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக் கழகம், காரிய வட்டம், திருவனந்தபுரம் 1973.

16 குழந்தை. புலவர், தொல்காப்பியம் பொருளதிகாரம், குழந் தையுரை முதற்பதிப்பு, வேலா வெளியீடு, ஈரோடு 1, 1968.

17 குழந்தை. புலவர், தொல்காப்பியர் காலத் தமிழர், இரண் டாம் பதிப்பு, பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை 1, 1968.

18 கைலாசபதி, டாக்டர். க. அடியும் முடியும், (இலக்கியத்திற் கருத்துகள்), முதற் பதிப்பு, பாரி நிலையம், சென்னை 1, 1970.

19 சக்திவேல், சு. பழங்குடிகள், முதல் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுசு பிரைவேட் லிமிடெட். 6, நல்ல தம்பி செட்டித் தெரு, சென்னை 2, 1973.

20 சஞ்சீவி, டாக்டர் ந., ஆராய்ச்சிக் கட்டுரைகள், பாரி நிலையம் சென்னை. 1970

21 சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, தொகுதி – முதல், இரண்டு, அண்ணமலைப் பல்கலைக் கழகம், அண்ணமலை நகர், 1949, 1951.

22 சாமி, பி. எல்., இளநீர், செந்தமிழ்ச் செல்வி' 1974

23 சிவபாத சுந்தரனார், புலவர். நா. புறப்பொருள் வெண்பா மாலை ஆராய்ச்சி, முதற் பதிப்பு பட்டுக் கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம் வெளியீடு, இலங்கை 1972.

24 சுப்பிரமணிய அய்யர், ஏ. வி. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி ஓர் விமரிசன நூல், பண்டைக் காலமும், இடைக்காலமும் இரண்டாம் பதிப்பு, அமுத நிலையம் லிமிடெட் 1/45, இராயப் பேட்டை ஹைரோடு, சென்னை 14, 1971.

25 சுப்பிரமணியம், வி. ஐ. (பதிப்பாசிரியர்) இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், (மூன்றுந் தொகுதி) உலகத் தமிழாராய்ச்சி மன்றம், தமிழகம், சென்னை 34, சனவரி 1968.

26 சுப்புரெட்டியார், வித்துவான். ந. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, மறுபதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 14, 1974.

27 செந்தமிழ்ச் செல்வி, சிலம்பு 46, 47, பரல். 2. 9, புரட்டாசி, அக்டோபர் 1972.

28 செயராமன், டாக்டர். நா. சங்க இலக்கியத்தில் பாடாண் திணை. முதற் பதிப்பு, மீனாட்சி புத்தக நிலையம். 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை 1. 1975

29 செல்வ நாயகம். வி. (இலங்கைப் பல்கலைக் கழகம்), தமிழ் உரைநடை வரலாறு, சாரதா விலாசு, கரிக்காரத் தெரு, கும்பகோணம், 1957.

30 சோமசுந்தர பாரதியார், நாவலர்: தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை. இரண்டாம் பதிப்பு, நாவலர் சோமசுந்தர பாரதியார் கல்வி அறப்பணிக் குழு, நாவலர் இல்லம், பசுமலை, மதுரை, 1972.

31 சோமசுந்தரபாரதியார். நாவலர், தொல்காப்பியர் பொருட் படலப் புத்துரை (அகத்திணை இயல்) இரண்டாம் பதிப்பு. நாவலர் புத்தக நிலையம், 59 ஏ, மேலாவணி வீதி, மதுரை 1, 1972.

32 சோமசுந்தர பாரதியார், ச. தொல்காப்பியர் பொருட் படலப் புத்துரை (புறத்திணையியல்), இரண்டாம் பதிப்பு, நாவலர் புத்தக நிலையம், 59-ஏ, மேலாவணி வீதி, மதுரை 1, 1972.

33 சோமசுந்தர பாரதியார். ச. தொல்காப்பியர் பொருட்படலப் புத்துரை (மெய்ப்பாட்டியல்), இரண்டாம் பதிப்பு, நாவலர் புத்தக நிலையம், 59-ஏ மேலாவணி வீதி, மதுரை 625001, 1975.

34 தாமோதரன், டாக்டர். அ., திருக்குறள் மேற்கோள்விளக்கம், ஹைடல்பர்க் பல்கலைக் கழகம், மேற்கு ஜெர்மனி, மீனாட்சி புத்தக நிலையம் மதுரை, 1970.

35 துரை அரங்கசாமி, டாக்டர் .மொ. அ. தொல்காப்பிய நெறி, முதற் பதிப்பு, மீனாட்சி புத்தக நிலையம். 60, மேலக் கோபுரத் தெரு, மதுரை 1, 1963.

36 நடராஜன், சு. இலக்கணத்தில் புதிய சிந்தனைகள், முதற் பதிப்பு, தூத்துக்குடி 1976.

37 நாகசாமி, இரா. (பதிப்பாசிரியர்), செங்கம் நடுகற்கள், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1972.

38 நாயுடு, பண்டிதர் அ. கி. தொல்காப்பியர் கண்ட தமிழர் சமுதாயம், முதற் பதிப்பு, முப்பால் நிலையம். 40-ஏ, கிரியம்மன் வீதி, பூனைமேடு, கோவை 4, தமிழ்நாடு, 1962.

39 பாலசுந்தரம் பிள்ளை, திரு. தி. சு (இளவழகனார்) பண்டைத் தமிழர் இன்பியல் வாழ்க்கை, முதற் பதிப்பு, கழக வெளியீடு. திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/140, பிரகாசம் சாலை, சென்னை 1, 1974.

40 பாலசுந்தரம் பிள்ளை. திரு. தி. சு. பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1945.

41 பிலோ இருதயநாத், ஆதிவாசிகள், முதற் பதிப்பு, கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை 4, 1961.

42 பிலோ இருதயநாத், இமய மலைவாசிகள், முதற் பதிப்பு, மல்லிகைப் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை 17, 1967

43 பிலோ இருதயநாத், கேரள ஆதிவாசிகள், முதற் பதிப்பு, மல்லிகைப் பதிப்பகம், சென்னை 17, 1966.

44 பிலோ இருதயநாத், கொங்கு மலைவாசிகள், முதற் பதிப்பு, மல்லிகைப் பதிப்பகம், சென்னை 17, 1965.

45 பிலோ இருதயநாத், நீலகிரி படகர்கள், முதற் பதிப்பு, மல்லிகைப் பதிப்பகம், சென்னை 17, 1965.

46 பிலோ இருதயநாத், பழங்குடிகள், இரண்டாம் பதிப்பு, மல்லிகை வெளியீடு, சென்னை 17, 1965.

47 பிள்ளை, டாக்டர். கே. கே. தமிழக வரலாறு -- மக்களும் பண்பாடும், முதல் பதிப்பு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1972.

48 பெரிய கருப்பன், டாக்டர். இராம (தமிழண்ணல்), சங்க இலக்கிய ஒப்பீடு, சங்க இலக்கியக் கொள்கைகள், முதற் பதிப்பு. மீனாட்சி புத்தக நிலையம், 60, மேற்குக் கோபுரத் தெரு மதுரை — 625001, 1975.

49 பொன்னையா: நா. (ஈழகேசரி அதிபர்). தொல்காப்பியம் பொருளதிகாரம் (முதற்பாகம்) முன் ஐந்தியல்களும், நச்சினார்க்கினியமும், சுன்னாகம், திருமகள் அழுத்தகம் சென்னை, 1948.

50 மாணிக்கம், டாக்டர் வ. சுப. தமிழ்க் காதல், முதற் பதிப்பு பாரி நிலையம், சென்னை 1, 1962.

51 மாணிக்கம், டாக்டர் வ. சுப. எந்தச் சிலம்பு? பேகன் பதிப்பகம், காரைக்குடி, 1972.

52 மென்கென்ஜி, காபன் ஐயர், கனம். ஜி. ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கம் மூலமும் உரையும், இரண்டாம் பதிப்பு, இயாகப் பிள்ளை. ம. சா. அவர்களால் அர்ச். சூசையப்பர் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டது. 1891.

53 வானமாமலை, நா. தமிழர் வரலாறும் பண்பாடும் (ஆராய்ச்சிக் கட்டுரைகள்) முதற் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 6/30 மவுண்ட்ரோட், சென்னை, 2, 1966.

54 வித்தியானந்தன், டாக்டர் சு. தமிழர் சால்பு (சங்க காலம்) இரண்டாம் பதிப்பு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை 1, 1971.

55 வேங்கடசாமி, மயிலை. சீனி. சங்க காலத் தமிழக வரலாற்றில் சில செய்திகள், முதற் பதிப்பு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1970.

56 வையாபுரிப்பிள்ளை, எசு. தமிழ்ச் சுடர் மணிகள், பாரி நிலையம், சென்னை 1.

57 ஜமதக்னி, மொழி பெயர்ப்பு, மேக சந்தேசம், சாந்தி நிலைய வெளியீடு, 9, சோளியம்மன் கோவில் தெரு, சென்னை, 2, 1964.

58 ஜெயதேவ், சீ. ஜே, இரகுபதி, மு. பழங்காலப் பண்பாடும் பழங்குடிகள் பண்பாடும், தமிழ்நாடு அரசு, அரசாங்கப் பொருட் காட்சிச் சாலை, சென்னை, 1962.

Books and Journals in English

Arokiaswami, M. The Classical Age of the Tamils, First Published University of Madras, 1967.

Asher, R. E. (Editor) Proceedings of The Second International Conference Seminar of Tamil Studies, Vol. II, International Association of Tamil Research Madras, India, 1968.

Blunt, A. W. F. The Ancient World and its legacy to us., First Edition Oxford, Clarondon Press, 1932.

Candra Cakravarti, sex life in ncaient India, First Edition Firms K. L. Mukhpadhyay, Calcutta, India. 1963.

Chakravarti, P. C. The art of war in ancient India, First Edition Oriental Publishers, 1488, Pataudi House, Daryagalj, Delhi 6, 1972.

Chockalingam Pillai, V.: The origin of the Indo European Races and Peoples. Vol. I First Edition, Palamootaah Printing Press, Palamcottah, 1935.

Chou Hsiang-Kuang, Dr. The history of Chinese Culture (From the Earliest Time to the twelth century A. D). Central Book Depot, Allahabad. 1958.

De Cardolle, A. Origin of Cultivated Plants, Kegan Paul Trad & Co. London.

Delaporte L, Mesopotamia, - The Babylonian and Assyrian civilisation, First Edition, Routledge and Kegan Paur, London (1970)

Gnana Prakasar, Rev. S. (Jaffna) The origin of caste among the Tamils Indian Catholic Truth Society, Trichinopoly, Cantonment 1920.

Greenidge, A.H.J. Roman Public life, Macmillan and Company Ltd., London, 1901.

Hars Licht, Sexual life in ancient Greece, The Standard Literature Co., Ltd., 13/1 old House Street, 1952.

Harry L. Shapire (Editor) man, Culture, and Society, Ninth Printing 1964, A Galaxy Book, New York/Oxford University Press. 1960.

Heramba Chatterjee Sastri, The social Background of the Forms of Marriage in ancient India Vol. I, First Edition, Sanskrit Pustak Bhandar, Calcutta 6, 1972.

Hutton, J. H. Caste in India, Fourth Edition, 1963, Oxford University Press, Apollo Bunder, Bombay 1 ... eprinted 4th Edn. 1969.

Ilakkuvanar, Dr. S. Tolkkappiam, (in English) with Critical studies, First Edition, 'Kural Neri' Publishing House, Madurai 6, 1963.

Journal of Tamil Studies, December 1972, International Institute of Tamil studies, Madras 20. 1972.

Kailasapathy. K. Tamil heroic poetry, First Edition, Oxford at the Clarondan Press, 1968.

Krishnambal, S. R. Grammar of Kuruntokai with Index, First Edition, Department of Tamil, University of Kerala Kariavattom, Trivanduram, 1974.

Livy, The early History of Rome, Books I-V of The History of Rome From Foundation, 1971 Penguin Books 1971.

Majumdar, D.N. & Madan, T. N. An Introduction to social Anthropology First Edition, Asia Publishing House, Bombay 1970.

Manickam, Dr.V. Sp. (Editor) A Glimpse of Tamilology, First Edition The Academy of Tamil Scholars of Tamil Nadu, Thiruchi, South India.

Mayuranathan, P.V. The Original House of the Coconut Bombay, Natural History Society, 1938.

Meenakshisundram, Dr. T.P. Tamil A Bird's—Eyeview, First Edition, Makkal Nalvaalvu Manram, Madurai, 1976.

Montgemery of Alamoin Field Marshal Viscount, A History of Warfare, William Collings, Sons, Co., Ltd., London 1968

Muir, J. Original Sanskrit Texts, Part I The Origin of castes in the Vedic age, Oriental Publishers, 1488 Pataudi House, Daryaganj, Delhi 1972.

Nagaswamy, R., Editor, Seminar on hero-stones, First Edition, Published by : The State Department of Archaeology, Government of Tamil Nadu, 1974.

National Geographic, August 1974, (J).

Nilakanta Sastri, K. A. The Cholas, IInd Edition, Madras University Publication, Madras, 1955.

Otto K r, Sexual life in ancient Rome, The Standard Literature Co., Ltd., 13/1 Old Court House Street, Calcutta 1951.

Pope, Dr. G.U., Tamil heroic poems, First Edition, The South India Saiva Siddhantha works Publishing Society, Tirunelvely, Ltd, 1/140, Prakasam Saalai, Madras 1, 1975.

Ramachandra Dikshitar, V. R. War in ancient India, Macmillan and Co., Ltd., Madras, Bombay, Calcutta, London, 1944

Reginald Child, Coconuts, 1964.

Samarsh Bandyepadhyay, Dr. Foreign Accounts of Marriage in ancient India, First Edition, Firms K. L. Mukhopadyay Calcutta, India 1973.

Science Today (J) August, 1967.

Sex life in India, By, A Member of the Royal Asiatic society of London, Second Edition, India, Medical Book Co., Calcutta. 1952.

Shunmugam Pillai and David. E. Luddon, Kuruntokai English Translation, Kodal Publications, Madurai, 1976.

Srinivasa Aiyangar, P. T., Pre—Aryan Tamil Culture, Lecture Delivered Under The Auspices of the University of Madras 1941.

Srinivas, M.N. Castes and Other Essays. In Modern India Asia Publishing House Bombay, 1970.

Subrananian, Dr. S. V. (Editor), Research Papers Vol. V Department of Tamil, University of Kerala, Kariavattom, Trivandrum, 1974.

Subramaniom, V. I. Index of Puranaanuru, Department of Tamil, University of Kerala, Trivandrum, 1962.

Sudhindra Lal Roy, M. A., war and Immorality, Kitab. Mamal, Allahabad.

Tamil Culture (J) Journal of the Academy of Tamil Culture Vol. XII.

Thomas, P. Hindu Religion Customs and Manners, Third Indian Edition, D. B. Taraporevala Sons & Co., Pvt. Ltd., Treasure House of Books, 210, Dr. D. Naoroji Road, Bombay 1, 1956.

Thurston, Edgar, Ethnographic Notes in Southern India, Part-I, II Cosmo Publications Delhi, India, 1975.

Thurston, Edgar, Castes and Tribes of Southern India, Volume II C-to-J 1975. Cosmo Publications, 24-B, Ansari Road, Daryaganj, Delhi-110 006, India, 1975.

Tucker, T. G., Life in ancient Athens, First Edition, Macmillan and Co., Ltd., St. Martins Street, London, 1930.

Varadaraja Iyer, E.S., Tolkappiam Porulatikaram (Vol. I-Part-1) Akattinai Iyal and Kalaviyal, Annamalai University, 1948.

Varadaraja Iyer, E.S., Tolkappiam-Porulathikaram, Vol. I-Part II, Annamalai University, Annamalai Nagar, 1948.

Watson, G.R., The Roman Soldier, Thomas & Hudson, 1969.